மறுபடியும் தேவகி

ரா.கி.ரங்கராஜன்

மின்னூலாக்கம் – தமிழ்நேசன்

மேலும் மின்நூல்களுக்கு – *tamilnesan1981.blogspot.com ; tamilebooks.net*

1

சரக் சரக்.

வேலைக்காரக் கிழவனால் வேகமாக நடக்க முடியவில்லை. காலைத் தேய்த்துத் தேய்த்து நடந்து பங்களாவின் உள்ளேயிருந்து வெளி வெராந்தாவுக்கு வந்தான். அந்தி இருட்டு, வாசல் தோட்டத்தை மென்று கொண்டிருந்தது. தொலைவில் தெரிந்த கேட்டையும், பங்களாவை நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்குவது போல நேர்க்குத்தாகச் செல்லும் சாலையையும் நெற்றியின் மேல் கையைச் சார்ப்புக் கட்டிக்கொண்டு கிழவன் நோக்கினான். சாலையில் ஈ காக்கை தென்படவில்லை. இருள் வாசித்தளிக்கும் வரவேற்புரையைப் பெற்றுக் கொள்வதற்காக ஒரு வௌவால் படபடவென்று அவன் தலைக்கு மேலாகப் பறந்து சென்றது.

தோட்டத்துக்குச் செல்லும் படிக்கட்டில் சோம்பிப் படுத்திருந்த கிழட்டு நாயொன்று, வேலையாளின் அடிக்குப் பயந்து கொண்டு எழுந்து ஓட்டம் பிடித்தது.

வெராந்தாவின் மூலையிலிருந்து விசையைத் தட்டித் தடவிக் கண்டுபிடித்து விளக்கைப் போட்டான் கிழவன். மறு வினாடி ஒளி வெள்ளம் பாய்ந்து விடவில்லை. அழுது வடியும் பதினைந்து வாட் பல்பொன்று, விதவைக் கிழவி போல முக்காடிட்டுக்கொண்டு புலம்பியது.

கிழவனுக்குக் காது கூர்மைபோலும். கண்ணுக்குத் தெரியாத தொலைவில் காரின் ஹாரனொன்று ஒலிப்பதை

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

மோப்பம் பிடித்தான். உள்ளேயிருந்து இரண்டு தலையணை களைக் கொண்டுவந்து ஈஸிசேரில் போட்டு, காலை நீட்டிக் கொள்ள வாகாக நாற்காலியொன்றையும் இழுத்து வைத்தான்.

கேட்டுக்குள் ஒரு கார் நுழைந்தது. பெரிய காரென்றாலும் பழைய மாடல்; பழைய தோற்றம். வண்டி நின்றதும் டிரைவரும் இன்னொரு ஆளும் முன்புறத்தி லிருந்து இறங்கினார்கள். பின்கதவைத் திறந்தார்கள். உள்ளேயிருந்தவரை இருபுறமும் கைத்தாங்கலாகப் பிடித்துக் கொண்டார்கள். மெல்ல அழைத்து வந்து ஈஸிசேரில் கிடத்தினார்கள். வேலைக்காரக் கிழவன் மின்சார விசிறியைச் சுழல விட்டான்.

ஈஸிசேரில் கிடந்த கலிவரதன்தான் பங்களாவின் சொந்தக்காரன். வயது நாற்பதுக்குள்தான் இருக்கும். அவன் காரிலிருந்த புழுதியும், கண்ணிலிருந்த சிவப்பும், ஐயா இப்போதுதான் பாண்டிச்சேரிக்குப் போய் வந்திருக்கிறார் என்பதைப் பறைசாற்றின.

காரை, ஷெட்டில் கொண்டுபோய்விட டிரைவர் சென்றுவிட்டான். வேலைக்காரக் கிழவனும் பங்களாவின் உட்பகுதி இருட்டில் கலந்துவிட்டான்.

கலிவரதனுடன் வந்த மற்ற ஆளுக்குப் பொன்னடி என்று பெயர். அவனுடைய செக்ரட்டரி. அடியாள் என்றும் சொல்லலாம். சரியான ரௌடிக் களை முகத்தில் டாலடித்தது. சூட்கேஸ்களைக் கொண்டு வைப்பதற்காக உள்ளே சென்றவன் வேகமாகத் திரும்பி வந்தான் வெராந்தாவுக்கு.

"நேற்று இந்தப் பங்களாவில் ஒரு பெரிய கலாட்டா நடந்ததாமே, தெரியுமா?" என்று பதறினான்.

ஈஸிசேரில் சாய்ந்திருந்த கலிவரதன் அவனுடைய பீதியைப் பொருட்படுத்தாமல், ஒரு சிகரெட்டைப் பற்ற

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

வைக்க முயன்றான். ஆனால் ஒவ்வொரு முறையும் தீக்குச்சி சிகரெட்டைத் தொடாமல் வேறு இடத்துக்கு நழுவிக் கொண்டேயிருந்தது.

பொன்னடி தானே தீப்பெட்டியை வாங்கிச் சரியானபடி கொளுத்திக் கொடுத்தான். பின்னர், "போன வாரம் யாரோ இரண்டு மூன்று காலேஜ் பெண்கள் வந்து, நம் தோப்பிலே பிக்னிக்குக்கு வரலாமா என்று கேட்கவில்லை. சரி, தொலையட்டும் என்று அனுமதிகூடக் கொடுத்தோமே?" என்றான்.

கலிவரதன் புருவங்களை உயர்த்தினான்.

பொன்னடி "நேற்று அந்தப் பிக்னிக் கோஷ்டி வந்திருக்கிறது. அதிலே ஒரு ரகளை," என்று கூறி, சுற்று முற்றும் பார்த்துவிட்டு, தாழ்ந்த குரலில் கிசுகிசுக்க லானான்:

ஞாயிற்றுக்கிழமை.

என்ன நடந்ததென்றால் —

மாந்தோப்பு இரண்டாகிக் கொண்டிருந்தது.

"டீ குரங்கு! கல்லைக் கீழே போடுகிறாயா, மிஸஸ் ரத்னத்தைக் கூப்பிடட்டுமா?" என்று அதட்டினாள் மங்களம்.

"அடத் தூ! நீ பி. யூ. சி. படிக்கிற லட்சணம் இது தானா? நியூடன் தியரிகூடத் தெரியலையே இன்னும்?" என்று இகழ்ந்தாள், கல்லும் கையுமாக, மாமரத்துக் கிளையைக் குறி வைத்துக்கொண்டு நின்றிருந்த அம்பிகா. "ஏண்டி மக்கு, கல்லை நான் ஏன் கீழே போடணும்? மேலே எறிந்தால் தானாக அது கீழே விழுந்துதானே ஆகணும்?"

வாய் நிறையப் பலகாரம் திணித்துக் கொண் டிருந்த வைதேகி, "நீ அழிஷீ, அம்பிகா. புழியோதரைக்குத்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

தொட்டுக்க ஒண்ணுமேயில்லை! மாங்காய்ட கிழைத்தால் கசக்குதோ?" என்று ஊக்குவித்தாள்.

"ஸ்... ஸ்... ஸ்..." என்று அதட்டியவாறு வந்த மிஸஸ் ரத்னம் — இருபது புகுமுக மாணவிகளுக்குப் பொறுப்பாளியான டெமான்ஸ்ட்ரேட்டரம்மா — "கூச்சல் போடாதீங்க!" என்று கண்டித்துவிட்டுச் சென்றாள்.

அம்பிகா மாங்காயடிக்கும் முயற்சியைக் கைவிட்டு விட்டு, அலுப்புடன் பலகாரம் சாப்பிட அமர்ந்தாள். "பெரிய பொட்டை அதிகாரம்! ஒரோர் காலஜிலே டார்ஜிலிங் எங்கே டேராடூன் எங்கே என்று அழைத்துப் போகிறார்கள்? இது, டவுனிலிருந்து ... எத்தனை மைல்டீ?"

எப்போதும் எதற்கும் தப்பாகவே பதில் கொடுக்கும் வழக்கமுள்ள வைதேகி, "அடையாறுதானே? டவுனிலிருந்து கரெக்டாய் முப்பத்திரண்டு மைல்!" என்றாள்.

"உன் தலையிலே முப்பத்திரண்டு ஸ்டவ்தான் பற்ற வைக்கணும், போ!" என்று நூருன்னிஸா அவளைத் திட்டிக் கொண்டிருந்தபோது, "ஏய்! இருட்டு முன்னாலே கிளம்பிடணும்! இந்தத் தோப்புக்குள்ளே நுழையறப்போவே எனக்கு என்னவோ போலே திக்திக்கென்று இருந்தது!" என்றாள் மங்களம், தனது பெட்ரூம் லைட் விழிகளை மேலும் விரிவுபடுத்திக்கொண்டு.

"ஏண்டி சனியனே! சாம்பாரிலேதான் நிறையக் கரைச்சிருக்குதே! நீ வேறே எதுக்காக எங்க வயித்திலே கரைக்கிறே?" என்று அவள்மீது பாய்ந்தாள் அம்பிகா.

"மங்களம் சொல்றது ஒண்ணும் தப்பில்லை," என்றாள் நூருன்னிஸா. "பாரேன் பின்னே அந்தப் பங்களாவை. வாசல் கேட்டெல்லாம் உடைஞ்சு போய்க் கிடக்குது. பங்களாவுக்கு வெள்ளையடிச்சு ஒரு செஞ்சுரி

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ஆகியிருக்கும். பேய் பிசாசு குடியிருந்தால்கூட வீடு இன்னும் பிரகாசமாயிருக்கும்!"

"டீ டீ டீ!" என்று அவளைக் கட்டிக்கொண்டு வாயை இறுகப் பொத்தினார்கள் பத்துப் பன்னிரண்டு பேர்.

எழுந்து நின்ற அம்பிகா அந்தப் பங்களாவையே பார்த்துக்கொண்டு மௌனமாயிருந்தாள். சிறிய புளியோதரை உருண்டை அவள் கையில் மெல்ல அம்மானைப் போல் ஆடிக் கொண்டிருந்தது. "வாசல் பக்கம் வழியாய்த் தானே நுழைந்தோம்? யாருமே கண்ணில் படவில்லையே?" என்றாள் யோசனையோடு.

"ஏன், போன வாரம் பர்மிஷனுக்காக நீயும் நானும் வந்தோமே, அப்போ மட்டும் யார் இருந்தாங்க? எவனோ செக்ரட்டிரியாம். ரௌடி மாதிரி இருந்தான். அவன்தானே பர்மிஷன் கொடுத்தான்?"

"காம்பவுண்டுச் சுவரில், அழுக்குப் பித்தளையில் போட்டிருந்தது சொந்தக்காரன் பெயர்தானா? கலிவரதன் என்று பார்த்தேன்" என்றாள் மங்களம், இன்னும் நடுக்கம் தீராத குரலில்.

"கலிவரதன்... கலிவரதன்..." என்று அந்தப் பெயரை உதட்டில் உருட்டினாள் அம்பிகா.

அவளுடைய சிவந்த அழகிய முகத்தில் சிந்தனையின் கோடுகள் வரியிட்டன. புளியோதரையை ஒதுக்கிவிட்டு, பகாளாபாத்தில் ஒரு கவளம் எடுத்துச் சுவைக்கலானாள்.

அவர்களது சிற்றுண்டி வகைகளை ஏக்கத்துடன் பார்த்தபடி, நாக்கில் நீர் சொட்டச் சொட்ட ஒரு கிழட்டு நாய் எட்டத்தில் நின்று கொண்டிருந்தது. வைதேகி ஒரு சிறு கல்லை எடுத்து அதன்மீது வீசி, "சனியன்! இங்கேயே

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

சுத்திச் சுத்தி வருதே! சரியான கிழம்! ஐம்பது வயசு இருக்கும்!" என்றாள்.

நூருன்னிஸா அவளைத் திருத்தி, "எதுக்குப் படிச்சாலும் 'வெட்'டுக்கு மட்டும் நீ படிக்காதேடி, புண்ணியவதி! நாய்க்கு அதிகபட்சம் வயது இருபதுதான்!" என்றாள்.

"நான் மாந்தோப்பில் நின்றிருந்தேன் — அவன் மாம்பழம் வேண்டுமென்றான் ..." என்று வைதேகியின் டிரான்ஸிஸ்டர் தகவல் தெரிவித்தது.

"ஆமாம்! ஃப்ரூட் மார்க்கெட்டுக்குப் போய் ஒரு டஜன் வாங்கிக்கொண்டு, அவன்கிட்டே கொடுக்கச் சொல்லு!" என்றாள் நூருன்னிஸா.

"ஸிஸ்டர்! உன் டிரான்ஸிஸ்டரைக் கொஞ்சம் வாயை மூடச் சொல்லு!" என்று அம்பிகாவிடமிருந்து கட்டளை வந்தது.

வைதேகி கன்னத்தில் கைவைத்துக் கொண்டாள். "அடிப் பாவி! உனக்குக்கூடக் கசக்கிறதா இந்தச் சினிமாப் பாட்டெல்லாம்? நாடக மேடைப் பயிற்சிக் கழகத்துக்கு, மீனாம்பாள் கல்லூரியிலிருந்து தேர்ந்தெடுத்து அனுப்பப் பட்ட ஒற்றைக் கல் ரத்தினமாச்சே நீ?"

"ஏய் லூஸ்!" என்றாள் நூருன்னிஸா. "அம்பிகா வெல்லாம் 'லவ்பேர்ட்ஸ்' பாடப் பிறந்த மேல் கிளாஸ் காதலிடீ! அவளை மாந்தோப்பு மாரியாத்தாள்னு நினைச்சியா?"

"எல்லாரும் ஒரு சின்ன உபகாரம் பண்ணுகிறீங்களா? ப்ளீஸ்! ஒரே ஒரு சின்ன உபகாரம்தான்," என்று கைகுவித்தாள் அம்பிகா.

"என்ன?" என்றன ஒரு டஜன் குரல்கள் ஆவலுடன்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"உங்கள் திருவாயைக் கொஞ்சம் மூடிக் கொள்ளுங்கள்!" என்றாள் அம்பிகா. "அதோ அங்கே மிஸஸ் ரத்னம் என்ன இழவோ கையையும் காலையும் உதைச்சிக்கிட்டுக் கூப்பாடு போடறாங்க! நீ போய் என்னன்னு கேட்டுவிட்டு வா, மங்களம்!"

"துணைக்கு நீயும் வாடி," என்று வைதேகியை அழைத்துக்கொண்டு சென்ற மங்களம், ஐந்து நிமிடத்தில் திரும்பி வந்து, "காப்பி போடறதுக்கு ஸ்டவ் பற்ற வைச்சாங்களாம். என்ன பம்ப் பண்ணினாலும் ஏற மாட்டேங்குதாம்!" என்று தெரிவித்தாள்.

"அவங்க சொல்லிக் கொடுக்கிற 'பிராக்டிகல்' மாதிரிதானே அதுவும் இருக்கும்! அது மட்டும் ஏறுகிறதா என்ன? போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்!" என்று எழுந்து சென்றாள் அம்பிகா.

வயதுக்கு மீறிய வளர்த்தியுடனும், ராஜ குடும்பத்துப் பிறவி போன்ற நளினத்துடனும் செல்கின்ற அம்பிகாவைப் பார்த்தவாறு மற்ற மாணவிகள் பலகாரம் அருந்திக் கொண்டிருந்தார்கள்.

அவர்களுடைய எண்ணத்திலும் பார்வையிலும், அந்தப் பிறவித் தலைவியான தோழியிடம் மட்டற்ற அன்பும் வியப்பும் நிறைந்திருந்தன. அம்பிகா அசாத்தியத் துணிச்சல்காரி. ஒரு சித்திதான் உண்டு. தந்தை கிடையாது. வருமானம் இல்லாத குடும்பம்.

அப்படிப்பட்ட சூழ்நிலையில்கூட அம்பிகா வினால் எப்படி உற்சாகமாயும் உல்லாசமாயும் இருக்க முடிகிறது என்று சதா அவர்களுக்கு வியப்புத்தான்.

தொலைவில், ஸ்டவ்வுடன் மன்றாடிக் கொண் டிருக்கும் மிஸஸ் ரத்னம் இப்போது விலகிக் கொள்வது தெரிந்தது. அம்பிகா குனிந்து உட்காருவதும், மிஸஸ் ரத்தினத்திடம் ஏதோ கேட்பதும் தெரிந்தன. மண்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ணெண்ணெய் புட்டியை ஸ்டவ்விடம் கவிழ்ப்பதை அவர்கள் கண்டார்கள். தீப்பெட்டியைத் தேடி அவள் சுற்றுமுற்றும் நோக்குவது தெரிந்தது. அதை மிஸஸ் ரத்னம் எடுத்து அவளிடம் கொடுப்பதைப் பார்த்தார்கள். அம்பிகா குச்சியை உருவி, பெட்டியின் பக்கவாட்டில் சரக்கென்று தேய்ப்பதையும் கவனித்தார்கள்.

அடுத்த வினாடி —

"ஐயையோ!" என்று அத்தனை பேரும் அலறி அடித்துக் கொண்டு அந்த இடத்தை நோக்கிப் பாய்ந் தோடினார்கள்.

நின்றிருந்த மிஸஸ் ரத்னத்தின் தோளுயரத்துக்கு, குபீரென்று நெருப்பு ஜ்வாலை எரிந்ததே காரணம்.

அம்பிகாவின் சேலையில் ஒரு பகுதி பளீரென்றுப் பற்றி எரிவதும், அவள் உடனேயே கீழே விழுந்து புரள்வதும் அவர்களது பீதியுற்ற பார்வையிலே பட்டன.

எங்கிருந்தோ அந்தக் கிழட்டு நாய் வாள் வாளென்று குரைத்தது.

முன்யோசனையுள்ள நூருன்னிஸா தாங்கள் உட்கார்ந்திருந்த பெரிய ஜமுக்காளத்தை விருட்டென்று உருவி எடுத்துக்கொண்டு ஓடினாள். "இதைச் சுற்றிக்கொள் அம்பிகா!" என்ற கூச்சலுடன் அவள்மீது போர்த்தி, தானும் விழுந்து அமுக்கினாள் இறுக்கமாக.

மூன்று நிமிடம்தான். எழுந்த வேகத்தைக் காட்டிலும் விரைவாகத் தீ செத்துவிட்டது. கெரஸின் எரிந்த நாற்றமும், அம்பிகாவின் மெலிந்த முனகலும் மிஸஸ் ரத்னம் கையைப் பிசைந்துகொண்டு, "என்ன நடந்தது என்றே எனக்குத் தெரியலையேம்மா! குபீர்னு நெருப்புப் பிடிச்சதைத்தான் நானும் பார்த்தேன்!" என்று புலம்பிய

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

வாறு விடுகின்ற கண்ணீரும் ஒன்றோடொன்று கலந்த நேரத்தில் —

"அம்பிகா! மெதுவாய்க் கண்ணைத் திற! இதோ பார்! நல்ல வேளை, உனக்குக் காயம் எதுவும் படவில்லை," என்று மெல்ல அவளைத் தட்டியெழுப்ப முயன்றாள் நூருன்னிஸா. ஜமுக்காளமும், எரிந்த புடவைப் பகுதியும் விலக்கப்பட்டு விட்டன. எல்லோரும் கவலையோடு குனிந்து ஆராய்ந்தார்கள். அம்பிகாவின் தொடையில் ஓரங்குல அகலத்துக்கு, ஒரு சிறு தீப்புண் தெரிந்தது கன்னங்கரேலென்ற வடுவுடன்.

"அதிர்ச்சியில் மயக்கம் போட்டுவிட்டாள். இந்தப் புண்ணுக்குக் கொஞ்சம் தேங்காயெண்ணெய் தடவலாம்," என்று நூருன்னிஸா கூறியதும், மிஸஸ் ரத்னமும் தன் பிரமையினின்று விடுபட்டு, "எண்ணெய்! எண்ணெய்!" என்று கூவினாள். மறுகணமே கூந்தல் தைலப் புட்டிகள் ஏழெட்டு வந்து சேர்ந்து விட்டன. கொஞ்சம் எண்ணெயை நூருன்னிஸா தடவ, மிஸஸ் ரத்னம் புடவைத் தலைப்பால் அம்பிகாவின் முகத்தில் விசிறி, "எழுந்திரம்மா, எழுந்திரு," என்றாள். பேராபத்து இல்லையென்ற ஆறுதலுடனேயே, இந்தச் சின்ன ஆபத்துக்கும்கூட நாளைக்குக் கல்லூரியில் நூற்றெட்டு விளக்கம் சொல்லியாக வேண்டுமே என்ற அச்சம் வினாடிக்கு வினாடி அவளுக்குள் பெருகிக் கொண்டிருந்தது.

ஒரு வேலைக்காரக் கிழவி தடதடவென்று ஓடி வந்தாள்.

"என்ன ஆச்சுது? என்னம்மா, என்ன? ஐயோ ஆண்டவனே, இம்மாம் பெரிய பட்டணத்திலே உங்களுக்கு இந்தத் தோப்புத்தான் கிடைச்சுச்சா? நான் அப்பவே பயந்திட்டிருந்தேன். புள்ளைங்கள்ளாம் நல்லபடியா திரும்பிப் போவணுமேன்னு ..."

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"ஏ கிழவி! நீ சும்மா இருக்க மாட்டே?" என்று வைதேகி ஓர் அதட்டல் போட்ட பிறகே, ஓடிவந்த கிழவி தன் புலம்பலை நிறுத்திக்கொண்டு, மயக்கமுற்றுக் கிடக்கும் அம்பிகாவைக் குனிந்து கவனித்தாள்.

"யாரம்மா நீ?" என்று மிஸஸ் ரத்னம் கவலையோடு விசாரித்தாள் — போலீசுக்கு யாராவது தெரிவித்துத் தொலைத்துவிடப் போகிறார்கள் என்ற கவலையுடன்.

"நான் பங்களாவையும் தோட்டத்தையும் கவனிச்சுக்கிற வேலைக்காரிங்க. அதோ அந்தாலே இருக்கிறதே குடிசை? அங்கிட்டுத்தான் இருக்கிறேன். குபீர்னு நெருடபு எரியவும் ஓடியாந்தேன் அலறிக்கினு — முன்னே மாதிரி நேர்ந்துடக்கூடாதுடா சாமின்னு, கன்னத்திலே போட்டுக்கினே ஓடியாந்தேன்," என்றாள் கிழவி.

"முன்னே என்றால் என்ன? இதுக்கு முன்னாலே கூட இப்படி நடந்திருக்கிறதா?" என்று கேட்டாள் மிஸஸ் ரத்னம், விசிறுவதை இன்னொரு மாணவியிடம் ஒப்படைத்து விட்டு.

"இது பாழாப்போன பங்களா அம்மா; நெருப்புத் தானா வரும்? இடிஞ்சு நொறுங்கி, மண்ணாத்தான் போகப் போவது ஒரு நாள்!" என்று கிழவி, ஆவேசத்துக்காளானாற் போல் பேசினாள். "பதினேழு வருசத்துக்கு முன்னேலே, இந்த வூட்டு எஜமானியம்மா — பச்சைப் பொண்ணு — நெருப்பிலே செத்துப் போச்சுது. அவளோடு போயிட்டுது எல்லா லட்சுமியும் ..."

"தீ விபத்திலா இறந்துவிட்டாள்?" என்று அச்சத்துடன் வைதேகி கேட்டாள்.

"ஆமாம்மா. அதோ, என் குடிசைக்குப் பக்கத்திலே ஒரு அவுட் அவுஸ் தெரியலை? அப்போதான் அது எரிஞ்சு போச்சுது. பாழாவே கிடக்குது பாருங்க ... ஹூம்! எங்க

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

எசமானியம்மா மகாலச்சுமியாட்டம் இருக்கும் ..." கண்ணைத் துடைத்துக் கொண்டாள் கிழவி.

ஆனால் அவள் கூறும் விருத்தாந்தத்திலிருந்து மற்றவர்களின் கவனம் நழுவிவிட்டது. அம்பிகா மெதுவாய் முனகிய வண்ணம் புரண்டதுதான் காரணம்.

"அம்பிகா! அம்பிகா! எழுந்திரு. உனக்கு ஒன்று மில்லை. பயப்படாதே. கண்ணைத் திறந்து பார்!" என்று மிஸஸ் ரத்னம் அவளை உலுக்கினாள்.

அம்பிகா எழுந்து உட்கார்ந்தாள். கண்ணைக் கசக்கி விட்டுக் கொண்டு திறந்தாள்.

சில நிமிடங்களுக்கு முன்பு அதில் தென்பட்ட குறுகுறுப்பும் ஜீவனும் இப்போது காணோம். தேன் மெழுகில் செய்தாற்போல் மழுங்கலாக, அடைசலாக, ஒளியற்று, உள்ளடைந்து காணப்பட்டன அவள் கண்கள்.

"அம்பிகாவா? ..." என்றபோது அவள் குரல் தடுமாறியது. "நான் ... என் பெயர் தேவகி ..." என்று அவள் சொன்னதுமே —

"அம்மா! சின்னம்மா!" என்று அந்தத் தோட்டக் காரக் கிழவி கதறிவிட்டாள்! சவுக்கடி விழுந்தாற்போல் திடுக்கிட்டுப் பார்க்கும் மற்றவர்களிடம், "தேவகி ... தேவகிங்கிறதுதான் என் எஜமானியம்மாவோட பேர். செத்துப் போன எஜமானியம்மாவோட பெயர்!" என்று பதறிக் கொண்டே சரேலென அம்பிகாவைத் தன் மார்போடு சாய்த்து அணைத்துக் கொண்டாள்.

அந்தக் கிழ நாய் தயங்கித் தயங்கி அவர்களருகில் வந்து நின்றது. "வா டைகர்! என்னைத் தெரியலை உனக்கு? உனனை எத்தனை பிரியமாய் வளர்த்தேன், மறந்து விட்டாயா?" என்றாள் அம்பிகா.

நாய் வாலை ஆட்டிக்கொண்டு ஓடி வந்தது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"... அவர் ... கலிவரதன் ... அவர்தான் என் கணவர். தாயி, வீட்டிலே இருக்கிறாரா அவர்?"

தள்ளாடியபடியே எழுந்தாள் அம்பிகா.

"தாயி! தாயிதான் என் பேரு! உங்களுக்கு எப்படித் தெரிஞ்சுது?" என்று ஆச்சரியத்துடன் கத்தினாள் கிழவி.

"என்ன தாயி, உன்னை எப்படி நான் மறக்க முடியும்? சம்பளம் கூட்டித் தரணுமென்று கேட்டுக் கொண்டிருந்தாயே, ஐயா கொடுத்தாரா? இல்லை, நான் சிபாரிசு பண்ணணுமா?"

அம்பிகா சிரித்தாள். என்ன அமானுஷ்யமான, புதிரான சிரிப்பு!

அவ்வளவுதான்.

உருக்குலைந்தது உல்லாசப் பிக்னிக்கோஷ்டி. கலைந்தது அந்தக் கல்லூரி மாணவிகளின் கும்மாளம். பிறகு, பீதி. பயம். குழப்பம்.

நெருக்கடி வேளையில் எந்த நபரின் முதுகெலும் புக்கும் வலு எத்தனையென்று கணக்கெடுத்து விடலா மென்பது உண்மையானால், மிஸஸ் ரத்னம் அந்தச் சில நிமிடங்களில் காட்டிய நிதானமும் மேற்கொண்ட நடவடிக்கையும், அந்தச் சிவப்புச் சோளிக்கும் கட்டம் போட்ட வெள்ளை வாயில் புடவைக்கும் பின்னால் உள்ள முதுகெலும்பு சுத்தமான எஃகினாலானது என்று காட்டின.

தோப்பின் கடைக்கோடியில் நிறுத்தியிருந்த கல்லூரி பஸ்ஸை உடனே வரவழைத்தாள் மிஸஸ் ரத்னம். பாத்திரங்கள் படபடவென்று மூடப்பட்டன. ஜமுக் காளங்கள் மளமளவென்று சுருட்டப்பட்டன. டிரான்ஸிஸ் டர்கள் டக்டக்கென்று நிறுத்தப்பட்டன. நூருன்னிஸாவை

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

மட்டும் துணைக்கு நிறுத்திக்கொண்டு மற்றவர்களை யெல்லாம் பஸ்ஸுக்குள் ஏறச் சொல்லிக் கட்டளை யிட்டாள். அனைவரும் அமர்ந்தானதும், அம்பிகாவைக் கைத்தாங்கலாக மெல்லப் பிடித்து, "எழுந்திரம்மா. ஒன்றுமில்லை, பயப்படாதே. மெதுவாய், மெதுவாய். என்னைப் பிடித்துக்கொள்," என்று எழுப்பினாள். இன்னொரு புறம் நூருன்னிஸாவும் அம்பிகாவின் இடையைத் தாங்கிக்கொண்டு தூக்கினாள்.

அசுர பலம் வந்தாற்போல இருவரையும் உதறி, தன்னை விடுவித்துக்கொண்ட அம்பிகா, திடீரெனத் தேம்பித் தேம்பி அழத் தொடங்கினாள். "என்னை எங்கே கூப்பிடுகிறீர்கள்? என் வீட்டிலிருந்து ஏன் வெளியேற்றி அழைத்துப் போகிறீர்கள்? தாயி, தாயி! நீயாவது இவர் களுக்குச் சொல்ல மாட்டாயா?" என்று அவள் புலம்பியதைக் கண்டு தோட்டக்காரக் கிழவியின் கண்ணில் நீர் வழிந்தது.

"கொஞ்ச நேரம் அவங்க இங்கேதான் இருக் கட்டுமே அம்மா," என்று மிஸஸ் ரத்னத்திடம் மன்றாடத் தொடங்கினாள். "எங்க தேவகியம்மா மாதிரியே இவங்க இருக்கிறாங்க. அவங்க பேசின மாதிரியே பேசறாங்க. நெருப்பிலேதான் அவங்களுக்குச் சாவு வந்திச்சு. போன விசாலக்கிழமைக்கு, சரியா பதினெட்டு வருசம் ஆவுது அவுங்க செத்துப்போயி ..."

"இந்தா கிழவி! உனக்குப் பைத்தியம் கிய்த்தியம் பிடித்துவிட்டதா என்ன?" என்று மிஸஸ் ரத்னம் ஓங்கி அதட்டிவிட்டு வலுக்கட்டாயமாக அம்பிகாவைப் பஸ்ஸுக்குள் ஏற்றிக்கொண்டு, கதவைப் படக்கென்று உள் பக்கம் தாளிட்டுக் கொண்டாள்.

மிரட்சியுடன் தன்னைப் பல கண்கள் நோட்ட மிடுவதை உணராதவளாக இருந்தாள் அம்பிகா. மிஸஸ்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ரத்னம் கடைசியாகச் சொன்ன வார்த்தையில் அவள் சிந்தனை திரும்பிவிட்டது போலும். "எஜமானரைக் கூப்பிடுங்கள், மேடம். நான் அவரைப் பார்க்க வேண்டும். இத்தனை நாள் அவர் எங்கே போயிருந்தார்? நான் எங்கே போயிருந்தேன்? நேற்றைக்குத்தான் நடந்த மாதிரி இருக்கிறதே ..." என்று சொல்லிக்கொண்டே வந்தவள், "டிரைவர்! பார்த்து ஓட்டு. கேட்டுக்கு இடது கைப்பக்கம், தோட்டத்துக் கூளங்களைக் கொட்டுவதற்காக ஒரு பள்ளம் இருக்கிறது. ஏதாவது தழை கிழை மூடிக் கொண்டிருந்தால் தெரியாது. கவனம்," என்றாள்.

கல்லூரி பஸ்ஸின் டிரைவர் திடீரென்று தனக்கு இடப்பட்ட கட்டளையைக் கேட்டுத் திடுக்கிட்டுப் போனான்.

கேட்டருகே சென்றதும் பஸ்ஸிலிருந்து இறங்கி, இடது கைப்பக்கம் பார்த்தான். இரண்டொரு தென்னங் கீற்றுக்கள் கிடந்தன அங்கே. காலால் அதை அலட்சியமாக ஒதுக்கியவன், அடியில் ஒரு பள்ளம் இருப்பதைப் பார்த்து, கண்களைக் கசக்கிவிட்டுக் கொண்டு, மேலும் குழப்பமுற்ற வனாய்த் தன் ஸீட்டுக்குத் திரும்பினான். அம்பிகாவைத் தவிர மற்ற அவ்வளவு பேரும் அவனுடைய பரிசோதனையைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். பஸ் கிளம்பியபோது பயங்கரமான நிசப்தம் குடிகொண் டிருந்தது. பல நாட்களாய் ஓட்டிப் பழகி வந்தவர்கள், கலகலவென்ற அரட்டையில் ஊண் உறக்கத்தை மறப்பவர் கள் — அவர்களுக்கே ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கவும், ஒருவரோடொருவர் பேசவும் அச்சமேற்பட்டது.

பஸ் மெதுவே போய்க்கொண்டிருந்தது. அம்பிகாவின் கைகால்கள் தொய்வடைந்தன. கண் செருகிக் கொண்டது. மெல்ல மெல்ல அவள் நித்திரை வசப்பட்ட பின்னரே, அந்த இளம் பிரயாணிகளுக்கு நிம்மதி வந்தது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

மற்ற மாணவிகள் கிசுகிசுவென்று பேசிக் கொண்டிருந்த போது, வைதேகி, "மேடம், அந்தத் தோட்டக்காரக் கிழவி சொன்னதிலே ஒன்று கவனித்தீர் களா?" என்று பயம் கலந்த குரலில் கேட்டாள் மிஸஸ் ரத்னத்திடம்.

"எதை?"

"அந்த வீட்டு எஜமானி — தேவகி என்கிறவள் — இறந்துபோய், போன வியாழக்கிழமையோடு பதினெட்டு வருஷம் ஆகிறது என்று சொல்லவில்லை?"

"அதற்கென்ன இப்போது?"

"இல்லை ... வந்து ... போன வெள்ளிக்கிழமை ..." வைதேகியின் பேச்சுத் தடைப்பட்டுத் தடைப்பட்டு வந்தது. "போன வெள்ளிக்கிழமை ... அம்பிகா தனக்குப் பதினெட்டாவது பிறந்த நாள் என்று ... சாக்லேட் கொடுத்தாள் எங்களுக்கெல்லாம் ..."

சொல்லி வைத்தாற்போல் "ஆமாம், ஆமாம்," என்ற ஆமோதிப்பும், உடனேயே சில்லென்ற நிசப்தமும் தொடர்ந்தது.

மங்களம் உணர்ச்சி வசப்பட்டதால் கரகரப் படைந்தது குரல். "அப்படியானால், அந்தத் தேவகி இறந்த தற்கு மறுநாள் அம்பிகா பிறந்திருக்கிறாள். அப்படியானால் அம்பிகா சொல்வதெல்லாம் பூர்வ ஜன்ம நினைவு மாதிரி..."

"ஷட் அப்!" என்று சீறினாள் மிஸஸ் ரத்னம்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"மாமி! அம்பிகாவுக்கு என்ன? அந்த டெமான்ஸ்ட்ரேட்டர் அம்மாள் அரையும் குறையுமாய்ச் சொல்லிவிட்டுப் போய்விட்டார். எங்கே அம்பிகா?" என்று கேட்ட வண்ணம் வீட்டுக்குள் நுழைந்தான் சூரி. அவனுக்கு வயது இருபத்தெட்டு இருக்கும். கருகருவெனச் சுருள் சுருளான கிராப்பு, புத்திக் கூர்மையைக் காட்டும் கூரிய மூக்கு, அடர்ந்த புருவம், தாட்டியுமில்லாத சோனியு மில்லாத கட்டான உடல். உதயசங்கர் பாணியில் தொள தொளவென்ற வெள்ளைப் பைஜாமாவும் கிரீம் கலர் சில்க் ஜிப்பாவும் அணிந்திருந்தான் அவன். உதட்டில் நவமும் முறுவல் இனிமையாகப் பழகுகிறவன் என்பதைக் காட்டி னாலும், மோவாயின் உறுதி அவன் மன உறுதியையும், பிடித்தால் விடமாட்டானென்ற வீம்பையும் எடுத்துக் காட்டின.

வந்த சிறிது நேரத்திற்கெல்லாம் விஷயத்தைப் புரிந்து கொண்டான் அவன். அம்பிகாவின் சித்தி மரகதத்துக்குத் தூர உறவினன் அவன்; கல்லூரி மாணவிகளுக்கு நாடகப் பயிற்சி தரும் கழகத்தின் ஆசிரியர் என்ற முறையில் அம்பிகாவின் உள்ளத்தை நெருங்க முயன்று வந்தான்.

அவன் வந்ததும் வீட்டின் சூழ்நிலையில் ஒரு புதிய தெம்பு ஏற்பட்டுவிட்டது.

தனக்கு நேரிட்ட விபத்தையும், அதிலிருந்து பல விஷயங்கள் திடீர் திடீரென்று நினைவு வருவதையும் பதற்றப் படாமல் விவரித்தாள் அம்பிகா. "காப்பி போட்ட போதுகூட நினைவு வந்தது ... அவருக்கு, சர்க்கரையைக் கலக்காமல் தனியே ஒரு கிண்ணத்தில் வைத்துவிட வேண்டும். அவர்தான் திட்டமாய்ப் போட்டுக் கொள்வார். ஒருதரம், சமையற்காரன் இல்லாதபோது நானே சர்க்கரையைக் காப்பியில் கலந்து கொண்டுபோய்க்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கொடுத்தேன். என் மூஞ்சியிலேயே வீசிக் கொட்டி விட்டார். ரொம்பக் கோபக்காரர் ..."

"யாரைச் சொல்கிறாய்?" என்று குறுக்கிட்டான் சூரி.

"அவர்தான் — என் வீட்டுக்காரர், கணவர், கலிவரதனைத்தான் சொல்கிறேன்."

"பார்த்தாயா, பார்த்தாயா? நேற்றிலிருந்து இப்படித்தான் உளறுகிறாள்," என்று மரகதம் துடித்தாள்.

"அம்பிகா!" பல்லைக் கடித்தவாறு எழுந்து அவளை நெருங்கி நின்று உறுத்துப் பார்த்தான் சூரி. "அந்த அடையாறு பங்களாக்காரன் — கலிவரதன் — அவனை உன் கணவனென்று சொல்கிறாயா?"

"ஆமாம். பூர்வஜன்மத்தில். என் முன் பிறவியில்."

"வேண்டாம் அம்பிகா. வேண்டாமடி செல்லம்மா. அப்படியெல்லாம் பேசாதே," என்று அவளைத் தேற்ற முயன்றாள் மரகதம். ஒரு கையால் அவள் தலையை வருடி முகத்தையும் நிமிர்த்த முயன்றாள்.

"விடுங்கள் மாமி அவளை!" என்று உரக்கக் கட்டளையிட்டான் சூரி. அவனுடைய குரலில் முரட்டுத் தனம் நிறைந்திருந்தது. "அம்பிகா! நாம் இன்று சாயந்திரம் அடையாறு போவோம்," என்றான்.

"சூரி! என்னப்பா நீயும் அவளோடு சேர்ந்து கொண்டு?" என்று திகைத்தாள் மரகதம்.

அவளுக்குப் பதிலளிக்காமல், "கவனமாய்க் கேள். எந்தப் பாடுபட்டேனும் அந்தப் பங்களாக்காரனைச் சந்திக்க வைக்கிறேன். உன் திடீர் ஞானோதயமெல்லாம் சரிதான் என்று அவன் ஒப்புக்கொள்ள வேண்டும். புரிகிறதா? பத்திரிகை. நிருபர்களுக்குச் செய்தி எட்டி

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

விட்டதால், இங்கேயும் அங்கேயும்தான் வட்டமடிக்கிறார்கள். உன் உளறலெல்லாம் பத்திரிகையில் வரும். ஜாக்கிரதை!" என்றான் சூரி.

அம்பிகா இயல்பான பாவனையில், "எதற்காக என்னைத் தூக்கு மேடைக்கு அனுப்புகிறவர் மாதிரி அனாவசியமாய்ப் பயமுறுத்துகிறீர்கள்? நான் ஒரு தப்பும் செய்யவில்லை. யாரைக் கண்டும் பயப்படமாட்டேன். எத்தனை பேர் வேண்டுமானாலும் வரட்டும்," என்றாள்.

அதே பங்களா. அன்று கல்லூரி பஸ் கூச்சலும் கும்மாளமுமாக உள்ளே நுழைந்த அதே கேட். அம்பிகா ஆவலுடன் டாக்ஸிக்கு வெளியே தலை நீட்டிக் கொண்டிருந்தாள். தெய்வாவேசம் வந்தவர்களைத் தாங்கிப் பிடித்துக் கொள்கிற மாதிரி அவளைத் தன்மீது சாத்திக் கொண்டிருந்தாள் மரகதம்.

சூரி, பங்களாவினுள் நுழைந்து 'காலிங் பெல்'லை அழுத்தினான். ஹாலில் யார் அவனுக்குப் பதிலளித்தார்கள் என்று தெரியவில்லை. டாக்ஸிக்கருகே திரும்பி வந்து, "வருவார். சொல்லியனுப்பியிருக்கிறேன்," என்றபோது, வாசல் புறம் வேறு சந்தடிகள் கேட்டன.

பத்திரிகை நிருபர்கள்தான்! பரிதாபமான தோற்றமுள்ள ஒரு கிழட்டு நாயும் அவர்களைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தது.

பங்களாவினுள்ளிருந்து வந்தவனுக்கு நாற்பது வயதிருக்கும். காலர் வைத்த பனியன் அணிந்து கைலி வேட்டியை 'டபிள்' கட்டுக் கட்டிக் கொண்டிருந்தான். "நான்தான் மிஸ்டர் கலிவரதனின் காரியதரிசி. அவர் இப்போது எவரையும் சந்திப்பதற்கில்லை. மன்னிக்கணும். போய் வாருங்கள்," என்றான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

பத்திரிகை நிருபர்களும், சூரியும், "பத்து நிமிடம் தான் ..." என்று ஏதோ சொல்ல முற்படுகையில் அம்பிகாவின் குரல் தனித்துக் கேட்டது.

"பொன்னடி, நீங்கள் இப்போது இங்கேயா இருக்கிறீர்கள்? ஜாகை இன்னும் டவுனில்தானா, இல்லை, இங்கேயே வந்துவிட்டீர்களா?"

அவன் பிரமிப்புடன் திரும்பினான் அம்பிகாவின் பக்கம். அவளையே வெறித்துப் பார்த்து, "என்னை ... நான் பொன்னடி என்பது ... உனக்கு ..." என்று தடுமாறினான்.

"தேவகியை நினைவில்லையா சார் உங்களுக்கு?" என்று ஓர் உயிரற்ற சிரிப்புடன் கேட்டாள் அம்பிகா. "நீங்கள் தானே அவருக்கு ... என் கணவருக்குக் கார் ஓட்டக்கூடக் கற்றுத் தந்தீர்கள்? தினம் ஐலண்ட் கிரவுண்டுக்குப் போவீர்களே ..."

சூழ்ந்துகொள்ளும் பத்திரிகையாளர்களை விலக்கிக் கொண்டு, கலிவரதனே வந்துவிட்டான் அங்கே. "நீ சொல்வதெல்லாம் ... உண்மைதான். அப்படியானால் ... உனக்கு ... பூர்வ ஜன்ம ..."

"நீங்களா ...!" பரபரப்புடன் அவனை நெருங்கினாள் அம்பிகா. ஒரு நிமிடம் மௌனமாயிருந்த பின் —

"நினைவுகள் வருகின்றன ... பொய்யில்லை," என்று பதிலளித்தாள் அம்பிகா. "விடி காலையில் போய் விட்டு, பத்து மணிக்கு வருவீர்கள். 'ஒரு டம்ளர் வென்னீர்,' என்பீர்கள் உள்ளே நுழைந்ததுமே. சுக்கு போட்ட சுடுதண்ணீர் கொதிக்கக் கொதிக்கத் தருவேன். குடித்துவிட்டு மாடிக்குப் போவீர்கள் ..."

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

பளிச் பளிச்சென்று இரண்டு மூன்று காமிராக்கள் அவர்களுடைய முகபாவத்தைப் படம் பிடித்துக் கொண்டன.

சூரி முன் வந்து அம்பிகாவை ஆதரவாகப் பிடித்துக் கொண்டான்.

அம்பிகாவின் பேச்சில் குழறலோ தடுமாற்றமோ தென்படக் காணோம். "சட்டைக்குப் பொத்தான் மாட்டுகிற வழக்கம் இன்னும்கூட் வரவில்லையா உங்களுக்கு?" என்றாள்.

சுரீலென விழுந்ததோ அந்த வாசகம்? துள்ளி நிமிர்ந்தான் கலிவரதன். அவன் பார்வையில் எல்லையற்ற பயம் தென்பட்டது.

தன்னையுமறியாமல் சட்டையின் பொத்தான் களை மாட்டிக்கொண்டு, இன்னும் அருகில் வந்தான். "நீ ... நீ ... தேவகி என்னை ... இந்த மாதிரி பொத்தான் போடாத சமயத்தில் பரிகாசம் பண்ணுவது இப்படியில்லை ... வேறு விதமாகச் சொல்லுவாள் ..." என்றான்.

"இத்தனை பேருக்கெதிரில் அதைச் சொல்லக் கூச்சமாயிருக்கிறது ..." என்று தலை கவிழ்ந்தாள் அம்பிகா. "அடிக்கடி நான் சொல்வேன், 'டிரஸ் கண்ணியமாயில்லா விட்டால் உங்களை எல்லோரும் 'காலிவரதன்' என்று கூப்பிட ஆரம்பித்துவிடுவார்கள்' என்று ..."

"தேவகி! நிஜமாகவே தேவகிதானா நீ ..." பிரமிப்பை அடக்க முடியாமல் கலிவரதன் கூறியதும், "ஆமாம் ... நான் தேவகிதான்," என்றாள் அம்பிகா அழுத்தமாக. "மணமாகி புதிதில், நான் பலவீனமாய், மெலிந்து போயிருந்த சமயத்தில், ஒருநாள் ரொம்ப மனம் நொந்திருந்தீர்கள். 'பயப்படாதீர்கள். இந்தத் தேவகி உங்களை விட்டு எங்கேயும் போக மாட்டாள். அப்படியே போனாலும் மறு பிறவி எடுத்து மறுபடி உங்களிடமே வந்து

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

விடுவாள்' என்று நான் தேறுதல் சொன்னேனில்லையா? அதேபோல் மறுபடி வந்து விட்டேன்," என்றாள்.

அவள் பேசப் பேசக் கலிவரதனின் முகம் இருளடைந்துகொண்டே போயிற்று.

அம்பிகாவின் கண்களோ நிலைகுத்தி நின்றன. "இங்கே இருக்க இருக்க எத்தனை நினைவு முட்டி மோதிக் கொண்டு வருகிறது எனக்கு! ... ஒருதரம், சாயந்தர வேளையில் எலியட்ஸ் பீச்சில் குளிக்கப் போயிருந்தோம் ... கடல் ஸ்நானம் எனக்கு ஒத்துக் கொள்ளவில்லை. நச்சு நச்சு என்று தும்மிக் கொண்டிருந்தேன். படுக்கப் போகுமுன் அமிர்தாஞ்சனம் நீங்கள் எடுத்து வந்து கழுத்திலும் முதுகிலும் தேய்த்து விட்டீர்கள் ..."

"தேவகி!" என்று திகைப்பு மேலீட்டால் கலிவரதன் கூவ, இத்தனை நேரமும் மௌனச் சாட்சியாகத் தள்ளி நின்றிருந்த மரகதம் கடும் கோபத்துடன், "போதும் அம்பிகா. நிறுத்து!" என்று உறுமிக்கொண்டே, அம்பிகாவின் கையைப் பிடித்துத் தரதரவென்று இழுத்துக் கொண்டு டாக்ஸிக்குள் தள்ளினாள். 'ஓட்டப்பா நீ!" என்று கட்டளையிட்டாள் டிரைவருக்கு. அவள் தேகம் தடதடவென்று நடுங்கிக் கொண்டிருந்தது கோபத்தினாலும் அவமானத்தினாலும்.

"நில்லுங்கள் மாமி!" என்று ஓடி வந்தான் சூரியும்.

"தூ, தூ! இங்கே யாருக்காவது மனுஷத்தனம் இருக்கிறதா? வயசுப் பெண், நாளைக்கு ஒருவனைக் கல்யாணம் செய்துகொண்டு வாழ வேண்டியவள், அவளை இன்னது கேட்பது, இன்னது கேட்கக்கூடாது என்ற விவஸ்தை வேண்டாம்? அவள் அப்பா மூளைக் கலக்கத்துடனேயே இறந்து போனார். அந்த ஓர் அவமானம் போதாதா என் குடும்பத்துக்கு? என்ன தெய்வ சாபத் தாலோ என் குழந்தைக்கு இந்த விதி நேர்ந்ததென்றால்,

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

இரக்கமில்லாமல் வேடிக்கையா பாக்கிறீர்கள்? இது ஏதோ விபரீதம். அதிர்ச்சியினால் நேர்ந்த வினை. இரண்டு மூன்று நாளில் சரியாகிவிடும். அவளுக்கே என்ன பேசினோம் என்று தெரியாமலே போனாலும் போகும். நீங்கள் எல்லோருமாகச் சேர்ந்து கொண்டு அதை நிரந்தரமாக்கப் பார்க்கிறீர்கள். நான் ஒரு நாளும் இடம் தரமாட்டேன். ஓட்டப்பா வண்டியை!"

நீண்ட பேச்சை ஆவேசத்துடன் பேசி முடித்ததால் மூசு மூசென்று இரைத்தது மரகதத்துக்கு.

"மாமி! என்மீது கோபிக்காதீர்கள். இதோ நானும் வந்தேன்," என்று புறப்பட்டுவிட்ட டாக்ஸியினுள் தொற்றிக் கொண்டான் சூரி.

மேஜை விளக்குப் பரிவுடன் பார்த்துக் கொண்டிருந்தது, நாற்காலியில் உட்கார்ந்தவாறே தூங்கி விட்டிருந்த அம்பிகாவை. சில்லென்று சாளரத்தின் வழியே நுழைந்த விடிகாலைக் காற்று, பிரிந்து கிடந்த புத்தகத்தின் பக்கங்களைப் படபடவெனப் புரட்டி, 'பாவம், உன் எஜமானிக்கு அத்தனை களைப்பா?' என்று விசாரித்தது. விளக்கைச் சுற்றிச் சுற்றியே இரவுப் பொழுது முழுதையும் கழித்துவிட்ட ஒரு விட்டில் பூச்சி, தெருவில் ஊர்வலம் வரும் காலை வெளிச்சத்தை வேடிக்கை பார்க்க வாசலுக்கு ஓடியது. 'செத்த கன்றைப் பார்த்து நான் ஏமாறுவதாக எண்ணி, தான் ஏமாந்து கொண்டிருக்கிறானே இந்த அப்பாவி!' என்று பால்காரனைக் குறித்துச் சிரித்த வண்ணம், லாந்தர் கம்பத்தில் கட்டப்பட்ட பசுமாடு 'மா' என்று குரல் கொடுத்தது.

அம்பிகாவின் சித்தி மரகதம், காப்பி போட்டானதும் தன் வழக்கப்படி சுடச் சுட ஒரு டம்ளர் நின்றபடியே சுவைத்த பிறகு அம்பிகாவுக்கு ஒரு டம்ளரில் எடுத்து வந்தாள். அவள் இருந்த நிலையைக் கண்டதும்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

பரிதாபத்துடன், "ஏண்டி, நீ ராத்திரி படுக்கையிலேயே படுக்கவில்லை? இப்படியேவா தூங்கினாய்? இந்தா, இதைக் குடி," என்று அவளை உலுக்கினாள்.

அம்பிகாவின் பார்வையில் நல்ல வேளையாக முந்தின தினத்துப் பிரமை தென்படவில்லை. "பொழுது விடிந்து விட்டதா? பல் விளக்கிவிட்டு வந்து குடிக்கிறேன். வைத்திரு," என்று கண்ணைத் தேய்த்துக் கொண்டே பின்புறம் சென்றாள். "அப்புறம் ஆறிவிடும். மறுபடி சுட வைக்க என்னால் முடியாது," என்று சொன்ன வண்ணம் காப்பி டம்ளருடன் அவள் பின்னாலேயே சென்று நின்று கொண்ட மரகதம், "ஏண்டி பெண்ணே, உடம்பு இன்றைக்கு எப்படி இருக்கிறது?" என்று கவலையுடன் விசாரித்தாள்.

வாயில் பற்பசை நிரம்பியிருக்க, "எது எப்படி இருக்கிறது?" என்று அம்பிகா திருப்பிக் கேட்டாள்.

"அதுதான் ... நேற்று என்னென்னவோ சொன்னாயே ... அதெல்லாம் ..."

துவாலையில் முகத்தைத் துடைத்தவாறு முன்னறைக்குத் திரும்பினாள் அம்பிகா. "நான் என்ன, விளையாடினேனென்று நினைத்தாயா, சித்தி? நிஜமாகவே அதெல்லாம் தோன்றியது, சொன்னேன். இப்பக்கூட அவ்வளவும் பளிச்சென்று இருக்கிறது. ஒருநாள் பார், சித்தி, ஐந்து ரூபாய்க்கு மல்லிகைச் சரம் வாங்கி வந்துவிட்டார் அவர். 'இவ்வளவு பூவையும் எப்படித் தலையில் வைத்துக் கொள்வது?' என்று கோபித்தேன். 'முடிந்ததைத் தலையில் வைத்துக்கொள்,' என்று சொல்லிவிட்டு, மிச்சப் பூவை வாங்கிக் கொண்டு, என் இரண்டு கையிலும், முழங்கைக்கு மேல் நாகொத்து என்று பழங்காலத்தில் போட்டுக் கொள்வார்களாமே அந்த மாதிரிச் சுற்றிவிட்டார். கழுத்திலே நெக்லேஸ் மாதிரிக் கட்டினார். இடுப்பில் ஒட்டியாணம் போல் இரண்டு சுற்றுச் சுற்றினார் ..."

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"ஐயையோ, நிஜமாய்த்தான் சொல்கிறாயா இதெல்லாம்?" என்று சித்தி திடுக்கிட்டபோது, பின்னால் ஒரு குரல் கேட்டது:

"நிஜம்தான், அம்மா. வார்த்தைக்கு வார்த்தை மெய்யாகவே நடந்ததுதான்.

கலிவரதன் தலை குனிந்து நின்றிருந்தான். அவனுடன் கூட வந்திருந்த பொன்னடி, "இப்படி உட்காருங்கள்," என்று தானாகவே அவருக்கு ஒரு நாற்காலியைப் போட்டு விட்டு, "உங்களோடு கொஞ்சம் பேசத்தான் வந்தோம்," என்றான் மரகதத்திடம்.

மரகதத்தின் முகத்தில் பீதி குடிகொண்டது. "என்ன ... என்ன பேசப் போகிறீர்கள்?"

கலிவரதனிடமிருந்து ஒரு பெருமூச்சுத்தான் வெளிப்பட்டது.

"அவரே அவர் வாயால் சொல்ல எப்படி மனம் வரும்? நான் சொல்கிறேன்," என்று பொன்னடி அவருக்குக் கை கொடுக்க முன் வந்தான். "உங்கள் மகள் இன்னும் ஒரே ஒரு முறை அடையாறு பங்களாவுக்கு வந்தால் ..."

மரகதத்தின் பயம் தணிந்து, பேச்சில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. "போதும், போதும். இரண்டு நாளாய் நடக்கிற கூத்து ஏழு ஜன்மத்துக்குப் போதும். மறுபடியும் ஏன் எங்களையே துரத்திக்கொண்டு வருகிறீர்கள்? நாங்கள் பெண் பிள்ளைகள். ஆண் துணை இல்லாத வீடு இது. புண்ணியமுண்டு. தயவு பண்ணிப் போய்விடுங்கள்," என்றாள்.

அம்பிகா குறுக்கிட்டாள்: "வீடு தேடி வந்தவர்களிடம் கொஞ்சம் பொறுமை காட்டக்கூடாதா, சித்தி?"

"அதுவும், காரணமில்லாமல் வரவில்லை. பதினைந்து லட்சம் பெறுமானமுள்ள ஐசுவரியம்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

வருவதோ போவதோ உங்கள் கையில் இருக்கிறது. அதனால்தான் வந்தோம்," என்றான் பொன்னடி.

பணத்தைப் பற்றிப் பிரஸ்தாபம் வந்ததும் மரகதத்தின் முகத்தில் கடுமை சிறிது குறைந்தது.

"பதி ... பதி ..." என்றதற்கு மேல் வார்த்தை வராமல் தவித்துப் போனாள் அவள். சாதாரணமாகவே குழந்தை போன்றிருக்கும் அவளுடைய வட்ட முகம், பிரமிப்பினால் இன்னும் பாப்பாத்தனமாக மாறியது.

கலிவரதன் முதல் தடவையாக வாய் திறந்து மெல்லச் சொன்னான்: "பதினைந்து லட்சம் கிடைக்கிற போது, ஒன்றிரண்டு லட்சம் உங்களுக்கும் கிடைக்காமல் போகாது."

மரகதம் உரக்கக் கூச்சலிட்டிருப்பாள், "அம்பிகா, பேப்பர் வந்துட்டதாம்மா?" என்று பக்கத்து வீட்டு கோமதி நாயகம் மூக்கை நீட்டாதிருந்தாரானால்.

"வந்து விட்டது மாமா, நீங்கள் படித்துவிட்டுக் கொண்டு வாருங்கள்," என்று சொல்லி, சலவை கலையாதிருந்த தினசரிப் பேப்பரை அவரிடம் கொடுத்தாள் அம்பிகா.

"உன்னைப் பற்றி இதிலே வந்திருக்கிறதா?" என்று மேலும் உள்ளே புக முயற்சி செய்தார் கோமதிநாயகம். "ஓகோ, யாரோ விருந்தாளிங்க வந்சிருக்காப்பலே இருக்கு?"

மரகதம் பொறுமையற்று, "ஆமாம், ஆமாம். உறவுக் காரங்க. நீங்க போயிட்டு வாங்க," என்று அவர் முகத்தில் கதவைச் சாத்தினாள். பின்னர், "சொல்லுங்கள்," என்று கலிவரதனை ஊக்கினாள்.

ஆனால் அவன் சொல்லவில்லை. அவன் காரியதரிசியான பொன்னடிதான் தொடர்ந்தான். "எவ்வளவோ விஷயங்களை இவர் மறந்துவிட வேண்டு

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

மென்று நினைத்திருந்தார். நம் கையிலா இருக்கிறது அதெல்லாம்?'' அம்பிகாவின் பக்கம் திரும்பினான் பொன்னடி. "உங்களுக்கு இன்னொரு சின்னப் பரீட்சை ... தேவகியம்மாவின் — இவருடைய சம்சாரத்தை தான் சொல்கிறேன் — மறு பிறவி என்கிறீர்களே? அவர்களுடைய மஞ்சக் காணி சொத்தைப் பற்றி உங்களுக்கு என்ன் தெரியும், சொல்லுங்கள் பார்க்கலாம்."

அம்பிகா பளிச்சென்று, "ஏன்? அந்த மஞ்சக்காணி சொத்தை இவர் கேட்டுக்கொண்டேயிருந்தார். நான் தட்டிக் கழித்துக்கொண்டேயிருந்தேன்," என்றாள்.

கலிவரதனும் பொன்னடியும் ஒரே வினாடியில் டக்கென்று தங்கள் தங்கள் இருக்கைகளில் எழுந்து கொண்டு ஒருவரையொருவர் விழி தெறிக்கிற மாதிரி பார்த்துக் கொண்டார்கள். மரகதமோ, என்ன நடக்கிறது, எதைப் பற்றிப் பேசுகிறார்கள் என்பதை அறிய மாட்டாதவளாக மகளின் முகத்தைப் பார்த்தாள். அதிலே, நேற்றுக் கண்ட அதே பளபளப்பும் வெறித்த நோக்கும் மீண்டும் குடிகொண்டு விட்டதைக் கண்டு பீதிதான் அதிகரித்தது.

பொன்னடி தூணில் சாய்ந்தவாறு நின்றுகொண்டு சொல்லலானான்:

"இவர்களுடைய குடும்பம் சென்னைப் பட்டணத் திலேயே ரொம்பப் பெரிய, பழைய குடும்பம். அது உங்களுக்கே தெரியும். ஐயாவுக்கு வந்த சம்சாரமும் ரொம்பப் பெரிய இடம். செங்கல்பட்டில் கொடி கட்டிப் பறந்த குடும்பம். தேவகியம்மாவுக்குக் கூடப் பிறந்தவர்கள் தான் யாரும் கிடையாது. கல்யாணம் ஆனபோது ஐயாவுக்கு இருபது இருபத்தொரு வயசுதான். தேவகியம்மா வுக்குப் பதினேழு பதினெட்டு இருக்கும். அந்த இளம் வயதில், அத்தனை பணம் காசு கொட்டிக் கிடக்கிற

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

குடும்பத்தில் சந்தோஷத்துக்கு என்ன குறைச்சல்? நம்பக்கூட மாட்டீர்கள். தேவகியம்மா தாய் வீட்டிலிருந்து கொண்டு வந்த சீதன நகைகள் மட்டும், பதினைந்து இருபது லட்சத்துக்குக் கம்மியில்லை ..."

"நீ பேசி முடிப்பதற்குள் விடிந்துவிடும்" என்று இடை வெட்டினான் கலிவரதன். தங்கப் பொத்தான்களைக் கோத்திருந்த செயினை நெருடியபடி மெதுவே அவன் பேசத் தொடங்கியபோது குரல் மிக ஆழத்திலிருந்து வருவதாகத் தோன்றியது:

"செய்த தப்பை ஒப்புக் கொள்கிறேனம்மா. அதிலே என்ன வெட்கம்? நான் சொல்லாவிட்டாலும் உங்கள் மகள் சொல்லாமல் இருக்கப் போகிறாளா? என்ன வென்றால் எப்போதும் நான் கொஞ்சம் செலவாளி. கல்யாணமான புதிதில், என் ஊதாரித்தனம் சற்று அதிகமாகவே போய்விட்டது. தேவகிக்கு அதில் வருத்தம் தான். பலவிதமாய்ச் செலவான பிறகு, அவளுடைய மஞ்சக்காணி சீதனத்தையும் கேட்டால் எப்படி மனம் வரும்? சாமர்த்தியமாய் மறுத்துக் கொண்டிருந்தபோது அந்தப் பயங்கரத் தீ விபத்து நேர்ந்துவிட்டது அவளுக்கு. அதற்கப்புறம் அந்த நகைகளும் எங்கே போயிற்றென்று தெரியவேயில்லை ..."

மரகதம் தன்னை மறந்து, "பதினைந்து லட்ச ரூபாய் பெறுமானம் இருக்குமென்றீர்களே? அத்தனை நகையுமா எங்கே போயிற்றென்று தெரியவில்லை?" என்று கேட்டு விட்டாள்.

"அவ்வளவும் தான்," என்றான் கலிவரதன். "ஒரு இரும்புப் பெட்டியில் அதை அவள் வைத்திருந்தது தெரியும். என் கண்ணில் படவே கூடாது என்று பிடிவாதமாக அந்தப் பெட்டியை எங்கேயோ புதைத்து வைத்திருக்கிறாள் என்று பேசிக் கொண்டார்கள் ... உம் ...

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

தேவகி போன பிறகு என் வாழ்க்கை இன்னும் தறி கெட்டு விட்டது. வெளி ஆடம்பரத்துக்குப் பங்களாவும் தோட்டமும் காரும் இருக்கிறதே தவிர, கழுத்தளவு கடனில் நான் புதைந்திருக்கிறேன். இப்போது தேவகி உயிருடனிருந்தால் அவளே பொறுக்க மாட்டாள். திருகாணிவரை கழற்றித் தருவாள். அவள் இல்லாததால், அவள் நிலையிலுள்ள நீங்கள்தான் உதவ வேண்டும்."

திடுக்கிட்டாள் அம்பிகா. "நானா?"

"வேறு யாரால் முடியும்?" என்றான் கலிவரதன். "முன்பின் கேள்விப்பட்டிராத இந்த அதிசயம் ஏன் உங்கள், வாழ்க்கையில் நேர வேண்டும்? அது ஏன் என் வாழ்க்கைக்குச் சம்பந்தமுள்ளதாக இருக்க வேண்டும்? இதிலிருந்தே தெரியவில்லையா. என் கஷ்டத்தைப் பார்த்து ஆண்டவனே காட்டியிருக்கிற வழி இது என்று?"

"நான் என்ன செய்ய முடியும் என்கிறீர்கள்?"

"என்னுடைய அடையாறு பங்களாவுக்கு வாருங்கள். கொஞ்ச நேரம் அந்தச் சூழ்நிலையில் உட்கார்ந்திர்களானால், நினைவு வராமற் போகுமா, நகைப் பெட்டியை எங்கே புதைத்திருக்கிறீர்கள் என்பது?"

சித்தி மரகதம், பரபரப்பாக, "ஞாபகம் வந்ததும் இடத்தைக் காட்டுவாள். நீங்கள் எடுத்துக்கொண்டு எங்களுக்கும் ஒரு பங்கு தருவீர்கள் இல்லையா? அது நிச்சயம்தானே? அப்புறம் ..." என்று இழுத்தாள்.

"ஊதாரி, முரடன் என்று என்னை என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள், அம்மா. நன்றியை மறக்கிறவன் என்று மட்டும் குற்றம் சாட்டாதீர்கள்," என்றான் கலிவரதன்.

ஆனால், யாரும் எதிர்பாராத விதமாக —

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''மன்னிக்கணும். நீங்கள் சொல்கிற மாதிரி யெல்லாம் நடந்து கொள்ள எனக்குச் சம்மதமில்லை. காலேஜுக்கு நேரமாகிறது" என்று வெடுக்கென்று சொல்லி விட்டு அம்பிகா எழுந்து கொண்டாள்.

மரகதம் கோபத்துடன், "நன்றாயிருக்கிறதடி நீ படித்த லட்சணம்! மரியாதை கொடுக்கக்கூடத் தெரிய வில்லையே?" என்று கடிந்து கொண்டாள் அவளை.

''பரவாயில்லை. குழந்தைதானே? நீங்கள் சம்மதித்தால் போதும் ... நாளைக்குக் கார் அனுப்புகிறேன். உங்கள் மகளோடு வந்து விடுங்கள்," என்றான் கலிவரதன்.

"சித்தி! எதற்கும் ஒப்புக் கொள்ளாதே! சொல்லி விட்டேன்!" என்று உள்ளேயிருந்து குரல் கொடுத்தாள் அம்பிகா, பாடப் புத்தகங்களை எடுத்து வைத்துக் கொண்டே.

"நீங்கள் போங்கள். நான் அழைத்து வருகிறேன் அவளை!" என்று மெதுவான குரலில் கலிவரதனிடம் உறுதி கூறினாள் மரகதம்.

கைகுவித்து நன்றி தெரிவித்துவிட்டுக் கலிவரதன் விடை பெற்றான்.

கார் தெருக்கோடியை அடைந்ததும், "எப்படி?" என்றான் அவன், பெருமையுடன் தன் காரியதரிசியைப் பார்த்து.

"புதையலின் இடத்தைத் தெரிந்துகொண்ட பிறகு இவளை ... உங்கள் அபிப்பிராயம் அதுதானே?" என்றான் பொன்னடி.

"உனக்கும் இருக்கிறது" என்று தலையைத் தட்டிக் காட்டிவிட்டு, சீட்டின் கீழேயிருந்த பிராந்திப் புட்டியைக் கையிலெடுத்தான் கலிவரதன்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

3

நுங்கம்பாக்கம் ஸ்டர்லிங் ரோடின் தலைப் புறத்தில் இருக்கும் முதல் நாலைந்து பங்களாக்கள்தான் ஹைதர் காலத்தின் மாண்பையும் பழமையையும் காட்டிக் கொண்டிருக்கும். அவைகளைத் தாண்டி வலப்புறம் சென்றால், 'அல்ட்ரா-மாடர்ன்' என்று சொல்வார்களே அந்த வகையைச் சேர்ந்த சில புதுப் பங்களாக்களைக் காண முடியும்.

அந்த அரை டஜன் மாளிகைகளினுள் ஒன்றில் கொஞ்சம் நுழைவோமா?

வெராந்தாவை அடுத்த ஹாலின் மத்தியில், சோபாக்களுக்கு நடுவே ஒரு வட்ட மேஜை இருக்கிறது. மேஜையின் மீது கிடக்கும் பத்திரிகைகள் பொழுது போக்குப் பத்திரிகை அல்ல. 'எஜுகேஷனல் ரெவ்யூ' என்று ஒரு பத்திரிகையின் தலைப்புக் கூறுகிறது. இன்னொன்று, கல்கத்தா பல்கலைக் கழகத்தின் கெஜட். மூன்றாவது, திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரி மாகஸின். சோபாக்களுக்குப் பின்னால், சுவரோடு ஒட்டினாற் போலுள்ள சித்திரக்குள்ளக் கண்ணாடி பீரோவில் (இதன் உயரம் ஒன்றரை அடிதான் இருக்கும்) தங்க 'ரேக்' போட்ட 'என்ஸைக்ளோபீடியா பிரிட்டானிகா'வின் வால்யூம்கள் அழகுற அடுக்கப்பட்டுள்ளன.

இவ்வளவையும் கொண்டு, அந்த மாளிகையில் ஓர் அறிவாளி — குறைந்த பட்சம் கல்வித் துறையில் நெருங்கிய ஈடுபாடுடையவர் — வசிக்கிறார் என்று ஊகிப்பீர்களானால் அது தவறாகாது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

மீனாம்பாள் கல்லூரியின் பிரின்ஸிபாலான திருமதி தர்மு சிவராஜின் இல்லம்தான் இந்தப் பங்களா.

நல்லது. டெலிபோன் வைத்துள்ள மேஜையருகே இன்னொரு சிறிய பீரோ இருக்கிறதல்லவா? அதைத் திறந்து பார்ப்போம். என்ன இவையெல்லாம்? தடித்த கறுத்த அட்டை போட்ட போட்டோ ஆல்பங்கள். வைக்கோல் வண்டிக்காரனொருவன் விளக்கேற்றிக் கொண்டிருக்கிற காட்சி முதல், லால்பகதூர் சாஸ்திரி சிற்றுண்டி அருந்தும் காட்சிவரை பலவிதமான புகைப்படங்கள் ஒட்டப் பட்டிருக்கின்றன இந்தப் போட்டோ ஆல்பங்களில்.

இதிலிருந்து, இதே பங்களாவில் ஓர் அமெச்சூர் புகைப்பட ரசிகரும் இருக்கிறார் என்று ஊகித்தீர்களானால் அதுவும் தவறாகாது.

பிரின்ஸிபால் தர்முவின் கணவரும், பிராக்டிஸ் பண்ணாத பாரிஸ்டருமான சிவராஜுக்கு அந்தப் பைத்தியம் எக்கச்சக்கமாக உண்டு.

மெத்தையிலுள்ள படுக்கை அறையில் கிர்ரென்று அலாரம் அடிக்கும் ஓசை காதில் விழுகிறது. இனி நாம் விலகிக் கொள்ள வேண்டும்.

வீட்டின் கீழ்ப்புறத்தில் சிவராஜுக்கு ஒரு 'டார்க் ரூம்' உண்டு. அங்கே புகைப் படங்களைக் கழுவுவதும் 'என்லார்ஜ்மெண்ட்'டுகள் போடுவதும் அவருக்குப் பிடித்தமான வேலைகள். வெய்யில் ஏறி வந்துவிட்டால் படங்களைக் கழுவுவது சரியாய் வராது; ஐஸ் கட்டிகளைத் தேடிப் போக வேண்டும். இரவு வேளைகளில் கண் விழிப்பது அவரால் முடியாத காரியம். எனவே, விடி காலையில் அலாரம் வைத்துக்கொண்டு எழுந்து சென்று, தன் உயிருக்குயிரான பொழுதுபோக்கில் மெய்மறந்து ஈடுபட்டிருப்பார் பாரிஸ்டர் சிவராஜ்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

இன்றும் அப்படித்தான் என்று ஊகித்துக் கொண்ட தர்மு, "டீ போட்டாச்சா அம்மணி?" என்று தன் மலையாளச் சமையற்காரிக்கு ஓர் அதட்டலை வீசிய வண்ணம் படுக்கையறையிலிருந்து வெளிப்பட்டு, கீழிறங்கி வந்தாள். அவளுடைய இரட்டை நாடியான சரீரத்தையும் பாப் வெட்டப்பட்ட தலையையும், வீட்டுக்குள்ளேகூட ஸ்லிப்பர் மாட்டிக்கொண்டு சஞ்சரிக்கும் நாகரிகத்தையும், மலையாளச் சமையற்காரியிடம் 'பெட் டீ' வாங்கிக் குடிக்கும் காஸ்மாபாலிடன் பழக்கத்தையும் காணுகிற எவரும், தஞ்சாவூர் ஜில்லாவில், திப்பிராஜபுரம் கிராமத்தில், தர்ப்பைப் புல் கட்டுடன் ஓடியோடி ஒரு சாண் வயிற்றைக் கழுவிக் கொண்டிருந்த ஒரு வைதிகரின் சீமந்த புத்திரியாகப் பிறந்தவள் இந்தத் தர்மு என்பதை மறுத்துச் சத்தியம் கூடச் செய்யத் தயாராயிருப்பார்கள்.

"இதோ ஆச்சுதம்மா," என்று அம்மணி தெரிவித்தாளாகையால் டீ தயாராக இன்னும் இருபது நிமிடமாவது ஆகுமென்று தர்முவுக்குத் தெரிந்தது. பிரஷில் பற்பசையைப் பிதுக்கி எடுத்துக்கொண்டு, பாத் ரூமுக்குப் பக்கத்திலிருந்த கணவரின் 'டார்க் ரூம்' பக்கமாகச் சென்று பார்த்தாள்.

வேலையாயிருக்கிறேன்
உள்ளே வரவேண்டாம்

இந்த அறிவிப்பு, கொட்டை எழுத்தில் ஓர் அட்டையில் ஒட்டி, கதவின்மீது தாழ்ப்பாளில் மாட்டப் பட்டிருந்தது.

"சீக்கிரமாய் வாங்க வெளியே. நான் எழுந்து கொண்டாயிற்று," என்று தெரிவித்து விட்டு, குளியலறைக் குழாயைத் திருப்பினாள் தர்மு.

வாஷ் பேசினில் அவள் வாயைக் கொப்பளித்துக் கொண்டிருந்தபோது, தானும் பற்பசை பிரஷுடன் வந்து சேர்ந்தார் சிவராஜ்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"ப்ரெக்ஃபஸ்ட் முடிந்ததும் பேனாவும் இன்லண்ட் கவரும் எடுத்து வைத்துக்கொண்டு உட்காரப் போகிறேன்," என்று பிரகடனம் செய்தார் சிவராஜ். "ஹிந்துவுக்கு, லெட்டர்ஸ் டு தி எடிட்டர் பகுதிக்கு ஒரு கடிதம் எழுதப் போகிறேன்!"

"ஏன், என்ன குறை உங்களுக்கு?"

"பின்னே பாரேன்! கலர் பிலிம் கிடைப்பது குதிரைக் கொம்பாயிருக்கிறது. நாற்பது ரூபாய் கொடுத்துப் பிளாக்கில் கூட வாங்க முடியவில்லை."

"நல்ல காலம், பிழைத்தேன்" என்று பெருமூச்சு விட்டாள் தர்மு. "நீங்கள் லெட்டர்ஸ் டு தி எடிட்டருக்கு எழுதவும் வேண்டாம், கலர் பிலிம் நெருக்கடி தீரவும் வேண்டாம். சும்மா இருங்கள். கலர் பிலிம் தாராளமாய்க் கிடைத்தால் நம் வீட்டில்தான் முதல் லாரி இறங்கும்."

"அடி பைத்தியமே! ஸில்லி கேர்ல்!" என்று சிரித்தார் சிவராஜ். "எனக்கா சொன்னேன் கலர் பிலிம் வேண்டுமென்று? மிஸஸ் ரத்னத்துக்குக் கிடைத்திருந்தால் எத்தனை நன்றாயிருந்தி —"

அவர் வாக்கியத்தை முடிக்கவில்லை. அதிர்ச்சி மேலீட்டினால், வெளியே துப்ப வேண்டிய பசை நுரையை உள்ளுக்கு விழுங்கி விட்டாள் தர்மு. "யார்? மிஸஸ் ரத்னமா? எந்த மிஸஸ் ரத்னம்?" என்று வினவுகையில் அவள் கண்கள் சிவந்தன.

"ஏன், உன் காலேஜில் டெமான்ஸ்டிரேட்டராக இருக்கிறாளே அந்த மிஸஸ் ரத்னம்தான்," என்றார் சிவராஜ். "ஞாயிற்றுக்கிழமை பிக்னிக் போனபோது, என் காமிராவைத்தானே இரவல் வாங்கிக் கொண்டு போனாள்..."

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"ஓகோ! இதெல்லாம் எத்தனை நாளாய் நடக்கிறது?"

"காலேஜ் ஆண்டு விழாவின்போது நான் காமிரா வுடன் வந்திருந்தேன் இல்லையா, அப்போது பிடித்துப் பழக்கம். ஏதோ ஆசையாய்க் கேட்கிறாளே என்று — பாக்ஸ் காமிராவைத்தான் — தந்தேன். போய்விட்டு வந்தவள் படம் எப்படி வந்திருக்கிறது என்றும் சொல்லவில்லை. காமிரா வையும் திருப்பவில்லை. அதனால் நேற்றுச் சாயந்தரம் நானே அவள் வீட்டுக்குப் போய் ..."

"பேஷ், பேஷ்! லட்சணம்தான்!" என்று தர்மு வெடித்த பிறகும்கூட அப்பாவி சிவராஜ் அவளுடைய சீற்றத்தைப் புரிந்து கொள்ளாமல் தன் சிந்தனைப் போக்கில் இருந்தார். "பாவம், பிக்னிக் போய் வந்ததிலிருந்து உடம்பு சரியில்லையாம். குளிர் ஜுரமாம்."

பிரஷைத் தண்ணீரில் அலசிக்கொண்டே பேசினாள் தர்மு. "அவள்தான், பசங்களைப் பிக்னிக்குக்கு அழைத்துப் போகிறேன் என்று என்ன கூத்தெல்லாமோ அடித்து வைத்திருக்கிறாளே! அம்பிகா என்ற ஸ்டூடண் டுக்கு முன்ஜன்ம நினைவு வந்தது, என்னென்னவோ சொன்னாள் என்று ஊர் பூரா அளந்து தொலைத்து வைத்திருக்கிறாள். அந்தப் பெண்ணும் இரண்டு நாளாய்க் காலேஜுக்கு வரவில்லை, இவளும் வரவில்லை. இன்றைக்கு இரண்டு பேரையும் கூப்பிட்டனுப்பி ஒரு ஃபுல்ஸ்டாப் வைத்து விட்டுத்தான் மறு வேலை ..."

சிவராஜ் தன் வருத்தத்திலேயே இருந்தார் இன்னும். "எதற்காகச் சொல்ல வந்தேனென்றால், அந்த மிஸஸ் ரத்னம் ஒரு ஜீனியஸ். வெறும் பாக்ஸ் காமிராதான் கொடுத்தேன். இரண்டு ரோல் பிலிம் கொடுத்தேன். ஒரு ரோல்தான் டெவலப் பண்ணிப் பார்த்தேன். என்ன பிரமாதமாயிருக்கிறது தெரியுமா? வெறும் பிளாக் அண்ட்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ஓயிட்தான். அதுவே இத்தனை நன்றாய் வந்திருக்கிறபோது, கலர் பிலிம் இருந்திருந்தால் இன்டர்நேஷனல் போட்டி. களுக்குக்கூட அனுப்பலாம். பிலிம் எங்கே கிடைக்கிறது? ஊம்? இன்னொரு ரோலையும் கழுவிப் பார்த்துவிட வேண்டும், வெய்யிலுக்கு முன்னால் ..."

அவர் பேசிக் கொண்டிருக்கும்போதே தர்மு தன் தந்த சுத்தியை முடித்துக்கொண்டு போய்விட்டாள்.

மேனாட்டு முறைப்படி அலங்கரிக்கப்பட்ட சிற்றுண்டி மேஜையின் ஒரு புறத்தில் உட்கார்ந்து கொண்டு தேனீர்க் கோப்பையில் சர்க்கரை போட்டு, கிணு கிணுவென்று தர்மு கலக்கிக் கொண்டிருந்தபோது வேகமாய் வந்த சிவராஜ், "என் டார்க் ரூமை யார் பூட்டியது? நீயா?" என்று பதறினார்.

"நான் ஏன் பூட்டுகிறேன்?" என்று கூறி, இடுப்பில் சாவியைப் பத்திரமாக இறுக்கிக்கொண்டாள் தர்மு. "நீங்களே ஞாபக மறதியாய்ப் பூட்டியிருப்பீர்கள்."

வேலைக்காரப் பையன், அப்போதுதான் வந்து சேர்ந்த காலைத் தினசரியை மேஜை மீது பணிவுடன் பிரித்து வைத்துவிட்டு அகன்றான்.

முதல் பக்கத்தின் மீது பார்வை சென்றதோ இல்லையோ உறிஞ்சிக் கொண்டிருந்த தேனீரை டக்கென்று வைத்துவிட்டு சரேலெனப் பத்திரிகையைக் கையி லெடுத்தாள் தர்மு. "அவுட்ரேஜஸ்! ஸ்கேண்டலஸ்!" என்று இரைந்த வண்ணம் படிக்கத் தொடங்கினாள்.

டார்க் ரூம் பூட்டப்பட்டதைக் காட்டிலும் விபரீதமான சமாசாரமும் இருக்க முடியுமா என்ற சந்தேகத்துடன் சிவராஜ் தானும் கழுத்தை நீட்டிப் பார்த்தார்.

'கல்லூரி மாணவியின் வாழ்க்கையில் அதிசயம்!'

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

'முற்பிறவி நினைவு வருகிறதாம்!'

— என்ற தலைப்புகளைப் பார்த்ததும் அவருக்கு மனைவியுடன் பேசவே தைரியம் பிறக்கவில்லை.

"சுத்தக் கிறுக்குத்தனமாய் இருக்கிறதே! யாரைக் கேட்டு இதையெல்லாம் பிரசுரித்தார்கள்? யார் பேட்டி தந்தது?" என்று அடுக்கடுக்காய்க் கேள்விகளை வீசிய வண்ணம் எழுந்து கொண்டாள் தர்மு!

ஞாயிற்றுக் கிழமை அடையாறு பங்களாவில் நடைபெற்ற அதிசயத்துக்குப் பிறகு, திங்களும் செவ்வாயும் அம்பிகா கல்லூரிக்கு வரவில்லை. "நாலு பேர் நாலுவித மாய்ப் பேசுகிறார்கள். வீட்டுக்குள்ளேயே இரு," என்று சித்தி மரகதம் அவளை அடக்கிவிட்டாள். அப்படியும் சூரியின் கட்டாயத்தின் பேரில் செவ்வாய்க் கிழமையன்று கலிவரதனைப் பார்க்கப் போய்விட்டு வரும்படி நேர்ந்தது. புதன்கிழமை காலையில் கலிவரதனும் பொன்னடியும் வந்துவிட்டுப் போனபிறகு, அம்பிகாவைக் கட்டுப்படுத்தி வைக்க முடியவில்லை. "நான் போகத்தான் போவேன்." என்று அம்பிகா கல்லூரிக்குப் புறப்பட்டு விட்டாள்.

காலேஜில் காலடி வைத்ததுமே அழைப்புக் காத்திருந்தது.

பிரின்ஸிபால் தர்மு சிவராஜ் காலை எட்டரை மணி முதல் அவர் அறையிலேயே காத்துக் கொண் டிருக்கிறாராம். அம்பிகா வந்ததும் சொல்லச் சொன்னாராம். பியூன் இப்படித் தெரிவித்ததும், அம்பிகா தாமதிக்காமல் அங்கே விரைந்தாள்.

"அம்பிகா, இதெல்லாம் என்ன நான்சென்ஸ்?" என்றவாறு மேஜையைத் திறந்து, இரண்டு மூன்று தந்தி உறைகளை எடுத்து வெளியே போட்டாள் தர்மு. "பம்பாய், கல்கத்தா, டெல்லியிலிருந்து, சைகாலஜிஸ்ட் அசோசி

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

யேஷன்கள் தந்தி கொடுத்திருக்கிறார்கள் எனக்கு. உன்னைப் பேட்டிக் காண எப்போது வருவதென்று கேட்கிறார்கள். இந்த மாதிரியான பாபுலாரிடி நம் கல்லூரிக்குத் தேவையில்லை. புரிகிறதா?'

"நான் வேண்டுமென்று எதுவும் செய்யவில்லை, மேடம்."

அவள் குரலில் தென்பட்ட ஏதோவொன்று தர்முவின் மனத்தைச் சிறிது கலக்கியது.

"சரி, உட்கார்ந்து கொண்டு நடந்ததைச் சொல்," என்று கட்டளையிட்டாள் அம்பிகாவுக்கு. "அந்த ரத்னத்தைக் கேட்கலாமென்றால் ஜுரமாம். உடம்பு சரியில்லையாம். டேய், சண்முகம், நீ அந்தம்மாள் வீட்டுக்குப் போய் இன்றைக்காவது வருவதாயிருக்கிறார்களா என்று கேட்டுவிட்டு வா. ஊம், நீ சொல் அம்பிகா."

ஞாயிற்றுக் கிழமையன்று நடந்தவற்றை விவரமாகத் தெரிவித்தாள் அம்பிகா. கலிவரதன் வந்து, புதையல் விஷயமாகக் கேட்டுக் கொண்டதைத் தெரிவிக்கவில்லை. அது தன் சொந்த சமாசாரம் என்று நினைத்தாள் போலும்.

அவள் கூறி முடித்த பின்னரும் சில நிமிடங்கள் மௌனமாயிருந்தாள் தர்மு. பிறகு, அலமாரியிலிருந்து ஒரு டார்ச் விளக்கை எடுத்து, அம்பிகாவின் கண்ணில் அடித்துப் பார்த்தாள். மூளைக் கோளாறோ நரம்புத் தளர்ச்சியோ உள்ளவர்களுக்கு விழியில் தென்படக்கூடிய கலக்கத்தையோ ரத்தச் சிவப்பையோ அங்கே காணாததால் சிறிது திருப்தியுற்று, டார்ச் விளக்கை வைத்துவிட்டு, "எப்போதும் இந்த மாதிரி பழைய நினைவு ஏற்படுகிறதா?" என்றாள்.

"இரண்டு மாதமாகவே இப்படி இருக்கிறது, மேடம்," என்றாள் அம்பிகா. "யாரோ என் தலைக்குள்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

இருந்து கொண்டு ஏதோ சொல்வது போலவே அடிக்கடி தோன்றிக் கொண்டிருந்தது. மண்டைகுள் ஒரு சிறுகிறுப்பு — வேறே எங்கேயோ இருப்பதுபோல ஒரு பிரமை அடிக்கடி ஏற்பட்டது. உற்றுக் கவனித்துக் கேட்க ஆரம்பித்தேன். வாக்கியம் என்ன, வார்த்தைகள் என்ன என்பது தெளிவாகப் புரியவில்லை. அன்றைக்கு அந்த அடையாறு பங்களாவில், அந்தத் தோப்பில் மயக்கம் போட்டு எழுந்து கொண்டதும், திடீரென்று எல்லாம் புரிய ஆரம்பித்தது ..."

டார்ச் விளக்கை உள்ளங் கைகளில் வைத்து உருட்டிக்கொண்டு அவளையே பார்த்தவாறிருந்த பிரின்ஸிபால், "என்ன புரிந்தது?" என்று வினவினாள்.

"சில இடங்களையும், சில மனிதர்களையும் பார்த்ததும் என்னையறியாமலே பேசத் தொடங்கினேன், வேறொரு குரல் எனக்குள் ஒலித்தது, அதையே நானும் திருப்பிச் சொல்வது போல் இருந்தது."

"தொடர்ந்து இருந்ததா? விட்டுவிட்டா?"

"விட்டு விட்டுத்தான், மேடம் ..." என்று எதையோ சொல்லத் தயங்குவது போல நிறுத்தினாள் அம்பிகா. "இப்போதுகூட ... உங்களை ..."

"இப்போதுகூட என்ன?"

"அந்த அடையாறு பங்களாவுக்கு நீங்களும் வந்திருக்கிறீர்கள் ... ஆனால், அப்போது நீங்கள் பிரின்ஸி பால் இல்லை. கணிதப் பேராசிரியையாக இருந்தீர்கள். இந்தக் காலேஜில் ஒரு லேபரட்டரி கட்டுவதற்கு நிதி வசூல் செய்ய, ஸார்தம்மாள் என்ற இன்னொரு லெக்சரருடன் வந்திருந்தீர்கள் ... எம்.எஸ். கச்சேரி ஏற்பாடாகியிருந்தது. இரண்டு நூறு ரூபாய் டிக்கெட்டாவது விற்கலாம் என்று பேசிக்கொண்டே உள்ளே வந்தீர்கள் ..."

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

சாத்தியிருந்த அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்த பியூன் சண்முகம், "ரத்னம்மாவுக்கு நல்ல காய்ச்சலுங்க! பதிலே சொல்லலீங்க எனக்கு," என்று தெரிவித்தான்.

"சரி, சரி. நீ கொஞ்சம் பொறுத்து வா," என்று அவனை அனுப்பிவிட்டு, அம்பிகாவிடம், "நீ சொல்லு," என்றாள் தர்மு, பிரமிப்புடன்.

"கேட்டில் நுழையும்போது ஒரு பழைய ஆணி உங்கள் காலில் குத்திவிட்டது. கொட கொடவென்று ரத்தம் கொட்ட உள்ளே வந்தீர்கள். நான் எம்பிராய்டரி போட்டுக் கொண்டு வெராந்தாவில் உட்கார்ந்திருந்தேன். உங்கள் காயத்துக்கு டிங்ச்சர் போட்டுப் பஞ்சு வைத்துக் கட்டுக் கட்டி, டிக்கெட்டும் வாங்கிக் கொண்டேன்."

"ஆமாம், ஆமாம்," என்று திகைப்புடன் ஒப்புக் கொண்டாள், தர்மு சிவராஜ். வேறு வழி? அந்த ஆணி குத்திய காயம், அதற்கப்புறம் 'ஸெப்டிக்' ஆகி, ஒரு மாதம் கால் கட்டுடன் தவித்ததை அவளால் எப்படி மறுக்க முடியும்?

தர்முவினால் இதற்குப் பின் பேசமுடியவில்லை சகஜமாக. "சரி, நீ கிளாசுக்குப் போ," என்று அம்பிகாவை அனுப்பி விட்டாள். ஆனால் அவள் போகு முன், "இனி எந்தப் பத்திரிகைக்காரருக்கும் என்னைக் கேட்காமல் பேட்டி கொடுக்காதே," என்று எச்சரித்து அனுப்பி வைத்தாள்.

அன்றைய பொழுது முழுதும் பிரின்ஸிபாலுக்கு எந்த வேலையும் ஓடவில்லை. அம்பிகாவின் பேச்சும், அனுபவங்களும் திரும்பத் திரும்ப அவள் மனத்தில் வட்ட மடித்தன.

மிஸஸ் ரத்னத்தின் உடல் நிலைபற்றி விவரமாகக் கேட்க வேண்டுமென்று பியூன் சண்முகத்தை மறுபடி

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கூப்பிட்டனுப்பினாள். அவன் கல்லூரிக் கடிதங்கள் பலவற்றைப் பட்டுவாடா செய்வதற்காகச் சைக்கிளில் புறப்பட்டுப் போய் விட்டானென்று தெரிந்தது. இனி மாலை ஆறுமணிக்குத்தான் திரும்புவான்.

அத்தனை உடம்பு சரியில்லாதிருக்கிற மிஸஸ் ரத்னத்தை நேரில் பார்க்காதிருப்பது முறையல்ல என்று அந்தப் பிரின்ஸிபாலின் கடமையுணர்வு கூறியது. அம்பிகாவைப் பற்றி அவளிடமிருந்தும் தகவல்கள் விசாரிக்கலாம்....

'ஸ்டாஃப்' புத்தகத்தில் குறித்து வைத்திருந்த விலாசங்களைப் பார்வையிட்டாள், தர்மு சிவராஜ். திருவான்மியூர் பக்கத்தில் ஏற்பட்டுள்ள ஒரு ஸி.ஐ.டி. நகரில், புது வீட்டில் குடியேறியிருக்கிறாளென்றும், பெயர்தான் மிஸஸ் ரத்னமே தவிர, மிஸ்டர் ரத்தினத்தைப் பிரிந்து தனியேதான் அவள் வசித்து வருகிறாளென்றும் அந்தப் புத்தகம் கூறியது.

கல்லூரியிலிருந்து வழக்கமாக ஐந்து மணிக்குப் புறப்படும் தர்மு, அன்று நான்கு மணிக்கே புறப்பட்டாள். டிரைவரிடம் விலாசத்தைச் சொல்லி, காரை அங்கே செலுத்தும்படி கூறினாள்.

மிஸஸ் ரத்னத்தின் வீடு மிகவும் கடைசியில், மிகவும் தனியாக இருந்தது. காரை நிறுத்திவிட்டு இறங்கி, தான் மட்டும் சென்றாள் தர்மு.

வாசல் புறத்திலிருந்து கூப்பிட்டபோது யாரும் பதில் தரவில்லை. உள்ளே நுழைந்தாள்.

வீட்டுக்குள் எவ்விதச் சத்தமும் கேட்கவில்லை.

முன்புறத்திலிருந்த அறைக்குள் எட்டிப் பார்த்த பிரின்ஸிபால், "ஐயையோ!" என்று வீரிட்டாள்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

லைணமைககும் நேரம் போதுமானதாயிருந்தது — கட்டிலில் கிடந்த மிஸஸ் ரத்தினத்தின் உடலிலிருந்து உயிர் பிரிந்துவிட்டது என்பதைக் கண்டுகொள்ள.

ஆனால், அதுவல்ல காரணம், தர்மு சிவராஜ் அலறியதற்கு.

மிஸஸ் ரத்னத்தின் மரணம், இயற்கையாக, காய்ச்சலினால் ஏற்பட்டிருக்கவில்லை.

அவள் கழுத்தில், நெரிக்கப்பட்ட தழும்பு தெரிந்தது. விழிகள் வெளியே பிதுங்கியிருந்தன.

4

மறுநாள் வியாழக்கிழமை. அம்பிகாவின் சித்திக்குப் பலகார நாள். பின்கட்டிலிருந்த ஆட்டாங் கல்லில் அடைக்கு அரைத்துக்கொண்டிருந்த மரகதம், அம்பிகா கல்லூரியிலிருந்து வந்ததைக் கவனிக்கவில்லை. இன்னும் இரண்டு மிளகாய் கிள்ளிப் போடலாம் என்பதற் காக முன்புறம் வந்தவள், அம்பிகா கைகளில் முகத்தைக் கவிழ்த்துக்கொண்டு நாற்காலியில் சுருண்டு கிடப்பதைக் கண்டதும் அதிர்ச்சியடைந்தவளாகப் பரக்கப் பரக்க உள்ளே ஓடி வந்தாள்.

"அம்பிகா! எப்போது வந்தாய் நீ! காலேஜில் ஒன்றுமில்லையே! ஏன் இப்படி உட்கார்ந்திருக்கிறாய்?" என்று அவள் தோளை உலுக்கினாள்.

விரற்கடை விரற்கடையாக அம்பிகாவின் பார்வை யும் முகமும் அண்ணாந்து உயர்ந்தன. அந்த விழிகளில் ஒரு கோரமான பளபளப்பு இருந்தது. "யார் ...

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அம்பிகாவா? நான் ... யார் நான் ... தேவகிதானே?" என்று அவள் நாக்குழறிற்று. அடுத்த வினாடி, முறுக்கிப் பிழிந்த துணியை உதறுவதுபோல அவளே தன் உடம்பை உதறிக் கொண்டாள்.

முகம் சிறிது பழைய அமைதியை அடைந்தது. "சித்தி, என்னை விட்டு விட்டு எங்கேயும் போகாதே சித்தி!" என்று மரகதத்தின் இடுப்பை அணைத்துக் கொண்டாள் இறுக்கமாக.

பொல பொலவென்று உதிர்ந்த கண்ணீர் முத்துக்கள் அம்பிகாவின் உச்சந் தலையை நனைத்தன. "நான் எங்கேயும் போக மாட்டேனடி, என் செல்லம்மா. பயப்படாதே, பயப்படாதே," என்று அம்பிகாவின் வாளிப்பான முதுகைத் தடவிக் கொடுத்தவாறு இருந்தாள். "தெய்வமே! என்ன சோதனையப்பா இது?" என்று அந்தத் தெய்வத்துக்கு மட்டுமே கேட்கும்படியாக மனத்துக்குள் புலம்பினாள் அவள்.

காலையில் கலிவரதன் காட்டிய லட்ச ரூபாய் ஆசை, அம்பிகாவை அடையாறுக்கு அழைத்துப்போக எண்ணியது எல்லாம் மறந்துவிட்டன, இப்போது. பாசம் ஒன்றுதான் மேலோங்கி நின்றது.

"எனக்கு ஒன்றுமில்லை சித்தி ... தேவலை," என்று கண்ணைத் துடைத்துக்கொண்டு ஓர் அசட்டுச் சிரிப்புடன் எழுந்து கொண்டாள் அம்பிகா. ஆனால் குழாயடியில் அவள் முகம் கழுவிக்கொள்ளும்போதும், கண்ணாடியருகே தலைவாரிப் பொட்டிட்டுக் கொண்டபோதும் சித்தி ஓரங்குலமும் நகராமல் அவளைத் தொட்ட மாதிரியே நின்றிருந்தாள்.

இரவு ஒன்பது மணி வரையில் அம்பிகா ஏதோ பாடப் புத்தகங்களைப் புரட்டிக் கொண்டு உட்கார்ந் திருந்தாள். சாப்பாடும் மௌனமாகவே முடிந்தது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"உள்ளே வந்து உட்கார், அம்பிகா, வேர்க்கடலை உனக்குப் பிடித்த மாதிரி உப்புப்போட்டுச் சுண்டி வைத்திருக்கிறேன். நான் பற்றுப் பாத்திரங்களை ஒழித்துப் போடுகிறவரையில் என்னுடனேயே இரு," என்று சித்தி அழைத்தபோது மறுபடியும் வக்கரித்துக் கொண்டாள் அம்பிகா.

"வேர்க்கடலை ... சுண்டியா வைத்திருக்கிறாய்? ... அவருக்கு மாப்பிள்ளைக்கு ... வறுத்தால்தான் பிடிக்கும் ..." பார்வை வெறிச்சிட்டு நிற்க ஏதேதோ மீண்டும் பேசலானாள் அம்பிகா.

"வேண்டாமடி அம்பிகா. பேசாதே, புலம்பாதே. உன்னை எதுவும் கேட்கவில்லை," என்று அவளைக் கட்டி யணைத்துக்கொண்டு மெல்ல அவள் வாயையும் பொத்தினாள் சித்தி. அவள் உள்ளம் வெடித்துக் கொண்டிருந்தது.

இளைய தாரமாக அம்பிகாவின் தகப்பனாருக்கு வாழ்க்கைப்பட்ட காலத்தில் அவள் கண்டுவந்த கனவுகளில் பல நாளாவட்டத்தில் சிதைந்துவிட்டன. சிற்றன்னையாய் லட்சணமாய்ப் பயங்கர சொரூபம் எடுத்து, மூத்தாளின் மகளை ஆட்டி வைக்கலாம் என்ற ஆசை, அம்பிகாவுக்கு ஐந்து வயதானபோதே ஆட்டம் காண ஆரம்பித்து, சமீப காலத்தில் பொடிப் பொடியாயும் ஆகிவிட்டது. இருந்தாலும், அம்பிகா படித்து முன்னேறி, சம்பாதிக்கத் தொடங்குவாள் என்று நினைத்திருந்ததும் தகர்ந்துவிட்டதே இன்று!

வாசலில் ஓர் உருவம் நிழலாடியது.

மரகதம் திகைத்து நின்றாள்.

உருவம் படியேறி உள்ளே வந்தது.

"அம்பிகா என்று யார் இருக்கிறார்கள் இங்கே?" என்று கேட்டது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"யார் ... யார் ..." என்னும்போது தொண்டையிலேயே வார்த்தைகள் சிக்கின.

ஏனெனில் படியேறி வந்து விசாரித்தவர் ஒரு போலீஸ்காரர்.

மிஸஸ் ரத்தினத்தின் சடலத்தையும் கோரமான கொலையையும் கண்டவுடனே தர்மு சிவராஜுக்கு ஏற்பட்ட முதல் எண்ணம்: ஓடிவிடலாம் இங்கிருந்து என்பதே.

பரக்கப் பரக்க வாசலுக்கு வந்தவள், மோதிக் கொள்கிற மாதிரி தன் கார் டிரைவரை வாசற்படியிலேயே சந்திக்க நேர்ந்தது. "கூப்பிட்டீங்களா அம்மா? குரல் கொடுத்த மாதிரி கேட்டதே," என்றான் அவன்.

சுயநிதானத்தைத் திரும்ப அடைந்தாள் தர்மு. தன்னை அறியாமலேயே கூவி விட்டோம் என்பதையும் உணர்ந்தாள். இம்மாதிரி சூழ்நிலையில் ஓட்டம் பிடித்தால், அதைவிட அசட்டுத்தனமும் அபாயமும் கிடையாது என்பதும் அவள் புத்தியில் உறைத்தது.

பதற்றம் மறைந்த குரலில், "ஆமாம், கூப்பிட்டேன். உள்ளே ஒரு — பயப்படாதே — கொலை நடந்திருக்கிறது... சொன்னேனே, பயப்படாதே என்று? காரை எடுத்துக் கொண்டு, பக்கத்திலிருக்கிற போலீஸ் ஸ்டேஷனுக்குப் போ. எந்த அதிகாரி கிடைத்தாலும் கையோடு கூட்டி வா," என்று அவனை அனுப்பினாள்.

சில நிமிடங்களில் இன்ஸ்பெக்டருடன் கார் திரும்பியபோதும் அவள் வாசலிலேயே நின்றிருந்தாள். "உள்ளே வாருங்கள்," என்று அவரை அழைத்துச் சென்று, கட்டிலில் கிடந்த அந்தப் பரிதாபமான உடலைக் காட்டினாள்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

பிரேதத்திடம் நெருங்கவில்லை இன்ஸ்பெக்டர். "நீங்கள் யார்?" என்றார்.

"டிரைவர் சொல்லவில்லையா? மீனாம்பாள் கல்லூரியின் பிரின்ஸிபால் நான். இறந்து கிடப்பவர் எங்கள் கல்லூரியில் டெமான்ஸ்ட்ரேட்டராக இருப்பவர் — இருந்தவர்," என்றாள் தர்மு.

உடலைத் தொடாமலே குனிந்து பரீட்சை செய்த இன்ஸ்பெக்டர், தர்முவின் டிரைவரிடம் டாக்டரை அழைத்து வரும்படி கூறினார்.

"உங்கள் காலேஜுக்குக் கிடைத்திருக்கிற இரண்டாவது பெயர் இது."

தர்மு நிமிர்ந்து நோக்கினாள் ...

இன்ஸ்பெக்டரின் குரலில் தென்பட்ட கேலி அவள் மனத்தில் சுருக்கெனத் தைத்ததென்றால், அவர் கையிலிருந்த தினசரி அவள் கண்ணைப் பிடுங்கியெடுத்தது.

முதல் பத்தியில் அம்பிகாவைப் பற்றிய செய்திகளும் மிஸஸ் ரத்னத்தின் தலைமையில் மாணவிகள் பிக்னிக் போன விவரங்களும் தரப்பட்டிருந்தன. சராய்ப் பாக்கெட்டில் மடித்து எடுத்து வைத்திருந்தார் போலும். ஏழெட்டுப் படங்களுடன் இருந்த பேப்பரை நீவி விட்டுக் கொண்டே புன்னகை செய்தார் அந்த இன்ஸ்பெக்டர்.

தர்மு அந்தப் புன்னகையைப் பிரதிபலிக்க வில்லை ... "இந்த மாதிரிப் பிராபல்யம் எங்கள் கல்லூரிக்குத் தேவையில்லை," என்றாள் அழுத்தமாக.

"தேவையில்லாமல் வருவதும், தேவைப்படுகிற போது வராதிருப்பதும்தான் வாழ்க்கை," என்று இன்ஸ்பெக்டர் ஒரு பொன்மொழியை உதிர்த்த பின்னர், மிஸஸ் ரத்னத்தின் வீட்டுக்குப் பிரின்ஸிபால் வர நேர்ந்த

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

காரணத்தையும், வந்ததும் செய்த காரியத்தையும் விசாரிக்கலானார்.

பியூன் வந்து தகவல் சொன்னதையும், தான் மிஸஸ் ரத்னத்தைப் பார்த்துப் போக வந்ததையும் சொன்னாள் தர்மு.

"பியூன் உங்களிடம் தெரிவித்தபோது மணி என்ன இருக்கும்?"

"பதினொன்று இருக்கலாம்,"

"அப்படியானால் பத்து மணிக்கு இந்த அம்மாள் உயிரோடுதான் இருந்தாரென்று வைத்துக்கொள்ளலாம், இல்லையா?"

"அப்படித்தான் தோன்றுகிறது," என்று எச்சரிக்கையுடன் பதில் தந்தாள் தர்மு. கல்லூரியின் 'பெய'ரைக் குறித்து இன்ஸ்பெக்டர் குத்தலாகக் கூறியது அவள் மனத்தில் உறுத்திக்கொண்டேயிருந்ததோ?

அடுத்த அரைமணி நேரத்துக்குள், மிஸஸ் ரத்னத்தின் சின்னஞ்சிறு வீடு, போலீஸ்காரர்களின் கூட்டம் தாளாமல் கிடுகிடுக்கத் தொடங்கிவிட்டது. போலீஸ், டாக்டர்கள், புகைப்படக்காரர்கள், கைரேகை நிபுணர்கள், நாய்கள், அதன் காவலர்கள் -- இப்படி ஒவ்வொரு வகையினரும் தங்கள் தங்கள் உதவியாளர் பரிவாரங் களுடன் வந்து சேர்ந்ததால் எவராலும் சமாளிக்க இயலாத தாகிவிட்டது.

பரிசோதனை செய்த டாக்டர் உயிர் பிரிந்து சுமார் ஐந்து மணி நேரம் ஆகியிருக்க வேண்டுமென்று தெரிவித்தார். அதாவது, மத்தியானம் ஏறத்தாழ இரண்டு மணி அளவில் கொலை நடந்திருக்க வேண்டுமென்பது அவர் அபிப்பிராயம். "மேலோடு பார்த்ததில், மெல்லிய ஸில்க் துணி அல்லது கைக்குட்டையால் இறுக்கிக்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கொன்றிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. குரல் வளையில் எந்த இடத்தில் நெரித்தால் சட்டென்று உயிர் போகும் என்பதைத் தெரிந்து வைத்திருக்கிறான் —" என்று அவர் கூறியபோது ஒரு போலீஸ் அதிகாரி குறுக்கிட்டார்:

"தெரிந்து வைத்திருக்கிறான்' என்கிறீர்களே? வைத்திருக்கிறாள்' என்று சொல்லக்கூடாதா?"

டாக்டர் புன்னகைத்தார்; "ஏன் கூடாது? முரட்டுத்தனமாய் நடந்திருக்கிறதே என்பதால் சொன்னேன். பெண்ணின் இயற்கைக்கு விரோதமாய் ..."

"இயற்கைக்கு விரோதமாய் எவ்வளவோ நடக்கிறது," என்று பொருட் செறிவுடன் மீனாம்பாள் கல்லூரியின் முதல்வியை ஒருமுறை பார்த்துவிட்டு, "யாரப்பா அங்கே? இந்த இறந்துபோன அம்மாளுக்கு யாரோ தோழியோ என்னவோ, தெருக்கோடி வீட்டிலிருந்து வந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள் என்று சொன்னார்களே? அந்தம்மாளை யாரேனும் போய் அழைத்து வாருங்களேன்," என்றார்.

"நான் இங்கேதான் இருக்கிறேனுங்க," என்று விம்மிக் கொண்டு, அத்தனை நேரமாய்ப் போலீசாரால் தடுக்கப்பட்ட கூட்டத்திடையே இருந்த ஓர் அறுபது வயதுக் கிழவி தட தடவென்று உள்ளே வந்தாள். மிஸஸ் ரத்னத்தின் விறைத்துவிட்ட கால்களைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு, "ரத்னம், ரத்னம்! முட்டிக் கொண்டேனே தினம் தினம்? கேட்டியாடி பாவி! அந்த முரடன் கிட்டே வம்பு வைத்துக் கொள்ளாதேடி, நல்லதில்லைடி என்று படித்துப் படித்துச் சொன்னேனே! காதில் வாங்கிக்காததாலே இந்தக் கதிக்கு ஆளாயிட்டியேடி?" என்று நீளமாய் ஒப்பாரி வைத்துக் கதறினாள்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"பாட்டி! நீங்க இந்தப் பக்கமாய் வாங்க. அதை ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போகணும்," என்று போலீஸ் இன்ஸ்பெக்டர் அந்தக் கிழவியை ஓரமாய் ஒதுக்கிக் கொண்டு, மிஸஸ் ரத்னத்தின் சடலம் போலீஸ் வேனில் ஏறுவதற்கு உதவி செய்தார். பிறகு, "மிஸஸ் ரத்னத்தை உங்களுக்கு ரொம்ப நாளாய்த் தெரியுமா ... உங்கள் பெயர் என்ன?" என்று பாட்டியம்மாளிடம் கேட்டார்.

"இருபது வருஷமாய் நாங்கள் சினேகிதம்," என்று மூக்கைச் சுத்தம் செய்தாள் அந்தக் கிழவி. "அந்தப் படு வெட்டிலே போகிறவன் — இவள் புருஷன் — வேத சிகாமணியோடு குடித்தனம் பண்ணி வாழ்ந்தாளே, அந்த நாளிலிருந்து தெரியும் இவளை."

"ஏன் பாட்டி அந்த மனுஷன் மேலே உங்களுக்கு அத்தனை கோபம்?" என்று இன்ஸ்பெக்டர் சிரித்தார்.

"பதினைந்து இருபது வருஷத்துக்கு முன்னாலே, இவர்களுக்குக் கல்யாணமாச்சுது. அப்போ, இங்கே ஸி.ஐ.டி. யாவது இன்னொன்றாவது? ஒரு பழைய வீட்டிலே புதுக் குடித்தனம் போட்டாங்க. ரதியாட்டம் இருப்பாள் ரத்னம்.... இன்னொருத்தனாயிருந்தால், தலைமேலே தூக்கி வைத்துக் கொண்டு நாலு வீதி பிரதட்சணம் வருவான். இந்த வேத சிகாமணி, பொழுது விடிந்து பொழுது போனால் பச்சைக் கிளியாட்டம் பெண்ணோடு சண்டை போட்டுக் கொண்டு நிற்பான் ..."

தர்மு சிவராஜ், வீட்டுக்கு எப்போது திரும்புவது, எப்போது சாப்பிட்டுவிட்டுப் படுப்பது என்ற கவலைகளில் மூழ்கியிருந்தாள் வெகு நேரமாக. அவளுக்குக்கூட, மிஸஸ் ரத்னம் பச்சைக் கிளி என்று வர்ணிக்கப்பட்டதைக் கேட்டுச் சிரிப்பு வந்தது.

"எதை வைத்துத் தகராறு?" என்று போலீஸ் அதிகாரி கேட்டார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"வேதசிகாமணிக்கு ஒரு தங்கை இருந்தது. நோயாளிப் பெண் அது. படுக்கையிலேயே கிடக்கும். அதைச் சரியாய்க் கவனிக்கவில்லை என்று அந்தப் பாவி சண்டை போடுவான். அத்தோடு ... சரி, விடுங்க." "

"எதையும் விட முடியாது, பாட்டி விடுவதற்கா நாங்கள் இருக்கிறோம்? சும்மா சொல்லுங்க்."

"அவனுக்குப் பேய், பிசாசு, மந்திரம் மாயம் இதிலெல்லாம் நம்பிக்கை. ஒரு மலையாள மாந்திரீகனுடன் சேர்ந்து கொண்டு சுடுகாட்டுக்கெல்லாம் நட்ட நடு நிசியில் போய் விட்டு வந்து கதவைத் தட்டுவான். வயசுப் பொண்ணு, கல்யாணமாகி ஒரு வருசம் ஆகாத சிறிசு, ஏன் பயப்படாது?"

போலீஸ் அதிகாரி, "ஏன் சார், ஒரே பேய், பூதம், பிசாசு, முன் ஜன்ம சீசனாயிருக்கிறது எங்கே பார்த்தாலும், என்று தன் அருகிலிருந்த இன்னோர் அதிகாரியிடம் சொல்லி சிரித்துவிட்டு, "அப்புறம்?" என்றார்.

"தினம் சண்டைதான். கடைசியிலே அந்தத் தங்கச்சி ஒருநாள் இறந்து போச்சு. அதற்கு மறுநாள் அவனும் செங்கல்பட்டுக்கு ஓடிவிட்டான்."

"இத்தனை வருஷமாய் இவர்களுக்குள் வேறு தொடர்பே கிடையாது?"

"ரத்னம் நல்லா ப்படிச்சிருந்ததாலே, பல காலேஜிலே வேலைக்குச் சேர்ந்து, கடைசியில் இவங்க — தர்மு சிவராஜ் பக்கம் கையைக் காட்டினாள் — காலேஜிலே சேர்ந்தாங்க. இப்பத்தான் மூன்று நாலு வருஷமாய் அவன் கடிதம் போட ஆரம்பிச்சிருக்கிறான். 'என்னோடு இருக்கலாம். வந்து விடு', என்று கூப்பிட்டுக் கொண்டேயிருந்தான். நான்கூட அப்படியே செய் என்று சொன்னேன். ஆனால் ரத்னத்துக்கு இஷ்டமில்லை."

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அறையையும் பொருள்களையும் சோதனை போட்டுக் கொண்டிருந்த உதவியாளர்களில் ஒருவர் முன் வந்து, "நகைகள், ரொக்கம் எல்லாம் பத்திரமாயிருக்கின்றன, சார். ஆகவே வந்தவனுக்கு, திருடுவது 'மோடிவ்' இல்லை யென்று நினைக்கிறேன்" என்றார்.

இதற்குள் கல்லூரி பியூன் சண்முகமும் அங்கேயே அழைத்து வரப்பட்டான்.

"பிரின்ஸிபால் சொன்னபடி, ரத்னம்மாளுக்கு எப்படி இருக்கிறதுன்னு பார்க்கிறதற்காகக் காலையில் வந்தேனுங்க. சரியா பதினொரு மணி ..."

இன்ஸ்பெக்டர் அவன் மணிக்கட்டைப் பார்த்து விட்டு, "எப்படி அத்தனை கரெக்டாய்ச் சொல்கிறாய்? உன்னிடம் கைக்கடியாரம் இல்லையே?" என்று கேட்டார்.

எதிர்த்த ஆபீசில் மணி அடிச்சதுங்க. எண்ணிக் கொண்டே இங்கே நுழைஞ்சேன். நினைவு நீச்சில்லாமல் படுத்துக் கிடந்தாங்க. இதோ, இவங்கதான் கஞ்சி ஆத்தி ஊத்திட்டிருந்தாங்க அவங்க வாயிலே."

சண்முகத்தின் விரல், மிஸஸ் ரத்னத்தின் தோழி என்று இத்தனை நேரம் விவரம் சொல்லிக் கொண்டிருந்த விசாலாட்சியைச் சுட்டிக் காட்டியது.

தன்னை 'க்ளியர்' பண்ணிக் கொள்ள வேண்டியது முதல் அவசியம் என்று அப்போதுதான் அவளுக்கு உறைத்தது போலும். "நான் இரண்டு நாளாயக் காலையிலும், மாலையிலும் வந்து, மருந்து கொடுத்து, கஞ்சி வைத்துத் தந்து, படுக்கையெல்லாம் உதறிப் போட்டு விட்டுப் போகிறேன். ரத்னத்துக்கு இந்த மாதிரி நேருமென்று தெரிந்திருந்தால் இங்கேயே இருந்திருப் பேனே?" என்று புலம்பினாள்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

நகைச்சுவையுணர்ச்சி கொண்ட ஓர் அதிகாரி, "இருந்திருந்தால், வந்தவன் உங்கள் மண்டையிலும் நாலு போட்டிருப்பான்! நல்ல வேளை தப்பினீர்கள்!" என்றார்.

"போனால் போய்க் கொள்கிறேன், போங்கள்! ரத்னமே போனாவிட்டு எனக்கென்ன வேண்டியிருக்கு?" என்று அவள் அரற்றிக் கொண்டிருக்கையில், "இதோ ஒரு கார்டு," என்று மிஸஸ் ரத்னத்தின் கூட்டிலில் தலையணை யின் கீழிருந்த ஓர் அஞ்சலட்டையை எடுத்து வந்து இன்ஸ் பெக்டரிடம் கொடுத்தார் ஒரு கான்ஸ்டபிள்.

> 'வர வர நான் பொறுமை இழந்துகொண் டிருக்கிறேன். நீ செய்வது நன்றாயில்லை. இன்னும் ஒரு மாத காலத்துக்குள் நீ வந்து சேரா விட்டால் என்ன நேருமோ எனக்கே தெரியாது.
>
> — வேதசிகாமணி

கார்டை மடித்துப் பையில் போட்டுக் கொண்டார் போலீஸ் அதிகாரி.

"மிரட்டலாக இருக்கிறதே?" என்று கூறியவாறு கடிதம் எழுதப்பட்ட தேதியை மீண்டும் பார்த்தார். "செங்கல்பட்டு ... பிப்ரவரி பதினேழு ..." சுவரில் மாட்டி யிருந்த காலண்டரின்மீது அவர் பார்வை சென்றது. "ஒரு மாதம் முடிந்து இரண்டு நாளாகிறது," என்று அவர் முணு முணுத்தது அந்தம்மாளின் காதிலும் விழுந்திருக்க வேண்டும். "ரத்னத்தின் புருஷன் எழுதின கடிதமா அது? அவன் சரியான முரடன். எதுவும் பண்ணியிருப்பான்," என்று சேர்ந்து பாடினாள்.

செங்கல்பட்டிலிருக்கும் வேதசிகாமணிக்குத் தந்தி மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டு விட்டதாக ஒரு போலீஸ் காரர் வந்து சொல்லவே, பெரிய அதிகாரிகள் எழுந்து கொண்டார்கள். உதவிப் பரிவாரத்தினர் முன்னதாகவே

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

புறப்பட்டுப் போய்விட்டதால், அங்கே மேலும் வேலை இருக்கவில்லை.

"நான் போகலாமல்லவா?" என்று தர்முவும் எழுந்து கொண்டாள்.

"ஒரு நிமிஷம்," என்று நிறுத்தினார் இன்ஸ்பெக்டர். தமது டயரியைப் புரட்டிப் பார்த்தார் ஒருமுறை. "முன் ஜன்ம நினைவு வந்திருப்பதாக உங்கள் கல்லூரி மாணவி ஒருத்தி பேசிக் கொண்டிருக்கிறாளல்லவா — அம்பிகா என்ற பெண் — அவளை நாங்கள் பார்க்க வேண்டுமே?" என்றார்.

"இன்ஸ்பெக்டர் சார்!" என்று காட்டத்துடன் பதிலளித்தாள் தர்மு. 'அத்து மீறுகிறீர்கள்' என்பதை அவருக்கு உணர்த்த வேண்டிய கட்டம் வந்துவிட்டது என்று அவள் எண்ணினாள். "அந்தப் பெண் ஏற்கெனவே பரிதாபமான நிலையில் — புத்தி பிசகிவிட்ட மாதிரி — இருக்கிறாள். அவளை நீங்கள் வதைப்பதை நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன். அவளுக்கும் இந்த மரணத்துக்கும் என்ன சம்பந்தம்?"

"சம்பந்தம் உண்டா இல்லையா என்பதைத் தீர்மானிக்கத்தான் கவர்மெண்டில் எங்களைச் சம்பளம் கொடுத்து உட்கார்த்தி வைத்திருக்கிறார்கள், மேடம்," என்றார் போலீஸ் அதிகாரி சாந்தமாக. ஒரு மர்மப் புன்னகை அவர் உதட்டில் விளையாடியது.

சித்தியையும் அம்பிகாவையும் திகைக்க வைத்த போலீஸ்காரர் இந்த இன்ஸ்பெக்டரால் அனுப்பப்பட்டவர் தான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

5

தர்மு சிவராஜ் காரை விட்டிறங்கியிருக்க மாட்டார்.

மூக்குக் கண்ணாடி அந்தச் சிறிய மூக்கில் நர்த்தன மாட, தொளதொள முழுக் கைச் சட்டை காற்றில் பறந்தாட, பங்களாவினுள்ளிருந்து வேகமாக வந்தார் சிவராஜ்.

"வந்துவிட்டான். போச். இனி அவ்வளவுதான். மை காட்!' என்றார். அதையும் இரைந்து சொல்லவில்லை. உள் பக்கம் பார்த்துக்கொண்டு பயந்தவாறே சொன்னார்.

"எவன் வந்துவிட்டான்?" என்று தர்மு எரிந்து விழுந்தாள். இத்தனை நேர மன உளைச்சலுக்குப் பிறகு இன்னொரு தலைவேதனையை அவள் பொறுக்கத் தயாரா யில்லை.

"அவன்தான், மூன்று மாசமாய்ப் பயமுறுத்திக் கொண்டிருந்தானே, உன் அண்ணன் பிள்ளை சக்கரபாணி என்கிற சக்கரை, அவன் பம்பாயிலிருந்து வந்தாயிற்று!"

"யார் வந்திருந்தாலும் வந்திருக்கட்டும்!" என்று எரிச்சலுடன் கூறிவிட்டு, அவரைக் கடந்து உள்ளே செல்ல முயன்றாள் தர்மு.

"வந்ததோடு இல்லை. நீ பிரமாதமாய்க் கதவைப் பூட்டி, சாவியை இடுப்பில் செருகிக்கொண்டு போனாயே, அந்த டார்க் ரூமுக்குள் புகுந்து, டெவலப் பண்ணின பிலிம், பண்ணாகக. என்லார்ஜ்மெண்ட் எல்லாவற்றையும் அவன்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

இஷ்டத்துக்குச் சூறையாடிக்கொண்டிருக்கிறான்! ஹுக்கும்!! என்று குழந்தை மாதிரி மூக்கை உறிஞ்சினார் சிவராஜ்.

பசி, எரிச்சல், களைப்பு எல்லாமாக வெடித்தன தர்முவின் குரலில். "உங்கள் காலில் விழுந்து கெஞ்சுகிறேன். தயவு பண்ணி என்னைக் கொஞ்ச நேரம் சும்மா விடுங்கள். வீடே நெருப்புப் பிடித்து எரிந்தாலும் எரியட்டும்!" என்று மாடிப்படியின் கைப்பிடியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு தள்ளர்டித் தள்ளாடி மாடிக்கு ஏறிச் சென்றாள் தர்மு.

கூடை நாற்காலியில் அவள் பொத்தென்று விழவும், சொல்லி வைத்தாற்போல் டெலிபோன் மணி அடிக்கவும் சரியாயிருந்தது. அலுப்போடு குழாயை எடுத்ததுமே, "யார், தர்முவா!" என்ற கேள்வி அதட்டலாக வந்தது.

அந்தக் கரகரப்பான தொண்டை, அதட்டலான தோரணை இரண்டும் உடனேயே தெரிவித்துவிட்டன, ஜஸ்டிஸ் ஆனந்தம்தான் கூப்பிடுகிறார் என்று. மீனாம்பாள் கல்லூரியை நிர்வகிக்கும் டிரஸ்டு குழுவில் அவர் ஒரு முக்கியமான உறுப்பினர்.

"யெஸ் ஸார்," என்றாள் தர்மு பணிவுடன்.

"என்னம்மா, உன் காலேஜ் மதறாஸிலே நடக்கிறதா, சிகாகோவில் நடக்கிறதா? பேப்பர்களுக்கு நாலு பக்கத்துக்கும் நீயே நியூஸ் சப்ளை செய்வதா யிருக்கிறாயா? காலையிலே பார்த்தால், உன் காலேஜ் ஸ்டூடண்டுக்குப் பூர்வ ஜன்ம நினைவு என்று நாலு பத்தி! மாலையில் பார்த்தால், உன் காலேஜ் டெமான்ஸ்ட்ரேட்டர் கொலை என்று ஐந்து பத்தி! இவ்வளவு தானா? இல்லை, நாளைக்கும் ஏதாவது வருமா?"

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

டொக்கென்று ஜஸ்டிஸ் ஆனந்தம் டெலிபோனை வைத்து விட்டார் — பிரின்ஸிபாலின் சமாதானத்தைக் கூடக் கேட்க விரும்பாதவராக.

தர்மு மேஜைமீது கை ஊன்றி, தலையைக் கவிழ்த்துக் கொண்டாள். கடகடவென்று கண்ணீர் பெருகி, அவள் முழங்கைகளையும் நெற்றியையும் ஈரமாக்கியது. தான் எவ்வளவு பெரிய கல்லூரியின் முதல்வி என்பதை மறந்தவளாக, விசித்து விசித்து அழலானாள் அவள்.

அந்தக் காட்சியைப் பார்த்தவாறு, அறை வாசலில் ஓர் இளைஞன் நின்றிருந்தான். அவனுடைய சோடா புட்டிக் கண்ணாடிக்குப் பின்னால் பரிதாப உணர்ச்சி பொங்கி வழிந்தது. ஆறடி உயரமுள்ள அவனுடைய ஆஜானுபாகுவான தேகம் மொத்தமும் அத்தைக்காக இரக்கப்படுவதுபோல் நெகிழ்ந்தது.

'அத்தை நன்றாக அழுது ஓயட்டும்' என்று காத்திருந்தான், பம்பாய் பல்கலைக் கழகத்தின் மனத் தத்துவப் பிரிவில் பணியாற்றும் சக்கரை.

அச்சம், சீற்றம், அன்பு ஆகிய மூன்றுதான் மனித உணர்ச்சிகள் அனைத்துக்கும் அடிப்படை என்று அவன் அறிவான். அந்த மூன்றினுள் எது இப்போது தன் அத்தையை ஆட்டி வைக்கிறது என்றுதான் அவனுக்கு விளங்கவில்லை.

தானாகவே துக்கம் ஓய்ந்தவளாகத் தர்மு தலையை நிமிர்த்தினாள். அறை வாசற்படியில் நின்றிருக்கும் தன் அண்ணன் மகனைக் கண்டதும் அவளுக்கு முதலில் அவமானமாகி விட்டது. கண்ணைத் துடைத்துக்கொண்டு, "வா சக்கரை," என்று வரவேற்றாள்.

"இருப்பதா, இறப்பதா? அதுவே இப்போதுள்ள கேள்வி. அப்படித்தானே அத்தை?" என்று வினவிய வண்ணம் சக்கரை உட்கார்ந்து கொண்டதும் தர்முவினால்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

புன்சிரிப்பைக் கட்டுப்படுத்த முடியவில்லை. சக்கரை ஒரு ஷேக்ஸ்பியர் பித்தன், பொருத்தமோ பொருத்தமில்லையோ ஷேக்ஸ்பியர் பொன்மொழிகளை உதிர்த்துக் கொண்டிருப்பது அவன் வழக்கம்.

ஏதோ பேச வாயெடுத்த அத்தையை நிறுத்தினான் சக்கரை. "எதுவும் சொல்ல வேண்டாம், அத்தை தெரிந்து தான் வந்தேன்," என்றவன், அத்தையின் திகைப்பை ஊகித்துக் கொண்டான். "மற்ற மனத் தத்துவ நிபுணர்களும் கழகங்களும் தந்தி கொடுத்துக் கேட்டுக் கொண்டிருந்தார்கள், வரலாமா கூடாதா என்று. இல்லையா? நம் அத்தையை நாமென்ன கேட்பது என்று நான் நேரிலேயே வந்து விட்டேன் — உன் காலேஜ் மாணவி அம்பிகாவின் கேசுக்காக. அத்தை! இப்படி ஒரு சுவாரஸ்யமான கேஸ் இந்தியாவிலேயே நடைபெற்றதில்லை என்பேன். பாரா சைகாலஜி என்ற பிரிவில், மிகப் புதுமையான அனுபவம் இது."

தன் அண்ணன் மகனைக் கண்டதே பெரிய தெம்பாயிருந்தது தர்முவுக்கு. மிஸஸ் ரத்னத்தின் கொலையையும் பற்றி நிதானமாகக் கூறி முடித்தாள்.

"அட, அது வேறு புது சிக்கலா!" என்று மோவாயைத் தடவிக்கொண்டான் சக்கரை.

தயங்கித் தயங்கி உள்ளே வந்தார் சிவராஜ்.

அவருடைய ஏக்கப் பார்வையைப் புரிந்து கொண்ட தர்மு, "இவர் வயிற்றெரிச்சலை ஏன் கொட்டிக் கொள்கிறாய், சக்கரை? டார்க் ரூமில் வைத்திருந்த பிலிமையெல்லாம் கெடுத்துவிட்டாயாமே? பிலிம்களைக் கொடுத்து விடப்பா," என்று சிபாரிசு செய்தாள்.

"அத்தான் தன் 'ஹாபி'யை விட்டு விட்டேனென்று சொல்லித் தலை முழுகுகிற வரையில் என் நாச வேலையைக் கொடர்ந்து செய்து கொண்டுதான்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

இருப்பேன்!'' என்று பாண்ட் பையைத் தட்டிக் காட்டினான் சக்கரை. "அவருடைய பிலிம் ரோல் இரண்டு மூன்று இதோ இங்கே இருக்கின்றன. நாலு நாளாவது அழ வைத்துவிட்டுத்தான் தரப் போகிறேன்!"

"அது போகட்டும். எனக்கு ஒத்தாசையாகக் கொஞ்ச நாளாவது இங்கே இருப்பாயா?" என்று தர்மு கவலையுடன் கேட்டாள்.

"கட்டாயம் அத்தை! இந்த அம்பிகா சமாசாரத்தை உண்டு இல்லையென்று தீர்த்துவிட்டுத்தான் சென்டிரலில் ரயில் ஏறப் போகிறேன்!" என்று உறுதி கூறினான் சக்கரை.

காலை எட்டு மணி சுமாருக்கு இன்ஸ்பெக்டர் தன் மோட்டார் சைக்கிளில் அம்பிகாவின் வீட்டு வாசலுக்கு வந்து இறங்கினார். வழக்கமாகத் தமது விசாரணைகளைப் போலீஸ் ஸ்டேஷனில் வைத்துக் கொள்கிறவர்தான் அவர். ஆனால், மீனாம்பாள் கல்லூரியை நிர்வகிக்கும் குழுவில் பல பெரிய மனிதர்கள் இடம் பெற்றிருந்தார்கள். தர்மு சிவராஜின் வேண்டு கோளை முன்னிட்டும், கல்லூரி நிர்வாகிகளின் மனத்துக்கு வருத்தம் தரக்கூடாதென்பதாலும் இன்ஸ்பெக்டர் அம்பிகாவின் வீட்டுக்கே வந்து விட்டார். முதல் நாளிரவே ஒரு கான்ஸ்டபிள் மூலம் தான் வரப்போவதைத் தெரிவித்துமிருந்தார், அம்பிகாவுக்கு.

மோட்டார் பைக்கைப் பூட்டிக் கொண்டிருக்கை யில், "குட்மார்னிங் சார், நானும் இப்போதுதான் வந்தேன். நீங்கள் உள்ளே நுழைந்த பிறகுதான் நான் நுழைய வேண்டு மென்று காத்திருக்கிறேன்," என்றது உற்சாகமானதோர் குரல். "என் பெயர் சக்கரை. பம்பாய் பல்கலைக் கழகத்தில் மனத் தத்துவப் பிரிவில் இருப்பவன் நான். பிரின்ஸிபால் தர்மு சிவராஜுக்கு அண்ணன் மகன்."

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"ஸாரி," என்றார் இன்ஸ்பெக்டர் கடுமையாக. "இது பிரைவேட் விசாரணை. யாரையும் அனுமதிப்பதற்கில்லை."

"மகுடம் தரித்த தலைக்கு மன அமைதி கிடையாது என்று ஷேக்ஸ்பியர் சொன்னது போலீஸ் தொப்பிக்கும் பொருந்துமோ?" சக்கரை பாண்ட் பையிலிருந்து பர்ஸை வெளியெடுத்தான். அதிலிருந்து ஒரு கடிதத்தை இன்ஸ்பெக்டரிடம் நீட்டினான். "ஐ.ஜி. யிடம் பிரத்தியேக அனுமதி வாங்கிக்கொண்டு வந்தேன். நாளைக்கு உங்களை அவர் குற்றம் சொல்லக் கூடாதல்லவா, அதற்காகத்தான் இது."

மேலேயிருந்த முத்திரையைப் பார்ப்பதே போதுமானதாயிருந்தது இன்ஸ்பெக்டருக்கு. ஒரு வேண்டா வெறுப்பான தலையசைப்புடன், சக்கரை தம்முடன் வருவதற்கு அனுமதி தந்தார். அதற்குள் மோட்டார் பைக்கின் ஓசையையும், பேச்சுக் குரலையும் கேட்டு மரகதம் பின்னே வர, சூரி முன்னே வந்து, "வாருங்கள் சார்," என்று வரவேற்றான்.

இன்ஸ்பெக்டர்தான் உடனே நுழைந்து விட்டாரே தவிர, கண்ணிமைக்கும் நேரத்துக்குச் சக்கரை அசையாமல் நின்றான் சூரியைக் கண்டதும். இந்த இளைஞன் யாரென்று நினைத்தானோ, அல்லது எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கிறானே என்று யோசித்தானோ! அவனுடைய கனமான மூக்குக் கண்ணாடி எதையும் வெளிப்படுத்தவில்லை.

"என்ன பார்க்கிறீர்கள்?" என்று சூரி இனிமையாகக் கேட்டான். இன்ஸ்பெக்டருடன் வரும் எவரையும் முறைத்துக்கொள்ள வேண்டாமென்று தீர்மானித்திருந்தான் அவன்.

"உங்களை ... நான் ..." என்று இழுத்தான் சக்கரை.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"சூரி நாடகப் பள்ளி, பிரபலமானது. அதன் தலைவனான இந்தச் சூரியின் திரு உருவம் அடிக்கடி பத்திரிகைகளில் வருவதுண்டு," என்று சூரி விளக்கம் கூறியதும் "அதுதானே பார்த்தேன்," என்று திருப்தியடைந்த சக்கரை தான் யாரென்பதையும் அவனுக்குத் தெரிவித்தான்.

இன்ஸ்பெக்டர், எவ்வித சம்பிரதாயத்தையும் பாராமல் தானாகவே ஒரு சோபாவை எடுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்து, "மிஸ் அம்பிகா, உங்களைப் பார்க்கத் தான் நான் வந்திருக்கிறேன்," என்றார்.

சித்தி, சூரி, சக்கரை மூவரையும் மாறி மாறிப் பார்த்துவிட்டு, மௌனமாக அவர்களெதிரில் உட்கார்ந் தாள் அம்பிகா. இரவில் சரியாகத் தூங்கவில்லை என்பதை அவளுடைய கனத்த இமைகள் காட்டின. மிஸஸ் ரத்னத்தின் கொலைபற்றி விசாரிக்கத்தான் அவர் வரப் போகிறார் என்று நேற்றே அவளுக்குத் தெரிந்து விட்டது.

"அவளுக்கு இன்னும் உடம்பு சரியாகவில்லை. தயவு பண்ணி அதிகமாய்த் தொந்தரவு பண்ணாதீர்கள்," என்றாள் மரகதம் கெஞ்சலான குரலில்.

"எனக்கு ஒரு வேலையும் இல்லை," என்றார் இன்ஸ்பெக்டர். "நேற்றுப் பிற்பகல் எங்கெங்கே போயிருந்தார் என்பதைத் தெரிந்து கொள்ளத்தான் வந்தேன்."

"காலேஜுக்குப் போயிருந்தாள். சாயந்தரம் வீட்டுக்கு வந்துவிட்டாள்," என்றாள் மரகதம்.

சூரியும் உடனே, "நேற்று மத்தியான்னம் நாடகப் பயிற்சி வகுப்பு இருந்தது. நான் ரஷ்ய கலாசார கோஷ்டியை வரவேற்கும் குழுவில் இருக்க வேண்டியவன். ஆகவே வகுப்புக் கிடையாதென்று மற்றவர்களுக்குச் சொல்லி விட்டேன். அம்பிகாவுக்கு மட்டும் அது தெரியாதாகையால்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

பகல் ஒரு மணிக்கு ராஜா அண்ணாமலைபுரத்திலிருக்கும் என் ஸ்கூலுக்கு வந்திருந்தாள். மூன்று மணிக்கு நான் திரும்பி வந்தபோது இவள் வழக்கம்போலத் தூங்கிக் கொண்டிருந்தாள், என் ஸ்கூலில்."

அம்பிகாவுக்கும் அப்போதுதான் பேச்சு வந்தது போலும். "ஒரு மணிக்குப் போய்விட்டேன். அங்கிருந்த வேலைக்காரனை அனுப்பிவிட்டுத் தூங்கினேன் நன்றாய். மூன்று மணிக்கு இவர் வந்து எழுப்பினதுதான் தெரியும்," என்று கூறினாள்.

"அதென்ன வழக்கம்போல் தூங்கினாள் என்கிறீர்கள்? உங்கள் வகுப்பில் அதுவும் ஒரு பாடமா?" என்று இன்ஸ்பெக்டர் சூரியிடம் விசாரித்தார்.

சூரி தன் புன்னகையை இழந்து விடாமல், "ஒரு நாள் அவகாசம் கிடைத்தால் எங்கள் ஸ்கூலுக்குக் கட்டாயம் நீங்கள் வரவேண்டும், இன்ஸ்பெக்டர் சார். நான் எட்டு வயதில் நாடகக் கம்பெனியில் சேர்ந்தவன். இரண்டு வருடம் அயல் நாடுகளிலும் சுற்றியவன். நாடகப் பயிற்சியை ஒரு ஜெர்மன் முறைப்படி நடத்தி வருகிறேன்," என்று விவரித்தான்.

"அதாவது?"

சக்கரை அவர்களுடைய சம்பாஷணையைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கவில்லை. அம்பிகாவின் முகத்தில் தென்படுகிற பாவங்கள், பேச்சில் வெளிப்படுகிற ஏற்ற இறக்கங்கள், விழிகள் அசைகின்ற நீள அகலப் பரப்புகள் ஆகியவற்றைக் கணக்கெடுத்தவாறிருந்தது அவனுடைய மூளை. ஓரிடத்திலும் உட்காராமல், சும்மா உலவுகின்றவன் போல அம்பிகாவைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தான்.

சூரியின் பேச்சுத் தொடர்ந்து கொண்டிருந்தது. "...ஆகவே, உடல் உறுப்புகளாகட்டும், முகத்தின்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

நசைகளாகட்டும், மூளையாகட்டும், திறம்பட, அதிகபட்ச ஊறு சுறுப்புடன் இயங்க வேண்டுமானால் 'ரிலாக்ஸேஷன்' என்கிறார்களே அந்த ஓய்வு கட்டாயம் தேவை. பயிற்சி செய்யத் தொடங்குமுன்னால், அரைமணி நேரம் அல்லது ஒரு மணி நேரம் தூங்கிவிட்டு எழுந்திருக்க வேண்டும் என்பது இந்த ஜெர்மன் முறையின் அடிப்படை. அப்படிப் பட்ட ஓய்வுக்குப் பிறகு, எல்லாப் புலன்களும் விழித்துக் கொண்டு, கூர்மையாக, எச்சரிக்கையாக ..."

இன்ஸ்பெக்டர் தன் கொட்டாவியை அடக்கிக் கொண்டார். அசிரத்தையாக ஜன்னல் வழியே நோக்கிய வாறிருந்த சக்கரை, தெருக்கோடியில் கறிகாய் வண்டி தள்ளிக் கொண்டு செல்பவனும், குடை ரிப்பேர் ஆசாமியும், சைக்கிளில் விரையும் தந்திச் சேவகனும் அசல் நபர்களா, அல்லது இந்த வீட்டைக் கண்காணிப்பதற்காக இன்ஸ் பெக்டரால் சாமர்த்தியமாக நியமிக்கப்பட்ட ரகசியப் போலீஸ் ஆட்களா என்பதைக் கண்டுகொள்ள முடியாமல் திணறிக்கொண்டிருந்தான்.

நடையில் இன்னொரு கனமான பூட்ஸ் சத்தம் கேட்டது. வேறொரு போலீஸ் அதிகாரி உள்ளே வந்து இன்ஸ்பெக்டரின் காதோடு ஏதோ கூறினார். இன்ஸ் பெக்டரின் முகபாவம் மாறியது.

"ஓகோ, இந்த விசாரணையை இன்னொரு நாள் வைத்துக் கொள்ளலாம். இதோ வருகிறேன்," என்று உடனே எழுந்து கொண்டவர், "மிஸ்டர் சூரி, உங்கள் போதனா முறை இன்டரஸ்டிங்காகத்தான் இருக்கிறது. ஒரு நாள் நேரில் வந்து பாக்கிறேன். வருகிறேனம்மா," என்று விடை பெற்றுக் கொண்டார்.

மோட்டார் பைக்கின் படபடப்பு தேய்ந்து மறைந்தது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

சூரி அம்பிகாவைப் பரிவுடன் அணுகி, "எதற்கும் நீ அலட்டிக் கொள்ளாதே. நான் இருக்கிறேன், துணைக்கு இவரும் வந்திருக்கிறார்," என்று தைரியம் கூறிவிட்டு, "என்ன, நாம் போவோமா?" என்றான் சக்கரையிடம்.

அம்பிகா எழுந்து சென்றாள்.

இருவரும் வாசலுக்கு வந்தார்கள்.

சூரி, பின்னால் திரும்பிப் பார்த்துவிட்டு, யாருமில்லாததால், "அம்பிகாவைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்டான் சக்கரையிடம்.

"ஹூம்! 'காட்டுவதைவிட அதிகமாக வைத்திரு, அறிந்திருப்பதைவிடக் குறைவாகப் பேசு' என்றார் ஷேக்ஸ்பியர். சரி, அம்பிகா உங்களுக்கு ரொம்ப வேண்டியவரா?"

"ஆமாம்."

"அப்படியானால் கோபிப்பீர்கள்."

"இல்லை, சொல்லுங்கள்," என்றான் சூரி ஆவலுடன்.

"உங்கள் அம்பிகா செய்வதுபோல ஓர் ஒன்றாம் நம்பர் மோசடி இந்த இருபதாம் நூற்றாண்டில் நடந்ததே கிடையாது. அதை அம்பலப்படுத்தி விட்டுத்தான் மறு வேலை!" என்றான் சக்கரை அழுத்தம் திருத்தமாக.

சூரிக்கும் படபடப்பு ஏற்பட்டது. "உங்கள் முயற்சி நிச்சயம் தோற்கத்தான் போகிறது. அம்பிகாவா மோசக்காரி? அப்படி ஒருநாளும், எவராலும் குற்றம் சாட்ட முடியாது," என்றான் காட்டமாக.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

6

"இத்தினி வயசுக்கு மேலே நான் எங்கே போவேன், சாமி? இது எங்க தேவகியம்மா வாழ்ந்த இடம். செத்துப் போன இடம். இங்கேயே நானும் என் காலத்தை முடிச்சுக்கிறேன், சாமி, விரட்டாதீங்க, தருமதுரை ..."

வேலைக்காரக் கிழவியான தாயிதான் புலம்பிக் கொண்டிருந்தாள். கண்ணைத் துடைத்துத் துடைத்து அவளுடைய கந்தல் புடவையின் நுனிகள் சொட்டச் சொட்ட ஈரமாகியிருந்தன. பொன்னடி ஏதோ தேடுகிறான் என்பதை உணராமல், தன்னை மிரட்டுவதாகவே எண்ணினாள் அவள்.

அவளுடைய அழுகையையோ மன்றாடலையோ துளியும் லட்சியம் பண்ணாமல் சட்டிகளையும் பானைகளையும் வெளியே கொண்டு வந்து வைத்த வாறிருந்தான் அவன். குறுக்கேவந்த கிழவியைக் கையாலோ காலினாலோ ஒதுக்கிவிட்டுத் தன் பாட்டுக்கு வேலையில் ஈடுபட்டிருந்தான் அவன். தன் கரத்தினால் தொட முடியாத அளவுக்கு அருவருப்பூட்டும் கூளங்களைத் தோட்டக்காரனின் உதவிகொண்டு அப்புறப்படுத்திய வண்ணம் இருந்தவன், திடீரென ஒரு பொருளைக் கையிலெடுத்துப் பார்த்து, பல்லைக் கடித்தான். வெறுப்பின் முத்திரை அவன் கண்களில் ஆழப் பதிந்தது.

"ஏ தாயி! வா இப்படி!" என்று அவன் குரல் உறுமியது சினத்துடன்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அருகில் வந்த தாயி பொன்னடியின் கையிலிருந்த 'நிட்டிங்' ஊசிகள் இரண்டையும் பார்த்தாளோ இல்லையோ விம்மலொன்று வெடித்தது.

"சாமி, அதைப் பறிச்சுக்காதீங்க சாமி! எஜமானி யம்மா நினைவாய், அவங்க கொடுத்தது அது. என் கண்ணோட்டம் காப்பாத்திட்டு வர்றேன்!" என்று அந்த ஊசிகளை வசப்படுத்திக் கொள்ளும் வேகத்துடன் கைகளை நீட்டிக் கொண்டு தாவி வந்தாள்.

அவளுடைய ஆதங்கமே பொன்னடியின் சீற்றத்தைத் தூண்டி விட்டது. கிழவியை வதைப்பதற்கு ஒரு நல்ல கருவி கிடைத்தது என்று அவனுடைய பேயுள்ளம் கணக்குப் போட்டது. அந்த நிட்டிங் ஊசி எத்தனை வழவழவென்றிருந்ததோ அத்தனைக்கத்தனை முரட்டுப் பாறையாயிற்று அவன் மனம். "தாயி! எங்களுக்கெல்லாம் மேலே உனக்கு அம்மாள்கிட்டே பிரியம்! இல்லையா? அதனால்தானே இதை ஒளித்து வைத்துக் கொண்டிருந்தாய் இத்தனை நாளாய்? போகட்டும். அம்மாளுடைய பொருள்கள் வேறே என்னென்ன வைத்திருக்கிறாய்?" என்று கேட்டான்.

"வேறே எதுவும் இல்லீங்க!"

"தைரியமாய்ச் சொல்லு. உன்னை ஒன்றும் செய்ய மாட்டேன். நெக்லெஸ், வளையல், சங்கிலி ..." ஒவ்வொரு பொருளுக்கும் ஓரடி முன் வந்தான் பயங்கரமாய், பொன்னடி.

கிழவி நடுங்கிக்கொண்டே பின்வாங்கினாள். "சாமி சத்தியமா வேறே எதுவும் என்னண்டை இல்லைங்க. இது ஒண்ணுதான் அவங்க ..."

"அவங்க?" நிறுத்திவிட்ட பேச்சைத் தூண்டினான் பொன்னடி.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"இங்கே அவுட்ஹவுசிலே இருந்தப்போ, இதை வச்சிக்கிட்டு, கம்பளிச் சொக்காய் பின்னிட்டே இருந்தாங்க. கடோசிலே ஒரு நாள் 'சொக்காயும் வேணாம், ஒண்ணும் வேணாம்'னு சொல்லி, நூலையெல்லாம் பிரிச்சுப் போட்டுட்டு ஊசியையும் தூக்கி எறிஞ்சாங்க ..."

"அதை நீ வேலை மெனக்கெட்டுப் பொறுக்கி வைத்துக் கொண்டாய்? ஊம்?" இரண்டு ஊசியையும் முழங்கால்மீது வைத்து மளக்கென்று முறித்து ஒடிக்க முயன்றான் பொன்னடி.

"வேணாம் சாமி! வேணாம் சாமி!" என்று அவள் அலறியது பங்களாவை எட்டியது போலும். "பொன்னடி! ஏய் பொன்னடி!" என்று கலிவரதனின் குரல் அங்கே கத்துவது இங்கே எதிரொலித்தது.

"இரு, வந்து கவனிக்கிறேன் உன்னை!" என்று கறுவி விட்டு, 'என்ன வந்தது அவனுக்கு?' என்று தனக்குள் உறுமிய வண்ணமே பொன்னடி சலிப்புடன் பங்களாவின் மாடியை அடைந்தான்.

மாடி ஹாலில் அவன் கண்ட காட்சி அவனுக்குப் புதியதல்ல. கடந்து இருபது வருடங்களாகத் தினசரி காணும் நிகழ்ச்சிதான் அது.

மாவட்டை மாதிரி சுருண்டு மயங்கிக் கிடந்தான் கலிவரதன். கையில் பிடித்திருந்த மதுக் கோப்பை சாய்ந்து கிடந்தது. புட்டி இன்னொரு பக்கம் உருண்டிருந்தது. அவனுடைய கண்கள் பாதிதான் திறந்திருந்தன என்றாலும் அந்தப் பாதியின் சிவப்பே அச்சமேற்படுத்தக் கூடியதாக இருந்தது. ஆனால் அவன் குரல், அதிலிருந்த ஒலி ஆகியவை பரிதாபத்துக்குரியனவாயிருந்தன.

"பொன்னடி வந்துவிட்டாயா?" என்று கேட்டான் கலிவரதன்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"என்ன வேணும்?" என்று அதட்டலாக வினவினான் பொன்னடி.

கலிவரதனுக்குள்ளே மது சென்றிருக்கும் வேளைகளில் அவர்களுடைய உறவு இப்படித் தலைகீழாவது வழக்கம். யார் எஜமான், யார் உதவியாளன் என்பது புதிதாகப் பார்ப்பவருக்குத் தெரியாது.

"ஊற்று ... ஊற்று ..." என்றான் கலிவரதன்.

கவிழ்ந்திருந்த கிண்ணத்தையும் உருண்டிருந்த புட்டியையும் எடுத்து நிரப்பித் தந்தபோது, கலிவரதன் சிரமப்பட்டு எழுந்து, பொன்னடியின் காலிலேயே சாய்ந்தாற்போல் உட்கார்ந்து கொண்டு கிண்ணத்தை உறிஞ்சத் தொடங்கினான். அப்போது அவனுடைய செருகிய கண்கள் பொன்னடியின் கையிலிருந்த நிட்டிங் ஊசிகளைக் கண்டு விட்டன.

"பொன்னடி ... ஏது இது ...? இப்படிக் கொடேன்... கொஞ்சம் கொடேன் ..." என்று மன்றாடிக் கேட்டுப் பெற்றுக் கொண்டான் அந்த ஊசிகளை.

"என்னுதுங்க எஜமான் அது ..." என்று புலம்பிக் கொண்டே பின்னால் வந்துவிட்டாள் தாயியும். "எஜமானி யம்மா எனக்குன்னு கொடுத்தாங்க ..." என்று முன்னே வந்தவளை, நசுக்கி விடுபவன், போலக் கையைப் பிடித்து அழுத்தி, அறைக்கு வெளியே தள்ளிக்கொண்டு சென்றான் பொன்னடி. அடித் தொண்டையில், "இதோ பார், நானும் எஜமானும் பேசிக் கொண்டிருக்கிறபோது இன்னொரு தரம் நீ உள்ளே வந்தாயோ, அன்றைக்கே உனக்குச் சுடு காட்டிலே படுக்கை ரிஸர்வாகிவிடும், உஷார்! போ வெளியே!" என்று அவளை மாடிப் படியில் இறக்கிவிட்டுக் கதவைச் சாத்திக்கொண்டு திரும்பி வந்தான்.

வேலைக்காரக் கிழவியின் பாத்திரத்தை தானே ஏற்றுக் கொண்டவன் போல இப்போது கலிவரதன் அந்த

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ஊசிகளை வைத்துக்கொண்டு கண்ணீர் உகுத்தவாறிருந் தான். குடிகாரனும் பைத்தியக்காரனும் அண்ணன் தம்பிகள் என்பதை நிரூபிக்கிற மாதிரி, "தேவகி ... என்னை விட்டுவிட்டுப் போய் விட்டாயே தேவகி ..." என்று விசித்து விசித்து அழுது கொண்டிருந்தான் அவன்.

பொன்னடியின் முகத்தில் ஒருவிதக் கடுமை பரவியது, அந்தப் புலம்பலைக் கேட்டதும். "என்னங்க உங்களுக்கு? பைத்தியமா பிடித்திருக்கிறது?" என்று அதட்டி, அந்த நிட்டிங் ஊசிகளைப் பறித்து ஜன்னல் வழியே வெளியே எறிந்தான். தோட்டத்தின் புதரிடுக்கில் அவை விழுந்து மறைவதைத் திருப்தியுடன் பார்த்துவிட்டு, கலிவரதனிடம் வந்தான். கீழே கிடந்தவனின் அக்குளில் இரு கைகளையும் கொடுத்துத் தூக்கி, தரையோடு இழுத்த வாறு ஒரு சோபாவில் கிடத்தினான். ஒரு நாற்காலியைக் கலிவரதனெதிரில் போட்டுக் கொண்டு தானும் அமர்ந்தான். "சொல்லுங்கள்," என்றான் கலிவரதனிடம்.

"என்னத்தையுடா சொல்லட்டும், பொன்னடி?" என்று முகத்தை மூடிக்கொண்டு விக்கி விக்கி அழுதான் கலிவரதன்.

"தேவகியம்மாளைப் பற்றி என்னென்னவோ சொல்ல நினைத்தீர்களே?" என்று நினைவூட்டினான் பொன்னடி.

கலிவரதனுக்குச் சிறிது சிறிதாய்ப் போதை குறைந்து கொண்டு வந்தது. அழுகையை நிறுத்திக்கொண்டு, வெறித்த பார்வையுடன் பேசலானான். "தேவகிக்குக் குழந்தை வேண்டுமென்று ரொம்ப ஆசை. கல்யாணமாகி கொஞ்ச நாள்தானே ஆகிறது, அப்புறம் பார்த்துக் கொள்ளலாம் என்று நான் சொல்லிக் கொண்டே யிருந்தேன் ..."

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"ஆமாம், ஆமாம். ஒரு நாள் அவங்களைப் பரிகாசம் பண்ணுவதற்காக டவுனிலிருந்து இருபத்தைந்து ரூபாய் கொடுத்து ஒரு பெரிய ஜப்பான் பொம்மைகூட வாங்கி வந்தீர்களே ..." என்று பொன்னடி எடுத்துக் கொடுத்தான்.

"எத்தனை பெரிய குழந்தைப் பொம்மை! இப்போது நன்றாய் ஞாபகம் வருகிறது!" என்று கண்களைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தான் கலிவரதன். "ஆனால் அது வந்த வேளையே அவளுக்கும் எனக்கும் தகராறு ஆரம்பித்து விட்டது போ! எதுக்காக இந்த மாதிரி ஊதாரிச் செலவு என்று முதல் தடவையாய் என்னோடு சண்டை பிடிக்க ஆரம்பித்தாள். செலவழித்தால் என்ன! 'என் சொத்தெல்லாம் கரைந்த பிறகும் கூட, உன் மஞ்சக்காணி சொத்து இருக்கிறதே!' என்று நானும் முதல் தடவையாகக் கேட்க ஆரம்பித்தேன். ஹூம் ...!"

"அப்புறம்? மேலே சொல்லுங்கள்," என்று பொன்னடி ஆவலுடன் கலிவரதனின் தோளை உலுக்கினான்.

"அப்புறம் என்ன? அவள்தான் என் மேலே கோபித்துக் கொண்டு அவுட் ஹவுஸிலே குடியிருக்கப் போய் விட்டாளே!"

"போனால் என்ன? நீங்கள் விட்டால் தானே? நகையெல்லாம் எங்கே ஒளித்து வைத்திருக்கிறாய் என்று துளைத்து எடுத்தீர்களே அவளை?"

கலிவரதன் நெற்றியைச் சுளித்துக் கொண்டான். அவன் புருவங்கள் கோணல்மாணலாய் வளைந்தன. விழிகள் சஞ்சலத்துடன் சுழன்றன.

மதுக் கோப்பையில் வழிய வழிய ஊற்றி அவனிடம் நீட்டினான் பொன்னடி. "பதினைந்து, இருபது

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

லட்ச ரூபாய் நகைகளை ஒளித்து வைத்துக்கொண்டு கடைசி வரையில் தராமலே பிடிவாதம் பிடித்தார்களே?"

"சண்டாளி! அகங்காரி! மனைவியா அவள்? துரோகி! அவள் செத்தால்தான் எனக்கு நிம்மதி!" என்று உறுமத் தொடங்கினான் கலிவரதன்.

"அவர்கள்தான் செய்துவிட்டார்களே? நீங்களே உங்கள் கையால் அந்த அவுட்ஹவுசுக்கு நெருப்பு வைத்தது மறந்துவிட்டதா?"

கலிவரதனின் கண்கள் மிரட்சியுடன் நாலு புறமும் நோக்கின. "மெதுவாய்ப் பேசு, பொன்னடி ... அவுட் ஹவுசுக்கு நெருப்பு வைத்தபோது நீ கூடத்தான் பக்கத்திலே இருந்தாய் ... நான்தான் கொலை பண்ணினேன் என்கிற மாதிரி பேசுகிறாயே ..." என்று குறைப்பட்டுக் கொண்டான் தாழ்ந்த குரலில்.

"நான் இல்லை என்றா சொன்னேன்? அவளைத் தான் கொலை பண்ணிவிட்டீர்களே, இனி ..."

"வேண்டாம் பொன்னடி, வேண்டாம், வேண்டாம்," என்று அவன் வாயைப் பொத்தினான் கலிவரதன். "அதெல்லாம் யாருக்கும் இப்போது தெரியாது..."

"ஒருத்தருக்குத் தெரியும்."

"யார் அது?"

"அம்பிகா! தேவகியம்மாளின் மறு பிறவியான அம்பிகா!"

கலிவரதனின் முகம் வெளிறலாயிற்று. "அவளை... அவளை ... மறந்தே போனேன்! ... பொன்னடி, அவள் வாயை அடைத்தாக வேண்டுமே? ..." என்று பதறினான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"சபாஷ் முதலாளி," என்று உரிமையோடு முதுகில் தட்டிப் பாராட்டினான் பொன்னடி. "அதைத்தான் நான் அன்றையிலிருந்து சொல்லிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் என்னடாவென்றால் புதையலைச் சொல்லு, பொக்கிஷத்தைச் சொல்லு என்று அந்தப் பெண்ணின் தாவாக் கட்டையைப் பிடித்துக் கொண்டு கெஞ்சிக் கொண்டிருக்கிறீர்கள் ..."

கலிவரதன் மதுக் கோப்பையிலிருந்து கடைசிச் சொட்டையும் உதட்டில் வடித்துக்கொண்டு, "எஸ்டேட் மொத்தமும் ஜப்தி ஆகிவிடும் போலிருக்கிறதே, பொன்னடி? உனக்குத் தெரியாதா? அதுதான் ஒரு வேளை, அந்தப் பாவி புதைத்து வைத்ததை இந்தப் பெண்ணாவது சொல்லுமா என்று பார்க்கிறேன். சரி, உன் யோசனை என்ன என்கிறாய்?"

கோழியின் கழுத்தைத் திருகி எறிகிற மாதிரி ஜாடை காட்டினான் பொன்னடி. "அதுதான் ஒரே வழி. இல்லாவிட்டால் உங்களைத் தூக்கு மேடைக்கு அனுப்பி விடுவாள் அம்பிகா! யோசித்துப் பாருங்கள். உங்கள் சமாசாரங்களை அத்தனை ஞாபகமாக ஒப்பிக்கிறவள், உங்கள் கையால் தனக்கு நேர்ந்த முடிவையும் ஏன் சொல்ல மாட்டாள்? எவ்வளவு விஷயங்களை இம்மி பிசகாமல், அழகாய் வர்ணிக்கிறாள் என்றுதான் கண்ணால் பார்த்து விட்டோமே? அவுட் ஹவுசுக்கு நெருப்பு வைத்த விவரத்தையும் அவள் அதே போல் வர்ணித்தால், மற்றவர்கள் ஏன் நம்பமாட்டார்கள்?"

மீண்டும் அவன் வாயைப் பொத்தக் கலிவரதன் முற்பட்ட அதே நிமிடம் —

தடதடவென்று மாடிப்படியில் ஏறி ஓடி வந்தான் தோட்டக்காரன். "அந்தக் கிழவி பள்ளத்திலே விழுந்து

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

குய்யோ முறையோன்னு கூச்சல் போடுதுங்க, எசமான்!" என்றான் இரைக்க இரைக்க.

"பள்ளமா? ஏதுடா பள்ளம்?" என்று அதட்டினான் பொன்னடி. கலிவரதனோ, கூப்பாடு எதற்கென்றே புரிந்து கொள்ள இயலாதவனாக, "போடா முட்டாள்! இடியட்! கழுத்தைப் பிடித்துத் தள்ளு கழுதையை?" என்று சீறிக் கொண்டே கண்ணாடிக் கிண்ணத்தைத் தூக்கியடித்தான் வந்தவன்மீது. சுவரில் மோதிச் சிலீரென்று உடைந்து தெறித்தது அது.

சரேலென ஒதுங்கிக் கொண்ட தோட்டக்காரன், "தென்னண்டைக் கோடியிலே, காம்பவுண்டு ஓரமாய் ஒரு பள்ளம் இருக்குதுங்க. எனக்குக் கூட இத்தினி நாளாத் தெரியாது. இந்தக் கிழவி விழுந்து கத்தினாவிட்டுத்தான் கவனிச்சேனுங்க. நீங்களே வந்து பாருங்க சாமி" என்று முறையிட்டான்.

தட்டுத் தடுமாறி எழுந்துகொண்ட கலிவரதனின் கையைப் பற்றி அழைத்துக்கொண்டு, தோட்டத்தின் தெற்குக் கோடிக்குச் சென்றான் பொன்னடி. ஆனால் அதற்குள் கிழவி எப்படியோ சமாளித்துக்கொண்டு பள்ளத்திலிருந்து வெளி வந்துவிட்டாள். அவள் பக்கத்தில் அந்தக் கிழட்டு நாய், உயிரை விடப் போகிற மாதிரி இடைவிடாமல் குரைத்துக் கொண்டு நின்றது. "சீ போ!" என்று அதைக் காலால் தள்ளி உதை விட்டான் பொன்னடி.

பள்ளம் சிறியதாகத்தான் இருந்தது. ஆனால் சமீபத்தில்தான் வெட்டப்பட்ட மாதிரி புதிதாயும் இருந்தது. இதற்கு முன் யாரும் கண்டிராததாகவும் தோன்றியது.

"ஏய் கிழப் பிசாசு! என்ன ரகளை பண்ணிக் கொண்டிருக்கிறாய் இங்கே!" என்று பொன்னடி கேட்டானேயொழிய, கலிவரதன் சற்றுத் தள்ளியிருந்த மரத்தினடியில் அக்கடா என்று உட்கார்ந்து விட்டான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

பள்ளத்தை வெறித்து நோக்கியபடி நிலை குத்தி நின்றது அவன் பார்வை.

கிழவி பயத்தினால் குரல் நடுங்க, நாயைச் சுட்டிக் காட்டினாள். "இது ஒரேயடியாச் சத்தம் போட்டுக் கிட்டிருந்ததே, என்னான்னு பார்க்க வந்தேனுங்க, கால் தவறி விழுந்திட்டேன் எசமான்" என்று சொல்லிவிட்டு, காலை விந்திக்கொண்டே போய்விட்டாள்.

"ஏண்டா, இதற்கு முன்னே இந்தப் பள்ளம் கிடையாது இங்கே?" என்று கேட்டு விட்டுத் தோட்டக்காரனுக்குக் கண் ஜாடை காட்டினான் பொன்னடி.

"கிடையாது சாமி," என்று உடனே பதிலிறுத்தான் அவன்.

"நல்லாத்தான் வெட்டியிருக்கிறாய்!" என்ற பொன்னடியின் பாராட்டோ, பையிலிருந்து அவன் தோட்டக்காரனுக்கு எடுத்துத் தந்த ஒரு ரூபாய் இனாமோ தூரத்திலிருந்த கலிவரதனுக்கு எட்டவில்லை.

"சரி, சரி, போ" என்று இரைந்த குரலில் அவனை அனுப்பிவிட்டு, அவன் தலை மறைகிற வரையில் காத்திருந்த பொன்னடி, விரைந்து சென்றான் கலிவரதனிடம். "வாங்க பார்க்கலாம்" என்று அவனைப் பள்ளத்தினருகில் அழைத்து வந்தான். கலிவரதன் கண்ணெதிரிலேயே குழியினுள் இறங்கி, கையால் கொஞ்சம் மண்ணைப் பறித்தான் காலால் பள்ளத்தின் சுவர்களைச் சிறிது இடித்தான்.

"ஊஹூம் அது போய்விட்டது" என்று வருத்தத் துடன் தலையசைத்துக் கொண்டு மேலேறி வந்து, "போகலாம்," என்று கலிவரதனின் கையைப் பற்றினான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"என்னடா, என்னவோ நாடகமெல்லாம் பண்ணுகிறாய்? உனக்கு என்ன சந்தேகம் சொல்லேன்," என்று கலிவரதன் எரிந்து விழுந்தான், கடந்த பதினைந்து நிமிடங்களாக மதுக் கிண்ணத்தைப் பார்க்காத கோபத்தோடு.

"நிஜமாகவே உங்களுக்குப் புரியவில்லையா? நீங்கள் ஊகிக்க முடியவில்லையா?" என்றான் பொன்னடி ஆச்சரியத்துடன்.

"எதை?"

"எல்லாம் உங்கள் முட்டாள்தனத்தால் வந்ததுதான்!"

"எது?"

"இனிமேலே புலம்பி என்ன செய்ய?" என்று பெரு மூச்சுவிட்டான் பொன்னடி. "மரகதம் என்று ஒருத்தி இருக்கிறாளே, அம்பிகாவோட சித்தி, அவளைப் பார்த்த வுடனேயே தீர்மானம் பண்ணினேன், படா பேராசைக்காரி என்று. அவள் கிட்டே போய் நீங்கள் சொல்லியிருக்கக் கூடாது, புதையலைப்பற்றி."

"ஏன், அதனாலே என்ன ஆகிவிட்டது?" என்று விழித்தான் கலிவரதன்.

"பள்ளம் ஆகிவிட்டது! அதோ அந்தப் பள்ளம்! என்று கையை நீட்டிக் காட்டிவிட்டுப் பொன்னடி சொன்னான்: "அந்த மரகதம், அம்பிகாவின் வாயைக கிண்டி, தேவகியம்மாள் நகைகளை ஒளித்து வைத்திருந்த இடத்தைத் தெரிந்து கொண்டு விட்டாள். அதனாலேதான் நாம் எதிர்பார்த்தபடி அவள் இங்கே வரவில்லை. நமக்கே தெரியாமல் நேற்று ராத்திரி வந்து, பள்ளம் தோண்டி, அத்தனை நகைகளையும் சுருட்டிக்கொண்டு நீட்டி விட்டாள் கம்பி!"

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"ஆ! அவ்வளவு புதையலும் போய்விட்டதா?" என்று வீரிட்டான் கலிவரதன். ஒரே சமயத்தில் அழுகையும் ஆத்திரமும் வந்தன. "நான் விடமாட்டேன்! எப்படிக் கொண்டு போய்விடுவாள், பார்த்து விடுகிறேன்! விடவே மாட்டேன்!"

"அதெல்லாம் சும்மா! இனிமேல் எதுவும் கிடைக்காது. இந்த அம்பிகா மற்ற சமாசாரங்களை வெளிவிடாமல் பார்த்துக்கணும்! அதுதான் முக்கியம்."

"அப்படியானால் ... அவளை ..."

"முடித்து விடலாம் என்கிறேன்! சும்மாவாவும் நகைகள் கிடைக்கும், புதையல் வைத்திருக்கிற இடத்தைச் சொல்லுவாள் என்றெல்லாம் நாக்கை நீட்டிக்கொண்டு உட்கார்ந்து என்ன புண்ணியம்? இனிமேல் அவளால் தம்பிடிப் பிரயோசனமில்லை. தலைக்கு மேலே ஆபத்து தான்! சட்டுப்புட்டென்று தீர்த்துவிட வேண்டியதுதான்!"

கலிவரதன் கையைப் பிசைந்தான். "கொலையா?"

"அதிலே என்னங்க கஷ்டம்? உங்களுக்குப் பழக்கமான வேலைதானே" என்று சிரித்தான் பொன்னடி.

7

"நான் பைத்தியம்! ஆமாம்! மூளை கலங்கி விட்ட முழுப் பைத்தியம் நான்!" வெறி பிடித்தவள் போல் கட்டிலிலிருந்து தலையணையை இரண்டு கையாலும் குத்தினாள் அம்பிகா. "சிரிக்கிறீர்களா? தாராளமாய்ச் சிரியுங்கள். வஞ்சக சமூகத்தில் வாழ்விழந்து நிற்கும் எனக்குத்தான் அந்த உரிமையில்லை. உங்களுக்கு உண்டு!

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

சிரியுங்கள் விலாப் புடைக்க! நகையுங்கள் உடல் குலுங்க! ஹாஹ்ஹாஹா!" கட்டிலில் குப்புற விழுந்து விம்மலானாள் அவள்.

"ஊஹூம், ஊஹூம்," என்று உதட்டைப் பிதுக்கி அதிருப்தியை வெளியிட்டான் சூரி, "இன்னொரு தரம் செய்."

அம்பிகா மீண்டும் தொடங்கினாள்: "நான் பைத்தியம்! ஆமாம்! மூளை கலங்கிவிட்ட ..."

சூரி நாடகப் பள்ளியில் பயிற்சி வகுப்பு நடை பெற்றுக் கொண்டிருந்தது. அம்பிகா ஒருத்தியைத் தவிர, அவளுடன் பயிற்சி பெறும் எட்டு மாணவிகளும் வீட்டுக்குப் போய் விட்டார்கள்.

"நீ இரு அம்பிகா," என்று அவளை மட்டும் நிறுத்திக் கொண்டிருந்தான் சூரி. "உன் பாகத்தை நீ சரியாகவே செய்யவில்லை," என்று குறை சொன்னதால் அம்பிகாவும் தங்கியிருந்தாள்.

ஆர்.ஏ. புரம் என்று சுருக்கமாகப் புகழ் பெற்றிருக்கும் ராஜா அண்ணாமலைபுரத்தில், தெருவுக்குத் தெரு புதுக் கட்டிடங்கள்தான். இருந்தாலும் பழைய மந்தைவெளி, ராபர்ட்சன் பேட்டை குப்பங்கள் முதலானவை எப்படி இருந்தன என்பதை நினைவுறுத்துகிற மாதிரி சில பழம்பெரும் பங்களாக்களும், புத்தம் புதுக் குடிசைகளும் ஆங்காங்கே கண்ணில் படுவது உண்டு. அப்படிப்பட்ட புராதனக் கட்டிடமொன்றில் 'சூரி நாடகப் பள்ளி' என்ற புதிய பலகை மாலை வெய்யிலில் மினுமினுத்துக் கொண்டிருந்தது. மயிலாப்பூரில் நெடுங் காலமாக வசிப்போருக்குத் தெரியும் — முன்னொரு சமயம் அந்தக் கட்டிடம் ஒரு திரைப்பட ஸ்டூடியோவாக விளங்கிய தென்று. அந்தக் கர்னாடகமான மாடங்களிலும், கூடங்களிலும் அரிதாரம் பூசிய ராஜகுமாரர் என்ன,

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ஜிகினா தரித்த இளவரசிகளென்ன, ஓடியும் ஆடியும் பாடியும் சிரித்தும் காதல் செய்வதை, பொழுது போகாத வழிப்போக்கர்கள் தெருவில் நின்று வேடிக்கை பார்த்தது உண்டு, ஒரு காலத்தில்.

சொந்த ஆஸ்தியைக் கொண்டும், அரசாங்க மானியத்தைக் கொண்டும் சூரியின் பள்ளி நடத்தப்பட்டு வந்தது. அவன் கீழே ஒரே ஒரு நாடகாசிரியர் மட்டுமே பணியாற்றி வந்தார். கல்லூரி மாணவர்களு தனிப்பட்ட வர்களுமாகச் சுமார் ஐம்பது பேர்தான் [illegible]ற்சி பெற்று வருபவர்கள். வாரத்துக்கு மூன்றே வகுப் [illegible] ஆகவே, சின்னச் சின்ன வகுப்புக்களாக வெவ்வே நாட்களில் நடத்துவது சூரிக்குச் சிரமமாயிருக்கவில்லை.

இன்று, மற்ற மாணவிகள் போனதும், "என்ன, உன் கவனம் இன்னும் அந்த அடையாறு நிகழ்ச்சியிலேயே இருக்கிறது? அப்படித்தானே?" என்றான் சூரி.

அம்பிகா பரிதாபமாக அவனைப் பார்த்தாள். "மிஸஸ் ரத்னத்தின் கொலை பற்றி இன்ஸ்பெக்டர் விசாரித்தது வேறே என்னை ரொம்பக் குழப்பிவிட்டது சூரி," என்றாள் தலை குனிந்தவாறு.

சூரி அவளை உற்றுப் பார்த்துப் பெருமூச்சு விட்டான்.

என்னதான் ஒழுங்காக அலங்காரம் செய்து கொண்டாலும், அவைகளையெல்லாம் மீறிய ஓர் அலங்கோலம் அம்பிகாவிடம் குடிகொண்டிருந்தது. என்ன தான் தெளிவாக அவள் பேசினாலும், நடந்து கொண்டாலும், வேறேதோ ஒரு சக்திக்கு உட்பட்டு, கனவில் செயல் புரிகிறவள் போலவே அவள் காட்சி தந்தாள்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"சரி, இன்ஸ்பெக்டரின் விசாரணைகளைக் கொஞ்சம் மற. வசனத்தைச் சொல்லு மறுபடியும்," என்று சூரி கட்டளையிட்டான்.

அப்போதுதான் அம்பிகா, இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தில் கூறப்பட்ட வசனத்தைப் பேசினாள்.

"போதாது, போதாது," என்று பலமாகத் தலையை அசைத்தான் சூரி. "கட்டிலில் விழுவதும், தலையணையை ஓங்கி ஓங்கிக் குத்துவதும் இன்னும் இயற்கையாயிருக்க வேண்டும். தலையைப் பிய்த்துக் கொள்வதுகூடச் சாதா நபரைப் போல இருக்கிறதே தவிர, பைத்தியம்போல இல்லை."

அம்பிகா துயரத்துடன் புன்சிரிப்புக் காட்டினாள். "சூரி சார்! ஒரு விகடத்துணுக்கு சொல்வார்களே, நினைவிருக்கிறதா? குடிகார வேடத்தில் அற்புதமாய் நடித்துக் கொண்டிருந்த ஒருவனுக்கு, திடீரென்று ஒரு நாள் நன்றாகவே நடிக்க வரவில்லையாம். திண்டாடித் தடுமாறிப் போய் விட்டானாம். காரணம், அன்று அவன் நிஜமாகவே குடித்து விட்டு நடிக்க வந்திருந்ததுதான்! அந்த மாதிரி, அசல் பைத்தியமாகி விட்டவள் நான். பைத்தியம்போல் நடிக்க எப்படி வரும்? வராது, வராது."

விழிமுனையில் நீர் முத்துக் கோத்திருக்க, அம்பிகா தலையைக் குனிந்து கொண்டாள். வேதனை தாளாமல் நாடக செட்டுக்காகக் போடப்பட்டிருந்த கட்டிலில் குப்புறக் கவிழ்ந்து, நிஜமாகவே விம்மி விசித்தபோது அவளுடைய வாளிப்பான முதுகு ஏறி ஏறித் தாழ்ந்தது.

பைஜாமாவின் பாக்கெட்டுகளில் கைவிட்டபடி அவளையே பார்த்துக்கொண்டு சில வினாடிகள் மௌனமாய் நின்றான் சூரி. எல்லோருக்கும் உணர்ச்சி களைக் காட்டக் கற்றுக் கொடுக்கிறவனாயிருந்தாலும்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அவனுடைய முகம் எந்த உணர்ச்சியைக் காட்டுகிறது என்று கண்டுபிடிக்க இயலாததாயிருந்தது.

"அம்பிகா! எழுந்திரு," என்று அவள் முதுகில் தட்டினான் சூரி. "சுத்த முட்டாள்தனமான புலம்பலா யிருக்கிறது உன் பேச்சு. நிறுத்து, சொல்கிறேன்."

கண்களைத் துடைத்துக் கொண்டு தலை நிமிர்ந்த அம்பிகா மிரள மிரள விழித்தாள்.

"சூரி! இந்த இரட்டை வாழ்க்கையிலிருந்து எனக்கு எப்போது விடுதலை கிடைக்கும்? இல்லை, கிடைக்கவே கிடைக்காதா? அம்பிகாவாக ஒரு சமயமும் தேவகியாக மறு சமயமும் திடீர் திடீரென்று எனக்குள் ஏற்படும் மாற்றங்கள் எப்போது நிற்கும்? கொஞ்ச நாள் முன்பு இரண்டு வெவ்வேறு நபர்கள் இருப்பதுபோல் தோன்றியதுகூட, வர வரக் குறைந்து வருகிறது. எப்போது நான் தேவகியாக இருக்கிறேன், எப்போது அம்பிகாவாக மாறுகிறேன் என்பதை வித்தியாசம் காணுவது நாளுக்கு நாள் கஷ்டமாயிருக்கிறது, சூரி, இப்படியே போனால், நான் அசல் பைத்தியமாக ஆவதற்கு அதிக நாள் ஆகாது, சூரி, அதிக நாள் ஆகாது."

முகத்தை மூடிக்கொண்டு குலுங்கிக் குலுங்கி அழும் அம்பிகாவை, மெதுவே தலையைக் கோதி ஆறுதல் கூறினான் சூரி.

"இதெல்லாம் தற்காலிகமானதுதான், அம்பிகா. உன் மனசை இன்னும் நீ முழுக்கத் திறந்து காட்டவில்லை. பாதி சொல்கிறாய், பாதி மறைக்கிறாய். அதனால்தான் கஷ்டப்படுகிறாய்," என்றான்.

"[illegible]," என்று அம்பிகா திகைத்தாள். "எதை [illegible]?"

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"யோசனை பண்ணிப் பார். தேவகியின் வாழ்க்கையில் நடைபெற்ற எல்லா விஷயங்களும் உனக்கு நினைவு வந்திருக்கிறது. ஆனால் சிலவற்றைத்தான் சொல்கிறாய், சிலவற்றை வெளியே சொல்லப் பயப்படுகிறாய் ... என்ன அது?"

"என்ன அது?" என்று தன் உள்ளத்தையே துழாவிக் கொள்வது போல நெஞ்சைத் தடவிக் கொண்டாள் அம்பிகா. நினைவுப்படுத்திக் கொள்ளும் முயற்சியில் அவளுடைய மென்மையான முகம்கூட இறுகிக் கடினமாயிற்று. "இல்லை சூரி ... எனக்கு ஒரே குழப்பமாயிருக்கிறது. திக் திக் கென்று மனம் அடித்துக் கொள்கிறது... என்னவோ ஒன்று பிசிறு பிசிறாகத் தெரிகிறது ... தேவகியின் முடிவு ..." அவள் தடுமாறி நிறுத்தி விட்டாள்.

"சொல்லு, அம்பிகா," என்று ஊக்கினான் சூரி. "மறைக்காமல் சொல்லு. மனதில் இருக்கிற அடைசல்களெல்லாம் வெளிவந்த பிறகுதான் உனக்கு நிம்மதி. அதற்கப்புறம்தான் நீ பழைய அம்பிகாவாக ஆக முடியும்."

"என்னை விட்டு விடுங்கள் எனக்கு ஒன்றுமே புரியவில்லை. தேவகியின் மரணத்தைப் பற்றி எதுவோ ஞாபகம் வருகிற மாதிரி இருக்கிறது ... உடனே மனசுக்குள் ஒரு திகிலும் படபடப்பும் ஏற்படுகிறது ... எனக்கு எதுவும் புரியவில்லை ..."

மீண்டும் அவள் அழுதுவிடுவாள் போல இருந்ததால் சூரி, "வேண்டாம், வேண்டாம். அலட்டிக் கொள்ளாதே. உன் வேதனையைக் குறைப்பதற்காகத்தான் சொன்னேன், அதிகப்படுத்துவதற்காக இல்லை," என்றான்.

"எனக்கு உங்கள் மனம் தெரியாதா? வேதனையாயிருக்கிறபோது உங்களிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்லப் போகிறேன்," என்ற அம்பிகா, ஹாலிலிருந்து

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கடியாரத்தின் மணியோசையைக் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தாள். "மணி ஏழாகி விட்டதே?"

"பஸ்ஸில் ஏற்றிவிட நானும் வருகிறேன்," என்று கூடவே புறப்பட்டான் சூரி.

இருவரும் மௌனமாகவே நடந்தார்கள் பஸ் ஸ்டாப்பிங் வரை.

"ஒருநாள் அந்த அடையாறு பங்களாவுக்கு நாம் இரண்டு பேரும் போவோம், அம்பிகா. எதுவோ குழப்பமாய் இருக்கிறதென்று சொன்னாயே, அது சரியானாலும் ஆகிவிடும்" என்றான் சூரி.

"வேண்டாம், வேண்டாம்," என்று தடுத்தாள் அம்பிகா. "அந்தக் கலிவரதனும் அவனுடைய செகரட்டரியும் வந்து கூப்பிட்ட போதுகூட நான் மறுத்து விட்டேன் ... இன்னொருதரம் அங்கே போகவே எனக்குப் பயமாயிருக்கிறது."

கலிவரதன் வந்து போன விஷயத்தைச் சித்தியின் மூலம் அறிந்திருந்தானாகையால், "அந்தப் புதையலுக் காகவும்தான் ஒருநாள் அங்கே போவோமே? அனாமத்தாய் இரண்டு லட்சம் கிடைத்தால் உனக்குக் கசக்குமோ என்னவோ, எனக்குக் கசக்காது," என்றான் சூரி சிரித்துக்கொண்டே.

அம்பிகாவும் தன் துயரத்தை மறந்து சிரித்தவாறு, திருவல்லிக்கேணிக்குச் செல்லும் பஸ்ஸில் ஏறிக் கொண்டாள்.

பஸ் புறப்பட்டது.

"காதலிக்கும் போது ஆண்கள் வசந்தகாலம் போலிருக்கிறார்கள். மணந்த பிறகு மாரிக் காலமாகி விடுகிறார்கள் என்று ஷேக்ஸ்பியர் சொல்லியிருக்கிறார்."

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

சக்கரையின் குரல்!

யோசனையிலிருந்து திடுக்கிட்டு விழித்தான் சூரி. "நீங்கள் வந்ததைக் கவனிக்கவேயில்லை."

"அதுதான் சொன்னேன், காதலிக்கும்போது வசந்தகாலம் என்று. உலகம் நினைவிருக்குமா?" என்று சக்கரை சிரித்தான். "அம்பிகா பின் பக்கமாய்ப் பஸ் ஏறியபோது, நான் முன்பக்கமாய் இறங்கியவன்தான். அதுவும் உங்களைக் கண்டுவிட்டு."

"என்னைக் கண்டு விட்டா? ஏன்?"

"உங்கள் பள்ளிக்கூடத்தைப் பார்க்க வேண்டுமென்று வெகு நாளாக ஆசை. அடையாறிலிருந்து வந்து கொண்டிருந்தேன் பஸ்ஸில். நீங்கள் நிற்பதைப் பார்த்ததும், பக்கத்திலேதான் உங்கள் பள்ளிக்கூடம் இருக்கிறது என்று ஊகித்தேன். வரலாமில்லையா?"

"கொடுத்து வைத்திருக்க வேண்டாமா? இப்படி வாருங்கள்," என்று முன்னே நடந்தான் சூரி.

"அடையாறுக்கு ஏன் போயிருந்தேன் என்று நீங்கள் கேட்கவில்லையே?"

"மனத் தத்துவ மேதைக்கு நூறாயிரம் ஜோலி."

"ஆனால் முக்கியமான ஜோலி; கலிவரதனின் பங்களாவைப் பார்ப்பது."

சூரி நின்று, சக்கரையை விசித்திரமாகப் பார்த்தான். "கலிவரதனின் பங்களா?"

"அதே," என்றான் சக்கரை. "அம்பிகாவின் மோசடியை நிரூபிப்பதாகச் சவால் விட்டேனே, மறந்து விட்டதா! அதற்கு முதல் கட்டமாக, அம்பிகாவும் சினேகிதிகளும் பிக்னிக் சென்ற இடம், ஓடியாடிய இடம், சாப்பிட்ட இடம் எல்லாவற்றையும் பார்த்துவிட்டு வந்தேன். அந்தக்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கலிவரதனையும் சந்திக்க நினைத்தேன். அவன் வீட்டில் இருக்கவில்லை. சட்! என்ன புதரும் காடுமான பங்களா, ஐயா! அங்கே போய்ப் பிக்னிக் சாப்பிட யார்தான் யோசனை சொன்னார்களோ!"

"நான்தான்!" என்றான் சூரி. "ஒருதரம் அந்தப் பக்கம் போயிருந்தேன். ரொம்ப அழகான, அமைதியான இடம் என்று அம்பிகாவுக்குச் சொன்னேன். உங்களுக்குப் பிடிக்கவில்லையா?"

"சூரி — நாடகப் — பள்ளி. ஓகோ" என்று வாசல் புறத்துப் பலகையை வாசித்துவிட்டுப் படியேறினான் சக்கரை. "நாடகக் கலைக்கு ஏற்றபடி நல்ல புராதனக் கட்டிடம்தான். மாடியில் ..."

"யாருமில்லை. கண்டான் முண்டான் சாமான்களைப் போட்டுப் பூட்டி வைத்திருக்கிறேன்."

"உங்கள் குடும்பம்?"

"நான் ஒன்றிக் கட்டை," என்று சிரித்தான் சூரி. "சொந்தச் சமையல், தனிக் குடித்தனம், பிரம்மசரிய வாழ்க்கை, காவலுக்கு மட்டும் ஓர் ஆள் உண்டு. வெளியே போயிருக்கிறான்."

"இதோ வருகிறானே, அவனா?"

"யார்?"

வந்தவன் எவனோ புதிய ஆள். சரியான நெட்டை தலையில் ஆறு மாதத்து வளர்ச்சியும் உடம்பில் இரண்டு மாதத்து அழுக்கும் சுமந்து கொண்டிருந்தான்.

சூரிக்கு ஒரு கும்பிடு போட்டு விட்டு, தையலும் கிழிசலுமாயிருந்த மஸ்லின் ஜிப்பாவிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்து நீட்டினான் அவன். மடித்து மடித்து, ஒடிந்துவிடக் கூடிய நிலையில் நோஞ்சானாயிருந்த அதைப்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

பிரிப்பதும் பார்ப்பதுமே அபாயகரமான காரியமா யிருந்தது.

முதல் சில வாசகங்களைப் படித்த சூரி, திரும்ப அவனிடமே கொடுத்தான். "பர்மா தமிழர்களுக்காகத்தான் அரசாங்கத்திலேயே உதவிகள் செய்திருக்கிறார்களே, அப்பா? நான் வேறு தனியாக என்ன செய்ய முடியும்?"

"உதவிக்காக வரவில்லை சார்," என்றான் அந்த ஆள் மிடுக்காக. "நீங்கள்தானே சூரியநாராயணன் என்கிற சூரி?"

"ஆமாம்."

"பல வருடத்துக்கு முன்னாலே நீங்கள் ஒரு நாடகக் கம்பெனியோடு பர்மாவில் சுற்றுப் பிரயாணம் செய்தீர்களே நினைவிருக்கிறதா?" என்று வந்தவன் மேலும் கேட்டதும் சூரியின் திகைப்பு மேலும் அதிகரித்தது. "ஆமாம். அப்போது நான் சின்னப் பையன். அதற்கென்ன?" என்றான்.

"உங்கள் கம்பெனி ரங்கூனைவிட்டுக் கப்பலேறிய போது, ஊசோ என்ற ஒரு பர்மியக் கிழவரும் உங்களோடு இந்தியாவுக்குப் புறப்பட்டு விட்டாராம். அவர் எனக்குப் பக்கத்து வீட்டுக்காரர். இப்போது அவர் எங்கே இருக்கிறார் என்று தெரிந்தால், எனக்குத் தேவையான உதவிகளைப் பெற்றுக் கொள்வேன் ..."

"ஊசோ ...?" சூரியின் புருவங்கள் ஏறி இறங்கின. "ஓ ... ஆமாம். அந்தத் தாத்தாவா? ஹூம் ... கல்கத்தாவில் காலடி வைத்தபோதே பாதிப் பேருக்கு மேல் காலராவில் பலியானார்கள். இன்னும் கொஞ்சம் பேர், சொல்லாமல் கொள்ளாமல் ஓடிப்போனார்கள். ஊசோ எப்படிப் போனாரென்றே ஞாபகமில்லை. ஆனால் கல்கத்தாவில் தான் கடைசியாய்ப் பார்த்தேன் அவரை ... நல்ல மனிதர் ... ஏகப்பட்ட வித்தைகள் தெரிந்தவர் ..."

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"நான் வருகிறேன் சார்."

தள்ளாடியபடி வெளியேறும் அந்த வாலிபனை இரக்கத்துடன் பார்த்து ஒரு பெருமூச்சு விட்டான் சக்கரை.

"போ, போ! அற்பாயுள் கொண்ட மெழுகு வர்த்தியே! போ! வாழ்க்கை என்பது ஒரு நடமாடும் நிழல்தான்," என்ற ஷேக்ஸ்பியரின் வரிகளை முணு முணுத்துவிட்டு, மேஜை மீதிருந்த சிறிய பைல்களைப் புரட்டினான். "புதிய நாடகமொன்று தயாரித்துக் கொண்டிருக்கிறீர்களா, சூரி?"

"ஆமாம். இரண்டே மாதத்தில் கவர்னர் முன்னிலையில் அரங்கேற்றி, இந்த நாடகப் பள்ளிக்குப் பிரமாதமாய்ப் பப்ளிஸிடி ஏற்படுத்தத் திட்ட மிட்டிருந்தேன். அம்பிகாதான் கதாநாயகி. ஹூம்! என் புரோக்ராம் மொத்தமும் சரிந்து விட்டது."

"அவளை நீங்கள் நம்பியிருக்கக் கூடாது."

சூரியின் முகம் இருண்டது.

"மிஸ்டர் சக்கரை, இது என் சொந்த விவகாரம். தயவு செய்து அம்பிகாவைப்பற்றி நாம் பேசாமலே யிருப்போம்," என்று கண்டிப்புடன் கூறிவிட்டு, சர்பத் புட்டியொன்றை எடுத்து, இருவருக்குமாகக் குளிர்பானம் தயாரித்தான்.

சக்கரை அவன்மீது வைத்த கண்ணை எடுக்காமலே, "இந்த இருபதாம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில், ஞானா யுகத்தில், முற்பிறவி, பூர்வஜன்ம வாசனை இதையெல்லாம் பகுத்தறிவுள்ள நீங்கள் நம்புகிறீர்களே என்றுதான் எனக்குப் பரிதாபம்," என்றான்.

சூரி ஒன்றும் பேசவில்லை. சர்பத் டம்ளர்களில் ஒன்றைச் சக்கரையிடம் தந்துவிட்டு, மற்றதைத் தான்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

உறிஞ்சியபடி மேஜையின் முனையில் தொற்றினாற்போல் உட்கார்ந்து கொண்டான்.

"பகுத்தறிவு இருப்பதால்தான் நம்புகிறேன்," என்றான் சக்கரையை உன்னிப்பாக நோக்கியவாறு. "ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு காரணமும், ஒவ்வொரு காரணத்துக்கும் ஒவ்வொரு காரியமும் இருப்பதாக நாம் பேசுகிறோம், நினைக்கிறோம். தர்மமாய் நடந்தால் நற்பலன் கிடைக்கும், அநியாயமாய் நடந்தால் தண்டனை கிடைக்கும் என்றெல்லாம் சொல்கிறோம். எந்த வகையில் அது சரியாயிருக்கிறது?"

"ஏன், அதெல்லாம் தப்பு என்கிறீர்களா?"

"முழுக்க முழுக்க அப்படி நடப்பதில்லை என்கிறேன்," என்றான் சூரி. "அயோக்கியத்தனம் செய்கிறவன் எல்லோரும் நாசமாகிவிடுவதுமில்லை. யோக்கியர்கள் அத்தனை பேரும் சௌக்கியப்படுவது மில்லை. பாடுபடுகிறவனுக்குப் பலன் நிச்சயம் என்பதோ, சோம்பேறிக்கு அழிவு கட்டாயம் என்பதோ நூற்றுக்கு நூறு பலிப்பதில்லை."

"ஏது, அடிப்படை உண்மைகளையே நீங்கள் தகர்க்கப் பார்க்கிறீர்களே?" என்று சக்கரை சிரித்தான்.

"தகர்க்கவில்லை. நீங்களும் நானும் மற்ற எல்லாரும் நினைக்கிறமாதிரி, இந்த ஜன்மத்தில் செய்கிற காரியங்களுக்கு இந்த ஜன்மத்திலேயே பலன் கிடைப்ப தில்லை என்பதை விளக்குவதற்காகச் சொல்கிறேன். ஒருவன் சுகப்படுவதும் படாததும், வேறேதோ ஒரு விதிக்கு உட்பட்டு நடக்கிறது. அது என்ன விதி? ஊழ்வினைதான். பூர்வஜன்மத்தில் செய்த நற்கருமமோ தீவினையோதான் இந்தப் பிறவியில் பலனைக் கொடுக்கிறது என்பதைத் தவிர, வேறு என்ன விளக்கம் தர முடியும் உங்களால்?"

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

சக்கரை மெல்ல நகைத்தான். "நான் மனத் தத்துவ மேதை. வேதாந்த சிரோமணி அல்ல. ஆனால் ஒன்று. அம்பிகாவுக்கு உண்மையிலேயே முன்ஜன்ம நினைவு வந்திருக்கிறது என்று அதிகமாய்ச் சொல்லாதீர்கள். அது அவளைத் தூக்கு மேடைக்கு அனுப்பி வைத்துவிடும்."

சூரி அதிர்ச்சியடைந்தவனாக. "தூக்கு ... ஏன் ..." என்று வினவினான்.

"அந்த இன்ஸ்பெக்டர் ஓர் அரைப் பேர்வழி. தீர விசாரியாமல் விட்டுவிட்டார். நானாயிருந்தால், மிஸஸ் ரத்தினத்தின் கொலைக்காக அம்பிகாவைத்தான் முதலில் கைது செய்வேன்," என்ற சக்கரை, சூரியின் முகத்தில் விளைந்த குழப்பத்தையும் திகிலையும் கண்டதும், "இன்னொரு சமயம் வந்து அதை விளக்குகிறேன். இப்போது நேரமாகிறது," என்று அவசரமாகப் புறப்பட்டு விட்டான்.

பிரமை பிடித்தவனாகச் சிறிது நேரம் வாசலையே பார்த்தவாறு நின்றிருந்தான் சூரி. பிறகு வாசல் கதவைத் தாளிட்டுக்கொண்டு, சமையலறைக்குச் சென்றான். ஒரு வெள்ளிக் கிண்ணத்தில் சாதம் போட்டு நெய் ஊற்றி, ரசம் இட்டுப் பிசைந்து எடுத்துக் கொண்டான்.

வாசல் கதவு தாளிடப்பட்டிருக்கிறதா என்பதை இன்னொரு முறையும் பரிசோதித்துவிட்டு, மாடிப்படியை அடைந்தான். பையிலிருந்த சாவிக்கொத்தை எடுத்து, பூட்டி யிருந்த கதவைத் திறந்து, ஒவ்வொரு படியாக ஓசையின்றி ஏறினான்.

மாடியில், அந்தகாரத்தில் மூழ்கியிருந்த அறை யொன்றையும் திறந்தான். இருள் அவனை வரவேற்றது.

"ஊசோ தாத்தா! அம்பிகா ஆபத்தில் மாட்டிக் கொண்டிருக்கிறாளாமே? என்ன செய்வேன் ஊசோ தாத்தா?" என்று புலம்பினான் அறைக்குள் நுழைந்த சூரி.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

8

இருட்டு, சற்று நேரம் மௌனமாக இருந்தது.

ஊசோ தாத்தா, நீங்கள் இங்கே இருக்கிறீர்களா, இல்லையா? விளக்கைப் போடட்டுமா?" என்று கேட்டான் சூரி.

உடனே, "போடாதே, போடாதே!" என்று ஒரு குரல் பதிலளித்தது. மனிதக் குரலின் இனிமை, கொடூரம் இரண்டும் காணப்படவில்லை அந்தக் குரலில். இன்னும் கூர்மையாகச் சொல்லுவதானால், கழுகு அல்லது ஆந்தை போன்ற ஒரு பட்சி வர்க்கத்தின் தன்மை தென்பட்டது எனலாம். 'போடாதே, போடாதே' என்று தமிழில்தான் அந்தக் குரல் பேசியதென்றாலும், சுத்தத் தமிழின் உச்சரிப்பு அதில் இருக்காமல், ஓர் அன்னிய வாடை அடித்தது. ரங்கூன்காரர்களுடன் நெருங்கிப் பழகியவர்கள் மட்டுமே அதை ஒரு பர்மியனின் தமிழ் உச்சரிப்பு என்று கண்டு கொள்ள முடியும்.

சூரி விளக்கைப் போடவில்லை. பழக்கம் காரணமாக இருட்டில் தடுமாறாமல் நடந்து, சுவர் மூலையில் கிண்ணத்தை வைத்தான்.

"ரசம் சாதம் வைத்திருக்கிறேன், ஊசோ தாத்தா. தண்ணீரும் பக்கத்திலே இருக்கிறது."

குரல் எவ்விதப் பதிலும் கொடுக்கவில்லை. அடுத்த சில நிமிடங்களுக்கு, கிண்ணத்திலிருந்து சாதம் எடுக்கப்படும் ஓசையும் மெல்லப்படும் ஓசையும் மட்டுமே கேட்டன.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"அம்பிகாவைப் பற்றிச் சொன்னேனே, ஊசோ தாத்தா?" என்று சூரி மீண்டும் ஆரம்பித்தான், இருட்டை நோக்கி.

"நான் பேசப் போவதில்லை." களக் களக்கென்று தண்ணீர் குடிக்கும் ஒலி கேட்டது.

சூரி திடுக்கிட்டு, "ஏன்? ஏன்?" என்று வினவினான்.

"உனக்கு என்மீது நம்பிக்கை இல்லை, என் சக்தியில் நம்பிக்கை இல்லை," என்றது குரல்.

"தப்பு, தப்பு," என்று சூரி அவசரமாக மறுத்தான்.

"எதையும் என்னால் பார்க்க முடியும், எவரையும் என்னால் ஆட்டி வைக்க முடியும் என்பதை நீ நம்ப மறுக்கிறாய்," என்று அந்தக் குரல் தொடர்ந்தது.

"கிடையவே கிடையாது, ஊசோ தாத்தா. யார் உங்களுக்கு எப்படிச் சொன்னது?"

"உன் மனத்தில் இருக்கிற ஆசைகளையெல்லாம் நான் பூர்த்தி செய்து வைப்பேன், நீ போட்டிருக்கிற திட்டங்களையெல்லாம் நிறைவேற்றித் தருவேன் என்பதில் உனக்கு நம்பிக்கை போய்விட்டது."

"இல்லை ஊசோ தாத்தா. இல்லவே இல்லை. எதை வைத்து அப்படிச் சொல்கிறீர்கள்?" என்று குறை நிறைந்த குரலில் கேட்டான் சூரி.

"பின்னே ஏன் பதற்றப்படுகிறாய்?" என்று இருட்டிலிருந்த குரல் அவனை அதட்டியது. "தேவை யில்லாமல் நீ கலவரப்பட்டதன் விளைவைப் பார். எத்தனை அனாவசியக் குழப்பம்! இப்போது மிஸஸ் ரத்னத்தின் கொலைக்கும் அம்பிகாவுக்கும் முடிச்சுப் போடும்படி நேரிட்டிருப்பது உன்னால்தானே?"

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"அபத்தம்: அவளுக்கு என்ன சம்பந்தம்?" என்று சூரி பல்லைக் கடித்தான்.

"அவளுக்கு என்ன சம்பந்தம் என்று நீ சொல்லலாம்; போலீஸ் சொல்லாது," என்றது குரல்.

"சக்கரையைப் போலவே நீங்களும் பயமுறுத்து கிறீர்களே, ஊசோ தாத்தா?"

"சக்கரை ஒரு விஞ்ஞானி. போலீஸ்காரர்களைப் போலவே தர்க்க ரீதியாகச் சிந்திக்கிறவன். அதனால்தான் அவனும் போலீசும் ஒரே மாதிரியாக நினைக்க இடமிருக்கிறது." குரல் மௌனமாயிற்று.

"என்ன ஊசோ தாத்தா?" என்று சூரி தூண்டினான்.

"முன் ஜன்ம நினைவுகளைப் பற்றி மிஸஸ் ரத்தினத்திடம் என்னென்னவோ சொல்லிவிட்டாள் அம்பிகா. அதெல்லாம் சொல்லக்கூடாதவை, அபாய மானவை என்று பிற்பாடுதான் உணர்ந்தாள். ஆகவே, மிஸஸ் ரத்னம் உயிருடன் இருப்பது ஆபத்து என்று தீர்மானித்தாள். அவளைக் கொலை செய்து விட்டாள்."

"பொய், பொய்! அபாண்டம் ஊசோ தாத்தா! உங்களுக்குத் தெரியும் உண்மையில் யார் அந்த ..."

"ஸ்!" என்று நாகத்தைப் போல் சீறியது இருட்டுக் குரல். "மற்றவர்கள் அப்படி நினைப்பார்கள் என்பதற்காகச் சொன்னேன். யோசனை செய்து பார். தான் என்ன செய்கிறோமென்பதை உணராதவள் அவள். கொலை நடந்த நேரத்தில் அவள் காலேஜில் இல்லை. இங்கே இருந்தாள் என்பதற்கும் சாட்சி இல்லை. ஆகவே சரியான 'அலிபி' கிடையாது. ஒரு திருப்தி வேண்டுமானாலும் நீ படலாம். தூக்குத் தண்டனை போடமாட்டார்கள். பைத்தியம் என்று மன்னித்து ஆயுள் தண்டனையோ

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அல்லது பைத்தியக்கார விடுதியில் கட்டாய வாசமோ கொடுப்பார்கள்."

"ஊசோ தாத்தா, அந்தப் பயங்கரமெல்லாம் அம்பிகாவுக்கு நேரக்கூடாது, என்னுடைய எதிரி என்று இரண்டு வருஷமாகக் சுறுவிக் கொண்டிருக்கிறேனே, அந்த ஒரு நபருக்குத்தான் ஆபத்து வர வேண்டும்; அபாயம் நேர வேண்டும். பூண்டோடு ஒழிய வேண்டும். அது ஒன்றுதானே என் பிரதான நோக்கம் ..."

"இரு," என்று நிறுத்தியது குரல். "கீழே ஏதோ ஓசை கேட்டது, பார்த்து வா."

"எனக்கு ஒன்றும் கேட்கவில்லையே?"

"எனக்குக் கேட்பதும் எனக்குத் தெரிவதும், உனக்கும் கேட்டு, உனக்கும் தெரிந்துவிட்டால் அப்புறம் எனக்கு வேலையே இல்லையே, சூரி?" குரலில் கேலியான கடுமை இருந்தது. சூரிக்கு அதில் அனுபவம் உண்டு போலும். "ஊசோ தாத்தா, உங்களை மரியாதைக் குறைவாக எதுவும் சொல்லிவிடவில்லை. இதோ போய்ப் பார்த்து வருகிறேன்," என்று அவசர அவசரமாக வெளியே வந்தான்.

வெகு நேரமாய் இருட்டில் இருந்ததால் அவனுக்குக் கண்ணைக் கூசிற்று. திடீரென்று வெளிச்சத்துக்கு வந்ததும் தன் பின்னே கதவைச் சாத்திக் கொண்டு மேல் படிக்கட்டில் நின்றான். உற்றுக் கேட்டான். செவிகளைத் தீட்டிக் கொண்டு, விசித்திரமான சப்தம் என்னும்படி ஏதும் கேட்கவில்லை. "யாருமில்லை," என்று திரும்பி விடுவோமா என எண்ணினான். ஆனால் 'எனக்குத் தெரிந்தது உனக்குத் தெரியாது' என்ற ஊசோ தாத்தாவின் அச்சுறுத்தலான குரல் அவன் நினைவில் எதிரொலித்தது. அந்த எச்சரிக்கையை மீற முடியாதவனாக ஒவ்வொரு படியாக இறங்கிக் கீழே வந்தான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அவனை வியப்புக்குள்ளாக்கும் விதத்தில் வாசற் கதவு திறந்திருந்தது. அதை உள்புறம் தாழிட்டுவிட்டு, பிறகல்லவா மாடிக்குச் சென்றான்? நன்றாய் நினைவிருக்கிறதே? யார் திறந்தார்கள் கதவை? எப்போது? எப்படி?

நாடகப் பயிற்சிகள் நடத்தப்படும் ஹாலை நோக்கிச் சூரியின் பார்வை நகர்ந்தது. அந்தக் கதவுகளும் திறந்தே கிடந்தன.

"யாரங்கே?" என்று சினத்துடன் அதட்டினான்.

"பல் வலியைப் பொறுமையுடன் சகித்துக் கொள்ளக்கூடிய வேதாந்தி இனிமேல்தான் பிறக்க வேண்டும் என்றார் ஆங்கில மகாகவி." சக்கரை அறையினுள்ளிருந்து வெளிப்பட்டான். "அதேபோல், மூக்குக் கண்ணாடியை மறந்து போனால்கூடச் சமாளிக்கக் கூடிய மனத்தத்துவ நிபுணனும் இனிமேல்தான் பிறக்க வேண்டும்."

சூரி அவனைச் சந்தேகக் கண்ணுடன் பார்த்தவாறு, "போகும்போது மூக்குக் கண்ணாடியுடன் போனீர்கள் போலிருக்கிறதே?" என்றான்.

"இல்லையே. நீங்கள் சர்பத் கலந்து தந்தபோது, கண்ணாடியைக் கழற்றி மேஜைமீது வைத்தவன் அப்படியே போய்விட்டேன், பஸ் ஸ்டாண்டுக்குப் போன பிறகு, திருவல்லிக்கேணி பஸ், தண்டையார்பேட்டை பஸ் எல்லாம் என் கண்ணுக்கு ஒன்றாகத் தெரிந்தது. அதன்மேல் இங்கே திரும்பி வந்து, இதோ எடுத்துக் கொண்டு விட்டேன்." தன் சோடாப் புட்டி மூக்குக் கண்ணாடியை எடுத்து மாட்டிக் கொண்டான் அவன். "வரட்டுமா?"

"கதவைத் தட்டியிருந்தால் நானே வந்து திறந்திருப்பேன்," என்றபடி அவனை வழியனுப்பினான் சூரி.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"அந்த மாதிரிச் சில்லறை வேலைகளுக்கெல்லாம் நான் நண்பர்களைத் தொந்தரவு செய்வது வழக்கமில்லை. நானே சில சின்னத் தந்திரங்கள் மூலம் திறந்து கொண்டேன்," என்று கூறிவிட்டு விடை பெற்றான் சக்கரை.

அவன் தலை மறைகிற வரையில் பார்த்துக் கொண்டிருந்த சூரி, கதவை முன்னைவிடப் பலமாகத் தாழிட்டான். அதன் பிறகும் சற்று நேரம் கதவினருகிலேயே நின்றிருந்த பின் திரும்ப மாடியை அடைந்தான். இருளுக்குள் பிரவேசித்தான்.

"சொன்னது சரிதானே?" என்று அகங்காரத்துடன் அவனை வரவேற்றது குரல்.

"ஆமாம் ஊசோ தாத்தா. ஆனால் இனிமேல் வர மாட்டான்," என்று தெரிவித்த சூரி, "பயமாயிருக்கிறது எனக்கு. அந்த ஷேக்ஸ்பியர்வாலா எதுவும் செய்வான்," என்றான்.

"பயமாயிருக்கிறது என்று நீ சொல்லும் ஒவ்வொரு முறையும் என்னை அவமதிக்கிறாய். என் திறமையைக் குறைத்து மதிப்பிடுகிறாய். நினைவில் வை!" என்று கடுமையாய் மொழிந்தது குரல். "ஷேக்ஸ்பியர்வாலா உன்னையோ அம்பிகாவையோ எதுவும் செய்ய முடியாது, முக்கியமாக அம்பிகாவை அவனால் ஒன்றும் செய்ய முடியாது. அவள் முழுக்க முழுக்க எனக்குக் கட்டுப்பட்டவள் மறவாதே. அவளை என் விருப்பத்துக்கு விரோதமாக நடக்கும்படி செய்ய எவனாலும் முடியாது!"

"உண்மை, ஊசோ தாத்தா. நான் அறிந்தது தானே?" என்று பயத்தோடு ஒப்புக்கொண்ட சூரி, "இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டான்.

"செங்கல்பட்டுக்குப் போ," என்று சுருக்கமாகக் கட்டளையிட்டது இருட்டுக் குரல்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"போய்?"

"செங்கல்பட்டுக்குப் போ," அதே வாக்கியம் இரண்டாம் முறையும் வந்தது.

"அங்கே யாரைத் தேட வேண்டும்?"

"வேதசிகாமணி."

"வேதசிகாமணியா?"

"மிஸஸ் ரத்னத்தின் கணவன்."

"அவரைப் பார்த்து?"

"மிஸஸ் ரத்னத்தின் கணவன்," என்று மீண்டும் சொன்னதையே சொல்லிற்று குரல்.

"புறப்படுகிறேன்," என்று எழுந்து கொண்டான் சூரி.

"நில்!" என்று உத்தரவிட்டது குரல். "வேத சிகாமணி போலீசில் சிக்க வேண்டியது முக்கியம். பிறகுதான் நீ ஏற்படுத்தியிருக்கிற குழப்பத்திலிருந்து அம்பிகா விடுபடுவாள். அம்பிகா விடுபட்ட பிறகுதான், உன் எண்ணங்கள் நிறைவேறும், அம்பிகாவை விடுவி முதலில். போ!"

'அக்கிரமம்! அநியாயம்!' என்று கூவிக்கொண்டே தன் அறையினுள் நுழைந்தான் சக்கரை.

அவனுடைய ஸூட்கேஸைக் குடைந்து கொண்டிருந்த சிவராஜ், கையும் களவுமாகப் பிடிபட்ட பரிதாபத்துடன் திருதிருவென்று விழித்தார்.

"ஹூம்! எழுந்திருங்கள் அத்தான்!" என்று அவருடைய கையைத் தூக்கி எழுப்பிவிட்டான் சக்கரை. "நான் இப்போதுதான் இன்னொரு இடத்தில் வெகு

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

சாமர்த்தியமாகக் கன்னம் வைத்து விட்டு வந்திருக்கிறேன். இங்கே வந்து பார்த்தால் கடவுள் எனக்குக் கூலி கொடுத்துக் கொண்டிருக்கிறார்!"

"ரொம்ப நியாயவான் மாதிரி பேசாதே, எனக்குக் கெட்ட கோபம் வரும்!" என்று முறைத்துக் கொண்டார் சிவராஜ். "அந்த மிஸஸ் ரத்னத்தின் படங்களையெல்லாம் தரப்போகிறாயா, இல்லையா?"

"மிஸஸ் ரத்னமே போய்விட்ட பிறகு அந்த அம்மாள் எடுத்த புகைப் படங்களை வைத்துக்கொண்டு என்ன செய்யப் போகிறீர்கள், அத்தான்? ஞாபகார்த்தமா!" என்று சக்கரை சிரித்தான்.

"ராம, ராமா!" என்று காதைப் பொத்திக் கொண்டார் சிவராஜ். "அருமையான போட்டோ என்பதற்காக அன்றிலிருந்தே நான் உயிரை விடுகிறேனே? நல்ல பையனாச்சே நீ? கொடுத்து விடு," என்று அவன் மோவாயைப் பிடித்துக் கொண்டார்.

"தொலையுங்கள்!" என்று பாண்ட் பையிலிருந்து ஒரு மஞ்சள் உறையை எடுத்து அவர் உள்ளங்கையில் போட்டான் சக்கரை. உள்ளேயிருந்த நெகடிவ் பிலிம்களை யும். 'என்லார்ஜ்மெண்ட்' பிரதிகளையும் பரபரவென்று ஆராய்ந்தார் சிவராஜ். "அட, நீயே டெவலப் செய்து பிரிண்ட் போட்டு விட்டாயா! இரண்டு ரோலும் இருக்கிறதோ?" ஒவ்வொன்றாய் வெளிச்சத்தில் தூக்கித் தூக்கிப் பார்த்தபடி உற்சாகத்துடன் வர்ணித்தார். திடீரென்று அவர் முகம் சுருங்கியது. "பார்த்தாயா, விளையாடுகிறாயே?" என்றார்.

"என்ன விளையாடுகிறேன்?"

"பன்னிரண்டும் பன்னிரண்டும் இருபத்திநாலு படம் இருக்கணுமே — இரண்டு ரோலுக்குமாய்ச் சேர்த்து? இருபத்து மூன்றுதானே இருக்கிறது?"

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"ஓகோ," அந்த ஒரு படமா?" என்று கொட்டாவி விட்டான் சக்கரை. "அது ரொம்பப் பிரமாதமாயிருந்ததால் நானே வைத்துக்கொண்டு விட்டேன்."

"ஊஹூம், ஊஹூம்! நியாயமாய் அந்தத்தானே எனக்குத் தரவேண்டும்?" என்று சிவராஜ் மன்றாடிக் கொண்டிருக்கையில், "அடாடாடா! என்ன இது, கார்ப்ப ரேஷன் பள்ளிக்கூடம் மாதிரி?" என்று திருமதி தர்மு சிவராஜ் அதட்டிக் கொண்டே அங்கே வந்தாள்.

சிவராஜ் சத்தம் போடாமல் நழுவிவிட்டார், இருபத்து மூன்று படங்கள் பறிமுதலாகாமல் தப்பினால் போதும் என்று.

அவருடைய 'டார்க் ரூம்' விளக்கை அணைத்து விட்டுக் கதவைச் சாத்தினாள் தர்மு. "என்ன சக்கரை, சமய சந்தர்ப்பம் இல்லாமல் அவருடன் விளையாடிக் கொண்டு? மேலே மாடிக்கு வா, ஒரு பிரசினை காத்திருக்கிறது."

அவளைப் பின் தொடர்ந்து சென்றான் சக்கரை. "என்ன விஷயமென்றால், அத்தை, அந்த மிஸஸ் ரத்னம் அடையாறு தோட்டத்தில் பிக்னிக் நடந்த பல காட்சிகளைப் போட்டோ பிடித்து வைத்திருந்தார் களில்லையா? அதிலே ஒரு படத்தை நான் எடுத்து வைத்திருக்கிறேன். அந்தப் படம் ..."

குறுக்கிட்டு நிறுத்தினாள் தர்மு. "இப்போ அதுதான் கவலையாக்கும் எனக்கு? மாடிக்கு வா, பெரிய கவலை காத்திருக்கிறது."

"ஸாரி உடுத்திய கவலையா, பாண்ட் போட்ட கவலையா?" என்று தமாஷ் செய்துகொண்டே அத்தையின் பின்னால் அவளுடைய அறைக்குள் நுழைந்த சக்கரை திடுக்கிட்டு நின்றான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

நூற்றைந்து டிகிரி ஜுரத்தில் இருப்பவளைப் போல முகத்தில் ஓர் அனலும் பளபளப்பும் வீச, இரு கைகளாலும் தலையைப் பிடித்துக்கொண்டு நாற்காலியில் அமர்ந்திருந்தாள் அம்பிகா. இரண்டு மணி நேரத்துக்கு முன்னால், ராஜா அண்ணாமலைபுரம் ஸ்டாப்பிங்கில் பஸ் ஏறிய அதே அம்பிகாவா இவள்! சக்கரையினால் நம்ப முடியவில்லை. என்னதான் பிரமை பிடித்தவள் போல இருந்தாலும் அதிலே ஓர் ஒழுங்கும் அழகும் அப்போது இருந்தன. இப்போது? வெறியும் அலங்கோலமும் தாண்டவ மாடின அதே வதனத்தில். விளக்கின் வெளிச்சத்தில் நிழலும் ஒளியும் மாறி மாறி வீசின அவள்மீது.

என்ன நேர்ந்திருக்க முடியும் அந்தக் குறுகிய நேரத்துக்குள்?

"உன் வசம் கண்ணீர் இருக்குமானால், இப்போது சிந்தத் தயாராயிரு!" என்ற ஷேக்ஸ்பியரின் வாசகத்தை சக்கரை தனக்குள் சொல்லிக் கொண்டான்.

அம்பிகாவைத் தாங்கினாற்போல் நாற்காலியின் பின்னே அவள் சித்தி மரகதமும் நின்றிருந்தாள். "அம்பிகா! இதோ பார், சக்கரை வந்திருக்கிறார்," என்று அவள் தலையைத் திருப்பினாள்.

அம்பிகாவின் முகத்தில் சட்டென்று ஒரு மலர்ச்சி பிறந்தது. "சித்தி! திடீரென்று எனக்குக் கிறுகிறுப்பெல்லாம் குறைந்துவிட்ட மாதிரி இருக்கிறது. காலேஜிலிருந்து வந்தது முதல் இருந்த குழப்பமும் வேதனையும் நீங்கினாற்போல் தோன்றுகிறது," என்றாள். அவள் சக்கரையைப் பார்த்த பார்வையில் நன்றி நிறைந்திருந்தது.

"எதற்காக அத்தை இவர்களை வரவழைத்திருக் கிறாய்?" என்று தர்முவைச் சக்கரை வினவினான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"நாங்களாகத்தான் வந்தோம்," என்று மரகதம் முன்வந்து அவனுக்குப் பதிலளித்தாள். "இவள் காலேஜிலிருந்து வீட்டுக்கு வந்ததும் ..."

"நாடகப் பள்ளியிலிருந்து வீட்டுக்கு வந்ததும்," என்று சக்கரை திருத்தினான்.

இரண்டிற்கும் என்ன வித்தியாசமென்பதை உணராதவளாக மரகதம், "வந்ததும், இவள் 'என்னவோ செய்கிறதே, என்னவோ செய்கிறதே,' என்று தலையைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்து விட்டாள். தலை வலியா, வயிற்றில் ஏதாவது கோளாறா என்று கேட்டால், இல்லை, இல்லை என்கிறாள். பின்னே என்ன என்று கேட்டால், தெரியவில்லையே என்று கத்துகிறாள். டாக்டரிடம் போகலாமா என்றால் வேண்டாம் என்று கூச்சல்! நான் யாரைக் கேட்பேன், எங்கே போவேன் சொல்லுங்கள். சூரி கூட ஊரில் இல்லை. செங்கல்பட்டுக்குப் போயிருக் கிறானாம் ..." என்றாள்.

சக்கரை, "செங்கல்பட்டுக்கா? சாயங்காலம் இருந்தாரே?" என்றான்.

"அதற்கப்புறம் போயிருக்கிறான் போலிருக்கு. பார்த்தேன். வேறே ஒரு வழியும் தெரியவில்லை. டாக்ஸி பிடித்தேன். இவளை அழைத்துக்கொண்டு இங்கே வந்து விட்டேன். வீட்டுக்குத் தனியாய்ப் போகக்கூடப் பயமாயிருக்கிறது," என்று இரண்டு கையையும் கும்பிட்ட மாதிரி குவித்து வைத்துக்கொண்டு, கண்ணில் நீர் தளும்பக் கூறி முடித்தாள் மரகதம்.

"ஒன்றும் ஆகிவிடவில்லை, பயப்படாதீர்கள்," என்று ஆறுதல் கூறிய சக்கரை, "அம்பிகா! நாடகப் பள்ளியி லிருந்து வந்ததும் உன் மனசில் என்னென்ன தோன்றியது? தெளிவாக, கோவையாகச் சொல் பார்க்கலாம்," என்று ஒரு

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

பென்ஸிலையும் காகிதத்தையும் எடுத்து வைத்துக் கொண்டு அவளெதிரில் அமர்ந்தான்.

"மறைக்காமல் சொல்லு," என்று பிரின்ஸிபால் தர்முவும் ஊக்கினாள்.

"சொல்கிறேன்," என்று சாதாரணமாக, அமைதியாக, பதற்றமில்லாமல் தான் முதல் வார்த்தையைத் தொடங்கினாள் அம்பிகா.

ஆனால் மறுவிநாடி, ஆவேசம் வந்தவளைப் போல எழுந்து நின்றாள். அவள் உடம்பு புயல் வேகத்தில் ஒருமுறை சுழன்று நின்றது. அந்தச் சுழற்சி வேகத்தில், கூந்தல் பிரிந்து அவிழ்ந்து அவள் மேனியைத் தழுவினாற் போல் விழுந்தது. அவள் கண்களில் அமானுஷ்யமான ஒரு தகதகப்புக் குடி கொண்டது.

"என்னை எதுவும் கேட்காதே! கேட்காதே! கேட்டாயோ கொலை விழும்! கொலை விழும்!" என்று தொண்டை கிழிந்து விடுகிற மாதிரி கூச்சலிட்டாள்.

9

சில நிமிடங்களுக்கு அம்பிகா எழுந்திருக்கவே யில்லை. முறுக்கிப் பிழிந்த துணி மாதிரி அசைவற்று உயிரற்றுத் தரையில் கிடந்தாள்.

"என்னடி அம்பிகா? ஐயையோ! என்ன உனக்கு?" என்று பதறித் துடித்து அவளருகே முதலில் குனிந்தவள் அம்பிகாவின் சித்தி மரகதம்தான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ஆனால் அவளுக்கு இடம் தரவில்லை சக்கரை. "உஸ்!" என்று உதட்டில் விரல் வைத்து அவளையும் தர்மு சிவராஜையும் விலக்கினான். "இப்போது தொந்தரவு செய்யாதீர்கள். தானாகவே அவளுடைய மயக்க நிலை தீரட்டும்," என்று அவன் தாழ்ந்த குரலில் கூறியதுகூட, அந்தச் சூழ்நிலையில், உரத்த கர்ஜனையில் இடப்படும் ஆணைபோல அழுத்தமாகத் தோன்றியது. அதற்கிணங்க மற்றவர்கள் விலகிக் கொண்டார்கள்.

வெறும் தரையில் சுருண்டு கிடக்கும் அம்பிகாவைக் கூர்ந்து நோக்கினான் சக்கரை. அவளுடைய இமைகளைப் பிரிக்க முயன்றபோது சுறுப்பு விழி மேலே எங்கேயோ ஓட்டிக் கொண்டுவிட்ட மாதிரி வெறும் வெளுப்பு மட்டுமே தென்பட்டது. சுவாசம் வேகமாக வந்து கொண்டிருந்தது. ஈரம் பளபளத்துக் கொண்டிருந்த உதடுகள், ஈனசுரத்தில் என்னவோ முனகின. இருதயம் வேகமாகத் துடித்துக் கொண்டிருந்ததால், மேலாடை ஏறி இறங்கிற்று வேகமாக.

விரல் நுனியினால் அவள் புடவைத் தலைப்பைச் சரி செய்த சக்கரை அவள் வாயினருகே குனிந்து செவி மடுத்தான், என்ன சொல்கிறாளென்று கேட்க. ஆனால் இயலவில்லை புரிந்துகொள்ள.

"நீ கேள்," என்று அத்தையிடம் ஒப்படைத்தான் பொறுப்பை.

தர்முவும் அம்பிகாவின் கன்னத்தோடு கன்னம் ஒட்டி வைத்துக்கொண்டு கேட்டாள். "பேப்பர் ... காகிதம ..." என்று குழம்பியதற்கு மேல் அம்பிகா எவ்வித விளக்கமும் தரவில்லை.

சித்தி மரகதம் முன்வந்து, "என் குழந்தை என்ன பேசுவாளென்று எனக்குத்தான் தெரியும். கொஞ்சம்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

விடுங்களேன். நான் கேட்கிறேனே?" என்று மன்றாடினாள் கண்ணீரினால் கம்மிப்போன குரலில்.

"நன்றாய்! தாராளமாய்!" என்று விலகிக் கொண்டான் சக்கரை.

மற்றவர்களைப் போலவே மரகதமும் குனிந்து கவனித்து விட்டு, நிராசையுடன் தலையை அசைத்தாள். "என் செல்லம்மாவுக்கு என்னவோதான் நேர்ந்து விட்டது. இல்லாவிட்டால் இப்படிச் சம்பந்தமில்லாமல் உளறுவாளா?" என்று புடவை நுனியினால் கண்ணைத் துடைத்துக் கொண்டாள்.

"என்னதான் காதில் விழுந்தது?" என்று எரிச்சலுடன் சக்கரை அதட்டினான்.

"அதென்னவோ, புத்தியோடு பேசுகிற மாதிரி இல்லை. காகிதம், பென்ஸில் வேண்டும் என்கிறாள். இப்போது எதற்குப் பென்ஸிலும் பேப்பரும்? அட்டை என்றுகூடச் சொன்ன மாதிரி இருந்தது," என்றாள் மரகதம்.

சக்கரை தன் சோடாபுட்டி கண்ணாடியைக் கழற்றிப் பாலிஷ் ஏற்றியபடியே "அட்டை ... காகிதம் ... பென்ஸில்," என்று சொல்லிக்கொண்டு குறுக்கும் நெடுக்குமாய்ச் சிறிது நேரம் அறையில் உலவினான்.

"நாம் என்னவாக் இருக்கிறோம் என்பது தெரிகிறது; என்னவாக இருந்திருக்கக்கூடும் என்பது தெரிவதில்லையே!" என்ற ஆங்கில மகாகவியின் புலம்பலையே அவனும் புலம்பினான்.

"விஷயத்துக்கு வா," என்றாள் தர்மு.

"ஆமாம்! இருக்கலாம்! அப்படித்தான்!" என்று யாருக்கோ உற்சாக மூட்டுவது போலக் கையைச் சொடுக்கினான் சக்கரை. "இதோ தருகிறேன் அம்பிகா," என்றவன் பரபரவென்று மேஜை, அலமாரி

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

முதலியவற்றைக் குடைந்து காகிதமும் பென்ஸிலும் சேகரித்தான். பள்ளிப் பிள்ளைகள் பரீட்சைக்கு எடுத்துச் செல்வது போன்ற அட்டையும், ('கிளிப்'புடன் கூடியது) கிடைத்தது.

"கொஞ்சம் கை கொடுங்கள்," என்று மரகதத்தைக் கேட்டதும், என்னென்னவோ நடைபெறுகிறதே என்ற திகில் உடம்பெங்கும் வியாபித்திருக்க, நடுங்கும் கரத்துடன் அவள் அம்பிகாவை இடுப்பைப் பிடித்துத் தூக்கினாள். இருவருமாய் அவளைக் கட்டிலில் சாத்தினாற் போல் உட்கார்த்தி வைத்தார்கள். முதுகுப்புறத்துக்குத் தலையணைகள் வைத்து முட்டுக் கொடுத்தார்கள்.

பாதிக் கண் திறந்த நிலையில், அரை மயக்கமாயிருந்த அம்பிகாவிடம். "இந்தா," என்று காகிதத்தையும் அட்டையையும் கொடுத்தபோது, "என்ன செய்யப் போகிறாய், சக்கரை?" என்று தர்மு கேட்டாள்.

"பார்த்துக் கொண்டிரு," என்று மட்டுமே சுருக்கமாய்ப் பதில் கூறினான் சக்கரை. "ஊம், எழுது அம்பிகா," என்று கட்டிலில் இருந்தவளையும் ஊக்கினான்.

அம்பிகாவின் கைகள், அட்டை மீதிருந்த காகிதத்தையும் பென்ஸிலையும் தொட்டபடி இருந்தன. ஆனால் ஓடவில்லை. ஆடாமல் அசையாமல் சிலைபோல் அவள் உட்கார்ந்திருந்தாள். மூச்சு விடுகிறாள் என்பதை மட்டும் கூர்ந்து கவனிக்காவிட்டால், செதுக்கிய சிற்பம் என்றுதான் அவளை எண்ணத் தோன்றும்.

சக்கரை ஓசைப்படாமல் தன் அத்தையின் அருகே வந்து நின்று கொண்டான். "அவள் மனசில் ஏதோ ஓர் எண்ணம் பலமாக வேரூன்றி அவளை ஆட்டுவிக்கிறது. அவள் பேச நினைக்கிறாள். முடியவில்லை. வேறேதோ ஒரு சக்தி அந்த எண்ணம் வாய் வழியே வெளிப்படாதபடி

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

தடுக்கிறது. ஆகவே எண்ணத்துக்கு வார்த்தைகளில் உருக்கொடுக்க முடியாமல் தவிக்கிறாள்," என்றான்.

தர்மு சிவராஜ் மேற்கொண்டு ஊகித்தவளாக, "ஆகவே அதை எழுதிக் காட்டு என்கிறாய்?" என்று கேட்டாள்.

"நான் கேட்கவில்லை. அவளே சொன்னாள். காகிதம், பென்ஸில் வேண்டுமென்று. உள்ளே சிக்கி யிருக்கும் விஷயத்தை வெளிக்கொண்டு வந்துவிட வேண்டு மென்ற துடிப்பு அம்பிகாவுக்கே நிறைய இருக்கிறது..."

"எழுதுகிறாள்! எழுதுகிறாள்!" என்று திடீரெனக் கூச்சலிட்டாள், அம்பிகாவின் பக்கமாகக் கையை ஊன்றிக்கொண்டு அவளையே குனிந்து நோக்கியவாறிருந்த மரகதம்.

சரேலென அவளிடம் விரைந்தான் சக்கரை. அம்பிகாவின் கையிலிருந்து காகிதத்தைப் பார்த்தான்.

ஏமாற்றம் அவன் முகத்தில் கூடு கட்டியது.

இரண்டே இரண்டு நீளமான கோடுகள்தான் அம்பிகா இழுத்திருந்தாள். பென்ஸில் நகராமலே நின்றது.

அருகில் வந்து எட்டிப் பார்த்த தர்மு, "படம் போடுகிறாளா என்ன?" என்றாள் கேலியாக.

"படம்?" துள்ளித் திரும்பினான் சக்கரை. "ஆமாம்! நான் ஒரு முட்டாள்! எனக்கு ஏன் தோன்றாமலே போயிற்று!" என்று தன் தலையில் தானே குட்டிக் கொண்டான்.

மரகதம் அவனை நோக்கிப் பரிதாபமாக விழித்தாள். அதைப் பொருட்படுத்தாத சக்கரை, "உனக்குப் புரியவில்லையா அத்தை?" என்று கேட்டான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

தர்மு சிவராஜ் உதட்டைப் பிதுக்கினாலும், மருமானின் உற்சாகத்தைக் குறைக்கக் கூடாதென்று, "சொல்லேன் நீதான்," என்றாள்.

"இன்னல்களின் பயன்கள் இனிமையானவை," என்று சக்கரை தொடங்கியதும், "ஷேக்ஸ்பியரைக் கேட்கவில்லை. மிஸ்டர் சக்கரையைக் கேட்டேன்," என்றாள் தர்மு சிவராஜ்.

கல்லூரி வகுப்பறையில் விரிவுரை நிகழ்த்துகிற மாதிரி சக்கரை விரலை உயர்த்திக்கொண்டு, இங்கும் அங்கும் உலாத்தியவாறே சொன்னான்:

"மனிதனின் மொழி எதை வேண்டுமானாலும் எடுத்துக்கொள். எழுத்து எப்படி வந்தது? படத்திலிருந்து தான். பார்க்கும் பொருளை வர்ணிக்கத் தெரியாமல் படமாக வரைந்து காட்டினான் ஆதி மனிதன். அந்த ஒவ்வொரு படமும் ஒவ்வோர் எழுத்தாக உருவாயிற்று. ஆகவே எழுத்துக்கு முன்னால் கண்டுபிடிக்கப்பட்டது படமல்லவா?..."

"சக்கரை!" என்ற அதட்டலுடன் குறுக்கிட்டாள் பிரின்ஸிபால் அம்மாள். "உன் சொற்பொழிவை இன்னொரு நாள் சாவகாசமாய்க் கேட்கிறேன்."

"அவ்வளவுதான். முடித்து விட்டேன்." சக்கரை மீண்டுமொரு முறை மேஜை, அலமாரிகளைக் குடைந்தான். பிறகு, அடுத்த அறைக்குச் சென்று ஒரு பெரிய கைக் குட்டையை எடுத்து வந்தான். அதை அம்பிகாவின் கண்ணைச் சுற்றிக் கட்டி, தலையின் பின்புறத்தில் முடிச்சுப் போட்டான். "எழுது அம்பிகா," என்று மெல்லக் கூறி விட்டுத் தன் அத்தையிடம் சென்றான். "புரிகிறதா? எழுத்து வடிவில் எழுதத் தெரியாத ஆதிமனிதனின் நிலையில்தான் அம்பிகாவும் இப்போது இருக்கிறாள். தன் எண்ணத்தைப்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

படமாகக் காட்டத்தான் அவளுக்குத் தெரியுமே தவிர, வார்த்தையாகவோ வாக்கியமாகவோ வராது," என்றான்.

தர்மு சிவராஜ் குழப்பம் தெளியாதவளாக, "அதற்கு, கண்ணை ஏன் கட்டினாய்?" என்று விசாரித்தாள்.

"மனசின் ஆழத்தில் இருப்பதைத் தெரிவிக்க அம்பிகா முயலுகிறாள். அப்போது அவள் புறக் கண்ணுக்கு எதுவும் தெரியக்கூடாது. தெரிந்தால், அந்தப் பொருள் அல்லது காட்சிதான் படத்தில் வருமே தவிர, மனசில் இருப்பது வராது," என்று தெரிவித்தான் சக்கரை.

மூன்றுபேரும் மூன்று வகை உணர்ச்சிகளுடன் அம்பிகாவைச் சுற்றி நின்று கொண்டிருந்தனர். மூவரில் மரகதம்தான் அதிகம் கலங்கிப் போனவள். கல்லூரிப் படிப்பு உண்டு, வீட்டுக் காரியம் உண்டு என்று குடும்பத்துக்குப் பாந்தமாக இருந்த வயதுப் பெண்ணை இப்படியெல்லாம் அறிவுக்கெட்டாத முறையில் ஆட்டி வைக்கும் விதியின் கொடுமையை எண்ணி உள்ளத்துக்குள் புழுங்கிப் போனாள் அவள். அம்பிகாவைக் கொண்டு குடும்பத்தின் எதிர்காலத்தை நன்கு அமைத்துக் கொள்ளலாம் என்று நம்பியிருந்தவள், அம்பிகாவின் எதிர்காலமே எப்படி அமையுமோ என்ற பீதிக்குள்ளானாள்.

"இருங்கள்," என்று மற்றவர்களை விலக்கிய சக்கரை, அம்பிகாவின் தொடையில் ஊன்றியிருந்த அட்டையைப் பார்த்தான். அவன் நெற்றி சுளித்தது. புருவங்கள் ஏறி இறங்கின. கண்கள் இடுங்கி விரிந்தன. உதடுகள் மடிந்து பிரிந்தன.

அம்பிகாவின் பென்ஸில் இப்போது இம்மி இம்மியாய் நகரத் தொடங்கியிருந்தது. கொஞ்சம் கொஞ்சமாய் ஒரு படம் உருவாயிற்று. அதன் அர்த்தத்தை விளங்கிக் கொள்ள இயலாமல் பம்பாய்ப் பல்கலைக் கழக மனத்தத்துவ மேதை தடுமாறுவதைக் கண்ட தர்மு சிவராஜ்,

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

தனக்குள் சிரித்துக் கொண்டு படத்தின்மீது கண்ணோட்டம் செலுத்தினாள்.

அடுத்த வினாடி அவள் சிரிப்பு மறைந்தது. முகத்தைத் திகைப்பு ஆக்ரமித்துக் கொண்டது.

அம்பிகா வரைந்து கொண்டிருக்கும் சித்திரம் எதைக் குறிப்பிடுகிறது? அவளுக்குப் புரியவில்லை.

அம்பிகாவின் சித்திக்கு ஆரம்பத்திலிருந்தே எதுவும் புரியாததால் இன்னும் பெரிய சிக்கலில் மாட்டிக் கொண்டவள் போல் பிரமை பூண்டு நின்றாள்.

"தலைமயிர்... ஒற்றைக் கண்..." என்றாள் தர்மு.

அடுத்து அம்பிகா வரைந்ததும் —

சக்கரை, நிசப்தத்தைக் குலைக்காத குரலில், "வீடு மாதிரி இருக்கிறதே?" என்று சொன்னான்.

ஆம். எட்டு அல்லது ஒன்பது வயதுக் குழந்தை வரைந்த வீடு போலக் கோணல் மாணலாகக் காட்சி தந்தது அந்தக் கிறுக்கல்.

சட்டென்று சக்கரை கையைக் காட்டி, பேசா திருக்குமாறு ஜாடை காட்டினான் மற்ற இருவருக்கும்.

அம்பிகா இன்னொரு படம் வரையத் தொடங்கியிருந்ததே காரணம்.

இதுவும் உருப்படியான படமாகத் தோன்ற வில்லை.

"மூக்குக் கண்ணாடி மாதிரி இருக்கிறது" என்றான் சக்கரை.

அம்பிகா வரைந்த படம் மூக்குக்கண்ணாடி இருந்தது;

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

தர்முவும் சக்கரையும் மௌனமானார்கள். மரகதம் மட்டும் மூக்கை உறிஞ்சும் சப்தம் கேட்டது. வெகு நேரமாய் மங்கலாக எரிந்து கொண்டிருந்த மின்சார பல்பு, அரை வினாடி கண்ணைச் சிமிட்டிவிட்டு எப்போதும் போல் பளிச்சென்று ஒளி வீசியது. தெருக்கோடியில் விரைகின்ற ஒரு காரின் ஹாரன் ஒலிகூடக் கேட்குமளவுக்கு நிசப்தமாயிருந்தது அறையின் சூழ்நிலை.

அம்பிகாவின் பென்ஸில் அசைந்தது.

இம்முறை தர்முவே உற்றுப் பார்த்துவிட்டு, ஒவ்வோர் அசைவும் நின்றதும் அதைப்பற்றி விவரித்தாள்: "வட்டம் வட்டங்கள்... சக்கரங்களோ ஒரு வேளை?... கீழே இரண்டு கோடு... என்ன இது? நிறுத்தி விட்டாளே?"

சக்கரை மெல்லச் சிரித்தான். "அடிக்கடி விபத்துக்கள் நிகழும் வாகனம்."

"விமானமா?"

"தரை வாகனம். கீழேயுள்ள கோடு, தண்டவாளம். இது ரயில், அத்தை."

அம்பிகாவின் உடல் ஒருமுறை தள்ளாடியது. வேரோடு பறித்தெறியப்பட்ட கொடி போல் அவள் கட்டிலில் சாய்ந்தாள். சட்டென்று மரகதம் மட்டும் தாங்கிக் கொண்டிராவிட்டால் கட்டிலின் சட்டத்தில் அவள் தலை மோதுண்டிருக்கும்.

"அம்பிகா! அம்பிகா!" என்று அரற்றியவாறு மரகதம் அவள் விழிகளைப் பிரித்துத் திறப்பதில் ஈடுபட்டாள். ஆனால் சக்கரை உடனே அவளைத் தடுத்து விட்டான். "வேண்டாம், வேண்டாம். தானாகவே சுய நினைவுக்கு வருவாள் அவள். பலவந்தமாக எழுப்பாதீர்கள்," என்று அவன் சொன்ன பிறகு, மரகதம் அம்பிகாவைத் தன் மடியில் சாய்த்துக் கொண்டாள்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

மீனாம்பாள் கல்லூரியின் முதல்வி, மேஜை விசிறியைத் தன் மாணவியின் பக்கம் திருப்பிவிட்டு, உரக்கவே சிந்தனை செய்தாள். "வீடு — மூக்குக் கண்ணாடி — தலை — ரயில்வண்டி இதற்கெல்லாம் என்ன அர்த்தம் இருக்குமென்று நினைக்கிறாய், சக்கரை?"

"நானா?" இரண்டு கைகளையும் அகல விரித்தான் அந்த மனத்தத்துவ நிபுணன். "நான் எதுவும் நினைக்க வில்லை அத்தை. இதோ இங்கே," என்று மூளையைத் தட்டிக் காட்டினான் அவன். "சமையல் நடந்து கொண் டிருக்கிறது. பொறுமையாயிரு. என்றைக்காவது ஒரு நாள் விருந்து படைக்கிறேன்."

தர்மு ஒரு பெருமூச்சை வெளியேற்றினாள் துவண்டு கிடக்கும் அம்பிகாவை அனுதாபத்துடன் நோக்கினான் சக்கரை. கொஞ்சம் கொஞ்சமாக அவள் சுவாசம் சீர்ப்பட்டுக் கொண்டிருந்தது. "இதோ விழித்துக் கொண்டு விடுவாள்," என்று கூறிய சக்கரை, கட்டிலில் கிடந்த அட்டை, பென்ஸில் ஆகியவற்றை எடுத்து வேறிடத்தில் வைத்தான். படங்கள் வரைந்த காகிதத்தை மட்டும் மடித்துச் சட்டைப் பையில் பத்திரப்படுத்திக் கொண்டான்.

"அவளிடம் எதுவும் சொல்ல வேண்டாம். சும்மா கொஞ்ச நேரம் களைப்பாக இருந்து எழுந்து கொண்டவள் போல் அவள் நினைக்கும்படி பேசுங்கள்," என்றான்.

உடலெல்லாம் வலியினால் வேதனைப் படுவது போல முறுக்கிக்கொண்டு, நிமிர்ந்து நேரே உட்கார்ந்து கொண்டாள் அம்பிகா. தானாகவே கண்ணில் போட்டிருந்த கட்டை அவிழ்த்து கொண்டாள். சுற்றி நிற்போரை மிரள மிரள விழித்துப் பார்த்தாள்.

"ஒன்றுமில்லை உனக்கு. கொஞ்சம் களைப்பாகப் படுத்திருந்தாய். அவ்வளவுதான்," என்றான் சக்கரை.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

தர்மு சிவராஜ் அவளை அன்புடன் முதுகில் தட்டிக் கொடுத்து, "கவலைப்படாமல் இரு. உனக்கு எதுவும் இல்லை. வீட்டில் படுத்துக்கொண்டு இரண்டு நாள் ஓய்வு எடுத்துக்கொள்," என்று கூறினாள்.

அம்பிகாவைத் தோளில் சாத்தி அணைத்தபடி படியிறங்கிச் சென்றாள் மரகதம்.

மேல் படியில் நின்று அவர்கள் போவதைப் பார்த்து விட்டுத் திரும்பிய சக்கரை, "த்ஸு" என்று வருத்தத்துடன் தலையை ஆட்டினான். "அத்தை, இந்தப் பெண்ணுக்கு இரண்டு நாள் லீவு கொடுத்துப் பிரயோசன மில்லை. நிரந்தரமாகக் கொடுக்க வேண்டியதுதான்!"

"சே, சே!" என்று தர்மு சிவராஜ் மறுத்தாள் பலமாக.

"சேயுமில்லை, தாயுமில்லை. நான் சொல்வது கட்டாயமான விஷயம்.

தர்மு சிவராஜ் மேலும் கண்டிப்புடன், "காலேஜ் என்ன, என் சொந்தச் சமையற்கட்டா, எனக்கு இஷ்டப் படாதவர்களை வெளியேற்ற? அம்பிகாவுக்கு லேசான கோளாறுதான். சரியாகிவிடும். அதற்கெல்லாம் காலேஜை விட்டு நீக்கினால் அவ்வளவுதான்! பிரளயம் நிகழ்ந்து விடும்" என்றாள்.

"நான் வருகிறேன், வேலை இருக்கிறது," என்று வெளியே புறப்பட்டான் சக்கரை. போகுமுன், "காலேஜில் என்ன பிரளயம் வேண்டுமானாலும் வரட்டும், அத்தை. பயப்படாதே. அம்பிகாவைக் கல்லூரியிலிருந்து நிறுத்தினால்தான் கல்லூரிக்கும் நல்லது; அம்பிகாவும் உயிரோடு இருக்க முடியும்," என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"ஹுஉம்! ஷேக்ஸ்பியரின் ஹாம்லெட் கூறியது எவ்வளவு உண்மை!" என்று தனக்குள் கூறிக்கொண்டான் அவன். "நான் கொடியவனாக இருக்க வேண்டியிருக்கிறது— இனியவனாக இருப்பதற்காகவே."

வெளியே தெரு இருள் மயமாக இருந்தது. சாலையின் கோடியிலிருந்த தபாலாபீசில் நுழைந்தான் சக்கரை. தந்தி ஜன்னலை அணுகி, "எக்ஸ்பிரஸ் தந்தி — பம்பாய்க்கு" என்று கூறிப் பாரத்தைப் பூர்த்தி செய்தான்.

> டாக்டர், டரானே மனத் தத்துவப் பிரிவு, பம்பாய் பல்கலைக் கழகம், பம்பாய். உடனே தேவை — டாக்டர் பிட்ஸ்ஜெராল்டு எழுதிய — "மானசத் தந்தி" என்ற புத்தகம்.
>
> **சக்கரை**

தந்தியை அனுப்பியபின் சாலைக்கு வந்தபோது, ஓர் ஆட்டோ ரிக்ஷா அவனை நெருங்கி வந்தது. நிறுத்தி ஏறிக் கொண்டான் சக்கரை.

"பாரீஸ் கார்னர் தாண்டி, பர்மா பஜார் இருக்கிற தல்லவா? அங்கே விடு," என்று கட்டளையிட்டான்.

10

போரடித்த போலீஸ்காரரைப் பார்த்திராதவர் களுக்கு ஓர் அருமையான வாய்ப்பு, அடையாறுக்கும் அப்பாலுள்ள அந்த ஸி.ஐ.டி. புதுநகரில் காத்திருந்தது.

கான்ஸ்டபிள் மருதகாசியை அவருடைய நெருங்கிய சகாக்கள் 'திடீர்ப் போலீஸ்' என்று அழைப்பது வழக்கம். அவருடைய உத்தியோக எண், மூன்று ஏழுகளைக்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கொண்டதாயிருந்ததே அந்தக் கிண்டலுக்குக் காரணம். கொஞ்சம் தப்பியிருந்தால் அவர் ஆரம்பப்பள்ளி ஆசிரியராக ஆகியிருப்பார். அந்தப் பதவிக்குத்தான் அவர் லாயக்கும்கூட. அப்பாவித்தனமும் சாது இயல்பும் கொண்ட மருதகாசி, சினேகிதர்களின் கிண்டலைக் கேட்டு முகம் சுளிப்பதோ மனம் நோவதோ கிடையாது. "ஹுக்கும்! சுத்த வெட்டிக் கிண்டலோடு சரி. ஒரு சிஸ்ஸருக்கு வழியைக் காணலை!" என்று அவர் முணு முணுப்பதைக் கேட்டு, அவருடைய 'செலவில்' சிரித்து மகிழ்ந்த சகாக்கள் போனால் போகிறதென்று ஒரு சிகரெட்டோ, அரைப் பாக்கெட்டோ கொடுத்துவிட்டுப் போய்விடுவார்கள்.

இப்போது கேலி செய்ய நண்பர்களும் இல்லாமல், ஓசியில் கிடைக்கும் சிகரெட்டும் இல்லாமல், அவதிப்பட்டுக் கொண்டிருந்தார் மருதகாசி. 'ஊரிலே உலகத்திலே எத்தனை பெண் பிள்ளைகள் டாண் டாணென்று மண்டையைப் போட்டுவிட்டுப் போய்ச் சேருகிறார்கள்? அந்த மாதிரி இந்தக் காலேஜ் அம்மாளும் செத்திருக்கக் கூடாது? வீட்டில் தனியாய் இருப்பானேன்? கழுத்து நெரிபட்டு உயிரைப் பறி கொடுப்பானேன்? அவள் புருஷனாமே எவனோ வேதசிகாமணி, அவன் வந்தால் பிடிப்பதற்காக இங்கே நான் பழி கிடப்பானேன்?' என்று அவர் மனத்துக்குள் திட்டிக் கொண்டிருந்தது —

மிஸஸ் ரத்னத்தைத்தான் என்பதை வாசகர்கள் இந்நேரம் உணர்ந்திருப்பார்கள்.

ஆம். அவர் காலல் இருந்தது, இறந்துபோன மிஸஸ் ரத்னத்தின் பூட்டப்பட்ட வீட்டின் இருளடைந்த திண்ணையிலேதான். அலுத்துச் சலித்திருந்த போலீஸ்காரர் 777, தான் செய்யக்கூடிய ஒரே காரியம் சற்றுக் கண்ணயர்வதுதான் என்று தீர்மானித்தார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

டியூடியின்போது தூங்கக்கூடிய அளவுக்குக் கடமையுணர்ச்சி குன்றியவரல்ல அவர். ஆனால் உடல் என்பது அவர் வசத்தில் இருக்கவில்லையே, பாவம். அன்று பகல் பூரா அவருக்குச் சரியான அலைச்சல். ஹெட் கான்ஸ்டபிளாகப் பதவி உயர்வு பெறுவதற்காகச் சில பேரை நேரில் பார்த்துக் கேட்க வேண்டியிருந்தது. 'வேண்டாமய்யா பிரமோஷன்' என்றிருந்தவர், ஐந்து குழந்தைகளையும், இரண்டு பெண்டாட்டிகளையும் காப்பாற்ற வேண்டி, தனது கருத்தை மாற்றிக்கொண்டு அலைந்து கொண்டிருந்தார். ஆனால் பார்க்கிறேன், ஆகட்டும் என்று சொல்லி 777-ஐ அனுப்பிவிட்டார்கள் சம்பந்தப்பட்டவர்கள்.

எல்லாம் சேர்ந்து அதற்குச் சிகரமும் வைத்த மாதிரி, பையிலிருந்த சிகரெட் மொத்தமும் காலியாகி விட்டதை உணர்ந்தார் அவர். காலை ஏழு மணிக்கு வேறு போலீஸ்காரர் வந்து டியூட்டி மேற்கொள்கிற வரையிலும் இந்த இடத்தை விட்டு அங்குலமும் நகரக்கூடாது என்ற கட்டுப்பாடு காரணமாக, பல்லைக் கடித்துக்கொண்டு உட்கார்ந்தார்.

அப்போது, இரவு பதினொன்றரை மணி இருக்கும். அக்கம்பக்கமெல்லாம் கப்சிப்பென்று அடங்கி விட்டன. தெருவில், அந்த வீட்டுக்குப் பக்கமாயிருந்த இரண்டு விளக்குக் கம்பங்களும் பழுது பட்டிருந்ததால், எவ்விதமான வெளிச்சமும் அங்கே கிடைக்கவில்லை. போதாக்குறைக்கு வானத்தில் கருமேகங்கள் குவிந்து, பளீர் பளீரென மின்னலும் வெட்டிக் கொண்டிருந்தது.

திடீரென ஒரு குரல் போலீஸ்காரர் 777-ஐக் கேட்டது: "என்னங்க, மழை வரும் போலேயிருக்குது. இங்கே ராவுக்குத் தங்கலாமில்லையா?"

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கான்ஸ்டபிள் 777, கோபமும் திகைப்பும் அடைந்த வராக, "ராவுக்கும் தங்கக்கூடாது, ஐயருக்கும் தங்கக்கூடாது. போய்யா வெளியே!" என்று எரிந்து விழுந்து விட்டு, அத்தனை துணிச்சலுடன் தன்னைக் கேட்பவர் யார் என்று அறிய விரும்பி, டார்ச் லைட்டை அந்த உருவத்தின் முகத்தில் அடித்தார்.

தாடியும் மீசையும் முகத்தில் முக்கால் பகுதியை மறைத்திருந்தன. ஆழமான கண்கள், அகலமான நெற்றி. உடைகள்? பிச்சைக்காரன் கூடப் போடமாட்டான், அத்தனை கந்தல்.

"ஏன் சாமி, இப்படிக் கோபிக்கிறே? இதோ போயிடறேன்," என்ற தாடிக்காரன், வெளியே கையை நீட்டிப் பார்த்துவிட்டு, "மழை பிடிச்சுக்கிட்டுது. நின்னதும் போயிடறேன், சாமி. கோபிக்காதே," என்றான்.

சில நிமிடங்களில் சோவென்று ஆங்காரத்துடன் கொட்டத் தொடங்கியது வானம். இந்த அழையா விருந் தாளியை விரட்டுவதா கூடாதா என்று கான்ஸ்டபிள் மருதகாசி குழம்பிக் கொண்டிருந்த வேளையில் —

அந்தத் தாடிக்காரன் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தான். சரக்கென்று தீக்குச்சி கிழிக்கப்படுவது; பாஸ்பரஸின் இனிய நாற்றம்; சிகரெட்டின் மெல்லிய புகை; வாயிலிருந்தும் நாசியிலிருந்தும் புகைக் கம்பிகள் வெளிப்படும் அழகு; புகை தொண்டையைத் தொட்டதும் ஏற்படுகின்ற இன்பச் சிலிர்ப்பு — இவ்வளவும் எத்தகைய மாயப் பாசமென்பது மருதகாசியைப் போன்ற சிகரெட் பித்தர்களுக்குத்தான் தெரியும்.

அந்த மேனகையின் சதிராட்டத்தில் 777 சிக்கி யிருந்ததை அறிந்த மாதிரி —

"நீங்களும் எடுத்துக்குங்க," என்று ஒரு சிகரெட்டை நீட்டினான் தாடிக்காரன்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"நீ படா ஆள்தான். நல்லா ஐஸ் வைக்கிறியே?" என்று சொல்லிவிட்டு, அந்தப் பாக்கெட்டிலிருந்து ஒரு சிகரெட்டை எடுத்துக் கொண்டார் கான்ஸ்டபிள் மருதகாசி. தன் வசமிருந்த நெருப்புப் பெட்டியை உபயோகித்து அதைப் பற்ற வைத்துக் கொண்டார்.

இரண்டு இழுப்பு இழுத்து வெளி விட்டார். ஆகா! என்ன ஆனந்தம்! அலுப்பு சலுப்பெல்லாம் அடியோடு குறைந்துவிட்ட மாதிரியும், தரையில்லாத ஓர் உலகத்தில் தான் மிதப்பது போலவும் இருந்தது. அந்த ஆனந்தத்தை வாய்விட்டுச் சொல்லக்கூடத் தெரியாமல், இன்ப மிதப்புடன் இன்னும் இரண்டு தரம் இழுத்தார் புகையை.

அவர் கண்கள் செருகின, பற்கள் கிட்டின, தலை சுற்றியது. சுவரில் சாய்ந்தாற்போல் உட்கார்ந்திருந்தவர் அப்படியே சரிந்து கீழே விழுந்தார்.

தாடிக்காரன் இரண்டு வினாடி அவரை உற்றுக் கவனித்தான். பிறகு, ஒரு வெற்றிச் சிரிப்புடன், போலீஸ் காரரின் கையில் எரிந்து கொண்டிருந்த சிகரெட் துண்டைத் தரையில் தீய்த்து அணைத்து, தனது சிரகெட் பாக்கெட்டி லேயே மீண்டும் பத்திரப்படுத்திக் கொண்டான். அடுத்து, தன் இடுப்பிலிருந்த இரண்டு கையுறைகளை வெளியே எடுத்து அணிந்து கொண்டான்.

சற்று முன்பு முதுமையும் தள்ளாமையும் கொண்டிருந்த அவன் இப்போது சுறுசுறுப்படைந்தான். போலீஸ்காரரின் ஜேபிகளைச் சரசரவென்று ஆராய்ந்து, வாசல் பூட்டுக்கான சாவியைக் கைப்பற்றினான். கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைவதில் அடுத்தாற்போல் சில நிமிடங்கள் செலவழிந்தன.

உள்ளே சென்றவன் மின்சார விளக்கைப் போடவில்லை. போலீஸ்காரரின் டார்ச் விளக்கையே உபயோகப்படுத்தினான். தடித்த கையுறைகள் அணிந்திருந்த

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

தால், எங்கே ரேகைகள் பட்டு விடுமோ என்ற அச்சம் சிறிது மின்றி, தாராளமாகவே தான் வந்த காரியத்தில் இறங்கினான்.

மேஜைகளும் அலமாரிகளும் கிடுகிடுவெனத் திறக்கப்பட்டன. புத்தகங்கள் புரட்டப்பட்டன. காகிதக் கட்டுகள் சிதறின. ஃபைல்கள் கலைந்தன.

'செங்கல்பட்டுக்குப் போ! செங்கல்பட்டுக்குப் போ!' என்ற ரகசியக் கட்டளையொன்று அவன் செவியில் மோதிக்கொண்டேயிருந்தது. தாடிக்காரன் நிமிடத்துக்கு நிமிடம் அதிகப் பரபரப்படைந்தான்.

"இதோ போகிறேன். அதற்காகத்தான் தேடுகிறேன்," என்று அவன் தனக்குத்தானே பதிலளித்துக் கொண்டான்.

இறுதியில், சில பழைய கடிதங்கள் குத்திக் கோக்கப்பட்டிருந்த கம்பியில் அவன் தேடிய விலாசம் கிடைத்தது போலும். திருப்தியுடன் புன்னகை செய்து கொண்டு அந்தக் காகிதத்துடன் வாசலுக்கு வந்தான்.

கான்ஸ்டபிள் மருதகாசி இன்னும் பரிபூரணமான மயக்க நிலையிலேயே இருந்தார். வாசல் கதவைப் பழைய படி பூட்டி, சாவியைக் கான்ஸ்டபிளின் ஜேபிக்குள் வைத்தான் தாடிக்காரன். தெருவைப் பார்த்தான்.

ராக ஆலாபனை செய்து முடித்த சங்கீத வித்வான் கடைசிப் பிடிகளை முனகுகிற மாதிரி மழை ஓய்ந்து, மெல்லத் தூறிக் கொண்டிருந்தது.

தாடிக்காரன் ஒரு வினாடியும் வீணடிக்காமல் தன் கையுறையை மட்டுமின்றி, தாடியையும் மீசையையும் கந்தல் உடைகளையும்கூடக் களைந்து கையிலிருந்த ஒரு தோல் பைக்குள் அடக்கிக் கொண்டான். சுத்தமான உடைகளை

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

மாட்டிக்கொண்டு, தலையையும் அழகுற வாரிக் கொண்டான்.

யாரும் தன்னைக் கவனிக்கவில்லை என்பதை நிச்சயப்படுத்திக்கொண்ட பின் வாசலை விட்டு வெளி வந்தான். இளம் வாலிபனின் மிடுக்கான நடையில் சைதாப்பேட்டை ரயில்வே ஸ்டேஷனுக்குச் செல்லும் பாதையில் போகத் தொடங்கினான்.

செங்கல்பட்டு பஸ் ஸ்டாண்டுக்கு இரண்டு பர்லாங்கு தள்ளி ஒரு சின்னத் தெருவில் நின்று கொண்டிருந்தான் சூரி.

இரண்டு சாரியிலும் வீடுகள் நிறைந்த தெரு அது. அன்று ஒரு நல்ல முகூர்த்த தினமாகையால், இரண்டு மூன்று வீடுகளில் மாவிலைத் தோரணமும் வாழைமாமும் கட்டப்பட்டிருந்தன.

சூரி தன் கையிலிருந்த அந்தப் பழைய கடிதத்தை மீண்டுமொருமுறை பார்த்துக் கொண்டான். மிஸஸ் ரத்னத்தின் கணவனது விலாசத்தை இன்னொருதரம் படித்துக் கொண்டான்.

வேதசிகாமணியின் வீட்டு எண் 47 என்று காணப் பட்டது.

அவன் நின்றிருந்தது தெருவின் மேற்குப் புறத்து முனை. இடது கைப்பக்கம் இருந்த வீட்டில் 1 என்ற இலக்கமும் வலது பக்கம் இருந்த ஷாப்பில் 90 என்ற இலக்கமும் இருந்தன. அப்படியானால் 47வது எண்ணுள்ள வீடு அந்தத் தெருவின் கிழக்குக் கோடியில்தான் இருக்க வேண்டும். திடு திப்பென்று அங்கே போய்விடாமல், சற்றுத் தள்ளி நின்று அதன் சுற்றுச் சூழ்நிலைகளை அறிந்து கொள்ள சூரி விரும்பியதாலேயே, இப்படிக் கணக்கிட வேண்டியதாயிற்று.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

தெருக்கோடியில் உள்ள ஒரு வீட்டில் வருவோரும் போவோருமாக இருந்தனர். வாசல் அலங்காரம் அங்கே ஒரு திருமணம் நடைபெற்றுக் கொண்டிருப்பதைத் தெள்ளெனக் காட்டியது. ரொம்ப ஏழை பாழையாகவும் இல்லாமல் ரொம்பப் பணக்காரர்களாயும் இல்லாமல் சுமாரான நிலையில் இருப்பவர்கள் நடத்துகின்ற கல்யாணம் என்பதை ஊகித்துக் கொண்டான் சூரி.

எப்போதுமே கவர்ச்சியான, பளபளப்போ மடிப்போ கலையாத ஆடை அணிகிறவனாதலாலும், தோற்றத்திலேயே ஒரு கம்பீரம் கொண்டவனாகையாலும் எந்த இடத்திலும் அவனுக்கு வரவேற்பு உண்டு. அந்த வழக்கப்படி இந்தக் கல்யாண வீட்டிலும் அவள் நுழையு முன்பே உபசாரம் பலமாகக் கிடைத்தது. சந்தனத்தையும் தாம்பூலத்தையும் நீட்டுகிறவர்களும், "காப்பி டிபன் சாப்பிடலாம், வாருங்கள்," என்று அழைப்பவர்களும் அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். இன்முறுவலுடன் அவற்றை மறுதளித்துவிட்டு, கல்யாணத்தைக் கவனிப்பதில் ஈடுபட்டான் சூரி. நாதசுரம் காதைப் பிய்த்தெடுத்தது.

நடுத்தரக் குடும்பத்துத் திருமணமாதலால், கூட்டமும் நெரிசலும் மிக அதிகமாக இருந்தன. நடையில் போட்டிருந்த ஒரு பெஞ்சில் உட்கார்ந்திருந்த சூரி, நேர் எதிர் வீடுதான் வேதசிகாமணியினுடையது என்று கண்டு கொண்டான். ஆனால் அது பூட்டப்பட்டு இருக்கவே, சிறிது ஏமாற்றமடைந்தவனாகப் பார்வையைக் கல்யாண வீட்டினுள் திருப்பினான். காலை நேரம். எட்டு மணிக்குள் தாலி கட்ட வேண்டுமென்று அவசரம் போலும். புயல் வேகத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தன காரியங்கள்.

மணப் பெண்ணின் களைப்பையும், மணப் பையனின் சலிப்பையும் வேடிக்கை பார்த்தபடி உட்கார்ந் திருந்த சூரி, நாதசுரக்காரனின் வாசிப்புக்குத் தன்னை யறியாமலே தாளம் போட முயன்றான். ஆனால் வாசிபபு

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

மகா மட்டமாயும், தாள முடியாத அபசுரத்துடனும் இருந்ததால், எந்தவகைத் தாளத்துக்கும் கட்டுப்பட மறுத்தது. ஜாலராப் பையன் தப்பும் தவறுமாகத் தாளம் போட்டான்.

இஸ் என்று பெருமூச்சுடன் ஒரு சந்தனப் பொட்டுக்காரர் சூரியின் பக்கத்தில் வந்தமர்ந்து, ஜரிகை விசிறி மடிப்பைத் துளியத்தனை பிரித்துத் தன் கழுத்துக்கு விசிறிக் கொண்டார். "அந்த எதிர் வீட்டுப் பாவி ஏமாற்றியிராவிட்டால் வசதியாக நடத்தியிருக்கலாம்," என்று அவர் திட்டுவது சூரியின் காதில் விழுந்தது.

மிஸஸ் ரத்னத்தின் கணவனைத்தான் அவர் குறிப்பிடுகிறார் என்று புரிந்துகொண்ட பின்னர் சூரியினால் சும்மா இருக்க முடியவில்லை. "என்ன செய்தார் அப்படி?" என்று ஆர்வமற்றது போன்ற குரலில் விசாரித்தான்.

"எனக்கென்ன தெரியும்? பெண்ணுக்குத் தகப்பனார் சொன்னதைச் சொல்கிறேன்" என்றார் மற்றவர், விசிறி மடிப்பை மேலும் சிறிதளவு பிரித்தபடி "பாருங்களேன் பின்னே? அந்த எதிர் வீட்டு வேதசிகாமணியை நம்பித்தான் இந்த வீட்டிலே கல்யாணம் வைத்துக் கொண்டாராம் மனிதர், பாவம்."

"ஏன்? பண உதவி ஏதாவது செய்கிறேன் என்று சொல்லியிருந்தாரோ?"

"அதெல்லாம் இல்லை, பிள்ளை வீட்டுக்காரர்கள் தங்குவதற்காக இவர் இடம் கேட்டிருந்தார். அந்த வேதசிகாமணி ஒண்டிக்கட்டை ஆள். வீடு மொத்தமும் சும்மாதான் இருக்கிறது. அதனால்தான் இவரும் கேட்டார். சரி, தருகிறேன் என்று சொன்னதை நம்பி இந்த வீட்டிலேயே கல்யாணத்தை வைத்துக் கொண்டார்."

"இப்போது தரமாட்டேன் என்கிறாரா?" என்று சூரி கேட்டான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"சொல்லிவிடுவாரா என்ன? தைரியமில்லாத கோழைப்பயல், எங்கேயோ போய் ஒளிந்து கொண்டான். சார்! ஒரு வாரம், பத்து நாளாய்த் தலையே காட்டவில்லை ஆசாமி! அதற்கு மேலே எங்கே போய் எப்படி இடம் பிடிப்பது? பாவம் இந்த ஆள். இத்தனையூண்டு இடத்துக் குள்ளேயே பெண் வீட்டுக்காரர்கள், பிள்ளை வீட்டுக் காரர்கள் எல்லோரையும் வைத்துக்கொண்டு கல்யாணம் நடத்துகிறார். இந்தக் காலத்தில் எதுடா ரொம்ப மோசமாய்ப் போச்சு என்று கேட்டால், வாக்குதான் ..."

"அதென்ன, அப்படி ஏமாற்றிவிட்டார்?" என்று சூரி மேலும் விசாரித்தான்.

"யார் கண்டது? கடவுளுக்குத்தான் வெளிச்சம்! அந்த வேதசிகாமணியின் பெண்டாட்டி மதறாசிலே இருக்கிறாளாம். அங்கே அவளைக் கொலை பண்ணி விட்டானாம் எவனோ. இந்த வேதசிகாமணியேதான் அதைப் பண்ணினானோ என்னவோ அதுவும் தெரியாது. போலீஸ்காரங்க வேறே தேடறாங்க. எப்படியோ போகட்டும். நான் என்ன சொல்கிறேன் என்றால், மனுஷனுக்குக் கண் இரண்டு இருக்கலாம், காது இரண்டு இருக்கலாம், நாக்குமட்டும் ஒன்றுதான் இருக்கணும் ..."

விசிறி மடிப்பு என்னவோ சொல்லிக்கொண்டே போனார். சூரிக்கு அதிலே அக்கறை பிறக்கவில்லை. ஒரு வாரம், பத்து நாளாய் அந்த வேதசிகாமணி தலைமறைவா யிருக்கிறார் என்ற தகவலில் மட்டுமே அவன் சிந்தனை சென்றது.

'முதல் நம்பர் முட்டாள் நான்!' என்று அவன் தன் தலையில் தானே ஒரு குட்டுக் குட்டிக் கொண்டான். அன்றொரு நாள் அம்பிகாவை விசாரணை செய்து கொண்டிருந்த போலீஸ் அதிகாரி பாதியில் திடீரென்று போனது ஏன்? இந்த வேதசிகாமணியின் திடீர்த்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

தலைமறைவைக் கேள்விப்பட்டதுதான் காரணமா யிருக்கும். அன்று முதல் போலீசின் சந்தேகம் இவர் மீது விழுந்திருக்கிறது. தேடிக் கொண்டிருக்கிறார்கள். வேத சிகாமணிக்கும் மூக்கில் வியர்த்து விட்டது. ஒளிந்து கொண்டிருக்கிறார்.

வேதசிகாமணி தலைமறைவாக இருக்க இருக்க, அவருடைய கழுத்துக்குச் சுருக்கு இறுகத்தான் இறுகுகிறது. அதே சமயம், அவர் தலைமறைவாக இருக்கிற வரையில் அம்பிகாவுக்கு ஆபத்து ஏற்படும் என்று பயப்படத் தேவை யில்லை. வேதசிகாமணி ஒளிந்திருக்கிற வரையில் அம்பிகா மீது போலீஸ் கண் திரும்பாது. ஆகவே அவள் அச்சமற்று இருக்கலாம்...

திடீரென்று சூரியின் எண்ணங்கள் கலைந்தன. நாதசுரக்காரன், ஒரு பிடியை மகா அபசுரமாய்க் கீச்சிட்டதுதான் காரணம். செவியில் நாராசமாய்ப் பாய்ந்த வேதனை தாங்காமல், அந்த மேளக்காரர்களைக் கோபத்துடன் பார்த்தான் சூரி.

திடுக்கிடும் உண்மையொன்று புலப்பட்டது. கலையுலகத்தில் வெகு காலமாகப் பழக்கப்பட்டிருந்ததால், வேறு எவர் கண்ணும் கண்டுபிடிக்க முடியாத விஷயத்தை அவன் கண்கள் கண்டன.

நாதசுர கோஷ்டியில் இருந்த ஒருவரேனும் உண்மையான நாதசுர கலைஞரல்ல! மேளத்தைத் தொழிலாகக் கொண்டவர் ஒருவர்கூட அதில் இல்லை!

அனைவரும் வேடக்காரர்கள்!

படபடவென்று உள்ளம் அடித்துக் கொண்டாலும் கவனிக்காத மாதிரி அவர்களைக் கவனித்தான் சூரி.

அந்த மேளக்காரர்களுடைய பார்வை எதிர் வீட்டின் மீது — வேதசிகாமணியின் வீட்டின் மீது — பதிந் திருந்தது. அங்கே எவருடைய வரவையோ அவர்கள் எதிர் பார்த்துக்கொண்டிருந்தார்கள். எவருடைய வரவையோ

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

என்ன, வேதசிகாமணியின் வரவைத்தான் எதிர்பார்த்துக் கொண்டு காத்திருந்தார்கள். ரகசியப் போலீஸ் பிரிவைச் சேர்ந்தவர்கள் அவர்கள். தவுலைக் கண்டபடி தட்டிக் கொண்டிருந்த ஆசாமி, நாதசுரத்தைக் கர்ண கடூரமாய் வாசித்துக்கொண்டிருந்த ஆளிடம் காதோடு ஏதோ சொன்னான். அவன் ஜாலராப் பையனிடம் என்னவோ சாடை காட்டினான்.

எந்த நிமிடத்திலும் ஏதோ நடக்கப் போகிறதென்ற வெடிமருந்து நிலை அந்தச் சின்னஞ்சிறு நடையில் நிலவியது.

சூரி ஆவலுடன் காத்திருந்தான்.

11

சில நிமிடங்களுக்கு உலகத்தின் சுழற்சியே நின்று விட்ட மாதிரி இருந்தது சூரிக்கு. நாதசுர கோஷ்டியையும் எதிர் வீட்டையும் மாறி மாறிப் பரபரப்புடன் பார்த்த வாறிருந்தன அவன் கண்கள்.

மிஸஸ் ரத்னத்தின் கணவனான வேதசிகாமணி யின் வருகைக்காகவே இந்த ரகசியப் போலீஸ் காத்திருக்கிறது என்பது அவனுக்குத் தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது. வேதசிகாமணி கட்டாயம் இப்போது வருவார் என்று இவர்கள் எதனால் எதிர்பார்க்கிறார்கள்? கல்யாண வீட்டாருக்குத் தன் இல்லத்தில் இடம் கொடுப்பதாகச் சொல்லியிருந்தாராம். அந்த வாக்கைக் காப்பாற்றுவதற் காகவா வருவார்? உயிருக்கு அபாயம் ஏற்பட்டாலும் பரவாயில்லை, கொடுத்த வாக்கை நிறைவேற்ற வேண்டும் என்று கருதக் கூடிய அளவுக்கு அந்த வேதசிகாமணி நல்ல மனிதரா?

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"சந்தனம் எடுத்துக் கொள்ளுங்கள்," என்று வெள்ளிப் பேலாவைச் சூரியின் முன் நீட்டினார், கல்யாணப் பெண்ணின் அப்பா.

சூரி இரண்டு விரலைத் தோய்த்துக்கொண்டே, "பாவம், இடம் போதாமல் ரொம்பக் கஷ்டப்படுகிறீர்கள் போலிருக்கிறது," என்றான் அனுதாபத்துடன்.

ஒரு விநாடி அவனை வியப்புடன் பார்த்துவிட்டு, "ஆமாம்," என்றார் அவர் தடுமாற்றத்துடன். சூரியை ஒரு புது மனிதன் என்று அவர் கண்டு கொண்டு விட்டாரென்பது அவருடைய பார்வையிலும் சுருக்கமான பதிலிலும் தெரிந்தது.

சூரி வேண்டுமென்றே, "கேள்விப்பட்டேன். எதிர் வீட்டு வேதசிகாமணி உங்களுக்கு உதவி செய்வதாக வாக்களித்துவிட்டு, கடைசி நிமிடத்தில் காலைவாரி விட்டு விட்டாராமே?" என்றான்.

கண்ணிமைக்கும் நேரத்திற்குள் அந்த மனிதரின் பார்வை மேளக் குழுவின் பக்கம் பாய்ந்துவிட்டுத் திரும்பியது.

அந்த மின்வெட்டுக் காலத்துக்குள் சூரி அவரைப் புரிந்துகொண்டு விட்டான். வேதசிகாமணியைப் பற்றிப் பிரஸ்தாபித்ததும் நாதசுர கோஷ்டியை அவர் ஏன் பார்க்க வேண்டும்? அவர் கண்களில் ஏன் அந்தத் திடீர் மிரட்சியும் பீதியும் ஏற்படவேண்டும்? அப்படியானால் வேதசிகாமணியைப் போலீஸ் தேடுகிறது என்பதை இந்தக் கல்யாணப் பெண்ணின் தந்தையும் அறிந்திருக்கிறார்.

"நீங்கள் மட்டுமல்ல. வேதசிகாமணிக்காக வேறு பலரும் காத்திருப்பதாகத் தெரிகிறது," என்றபடியே சூரி தானும் அந்த நாதசுர கோஷ்டியைப் பார்த்தான், பொருட் செறிவுடன்.

கல்யாண வீட்டுக்காரர் அசமஞ்சமல்ல. குறிப்பைப் புரிந்து கொண்டார். இரண்டு பேருக்கும்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

பொதுவான ரகசியம் இருப்பதை உணர்ந்து, அதன் விளைவாக ஒருவகை நட்புப் பூப்பதைப் புரிந்து கொண்டார்.

உள்ளேயிருந்து, "கெட்டி மேளம்! கெட்டி மேளம்!" என்று யாரோ குரல் கொடுத்ததால், மேளக் கோஷ்டியின் வாசிப்பு முன்னைவிடப் பல மடங்கு கர்ண கடூரமாக வலுத்தது. ஆகவே வேதசிகாமணியைப் பற்றி இருவரும் பேசிக் கொண்டது வேறு யார் காதிலும் விழவில்லை; கவனத்திலும் படவில்லை.

மணப் பெண்ணின் தந்தை, மற்றவர்கள் காதில் விழும் படியாக இரைந்து, "சார்! கொஞ்சம் இப்படி வாசற் பக்கம் வாருங்கள். அந்த இலைக் கட்டு வாங்கப்போன ஆளைக் காணவேயில்லை. சற்று நீங்கள்தான் பாருங்களேன்," என்று கவலைப்படுகிறவர் போலப் பேசி, தெருப் பக்கம் அழைத்துப் போனார்.

"யார், அந்தச் சோம்பேறியா? அவனைப் போய் அனுப்பினீர்களே? தெருக்கோடியில் சிகரெட் பிடித்துக் கொண்டு நின்றிருப்பான்," என்று தானும் இரைந்தே பேசியபடி அவரைப் பின் தொடர்ந்து வாசலுக்குச் சென்றான் சூரி.

இரண்டு வீடு தள்ளிச் சென்ற பிறகு, அவர் நின்று சூரியை ஏற இறங்கப் பார்த்தார். பிறகு, "வேதசிகாமணிக்கு வேண்டியவரா நீங்கள்?" என்று விசாரித்தார், சந்தேகம் நிறைந்த குரலில்.

அந்த ஐயத்தை அகற்றும் வகையில் ஒரு விரிந்த புன்னகையை வெளிப்படுத்தினான் சூரி "அவருக்கு என்னைத் தெரியாது. ஆனால் அவரைப் போலீசிலிருந்து காப்பாற்றவே நான் சென்னையிலிருந்து வந்திருக்கிறேன். அவருக்கு வேண்டிய ஒருவர் என்னை அனுப்பியிருக் கிறார்," என்றான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"வீடு மொத்தமும் வேதசிகாமணியைத் திட்டிக் கொண்டிருக்கிறது, சமயத்தில் உதவாமல் போய்விட்டா ரென்று. என் ஒருத்தனுக்குத்தான் தெரியும் அவர் எப்படிப் பட்ட அபாயத்தில் இருக்கிறார் என்பது," என்றார் கல்யாண வீட்டுக்காரர். கவலையுடன் அவர் முகத்தைச் சுளித்த சமயம், சுறுப்புக் குடுமிக்குக் கீழே இருந்த வெள்ளைக் கடுக்கன் மினுமினுத்தது.

சூரி அவரை மேலும் துருவும் நோக்கத்துடன், "அவரைப் போலீசார் தேடுவது ஏன் என்று உங்களுக்குத் தெரியுமில்லையா?" என்றான்.

"நான்றாய்த் தெரியும். அதைக் காட்டிலும் அபத்தம் கிடையாது. ஈ எறும்புக்குத் தீங்கு நினைக்காதவர் சார், வேதசிகாமணி. அவராவது தன் பெண்டாட்டியைக் கொலை செய்வதாவது?"

"நாதசுரக்காரர்கள்...."

"ரகசியப் போலீஸ். அதுவும் தெரியும். நான் அமர்த்திய நாதசுரம் வேறு. அவர்கள் தங்களை அனுப்பியதாக இவர்கள் சொன்னதும் சந்தேகம் ஏற்பட்டு விட்டது. அதனால்தான் வேதசிகாமணியை வெளியே வராதீர்கள் என்று எச்சரிக்கை பண்ணி, என் மனைவிக்கும் கூடத் தெரியாமல், கொல்லைப் பக்கத்து அறையில் உட்காரச் சொல்லியிருக்கிறேன்..."

சூரியின் உள்ளம் விசுக்கென்று துள்ளியது. ஆனால் தனது வியப்பையோ மகிழ்ச்சியையோ அவ்வளவு வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளக் கூடாதென்று தீர்மானித்தான். இந்த மனிதர் எதையும் மோப்பம் பிடிக்கக் கூடிய எச்சரிக்கைக்காரராக இருக்கிறார். அதற்கேற்ற எச்சரிக்கையுடன், இவருடைய சந்தேகத்தைத் துளியும் கிளறிவிடாத படி நடந்து கொள்ளவேண்டும்.

வேதசிகாமணி கல்யாண வீட்டுக்குள்ளேயே ஒளிந்திருப்பது முன்பே தனக்குத் தெரிந்த சமாசாரம்தான்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

என்பது போல, "ஆனால், இந்தப் போலீஸ் கழுகுகள் வட்ட மடிக்கிற வட்டாரத்தில் அவர் ஒரு நிமிடமும் தங்கக் கூடாது. தங்கத் தங்க ஆபத்துதான்," என்றான்.

கல்யாண வீட்டுக்காரரும் கவலையுடன், "அதுதான் நானும் பார்க்கிறேன். வீட்டுக்குள் வருவோர்களையும் வெளியே போகிறவர்களையும் அவர்கள் கண்காணித்துக் கொண்டேயிருக்கிறார்கள். அவர்கள் கவனம் கொஞ்சமாவது திரும்பினால் அல்லவா வேதசிகாமணியை வெளியே அழைத்துப் போகலாம்?" என்றார்.

"சரி, வேதசிகாமணியை நான் பார்த்து ஏதாவது வழி பண்ணுகிறேன், வாருங்கள். அதிக நேரம் இங்கே நின்று பேசிக் கொண்டிருப்பதே சந்தேகத்தை ஏற்படுத்தும்," என்று சூரி கூறவே இருவரும் வீட்டுக்குள் திரும்பினார்கள்.

"அடாடாடா! சுத்த மோசம் சார் நீங்கள்! இலைக் கட்டை வாங்கி வந்து அவன் எப்படவோ கொல்லை ரூமில் கொண்டுவந்து போட்டு விட்டானாம். அதைக் கவனிக்காமல்...." என்று ஒருவரையொருவர் குறை சொல்லிக் கொண்டே வீட்டின் பின் புறம் சென்ற அந்த இருவர் மீதும் எவருடைய சந்தேகமும் விழவில்லை.

"அதோ அந்த அறைதான்," என்று கிணற்றுக்குப் பக்கத்திலிருந்த ஒரு சிறு அறையைச் சுட்டிக் காட்டிவிட்டு, மணப்பெண்ணின் தகப்பனார் திரும்பினார்.

சூரி கிணற்றில் தண்ணீர் இழுக்கிறமாதிரி சிறிது நேரம் போக்குக் காட்டிக் கொண்டிருந்தபின் விருட்டென்று அந்த அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டான்.

"யார்? யார்? யாரது?" என்று பதறினார் வேத சிகாமணி. முடங்கி உட்கார்ந்திருந்தவர் திடுக்கிட்டு எழுந்து நின்று கொண்டார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

நிதானத்துடன் சூரி அவரை ஆராய்ந்தான்.

உண்மையில் நாற்பத்தைந்து வயதுதான் இருக்கும். ஆனால் தொண்ணூறு வயதுக் கிழவராகக் காட்சி தந்தார். பஞ்சைப் பிய்த்துப்போட்ட மாதிரி இங்குமங்கும் வழுக்கைத் தலையில் சில நரை மயிர்கள் குத்துக் குத்தாய்க் கிடந்தன. மூஞ்சுறு போலச் சிறிய உடம்பு. ஒட்டிய கன்னங்கள்.

சூரி ஆச்சரியப்பட்டுப் போனான். மிஸஸ் ரத்னத்தின் கணவராக அவர் நடத்திய குடும்ப வாழ்க்கையைப் பற்றி போலீசாரிடம் சொல்லப்பட்ட விஷயங்கள் அவனுக்கும் காதில் விழுந்திருந்தன. பேய் பிசாசு, மாந்திரீகம் ஆகியவற்றில் ஈடுபாடுகொண்ட பயங்கர மனிதராக இவர் தெரியவில்லையே? நேரம் காலம் பாராமல் சுடுகாட்டுக்குப் போய்விட்டு வீடு திரும்புகிற துணிச்சல்காரராகத் தோன்றவில்லையே? அதெல்லாம் பழங் கதையாய்ப் போய்விட்டன போலும். போலீசால் வேட்டையாடப்பட்டு ஒளிந்து திரிந்து தலை மறைவாக வாழுகிற மனிதராக, ஓநாய்களைக் கண்டு நடுங்கிப்போன முயல் குட்டிபோல, மெய் விதிர்ப்புடன் ஒரு மூலையில் ஒடுங்கியிருந்தார் இவர்.

"போலீஸ்காரர்களிடமிருந்து உங்களைத் தப்ப வைத்து மதறாஸுக்கு அழைத்துப் போவதற்காக நான் வந்திருக்கிறேன்," என்று சூரி தெரிவித்துக் கொண்டான், அவர் முன்னிலையில் உட்கார்ந்ததும்.

"நீங்கள் யாரென்று தெரியவில்லை. இருந்தாலும் உங்களைக் காலை பிடித்துக்கொண்டு கெஞ்சுகிறேன். எப்படியாவது இந்த நாகத்திலிருந்து என்னை அழைத்துப் போய் விடுங்கள்," என்றார் வேதசிகாமணி.

"கொலைகாரர்களுக்கு மன அமைதி கிடைப்பது கஷ்டம்தான்," என்று சூரி அழுத்தமாகக் கூறினான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"ஐயையோ! நானா கொலைகாரன்? தாலி கட்டின பெண்சாதியைக் கொலை செய்கிற அளவுக்குப் பாவி என்றா என்னைச் சொல்கிறீர்கள்? முரடன், கோபக்காரன், பெண்டாட்டியைப் பிடிக்காதவன், பில்லி சூன்யப் பழக்கங்கள் உள்ளவன் — எல்லாம் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் ரத்னத்தை நான் கொலை பண்ணவில்லை. அவளைப் பார்த்தே எத்தனையோ வருடமாகிறது." என்று தேம்பித் தேம்பி அழுதபடி சொன்னார் வேதசிகாமணி.

"பின்னே ஏன் தலைமறைவாய் இருக்கிறீர்கள்?"

"அதை அப்புறம் சொல்கிறேன். முதலில் என்னை வெளியே அழைத்துக்கொண்டு போங்கள்."

"உங்கள் வீட்டுச் சாவி வைத்திருக்கிறீர்களா?" என்று சூரி கேட்டான்.

"இதோ," என்று வேட்டி முடிச்சை அவிழ்த்துத் தந்தார் வேதசிகாமணி.

வெளியே நாதசுர கோஷ்டி பிய்த்து வாங்கிக் கொண்டிருந்தது.

"இன்னும் கொஞ்ச நேரத்தில் வாசலில் ஓர் அமளி ஏற்படும். பரபரப்பாய் எல்லோரும் ஓடுவார்கள். அதுதான் உமக்குச் சந்தர்ப்பம். கூட்டத்தோடு கூட்டமாய் வெளியேறி, தெருக் கோடிக்கு வந்துவிட வேண்டும். டாக்ஸியுடன் நான் காத்திருப்பேன்," என்று கூறிவிட்டு, அவர் நன்றியுடன் கைகூப்பித் தடுமாறுவதைக் கூடச் சட்டை பண்ணாமல் வேகமாய் வெளியேறினான் சூரி.

ஒத்து ஊதிக் கொண்டிருந்தவர் சற்று நிறுத்தி, தெருவில் நடைபெறும் சண்டையை வேடிக்கை பார்த்தார். ஜாலரா பையன், ஜாலராவை வைத்துவிட்டு வாசலுக்கே போய்விட்டான். தவில்காரர், "குறப்பயல்கள் என்பது சரியாயிருக்கிறது, பாருங்களேன்!" என்று எழுந்து சென்றவர், தவுல் அடிக்கும் குச்சியை ஓங்கி, "போங்கடா

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அப்பாலே! கல்யாண வீடுதான் கிடைச்சுதா உங்க சண்டைக்கு?" என்று விரட்டினார்.

ஆனால் அதற்குள் தெருவில் அந்த லம்பாடிகளின் கூட்டம் இரண்டு கட்சியாகப் பிரிந்து உலகப்போரையே தொடங்கிவிட்டது. அதிலும் இரண்டு தரப்புப் பெண்களும் போட்ட கூச்சல் அக்கம் பக்கம் மொத்தத்தையும் கூட்டியது.

தெரு முனையில் டாக்ஸியில் காத்திருந்த சூரி திருப்தியுடன் சிரித்துக்கொண்டான். அவன் செய்த ஏற்பாடு நன்றாக நிறைவேறுகிறதே!

நாதசுர கோஷ்டியைச் சேர்ந்த அனைவரும் இப்போது வெளியே வந்து விட்டார்கள். சண்டை எதிலே ஆரம்பித்தது என்பதை விளங்கிக்கொள்ள முனைந்தார் தவில்காரர்.

குறவர்களிலொருவன், வேதசிகாமணியின் வீட்டைச் சுட்டிக்காட்டி, "மெத்தை வழியா ஓர் ஆள் உள்ளே குதிச்சதை பார்த்தேன்னு சொன்னேன், இவன்கிட்டே. போடா பொட்டைங்கறான்," என்றான்.

மற்றவன் அதற்குள், "இவன் எப்பவுமே இப்படித் தான் சாமி. பட்டைச் சாராயம் போட்டுட்டு எதினாச்சும் பினாத்துவான்," என்றான்.

"நானா பினாத்துறேன்? இதோ பார் சாமி. அந்த ஆள் மாடிக்குத் தாவறப்போ இந்தச் சாவியைக் கீழே போட்டுடடு ஓடினான்," என்று முதல் ஆள் ஒரு சாவியைக் காட்டினான்.

அதற்கெல்லாம் தேவை இருக்கவில்லை. வேத சிகாமணியின் வீட்டுக்குள் ஓர் ஆள் ஏறிக் குதித்தான் என்று கேள்விப்பட்டதுமே, நாதசுர கோஷ்டியில் பரபரப்பு ஏற்பட்டு, வினாடிக்கு வினாடி உச்சத்துக்கு ஏறிக் கொண்டிருந்தது. நாதசுரம் வாசிப்பவர் சாவியைப் பறித்துக் கொண்டு எதிர் வீட்டுக்குப் பாய, குறவர் கூட்டமும்,

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கல்யாண வீட்டுக் கூட்டமும் அவரைப் பின்தொடர்ந்து ஓடின.

அந்தச் சந்தடியின் நடுவே, திருமண வீட்டின் பின்புறத்திலிருந்து ஒரு பயந்த உருவம் நழுவி வெளியேறுவதை எவரும் கவனிக்கவில்லை.

"தாத்தா! ஊசோ தாத்தா, இதோ அழைத்து வந்து விட்டேன்," என்று குரல் கொடுத்தான் சூரி.

"பலே! பலே!" என்ற பாராட்டுக் குரல் பதிலாக வந்தது.

வேதசிகாமணி கண்ணைத் தேய்த்து விட்டுக் கொண்டார். என்ன முயன்றும் அந்த இருளில் அவரால் ஒன்றையும் காணக்கூடவில்லை. "யார் இங்கே இருப்பது? ஏன் இங்கே என்னை அழைத்து வந்தீர்கள்?" என்று கோபமாக வினவினார், சூரி இருக்குமிடத்தை நோக்கி.

"அதை அவன் சொல்லணுமா? உனக்கே தெரிந்ததுதானே? கழுத்துச் சுருக்கிலிருந்து உன்னைக் காப்பாற்றத்தான் அழைத்து வந்தான்," என்று குரல் பதிலிறுத்தது

உடம்பெங்கும் முந்து முத்தாக வியர்ப்பதை உணர்ந்தார் வேதசிகாமணி. இனம் தெரியாத பீதியொன்று அவரைக் காலோடு தலை ஆட்கொண்டது. "வேண்டாம், என்னைக் காப்பாற்ற வேண்டாம். வெளியே விட்டு விடுங்கள். போய விடுகிறேன். போலீசிடம் எனக்கொன்றும் பயம் இல்லை," என்றார்.

"கெக்கெக்கெக்கே!" என்று இருட்டுக் குரல் ஆரவாரமாக நகைத்தது. வேதசிகாமணிக்கு, நரம்புகளைப் பிடுங்கி வெளியே இழுப்பது போலும், ரத்தம் உறைவது போலுமிருந்தது. எந்தச் சுடுகாட்டிலும், எந்த நேரத்திலும், ஏற்படாதிராத அச்சம் இப்போது அவரை மெய்நடுங்க வைத்தது. நல்லதுக்கு அழைத்து வரப்பட்டோமா, அல்லது

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

திய நோக்கத்துடனா? இவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு உண்மையாய்ப் பதிலளிப்பதா அல்லது மறைப்பதா?

"வேதசிகாமணி, போலீசிடம் பயப்படாதவன் ஏனப்பா ஒளிந்து திரிகிறாய்?" என்று இருட்டுக் குரல் குடைந்தது மீண்டும்.

வேதசிகாமணி குழப்பத்துடன், "என்மேல்.... அவர்கள் சந்தேகப்பட... காரணம் இருக்கிறது.... அவள்... ரத்னம் கொலையான தினத்தில், அந்த நேரத்தில் நான் வேறிடத்தில் இருந்தேன்... ஆனால் அது எந்த இடமென்று சொல்ல முடியாதிருக்கிறது..." என்றார்.

"கெக்கெக்கெக்கே!" என்று மறுபடியும் அந்தக் கோர நகைப்பு எதிரொலித்தது இருட்டுக்குள்ளிருந்து. "அலிபி இல்லாமல் மாட்டிக் கொண்டிருக்கிறாயா, ராஜா! பலே! பலே! என்னிடமாவது சொல்லு, கொலை நடந்த நேரத்தில் எங்கே இருந்தாய் என்கிற விவரத்தை!"

வேதசிகாமணி மௌனமாயிருந்தார்.

"சொல்லு!" என்று உறுமியது குரல்.

"ஊசோ தாத்தா! இவன் சொன்னாலென்ன சொல்லாவிட்டாலென்ன? விடுங்கள்," என்றான் சூரி.

"சொல்லு!" என்று மறுபடி குரல் பல்லைக் கடித்தது.

"மாட்டேன்! முடியாது! என்னை இங்கிருந்து அனுப்பி விடுங்கள்!"

"அனுப்புவதற்காக உன்னை இங்கே அழைத்து வர வில்லையப்பா," என்று குரல் பதிலளிக்கும்போதே தன் தலையை யாரோ தொடுவது போலத் தோன்றியது வேதசிகாமணிக்கு. தொட்டது அமானுஷ்யமான கைபோல இருந்ததால், அவருக்குத் தேகமெங்கும் மயிர்க் கால்கள் குத்திட்டு நின்றன.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

குரல் தொடர்ந்தது: "நீ போலீஸ் பிடியில் அகப்பட்டால், குற்றவாளி நீயல்ல என்பதைக் கண்டுவிடுவார்கள். அடுத்தாற்போல் அம்பிகாவைப் பிடித்துவிடுவார்கள். நீ இப்படித் தலைமறைவாக இருக்கிற வரையில்தான் அம்பிகாவுக்கு ஆபத்து இல்லை."

வேதசிகாமணி குறுக்கிட்டு, "அம்பிகாவா? யாரது அம்பிகா?" என்றார்.

"அவசியம் வருகிறபோது சொல்கிறேன்," என்றது குரல். "உன் பெண்சாதி ரத்னத்தை அம்பிகா கொலை பண்ணியிருக்கலாம் என்று போலீஸ்காரர்களுக்கு ஒரு சந்தேகம். அவளைப் பிடித்து அடைத்துவிட்டால், எங்களுடைய நோக்கமே கெட்டுவிடும். அம்பிகாவின் மூலமாக நாங்கள் செய்யவேண்டிய காரியம் இன்னொன்று இருக்கிறது. அதுவரை அவள் வெளியே உலவ வேண்டியது அவசியம். அவள் வெளியே இருக்க வேண்டுமானால், நீ தலைமறைவாக — போலீஸாரின் சந்தேகத்தை உன்மீதே போட்டுக் கொள்கிறவனாக — இருந்தாக வேண்டும். அதற்கு இதைக் காட்டிலும் பொருத்தமான இடம் கிடையாது!"

வேதசிகாமணி அலறினார்: "இந்த இருட்டு நரகத்திலா? எத்தனை காலம்? என்று வரையில்?"

ரத்தத்தை ஐஸ் கட்டியாக ஆக்கும் அந்த நகைப்பு மீண்டும் கேட்டது.

"காலமா? நேரமா? அதெல்லாம் வெளிச்சம், பார்வை, நடமாட்டம் முதலியன உள்ள வெளி உலகத்தில்! இந்த இருட்டு எல்லாவற்றையும் கடந்தது. இது தனி உலகம். இரவு பகல் தெரியாது. சந்திர சூரியன் கிடையாது. கடியாரம் இல்லை, மணியோசை கேட்காது. இங்கே நேரமாவது காலமாவது! முடிவில்லாத ஒரே நீண்ட பொழுதுதான்! சுவாசம் நிற்கிறவரையில் ஒரே வேளைதான்!"

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

'கெக்கெக்கெக்கே' என்று அந்த ஆந்தைச் சிரிப்புக்கு எதிரொலிபோல—

கீழேயிருந்து ஒரு குரைப்புச் சத்தம் கேட்டது. இடை விடாமல், மேல் ஸ்தாயியில் கேட்டது.

கதவைச் சாத்திப் பூட்டிக்கொண்டு சூரி தடதடவென்று கீழே இறங்கிவந்தான்.

அம்பிகா பதறித் துடித்தபடி அவனிடம் ஓடிவந்தாள். "சூரி! இது எங்கிருந்தோ என் வீட்டுக்கு வந்து விட்டது நேற்று ராத்திரி. என்னை விடவே மாட்டேன் என்கிறது. அடையாறு, கலிவரதனின் பங்களாவில் பார்த்த கிழட்டு நாய் இது!" என்றாள்.

பார்ப்பதற்கு மகா அருவருப்பாயிருந்த அந்தக் கிழட்டு நாய். தொண்டை கிழிந்து விடும்போலக் குரைத்த வாறு அவளைச் சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருந்தது.

சூரி கையிலகப்பட்ட ஒரு ஸ்கேலை எடுத்து, "சீ போ!" என்று அதை விரட்டப் பார்த்தான். உடனே அந்த நாய் மாடியை நோக்கி ஊளையிடத் தொடங்கியது.

12

கிழட்டு நாயின் குரைப்பு துளியும் நிற்கவில்லை. உயிரையே விட்டுவிடப் போகிற மாதிரி குரைத்துக் கொண்டு அம்பிகாவையே சுற்றிச் சுற்றி வந்தது. "சீ போ!" என்று சூரி அதட்டியதும் மாடிப்படிப் பக்கமாகச் சென்று மேலும் கத்தத் தொடங்கியதேயொழிய ஓயவில்லை.

தளிர் போன்ற அம்பிகாவின் மேனி அச்சத்தினால் நடுங்கியது. அவசர அவசரமாக அவள் புறப்பட்டு வந்திருக்கிறாள் என்பதை அவளுடைய கசங்கிப்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

போன சாதாரணமான புடவையும், கலைந்து போயிருந்த பின்னலும் தெரிவித்தன.

"சாயந்தரம் நாலு மணி முதல் என்னை விடமாட்டேனென்கிறது இது," எனக் கூறிய வண்ணம் அவள் சூரியின் பின்னால் பாதுகாப்புடன் பதுங்க நினைத்தவள்போல அவன் முதுகைத் தொட்டாள். தொட்டதுமே மின்சார அதிர்ச்சி ஏற்பட்ட மாதிரி இருந்தது. இன்பமான அதிர்ச்சி அல்ல; சாட்டையடி போன்ற சுளீரென்ற அதிர்ச்சி.

அவர்களுக்குள் பழக்கம் ஏற்பட்ட காலத்தில் பலமுறை சூரியுடன் நெருங்கிப் பழகியவள்தான் அவள். கையோ காலோ அவன் மீது படும்படியாக நேரிட்ட சந்தர்ப்பங்கள் பல உண்டு. ஆனால் அப்போதெல்லாம் ஒரு கிளுகிளுப்பான உணர்ச்சியையே பெற்றவள், இப்போது திடீரெனத் தன் உள்ளத்துக்குள் அருவருப்புக் கலந்ததொரு திகிலுணர்வு ஏற்படுவதை உணர்ந்தாள். மின்வெட்டும் நேரத்துக்குள் இந்த எண்ணங்கள் தோன்றி மறைந்தன வாகையால், கிழட்டு நாயின் குரைப்புதான் அவளுக்குப் பெரிதாகத் தெரிந்தது.

மாடியிலிருந்து ஓடி வந்த கலவரத்தை மறைத்துக் கொண்டு, "காலேஜிலிருந்தா வருகிறாய்?" என்று சூரி வினவினான்.

"இல்லை, காலேஜிலிருந்து வீட்டுக்குப் போய் விட்டேன். சித்தியிடம் டிப்பனும் காபியும் வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டிருந்த சமயம், வாசலில் இதன் குரைப்புக் கேட்டது. இடைவிடாமல் கேட்கவே, வாசற் கதவைத் திறந்து துரத்தப் போனேன். என்னைப் பிடித்துக்கொண்டு விட்டது. தெருவில் கொஞ்சதூரம் போனால் இது எங்காவது ஓடிவிடும் என்று நினைத்துப் புறப்பட்டேன். தெருப்பூரா துரத்திக்கொண்டே வந்தது. போகிறவர்கள் வருகிறவர்கள் என்னை வேடிக்கை பார்க்க ஆரம்பித்து விட்டார்கள். எனக்கு என்னவோ போலாகி விட்டது..."

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"அப்புறம்?"

வாள் வாளென்ற சத்தம் சிறிதும் நிற்காததால். அம்பிகா இரைந்தே பேச வேண்டியிருந்தது.

"சட்டென்று ஒரு மந்தைவெளி பஸ்ஸில் ஏறிக் கொண்டேன். கொஞ்ச நேரத்துக்கு நாயைக் காணோம். நல்ல வேளை எங்கேயோ ஓடிவிட்டதென்று நினைத்து, நிம்மதியாய்ப் பஸ் ஸ்டாண்டில் இறங்கினேன். திடீரென்று எங்கிருந்தோ வந்துவிட்டது. எனக்கே தெரியாமல் பஸ்ஸின் பின்னால் ஓடிவந்திருக்கிறது..."

சூரி திரும்பிப் பார்த்தான் எலும்பும் தோலுமாயிருந்த அந்த நாயை. வயிறு ஒட்டி, விலா எலும்புகள் புடைத்துக் கொண்டு நின்றன. மெலிந்து சுருங்கி யிருந்த நாக்கு விகாரமாய் வெளியே தொங்கிக் கொண்டிருக்க, ஒவ்வொரு முறை குரைக்கும் போதும் அதன் நீண்ட உடம்பு குலுங்கிக் குலுங்கி அடங்கியது.

"கலிவரதன் வீட்டு நாய் இது," என்று மறுபடியும் தெரிவித்தாள் அம்பிகா.

"ஆமாம். அதனால்தான் உன்னைத் துரத்துகிறது. தன் பழைய எஜமானி என்று அதற்குத் தெரிந்திருக்கிறது," என்றான் சூரி. "நீ, தேவகி. கலிவரதனைப் பற்றியும் உன்னைப் பற்றியும் இதற்குப் பல விஷயங்கள் தெரியும். அதையெல்லாம் உனக்கு நினைவு படுத்துகிறதோ என்னவோ?"

அம்பிகா மறுத்தாள் உடனேயே. "தயவு செய்து அதையெல்லாம் சொல்லாதீர்கள். அன்றைக்கு அடையாறில் என்னைப் பார்த்ததால், மறுபடி தற்செயலாக என்னைக் கண்டதும் விடமாட்டேனென்கிறது."

"இல்லை, இல்லை. நீதான் தேவகி என்பதில் இதற்குச் சந்தேகமேயில்லை. நாய்களுக்கு ஒரு தனியான, மனிதனுக்கில்லாத அபூர்வ அறிவு உண்டென்று கேள்விப் பட்டதில்லையா? அந்த அறிவுதான் இந்த நாயைத்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

தூண்டுகிறது," என்று சூரி வற்புறுத்தியதும் அம்பிகாவின் கண்கள் கலங்கின.

"வேண்டாம் சூரி, வேண்டாம். நான் அம்பிகாவாகவே இருக்கிறேன். என் தோழிகளுக்குப் பிரியமுள்ள சினேகிதியாகவும், என் சித்திக்கு அன்பான பெண்ணாகவும் உங்களுக்கு மனம் கவர்ந்த மாணவியாகவும் பணிவுடனே இருந்து விடுகிறேன். நான் தேவகி இல்லை, இல்லை. இல்லை!"

"அம்பிகா!" என்று கடுமையுடன் அவளை அடக்கி, தன் பக்கமாக ஆதுரத்துடன் அவளைச் சாய்த்துக் கொள்ள முயன்றான் சூரி. ஆனால், வெடுக்கென்று அவனிடமிருந்து தன்னைப் பறித்துக்கொண்டாள் அம்பிகா. அதைப் பொருட்படுத்தாத சூரி, "என்ன சொன்னாலும் நீ தேவகியாகத்தானிருக்க முடியும், அம்பிகா. அதை மாற்றுவது இனிமேல் முடியாது..." என்று சொல்லிக் கொண்டிருந்தவன், அந்தக் கிழட்டு நாயின் குரைப்பு முன்னைக் காட்டிலும் அதிகமாகி விட்டதைக் கண்டான்.

"இரு, இதோ ஒரு நிமிடத்தில் வருகிறேன்," என்று கூறிவிட்டு, வீட்டின் உட்புறம் சென்றான்.

அம்பிகா பரிதாபமாக முறையிடும் குரலில் அந்த நாயிடம், "போ, போ! போய்விடு! என்னை ஏன் வதைக்கிறாய்? விட்டுவிடு. நான் உனக்கு ஒரு கெடுதலும் செய்யவில்லை. உன் எஜமானி நானில்லை. அன்றைக்கு அடையாறு பங்களாவில் என்னமோ தோன்றியது. 'டைகர்' என்று பெயர் சொல்லி உன்னைக் கூப்பிட்டேன். இப்போது தோன்றவில்லை. நீ யாரோ, நான் யாரோ. போய்விடு, புண்ணியம் உண்டு. தயவு பண்ணிப் போய்விடு," என்று கையெடுத்துக் கும்பிட்டாள்.

அதற்குள் ஒரு ரொட்டித் துண்டை எடுத்துவந்து அவளிடம் கொடுத்த சூரி, "அதற்குக் கொடு," என்றான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"பயமாயிருக்கிறது," என்று தயங்கியவாறே அந்தத் துண்டத்தை நாய்க்குக் கொடுத்தாள்.

கண்மூடி கண் திறப்பதற்குள் அதன் குரைப்பு நின்றது. சோவென்று கொட்டிக்கொண்டிருந்த மழை திடுமென்று நின்றதும் ஏற்படும் நிசப்தம் அங்கே நிலவியது. அதைக் கண்டு ஆச்சரியவசப்பட்ட அம்பிகா, மறுவினாடி, "சூரி! அதைப் பாருங்கள்! பாருங்கள்!" என்று கூவினாள்.

ஏனெனில் கொஞ்சம் கொஞ்சமாய்த் தள்ளாடி, கடைசியில் உடம்பை வலித்துக்கொண்டு தரையில் விழுந்தது அந்தக் கிழ நாய்.

"ஐயையோ! செத்து விட்டதா, என்ன?" என்று அதனருகே குனிந்து நோக்கினாள் அம்பிகா. "சூரி! இதற்கு விஷமா கொடுத்தீர்கள்?"

ஆனால் சூரி அமைதியாக, "பயப்படாதே. செத்து விடவில்லை. மயக்கம்தான் கொடுத்திருக்கிறேன்," என்று கூறி, அந்த நாயை அள்ளி எடுத்துக்கொண்டான். மீண்டும் பின்புறம் சென்றுவிட்டுத் திரும்பியபோது அவன் கையில் நாய் காணப்படவில்லை.

"கொல்லைப் பக்கத்தில் கட்டிப் போட்டிருக்கிறேன். இனி அதன் தொல்லை உனக்கு இருக்காது," என்று அம்பிகாவுக்குத் தைரியம் கூறினான்.

"அதை ஒன்று செய்துவிடாதீர்கள். நான் ஹைஸ்கூலில் படித்துக் கொண்டிருந்தபோது, ஒரு நாய்க் குட்டிமீது சைக்கிள் ஏற்றிவிட்டேன். உங்களிடம்கூட முன்பு சொல்லியிருக்கிறேன்? அந்த நாய்க் குட்டி என் கண் முன்னாலேயே செத்து விட்டது. அந்த ஒரு பாவமே போதும் எனக்கு...." என்றாள் அம்பிகா.

"பயப்படாதே, இந்த நாயைப் பத்திரமாய்க் காப்பாற்றுகிறேன்."

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"போய் வருகிறேன், சூரி. என் படபடப்பு நிற்க வில்லை. மனம் திக்திக்கென்று அடித்துக்கொண்டுதான் இருக்கிறது. இங்கே நுழைந்தது முதல் ஏதோ ஒரு சக்தி என்னைப் பிடித்து ஆட்டுகிற மாதிரியும் நான் என் வசத்தில் இல்லை போலவும் தோன்றிக் கொண்டேயிருக்கிறது."

"சரிதான்! இதென்ன புதிய இடமா உனக்கு?" என்று சிரித்தான் சூரி. "இன்றைக்குத்தான் அப்படி இருக்கிறதா?"

"கொஞ்ச நாளாக அப்படித்தான்," என்று ஒப்புக் கொண்ட அம்பிகா, விரல்களால் நெற்றியை அமுக்கிக் கொண்டு தள்ளாடினாள். "சூரி.... அந்த அடையாறு சம்பவம் — மறுபிறவி நிகழ்ச்சி — அது ஏற்படுவதற்குக் கொஞ்ச காலம் முன்பு இந்த வேதனை ஆரம்பித்தது. பிறகு அதிகப்பட்டு கொண்டேயிருக்கிறது. இங்கே வர நேருகிற போது இன்னும் அதிகரிக்கிறது."

"பைத்தியம்!" என்று அவள் முதுகில் செல்லமாய்த் தட்டிக் கொடுத்தான் சூரி. பழுக்கக் காய்ச்சிய இரும்புத் துண்டம் பட்ட மாதிரி அம்பிகாவின் மேனி சிலிர்த்துக் கொள்வது தெரிந்தது. "அமைதியாயிரு, அம்பிகா. எல்லாப் பெண்களையும் போல நீயும் இருந்திருந்தாயானால், எல்லாரையும் போன்ற மன நிம்மதி உனக்குக் கிட்டியிருக்கும். நீ அலாதிப் பிறவியல்லவா? நீ தேவகி. அம்பிகா அல்ல. இறந்துபோன தேவகியே மறுபடி நீயாகப் பிறந்திருப்பதால், அந்த இரண்டு பிறப்புகளுக்கு மிடையே நடைபெறும் போராட்டத்தில் நீயும் சிக்கியிருக் கிறாய்..."

"வேண்டாம் சூரி, எனக்கு இந்த இரட்டை வாழ்க்கை வேண்டாம்," என்று முகத்தை மூடிக்கொண்டு ஒரு நாற்காலியில் விழுந்தாள் அம்பிகா.

"வேண்டும் என்பதும் வேண்டாமென்பதும் நம் கையிலா இருக்கிறது, அம்பிகா?" என்று பரிவுடன்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

பேசினான் சூரி. "கோடானு கோடி அண்டங்கள் பிரபஞ்ச வெளியில் வினாடி தப்பாமல் சுற்றிக் கொண்டிருக்கின்றன. ஆனால் ஒன்றோடொன்று மோதுவதில்லை. பாதை மாறுவதில்லை. அப்படிப்பட்ட நுண்மையில் நுண்மையான அற்புத சலனத்தை நிகழ்த்தும் மாயக்காரன் யார்? அவன்தான் உன்னையும் என்னையும் ஆட்டுவிக்கிறான். ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு நோக்கத்தை வைத்திருப்பவன் அவன். கிழட்டு நாய் குரைத்ததே, அந்தக் குரைப்பின் மூலமாக அந்த மாயக்காரனுக்கு ஒரு காரியம் ஆகவேண்டும், குரைக்க வைக்கிறான். எங்கேயோ பிறந்து எங்கேயோ வளர்ந்த நான், இந்தச் சென்னை பட்டணத்து மந்தைவெளிக் கட்டிடத்திலே ஏன் ஒரு நாடகப்பள்ளி நடத்தவேண்டும்? என் மூலம் அவனுக்கு ஒரு காரியம் ஆகவேண்டும். இப்படி, உயிருள்ள, உயிரில்லாத ஒவ்வொன்றும் ஆடுவதும் அசைவதும் பாடுவதும் பேசுவதும் அவனுடைய நோக்கமொன்றை நிறைவேற்றவே நடைபெறுகின்றன. அதேபோல் அம்பிகாவான நீ தேவகியாக ஆனதன் மூலம், ஏதோ ஒன்றை நிறைவேற்றப் போகிறாய். அது உனக்கு விதிக்கப்பட்டுவிட்ட விஷயம். நீ என்ன தலைகீழாய் நின்றாலும் அதை மாற்றுவது இயலாதது மட்டுமல்ல, அப்படி முயலுவது பாவமானது கூட..."

கரகரவென்று கண்ணீர் பெருக்கெடுத்தோடி அம்பிகாவின் கன்னங்களில் வழிந்து, மூடியிருந்த விரல்களின் இடுக்குகளில் கசிந்து மினுமினுத்தது.

"தூண்டில் முள்ளில் இருக்கும் புழுகூட அங்கே ஒரு நோக்கத்துடன்தான் வைக்கப் பட்டிருக்கிறது. மீன் பிடிப்பவனுடைய திட்டத்தை நிறைவேற்றத்தான் அது இருக்கிறது. ஆனால் அந்த நிலையில் அது படும் வேதனை அதற்கல்லவா தெரியும்? மீன பிடிப்பவன் இரக்கமற்றவன். புழுவின் துடிப்பை அவன் பொருட்படுத்தத் தேவை யில்லை. கருணைக் கடலான இறைவன் கூடவா சூரி, அப்படிப்பட்டவன்?" என்று விம்மலானாள் அவள்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"தூங்கு, தூங்கு," என்றான் சூரி அவளையே பார்த்தவாறு. "சற்று நேரம் தூங்கு, அம்பிகா. தூங்கு."

சிறிது சிறிதாக அம்பிகாவின் தேகம் தளரத் தொடங்கியது. பிரம்பு நாற்காலியில் சாய்ந்து கவிழ்ந்தாள். மெல்ல மெல்ல அவள் தேகத்தின் விறைப்புத் தளர்ந்தது. உள்ளிருந்து இயக்கிய சக்தி வெளியேறிவிட்டாற்போல், மெய்யெல்லாம் நெகிழ, இருக்கையில் சாய்ந்தாள்.

சில நிமிடங்கள் அவளையே பார்த்துக் கொண்டிருந்த சூரி மாடிக்குச் செல்லும் கதவைத் திறந்தான். வேகமாகப் படிகளில் ஏறி, "ஊசோ தாத்தா! அம்பிகா வந்திருக்கிறாள்!" என்று குரல் கொடுத்தான்.

"தெரியும்!" என்று பதில் வந்தது. அது மட்டுமல்ல. உள்ளே அடைபட்டிருந்த வேதசிகாமணி, "கதவைத் திற! என்னை வெளியே விட்டுவிடு! நான் போகிறேன்!" என்று கூவுவதும் காதில் விழுந்தது. ஆனால் சூரி அதை லட்சியம் பண்ணாமல், "ஊசோ தாத்தா! அம்பிகா தூங்க ஆரம்பித்திருக்கிறாள். தான் தேவகியாக இருப்பதைப் பற்றி வெறுப்பு ஏற்பட்டு விட்டது அவளுக்கு. அந்த வெறுப்பு அதிகப்பட்டு விட்டால் என்ன செய்வது? ஏதாவது பண்ணுங்களேன் ஊசோ தாத்தா?" என்று புலம்பினான்.

"சும்மா இரு. எனக்குத் தெரியும்," என்று எதிர்க் குரல் அவனை அடக்கியது. "அம்பிகாவின் உள்ளம் எப்போது இளகியிருக்கிறது, எப்போது இறுகியிருக்கிறது என்பது எனக்குத் தெரியும். அது இளகியிருக்கும்போது தான் விளையாடலாம். இறுகியிருக்கும்போது நெருங்கினால் ஆபத்து!"

சூரி சிறிது தயங்கினான். அதே சமயம் கீழே யாரோ வாசற் கதவைத் தட்டும் சப்தம் கேட்கவே, என்ன செய்வதென்று தெரியாத குழப்பத்துடன் கீழே திரும்பினான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"சாமி! ஐயா! வீட்டிலே யாருங்க?" என்று ஒரு பெண் குரல் கேட்டது வாசல் புறத்திலிருந்து.

நாற்காலியில் அலங்கோலமாய்க் கிடக்கும் அம்பிகாவை ஒரு தரம் பார்த்தான் சூரி. பின்னர் அவளை நாற்காலியோடு சுவர் ஓரமாக நகர்த்தினான். அந்தப் பக்கம் ஒரு திரையையும் இழுத்து மறைத்தான்.

ஹாலின் கதவுத் தாழ்ப்பாளை நீக்கி, எச்சரிக்கை யுடன் எட்டிப் பார்த்தான்.

ஒரு கிழவி — வேலைக்காரக் கிழவி அங்கே நின்றிருந்தாள்.

"அட நீங்கதானா? நான் யாரோயிருக்குமோ என்னவோன்னு பயந்துக்கிட்டே வந்தேனுங்க... என்னைத் தெரியலியா, சாமி? அடையாறு, கலிவரதன் பங்களாவிலே வேலை பார்க்கிற தோட்டக்காரி..."

"வந்து... நீ..." என்று சூரி மென்று விழுங்கினான்.

"தாயின்னு பேருங்க. மூணு வருசம் முந்தி, நீங்க கூட குடியிருக்க இடம் ஏதாச்சும் இருக்குதான்னு பார்க்கிறதுக்காகப் பங்களாவுக்கு வந்திங்களே? தோட்டத் திலே என் குடிசை, பக்கத்திலேயிருக்கிற அவுட்ஹவுஸ் இதையெல்லாம் பார்த்திட்டுப் போனீங்களே... எசமான்கூட இல்லே. நானதானே காட்டினேன்.... அப்பாலே நீங்க வரவேயில்லீங்க...

"ஓ! ஆமாம், ஆமாம்," என்று அவசரமாகக் குறுக்கிட்டுச் சொன்னான் சூரி. திரையின் பக்கமாக அவன் பார்வை ஒரு வினாடி சென்று திரும்பியது. "நினைவு இருக்கிறது... அதிருக்கட்டும். நீ எதற்கு இப்போது வந்தாய்?"

கிழிசல் முந்தானையினால் கண்ணைத் துடைத்த வாறு நிலைப்படியிலேயே உட்கார்ந்தாள் தாயி. "அந்தக்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

காலேஜ் பொண்ணு இருக்குதே... என் பழைய எசமானி... அதுக்கு ஆபத்து வந்திருக்குது, சாமி.. அது பெரிய கதைங்க... இப்ப திடுப்புனு சொன்னா உங்களுக்குப் புரியாது.. நம்ப மாட்டீங்க..."

சூரி சிரித்தான். "புரியவும் புரியும், நம்பவும் நம்பு வேன். நீ சொல்லு," என்றவன் சட்டென்று ஞாபகம் வரவே, "உன் பங்களாவிலிருந்து ஒரு நாய் வந்ததாமே, அதுகூட நீ அனுப்பியதுதானா?" என்று கேட்டான்.

"ஆமாம், சாமி. அதுக்கு எல்லா அறிவும் உண்டு. எசமானியம்மாவை பார்க்கணும்னு நான் கிளம்பினதும் அதுவும் உடனே குரைச்சுகிட்டு எனக்கு முன்னாலே போயிட்டுது. நடந்தே வந்தேன், தில்லக்கேணியிலே அந்தப் பொண்ணு வீடுவரைக்கும். அதுக்குள்ளாற அவங்க கிளம்பிட்டாங்க. அங்கேயிருந்த பெரியம்மாளண்டை விசாரிச்சுக்கிட்டு இங்கே வந்து பார்த்தால் நீங்க இருக்கிறீங்க. ஏன் சாமி, தேவகியம்மா இங்கே வந்தாங்களா? டைகரும் வந்துச்சா?"

"பாட்டி, கொஞ்சம் பொறுமையாயிருங்கள்," என்றான் சூரி. "உங்கள் எஜமானியம்மாளிடம் உங்களுக்கு ரொம்பப் பிரியம்தானே?"

"தேவகியம்மாவைச் சொல்றீங்களா சாமி?"

"தேவகியம்மாவானால் என்ன, அவர்களே மறுபிறப்பாய்ப் பிறந்து வந்திருக்கிறார்களே, இந்த அம்பிகாவானாலென்னா? பிரியமா இல்லையா, சொல்லு."

"உசிரை வேணுமானாலும் தருவேன், சாமி," என்று தாயி உறுதியளித்தாள்.

"அதுதான் எனக்கு வேண்டும். நான் சொல்லப் போவதைக் கவனமாய்க் கேள்," என்றான் சூரி.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

13

இடம்: சைனா பஜாருடன் உறவாடுகிற மாதிரி ஒட்டிக்கொண்டுள்ள பர்மா பஜார்.

"இதைப்போல வளையல் இருக்கிறதா?" என்று சர்க்கரை கேட்டான்.

"இல்லை," என்று பதில் கிடைத்ததும் அவன் நகர்ந்து விடவில்லை.

"என்ன விலை?" என்றான்.

"இல்லைன்னு சொன்னேனே ஐயா?" கடைக் காரனின் பதில் உரத்து வந்தது.

"எடுத்துக் காட்டேன். பார்த்துவிட்டல்லவா எத்தனை வேணுமென்று சொல்லலாம்!"

"அடச் சீ! யார்டா இவன், வெளக்கு வைக்கிற நேரத்தில் சுத்தத் தோசி!" என்று திட்டிக்கொண்டே கடைக்காரன், சக்கரையின் காதினருகில் வாய் வைத்து, "கிடையாதுன்னு சொன்னேன்! இங்கே இல்லை!" என்று மிக உரக்கக் கத்தினான்.

சக்கரை தனக்குள் சிரித்துக்கொண்டே அடுத்த நடைபாதைக் கடைக்கு நகர்ந்தான் — தன் நடிப்பைத் தானே மெச்சியவாறு.

"பெருமூச்சு விடாதீர்கள் சீமாட்டிகளே, பெருமூச்சு விடாதீர்கள். ஆண்கள் எப்போதும் ஏமாற்றுக் காரர்கள்தான்!" ஆங்கிலப் பெருங்கவியின் இந்த வரிகள் தான் அவன் நினைவுக்கு வந்தது, பர்மா பஜாரின் கோலாகலத்தைக் கண்டபோது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

நடையோரம் கடை விரித்திருந்த பர்மா அகதிகள், தங்களுடைய பளபளப்பான பண்டங்களை எத்தனை முடியுமோ அத்தனை அதிக விலைக்கு விற்க முயலுவதையும், வாங்க வந்தவர்கள் அதை எவ்வளவு முடியுமோ அவ்வளவு குறைவான விலைக்கு அபகரிக்க முயலுவதையும் பார்க்கும் போதுதான், ஏமாற்றுக்காரர் களைப் பற்றிய ஷேக்ஸ்பியரின் வாசகம் அவனுக்கு நினைவு வந்தது. 'ஆனால் ஆண்களை மட்டும்தான் கவி சொன்னார். இங்கே, ஆண், பெண், குழந்தை, தாத்தா அத்தனை பேரும் ஒருவரையொருவர் ஏமாற்றி விழுங்கப் பார்க்கிறார்கள்!' என்று எண்ணி மனத்தினுள் சிரித்தவாறு, அந்தக் குட்டிக் கடைத் தெருவைக் கண்ணால் அளவிட்டான்.

ஊசோ என்ற பர்மியக் கிழவரைத் தேடிக் கொண்டு சூரியின் நாடகப்பள்ளிக்கு வந்த அந்த இளைஞனைத் துருவித் துழாவியது அவன் பார்வை. அன்றொரு நாள் ஆடோ ரிக்ஷாவில் ஏறிக்கொண்டு சக்கரை இதே இடத்துக்கு வந்தபோது, துறைமுகத்தில் ஏதோ வேலை நிறுத்தத்தினால் கலவரம் ஏற்பட்டு, அந்த வட்டாரத்திலிருந்த கடைகளனைத்தையும் படபடவென்று மூடி விட்டார்கள். இந்த நடைபாதைக் கடைக்காரர்கள் தங்களுக்குத்தான் முதலில் ஆபத்து என்று உணர்ந்து, சட்டுப் புட்டென மூட்டைகளைக் கட்டிக்கொண்டு ஓடி விட்டார்கள். செத்துப்போன கடை விதிதான் சக்கரையை வரவேற்றது அன்றைக்கு.

எனவே, இந்த இரண்டாவது விஜயத்தின்போது, பர்மா பஜார் கலகலவென்றிருந்ததில் சக்கரைக்கு ஏகப்பட்ட சந்தோஷம்.

வண்ண வண்ணமான பட்டுத் துணிகள்; வழுவழுப்பான முகக்ஷவரத்துக்கு உத்தரவாதம் கூறும் அயல் நாட்டுப் பிளேடுகள்; தங்கத்தை மிஞ்சிய பிரகாசத்துடன் கூடிய போலி நெக்லஸ்கள்; வளையல்கள். பண்டங்களின் ஓசைகளை அமுக்கும் பேரங்களின் கூச்சல்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

இவ்வளவையும் வேடிக்கை பார்த்துக்கொண்டு சக்கரை நிற்கவில்லை. கடத்தலிலும் சட்ட விரோதமான வியாபாரங்களிலும் இவர்களில் பெரும்பான்மை யோருக்குப் பழக்கமுண்டு. ஆகவே, காரியமில்லாமல் நிற்கிறவன் யார், கழுகுக் கண்களால் ஆராய்கிறவன் எவன் என்பதை இவர்களுடைய கூரிய உள்ளறிவு உடனே கண்டு பிடித்துவிடும் என்பதைச் சக்கரை அறிவான்.

பாண்ட் பாக்கெட்டிலிருந்து ஒரு வேலைப்பாட மைந்த கண்ணாடி வளையலை வெளியிலெடுத்தான் அவன். மூன்று வருடங்களுக்கு முன்பு பரோடா சென்றிருந்தபோது, சந்தடி மிகுந்த அந்த ஊர் கடைத் தெருவில் வாங்கியது இது. நிச்சயமாய் அதைப்போன்ற ஒன்று இங்கே கிடைக்காதென்று தெரிந்துகொண்டே, ஒவ்வொரு வியாபாரியிடமாகச் சென்று, "இதேபோல வேண்டும். இருக்கிறதா?" என்று கேட்டதோடு செவிடன் போலவும் நடித்துக் கொண்டிருந்தான், அண்டை அயலில் ஜாக்கிரதையாக இருக்கும் நாக்குகளைக் கட்டவிழ்த்துவிட வேண்டுமென்பதற்காக.

இப்படி, தனது செவிப் புலனில் அபாரப் பழுது ஏற்பட்டிருப்பதாக ஸ்தாபித்துக்கொண்டு ஒவ்வொரு கடை யாக நகர்ந்தான் அவன். ஆனால் ஓரிடத்திலும் அவன் தேடிய இளைஞன் காணப்படவில்லை.

கடற்கரை ரயில் நிலையத்தைக் கடைசியாக அவன் அடைந்தபோது இரண்டொரு கடைகளே மிஞ்சியிருந்தன.

அங்கே ஒரு தாட்டியான பெண்மணியிடம் தன் செவிட்டுத்தனத்தை வெளிப்படுத்தி, எரிச்சலை, மூட்டிய பின்னர், "காது கேட்கவில்லை. அம்மா, மன்னித்துக் கொள்," என்று கூறிவிட்டு, "போன கப்பலில் வந்தவன். வாலிப வயது. கிழிசல் மஸ்லின் ஜிப்பா போட்டிருப்பான். நெட்டை, பரட்டைக் கிராப்பு. அப்படி ஓர் ஆளைத் தெரியுமா உங்களுக்கு?" என்று கேட்டான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அந்தப் பெண்மணி தன்னருகிலிருந்து ஒரு சிறுவனிடம், "அட! நம்ம பக்கிரிசாமியைத் தேடறார் போலிருக்குதே?" என்று சொன்னாள். ஆனால் அந்தச் சிறுவன் அவளை கையை மெதுவே கிள்ளி, (சக்கரை கவனிக்கவில்லை என்பது அவன் நினைப்பு!) தாழ்ந்த குரலில், "நீ சும்மா இரு அம்மா. பக்கிரி அப்போ பிடிச்சு ஒளிந்து கொண்டிருக்குது," என்றான்.

சக்கரையின் செவியில் எத்தனைக் கெத்தனை கூர்மை ஏறியதோ அத்தனைக்கத்தனை அவன் முகத்தில் அசட்டுக் களை வடிந்தது. "இல்லேம்மா. அவன் எனக்கு உறவு ஒன்றுமில்லை. சும்மா தெரிந்தவன். அவ்வளவுதான்," என்று சம்பந்தமில்லாமல் கூறினான்.

"ஒளிஞ்சிட்டிருக்கிறானா? ஏண்டா?" என்று அந்தப் பெண்மணி தன் மகனை ஆச்சரியத்துடன் கேட்டாள்.

'பட்டாணிக்காரன் இல்லே, ஈட்டிக்காரன்? அவனகிட்டே கடன் வாங்கிட்டுத் திண்டாடுறான். இந்த ஆள்கூட அவன் அனுப்பின ஆள்தான்னு நினைச்சு, இவன் தூரத்திலே வர்றப்போவே கடையை ரெஜாக் அண்ணனண்டை விட்டுட்டு ஓடிட்டான்," என்று சிறுவன் விளக்கியதும், சக்கரைக்குச் சிரிப்பை அடக்க முடிய வில்லை. பம்பாய் பல்கலைக்கழகத்து மனத் தத்துவப் பேராசிரியர் பதவிக்கும், ஓர் ஈட்டிக்காரனின் உதவியாளாக இருக்கும் வேலைக்கும் எத்தனை தூரம்!

தன்னைப் புரிந்து கொள்ள மறுக்கிறதே என்று எல்லாச் செவிடர்களும் உலகத்தைத் தூற்றுவதுபோல அவளும் ரோஷத்துடன் முணுமுணுத்தவாறு, எங்கேதான் அந்தப் பக்கிரிசாமி ஒளிந்திருப்பானென்று ஆராய நினைத்தபோது—

பொட்டென்று ஒரு தூறல் விழுந்தது. ஒன்று நாலாகி, நாலு மழையாயிற்று. பிளாஸ்டிக் விரிப்புக்களும்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

சாக்குகளும் கூடைகளும் வெகு வேகமாக அந்த நடைபாதைக் கடைகளைப் போர்த்து மூடிக்கொண்டன. கடைக்காரர்கள் அனைவரும் எதிரிலிருந்த ஒரு பெரிய கட்டிடத்தின் போர்டிகோவிலும், கடற்கரை ஸ்டேஷனின் வாயிலிலும் தஞ்சம் புகுந்தனர்.

என்னதான் பேராசிரியரென்றாலும், தன்னை மறந்து மழையில் நனையக்கூடிய அளவுக்கு முற்றவில்லை யாகையால், சக்கரை அந்தக் கூட்டத்தைப் பின்தொடர்ந்து ஓடி, போர்ட்டிகோவின் ஓரமாய் நின்றுகொண்டான். நின்ற பிறகே கவனித்தான், தன் அருகில் ஒரு பெண் இருப்பதை. புடவையைப் போர்த்துக்கொண்டு அவள் நின்றிருந்த விதம் மீண்டும் அவளைக் கவனிக்க வைத்தது. நன்றாய்க் கூர்ந்து பார்த்த சக்கரை புன்னகை செய்தான். பிறகு மெல்ல, "ஈட்டிக்காரர்களின் கடனை அடைப்பதுதான் நல்லதே தவிர, கொலை பண்ணிவிட்டால் பிரசினை தீர்ந்துவிடாது. புடவையைச் சுற்றிக் கொண்டாலும் அவர்களிடமிருந்து தப்பிவிட முடியாது," என்றான்.

வெடுக்கென்று திரும்பினாள் அவள் — இல்லை, திரும்பினான் அவன். நல்ல வேளை, அந்தக் கோடியில் அவர்கள் இருவர் மட்டுமே இருந்ததால், அந்தப் பர்மா இளைஞனின் நகைப்புக்கிடம் தரும் வேடத்தைக் கண்டு சிரிக்க யாரும் இருக்கவில்லை.

"வேஷம் போட்டது ஈட்டிக்காரனுக்காகத்தான்," என்று ஒப்புக்கொண்டான் பக்கிரிசாமி. "ஆனால், கொலை செய்யப்போவது அவனையல்ல."

"பின்னே எதற்கு இடுப்பில் ஒரு பிச்சுவாக் கத்தி வைத்திருக்கிறாய்? பழைய புடவையைக் கிழித்துக்கொண்டு அதன் முனை துருத்திக்கொண்டிருக்கிறது, பார்!"

பக்கிரிசாமி திகைப்புடன் கத்தியை வெளியி லெடுத்து, அதன் முனையைத் தடவி விட்டுக் கொண்டவாறே, "அந்த நாடகக்காரரின் வீட்டில்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

உங்களைப் பார்த்தேன். நன்றாய் நினைவிருக்கிறது. என்னை எதற்காகப் பின்தொடர்ந்து வருகிறீர்கள்?" என்றான்.

"உனக்கு ஆங்கிலம் தெரியாது இல்லையா?" என்று சக்கரை திருப்பிக் கேட்டான்.

"தெரியாது."

"ஆகவே ஷேக்ஸ்பியர் படித்திருக்க மாட்டாய். 'அரக்கனின் வலிமையைப் பெற்றிருப்பது அருமையிலும் அருமை. ஆனால் அரக்கனைப் போலவே அதை உபயோகப்படுத்துவது கொடுமையிலும் கொடுமை,' என்று அவர் கூறியிருக்கிறார். அதேபோல் உன் மனத்தில் கோபமும் அநீதியின்பால் ஆத்திரமும் இருப்பது சந்தோஷப்பட வேண்டியதுதான். ஆனால் உன் கத்தி தப்பான திசையில் திரும்பி விடாமல் இருக்க வேண்டுமல்லவா? அதைத் தடுப்பதற்காகத்தான் உன்னைப் பின்தொடர்ந்து வந்தேன். ஈட்டிக்காரனுக்காக அல்ல இந்தப் பிச்சுவா என்றால் வேறு யாருக்காக? ஊசோவுக்காகவா?"

பக்கிரிசாமி தன் அதிர்ச்சியை வெளிப்படுத்திக் கொள்ளக் கூடாதென்று மறு பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டு, மேலே சுற்றிக்கொண்டிருந்த புடவையை மெதுவாகக் களையலானான்.

ஆனால் அவன் முகத்தில் கூத்தாடிய வெறுப்புத் தீயைச் சக்கரை கவனிக்கத் தவறவில்லை. மழை நின்று விட்டதா என்று கையை வெளியே நீட்டிப் பார்த்தான். பிசுபிசுவென்று பன்னீர் தெளித்த மாதிரி தூறல் பதிந்தது அவன் முழங்கை வரையில்.

"நான் ஈட்டிக்காரன் அனுப்பியும் வந்தவனில்லை. ஊசோவின் ஆளுமில்லை. பயப்படாதே," என்று தைரியம் கொடுத்தான் பக்கிரிசாமிக்கு.

"பின்னே?"

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"எதிரிக்கு எதிரி நண்பன். இல்லையா? நான் ஊசோவின் எதிரி ஆகவே உனக்கு நண்பன்."

அந்தப் பர்மா அகதி சக்கரையைச் சந்தேகத்துடன் நோக்கினான்.

சக்கரை தனது சோடாபுட்டிக் கண்ணாடியைக் கழற்றி, கைக்குட்டையால் துடைத்துக்கொள்ளத் தொடங்கியபோது, அந்தப் பாப்பாத்தனமான கண்கள் பக்கிரிசாமியின் பயத்தில் பாதியைப் போக்கின. அடுத்தாற் போல் சக்கரை பேசிய விதம் அவனுடைய மிச்ச அச்சத்தையும் அகற்றிவிட்டது.

"ஷேக்ஸ்பியர் படித்திராவிட்டால் பரவாயில்லை. வேலைக்காரி' படமாவது பார்த்திருக்கிறாயா?" என்றான் சக்கரை. "அதிலே, 'கத்தியைத் தீட்டாதே ஆனந்தா, புத்தியைத் தீட்டு' என்று ஒரு வசனம் வருகிறது. அதையே தான் நானும் உனக்குச் சொல்கிறேன். பிச்சுவாவை மடக்கியே வைத்துக்கொள். ஊசோவினால் எவ்வளவு குடும்பங்கள் பாழாகியிருக்கின்றன என்று எனக்குத் தெரியும். ஆனால் உன் குடும்பத்தின் கதைதான் எனக்குத் தெரியாது."

"என் அம்மாவை, அவள் பெற்ற குழந்தையையே கடலில் வீசி எறியும்படி செய்தவன். அதன் விளைவாக, அவள் பைத்தியம் பிடித்துச் சாகும்படி ஆனதும் அவனால்தான்," என்று பல்லைக் கடித்துக்கொண்டு பேசிய பக்கிரிசாமி திடீரென்று ஒரு கேள்வி கேட்டான்: "சார், அந்த ஊசோ கிழவனுக்கு என்ன வயது இருக்குமென்று நினைக்கிறீர்கள்?"

"என்ன, எழுபது, எண்பது இருக்குமா?"

"என்னைப் பைத்தியமென்று நினைக்காம லிருந்தால் சொல்கிறேன்."

"சொல்லு."

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"நூற்றைம்பது."

சக்கரை சிரித்திருப்பான். ஆனால் பக்கிரிசாமியின் முகத்தில் காணப்பட்ட கடுமையான பாவம், உண்மையையே அவன் பேசுகிறானென்பதை உணர்த்திற்று. "நூற்றைம்பதா?" என்றான் சக்கரை மோவாயைத் தடவிய வண்ணம்.

"கிழவனை நேருக்கு நேர் பார்ப்பதற்கு எப்படியிருப்பானோ? யாருக்கும் தெரியாது. எழுந்து நடமாடக் கூட முடியாதவன் என்று சொல்வார்கள். ஆனால் அவனுடைய மனோசக்தி யாருக்கும் வராது," என்று கூறிவிட்டுச் சிறிது மௌனமாயிருந்த பக்கிரிசாமி தொடர்ந்தான். "இந்தப் பிச்சுவாவினால் நான் அவனைக் குத்திக் கொலை செய்து விடுவேனென்று நீங்கள் பயப்படவே வேண்டாம்."

"உண்மையில் நீ நல்லவன்தான். அப்படிச் செய்ய மாட்டாய்."

"அதனால் சொல்லவில்லை. என்ன குத்தினாலும் அவன் சாகமாட்டான் என்கிறார்கள். அவனாக எப்போது சாக வேண்டும் என்று நினைக்கிறானோ அப்போதுதான் அவனுக்கு மரணமாம். அது உண்மையானால், நூற்றைம்பது என்ன, இருநூற்றைம்பது வயது வரைகூட உயிரோடிருப்பான்," என்று பக்கிரிசாமி கசப்புடன் பேசினான்.

சக்கரை குறுக்கிட்டு, "உன் குடும்பத்தை என்ன செய்தானென்று சொன்னாய்? அந்த விவரத்தைத் தெரிந்து கொள்ளத்தான் நான் வந்தேன்," என்றான்.

பக்கிரிசாமியின் தலை தாழ்ந்தது. ஆழ்ந்த சோகத்தினால் அவன் முகம் இருளடைந்ததாயிற்று. மெலிந்த குரலில் அவன் சொல்லலானான்:

"ரங்கூனில், கடற்கரை ஓரமாக எங்கள் குடும்பம் இருந்தது ஒன்றுதான் எனக்கு நினைவிருக்கிறது. ஊசோ

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கிழவன் பண்ணின விபரீதமெல்லாம் பிறர் சொல்லித்தான் எனக்குத் தெரியும். என் தகப்பனார் ஒரு பெட்டிக் கடை நடத்தி வந்தவர். நான் பிறந்து நாலைந்து வருடம் கழித்து என் அம்மாவுக்கு ஒரு தம்பி பிறந்தான். என் அப்பாவுக்கும் கிழவன் ஊசோவுக்கும் என்னவோ ரொம்பச் சிநேகிதமாம். பித்தளையையெல்லாம் தங்கமாய்ப் பண்ணித் தருவேன் என்று கிழவன் சொன்னதை நம்பி அவன் பின்னாலேயே என் அப்பா சுற்றிக் கொண் டிருந்தார். கிழவனை அடியோடு வெறுத்தவள் என் தாய். ஆனால் ஒரு நாள் அவளையும் தனக்கு அடிமையாக்கிக் கொண்டு விட்டான். அவன் நில் என்றால் நிற்பாள். உட்கார் என்றால் உட்காருவாள். சில சில சமயங்களில் திடீரென்று கிழவனை எதிர்த்துக் கொள்வாள். வீட்டில் பெரிய சண்டை நடக்கும். என் அப்பா, அம்மாவை அடி அடியென்று அடித்து நொறுக்குவார்...”

சக்கரை இந்த விஷயங்களில் மனத்தைச் செலுத்திக் கொண்டே கைக் கடியாரத்தையும் தெருவையும் பார்த்துக் கொண்டான். முதல் லயன் கடற்கரைச் சாலை கொஞ்சம் கொஞ்சமாகச் சுறுசுறுப்பு இழந்து கொண்டிருந்தது. கடியாரத்தின் முட்கள் மணி ஒன்பதைத் தாண்டத் தாண்ட, போக்குவரத்து நடமாட்டம் குறைய லாயிற்று.

பக்கிரிசாமி மேலே சொன்னான்: “பார்த்தவர்கள் சொன்னார்கள். கிழவனும் என் அம்மாவும் ஒருநாள் கடற்கரையில், அலையடிக்கும் இடத்தில் நின்றிருந்தார் களாம். கிழவன் கையில் ஒரு தடி இருந்தது. அம்மாவின் இடுப்பில் என் இரண்டு வயதுத் தம்பி இருந்தான். கிழவன் திடுமென்று மணலில் உட்கார்ந்தான். அம்மாவும் உட்கார்ந்தாள். அவன் எழுந்தான். அவளும் எழுந்தாள். அவன் ஓடினான், அவளும் ஓடினாள். அவன் தன் கையி லிருந்த தடியை விசையுடன் சுழற்றிக் கடலிலே எறிந்தான்...”

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அடுத்த சொல்லைப் பக்கிரிசாமி சொல்லுமுன்பே அதை உணர்ந்து சக்கரையின் ரத்தம் சில்லிட்டது. உறைந்து விட்ட மாதிரி உடம்பு விறைத்தது.

பக்கிரிசாமி கண்ணைத் துடைத்துக் கொண்டு கூறினான்: "ஆமாம். அம்மாவும் தன் இடுப்பிலிருந்த குழந்தையை ஒரே சுழற்றாகச் சுழற்றிக் கடலில் எறிந்து விட்டாள். மறு நாள் காலை சவம்தான் கரையில் ஒதுங்கியது."

சில நிமிடம் இருவரும் மௌனமாயிருந்தார்கள். பிறகு பக்கிரிசாமி, "கிழவன் எங்கேயோ ஓடிப்போய் விட்டான். அம்மாவை வெட்டரிவாளால் குத்திவிட்டு அப்பா ஜெயிலுக்குப் போனார். அம்மா சாவிலிருந்து பிழைத்தாள். ஆனால் புத்தி பிசகிவிட்டது. எனக்குப் பன்னிரண்டாவது வயது வரையில், அம்மா பைத்திய மாகவே திரிந்துவிட்டுக் கண்ணை மூடினாள்."

"நீ ஊசோவைப் பழி வாங்குவதற்காக ஊர் ஊராகத் தேடி வேட்டையாடிவிட்டு இந்தியாவுக்கு வந்து சேர்ந்திருக்கிறாய்?" என்று கதையை முடித்தான் சக்கரை.

"ஆமாம்."

"நல்லது. நான் முதலிலேயே சொன்னபடி, இந்தக் கத்தி வேலையில் இப்போது இறங்காதே," என்று கூறிவிட்டுப் போர்ட்டிகோவை விட்டு வெளியே வந்தான் சக்கரை.

ஆனால், பக்கிரிசாமி சம்மதிக்கவில்லை. "நான் ரங்கூனிலிருந்து சென்னைக்கு வந்ததே ஊசோவை ஒழிப்பதற்காகத்தானே?"

சக்கரை கண்டிப்புடன், "நான் பம்பாயிலிருந்து சென்னைக்கு வந்ததும் அதே காரியத்துக்காகத்தான்," என்றான். "எனக்கு உன்னைப்போலத் துடிதுடிப்பும் வாலிபப் பிராயமும் உள்ள ஒரு உதவியாளன் தேவையா யிருந்தது. நல்ல சமயத்துக்கு நீ கிடைத்திருக்கிறாய்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

மூளையைத் தீட்டி வைத்துக் கொண்டு, உள்ளங் கையைத் தேய்த்துச் சூடாக்கிக்கொண்டு தயாராயிரு. எந்த நிமிடத்திலும் வந்து கூப்பிடுவேன். பைத்தியக்காரத் தனமாய் எதுவும் செய்து விடாதே," என்று எச்சரித்து விட்டுப் புறப்பட்டான். 'ஒரு பூசலில் எவன் பக்கம் நியாயம் இருக்கிறதோ அவன் மும்மடங்கு ஆயுதபாணியாக ஆகிறான்; எவனுடைய மனச்சாட்சி அநீதியினால் கறைபட்டிருக்கிறதோ, அவன் எஃகுக் கோட்டையினுள் பூட்டிக் கொண்டிருந்தாலும் நிர்வாணமானவனே' என்ற ஷேக்ஸ்பியர் வரிகளை அவன் வாய் முணுமுணுத்தது.

பாரிஸ் கார்னரைத் தாண்டிக்கொண்டு, அரண்மனைக்காரன் தெருவினருகே வந்தபோது, முனையில் ஒரு பத்திரிகைக் கடை திறந்திருப்பது தெரிந்தது. அந்தக் கடைக்காரன் தக்காளிப்பழ சர்பத் மிக அருமையாகத் தயாரித்துக் கொடுப்பான் என்பது சக்கரைக்கு நினைவு வரவே கடையை நோக்கி நடந்தான்.

சோம்பேறித்தனமாகச் சர்பத்தைச் சுவைத்துக் குடித்துக் கொண்டிருந்தபோது, மாலைத் தினசரியின் செய்திகளை அறிவிக்கும் சுவரொட்டி சக்கரையின் கண்ணில் பட்டது. அதையொட்டி அவன் மூளையும் வேறு திசையில் வேலை செய்யத் தொடங்கியதால், பானத்தை ருசிப்பது இன்னும் மெதுவாயிற்று.

சர்பத்தைக் குடித்து முடித்தபோது அவனுடைய யோசனைகளும் ஒரு முடிவுக்கு வந்திருந்தன போலும். ஒரு தினசரித் தாள் வாங்கிக் கொண்டு புறப்பட்டான்.

நடையிலேயே பிராட்வேயை அடைந்தபோது மணி பத்தைத் தாண்டிவிட்டது.

பிராட்வேயின் நுனியில் இருந்த செருப்புக் கடையும் வாத்தியக் கடையும் ஓட்டலும் மூடப்பட்டு விட்டன. அவைகளைத் தாண்டி நேரே வடக்குத் திசையில் சக்கரையின் நடை வளர்ந்தது. சிறிய சிறிய சந்துகளும்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கடைகளும் கண்ணில் பட்டன. அவற்றிலே பல அச்சாபீஸ்களும் இருந்தன. ஆங்காங்கே விளக்கு எரிந்து கொண்டிருந்தது. சில இடங்களில் கதவைத் தாளிட்டுக் கொண்டு வேலை செய்தாலும் சிறிய அச்சு யந்திரத்தின் கடகடா மடமடா சப்தம் தெருவை எட்டிப் பார்த்தது.

சற்று நின்ற சக்கரை எந்த அச்சகம் தேவலை என்பது போல் நோட்டம் விட்டபின், ஒன்றைத் தேர்ந் தெடுத்தான்.

அவன் கதவைத் திறந்ததுமே, நிலைப்படியருகே படுத்திருந்த ஒரு கிழவர், "யாரது? என்ன வேணும்?" என்று கேட்டபடி, இருளில் துழாவி, அருகே தண்ணீர் கூஜாவுக்குப் பக்கத்திலிருந்த மூக்குக் கண்ணாடியை எடுத்து மாட்டிக் கொண்டார்.

உள்ளே அச்சு வேலை நடந்து கொண்டிருக்கிறது என்பதை உறுதிப் படுத்திக்கொண்ட சக்கரை, "மானேஜர் இருக்கிறாரா?" என்று மிடுக்குடன் கேட்டான்.

"அது வேறே வாழுதாக்கும்? நான்தான் இங்கே எல்லாம்," என்று முனகினார், கிழவர்.

"அப்படியா? ரொம்ப சந்தோஷம். ஓர் அர்ஜெண்ட் வேலை," என்று கூறி, தானே ஸ்விட்சைத் தட்டி விளக்கைப் போட்டான் சக்கரை. பிறகு, கையிலிருந்த தினசரித் தாளை மேசைமீது பரப்பி, "இதுபோல் ஒன்று ரகசியமாகக் கம்போஸ் பண்ணி, அச்சடித்துத் தர முடியுமா?" என்றான்.

"ஏதாச்சும் போலீஸ்லே மாட்டவுடுற வேலையா? வேணாம் சாமி!" என்று கையெடுத்துக் கும்பிட்டார் கிழவர்.

"அட இல்லை, ஐயா. பயப்படாதீர்," என்று உரிமையுடன் அவர் முதுகில் தட்டி, மேஜையடியில் உட்கார்த்தி வைத்தான் சக்கரை. "என்னைப் பார்த்தாலே தெரியவில்லை, காலேஜ் ஸ்டூடண்ட் என்று? எங்கள்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

காலேஜிலே ஒரு தமாஷ் பண்ணுவதற்காகக் கேட்டேன், முடியுமா முடியாதா? இதே பிராட்வேயில் இன்னும் இரண்டு டஜன் அச்சாபீஸ் இருக்கிறது."

கிழவர் அந்தத் தினசரியை வாங்கிப் பார்த்தார். "இதேதான் இருக்குதே நல்ல பேப்பராய்? இன்னொண்ணு எதுக்காக அச்சடிக்கணும்?"

"அதுதான் சொன்னேனே, தமாஷுக்கு என்று?" சக்கரை முதல் பக்கத்தைச் சுட்டிக் காட்டினான். "இதோ இந்த மூலையில் பாருங்கள். 'பாகிஸ்தானில் நெருக்கடி' என்று கால் பக்கம் செய்தி போட்டிருக்கிறார்கள். இதை மட்டும் எடுத்துவிட்டு, நான் தருகிற வேறொரு செய்தியை இந்த இடத்தில் போட்டு அச்சடித்துத் தரவேண்டும். ஒரே ஒரு காப்பி போதும்."

"ஏகப்பட்ட செலவாகும். நாளை சாயந்தரம்தான் தருவேன். பிளாக் வேறே பண்ணணும்."

"செலவைப் பற்றி யோசிக்காதீர்கள்."

"என்ன நியூஸ் சேர்க்கணும்? அதைக் காட்டுங்க," என்றார் கிழவர்.

"இதோ எழுதித் தருகிறேன்," என்று சக்கரை துண்டுக் காகிதத்தில் எழுதினான்:

குட்டு வெளிப்பட்டது !

மறுபிறவி என்பது வெறும்
நாடகம்தான் !

கல்லூரி மாணவி அம்பிகா
ஒப்புக் கொண்டாள் !

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

14

"அதோ பெரியம்மா நிற்கிறாங்க, பாரு தம்பி. அந்த வீடுதான்" என்று ரிக்ஷாக்காரனுக்கு அடையாளம் காட்டினாள் தாயி.

அம்பிகாவின் சித்தியான மரகதம்தான் வீட்டு வாசலில் நின்றிருந்தாள். சாயந்திரம் வெளியே போன பெண் இன்னும் வரவில்லையே என்ற பதைப்பு அவள் முகத்தில் முத்திரை குத்தியிருந்தது. சாதாரணமாக எங்கே யாவது சினேகிதி வீட்டுக்குப் போய்வருவதாகச் சொல்லி அம்பிகா போயிருந்தால் இப்படிக் கவலைப்பட்டிருக்க மாட்டாள். ஒரு நாயின் குரைப்புத் தாங்காமல் அதைத் தெருக்கோடிவரை துரத்தி விட்டுவிட்டுத் திரும்புவதாகச் சென்றவள் மூன்று மணி நேரமாகத் திரும்பாமலிருந்தால் என்னவென்று அர்த்தம் கொள்வது? ஏற்கெனவே அக்கம் பக்கத்தில் வம்பளப்புக்காரர்கள் அதிகரித்து விட்டார்கள். "ஏண்டி மரகதம், உன் மூத்தாள் பொண்ணோட பேர் பேப்பரிலேயெல்லாம் போட்டிருக்கிறானாமே?" என்று விஷமத்தனமாக விசாரிக்கிறவர்களுக்குச் சில சமயம், "ஆமாம், உங்கள் பெயரையும் இனிமேல் சேர்த்துப் போடச் சொல்கிறேன்" என்று முகத்தில் அறைந்தாற்போலப் பதில் சொல்லியும், வேறு சில சமயம் பதில் சொல்லவே தெரியாமல் சமையலறைக்குள் புகுந்து கண்ணீர் சிந்தியும் வதைபட்டுக்கொண்டிருந்த மரகதம், இருட்டி வெகு நேரமாகியும் வெளியே சென்ற பெண் வராததைக் குறித்து வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருந்ததில் வியப்பென்ன?

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

நாலாவது வீட்டினருகே ரிக்ஷா வரும்போதே அம்பிகாவைக் கண்டுவிட்டன அவள் கண்கள்.

"அம்பிகா, என்னடி மறுபடியும் உனக்கு?" என்று பதறி எதிர்கொண்டு சென்று, பரபரப்பாக மகளின் கையைப் பிடித்து வீட்டுக்குள் அழைத்துச் சென்று கட்டிலில் கிடத்தி விசிறினாள்.

அம்பிகா அரை மயக்கமான நிலையில் இருந்தாள். அவள் இமைகள் மூடாமல் திறந்திருந்த போதிலும் கண்ணின் கருவிழிகள் உயிரற்றதாகவே காட்சி தந்தன. உதடுகள் எதையோ சொல்ல விரும்புகிறார்போல் மெல்லத் துடித்தபடி இருந்தன.

"அம்பிகா! என்னைப் பார்! பாரேன் இப்படி! ஏன் என்னவோ போல விழிக்கிறாய்?" என்று துடித்த மரகதத்தைச் சமாதானப்படுத்தினாள் வேலைக்காரி தாயி. "ஒண்ணும் இல்லேம்மா, இதுக்கு. அந்த இஸ்கூல்காரரு இல்லே, சூரி, அவரோட வீட்டிலிருந்து அழைச்சுக்கிட்டு வர்றேன். சூரிதான் உங்க வீட்டிலே கொண்டுபோய் விடச் சொல்லி ரிக்ஷாவிலே ஏத்தி அனுப்பிச்சாரு. பயப்படாதீங்க. கொஞ்ச நேரத்திலே சரியாயிடும்" என்று அவள் சொல்வதைக் காதில் வாங்கிக் கொள்ளாமலே, "அம்பிகா! அம்பிகா!" என்று மரகதம் அரற்றினாள்.

அம்பிகாவின் மருண்ட கண்கள் சித்தியை நோக்கி நகர்ந்தன. "நான்... அம்பிகா இல்லை, தேவகி. தேவகி..." என்று அவள் உதடுகள் முணுமுணுத்தன, பிறகு வேலைக் காரக் கிழவியின் பக்கம் அவள் திரும்பினாள். "தாயி... தாயி... டைகர் எங்கே? அதற்கு என்னவோ நேர்ந்து விட்டது போலிருக்கிறதே?... என்ன ஆயிற்று? எங்கே அது?" என்றாள்.

மரகதத்தின் விழிகள் பொல பொலவென்று நீரைச் சிந்தின. "போச்சு... எல்லாம் சரியாகி விடுமென்று நினைத்திருந்தேனே! மறுபடி திரும்பிவிட்டதா!" என்று

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

புலம்பியவள், "அலட்டிக்கொள்ளாதே. கொஞ்ச நேரம் படுத்திரு," என்று கூறி, அம்பிகாவின் தலைக்கு அணைப்பாக இன்னும் ஒரு தலையணையைக் கொடுத்தாள். தாயியிடம், "கொஞ்சம் பார்த்துக்கொள் இவளை. சூடாக ஏதாவது குடிக்கக் கொண்டு வருகிறேன்," என்று உள்ளே சென்றாள்.

தாயி, பரிவுடன் அம்பிகாவின் தலையைக் கோதிக் கொண்டே, "டைகர் உங்க பின்னாடிதாம்மா வந்தது. எங்கியாச்சும் சுத்திட்டிருக்கும். இதோ வந்திடும் பாருங்க..." என்றாள். அவள் கண்களும் கலங்கின. அம்பிகாவின் யௌவன முகத்தில், பதினெட்டு வருடங்களுக்கு முன்பு இறந்துபோன தன் பழைய எஜமானியை அவள் கண்டாள். அந்த எஜமானியின் பிரியமும் இரக்க குணமும் ஒட்டுதலும் பேதமுற்றுப் பழகும் தன்மையும் ஒரே சமயத்தில் அவள் நினைவில் மோதின.

தாயியின் எண்ணங்கள் அம்பிகாவின் உள்ளத்தில் எதிரொலி எழுப்பினபோலும். "தாயி, அழுகிறாயா என்ன? சீ, சீ. எவ்வளவு சமயங்களில் நான் மனம் புண்பட்டு இருந்த போதெல்லாம் நீ தேற்றியிருக்கிறாய்? எஜமானர் என்னைக் கண்டபடி ஏசும்போது, தாயில்லாப் பெண்ணான நான் உன் குடிசைக்குத்தானே ஆதரவு தேடி வருவேன்?" என்றாள்.

"ஆமாம்மா, ஆமாம்மா," என்றபோது கிழவியின் குரல் தழுதழுத்தது.

அம்பிகாவின் குரல் சட்டென மாறிற்று. போர்வையின் நுனியினால் கண்ணைத் துடைத்துக் கொண்டாள். பழைய நினைவுகளை வரவழைக்கும் பாவனையில் அவள் தலை பின்னோக்கினாற்போல் திரும்பிக் கொண்டது. தனக்குத்தானே மெல்லச் சிரித்துக் கொண்டாள். "தாயி, அதேபோல் நீ மனம் கஷ்டப்பட்டபோதெல்லாம் நானும் உனக்கு ஆறுதல் சொல்லியிருக்கிறேன் இல்லையா?" என்றாள்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"ஆமாம்மா, உங்க பிரியத்தினாலேதான் நான் அங்கேயே தங்கியிருந்தேன். இப்பவும்கூட அந்தப் பங்களாவை விட்டுப் போக மனசு வரமாட்டேங்குது அம்மா!" என்றாள் தாயி.

"ஒரு தரம் உன்னைக் கன்னாபின்னாவென்று திட்டிவிட்டார் எஜமானர். பொன்னடியும் அவன் கூட்டாளிகளும் என்னென்னவோ திருடிக் கொண்டு போவார்கள். அதெல்லாம் கண்ணில் படாது. நீ பாவம், ஒரு தரம் தோட்டத்துச் சுள்ளிகளையெல்லாம் பொறுக்கிக் கூடையிலே எடுத்துப் போட்டுக்கொண்டு உன் குடிசைக்குப் போகிறபோது அவர் பார்த்துவிட்டார். மகா கோபம் வந்து, கூடையைப் பிடுங்கி உன் மேலேயே வீசியெறிந்து. 'திருட்டுக் கழுதை! இன்னொரு தரம் ஒரே ஒரு சுள்ளி எடுத்தாயானாலும் கையை முறித்து விடுவேன்' என்று கத்தினார். நீ பாவம், அடுப்பும் மூட்டவில்லை, சமையலும் செய்யவில்லை. பட்டினியாய்க் கிடந்தாய். டிரைவர் வந்து சொன்னபிறகுதான் எனக்குத் தெரிந்தது. பங்களாவிலிருந்து அவருக்குத தெரியாமல் சாப்பாடு கொண்டு வந்து கொடுத்தேன்..."

கரகரவென்று தாயியின் கன்னங்களில் நீர் வழிந்து கொண்டிருந்தது. அம்பிகாவின் கரத்தை இறுகப் பற்றிக் கொண்டு, "ஆமாம்மா, நீங்க எத்தனை பெரிய லட்சாதிபதி! இந்த வேலைக்கார நாயை மதித்து, உங்க கையாலேயே சோறு கொண்டு வந்து போட்டீங்களே! நான் வேணாம் வேணாமின்னு தடுத்தும் இலையைப் போட்டு, தின்னச் சொல்லிக் கட்டாயப் படுத்தினீங்களே... அந்த மாதிரி அன்பை இனிமேல் நான் எங்கே காணப் போகிறோம்னு நினைச்சிருந்தப்போதான் நீங்க வந்திங்கம்மா!" என்றாள். அந்த எழுத்துப் படிப்பில்லாத கிழவிக்கு, மறுபிறவி என்பதும், முன்ஜன்மத்து நினைவுகளுடன அம்பிகா இருக்கிறாளென்பதும் வித்தியாசமானதாக, கற்பனைக்கு எட்டாத விபரீதமாகத் தெரியவில்லை. இன்றைய

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அம்பிகாதான் முன்னைய தேவகி என்பதைச் சற்றும் சந்தேகத்துக்கிடமில்லாத உண்மையென அவளுடைய அறிவு ஏற்றுக் கொண்டு, உள்ளமும் ஒப்புக்கொண்டு விட்டது. எனவே பழைய எஜமானியின் பக்கத்திலே அமர்ந்து பேசுவதுபோல ஒரு சகஜமான பாவம்தான் அவளுடைய பேச்சிலும் செயலிலும் தென்பட்டது.

உள்ளேயிருந்து காப்பி ஆற்றி எடுத்துக்கொண்டு வந்த மரகதம் அந்த இருவரின் நெருக்கத்தையும் கவனித்த படி சில வினாடிகள் நின்றாள். இந்த வேலைக்காரக் கிழவி இங்கேயே இருந்துவிட்டால் அம்பிகாவுக்கும் தனக்கும் எத்தனை துணையாக இருக்கும் என்று அவளுக்குத் தோன்றியது.

தோன்றியதை வாய்விட்டுச் சொல்லியும் விட்டாள், "ஏன் தாயி, பேசாமல் நீ எங்களுடனேயே இருந்து விடேன்" என்று.

அம்பிகாவும் குரலில் திகைப்பு வெளிப்பட, "தாயி இங்கே இருக்க வேண்டியவள்தானே? பின்னே வேறெங்கு போவாள்?" என்று கேட்டாள்.

"இல்லேம்மா... நேத்து சொல்லியிருந்தீங்கன்னா கூட இருந்திருப்பேன்... அந்தப் பாழும் அடையாறு வீட்டிலே எனக்கு என்ன இருக்குது? பாழாப் போவான் அந்தப் பொன்னடி... என்னை விரட்டிக்கிட்டே யிருக்கிறான்..." என்று கிழவி பதிலிறுக்கையில், "பொன்னடி உன்னைத் துரத்துகிறானா... ஏன்..." என்று அம்பிகா வினவினாள். ஆனால் அவளுக்குள் சுய அறிவு கொஞ்சம் கொஞ்சமாய்த் திரும்பிக் கொண்டிருந்தது போலும். பழைய நினைவுகளிலிருந்து விடுபட்டு இப்போதைய நிலைமைக்கு — பிரத்தியட்சமான சூழ்நிலைக்கு — வந்து கொண் டிருந்தாள். இரண்டுக்குமிடையே நிகழும் போராட்டம் அவளுடைய கரிய புருவங்களுக்கிடையே முடிச்சுகளாக வெளிப்பட்டன. அந்தப் போராட்டத்தின் இறுதியில் ஒரு பெருமூச்சுடன், "ஆமாம்... நீ அந்த அடையாறு பங்களா

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

வேலைக்காரிதானே... நீ அங்கேயே இரு..." என்றாள் தளர்ந்த குரலில்.

"இவளைத்தான் அங்கேயிருந்து துரத்துவதாகச் சொல்கிறாளே?" என்று இடைமறித்த மரகதம், "நான் சொல்வதைக்கேள், தாயி. இங்கேயே இருந்துவிடு," என்றாள் கிழவியிடம்.

"இல்லேம்மா... நான் இன்னும் கொஞ்ச நாளைக்கு அங்கேதான் தங்கியிருக்கணும்... ஒரு வேலை இருக்கு... வரேனுங்க. அம்மாளைக் கவனமாப் பாத்துக்குங்கன்னு சூரி ஐயா உங்களண்டை சொல்லச் சொன்னாங்க..." என்று கிழவி எழுந்து கொண்டாள்.

"போகிறபோது ஒரு தரம் அவர் வீட்டில் இறங்கிச் சொல்லிவிட்டுப் போம்மா," என்றாள் மரகதம். "நாளைக்கு அவரைக் கொஞ்சம் இங்கே வரச்சொல்லு. சூரி வந்தானானால் எனக்குப் பலவிதத்திலே தெம்பு ஏற்படுகிறது..."

"சரி," என்று வாசல்புறம் சென்ற தாயி, "அந்த சூரியை நினைத்தாலே எனக்குப் பயமாயிருக்கிறது சித்தி" என்று அம்பிகா மொழிவதைக் கேட்டுச் சற்று நின்றாள்.

"நம்ம சூரியையா! அசடுதான் நீ!" என்றாள் சித்தி சிரித்துக்கொண்டு.

"இல்லை சித்தி. வர வர என்னவோ அவரிடம் தான் எனக்குப் பயம் ஏற்படுகிறது. அவர் பக்கத்திலே இருக்கிறபோது... இல்லையென்றால், அவர் வந்துவிட்டுப் போகிறபோது... அந்தமாதிரி சமயங்களில்தான் எனக்கு முன்ஜன்ம நினைவுகள் வருகிற மாதிரி இருக்கிறது... வேண்டாம் சித்தி, அவரும் இங்கே வரவேண்டாம்; நாமும் அங்கே போக வேண்டாம்; கொஞ்ச நாளைக்கு அப்படித் தான் இருந்து பார்ப்போமே..."

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"சரியான பைத்தியமடி நீ, அம்பிகா..." என்று மரகதம் கூறுவதைக் காதில் வாங்கிக் கொண்டவாறே தாயி தெருவில் இறங்கிச் சென்றாள்.

"ஹூம்... அந்த சூரி ஐயா எத்தினி நல்லவர்! என் எசமானிக்காக என்னவெல்லாம் பாடுபடறாரு? எவ்வளவு சொன்னார் என்னண்டை! பாவம், தேவகியம்மா அன்னைக்கிருந்த மாதிரியே இன்னைக்கும் இருக்கிறாங்க, யார மீதாவது ஏதாவது சந்தேகப்பட்டுக்கிட்டு!" என்று தனக்குத்தானே பேசிக்கொண்டு அடையாறு செல்லும் சாலையில் நடந்தாள் அந்தக் கிழவி.

ஆனால் நடுநிசியைத் தாண்டிவிட்ட இந்த நேரத்தில் சூரியை எழுப்பும் எண்ணம் தாயிக்கு ஏற்பட வில்லை.

வேறொரு சந்தர்ப்பமாயிருந்தால், அந்தக் கிழவி எந்த வீட்டுத் திண்ணையிலும் படுத்து இரவைக் கழித்து விடுவாள். மயிலாப்பூர் குளற்றங்கரை அவளுக்கு மனதுக்குகந்த இடங்களிலொன்று. இருந்தாலும் அப்படி எங்கும் தங்காமல் நேரே அடையாறு பங்களாவை அடைந்துவிட வேண்டுமென்ற வேகத்தோடு அவள் நடந்தாளெனில், அவளை அப்படி உந்திய எண்ணமொன்று மனத்தில் இருந்ததே காரணம். மடியில் எள்ளத்தனை கனமுமில்லாத கிழவியாதலால், இருட்டையோ தனிமை யையோ கண்டு அவள் அஞ்சவும் தேவையிருக்கவில்லை.

ராஜா அண்ணாமலைபுரத்தைத் தாண்டிச் செல்கையில் தாயியின் கால்கள் தயங்கின. மெயின் ரோடில் இருந்தவாறே, தூரத்தில் தெரியும் சூரி நாடகப் பள்ளியின் கட்டிடத்தைப் பார்த்தாள்.

சில நிமிடங்களுக்கு அவளால் எதையும் புரிந்து கொள்ள முடியவில்லை. கட்டிடத்தின் மாடிப் பகுதியி லிருந்து இரண்டு கண்கள் தன்னை விழித்து நோக்குகிற மாதிரி இருந்தது. அது மனிதக் கண்களா, மிருகக் கண்களா,

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அல்லது கண்களே அல்லவா என்று அவளால் நிதானிக்க முடியவில்லை. ஆனால், ஈட்டியைப் போலக் கூர்மையாகத் தன்னுள் எதுவோ பாய்வது போன்ற கொடிய வேதனையை அவள் அனுபவித்தாள். இனம் தெரியாத சஞ்சலத்தினால் அவள் மனம் தட்டாமாலை சுற்றியது. மறு வினாடி அவள் தேகமும் தள்ளாடி ஒரு சுற்றுச் சுற்றிக் கீழே சாய்ந்தது. நல்ல வேளை, சில கொஜ தூரத்திலிருந்த டீக்கடையின் வாசலில் சில பேர் கூடியிருந்ததால் அவளைக் கவனித்து விட்டார்கள். அவர்களில் ஒரு ரிக்ஷாக்காரனும் இருந்தான். சட்டென்று அவர்கள் ஓடிவந்து கிழவியைத் தாங்கிக் கொண்டார்கள். ரிக்ஷாக்காரன் தன் வண்டியில் தாயியை மெல்ல ஏற்றி உட்கார்த்திக் கொண்டான்.

அந்த வினாடி நேரப் பிரமையிலிருந்து தாயி விடுபட்டு விட்டாள். தான் பார்த்தது எதுவும் உண்மை யல்லவென்றும், வெறுமே பயந்துவிட்டோமென்றும் தீர்மானித்துக் கொண்டாள். அதற்கேற்றாற்போல் மீண்டும் அந்த மாடியை நோக்கி அவள் பார்த்தபோது, அச்சுறுத்தும் எதுவும் அங்கே காணப்படவில்லை. 'சூரி ரொம்ப நல்லவர். பேய் பிசாசுங்க அவர் வீட்டை நெருங்கினாலே எரிஞ்சு சாம்பலாயிடாதா?' என்று அவள் சொல்லிக் கொண்டாள்.

"பாட்டி! இந்த நிசி வேளையிலே எங்கே புறப்பட்டீங்க? எங்கிருந்து வரீங்க? சினிமா பார்த்திட்டா?" என்று ரிக்ஷாக்காரன் பிரியம் கலந்த கேலியுடன் அவளை விசாரித்த போது, "எனக்கு எதுவுமில்லேப்பா. லேசாத் தலை சுத்திச்சு," என்று சொல்லிவிட்டு எழுந்து கொண்டாள்.

ஆனால் கூட்டத்திலிருந்த இன்னொருவர் அவளை விடத் தயாராயில்லை. "பாட்டி, நீ இன்னும் கொஞ்ச தூரம் போய் மறுபடி தலை சுற்றி விழுந்தா யானால் என்ன செய்வது? மறுத்துப் பேசாமல் ரிக்ஷாவிலே ஏறிக்கொள்," என்று அதட்டியதோடு, "இந்தாப்பா, பாட்டியைப் பத்திரமாய்க் கொண்டுபோய்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

விட்டுவிடு," என்று ரிக்ஷாக்காரனிடம் ஒரு ரூபாய் கூலியையும் கொடுத்தார்.

தாயிக்கும் வலியவந்த துணையை உதறுவானேன் என்று தோன்றியதால், ரிக்ஷாவில் ஏறிக்கொண்டாள்.

சினிமா இரவுக் காட்சிகள்கூட அப்போது முடிந்து விட்டன. ரஸ்தா ஈ காக்கையற்றுக் கிடந்தது. சில்லென்று ஒரு குளிர் காற்று வீசத் தொடங்கியது. விடிகாலைப் பொழுது நெருங்கிக் கொண்டிருப்பதற்கு அடையாளமாக இருட்டின் அடர்த்தியும் கருமையும் அதிகரித்தன.

அடையாறு பாலத்தைக் கடந்து இறங்கியதும் ரிக்ஷாக்காரன், "பாட்டி! எங்கே இருக்குது உன் குடிசை?" என்று வினவினான்.

தாயிக்குச் சிரிப்பே வந்துவிட்டது, அவன் கேள்வியைக் கேட்டதும். புகையிலைத் துண்டைக் குதப்பிக் கொண்டிருந்தவள், அதைத் துப்பிவிட்டு, "தம்பி, நான் இருக்கிறது குடிசை இல்லை. அதோ தெரியுது பாரு, அரமனை மாதிரி பங்களா! அங்கே இருக்கிறேன்," என்றாள்.

ரிக்ஷாக்காரன் ஆச்சரியமோ அதிர்ச்சியோ காட்டவில்லை. மாறாக, டக்கென்று ரிக்ஷாவை இறக்கினான். "அந்தப் பங்களாவுக்கு நான் வர மாட்டேன். இங்கேயே இறங்கிக்க," என்றான் கண்டிப்புடன்.

"அட பாவிப் புள்ளே! என்னடா மிரட்டுறே?" என்று கன்னத்தில் கை வைத்துக்கொண்டு அதிசயித்தாள் தாயி.

"சீ! மன்சன் வருவானா அங்கே! மீசையும் மல் ஜிப்பாவுமாய் ஒரு பெரிய மன்சன் இருக்கிறானே, மானேசரோ என்னவோ, அவன் மூஞ்சியிலே நான் முழிக்க மாட்டேன்!" என்றான் ரிக்ஷாக்காரன் கோபமாக.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

தாயி ரிக்ஷாவிலிருந்து இறங்கிக்கொண்டு விட்டாள். ஆனால் அதற்கு முன்பு, தன் சேலைத் தலைப்பிலிருந்து கொஞ்சம் துணியைக் கிழித்து வைத்துக் கொண்டு, "பொன்னடி என்னப்பா பண்ணினாரு உன்னை? நல்லவராச்சுதே?" என்று அவன் வாயைக் கிண்டினாள்.

"திருட்டுப் பயல் பாட்டி அந்த ஆளு! அவனையா நல்லவன்னு சொல்லுறே? யோக்கியனாயிருந்தால் ராவு ஒரு மணிக்கும் இரண்டு மணிக்கும் தோட்டத்தைக் கொத்தச் சொல்லுவானா?"

"எப்ப அப்படிச் செஞ்சாரு?"

"போன திங்கட்கிழமை. நானும் இன்னும் அஞ்சாறு பேரும், ஐயோ பாவம் கெஞ்சுறானேன்னு இங்கே வந்தோம். விடிகாலை ரெண்டு மணி வரை தோட்டத்திலே கிழக்குப் பக்கத்து மூலையிலே பள்ளம் தோண்டினோம். புதைச்சு வச்சிருக்கிற எதையோ தேடறான் போலிருக்குது. எங்களண்டை சொல்லலை அவன். சரி, சொல்ல வேணாம். ஆனா நியாயமாகக் கூலி கொடுக்க வேணாம்? ஆளுக்கு நாலணா கொடுக்கிறான், பாட்டி. ரெண்டு மணிநேர வேலைக்கு! போடா பிச்சைக்காரக் கழுதைன்னு அவன் மூஞ்சியிலே துட்டை விசாட்டிட்டு வந்திட்டோம். இன்னொரு வாட்டி அங்கே கால் வைப்பமா, பாட்டி?"

ரிக்ஷாக்காரன் தன் வண்டியைத் திருப்பிக் கொண்டு போய்விட்டான்.

தாயி யோசித்தாள்.

நடு இரவிலே தோட்டத்திலே ஆள் வைத்துக் கொத்தி, எதையோ தேடுகிறான் பொன்னடி!

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

தாயி தன் கையிலிருந்த துண்டுத் துணியில் ஒரு முடிச்சுப் போட்டுக் கொண்டாள் — அந்த விவரம் மறக்காமலிருப்பதற்காக. பிறகு பங்களாவுக்குள் நுழைந்து தன் குடிசையை அடைந்தாள்.

அடுத்த மூன்று நாட்களில், பொன்னடியைப் பற்றி மேலும் பல தகவல்களை அவள் கண்டறிந்தாள். படிக்கத் தெரிந்தவர்களாயிருந்தால் டயரியில் குறித்து வைப்பார்கள். தாயிக்கு அது தெரியாததால், தன் துண்டுத் துணியில் ஒவ்வொன்றாக முடிச்சிட்டுக் கொண்டாள்.

நான்காம் நாள் விடிகாலை, ஓர் இளைஞன் அவளைத் தேடி வந்தான். சோடாப்புட்டி மூக்குக் கண்ணாடியும் முழுக் கைச் சட்டையும் அணிந்திருந்த அந்த உயரமான வாலிபன், ஒரு தினசரித் தாளைத் தாயியிடம் கொடுத்து, "பாட்டி! இதைக் கொண்டு போய்ப் பொன்னடியிடம் கொடு," என்றான்.

"ஐயையோ! அவனண்டை நான் போக மாட்டேன்! என்னை அடிச்சே போடுவான்!" என்று பயத்துடன் மறுத்தாள் தாயி.

"அதுதான் இல்லை. இதோ இந்தச் செய்தியைக் காட்டு. அவன் சந்தோஷப்பட்டு, உனக்கு இனாம் கொடுக்காவிட்டால் என் பேரை மாற்றிக் கொள்கிறேன்!" என்று சவால் விட்டான் வந்தவன்.

"உன் பேர் என்ன?"

"சக்கரை."

அந்தச் செய்தித் தாளை எடுத்துக்கொண்டு பங்களாவினுள் சென்றாள் தாயி.

அவளுக்கே தெரியாமல், அவளை ரகசியமாய்ப் பின் தொடர்ந்தான் சக்கரை.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

15

சக்கரைக்குத் தோல்விதான்.

அவனும் தலைகீழாகத்தான் முயன்று பார்த்தான் படித்து மனப்பாடம் ஆகியிருந்த ஷேக்ஸ்பியர் வரிகளத் தனையையும் நினைவு படுத்திக்கொண்டான்.

ஊஹூம். இந்தச் சந்தர்ப்பத்தில் அந்தக்கவி என்ன கூறியிருப்பாரென்று தெரியவில்லை.

அடையாறு கலிவரதனின் பங்களாவில், பாழடைந்து கிடந்த அவுட்ஹவுசுக்குப் பக்கத்துக் குடிசையிலிருந்த வேலைக்காரக் கிழவி தாயினைக் கிளப்பி, பொன்னடியிடம் அனுப்பியாகிவிட்டது. அம்பிகாவின் குட்டு அம்பலமாகி விட்டதென்ற பொய்ச் செய்தியைத் தாங்கிய தினசரித் தாளுடன் கிழவி உள்ளே போயிருக்கிறாள்.

அதிகாலை நேரம். மணி எட்டுக்குள்தான் இருக்கும். சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டு ஓசைப் படாமல் அந்தக் கிழவியின் பின்னேலேயே நடந்த சக்கரை, இதே சூழ்நிலையை ஷேக்ஸ்பியர் கற்பனை செய்திருந்தாரானால் என்ன பாடியிருப்பார் என்று ஊகிக்க முயன்றதில் ஆச்சரியமில்லை.

அவனுடைய எண்ணம் சட்டென்று நின்றது — உள்ளேயிருந்து வந்த ஓர் உற்சாகமான குரலினால்.

"சபாஷ்! சபாஷ்!" என்று கூவிக் கொண்டிருந்தவன் பொன்னடிதான். "பாட்டி! உன்னைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளச் சொல்லியிருந்தேனே, அந்த

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ஆர்டர்கூடக் கேன்ஸல் பண்ணிவிட்டேன். போ! அப்படி யொரு நல்ல சேதி கொண்டு வந்திருக்கிறாய்!"

சக்கரை எட்டிப் பார்த்தான். பக்கா ரௌடியின் தோற்றம் கொண்டவனான் பொன்னடியின் முகத்தில் இணக்கமும் புன்னகையும் பரவியிருந்தன. தினசரித் தாளைக் கண்ணாலேயே விழுங்கி விடுகிறவன் போல ஆவலுடன் திரும்பத் திரும்பப் பார்த்தவாறிருந்தான். வாய்விட்டும் மனசுக்குள்ளும் அந்தச் செய்தியைப் படித்துப் படித்து மகிழ்ந்தான்.

சக்கரை தொண்டையைக் கனைத்துக் கொண்டான். மனிதன் செய்யும் தீமை, அவன் மரித்த பின்னும் உயிர் வாழ்கிறது; அவன் செய்யும் நன்மை அவன் எலும்புடன் புதைந்து விடுகிறதே என்று ஷேக்ஸ்பியர் புலம்பியது உண்மையாயிருக்குமானால், பொன்னடி, நீ பயந்து கொண்டேயிருந்தது நியாயம்தான்."

தர்பாரில் நுழையும் சக்கரவர்த்தியைப்போல உரிமையுடனும் மிடுக்குடனும் பிரவேசிக்கும் அந்த சோடா புட்டி மூக்குக் கண்ணாடிக்காரனைத் திகைப்புடன் பார்த்தான் பொன்னடி. மறுவினாடி திகைப்பு நீங்கி, கோபம் எழுந்தது அவன் உள்ளத்தில். தான் இத்தனை நேரமும் அனுபவித்தது அற்ப சந்தோஷம்தான் என்பது சக்கரை சொல்லாமலே புரிந்துவிட்டது அவனுக்கு. தன்னை இந்த ஆள் முட்டாளடித்து விட்டானென்பதை உணர்ந்ததும் அவன் கண்கள் சிவந்தன. "யார் நீ? எங்கேயிருந்து வருகிறாய்?" என்று உறுமிக்கொண்டே சக்கரைமீது பாய வந்தான்.

தாயி, பாவம், இந்தத் திடீர்த் திருப்பத்தை எதிர் பார்க்கவேயில்லை. முதலில் அவள் பயந்துகொண்டுதான் வந்திருந்தாள். ஆனால், சக்கரை கொடுத்த தைரியம் அவளைச் சிறிது தெம்புபடுத்தியிருந்தது. பொன்னடியிடம் வந்து, அவன் தினசரியைப் பார்த்ததும் காட்டிய சந்தோஷம், அந்தக் கிழவியின் அச்சத்தைப் போக்கி,

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

'அப்பாடா!' என்ற ஆறுதலை ஏற்படுத்தியிருந்த சமயத்தில்—

மறுபடியும் ஏன் ஒரு புரட்சி? அவளால் விளங்கிக் கொள்ள முடியாததால் பரிதாபமாக, "இவர்தானுங்க இந்தக் காயிதத்தைக் கொடுத்தவரு," என்று குரல் நடுங்கக் கூறினாள்.

சக்கரை புன்னகையுடன் ஒரு மோடா மீது அமர்ந்து கால்மேல் கால் போட்டுக் கொண்டான். "நான் பம்பாயிலிருந்து வந்திருக்கும் மனத்தத்துவ நிபுணன். பெயர் சக்கரை. மறுபிறவி என்று அம்பிகா சொல்வதெல்லாம் முதல் நம்பர் புரட்டு என்று நிரூபிப்பதே என் வருகையின் குறிக்கோள்," என்று தன்னைத் தானே அறிமுகம் செய்து கொண்டான்.

பொன்னடி தன் இருக்கையினின்றும் எழுந்து கொண்டு அடிமேலடி வைத்துச் சக்கரையை நெருங்கினான். விழிகளை அசைக்காது உற்றுப் பார்த்தான். அம்பிகாவின் எதிரி என்ற முறையில் சக்கரையின் விஜயத்தை அவன் வரவேற்றாலும், தந்திரமாக ஒரு தினசரியைத் தயார் பண்ணியவன் என்ற வகையில் சக்கரையின் மீது சந்தேகமே அதிகரித்தது அவனுக்கு.

"கிழவி! நீ போ," என்று முதலில் தாயியை விரட்டி விட்டான். தலை தப்பியது முன்னோர் புண்ணியம் என்றெண்ணியவள் போல் வேலைக்காரக் கிழவி வெளியேறினாள், வேகமாக.

"உன்னிடம் எனக்குச் சந்தேகமாய்த்தான் இருக்கிறது," என்று முறைப்பாகவே பேசினான் பொன்னடி.

"சந்தேகத்தைப் போலத் துரோகி கிடையாது என்று ஷேக்ஸ்பியர் சொல்லியிருக்கிறார்." சக்கரை மூக்குக் கண்ணாடியை ஷர்ட்டின் நுனியினால் துடைத்துக் கொண்டான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"லெக்சர் கிச்சர் அடித்தெல்லாம் என்னைப் பயமுறுத்த முடியாது," என்ற பொன்னடி, தாயி கொடுத்திருந்த தினசரித் தாளை அவன் முகத்தெதிரே நீட்டினான். "இதோ, இதிலே போட்டிருக்கிற செய்தி உண்மையா, பொய்யா? அம்பிகா, தான் செய்தது மோசடி என்று ஒப்புக் கொண்டதாக வந்திருக்கிறதே, இது நிஜமா?"

"பொய். சுத்தப் பொய். நான் தயாரித்தது. உனக்காக," என்றான் சக்கரை அழுத்தம் திருத்தமாக.

"எனக்காகத் தயாரித்தாயா?"

"ஆமாம். உனக்கே உனக்காக. இதைப் பார்த்ததும் நீ வருத்தப்படுகிறாயா, சந்தோஷப்படுகிறாயா என்று கவனிப்பதற்காகத் திட்டமிட்டேன். நீ ஆனந்தத்துடன் துள்ளு துள்ளென்று துள்ளினாய். ஆகவே உன்னைப்பற்றி நான் ஊகித்து வைத்திருந்ததெல்லாம் கரெக்ட்தான என்று நிச்சயப்படுத்திக் கொண்டேன்."

சாதாரண மிரட்டல்களுக்கெல்லாம் அஞ்சுகிறவன் அல்ல சக்கரை என்று பொன்னடி புரிந்து கொண்டான். "என்ன ஊகித்து வைத்திருந்தாய், என்ன நிச்சயப்படுத்திக கொண்டாய்? சொல்லேன், கேட்போம்," என்றான் கிண்டலில் தன் உதறலை மறைத்துக்கொண்டு.

"நிஜமாகவே அம்பிகா தேவகியின் மறுபிறவியாக இருந்தால் உன் தலைக்கு ஆபத்தாயிற்றே என்று நீ நடுங்கிச் செத்துக் கொண்டிருந்தாய். அப்படியில்லை, அம்பிகா வெறும் ஏமாற்றுதான் என்று பத்திரிகையில் படித்ததும், ஐம்பது சாம்ராஜ்யம் பிடித்த மாதிரி மகிழ்ச்சி ஏற்பட்டு விட்டது உனக்கு. உண்டா, இல்லையா?"

"கிடையவே கிடையாது," என்று பொன்னடி மறுத்த வேகமே காட்டிவிட்டது, சக்கரை சொன்னது உண்மைதான் என்பதை. "அம்பிகா நிஜமாகவே தேவகியாக இருந்தால் எனக்கென்ன ஆபத்து? அப்படி இல்லா விட்டால்தான் என்ன சந்தோஷம்?" என்றான் வீறாப்பாக.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"சொல்லட்டுமா ?"

"தாராளமாய்"

கையிலேயே வைத்திருந்த மூக்குக் கண்ணாடியை மீண்டும் மாட்டிக்கொண்டான சக்கரை. அவன் கூர்மை யாகவும் கோவையாகவும் பேச வேண்டுமென்றால், அந்த மூக்குக் கண்ணாடி இருக்க வேண்டிய இடத்திலே இருக்க வேண்டும் என்பது பல காலம் முன்பே அவன் கண்டிருந்த உண்மை.

"முதலிலிருந்து சொல்லிக்கொண்டு வருகிறேன். ஒவ்வொன்றுக்கும் உண்டு இல்லை, என்று சொல்லத் தேவையில்லை. நான் தப்பாகச் சொல்லும்போது மட்டும்— அதாவது, நான் தப்பாகச் சொல்லதாகத் தோன்றினால் மட்டும் — இல்லை என்று மறுத்துவிடு, போதும்."

ஏளனமாகப் பொன்னடி தலையாட்டினான்.

சக்கரை ஆரம்பித்தான்.

"தேவகியும் கலிவரதனும் கல்யாணம் செய்து கொள்வதற்கு முன்பிருந்தே நீ கலிவரதனின் இணை பிரியாத தோழனாக இருந்து வருகிறாய் இல்லையா கலிவரதனும் நீயும் அரிச்சுவடி முதல் சோந்து படித்தவர்கள். கலிவரதன் பணக்கார வீட்டுப் பிள்ளை பாவம், நீ பரம ஏழை. அவன் நோஞ்சான்; நீ பலசாலி அவனுக்கு அடாவடி வராது. உனக்கு வரும். அவனுக்கு படிப்பு வரும், உனக்கு வராது. ஆக, இப்படி ஒருவருக்கொருவர் இட்டு நிரப்பக்கூடிய பள்ளங்கள் நிறைய இருந்ததால் உங்கள் இரண்டு பேருக்கும் பலமான சிநேகிதம் வளர்ந்து விட்டது.

ஹைஸ்கூலில், நீ ஓரோர் வகுப்புத் தங்கித் தங்கி முன்னேறினாய. அவன் கிடுகிடுவென்று போய்விட்டான். ஆனாலும் கூட அவனுக்கு நீதான் அடியாள். எங்கே, யார் அவனுடன் சண்டை போட்டாலும் நீ முன்னின்று கலிவரதனின் பகைவர்களை விரட்டியடிப்பாய்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கொஞ்ச நாளில் அவனுடைய சாது இயல்பும் போய் விட்டது. நீ இருக்கிற தைரியத்தில் ஊர் வம்புகளை வரவழைத்துக் கொண்டான். படிப்புக் குறைந்து ரௌடித்தனம் அதிகமாயிற்று. உனக்கும் அது வசதியாகவே இருந்ததால், தட்டிக் கொடுத்து வளர்த்தாய் அவனுடைய காலித்தனங்களை."

பொன்னடி குறுக்கிட்டு, "அவரைப்பற்றி மரியாதையாகவே பேசு," என்றான்.

"நீ அவரிடம் வைத்திருக்கிற மரியாதைக்கு என்னுடையது குறைந்து விடாது. கவலைப்படாதே," என்று சிரித்தவாறு மொழிந்த சக்கரை தொடர்ந்தான்.

"பெரியவனானதும், கலிவரதனின் கைக்குச் சொத்தும் அதிகாரமும் வந்தன. நீயும் கூடவே அவனுடைய செகரடரி என்று ஒட்டிக் கொண்டாய்."

"அவர்தான் வருந்தி வருந்திக் கூப்பிட்டார்."

"எப்படியானால் என்ன? உன் காட்டில் மழை சக்கைப் போடு போட்டது. 'கொடுங்கோலர்கள் முத்த மிட்டுக் கொண்டார்களானால் அது அஞ்சவேண்டிய காலம்' என்று ஷேக்ஸ்பியர் சொன்ன மாதிரி, நீங்கள் இருவரும் சேர்ந்தது, மற்றவர்களுக்கு ஆபத்தாயிற்று. ஆனால் கொஞ்ச நாளைக்குத்தான். வக்கீலைப் பார்க்கிறேன் என்று ஒருநாள் வெளியூர் போனான் கலிவரதன். உன்னை விட்டு விட்டுத் தனியே போன அந்தச் சந்தர்ப்பம் பார்த்து, அவனைக் காதல் நோய் பிடித்துக் கொண்டது. அது உனக்கே தெரியாது, ஆறு மாதம்வரை."

"உனக்கு மட்டும் தெரியுமாக்கும்?" என்று ரோஷமாகக் கேட்டான் பொன்னடி.

"நானும் அங்கே கொஞ்சம், இங்கே கொஞ்சம் என்று எறும்பு மண் சேகரிக்கிற மாதிரிதான் இந்த வரலாற்றையெல்லாம் சேகரித்தேன்," என்று சக்கரை ஒப்புக் கொண்டான். "மேலே கேள். காதல் நோய் வளர்ந்த

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ஆறு மாத காலத்துக்கு, அடிக்கடி உன்னை விட்டு விட்டுத் தனியே போவதும் வருவதுமாயிருந்தான் கலிவரதன். கடைசியில் ஒருநாள் திடீரென்று தேவகியைக் கல்யாணமே செய்து கொண்டு வந்து விட்டான். எப்படி இருக்கும் உனக்கு!"

"எப்படி இருக்கும்? எனக்கும் சந்தோஷம்தான்."

"உதட்டில் ஈரம் படாமல் பேசுகிறாயே!" என்று சிரித்தான் சக்கரை. "உனக்கு ரத்தம் கொதித்தது என்று சொன்னால், ரொம்பக் குறைத்துப் பேசியதாயிருக்கும். உன் உரிமைகளை அபகரிக்க வந்த அந்தத் திடீர் எஜமானியை நீ மனதார வெறுத்தாய். வந்தவள் கெட்டிக்காரியாகவும், கண்டிப்புக்காரியாகவும் நேர்மையானவளாகவும் இருக்கவே உனக்கு இரட்டிப்புச் சங்கடமாகிவிட்டது."

"நீ புகழுகிற அளவுக்கு ஒன்றும் அவள் இருந்துவிடவில்லை," என்று பொன்னடி மறுத்தான்.

அவனைப் பொருட்படுத்தவில்லை சக்கரை. "நல்ல வேளை, கலிவரதன் உன் பங்கிலிருந்தான். தேவகி உன்னை ஒரேயடியாய் விரட்டிவிடாதபடி பாதுகாத்துக் கொண்டேயிருந்தான். அதுதான் சாக்கு என்று நீயும் கொஞ்சம் கொஞ்சமாய்க் கலிவரதனைத் தேவகியிட மிருந்து பிரிப்பதற்கு வழிகள் ஏற்பாடு பண்ணினாய். அவனுக்கு மதுபானத்தில் ருசி உண்டு பண்ணினாய்."

"ஒரு நாளுமில்லை. என்றைக்குமே அவர் குடிகாரன்தான்."

"சரி, அவனுக்கிருந்த ருசியை அதிகப்படுத்தினாய் என்று வைத்துக் கொள்ளேன். தாறுமாறாகப் பணம் செலவழிக்க வைத்தாய். கண்ட இடத்தில் கடன் வாங்கப் பண்ணினாய். மொத்தப் பலன் என்னவென்றால், கணவனுக்கும் மனைவிக்கும் மனவேற்றுமை ஏற்பட்டு விட்டது."

எஜமானியம்மாவின் முரட்டுப் பிடிவாதத்துக்கு நானென்ன செய்ய முடியும்?"

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"சரி, இருக்கட்டும். அவளுடைய மஞ்சக்காணி சொத்தைக் கலிவரதன் கேட்கப்போய், அவள் மறுக்க, கடைசியில் தனியே போய் இருக்க ஆரம்பித்தாள். நீ மறுபக்கம் கலிவரதனுக்குத் தூபம் போட்டுக் கொண்டே யிருந்தாய். ஒரு நாள், குடிபோதையோ, வெறும் ஆத்திரமோ, தேவகியைத் தீர்த்து விடுவது என்று அவன் தீர்மானித்தான். அவள் குடியிருந்த அவுட்ஹவுஸுக்குத் தீ வைத்தது —"

சக்கரை, பொன்னடியின் முகத்தைப் பார்த்தான். பிரேதம்போல் வெளுத்திருந்தது அது. சக்கரையின் பேச்சை மறுக்கவும் முடியாமல், ஏற்கவும் இயலாமல் அவன் விழிகள் நிலைகுத்தி நின்றன.

"தீ வைத்தது — இதோ இந்தக் கரங்கள்தான்!" என்று பொன்னடியின் கரங்களைப் பற்றி, கிண்டலாகக் கண்ணில் ஒற்றிக் கொண்டான் சக்கரை.

ஒரே உதறலில் தன் கையை உதறிக் கொண்டான் பொன்னடி. "பொய், பொய்! அந்தக் காரியத்தை நான் செய்யவில்லை! கலிவரதன்தான் செய்தான்! கலிவரதன் தான் செய்தான்!"

"ஆமாம், ஆமாம். பாவம், கலிவரதனும் அப்படி நம்பிக் கொண்டிருப்பதால்தான் நீ சொல்லுகிறபடி யெல்லாம் ஆடுகிறான். குடிமயக்கத்தில் என்ன செய்தோமென்று அவனுக்கே தெரியாதே! நள்ளிரவு நேரம். ஊருக்கு வெளியே யாருமில்லாத பொட்டைக் காடு. தீயணைப்புப் படை வருவதற்குள் டஜன் மாளிகைகள் சாம்பலாகிவிடுமே! அந்தத் தைரியத்தில் நீ காரியத்தை முடித்தாய். சாட்சி இல்லாததால் பழியைச் சுலபமாகக் கலிவரதன்மீது போட்டுவிட்டாய். அவனும் அதை நம்பி, பயந்து கொண்டிருக்கிறான். நீயும் இன்று வரையில் சௌக்கியமாயிருக்கிறாய்!"

"இல்லை, இல்லை," என்று பொன்னடி முனகிக் கொண்டிருந்தான், ஈன சுரத்தில்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"போகட்டும், விட்டுத் தள்ளு," என்றான் சக்கரை. "இப்போது உன் பயம் என்னவென்று சொல்லி விடுகிறேன். தீயிலே இறந்துபோன தேவகிக்குத் தெரியும், தன்னைக் கொன்றவன் உண்மையில் நீதான் என்று. அப்படியானால் இந்தப் பிறவியில் அம்பிகாவாக வந்திருப்பவளுக்கும் அது தெரியும். ஆகவே எப்பாடு பட்டாவது அம்பிகாவைத் தீர்த்துவிட வேண்டுமென்று நீ பார்க்கிறாய். கலிவரதனுக்கும் உன்னைப் போலவே பயம்தான். ஆனால், மஞ்சக் காணி நகைகளை ஒளித்து வைத்திருக்கிற இடத்தை அவள் காட்டிவிட்டால், பிறகு தீர்த்து விடலாம் என்பது அவன் எண்ணம். நீயோ, நகைகளை அம்பிகாவே எடுத்துக் கொண்டு போய்விட்டாள் என்று கதைகட்டி, சும்மாவானும் ஒரு பள்ளத்தைக் காட்டியிருக்கிறாய் கலிவரதனுக்கு. மறுபுறம், எதற்கும் நகைகள் நிஜமாகவே கிடைக்கிறதா பார்ப்போம் என்று ரகசியமாகத் தோட்டத்தைக் கொத்திக் கொண்டுமிருக்கிறாய்..."

பொன்னடியின் முகத்தில் ரத்தமெல்லாம் சுண்டி விட்டது. சக்கரை இத்தனை விவரங்கள் தெரிந்து வைத்திருப்பானென்று அவன் எதிர்பார்க்கவில்லை. அவனால் நம்பவும் முடியவில்லை.

"பயப்படாதே. நான் இருக்கிறேன்," என்று அவன் முதுகில் தட்டிக் கொடுத்தான் சக்கரை. "எனக்கும் உனக்கும் நோக்கம் ஒன்றுதான். அம்பிகா செத்தாலென்ன, வெறும் ஏமாற்றுக்காரி என்று வெளிப்பட்டால் என்ன? நான் அந்த இரண்டாவது காரியத்தில் ஈடுபட்டிருக்கிறேன். அதற்குக் கலிவரதன் ஒத்துழைப்பு வேண்டும். கலிவரதனைப் பிடிப்பதென்றால், உன் தயவு தேவை. இல்லையா?"

"நான் என்ன செய்ய வேண்டும்?"

"உன் எஜமானனை நான் பார்க்க வேண்டும். அழைத்துப் போ அங்கே."

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"எங்கே விழுந்து கிடக்கிறானோ?" என்றபடி முன்னே நடந்தான் பொன்னடி. "எங்கேயேனும் விஸ்கி நாற்றம் அடித்தால் நில்லு. சுற்று வட்டாரத்தில் இருப்பான்." சக்கரையிடம் சக்கையாய் மாட்டிக் கொண்டோமே என்ற வெறுப்பும் கசப்பும் எங்கெல்லாமோ பாய்ந்தன!

ஓட்டடையும் இருட்டும் வௌவாலும் தூசியும் நிரம்பியிருந்த அந்தப் பங்களாவினுள் அவர்கள் அதிகம் தேடிச் சிரமப்படத் தேவையிருக்கவில்லை. தோட்டத்தைப் பார்த்தாற்போலிருந்த ஒரு ஜன்னலின் விளிம்பில் தொற்றினாற்போல் உட்கார்ந்திருந்தான் கலிவரதன் — கோப்பையும் கையுமாக.

"யார்ரா அவன்? போங்கடா! போங்க! கிட்ட வராதே! என் ஆனந்தத்தைக் குலைக்காதே!" என்று சீறினான் அவன், காலடியோசை நெருங்கியதும்.

"நான்தான் சக்கரை. உனக்கு மாமனார் வீட்டு வழி உறவு," என்று கூறி அவன் அருகிலேயே சக்கரை உட்கார்ந்து கொண்டான். "தேவகி என் ஊர்தான். அநியாயமாய்த் தீ விபத்தில் செத்துவிட்டாளாமே? எனக்குத் தெரியவே தெரியாது. எங்கேயோ அக்கரைச் சீமையெல்லாம் சுற்றிவிட்டுப் போன மாசம்தான் வந்தேன். தேவகி... ஹூம்..." கைக் குட்டையினால் கண்ணைத் துடைத்துக் கொண்டான் அவன்.

"யார் சொன்னது?" என்று உடனே பொங்கி யெழுந்தான் கலிவரதன். "தேவகி செத்துப் போகவில்லை. செத்துப் போகவே மாட்டாள். அம்பிகா என்கிற பெயரிலே மறுபடியும் வந்துவிட்டாளாக்கும்!"

"ஐயோ, ஐயோ!" என்று சக்கரை தலையில் அடித்துக் கொண்டான். "அதெல்லாம் சுத்த ஃபிராடு, கலிவரதன்! நீ நம்பலாமா? அந்த அம்பிகா பக்கா பித்தலாட்டக்காரி என்பதை நிரூபித்துக் காட்டுகிறேன், பார்க்கிறாயா?'

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

மிரள மிரள விழித்தான் கலிவரதன். "எப்படிப் பண்ணுவாய் அதை?"

"எல்லாம் உன் ஒத்துழைப்போடுதான். உனக்கும் தேவகிக்கும் மட்டுமே தெரிந்திருக்கக்கூடிய ரொம்ப அந்தரங்கமான விஷயமொன்றைச் சொல்லு. அதை இந்த அம்பிகாவும் அறிந்திருக்கிறாளா என்று பரீட்சித்தால், உடைகிறது குட்டு!"

"எனக்கும்... தேவகிக்கும்... அந்தரங்கமானது..." கையில் மதுக்கிண்ணத்துடன், குழறிக்கொண்டே, தடுமாறிக் கொண்டே நடந்தான் கலிவரதன்.

சக்கரையும் பொன்னடியும் அவனைப் பேசாமல் பின்தொடர்ந்து சென்றார்கள்.

தடாலென்று ஓரிடத்தில் உட்கார்ந்து விட்டான் கலிவரதன். "ஹூஹூம்!" என்று குழந்தைபோல விசிக்க லானான் உடனேயே.

அவன் அமர்ந்த இடத்தில் உயர்ஜாதி மரத்தில் செய்யப்பட்ட, வேலைப்பாடமைந்த தொட்டிலொன்று இருந்தது, இரண்டடங்குல உயரத்துக்குத் தூசியுடன்.

"தேவகி எத்தனை ஆசைப்பட்டாள்... குழந்தை வேண்டுமென்று..." கலிவரதன் விம்மினான். "மைசூருக்குப் போயிருந்தபோது... இது வேண்டுமென்று பிடிவாதம் பிடித்து... எழுநூற்றைம்பது ரூபாய் விலை... ஆனால் குழந்தையும் பிறக்கவில்லை... அவளும் இதில் விட்டுத் தாலாட்டவில்லை..."

உற்சாகமாகக் கையைச் சொடுக்கினான் சக்கரை.

பொன்னடி புருவத்தை உயர்த்தினான்.

"யோசனை தோன்றிவிட்டது," என்றான் சக்கரை.

"என்ன?"

"ஒரு குழந்தையைப் படைக்க வேண்டியதுதான். பிறவாத குழந்தை," என்றான் சக்கரை, வெற்றியின் உற்சாகத்துடன்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

16

பொன்னடி சக்கரையை மேலும் கீழுமாக ஆராய்ந்தான். குடிபோதையில் இருப்பவர் தன் எஜமானரா அல்லது இந்தப் பம்பாய் பேர் வழியா என்று அவனுக்குத் தெரியவில்லை.

"பிறக்காத குழந்தையா?" என்று திகைப்புடன் சக்கரையைக் கேட்டுவிட்டுக் கலிவரதனைப் பார்த்தான் — அவனுக்கு ஏதாவது புரிந்திருக்குமா என்று.

ஆனால் கலிவரதன் அந்த மைசூர் தொட்டிலின் சட்டத்தைப் பிடித்தவாறு இன்னும் விசும்பிக் கொண்டிருந்தான். சக்கரை பேசியதோ பொன்னடி குழம்பியதோ அவனுக்குத் தெரியவில்லை. கண்ணிலிருந்து எத்தனை வேகமாகக் கண்ணீர் வழிந்ததோ அதே வேகத்துக்குக் கலிவரதனின் நினைவு பின்னோக்கிச் சென்று புதைந்துபோன கடந்த காலத்தோடு அமிழ்ந்து விட்டது.

"முதலில் இவர் போதையைத் தெளிவிக்க வேண்டும். கையைப பிடித்துக் கிணற்றடிக்கு அழைத்துப் போவோம்," என்று சக்கரை கூறி, கலிவரதனைப் பொன்னடியின் துணையுடன் எழுப்பினான். அது அவ்வளவு எளிதான வேலையாக இருக்கவில்லை. பிரியமுள்ள மனைவியையே பிரிந்து வருகிறவன் போல அழுது புலம்பி ஆர்ப்பாட்டம் செய்துகொண்டே வந்தான். ஆனால், கிணற்றடியில் சில்லென்ற பச்சைத் தண்ணீர் ஒரு வாளி அவன் தலையில் கொட்டப்பட்டதுமே பாதி போதை தெளிந்துவிட்டது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அடுத்த மூன்று வாளித் தண்ணீர் அவனை முற்றும் குணப்படுத்தி விட்டது. "என்ன இது? என்னை என்ன செய்கிறீர்கள்?" என்று கோபிக்கவும் முற்பட்டான்.

உடம்பைத் துவட்டிக் கொள்ளவும் உடை மாற்றிக் கொள்ளவும் அவனுக்கு அவகாசம் தந்தபின், சக்கரை தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டான். ஆனால், "பொன்னடியும் நானும் ஒரு முக்கியமான அலுவலில் ஈடுபட்டிருக்கிறோம். உங்கள் மனைவியான தேவகியின் மறுபிறவி என்று அம்பிகா என்றொரு பெண் சொல்லிக் கொண்டு திரிகிறாளே, அதை அப்பட்டமான புரட்டு என்று நிரூபிக்கப் போகிறோம்," என்று சக்கரை கூறியதும் கலிவரதனின் அடங்கியிருந்த சினம் அதிகரித்து விட்டது.

"அவளா? புரட்டுக்காரியா? கிடையவே கிடையாது. அவள்தான் தேவகி. இங்கே தோட்டத்தில் புதைத்து வைத்திருந்த நகைகளையெல்லாம்கூடக் கண்டு பிடித்து எடுத்துப் போயிருக்கிறாளே, வேறு எப்படி? தேவகியாயில்லாவிட்டால் அவளுக்கு எப்படி இந்த இடம் தெரிந்திருக்க முடியும்?" என்று கலிவரதன் சீறினான்.

பொன்னடி பரிதாபமாகச் சக்கரையைப் பார்த்தான். 'நான் செய்த குழப்பம் அது' என்று மன்னிப்புக் கேட்டது அவன் பார்வை.

சக்கரை வழக்கம் போல் சமாளித்துக் கொண்டு தன் கற்பனைக் குதிரையைத் தட்டிவிட்டான். "அம்பிகாவா! நகைகளை வைத்திருக்கிறாளா!" என்று கடகடவெனச் சிரித்தான். "காலேஜ் பீஸைக் கட்டக்கூட முடியாமல் அவள் லாட்டரி அடிப்பது எனக்கல்லவா தெரியும்! நேற்றுக்கூட அந்த அம்பிகாவின் சித்தி எ[illegible] அத்தையிடம்... பிரின்ஸிபால் தர்மு சிவராஜிடம் [illegible] வந்து அழுது கொண்டிருந்தாள். ஆகவே, அவள் உங்கள் தோட்டத்தில் ரகசியமாகப் பள்ளம் பறித்தது உண்மையோ என்னவோ, பைசாகூட அவர்கள் கைக்குக் கிடைக்க வில்லை என்பது மட்டும் சத்தியம் செய்யக்கூடிய உண்மை."

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"கடவுளே!" என்று பெருமூச்சுவிட்ட வண்ணம் நாற்காலியில் தொப்பென்று விழுந்து இரு கைகளாலும் கிராப்பைச் சிக்கெனப் பற்றிக் கொண்டான் கலிவரதன். அப்போது அந்த மாஜி லட்சாதிபதியைக் காண நேரிடும் எவருக்கும் பரிதாபம் ஊற்றெனச் சுரந்திருக்கும். "பின்னே இந்த அம்பிகா யார்? என்னுடைய பழைய வாழ்க்கையில் குறுக்கிடுவதால் இவளுக்கு என்ன லாபம் கிடைக்கப் போகிறது!" என்று அரற்றலானான் அவன்.

சக்கரை மெல்ல நகைத்தான். "கலிவரதன்! ஆண்டவனொருவனைத் தவிர மற்ற அனைத்தும் எந்தச் சக்தியில் உந்தப்படுகிறது? பணம். அதேதான் அம்பிகாவை யும் ஆட்டிப் படைக்கிறது."

"பணமா!" வெறுப்புடன் சிரித்தான் கலிவரதன். "கழுத்து மட்டும் கடனிலே அழுந்தியிருக்கிறவன் இந்தக் கலிவரதன் என்பது சென்னை நகரம் மொத்தமும் அறிந்த உண்மையாயிற்றே!"

"சுருக்கம்தான் அறிவின் ஆன்மா என்றார் ஷேக்ஸ்பியர். ஆகவே சுருக்கமாகவே சொல்கிறேன்," என்று கூறத் தொடங்கினான் சக்கரை.

"என் ஊகம் இது: இறந்துபோன தேவகி, லட்சக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள நகைகளை உங்களிடம் தராமல் எங்கோ மறைத்துவிட்டு இறந்து போய் விட்டாள் என்பதும் எல்லோருக்கும் தெரியும். அல்லது இந்தத் தோட்டத்துக்குப் பிக்னிக் வந்தபோது யாராவது அம்பிகாவிடம் சொல்லியிருக்கலாம் அதைப்பற்றி. உடனே அந்தத் தேவகி போல வேடம் போட்டால், உங்கள் அறிமுகத்தையும நட்பையும் பெறலாம். இந்தப் பங்களாவுக்கும் தோட்டத்துக்கும் அடிக்கடி வந்துபோய், புதையல் இருக்குமிடத்தைத் தெரிந்து கொள்ளலாம் என்று அம்பிகா ஒருவேளை திட்டமிட்டிருக்கலாமில்லையா? ஏன், யார் கண்டது? நீங்கள் அவளைப் பழைய தேவகி யாகவே பாவித்து, மனம் நெகிழ்ந்து, மணந்து கொள்ள

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ஆசைப்பட்டால், அதற்கும் கூட இந்த அம்பிகா தயாராயிருக்கிறாளோ, என்னவோ."

சுளீரென்று அடி வாங்கியவன் போலக் கலிவரதன் திடுக்கிட்டு நிமிர்ந்து சக்கரையைப் பார்த்தான். இறந்துபோன தேவகியை மறுபடியும் மனைவியாக — இறந்தபோது இருந்த அதே யௌவன வயதினளாக — பெறக் கூடும் என்ற உண்மை அவன் உள்ளத்தில் எத்தனை விதமான குழப்பங்களைத் தோற்றுவித்ததோ! அவன் பேச்சுத் தடுமாற்றத்துடன் வெளிப்பட்டது. "பின்னே... அவள் தேவகியாக இருந்தபோது நடந்ததையெல்லாம் சொல்கிறாளே... முன் ஜென்மத்து விஷயங்களை எப்படி அவள் பேசுகிறாள்..."

"அதைத்தான் இப்போது வெட்டொன்று துண்டிரண்டாகப் பரீட்சை செய்துவிடுவோம் என்கிறேன். அதற்காகத்தான், உங்களுக்குள் அந்தரங்கமான விஷயமொன்றைச் சொல்லும்படி கேட்டேன்."

இத்தனை நேரமும் மௌனமாயிருந்த பொன்னடி, "அதற்குத்தான் நீங்கள் தொட்டில் சங்கிலியைப் பிடித்துக் கொண்டு அழ ஆரம்பித்தீங்க," என்று நினைவூட்டினான்.

"தொட்டில்... அந்த மைசூர் தொட்டில்..." கலிவரதனின் நெற்றியில் புருவங்கள் ஏறி இறங்கிய பின்னர் கண்ணில் ஒரு தெளிவு பிறந்தது. "ஆமாம். மைசூரிலிருந்து அந்தத் தொட்டிலை வாங்கி வந்த கொஞ்ச காலத்துக்குள் தேவகி கர்ப்பம் தரித்தாள்," என்று மெல்லச் சொல்லலானான். "ஆனால்... குறைப் பிரசவத்தால் அது போய் விட்டது. பாவம், அவளுக்கு எத்தனை ஏமாற்றம்! அடுத்த இரண்டு வருடங்களுக்குள் உடம்பு நன்றாய் தேறினாலொழிய மறுபடி கரு தரிக்கக்கூடாது என்று டாக்டர் எச்சரிக்கை பண்ணிவிட்டார். அவள் மனசிலிருந்த சோகத்தை மாற்ற நான் படாத பாடுபட்டேன். ஆனால், கொஞ்ச நாளில், கடன் தொல்லையினால் அவளுக்கும் எனக்கும் சண்டை வந்து இருவரும் பிரிந்து விட்டோம்...

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அதற்கப்புறம் அவளும் அதிக நாள் உயிருடனிருக்க வில்லை..." கலிவரதனின் குரல் தழுதழுக்கத் தொடங்கியது.

"இதுவரை நீங்கள் சொன்னதே போதும், என் திட்டத்தை நிறைவேற்ற," என்றான் சக்கரை.

"என்ன திட்டம்?" என்று கலிவரதன் கேட்டுக் கொண்டிருந்தபோது அறையைக் கூட்டுவதற்காக வேலைக்காரத் தாயி உள்ளே வந்தாள்.

"ஏய் சனியனே! போ வெளியே! இப்பத்தான் நேரம் பார்த்தாயாக்கும்?" என்று அவளை விரட்டிவிட்டுக் கதவைச் சாத்திக்கொண்டு திரும்பிய பொன்னடி, சக்கரை சொல்லப் போவதை ஆவலுடன் கவனிக்கலானான்.

"பிரம்மாண்டமான திட்டமோ சிக்கலான யோசனையோ இந்த மூளையிலிருந்து வந்துவிடாது. பயப்படாதீர்கள்," என்றான் சக்கரை. "யாராவது ஒரு வாலிபனைப் பிடிக்க வேண்டியது. உங்கள் மனைவி உயிருடன் இருந்தபோது அவனுக்கு ஐந்து அல்லது ஆறு வயது இருந்திருக்க வேண்டும். அதாவது, இப்போது இருபத்து மூன்று, இருபத்து நாலு இருக்கும். அவனுக்குக்கூட நாம் சொல்லி வைக்க வேண்டாம். சும்மா பார்த்து வைத்துக் கொள்வோம். போதும்."

"பார்த்து வைத்துக்கொண்டு?" என்று கலிவரதன் திகைத்தான்.

"அம்பிகாவை அழைத்துக் கொண்டு போவோம். 'ஒரு பையனைத் தத்து எடுத்துக் கொள்ளலாமென்று முன்பு நாம் பேசினோமே, நினைவிருக்கிறதா?' என்று பேச்சுக் கொடுங்கள். 'லேசாய் நினைவிருக்கிறது' என்பாள். 'இதோ அந்தப் பையன். அடையாளம் தெரிகிறதா பார்' என்று நாம் பார்த்து வைத்திருக்கும் பையனைக் காட்டுங்கள். 'ஆமாம், ஆமாம்... இவன்தான்' என்று அம்பிகா சொல்லட்டும். அங்கேயே அவளைப் போலீசில் பிடித்துக் கொடுக்க வேண்டியதுதான்."

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கலிவரதனும் பொன்னடியும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள் திகைப்புடன். ஆனால் சக்கரையின் யோசனையில் குறை சொல்லத் தக்கதாக எதுவும் அவர்களுக்குத் தெரியவில்லை.

கலிவரதனுக்குக் குடிமயக்கம் நன்றாய்த் தீர்ந்து விட்டதால் சுறுசுறுப்புடன் எழுந்து கொண்டான். சுய நினைவுடன் இருக்கும்போது காணப்படும் மிடுக்கும் திரும்ப வந்துவிட்டது போலும். "பொன்னடி, நீ போய்க் காரை எடு. இதோ வருகிறோம்," என்று உத்தரவு இட்டான்.

ஆனால், ஸென்ட் வாசனையும் ஸில்க் சட்டையு மாய் சக்கரையுடன் வாசலுக்கு வந்தபோது கார் காணப் படவில்லை. தொலைவிலிருந்து ஷெட்டிலிருந்து நடந்து வந்த பொன்னடி, "என்னவோ மக்கர் பண்ணுகிறது," என்று தெரிவித்தான்.

சக்கரைக்கு, கலிவரதன் நல்ல புத்தியோடு இருக்கும் போது காரியத்தை முடித்துக் கொள்ளவேண்டும் என்ற பரபரப்பு. எனவே, "கார் எதற்கு அனாவசியமாய்? எவனாவது ஒரு வாலிபனைப் பிடிக்கப் போகிறோம். அவ்வளவுதானே? வெய்யில் அதிகம் ஏறவில்லை. பேசிக் கொண்டே நடந்து போவோம்," என்றான்.

பொன்னடியும் கலிவரதனும் அதை ஆமோதிக்கவே, மூவரும் அடையாறு பங்களாவிலிருந்து கிளம்பி, பஸ் சாலையோடு நடந்தார்கள். மூவரும் பேசவில்லை. மாசு மருவற்ற திட்டமொன்றைக் கண்டு பிடித்து விட்டோமென்ற பெருமிதத்தில் மூழ்கியிருந்தான் சக்கரை. ஒரு வேளை அம்பிகா இந்தப் பரீட்சையிலும் வெற்றிகரமாகத் தேறி, தான் தேவகியின் மறுபிறவிதான் என்பதை நிரூபித்துவிட்டால் என்ன ஆவது என்ற கவலையில் மூழ்கியிருந்தான் பொன்னடி. 'அம்பிகா தேவகி அல்ல. உன்னை மணக்கலாமென்ற நோக்கத்தோடு வேடம் போடுகிறாள்' என்று சர்க்கரை தூண்டிவிட்ட கற்பனையில்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ஒருவகை இன்பத்தைக் கனவு கண்டு கொண்டிருந்தான் கலிவரதன்.

அடையாறு பாலத்தில் இறங்கி இரண்டொரு பர்லாங்கு சென்றதும் கலிவரதன், "தாகமாயிருக்கிறது. ஐஸ் ட்ரிங்க் ஏதாவது குடிக்கலாம், என்றான். அவனுடைய அசல் 'தாகம்' நினைவு வந்து எங்கே பங்களாவுக்கே திரும்பி விடுவானோ என்ற அச்சம் எழுந்தது சக்கரைக்கு. உடனே, "அதோ ஒரு வெற்றிலைப் பாக்குக் கடை. வாருங்கள்," என்று அழைத்துச் சென்றான்.

சிறிய கடையானாலும் முன்புறம் பந்தல் மாதிரி ஒரு சிறு சார்ப்புக் கட்டி, ஒரு பெஞ்ச்சும் போடப் பட்டிருந்தது. மூவரும் அங்கே அமர, சக்கரை, "நன்னாரி சர்பத் மூன்று கிளாஸ் போடப்பா. எனக்கு மட்டும் ஐஸ் வேண்டாம்," என்று ஆர்டர் கொடுத்தான்.

"வணக்கம் சார்," என்று கடைக்காரன் கலிவரதனுக்கு வணக்கம் தெரிவித்தபோது மூவர் பார்வையும் அவன் பக்கம் சென்றது.

அந்த வட்டாரத்தில் பிரபலமான பணக்காரனாத லாலும் சமீபத்தில் தினசரியில் அடிபட்ட செய்திக்கு நாயகனாதலாலும் கலிவரதனை அவன் தெரிந்து வைத்திருந்தான் போலும். "எஜமானை அடிக்கடி பார்த்திருக்கிறேன்," என்று புன்சிரிப்புடன் கூறிவிட்டு, சர்பத் தயாரிக்கத் தொடங்கினான்.

மூவரின் பார்வையும் ஒன்றோடொன்று கலந்தன; முதலில் வியப்பும் பிறகு சம்மதமும் கூறிக்கொண்டன.

கடைக்கார வாலிபன், அவர்கள் தேடிய பிராயத்த வனாக இருந்ததே காரணம்.

'நியாயம் எங்கள் கட்சியில் இருக்கிறது; ஆகவே கடவுள் எங்களைச் சிநேகிதம் பண்ணிக் கொள்கிறார்' என்ற ஆங்கிலக் கவிஞரின் வாக்கு அவன் நினைவுக்கு வந்தது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

சர்பத் கிளாஸை வாங்கிக்கொண்ட சக்கரை, "நாளைக் காலை இங்கே இருப்பாயா நீ? இல்லை, வேறு ஏதாவது அலுவலுக்குப் போய் விடுவாயா?" என்று அவனை விசாரித்தான்.

"இந்த கடையைத் தவிர வேறு அலுவல் ஏது சார் எனக்கு? என்ன சார் வேண்டும்?" என்றான் அவன்.

"உன் பெயர்?"

"தாஸுங்க."

"நல்லது. நாளைக் காலை பத்து மணி சுமாருக்கு இங்கேயே இரு. நாங்கள் வருகிறோம். ஒரு சின்னக் காரியம் ஆக வேண்டியிருக்கும் உன் மூலம்," என்றான் சக்கரை. ஆனால் தாஸ் என்ற அந்தக் கடைக்கார வாலிபனின் முகத்தில் கலவரம் முளைப்பதைக் கண்டதும், "உனக்கு ஒரு கஷ்டமும் நேராது. என் வார்த்தையை நம்பு," என்று உறுதியும் கொடுத்தான்.

"சரி சார்," என்றான் தாஸ்.

மறுநாள் காலை ஏழு மணிக்குத் திருவல்லிக் கேணியின் தெற்குக் கோடியிலிருந்த அம்பிகாவின் வீட்டை அடைந்தபோது, சக்கரைக்கு ஓர் ஆச்சரியம் காத்திருந்தது.

அப்போதுதான் அங்கிருந்து புறப்பட்டுப் போய்க் கொண்டிருந்தான் சூரி. ஆனால் அவன் சக்கரையைக் கவனிக்கவில்லை. போய்விட்டான்.

வீட்டு வாசலில் நின்றிருந்த அம்பிகாவின் பார்வை வெறிச்சிட்டிருந்த போதிலும், "என்ன, யோசனையில் ஆழ்ந்து போய் விட்டீர்கள்?" என்ற சக்கரையின் குரலைக் கேட்டதும் சற்று முகமலர்ந்தாள்.

"ஒன்றுமில்லை. இந்தச் சித்தி சில விஷயங்களில் என் பேச்சைக் கேட்க மாட்டேனென்கிறாள்," என்று சொன்னவாறே உள்ளே சென்றாள்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"உதாரணமாக?" என்று கேட்டபடி பின் தொடர்ந்தான் சக்கரை.

அதற்குள் அவருடைய புகார், சமையலறையில் மோர் கடைந்து கொண்டிருந்த மரகதத்தின் காதில் விழுந்து விட்டதால், "காதிலேயே போட்டுக் கொள்ளாதீர்கள் அவள் பேச்சை! வரவர, சூரியைக் கண்டாலே கரித்துக் கொட்டுகிறாள்," என்றாள்.

"அடடா! அவர் ரொம்ப நல்லவராச்சே!" ஒத்தூதினான் சக்கரை.

"பாரேன் பின்னே! ஏதோ பாவம், திருவல்லிக் கேணியில் சினிமா பார்க்க வந்தானாம் சூரி. மூன்றாவது ஆட்டம். பஸ், மோட்டார் எதுவும் அகப்படவில்லை. ராத்திரி இங்கேயே படுத்துக்கொண்டு விட்டுக் காலையிலே போகலாமா மாமி என்று கேட்டான். சரிடாப்பா என்றேன். இதோ காலையில் போய்விட்டான். அதெப்படி அவனை இங்கே இருக்கச் சொன்னாய் என்று இவள் என்னைச் சண்டை பிடிக்கிறாள்," என்று மரகதம் கூறி முடித்ததும், "எனக்கு அவரைப் பார்க்கிற போதே என்னவோ போலிருக்கிறது என்று தினம் தினம் சொல்லிக் கொண்டிருக்கிறேன், ஒரு ராத்திரி இங்கேயே தங்க வைத்தால் எனக்கெப்படி இருக்கும்!" என்று தன் கட்சியைக் கூறினாள் அம்பிகா.

"இரண்டு பேர் சொல்வதும் நியாயம்தான்," என்று சமாதானப் படுத்தினான் சக்கரை. ஆனால் முந்தின இரவு சூரி இங்கே தங்கினான் என்ற விஷயமொன்று அவன் மனதுக்குள் எதனாலோ உறுத்தத் தொடங்கியது.

"கொஞ்சம் காப்பி சாப்பிடுகிறீர்களா?" என மரகதம் உபசரித்தாள்.

"வேண்டாம். வேறு காரியமாக நான் வந்தேன் உங்கள் இரண்டு பேரையும் கலிவரதனிடம் அழைத்துப் போக வேண்டியிருக்கிறது. இப்போதே புறப்படுங்கள்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

காலேஜ் நேரத்துக்குள் திரும்பிவிடலாம்," என்றான் சக்கரை.

அம்பிகா பதிலளிப்பதற்குள் அவள் சித்தி, "கலிவரதனின் வீட்டுக்கா? ஊஹூம், உஹூம். அங்கெல்லாம் தன்னைக் கேட்காமல் போகக்கூடாதென்று சூரி சொல்லியிருக்கிறான்," என்று குறுக்கிட்டாள்.

அம்பிகாவுக்கு ஜிவ்வென்று கோபம் வந்தது. "சூரிதான் இந்த வீட்டுக்கு எஜமானனா என்ன? நான் கட்டாயம் போகத்தான் போவேன்," என்று ஆத்திரத்துடன் எழுந்து கொண்டாள்.

மரகதத்தைப் பலவகையிலும் சமாதானப் படுத்தினான் சக்கரை. "நானும் சூரி மாதிரி உங்களுக்கு வேண்டியவன்தானே? பிரின்ஸிபாலின் மருமான் இல்லையா? தீங்கு செய்வேனா உங்களுக்கு?" என்று வாதாடிய பிறகே மரகதம் ஒருவாறு இணங்கினாள்.

பாலத்தின் இறக்கத்தில் பொன்னடியுடன் கலிவரதன் காத்திருந்தான், அவர்கள் மூவரும் சென்றபோது.

கலிவரதன் போதையில் இருக்கவில்லை நல்ல வேளையாக.

ஆனால், அம்பிகாவைத்தான் ஒரு விதமான மயக்கம் ஆட்கொள்ளத் தொடங்கியது. தூக்கத்தில் நடப்பவளைப் போல அவள் விழிகள் பாதி மூடியும் பாதி திறந்தும் செருகிக்கொண்டன. பேச்சு சற்று குழறினாற் போல ஆயிற்று. வேறோர் உலகத்தில் அவள் நுழைந்து கொண்டிருக்கிறாள் என்பதை அவளுடைய தள்ளாடிய நடை தெரிவித்தது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

17

சக்கரை எதையும் கவனிக்கவில்லை. கலிவரதனும் பொன்னடியும் என்ன பேசுகிறார்களென்றும் அவன் காதில் விழவில்லை. "வேண்டாம் வேண்டாமென்று சூரி எவ்வளவோ சொல்லியிருக்கிறான். இந்தப் பெண்ணோட பிடிவாதத்தினால் நான் இன்னும் என்னவெல்லாம் படப் போகிறேனோ!" என்று முணுமுணுத்துக் கொண்டிருந்த மரகதத்தின் பக்கமும் அவன் திரும்பவில்லை.

அம்பிகாவின் முகத்தையே உற்று நோக்கியவாறு இருந்தான் அவன். அவள் உடம்பில் ஏற்படுகிற ஒவ்வொரு மிரட்சியும், நெற்றியில் வளைகின்ற ஒவ்வொரு சுருக்கமும், அதட்டில் விளைகின்ற ஒவ்வொரு துடிப்பும் அவன் கவனத்தைக் கவர்ந்து கொண்டிருந்தன. அவள் மெல்ல மெல்லத் தன்னுடைய இன்றைய, பிரத்தியட்ச உலகத்தை விட்டு நீங்கி, நேற்றைய கற்பனை உலகத்தினுள்ளே பிரவேசித்துக் கொண்டிருக்கிறாள் என்பதை அவன் ஒருவனால்தான் உணர முடிந்தது. ஏதாவது கேட்கப் போய் அம்பிகா விசித்திரமாகப் பதிலளித்துவிட்டால் மற்றவர்கள் காபரா அடைந்து விடக்கூடும் என்று சக்கரை அஞ்சினான். தன்னுடன் இன்று இருப்பவர்களில் எவரும் உணர்ச்சிவசப்பட்டு ஒரு முடிவுக்கு வருவதை ஆனமட்டும் தடுத்து விடுவது என்று தீர்மானமாயிருந்தான் அவன். அறிவுக்குப் பொருத்தமான விதத்தில் உண்மையை அவர்கள் அறிய வேண்டு மென்பதிலேதான் அவனுடைய நாட்டம் இருந்தது.

அவன் சும்மா இருந்தாலும் மரகதம் சும்மா இருக்கத் தயாராயில்லை. கலிவரதனையும் தன் மகளையும்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

சேர்த்துப் பார்க்கும்போதே அவளுக்கு அடிவயிற்றில் சங்கடம் ஏற்பட்டது போலும். "அம்பிகா, ஏன் என்னவோ போலிருக்கிறாய்? தைரியமாயிரு. யார் உன்னை என்ன பண்ணி விட்டார்கள்?" என்று அவளைச் சமாதானப் படுத்துகிற சாக்கில் தன் கலவரத்தை வெளியிட்டுக் கொண்டிருந்தாள்.

கலிவரதன் புன்சிரிப்புடன், "என்ன மிஸ் அம்பிகா, சௌக்கியமா?" என்று விசாரித்தான்.

பொன்னடிக்கு விஷயத்தைச் சட்டுப் புட்டென்று முடித்து, இரண்டிலொன்று தெரிந்து கொண்டுவிட வேண்டுமென்ற பதற்றம். ஒரு நிமிடம்கூட வீணாவதை விரும்பாதவனாக, "அதோ ஒரு வெற்றிலை பாக்குக் கடை இருக்கிறது. அங்கே ஏதாவது தாகத்துக்குக் குடிக்கலாம்," என்று யோசனை சொல்கிற மாதிரி சொல்லி, கலிவரதனுக்கும் சக்கரைக்கும் ஜாடை காட்டினான்.

ஒரு வேப்ப மரத்தின் நிழலில் காரை நிறுத்தி விட்டுக் கலிவரதன் திரும்பி வந்ததும் மூவரும் அந்தக் கடையை நோக்கி நடந்தார்கள். அலுவலக நேரமாகையால் போக்குவரத்துச் சந்தடி மிகுந்திருந்தது. சாலையில் மிரள மிரள விழிக்கும் ஓர் அழகிய நங்கையைக் கண்டாலே கும்பல் சேர்ந்து விடுமே என்று சக்கரை கவலைப்படத் தொடங்கினான். இந்தப் பரீட்சையையும் பரிசோதனை யையும் இரவு வேளையில் வைத்துக் கொண்டிருக்கலாமோ என்றும் எண்ணம் ஏற்பட்டது.

அவன் கவலையை அதிகரிக்கும் வண்ணம் திடீரென நின்றாள் அம்பிகா. மரகதத்தின் தோளில் கையை அழுத்தமாக ஊன்றிக்கொண்டு, "சித்தி! நிச்சயம்... ஆமாம்.. நிச்சயமாய்த் தெரிகிறது.. இல்லை.. தோன்றுகிறது மனசில்.." என்றாள்.

ஆடவர்கள் மூவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ள, மரகதம் சஞ்சலம் நிறைந்த குரலில்,

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"என்னடி கண்ணம்மா, என்ன தெரிகிறது அத்தனை நிச்சயமாய்?" என்றாள்.

"இங்கே... இந்தப் பக்கம்... எனக்குத் தெரிந்த யாரோ ஒருவர் இங்கே வசிக்கிற மாதிரி இருக்கிறது..." என்றாள் அம்பிகா. அவள் விழிகள் நிலைகுத்தி நின்றன..

சைக்கிளில் சென்று கொண்டிருந்த ஒரு மீசைக்கார வாலிபன் சரக்கென்று சாலையில் காலையூன்றி நின்று, "என்னாங்க அந்த லேடிக்கு?" என்று விசாரித்ததும் பொன்னடிக்குக் கோபம் வந்து, "போய்யா உன் வேலையைப் பார்த்துக்கொண்டு!" என்று ஒரே சீறலில் அவனை விரட்டி விட்டான். இருந்தாலும் அவனைப் பயம் பிடித்துக் கொள்ளவே, "பெரியம்மா! வேகமாய் நடங்க. கடைக்குப் போய்விடலாம்," என்று மரகதத்தை ஊக்கினான்.

நின்றுவிட்ட அம்பிகாவைச் சற்று அழுத்தமாகத் தள்ளினாற்போல் நடந்த மரகதம், "பட்டணம் உனக்குப் புதிதா, அம்பிகா? எத்தனையோ தரம் கலாஷேத்திரத்தையும் ஆலமரத்தையும் பார்க்க நாம் இங்கே வந்திருக்கிறோமே? நம் சினேகிதர்கள் யாராவது இருக்கத்தான் இருப்பார்கள் இந்தப் பக்கத்தில்," என்று இதமாகவும் சொன்னாள்.

"இல்லை சித்தி... அதைச் சொல்லவில்லை நான்," என்று தலையை அசைத்தாள் அம்பிகா. அவள் குரல் தாழ்ந்து கனத்து ஒலித்தது. கண்கள் கலிவரதனை மொய்க்கிற மாதிரி சுற்றிவிட்டு. சக்கரையைப் பரிதாபமாக நோக்கின. பிறகு ஒவ்வொருவரையும் மாறிப் பார்த்து, "இல்லை, இல்லை.. இந்த இடம்... இந்த மனிதர்கள்... இதெல்லாம் இந்த ஜன்மத்து விஷயம் மாதிரி தெரியவில்லை, சித்தி... முன்னே எப்போதோ, போன ஜன்மத்தில் நடந்த நினைவாக இருக்கிறது..." என்றாள்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

சக்கரையும் கலிவரதனும் பொன்னடியும் தூக்கிவாரிப் போட்டவர்களாய் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள். மரகதமோ திகிலுடன், "குழந்தை மறுபடியும் என்னென்னவோ சொல்கிறாளே? இதற்குத் தானா அழைத்து வந்தீர்கள்" என்று சக்கரையின் மீது தன் கோபத்தைத் திருப்பினாள்.

"பெரியம்மா, உங்கள் மகளை யாரும் எதுவும் செய்துவிட மாட்டார்கள்," என்று பொன்னடி அவளுக்குத் தைரியம் கூறியபோது ஐந்து பேரும் அந்த வெற்றிலை பாக்குக் கடையை அடைந்து விட்டார்கள்.

நேற்றைப் போலவேதான் இன்றைக்கும் இருந்தது கடை. வாடிக்கைக்காரர்கள் யாருமில்லை. ஆனால்—

நேற்றுப் பார்த்த அந்த வாலிபனை இன்று காணோம்.

அவனுக்குச் சகோதரி போன்று தோற்றமளித்த நடுத்தர வயதுப் பெண்தான் பெட்டியடியில் உட்கார்ந்திருந்தாள். ஐந்து பேர் கூட்டமாக வரவே, சந்தோஷத்துடன், "என்னங்க, ஐஸ் போட்டுக் கிரஷ் கொடுக்கவா?" என்று ஆர்வமாய்க் கேட்டாள்.

"அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். இங்கே ஓர் இளைஞன் இருந்தானே நேற்று? தாஸ் என்று பெயர். அவன் எங்கே?" என்று சக்கரை திருப்பிக் கேட்டதும் அந்தப் பெணணின் முகம் கறுத்தது. "தெரியாதுங்க," என்று வெடுக்கெனப் பதிலளித்துவிட்டு, முகத[illegible]தந் திருப்பிக் கொ[illegible]ண்டாள்.

[illegible] திருப்[illegible] [illegible]லியிருந் தானே. எங்கே [illegible] [illegible] கலி[illegible] கேட்டாள் பொ[illegible]னடி தன் சுபாவப்படி, "இந்தாம்மா. கில்லாடிக்குக் கில்லாடி நான். எங்கே போயிருக்கிறா னென்று ஒளிக்காமல் சொ[illegible]லு," என்று அதட்டினான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அம்பிகா ஒரு பெஞ்ச்சில் உட்கார்ந்து கொண்டு தன் நினைவுகளில் தானே ஆழ்ந்து போனாள். அவள் சித்தி, இவர்களுடன் புறப்பட்டு வந்த தனது முட்டாள்தனத்தை நொந்தவாறு எதையும் ஆட்சேபிக்கவோ எதிர்க்கவோ இயலாதிருக்கிற தன் நிலமையைக் குறித்துக் குமுறிக் கொண்டிருந்தாள்.

கடையிலிருந்த பெண், ''ரொம்பத்தான் விரட்டாதீங்க சாமி. நேத்து நீங்கதான் வந்திருந்தீங்களா! என்ன பண்ணினீங்க தாஸை? காய்ச்சலாய்க் கிடக்கிறான் நேத்தே பிடிச்சு," என்று கோபமாய்ப் பேசினாள்.

"நீ அவனுக்கு அக்காவா?" என்று பொன்னடி வினவினான்.

"ஊம்? பாட்டி!" என்று திருப்பிக் கொடுத்தாள் அவள்.

"இவ்வளவு சின்ன வயசில் ஒரு பாட்டி இருக்க முடியுமா?'' என்று சக்கரை சிரித்துக்கொண்டே சொன்னதும் அவளுக்குச் சற்று மனநெகிழ்ச்சி ஏற்பட்டது. "நான் தாஸுக்கு அக்காள் மாதிரிதான். அதோட சின்ன வயசிலேயிருந்து நான்தான் கவனிச்சுக்கிறேன்," என்றாள் கண்ணைத் துடைத்துக்கொண்டே..

"இப்போதும் அவனுக்கு ஒன்றும் நேர்ந்துவிட வில்லை அமமா, பயப்படாதே. உள்ளேதானே இருக்கிறான் தாஸ்?" என்று சக்கரை, கடையை ஒட்டினாற்போல், அதன் பின்புறமிருந்த குடிசையில் எட்டிப் பார்த்தான்.

"அங்கே இல்லீங்க அவன்," என்று கடைப்பெண் பதற்றத்துடன் தடுக்க முயன்றாள். ஆனால் அதற்குள் சக்கரை "அதோ படுத்திருக்கிறானே," என்று சொன்ன தோடு, "என்னப்பா, திடீர்க் காய்ச்சலா? இல்லை, முறைக் காய்ச்சலா?" என்று விசாரித்த வண்ணம் குடிசைக்குள் நுழைந்து விட்டான். மற்றவர்களும் அவனைப் பின்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

தொடரவே, அந்தச் சிறு மண் குடிசை இடம் போதாமல் தவித்தது.

மூலயில், கிழிசல் பாயில் படுத்து, கறுப்பு நிற அழுக்குக் கம்பளியினால் முகத்தைத் தவிர மற்ற உடம்பு பூராவையும் போர்த்துக் கொண்டிருந்த தாஸைக் கலிவரதன் அருவருப்புடன் பார்த்தான். நேற்றுத் தன்னைப் பார்த்ததால் காய்ச்சல் வந்துவிட்டதென்றும், மறுபடி பார்க்க அவன் விரும்பவில்லை என்றும் கேள்விப்பட்டது முதல் அவன்மீது அவனுக்குச் சினம் பொங்கிக் கொண்டிருந்தது. மேலும், படுத்திருந்தவனின் முகத்தை ஒருமுறை கண்டால், குழந்தை கூடச் சொல்லிவிடும் அவனுக்கு ஒரு கேடும் இல்லை என்று. அத்தனை தெளிவாகவும் அமைதியாகவும் காணப்பட்டான் தாஸ்.

எந்தப் பணக்காரருக்கும் இயல்பாக ஏற்படக் கூடிய சந்தேகம்தான் கலிவரதனுக்கும் முளைத்தது — தன்னை ஏதோ ஏமாற்றிப் பணம் பறிக்க முயலுகிறான் இவன் என்று. அதனால் இரட்டிப்பாக வளர்ந்த கோபத்துடன், "என்னப்பா உனக்கு? நல்லாத்தானே இருக்கிறாய்?" என்று உறுமினான்.

நல்ல வேளை சக்கரை அவனைக் கண்சாடை காட்டி அடக்கி, "நாம் வந்த வேலையைக் கவனிப்போம்," என்றான்.

படுக்கையில் கிடந்த தாஸ் உடனே எழுந்து உட்கார்ந்துகொண்டு "என்னண்டை என்ன வேலை உங்களுக்கு? எனக்கு அவரைப் பார்க்கவே பிடிக்கலீங்க," என்று கலிவரதனைச் சுட்டிக் காட்டினான். "நேத்து நீங்கள்ளாம் போனப்பாலேதான் நினைவு வந்திச்சு. இந்த ஆளண்டை எனக்கு ஒரு விவகாரமும் வேண்டாம்."

பொன்னடி சீற்றத்துடன், "சரி, கிளம்புங்க," என்றான் மற்றவர்களிடம். "இவனுக்கும் நமக்கும் என்ன

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

சம்பந்தம்? இவனை விட்டால் நூறு ஆள். இன்னொரு ஆள் பார்த்துக் கொள்ளலாம்."

ஆனால் கலிவரதன் எழுந்திருக்கவில்லை. அவனுடைய அகங்காரம் உக்கிரத்துடன் அவனைச் சீண்டி விட்டது. "அதென்ன. இவன் ஒரு காரணமுமில்லாமல் என்னைப் போகச் சொல்வது? நாமும் போவது? பார்த்துவிடுவோம்," என்றான்.

இந்த நாடகத்தில் ஒரே ஒரு காட்சியின் பொருளைக் கூட அறியாதவளாகையால் மரகதத்தின் நிலைமைதான் பரிதாபத்துக்குரியதாயிற்று. "என்ன இதெல்லாம்? என்ன பேசிக் கொள்கிறீர்கள்?" என்று ஒவ்வொருவர் முகமாய்ப் பார்த்து முறையிட்டாள்.

"மிஸ் அம்பிகா, கொஞ்சம் இப்படி வாருங்கள்," என்று அழைத்தான் கலிவரதன். சித்திக்குப் பின்னால் நின்றிருந்த அம்பிகா கனவில் நடப்பவள் போல அருகில் வந்ததும், "இவனைத் தெரிகிறதா, அம்பிகா? நினைவிருக்கிறதா?" என்று கேட்டான்.

அம்பிகாவின் விழிகள் சுழன்று, பின்னர் நிலைந்தன. "ஆமாம்... இவனை... இவனை..." என்ற சொற்கள் தடுமாறிக் கொண்டு வெளிவந்தன

கலிவரதன் உற்சாகத்துடன், "தேவகி என்ற முறையில் நினைத்துப் பார்.... உனக்குக் குழந்தை வேண்டும் என்ற ஏக்கம் ஏற்பட்டபோது..." என்று தொடங்கியதும் மரகதம் குறுக்கே வந்து நின்று, "ஐயையோ! மறுபடி அந்தக் கண்ணராவிக்காகத்தானா எங்களை அழைத்து வந்தீர்கள்? வயதுப் பெண்ணை என்ன கேள்வியெல்லாம் கேட்கிறீர்கள்? உங்கள் நாக்கு அழுகித்தான் போகும்," என்று புலம்பி, அம்பிகாவை மறுபுறம் அழைத்துச் செல்ல முயன்றாள். ஆனால் பொன்னடி கடுங்கோபத்துடன், "நீ சும்மா இருக்கமாட்டாய்?" என்று முறைத்தானோ இல்லையோ, அடங்கி விட்டாள்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கலிவரதன் தொடர்ந்து, "இந்தப் பையனை நாம் தத்து எடுத்துக் கொள்ளலாமென்று பேசிக் கொண்டோமே, நினைவிருக்கிறதா? உனக்குக் குழந்தை பிறக்கக் கூடாது என்று டாக்டர் சொல்லியிருந்ததால் நீயும் ஆசையுடன் சம்மதித்தாயே, ஞாபகமில்லை?" என்றான்.

அம்பிகாவின் புருவங்கள் நெரிந்தன. கண்கள் மூடிக் கொண்டன. உதடுகள் மெல்ல அசைந்து ஒவ்வொரு வார்த்தையாக உச்சரித்தன. "ஆமாம்.... ஐந்து அல்லது ஆறு வயதிருக்கும் இவனை நாம் பார்த்தபோது... சுட்டிப் பையன்... புத்திசாலி. நல்ல களை. ஆமாம்... ஒரு பள்ளிக்கூடத்தில் இவனைப் பார்க்கிறேன். நானும் நீங்களுமாய் அந்தப் பள்ளிக்கூடத்துக்குப் போகிறோம்... ஏதோவொரு விழா...."

அம்பிகாவின் குட்டு வெளிப்பட்டு விட்டதாக எண்ணி, "ஹாஹ்ஹாஹா!" என்று பொன்னடி அட்டகாசமாய்ச் சிரித்தது அந்தக் குடிசையையே அதிரச் செய்தது

"வெற்றி!" என்று கையைத் தட்டிக்கொண்டு எழுந்தான் சக்கரை.

கலிவரதன், "என்ன மோசடி! என்னமாய் நம்மை இத்தனை நாளும் முட்டாளடித்துக் கொண்டிருந்தாள் இதுவரை?" என்று வெறுப்புடன் இரைந்தான்.

"இருங்க, இருங்க!" என்று எதிர்பாராத விதமாய்க் கூவினான் படுக்கையில் உட்கார்ந்திருந்த தாஸ். "இந்த அம்மாளிடம் என்ன மோசடியைக் கண்டு விட்டீர்கள்? இவங்களைத்தானே பேப்பரிலே போட்டு இருந்தது, கலிவரதனின் இறந்துபோன சம்சாரத்தின் மறுபிறவின்னு? அதையா மோசடின்னு சொல்றீங்க? நான் சொல்றேன், இவங்க சொன்னது எழுத்துக்கெழுத்து உண்மை. நூத்துக்கு நூறு உண்மை!"

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

சக்கரை புன்னகையுடன், "தம்பி, அலட்டிக் கொள்ளாதே. நாங்கள் என்ன திட்டம் போட்டு இதையெல்லாம் நடத்தினோமென்று உனக்குத் தெரியாது!" என்றான்.

"உங்க திட்டம் எனக்குத் தெரியாதுதான். ஒப்புக்கிறேன்," என்றான் தாஸ். " ஆனால், இந்த அம்மாள் சொன்னது எதுவும் பிசகில்லை. இந்தக் கலிவரதனும், இவரோட சம்சாரம் தேவகி அம்மாளும் இருபது வருஷத்துக்கு முன்னாலே என்னை ஒரு பள்ளிக்கூடத்திலே வந்து பார்த்தது உண்மைதான். என் மேலே இரண்டு பேருக்கும் பிரியம் ஏற்பட்டது உண்மை. என்னைத் தத்து எடுத்துக் கொள்கிறேனென்று என் அப்பாகிட்டே இவர்கள் பேசினது உண்மை!"

"என்ன!" என்று சக்கரையும் கலிவரதனும் வியப்புடன் கூறினாலும், பொன்னடி மட்டும் உரக்கச் சிரித்தபடி, "டேய் அன்னக் காவடி! ஐயாவைப் போல லட்சாதிபதி, உன்னைப் போலப் பிச்சைக்காரனைத்தான் தத்து எடுக்கிறதாகச் சொன்னார்? இல்லை?" என்றான்.

வெகுநேரமாகப் பிரமிப்பினால் வாயடைத்துப் பின்னால் நின்றிருந்த கடைக்காரப் பெண் இப்போது முன்வந்து, "இந்தாய்யா, எங்க தாஸைப் போய்ப் பிச்சைக்காரன் அது இதுன்னு சொல்லாதே. உனக்கு மேலே லட்சாதிபதியாக இருந்தவங்கதான் இவன் அப்பாவும். குரோம்பேட்டையிலே பங்களாவும் வீடுமாய் வாழ்ந்தவங்க. இவன் அப்பா ஏதோ தொழில செய்யறதாகச் சொல்லி, பணத்தையெல்லாம் தொலைச்சிட்டாரு. இவன் அம்மா ஒரு வருஷம் இரண்டு வருஷம் கஷ்டப்பட்டுவிட்டு, கண்ணை மூடிட்டுது. நான் அந்த வீட்டிலே வேலைக்கிருந்தேன். தம்பி மாதிரி தாஸிடம் எனக்கு ஒரு பாசம். அதனாலே நான் தூக்கிட்டு வந்து வளர்க்கிறேன் இருபது வருஷமா. தெரிஞ்சுதா? நாக்கை அடக்கிப் பேசு!" என்றாள்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

மூன்று நாக்குகள் அடங்கிப் போயின அதிர்ச்சியின் விளைவாக.

தாஸ் மெதுவான குரலில் விவரித்தான்: "நேத்து இந்தக் கலிவரதன் வந்துவிட்டுப் போனபிறகு எங்கேயோ பார்த்தமாதிரி இருக்கிறதே என்று ரொம்ப நேரம் யோசிச்சேன். அப்பாலேதான் நினைவு வந்தது. 'சீ! இந்தப் பேச்சு மாத்துப் பேர்வழியின் முகத்திலே கூட முழிக்கக் கூடாது'ன்னு அப்பவே முடிவு பண்ணிவிட்டேன். அதனால்தான் நீங்க வருவதைப் பார்த்ததும் காய்ச்சல்னு சொல்லிடுன்னு அக்காளண்டை கடையை ஒப்படைச் சிட்டு உள்ளே வந்து படுத்துக்கிட்டேன்." என்றான்.

"அப்படி என்னப்பா பேச்சு மாற்றுப் பண்ணினார் இவர்?" என்று சக்கரை வினவினான்.

"சொல்றேன், கேளுங்க. குரோம்பேட்டையிலே ஒரு கிண்டர்கார்டன் ஸ்கூல்லே நான் படிச்சுக் கிட்டிருந்தேன். ஆண்டு விழாவுக்குத் தலைமை தாங்கிப் பரிசு கொடுக்கிறதுக்காக இவரும் தேவகியம்மாவும் வந்திருந்தாங்க. நான் நிறையப் பரிசுகள் வாங்கினேன். தேவகியம்மா சந்தோஷமாய் என் முதுகிலே தட்டிக் கொடுத்து, 'இந்த மாதிரி ஒரு பையனை நாம் தத்து எடுத்து வளர்த்தால் கூடப் போதும்'னு சொன்னாங்க. அந்த விழா முடிஞ்ச மறுவாரமே என் அப்பா பிஸினஸ் நஷ்டப்பட்டு, இறந்தும் போயிட்டாரு. ஆனால் அதற்குள்ளேயே இந்தக் கலிவரதன் ஒரு கடிதமும் போட்டிருந்தார். என் அப்பாவுக்கு 'தத்து கொடுக்கிறதுன்னா சந்தோஷமாய் எடுத்துக்கிறேன்'னு. எங்க அப்பா செத்துவிட்டபிறகு, ரொம்ப நாள் அம்மா கஷ்டப்பட்டாங்க. கடைசியிலே ஒரு நாள், 'தாஸு, நீயாவது எங்கனாச்சியும் சௌகரிமா வளரலாம். வாடா'ன்னு சொல்லி, அடையாறு பங்களாவுக்கு என்னை அழைச்சுகிட்டுப் போனாங்க. 'இந்தக் குழந்தையை எடுத்து வளர்க்கிறதா எழுதினீங்களே. இப்ப எடுத்துக்குங்க'ன்னு இந்தக் கலிவாதன் கிட்டே என்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அம்மா கெஞ்சினாங்க. இவரு அப்போ வேறே நினைப்பிலே கிடந்தாரு. அத்தோடு தேவகியம்மாளும் இறந்துவிட்டார் களாம். 'சரிதான், போ, போ! அவளே போயிட்டாள். சுவீகாரம்தான் பாக்கி!'ன்னு கூச்சல் போட்டு எங்களை விரட்டிட்டாரு."

"கலிவரதன்! கலிவரதன்!" என்று அவனை உலுக்கினான் சக்கரை. "இதெல்லாம் உண்மையா? சொல்லுங்களேன்?"

கலிவரதன் பித்துப் பிடித்தவனைப் போல் ஊமையாகிக் கிடந்தான். அதற்குள் தாஸ், அருகிலிருந்த ஒரு தகரப் பெட்டியைத் திறந்து ஒரு மக்கி மடிந்து போன கடிதத்தை எடுத்து வந்து காட்டினான். "இதைமட்டும் பத்திரமாய் வைச்சிருக்கிறேனுங்க."

கலிவரதனின் கையெழுத்துடன், ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது அந்தக் கடிதம். தாஸ் என்ற சிறுவனைச் சுவீகாரம் எடுத்துக்கொள்ள விரும்புவதாக அவனுடைய தந்தைக்கு எழுதப்பட்டது அது.

"போங்க, போங்க! ஏன் என் துக்கத்தையெல்லாம் கிளறுகிறீங்க!" என்று தாஸ் கூவினான் வெறிபிடித்த மாதிரி.

ஐந்து பேரும் மௌனமாய் வெளியே வந்தார்கள்.

இனி அம்பிகாவையும் மரகதத்தையும் இருத்திக் கொள்ளத் தேவையில்லை என்று கண்டுகொண்ட சக்கரை, தெருவில் சென்ற ஒரு டாக்ஸியைக் கூப்பிட்டு அவர்களை ஏற்றி, "நான் அப்புறமாய் நேரில் வந்து விளக்குகிறேன்," என்று மரகத்ததுக்குச் சமாதானம் கூறி அனுப்பினான்.

மற்ற மூவரும் கலிவரதனின் காருக்குத் திரும்பினார்கள்.

கலிவரதன் ஸீட்டின் கீழேயிருந்து மதுப் புட்டியையும் கோப்பையும் கையிலெடுத்தான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"கலிவரதன்! தாஸ் சொன்னதெல்லாம் உண்மைதானா? நீங்கள் கடிதம் எழுதியது உண்மை தானா?" என்று சக்கரை துளைத்தான்.

மறுவினாடி—

புட்டியையும், கோப்பையும் காரின் டாஷ் போர்டில் படீர் படீரென மோதி, சுக்கு நூறாக உடைத்தான் கலிவரதன். முகத்தை இரு கைகளாலும் மூடிக்கொண்டு விம்மி விம்மி அழலானான்.

"என்னைக் கேட்காதீர்கள், கேட்காதீர்கள், இந்த மது வெறியில் நான் எதுவும் செய்திருப்பேன். மனைவியையே கொலை செய்தவனாயிற்றே நான்! எதுவும் செய்திருப்பேன். கேட்காதீர்கள் என்னை! போதையிலே என்னென்ன செய்கிறேனென்பது எனக்கே தெரிந்தால் தானே உங்களுக்குச் சொல்ல முடியும்? துளைக்காதீர்கள் என்னை!".

"உன்னிடம் கண்ணீர் இருக்குமானால் இப்போது அதைக் கொட்டத் தயாராயிரு," என்ற ஷேக்ஸ்பியரின் வரிகள் சக்கரைக்கு நினைவு வந்தன.

டாஷ்போர்டில் வழியும் செந்நிற மதுவை 'வேஸ்ட்' கொண்டு துடைக்கலானான் பொன்னடி.

காருக்குள் கலிவரதனின் விம்மல் மட்டுமே கேட்டுக் கொண்டிருந்தது.

18

"ஷேக்ஸ்பியர் கேட்டாரா இல்லையா, 'அழுகிப் போன ஆப்பிள்களில் தேர்ந்தெடுப்பதற்கு என்ன இருக்க

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

முடியும்' என்று? அந்த மாதிரி..." என்று தர்மு சிவராஜ் ஆரம்பித்ததுதான் தாமதம்—

"உன் ஷேக்ஸ்பியரைத் தூக்கிக் கொள்ளிடத்திலே போடு!" என்று சக்கரை படீலென்று வெடித்தான்.

'கிக்' என்றார் சிவராஜ், விழி பிதுங்க. அது அவருடைய அபிப்பிராயமல்ல. விக்கல்.

இட்டிலியை எண்ணெய் மிளகாய்ப் பொடியில் ஓர் அமுக்கு அமுக்கி உள்ளே தள்ளிக் கொண்டிருந்த அவரை, சக்கரையின் பேச்சுத் தூக்கி வாரிப்போட வைத்ததே காரணம். அந்த ஆங்கில இலக்கியத்தின் சக்கர வர்த்தியைக் கொள்ளிடத்தில் போட்டாலும் சரி, தேம்ஸ் நதியில் தூக்கி எறிந்தாலும் சரி, சிவராஜுக்கு ஆட்சேபம் கிடையாது. ஆனால் சக்கரையின் வாயில் அப்படிப்பட்ட வாக்கியம் வந்ததைத்தான் அவரால் நம்ப முடியவில்லை. மனிதர்களுக்கு விரக்தியில் பைத்தியம் ஏற்படுவது உண்டுதான்; ஏமாற்றத்தினால் தற்கொலை செய்து கொள்ளுமளவுக்குச் செல்வோரும் உண்டு. ஆனால் சக்கரைக்கு இப்படி நேரும் என்று அவர் நினைக்கவே யில்லை.

"நான் என்ன நினைக்கிறேனென்றால்..." என்று அவர் ஏதோ கூறமுயன்றார், சக்கரையைத் தேற்றும் எண்ணத்தில்.

"நீர்கள் எதுவும் நினைக்க வேண்டாம் தயவு பண்ணி," என்று அவரை அடக்கிவிட்டாள் தர்மு சிவராஜ். "ஏதோ நாய் கண்காட்சியோ, பன்றிக் கண்காட்சியோ படம் பிடிக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தீர்களே? போய், பிலிமைப் பாழடித்துவிட்டு வாருங்கள்."

பாவம், சிவராஜின் சின்னச் சரீரம் இன்னும் சின்னதாயிற்று. பரிதாபமாகத் தட்டிலேயே கை கழுவிவிட்டு எழுந்து கொண்டார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

தர்மு சிவராஜின் இல்லத்தின் பின்புறத்திலிருந்த சமையற்கட்டு அது. சமையற்காரி அம்மணி ஆவி பறக்க எடுத்து வைக்கும் இட்டிலிகளின் சுகந்தமான வெந்த மணம் நாசியை நெருடிக் கொண்டிருக்க, வெய்யிலும் உள்ளே நுழையலாமா என்று ஆசைப்படுவது போல ஜன்னல் வழியே மெல்ல எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது.

காலை ஏழு மணியளவு.

மூவரும் தரையில் சப்பணமிட்டு அமர்ந்து சிற்றுண்டி அருந்திக் கொண்டிருந்த வேளை. மேனாட்டுப் பாணியில் அமைந்திருந்த டைனிங் ஹாலில் ரிப்பேர் நடைபெற்று வந்ததால், இங்கு இடம் மாறியிருந்தது.

பிரின்ஸிபால் தர்மு, தன் வழக்கப்படி, வெளி வெராந்தாவில் விழுந்து கிடந்த தினசரியைக் கையிலெடுத்துக் கொண்டு வந்து உட்கார்ந்திருந்தாள்.

"இங்கே அடுப்பு சௌகரியமில்லை அம்மா. கட்டிக் கொடுத்தீர்களானால் தேவலை," என்று அம்மணி முறையிட்டுக் கொண்டிருந்தாள்.

"ஊம், ஊம், பார்க்கலாம்," என்று தர்மு பெருமூச் செறிந்தாள். கல்லூரி நிர்வாகத்தினர், எல்லா ஆசிரியை களுக்கும் பிரின்ஸிபாலுக்கும் ஹாஸ்டலை ஒட்டி விடுதிகள் கட்டித் தரப்போவதாக வெகு நாளாய்ச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அப்படிப் புது வீட்டுக்குப் போக நேரிடுமானால், இந்தப் பழைய வீட்டுக்குச் செலவழிப் பானேன் என்று பல ரிப்பேர்களை ஒத்திப் போட்டுக் கொண்டு வந்தது இனி முடியாது போலிருக்கிறது...

திடீரென்று அவள் பார்வை செய்தித் தாளில் நின்றது. "அட, இதென்ன சக்கரை?" என்றாள்.

'அதிசயப் பெண் அம்பிகா' என்ற தலைப்புடன் முதல் பக்கத்திலேயே கொட்டை எழுத்திலே வெளியாகி யிருந்த செய்திதான் காரணம். அம்பிகாவை மீண்டுமொரு முறை பரீட்சை செய்வதற்காக, அவளை தாஸ் என்ற

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

வாலிபனிடம் கலிவரதன் அழைத்துச் சென்றதாகவும், முன் ஜன்மத்தில் அந்த வாலிபனை சுவீகாரம் எடுத்துக் கொள்வதாக இருந்த விஷயத்தை அம்பிகா கச்சிதமாக நினைவுப்படுத்திச் சொன்னதாகவும் அந்தச் செய்தித் தாளில் விவரம் வந்திருந்தது.

தர்முவுக்கு ஓரளவு தன் மருமானின் நீள்முகத்துக்குக் காரணம் புரிந்தது. நேற்றுப் பூரா அவன் யாருடனும் பேசவில்லை. பம்பாயிலிருந்து வந்திருந்த சில புத்தகங்களில் மூழ்கியிருந்தான். இன்று காலையிலிருந்தும் உற்சாகமாயிருக்கவில்லை. பல் விளக்கும்போது, எங்கோ கவனத்துடன் பிரஷ் பூராவுக்கும் பற்பசையைப் பிதுக்கி வழிய விட்டுக் கொண்டிருந்ததைக் கூடத் தர்மு கவனித்தாள்.

"உலகமே ஒரு சோக மேடைதான். இதில் உனக்கென்ன தனியான சோகம்?" என்று மருமானைத் தேற்றுவதாக நினைத்து, ஷேக்ஸ்பியரையும் மேற்கோள் காட்ட முற்பட்டபோதுதான், அவரைத் தூக்கிக் கொள்ளிடத்தில் எறியும்படி சக்கரை சிபாரிசு செய்தான்.

'இவனுக்கு என்ன கவலை என்று இப்போ தல்லவா புரிகிறது!' எந்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள் தர்மு. அதே சமயம், தன் கல்லூரியின் பெயரும் மாணவியின் பெயரும் மீண்டும் அடிபடுகிறதே என்ற கவலையும், நிர்வாகக் குழுப் பிரமுகர் முன்பொரு முறை கோபித்துக் கொண்டதன் நினைவும் ஏற்படவே, "எனக்கென்னவோ சக்கரை, இந்த விஷயத்தை நீ விட்டுவிடலாமென்று தோன்றுகிறது. நீ குடையக் குடையத்தான் பெரிதாகிறது. ஒரு நாளைய அமளி என்று தீர்கிறதா, பார்," என்று குறை கூறினாள்.

சக்கரை ரோஷத்துடன், "இது ஒருநாள் அமளி அல்ல, அத்தை. ஒரு நாளில் தீரவே தீராது. இவ்வளவுக்கும் பின்னால் ஒரு சதி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. என்ன

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ஆபத்து வந்தாலும், என்ன தோல்வி நேரிட்டாலும் அதை உடைக்காமல் விடப் போவதில்லை நான்!" என்றான்.

"ஆபத்தும் தோல்வியும் உன்னோடு வந்துவிட்டு உன்னோடு போய்விட்டால் சரிதான். எனக்கும் என் கல்லூரிக்கும் சேர்ந்து வருகிறதே!" என்று கடுமையாகப் பதிலளித்தாள் தர்மு. "நீ மேற்கொள்ளும் நடவடிக்கைகளைக் குறைந்த பட்சம் ரகசியமாகவாவது வைத்துக் கொள்ளக் கூடாதா? எதற்காக உடனுக்குடன் பத்திரிகைக்கு வேறே செய்தி அனுப்பி என் கல்லூரியின் மானத்தை வாங்குகிறாய்?"

"நீ சொல்வது நியாயமில்லை, அத்தை," என்று சக்கரை குரலைத் தாழ்த்திக் கொண்டான். "நான் ரொம்ப ரகசியமாகத்தான் வைத்திருந்தேன். பத்திரிகைக்குச் செய்தி கொடுத்தவனும் நானல்ல. இதெல்லாம் விளம்பரமாக வேண்டுமென்பதில் யாரோ ரொம்ப அக்கறையாக இருக்கிறார்கள். அவர்கள்தான் அனுப்பியிருக்க வேண்டும்."

"சரி, இட்டிலி ஆறுகிறது. சாப்பிடு," என்றால் தர்மு சமாதானமாக. மருமானை அதிகமாய்க் கடிந்து கொண்டு விட்டோம் என்று அவளுக்குத் தோன்றியது.

"த்ஸ ."." அலுப்புடன் இட்டிலியை விண்டு வாயில் போட்டுக் கொண்டான் சக்கரை.

நிலைப்படியருகே நிழலாடுவதைக் கண்டு தலை நிமிர்ந்தாள் தர்மு. அவள் கணவரான சிவராஜ்தான். வெளியே போவதற்கு ஏற்றபடி உடையலங்காரம் செய்து கொண்டிருந்த மனிதர், தலையைச் சொறிந்து கொண்டவாறு சக்கரையின் பக்கம் விரலை நீட்டி ஏதோ ஜாடை காட்டினார்.

தர்மு புரிந்து கொண்டவளாகச் சிரித்துவிட்டு, "என்ன சக்கரை, அந்த அடையாறு பங்களா போட்டோக்களில் ஒன்றை மட்டும் இன்னும் திருப்பித் தராமலேயிருக்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கிறாயாமே? தரக் கூடாதா? அத்தான் கெஞ்சுகிறார் பார்," என்றாள்.

சக்கரை கோபத்துடன், "நீ என்ன அத்தை, விஷயம் தெரியாமல்? நானென்ன, அவரைப்போல் போட்டோ ஆல்பமா சேர்க்கிறேன்? இல்லை, அந்த ஒன்றை மட்டும் சர்வதேசப் புகைப்படப் போட்டிக்கு அனுப்பி ஆயிரம் பவுன் தட்டிவிடப் போகிறேனா?" என்றான்.

"பின்னே கொடுத்து விடேன்?"

"அதிலே தலை போகிற சமாசாரம் ஒன்று இருக்கிறது. சும்மாவா சொல்கிறேன்? அண்ட பகிரண்டப் பட்சிகள் பேசிக் கொள்ளுமே, இதைக் கேட்டவர்கள் வெளியே சொன்னால் தலை ஆயிரம் சுக்கலாக வெடித்து விடும் என்று, அதுமாதிரி அத்தனை ஆபத்தான ரகசியம். அதை வைத்துக் கொண்டிருந்தால் அத்தானுக்குத்தான் ஆபத்து. பரவாயில்லையா, கேள்!"

சிவராஜ் அதற்கப்புறம் தாமதிக்கவில்லை. சக்கரையின் பேச்சு முடியுமுன்னே அவர் போய்விட்டார்.

கவலையுடன் அவனை ஒரு வினாடி பார்த்து விட்டு வெளியே சென்றாள் தர்முவும்.

சக்கரை காப்பியை உறிஞ்சியபடி சமையலறையி லேயே பல நிமிடங்கள் வரை உட்கார்ந்திருந்தான்.

நேற்று கிட்டிய தோல்வியின் முழுப் பரிமாணமும் இப்போதுதான் அவனைப் பிடித்துக் கொண்டாற் போலாயிற்று.

குடிகாரனான கலிவரதன் தன்னைத்தானே நொந்து கொண்டவனாக மதுப் புட்டிகளைக் காருக்குள் உடைத்து ஆவேசப்பட்டதும்; "வேண்டாம், வேண்டாம்!" என்று அவனது இரு கைகளைத் தானும் பொன்னடியு மாகக் கெட்டியாக அமுக்கிப் பிடித்து அடக்கியதும்;

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அதற்குள் காரைச் சுற்றிக் கூடிவிட்ட நாலைந்து பேர்களை விரட்ட முடியாமல் காரைத் தானே ஸ்டார்ட் செய்து கொஞ்ச தூரம் தள்ளிச் சென்று நிறுத்தியதும்; பிறகு வேறெதுவும் பேசத் தெரியாமல், "எஜமானரைப் பத்திரமாய்ப் பங்களாவுக்கு அழைத்துச் செல்," என்று பொன்னடியிடம் ஒப்படைத்து விட்டு, தான் காரிலிருந்து இறங்கி விடை பெற்றுக் கொண்டதும் சக்கரையின் கண் முன்னாலேயே நின்று கொண்டிருந்தன.

தன் நம்பிக்கையை மாற்றிக்கொள்ளும் பலவீன உள்ளம் சக்கரைக்கு இருக்கவில்லை. மிக மிக எச்சரிக்கை யாக வகுத்த திட்டத்திலும் எங்கோ ஓர் ஓட்டை இருந்து, அம்பிகாவின் வேஷத்துக்குச் சாதகம் செய்து விட்டது என்றுதான் அவன் எண்ணினான். மற்றப்படி அம்பிகாவின் முற்பிறப்பு விஷயத்தில் அவனுக்கு நம்பிக்கை பிறந்துவிட வில்லை.

ராஜஸ்தான் சர்வகலாசாலையில் சமீபத்தில் 'பாராஸைகாலஜி' பிரிவொன்றைத் தொடங்கி முற்பிறவி நினைவுகள் இருப்பதாகச் சொல்லிப் பலரைப் பேட்டி கண்டு ஆராய்ச்சிகள் செய்து வருவதை அவன் தொடர்ந்து படித்தும் கவனித்து வருகிறான். அவனுடைய அறிவுக்கும் மனத்துக்கும் எட்டிய வரையில், முற்பிறவியை அனுமானம் செய்யும்படியாக எந்தக் கேசும் இருக்கவில்லை. கடந்துபோன ஒரு வாழ்க்கையில் நடைபெற்ற நிகழ்ச்சி களையும், சம்பந்தப்பட்ட மனிதர்களையும் ஞாபகமிருப்ப தாகப் பலர் சொல்லியிருந்தார்கள். அதற்கு, 'எக்ஸ்ட்ரா ஸெரிப்ரல் மெமரி — ஈஸிஎம்' என்று மனத்தத்துவ ஆராய்ச்சியாளர்கள் பெயர்கூடச் சூட்டியிருப்பதும் உண்மையே. ஆனால் டெலிபதி' எனப்படும் 'மானசத் தந்தி'யும் இதற்கு ஒரு காரணமாயிருக்கக் கூடும் என்பதை யும் அதே நிபுணர்கள் ஒட்டிக் கொண்டார்கள். சித்த உறுதி படைத்த ஒருவன், பலவீன உள்ளம் படைத்த இன்னொரு

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

வரைத் தன் எண்ணங்களுக்குத் தக்கபடி இயங்க வைக்க முடியும் என்பதை இரண்டு நூற்றாண்டுக் காலமாகப் பலவகைச் சோதனைகளும் ஆதாரங்களும் நிரூபித்து வந்திருக்கின்றன. இதன்மூலம், 'முற்பிறப்பு நினைவு'களை யார் மனத்திலும் யாரும் ஏற்றுவது சாத்தியமே.

ஆனால் அம்பிகாவின் விஷயத்தில் அந்தத் தந்திரத்தை யார், எப்படி, இவ்வளவு சுலபமாக டக்டக்கென்று நிறைவேற்றி வருகிறார்கள்?

அது ஒன்றுதான் சக்கரையைக் குழப்பிக் கொண்டிருந்தது. என்றாலும், அந்தக் குழப்பத்துக்கான விடையைச் சூரியின் பங்களாவுக்குள்ளேதான் தேட வேண்டும் என்பதையும் சக்கரை உணர்ந்திருந்தான்.

காப்பி டம்ளரை வைத்துவிட்டு எழுந்தபோது சக்கரையின் மனம் சிறிது தெம்பும் நிம்மதியும் பெற்றிருந்தது. "எப்படியும் நாம் தோற்க மாட்டோம்," என்ற நம்பிக்கை அவன் உள்ளத்தில் மீண்டும் பசுமையுடன் துளிர்த்தது.

அத்தையின் கையிலிருந்த பேப்பர் எங்கே என்று தேடிக் கொண்டு அவளுடைய அறைக்குள் நுழைந்தான்.

காலடியோசை கேட்டதும் சடக்கென்று அத்தை அலமாரியைச் சாத்துவது அவன் கண்ணில் பட்டுவிட்டது. முகத்தைச் சுளித்த தர்மு சிவராஜ், "அப்பப்பா! உன்னைப் போல் ஓர் அபெண்டூர் படுக்கவை வீட்டில் வைத்துக் கொண்டால் [illegible] வேணாடாம்! ரகசியமாய் ஒரு காரியம் செய்ய முடியவில்லையே!" என்றாள்.

"ரகசியமாக எதையும் செய்யாமல் இருந்து விடேன்," என்றான் சக்கரை. "இப்போது நீ எதை ஒளிக்க [illegible] என்று நீயாகவே சொல்லிவிட்டால் நல்லது. நானாக அதைக் கண்டு பிடிக்கப்போய் உனக்கு ஏற்படக் கூடிய பலவிதமான அபாயங்கள் மிச்சமாகும்."

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"நீ தலைகீழாக நின்றாலும் நடக்காது," என்றாள் தர்மு தீர்மானமாக. "அவரிடமிருந்து போட்டோவைப் பறித்துக் கொண்டு போனமாதிரி என்னிடமிருந்து இதைப் பறித்துக் கொண்டு போய் விடுவாய்!"

"ஹாஹா! பறித்துக்கொள்கிற அளவுக்கு மதிப்புள்ள பொருள்தானா? அப்படியானால்! இரு, இரு. இந்த வீட்டில் மூலைக்கு மூலை ஒரு மூவி காமிரா, ஓர் ஒலிப்பதிவுக் கருவி வைத்து..." சட்டென்று அவன் பேச்சு நின்றது. "அட!... ஆமாம்... நல்ல ஐடியா..."

"எது நல்ல ஐடியா?" என்று தர்மு சிவராஜ் வினவியது, வெறும் சுவரைப் பார்த்துத்தான்.

அந்த ஷேக்ஸ்பியர் பித்தன், தலை தெறிக்கும் வேகத்தில் விரைந்து கொண்டிருந்தான் பர்மா பஜாரை நோக்கி. அம்பிகாவைப்பற்றிய பிரசினை மீண்டும் அவனைக் கவ்விக் கொண்டுவிட்டது!

"வாங்க சார்! வாங்க, வாங்க!" சட்டென்று கையிலிருந்து சிகரெட்டைத் தூக்கி எறிந்துவிட்டு, சக்கரையை வரவேற்றான் பர்மா பஜார் பக்கிரிசாமி.

அவன் உபயோகிக்கும் மட்டமான சிகரெட்டின் நெடி குப்பென்று வீசியதால் சக்கரை சற்று எட்டவே நின்று கொண்ட பிறகு, "ஊசோ தாத்தா விஷயமாக இப்போது வரவில்லை. ஓர் அயல் நாட்டுக் சரக்கு மலிவாய் வாங்கணும். ரொம்பச் சின்னதாய் ஒரு டேப் ரெகார்டர் தேவை. மைக் இருக்கிறது பார், அது கண்ணுக்கே புலப்படக் கூடாது. கைப்பிடிக்குள் அடங்குகிற அளவுக்குச் சிறியதாக இருக்க வேண்டும். கிடைக்குமா?" என்று கேட்டான்.

"ஸ்!" என்று பக்கிரிசாமி கையை உதறினான். "அருமையான ஜப்பான் மேக், சார். நம்ம பிரண்டு ஒருவன் சிங்கப்பூரிலிருந்து கொண்டு வந்திருந்தான். கவர்மெண்ட் ஆபீஸ்களிலே உளவு பார்ப்பதற்காக சீனாக்காரங்க ரகசிய

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

மாய்ப் பொருத்தி வைச்சிடுவாங்களாம். இருக்கிற இடமே தெரியாதாம்..."

"அதேதான், அதேதான்!" என்று உற்சாகத்துடன் அவனைத் தட்டிக்கொடுத்தான் சக்கரை. "நமக்கும் அந்த மாதிரி உளவு வேலைக்காகத்தான் அது தேவைப்படுகிறது. இப்போது எங்கே அது?"

"ஒரு பார்ட்டி வாங்கிக்கொண்டு போயிட்டு தாமே? ஆயிரத்தைன்னூறு ரூபாய்க்குக் கொடுத்தேன் என்று மஸ்தான் சொல்லிட்டிருந்தானே!"

"ஆயிரத்தைன்னூறா!" சக்கரையின் ஆர்வம் கொஞ்சம் குறைந்தது.

"ஒண்ணு செய்யலாம் சார்," என்றான் பக்கிரிசாமி. "ஏதோ டிடெக்டிவ் வேலைக்காகத்தானே கேட்கிறீங்க? சும்மா நாலு நாளைக்கு இரவல் கேட்டால் போச்சுது. பார்ட்டி யாருண்ணு மஸ்தானண்டை தெரிஞ்சுக்கிறு வரேன். இருங்க!"

பக்கிரிசாமி எதிர்ச்சாரியிலிருந்த ஒரு கட்டிடத்தின் பின்புறத்தில் விரைந்தான்.

"ஹாண்ட்ஸ் அப், தர்மு சிவராஜ்! உங்கள் ஜம்பம் இனிமேல் பலிக்காது!"

துள்ளித் திரும்பிய தர்மு, தன் மருமானும், கூட இரண்டு முனபின் தெரியாத ஆட்களும் தன்னைச் சூழ்ந்து கொண்டு நிற்பதைக் கண்டாள்.

"அத்தை, நீ பூட்டிப் பூட்டி, வைத்த பொருள் என்னவென்று தெரிந்துவிட்டது. ஆனால் அதைக் கண்டு கொள்ள பர்மா பஜார் வரை போய் வந்தேனாக்கும்! எடு அந்த டேப் ரெகார்டரை!" என்றான் சக்கரை.

தர்மு 'ஹூக்கும்!' என்று ஒரு போலிக் கோபத்துடன் உதட்டைப் பிதுக்கினாள். "உன்னிடம்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

போனால் உருப்படியாய்த் திரும்பி வராது என்று பார்த்தேன்."

"அதெல்லாம் பத்திரமாய்க் கொண்டு வந்து கொடுத்திடுவாருங்க!" என்று பக்கிரிசாமியும் அவன் நண்பனான மஸ்தானும் சிபாரிசு செய்தார்கள். டேப்ரெகார்டரை விலைக்கு வாங்கிக் கொண்ட 'பார்ட்டி'யின் முகவரியைச் சொன்னதும் சக்கரை ஏன் அப்படிச் சிரித்தான் என்று இங்கே வந்த பிறகல்லவா அவர்களுக்கு விளங்கியது!

"பத்திரம், பத்திரம்," என்று நூறு முறை எச்சரிக்கை செய்து ஒப்படைத்த கருவியைப் பெற்றுக் கொண்டு கிளம்பினான் சக்கரை.

மஸ்தானுக்கு விடை கொடுத்தனுப்பிய பிறகு, இரு வரும் மயிலாப்பூரை அடைந்தார்கள். அப்போதே இருட்டி விட்டது.

மாட வீதியிலிருந்து ஓர் ஓட்டலில் சாப்பாட்டை முடித்துக்கொண்டார்கள். குளத்தங்கரைப் படிக்கட்டில் உட்கார்ந்து கொண்டனர்.

"ஊர் அடங்கட்டும். ராத்திரிக்குமேல்தான் நம் வேலை ஆரம்பம்," என்று சுருக்கமாய்ச் சொல்லிவிட்டு, சிந்தனை வயப்பட்டவனானான் சக்கரை.

19

இருட்டத் தொடங்கிவிட்டது.

கபாலி தெப்பக் குளத்து நீர் நீலமாகத் தெரிந்தது மாறி, கருமையடைந்து, பிறகு அதுவும் மறைந்து விட்டது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

இருட்டின் பின்னணியில், கோபுரத்தின் 'ஓம்' என்ற நீலக் குழாய் எழுத்து மேலும் குளுமையாகக் காட்சி தந்தது.

"போகலாம்," என்று எழுந்துகொண்டு, ராமகிருஷ்ணா மடம் சாலை வழியே நடக்கத் தொடங்கினான் சக்கரை. நிழலைப்போல அவனைப் பின் தொடர்ந்து சென்றானே தவிர, பக்கிரிசாமி வாய் திறந்து ஒரு வார்த்தை பேசவில்லை. மந்தைவெளி பஸ் ஸ்டாண்டினருகே, கண்டக்டர்கள், டிரைவர்களுக்கான கடைசிப் பஸ்ஸொன்று இரண்டு மூன்று ஊழியர்களை இறக்கிவிட்டுச் சென்று இருளில் மறைந்தது.

"நான் வேணுமானால் தூக்கிட்டு வரவா சார்?" என்று பக்கிரிசாமி உதவிக்கு முன்வந்தான். தர்மு சிவராஜின் வீட்டிலிருந்து புறப்பட்டது முதல் அந்த டேப் ரெகார்டர் கருவிகளைச் சக்கரையே சுமந்து கொண்டிருப்பது பொறுக்காமல்தான் அவன் கேட்டான்.

ஆனால் சக்கரை அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. "இதோ, நம் இடம் வந்துவிட்டோம்," என்றான்.

ஒரு பழைய, பெரிய கட்டிடமும் அதன் வாசல் புறத்தில் ஏதோ ஒரு போர்டும்தான் பக்கிரிசாமியின் கண்களுக்குத் தென்பட்டன. "இதுவா? நாடகக்காரரோட ஸ்கூல் இல்லையா?" என்றான் வியப்புடன்.

"ஸ்! இனிமேல் உன் குரல் கடுகத்தனையும் உயரக் கூடாது புரிகிறதா? வா என் பின்னால்." சக்கரை முன்னே நடந்தான். ஆனால் அந்தப் புராதன மாளிகையின் கேட்டைத் திறந்துகொண்டு நுழையவில்லை. பக்கத்திலே காடாக மண்டிக்கிடந்த தோப்பின் வழியேதான் சென்றான் ஏதோவொரு ஒரு முள் செடி அவர்களுடைய கரத்தில் சிராய்த்து எரிச்சலை ஏற்படுத்திற்று.

"ஆ!" என்று ஆழமாக ஆனால் வெளிப்படாமல் கூவினான் பக்கிரிசாமி. "படா ஆள் சார், சூரி. வெளிப் பார்வைக்கு ஏதோ செடி கொடிங்க வளர்ந்திருக்கிற மாதிரி

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

பண்ணியிருக்கிறார். ஆனால், செடிகளுக்கு நடுவிலே முள் கம்பியைச் சாமர்த்தியமாய் ஒளிச்சுப் போட்டிருக்கிறார். கவனிச்சுங்களா?"

"எச்சரிக்கையாகவே இரு. இந்தா, இந்த ரப்பர் உறையைக் கையில் மாட்டிக்கொள்."

பக்கிரிசாமி வியப்புடன் சக்கரை கொடுத்த உறைகளை வாங்கிக் கொண்டான். அதே சமயம், சக்கரை தன் கைகளிலும் உறைகள் மாட்டிக் கொண்டிருப்பதை உணர்ந்தான் அவன்.

"வெறும் முள் கம்பியாக இல்லாமல் சில கம்பி மின்சாரம் பாய்ச்சியதாகவும் இருக்கலாமில்லையா? அதற்குப் பாதுகாப்பு. கையால் தடவிப் பார்த்துக்கொண்டு, தாண்ட வேண்டிய இடத்தில் ஜாக்கிரதையாகத் தாண்டி வா," என்று விளக்கினான் சக்கரை.

அவன் குரலினால் பேசினான் என்பதைக் காட்டிலும், சுவாசத்தினால் கிசுகிசுத்தான் என்று கூறுவதே பொருந்தும்.

கம்பியைத் தாண்டி, கட்டிடத்தின் உட்பகுதிக்குள் பிரவேசித்தார்கள் இருவரும்.

"முதல் தடவை உன்னைச் சந்தித்தபோது, 'என் உயிரை வேண்டுமானாலும் தருகிறேன்,' என்று நீ சொன்னது நினைவிருக்கிறதா!" என்று சக்கரை கேட்டான்.

"இருக்கிறது சார்." பக்கிரிசாமியின் இதயம் தட்தட் டென்று அடித்துக் கொண்டிருந்தது.

"அனேகமாய் அதற்குரிய சந்தர்ப்பம் வரலாம். தயக்கமாயிருந்தால், இந்த நிமிடமே நீ போய் விடு. நான் பார்த்துக்கொள்கிறேன்."

பக்கிரிசாமியின் உடம்பில் இளரத்தத்தின் சூடு நிறைந்திருந்தது. "போக மாட்டேன் சார். எந்தச் சம்பந்தமும் இல்லாத நீங்களே உயிருக்குத் துணிந்து இங்கே வந்திருக்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கிங்க. ஏதோவொரு ஆபத்தான வேலையிலே இறங்கியிருக்கிங்க. அப்படியிருக்கிறப்போ, என் குடும்பத்தை அழிச்சவன் என்கிற முறையில் நான் முன்னாலே வந்து உங்களுக்குத் துணையா நிற்க வேண்டாமா, சார்? பூப்பறிக்கவா போகச் சொல்றீங்க என்னை?" என்று ரோஷமாகப் பேசினான்.

சக்கரையின் பாராட்டு, அவன் முதுகில் மெல்லிய ஒரு தட்டாக விழுந்தது.

"சார்!" என்று சரேலெனப் பின்வாங்கினான் பக்கிரிசாமி. "அங்கே..."

அவன் சுட்டிக் காட்டிய இடத்தில் ஒரு மெல்லிய ஒளிக்கோடு — வெளிச்சத்தாலேயே கோடு போட்ட மாதிரி — தெரிந்தது. ஒரு காட்டாமணிச் செடியின் குறுக்கே அது விழுந்திருந்தது.

சக்கரை நகைத்து விட்டான்.

"இவ்வளவு பயந்தவனாக இருந்துகொண்டுதான் அத்தனை சவடாலாகப் பேசினாயாக்கும்!"

"ஏன் சார்?"

"வெளிச்சத்தைப் பார்த்தாயே தவிர அது எங்கிருந்து வருகிறதென்று கவனிக்கவில்லையே?" சக்கரை தன் உள்ளங்கையைப் பிரித்துக் காட்டினான். பென்ஸிலைப் போன்ற மிக மெல்லிய ஒரு டார்ச்சு விளக்கு அங்கே இருந்தது.

"இதற்குமேல் வெளிச்சம் ஆபத்தானது."

கட்டிடத்தின் பின்புறமிருந்த சிறு ஷெட்டை இருவரும் அடைந்தார்கள். அதன் கதவு, நாலு ஐந்து வயதுக் குழந்தை நுழையக்கூடிய அளவுக்குச் சிறியதாகவும் குறுகலாகவும் இருந்தது. காலால் மெள்ளத் தள்ளிப் பார்த்தான் சக்கரை. கதவின் கீழ்ப்பக்கத்துத் தகரப் பட்டயம் பிய்ந்து தரையோடு ஒட்டிக் கொண்டிருந்தது

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

போலும். கீச் என்ற ஓசை மட்டுமல்ல, இன்னொரு அதிர்ச்சியும் அவர்களுக்குக் காத்திருந்தது.

"லொள்," என்ற ஒரு நாயின் குரைப்பு. ஆனால் மூர்க்கமாகவோ, வெறி பிடித்த மாதிரியோ இல்லாமல் ஈனசுரத்தில் பரிதாபமாக வெளிப்பட்டது அந்தக் குரைப்பு.

"ஸ்..." என்று சக்கரை அதையும் அதட்டினான். அன்னியர்களின் வருகையை அறிந்ததும், அதட்டலை கேட்டதும், இன்னும் பலமாகக் குரைக்க வேண்டிய நாய், மாறாக உடனே அடங்கி விட்டது. அதனுடைய அமானுஷ்ய அறிவுக்கு ஒரு வேளை வந்தவர்கள் விரோதியல்ல, நண்பர்களே என்று புரிந்திருக்குமா?

மயிரிழையாகக் கதவை நகர்த்தினான் சக்கரை. அதுவும் கூட, தெருவில் ஏதேனும் காரின் குழல் ஒலிக்கும்போதோ, அல்லது மரங்களின் சலசலப்பு அதிகரிக்கும் போதோதான் செய்தான், — அந்தப் பெரிய சத்தத்தில் கதவின் கீச்சொலி அமுங்கட்டுமென்று.

பென்ஸில் வெளிச்சம் உள்ளே ஓடி, குற்றுயிரும் குலையுயிருமாகக் கிடந்த ஒரு நாயின் கண்ணராவியான உருவத்தை காட்டியது.

"டைகர்!" என்று ஆச்சரியப்பட்டான் சக்கரை. "அடையாறு பங்களாவில் இருக்கிறவன் இல்லை நீ?" அறிமுகமான மனிதரை விசாரிப்பது போல சக்கரை இப்படிக் கேட்டதும் அதன் கண்களில் ஓர் ஈரப் பளபளப்புத் தெரிந்தது. ஆவலுடன் சக்கரையை நோக்கி, தலையை அசைத்தது.

"உங்களுக்குத் தெரிந்த நாயா, சார்?" என்று கேட்டவாறு பக்கிரிசாமி அதன் எலும்பும் தோலுமான உடலை வருடிக் கொடுத்தான். அன்பைக் கண்டு வெகு நாளான அதன் உள்ளத்தில் என்ன நன்றியுணர்வு பெருக்கெடுத்ததோ, பாவம். அதன் தேகம் ஒரு முறை சிலிர்த்து அடங்கியது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"வேண்டுமென்றே இங்கே அடைத்து வைத்து, பட்டினி போட்டுக் கொல்ல முயலுகிறான்! ஹூம்," என்று முணு முணுத்தான் சக்கரை.

"அவிழ்த்து விட்டு விடுகிறேன் சார். தன் வீட்டுக்குப் போய்ச் சேரட்டுமே?" என்று கழுத்துச் சங்கிலியை அகற்றப்போன பக்கிரிசாமியைத் தடுத்தான் சக்கரை.

"வேண்டாம். அது இங்கேயே இருக்கட்டும், நாம் திரும்பிப் போகு முன்னால் கொஞ்சம் ஆகாரம் வேண்டு மானால் — அதுவும் சந்தேகம் ஏற்படாத வகையில் — போட்டுவிட்டுப் போவோம்."

"அவிழ்த்துவிட வேண்டாம்னா சொல்றீங்க?"

"ஆமாம். நாம் வந்திருப்பது வேறு காரியத்துக்காக. நாளைக்கு இதைக் காணவில்லையென்றால் சந்தேகம் பிறக்கும். யாரோ அன்னியர் வந்து ஏதோ செய்திருக்கிறார் கள் என்று ஊகித்து, இந்த இடங்களைச் சோதனை போடத் தொடங்கினால், எல்லாமே கெட்டுவிடும்." சக்கரை அந்த நாயை மெல்லத் தடவிக் கொடுத்துவிட்டு வெளியே வந்தான்.

இப்போது இருவரும் நிமிர்ந்து நடக்கவில்லை. குழந்தை போல் தவழ்ந்து கொண்டே ஒவ்வோர் அடியாகக் கட்டிடத்தை நோக்கி நகர்ந்தார்கள். உலர்ந்த சருகுகள் கூட்டப்படாமலே கிடந்ததால், கை வைக்கும் இடமெல்லாம் நொறு நொறுவென்று பொடியாகும் ஓசை பிறந்தது.

கட்டிடத்தின் விலாப்புறத்துச் சுவரை அவர்கள் அடைந்ததும் சக்கரை தன் பென்ஸில் டார்ச்சை மேலே அடித்தான்.

கண்களை உறுத்திக்கொண்டு சிரமப்பட்டுக் கவனித்த பிறகே சுவ்ரின் தன்மையை அறிய முடிந்தது. ஜலதாரைக்காக ஒரு குழாய் முதலில் தெரிந்தது. சுவர் பூரா

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

காரை உதிர்ந்து இண்டும் இடுக்குமாக இருந்தது. மேலே ஒரு சிறிய அறையும் அதன் அடைபட்ட சாளரமும் கண்ணில் தென்பட்டன. அதைச் சாளரம் என்று கூடச் சொல்ல முடியாது. சாணகலமுள்ள காற்றுத் துவாரம் என்றே கூற வேண்டும். அந்த ஜன்னலுக்குக் கீழே ஓர் அட்டை தெரிந்தது. அறைக்குள் தண்ணீர் விட்டுக் கழுவி விட்டால் வெளியே வந்து விழுவதற்காக வைக்கப் பட்டுள்ளது அது. ஓர் எலி போய் வரக்கூடிய அளவுக்குத் தான் அதன் வாய் இருந்தது.

"கவனமாகக் கேள்," என்று சக்கரை கிசுகிசுத்தான் பக்கிரிசாமியின் காதோடு. "எனக்குக் கொஞ்சம் பெரும் பாடியான சரீரம். இந்த வேலையை உன்னைப் போல லாவகமான உடம்பு இருப்பவர்கள்தான் செய்ய முடியும். அதனால் சொல்கிறேன்."

"சொல்லுங்க சார்," என்று உற்சாகமாகப் பதிலளித்தான் பக்கிரிசாமி.

டேப் ரெகார்டரைத் தரையில் வைத்து, மைக்கையும் அதையும் இணைக்கும் ஒயர் சுருள்களைப் பிரித்தான் சக்கரை. தாராளமாய்ப் பல கெஜங்களுக்கு இருந்தது. "ஒரு கவலை விட்டது. நீளம் போதும்," என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்ட சக்கரை, "குழாயைப் பிடித்துக் கொண்டு மேலே ஏறி, இந்த மைக்கை அதோ அந்தத் தண்ணீர்த் துவாரத்துக்குள் நன்றாகச் செருகி வைத்துவிடு. பிறகு, இந்த ஒயரை, குழாயின் பின் பக்கமாகவே மறைவாகப் பொருத்தியபடி கீழே கொண்டு வா. அதற்கப்புறம், இந்த இடத்தில் ஒரு பள்ளம் தோண்டி, டேப் ரெகார்டர் தெரியாமல் புதைத்து வைக்க வேண்டும். ஆனால் இது இயங்குவதற்குத் தடையில்லாமல் பாதுகாப்பும் கொடுத்துப் புதைக்க வேண்டும்," என்றான்.

பக்கிரிசாமி குறுக்கிட்டு, "அந்த ரூமிலே என்ன பேசினாங்கண்ணாலும் இதிலே பதிவாயிருக்கும், இல்லையா சார்?" என்று குழந்தைத்தனமாகக் கேட்டான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"அதேதான். முதலில் அந்த வேலையைச் செய். கவனம். துளி ஓசை ஏற்படக்கூடாது," என்று கூறி, குழாயில் அவனை ஏற்றிவிட்டான் சக்கரை.

பக்கிரிசாமிக்கு இந்த மாதிரி வேலையில் பழக்கம் உண்டோ என்னவோ, கிடுகிடுவென்று ஏறிவிட்டான். கீழேயிருந்து பாய்ந்து வந்த வெளிச்சக்கம்பி, அவனுடைய காலைச் சுற்றி, அரை சதுர அடிக்கு மட்டுமே பரவியது.

மாடியறையின் தண்ணீர்த்துவாரம், பக்கிரிசாமி எடுத்துச் சென்ற மைக்குக்காகவே அளவெடுத்துச் செய்த மாதிரி இருந்தது. அங்கே அதைப் பொருத்தி, முதலில் விரலாலும் பிறகு ஒரு செடிக் காம்பினாலும் உட்புறம் தள்ளி விட்டான். ஆனால் அதே சமயம் அது அறைக்குள் கண்ணில் பட்டுவிடாதபடியும் பார்த்துக் கொண்டான். வீட்டின் தன்மையைக் கவனித்து, சுவரின் பருமன் எத்தனை இருக்கும் என்று உத்தேசமாகக் கணக்கிட்டுக் கொண்டு மைக்கை நகர்த்தினான்.

சுவரின் வெளிப்புறம் அந்த இடத்தில் ஒரு வெடிப்பு இருந்தது. ஒயரை அதற்குள் அமுக்கி அமுக்கித் திணித்தான். அப்படியே கொண்டு வந்து இரும்புக் குழாயின் பின் புறத்துக்கு வந்ததும் அவன் வேலை சுலபமாகிவிட்டது. எவர் கண்ணுக்கும் தெரியாதவாறு ஒயரை மறைத்துக்கொண்டே இறங்கியவன், தன் வேலையை ரொம்பச் சாதாரணமாகக் கணக்கிட்டு விட்டான் போலும். அவனுடைய எச்சரிக்கையின்மை, ஒரு தவறான கல்லில் கால் வைக்கும்படி செய்தது. உறுதியாக இல்லாத அந்தக் கல், பக்கிரிசாமியின் கனம் தாங்காமல் ஒடிந்துவிழ —

அதைத் தொடர்ந்தாற் போலவே தொபீலென்று பக்கிரிசாமியும் விழுந்தான். சுமார் இருபத்தைந்து அடி உயரத்திலிருந்து.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அடுத்த கணம், தோட்டத்தின் காய்ந்த சருகுகள் சரசரவென்று சப்தித்தன. வீட்டுக்குள்ளேயிருந்து, "யார்? யாரது?" என்ற சூரியின் அதட்டலான குரல் கேட்டது. ஒரு கதவு எங்கேயோ திறக்கப்படும் ஓசை வெளிப்பட்டது.

"இப்படி! பக்கிரி! இப்படி," விழுந்தவனைச் சரேலென இழுத்துக்கொண்டு ஒரு காட்டாமணிப் புதரின் பின்னால் பதுங்கிக் கொண்டான் சக்கரை.

சில நிமிடங்களுக்கு உலகமே நின்று விட்டாற் போலாயிற்று.

வீட்டுக்குள்ளிருந்து விளக்கின் ஒளி தோட்டத்தின் முன்புறம் வீசியது. நல்ல காலமாய், தோட்டத்தில் விளக்குக் கம்பம் எதுவும் இருக்கவில்லை. இருந்திருந்தால், சக்கரையும் பக்கிரிசாமியும் ஒளிந்திருந்த இடத்திலும் அதன் சுற்று வட்டாரத்திலும் ஒளி மயமான வெள்ளம் பாய்ந்திருக்கும்.

நிதானமாக இங்குமங்கும் பார்த்தவாறு நெருங்கி வரும் ஓர் உருவத்தை அவர்கள் கண்கள் கண்டன. பக்கிரிசாமியின் நடுங்கும் உடலை, 'பயப்படாதே' என்று கூறுவது போலக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான் சக்கரை. இந்தப் பர்மா இளைஞனின் துணிச்சலையும் பொறுமையையும் எண்ணி எண்ணி வியந்தது அவன் மனம். அவ்வளவு உயரத்திலிருந்து விழுந்தவனுக்கு, அதிர்ஷ்ட வசமாக, ரத்தக் காயம் எதுவும் ஏற்பட்டிருக்க வில்லை. ஆனால் எலும்பு நொறுங்குமளவுக்கு ஊமைக் காயமும், உயிர் போகும் வலியும் ஏற்பட்டிருப்பது நிச்சயம். ஒரு முனகல்கூட வெளிப்படக்கூடாது என்று எத்தனை தீர்மானமாக வாயைப் பொத்திக்கொண்டு இருக்கிறான் இவன்!

திடீரென்று பக்கிரிசாமி அவன் தோளில் தட்டி, கையைச் சுட்டிக் காட்டினான்.

சுவர் ஓரமாக, அந்த டேப் ரெகார்டர் கருவி பளிச்சென்று உட்கார்ந்திருந்தது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

சட்டெனப் பாய்ந்து அதை எடுத்து வரவும் முடியாது. அதோ அந்த உருவம் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. அப்படியே விட்டு வைக்கவும் முடியாது. அந்தப் பளபளப்பான உலோகம் இருட்டிலும் என்னமாய் மினுமினுக்கிறது!

ஒவ்வோர் அடியெடுத்து அந்த உருவம் வைக்கும் போதும் தங்கள் இதயத்தின் மீதே ஒரு ராட்சதக் கால் நடப்பதைப் போலிருந்தது. அந்தத் திணற வைக்கும் வேதனையில் எங்கே மூச்சு குபுக்கென்று பெரிதாக ஓசைப்பட்டு விடுமோ என்ற அச்சம்கூட எழுந்தது.

ஆயிற்று; இதோ வந்துவிட்டது அந்த உருவம்.

முகம் சரியாய்த் தெரியாவிட்டாலும், தொள தொளவென்று இருந்த அந்த உதயசங்கர் பைஜாமா, ஆராய வந்திருப்பவன் சூரிதான் என்பதைக் காட்டியது. அவனுடைய நடை என்னதான் சாவகாசமாய் இருந்தாலும், அதன் பின்னே ஒரு பேய் வெறி இயக்குவதை, ஒளிந்திருந்த இருவருமே உணர்ந்திருந்தார்கள்.

"லொள்! லொள்!"

ஷெட்டுக்குள்ளிருந்து அந்த நாய் மிக வேகமாகக் குரைக்கத் தொடங்கியது, யாரும் எதிர்பாராதவிதமாய்.

"போச்சு!" என்று எண்ணிக்கொண்டான் சக்கரை முதலில்.

ஆனால், அந்த ஷெட்டை நோக்கி சூரி வேகமாய் ஓடியதும்தான் அவனுக்குப் புரிந்தது — தன்னுடைய, அந்த விலங்கு அறிவினால் எத்தகைய அற்புத உதவியை அது ஆற்றியிருக்கிறது என்ற உண்மை.

தன் நண்பர்கள் ஆபத்தில் சிக்கியிருக்கிறார்கள் என்று அதற்குப் புரிந்திருக்கிறது! என்ன சாமர்த்தியமாய்த் தன் பக்கத்துக்குச் சூரியின் கவனத்தை இழுத்துக் கொண்டது!

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ஒரே தாவலில் முன்னேறிய சக்கரை, அந்த டேப் ரெகார்டர் கருவியைத் தன் மறைவிடத்துக்குத் தூக்கிக் கொண்டு வந்துவிட்டான்.

20

மீண்டும் பரிபூரண நிசப்தம் நிலவும் வரை சக்கரையோ பக்கிரிசாமியோ வாய் திறக்கவேயில்லை. இருவர் உள்ளமும் படபடவென்று அடித்துக் கொண்டிருந்தது, சூரி அந்தத் தோட்டத்தில் உலவிக் கொண்டிருந்த வரையில்.

'ஒரு குதிரை! ஒரு குதிரை! என் சாம்ராஜ்யத்தை யே தரத் தயார் — ஒரு குதிரைக்காக!' என்று ஷேக்ஸ்பியர் படைத்த ரிச்சர்டு மன்னன் கதறினானே, அதுதான் சக்கரைக்கு நினைவு வந்தது. 'ஒரு கார்! இல்லாவிட்டால் ஒரு சைக்கிள்! இந்த இடத்தை விட்டுத் தப்பியோடுவதற்கு என்ன வாகனம் கொடுத்தாலும், என் ஆஸ்தி முழுதையும் கொடுக்கத் தயார்!' என்று சக்கரை சொல்லிக் கொண்டிருந் தான். பெரிய துப்பறியும் வீரனைப்போலக் காரியங்களை ஏற்றுச் செய்துகொண்டிருக்கும் தனக்கு, உண்மையான நெருக்கடி ஏற்படுகிறபோது எப்படிப்பட்ட அச்சம் உண்டாகிறது என்பதை நினைக்க அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. அதே சமயம், சூரியிடமுள்ள ஏதோவொரு கொடிய சக்திதான் தனக்கு இப்படிப்பட்ட அச்சத்தை ஏற்படுத்துகிறது என்றும் அவனுக்குத் தெரிந்தது.

நாயைக் கட்டிப் போட்டிருந்த ஷெட்டுக்குள்ளே யும் சுற்றுப் பக்கத்திலும் சிறிதுநேரம் பார்த்துவிட்டு சூரி திரும்பி விட்டான் பங்களாவினுள். மார்போடு அணைத்த படி வைத்திருந்த டேப்ரெகார்டர் பெட்டியை மெதுவே

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

எடுத்துக்கொண்டு மறைவிடத்திலிருந்து வெளிப்பட்டான் சக்கரை. பக்கிரிசாமியின் உதவியுடன் ஓசைப்படாமல் தண்ணீர்க் குழாயின் கீழே புதைத்து வைத்தான். அது இயங்குவதற்குத் தடையேற்படாதவாறு தக்க பாதுகாப்பு செய்தான். ஒயர்களும், பெட்டியும் மறைவாக இருக்கின்றனவா என்பதை மீண்டுமொரு முறை சரி பார்த்துவிட்டு, போகலாம் என்று சாடை காட்டினான்.

சென்ற இரண்டு மணி நேரத்தில் பக்கிரிசாமியும் சக்கரையும் வாய்விட்டுப் பேசிக்கொண்ட சமாசாரங்களை எழுதுவதென்றால், ஒரு பத்துப் பைசா தபால் தலையின் பின்புறம் போதும். அத்தனை எச்சரிக்கையுடன் அவர்கள் மௌனம் கடைப்பிடித்தார்கள். நெடுஞ்சாலையில் வெகு தூரம் வந்த பிறகுதான் பக்கிரிசாமி கேட்டான்: "அந்த ரூமிலே யார் இருக்கிறார்களென்று நினைக்கிறீங்க?"

"உன் குடும்பத்தைக் குலைத்தவன்."

"ஊசோ?"

"ஆமாம், அப்படித்தான் எனக்குச் சந்தேகம். அங்கேதான் அந்தக் கிழவன் இருக்கிறானா என்பதைத் தெரிந்து கொண்டால் மட்டும் போதாது. என்ன நோக்கத்துடன் சூரியும் அவனும் ஒன்று சேர்ந்திருக்கிறார்கள் என்பதும் தெரிய வேண்டும்."

"அவங்க பேச்சைக் கேட்டோமானால் எல்லாம் புரிஞ்சிடும்?"

"ஆமாம். நீதான் இந்த வேலையைப் பொறுப்பாய் முடிக்க வேண்டும்."

"எந்த வேலை?"

"டேப் ரெகார்டர்தான். தினம் நடு ராத்திரியில் இங்கே வந்து, பதிவான டேப்பை எடுத்துக்கொண்டு புதிய டேப் வைக்க வேண்டும். மூன்று நாள் கழித்து எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு என்னை வந்து பார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

மூன்று நாள் டயம் போதும். அதற்கு மேல் பெட்டியும் அங்கே இருக்கத் தேவையில்லை. எடுத்து வந்து விடு," என்று சக்கரை கூறியதைப் பயபக்தியுடன் ஏற்றுக்கொண்டு தலையாட்டிவிட்டுத் தன் ஜாகைக்குச் செல்லும் பாதையில் விடைபெற்றுக் கொண்டான் பக்கிரிசாமி.

அந்த நேரத்துக்கு மேல் எந்த வாகனம் கிடைக்கும் சக்கரைக்கு?

துவண்ட காலும், சோர்ந்த முகமும், கலைந்த தலையுமாக, ராத்திரி இரண்டரை மணிக்கு வந்து கதவைத் தட்டிய மருமானிடம் தர்முவுக்கு ஏகப்பட்ட கோபம் வந்ததில் வியப்பில்லை.

"நீ இந்த மாதிரி உடம்பைக் கெடுத்துக்கொண்டு எந்த ஆராய்ச்சியும் நடத்த வேண்டாம். பேசாமல் பம்பாய்க்கே போய்ச் சேர்," என்றாள்.

"அத்தை, என் விஷயம் அப்புறம் கவனித்துக் கொள்ளலாம். முதலில் உன்னை ஆபத்திலிருந்து காப்பாற்றிக் கொள்," என்றான் சக்கரை.

என்ன ஆபத்து என்று தர்மு சிவராஜ் கேட்கும் வரையில் சக்கரை நிற்கவில்லை. தூக்கக் கலக்கத்துடன் படியேறிச் சென்றவன் தனது அறைக்குச் சென்று தாளிட்டுக் கொண்டு படுத்து விட்டான்.

மறுநாள் காலையில் அவனை விசாரிக்க வேண்டும் என்று நினைத்திருந்த தர்முவுக்கு ஏமாற்றம்தான் கிட்டியது. அவள் கல்லூரிக்குப் போகும் வரையில் சக்கரை கீழே இறங்கி வரவே இல்லை. காமிராவில் பிலிம் சுருளை மாட்டிக் கொண்டிருந்த கணவரிடம் கேட்டாள்.

"இன்னும் தூங்கிக் கொண்டிருப்பான் சோம்பேறி," என்று கோபத்துடன் பதிலளித்தார் சிவராஜ்.

தர்முவுக்கு ஓரளவு கவலை பிறந்தது. நேரம் கழித்துத் திரும்பியதாலும், கண் விழித்ததாலும் அவன்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

உடம்புக்கு ஏதாவது நேர்ந்திருக்குமோ? கல்லூரிக்கு நேரமானாலும் பரவாயில்லை என்று மாடிக்குச் சென்று பார்த்தாள்.

கதவைத் தட்டினாள். யாரும் திறக்கக் காணோம். தள்ளிப் பார்த்தாள். அப்புறம்தான் புரிந்தது — கதவு வெளிப்புறம் பூட்டப்பட்டிருக்கும் விஷயம்.

விடிகாலையிலேயே எங்கேயோ புறப்பட்டுப் போய் விட்டிருக்கிறான் சக்கரை. எங்கே சென்றிருப்பான், தன்னிடம் கூடச் சொல்லாமல்? குழப்பத்துடன் திரும்பி வந்து சமையற்காரி அம்மணியைக் கேட்டாள். அவளும் தனக்குத் தெரியாதென்று கை விரித்து விட்டாள்.

கலங்கிய உள்ளத்துடன்தான் தர்மு சிவராஜ் அன்றைக்குக் கல்லூரிக்குப் புறப்பட்டுச் சென்றாள். "உன்னை ஆபத்திலிருந்து காத்துக்கொள்," என்று கூறிய மருமானின் சொற்கள் அவள் காதில் ஒலித்துக் கொண்டே யிருந்தன. 'அப்படிச் சொன்னவனுக்கே ஏதோ ஆபத்து நேரிட்டிருக்கிறாற்போல் தோன்றுகிறதே,' என்று கவலைகள் மனத்தை வாட்டக் கல்லூரியை அடைந்தாள்.

அங்கேயும் திகைப்பு ஏற்பட்டது.

எப்போதும் புன்னகையுடன் ஓடிவந்து காரின் கதவைத் திறந்து விடும் அவளுடைய சொந்தப் பியூன், இன்று கவலை நிறைந்த முகத்துடன் மெதுவே வந்து, மெதுவே சென்றான். கல்லூரியின் பெரிய படிகளில் ஏறித் தன்னுடைய அறையை அடையும் வழியெங்கும் சில முகங்கள் அவளை அனுதாபத்துடனும், சில முகங்கள் கோபத்துடனும், சில முகம்கள் ஆவலுடனும் அவளைப் பார்த்தன.

அறைக்கு வெளியே நின்றவாறு தங்களுக்குள் கிசுகிசுத்துக்கொண்டிருந்த சில மாணவிகள் அவளைக் கண்டதும் பேச்சை நிறுத்திக் கொண்டார்கள். ஆனால் அனாவசியமாய்க் கூட்டம் போடுவது பிரின்ஸிபாலுக்குப்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

பிடிக்காது எனத் தெரிந்தும், இடத்தை விட்டு அசையாமல் அங்கேயே நின்று கொண்டிருந்தார்கள். அவர்களுடைய கண்களில் ஒரு பிடிவாதத்தையும் வீம்பையும் கண்டாள் தர்மு.

"பெரிய ஐயாவும் மத்தவங்களும் வந்திருக்கிறாங்க," என்று பியூன் அவளிடம் தெரிவிக்கவும், அறைக்குள் அவள் நுழையவும் சரியாயிருந்தது.

மேலே மின்சார விசிறி சுழல, வரிசையான நாற்காலிகளில் அவளுடையு மேஜையைச் சுற்றி வீற்றிருந்தார்கள் கல்லூரி நிர்வாகக் குழுவின் உறுப்பினர்கள். மொத்தம் எட்டுப் பேர் கூடியிருந்தும் அந்த இடத்தில் குண்டூசி விழும் சப்தத்தைக் கூடக் கேட்க வைக்கும் அமைதி நிலவியிருந்தது.

தர்மு அவர்களுக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு, தன் இருக்கையில் அமர்ந்தாள்.

குழுவின் தலைவரான ஜஸ்டிஸ் ஆனந்தம் வேறெதுவும் பேசவில்லை. "அந்தப் பெண் அம்பிகா இருக்கிறாளே — அவளுக்குத் தாயார், தகப்பனார் இருக்கிறார்களா?" என்று மட்டுமே கேட்டார்.

"இல்லை, ஒரு சித்திதான் இருக்கிறாள்."

"பெயர்?"

"மரகதம்."

ஜஸ்டிஸ் ஆனந்தம் தம் கையிலிருந்த ஒரு டைப் அடித்த காகிதத்தின் தலைப்பில் அந்தப் பெயரை எழுதி, 'கீழே கையெழுத்துப் போட்டு அனுப்பிவிடு," என்று தர்முவிடம் கொடுத்தார்.

அவருடைய முகத்தைப் பார்த்து எதுவும் புரிந்து கொள்ள முடியாதவளாக, காகிதத்தைப் பார்த்தாள் தர்மு.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"திருமதி மரகதம் அவர்களுக்கு,

தங்கள் மேற்பார்வையிலுள்ள குமாரி அம்பிகாவினால் எங்கள் கல்லூரிக்குப் பற்பல சங்கடங்கள் நேரிடுவதால், அவளை கல்லூரியி லிருந்து நீக்கி விடுவது என்று வருத்தத்துடன் முடிவு செய்துள்ளோம். இத்துடன், மாற்றல் பாரம் அனுப்பியுள்ளோம். வேறெந்தக் கல்லூரியில் வேண்டு மானாலும் அவளைச் சேர்க்கலாம்.

பிரின்ஸிபால்.

"இது..." என்று ஏதோ கூற வாயெடுத்தாள் தர்மு. ஆனால் குழுமியிருந்தோரின் பார்வையில் தென்பட்ட கடுமை அவளை மௌனியாக்கியது. "எனக்கு என்ன தோன்றுகின்றதென்றால்..." என்பதற்குமேல் அவளால் பேச முடியவில்லை.

"உனக்குத் தோன்றுகிறபடி இத்தனை நாள் கல்லூரியை நடத்தியாகிவிட்டது. கொஞ்ச காலம் எங்களுக்குத் தோன்றுகிறபடிதான் நடத்துவோமே?" என்றார் ஜஸ்டிஸ் ஆனந்தம் கிண்டலாக. "அம்பிகாவைக் கல்லூரியிலிருந்து விலக்கினால்தான் நமக்கு நல்ல பெயர். நாங்கள் ஏகமனதாய் முடிவு செய்திருக்கிறோம்," என்று கூறி அருகிலிருந்தோரை ஒரு முறை அவர் பார்த்ததும், "ஆமாம், ஆமாம்" என்று அவர்கள் தலையசைத்தார்கள்.

"மன்னிக்க வேண்டும்," என்று ஒரு புதுக் குரல் கேட்டது.

மாணவி நூருன்னிஸாதான் உள்ளே நுழைந்தவள்.

"எங்கள் மாணவி யூனியனிலும் ஏகமனதாய் ஒரு முடிவெடுத்திருக்கிறோம். அதை தெரிவிக்கத்தான் வந்தேன் — யூனியன் காரியதரிசி என்ற முறையில்," என்று இனிமை யாயும், அதே சமயம் அழுத்தமாயும் அவள் கூறியபோது, ஜஸ்டிசுக்கும் அவருடைய சகாக்களுக்கும் முகத்தில் ஈயாட வில்லை.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

நிலைமை விபரீதமாக மாறுவதை உணர்ந்தாள் தர்மு. "நூருன்னிஸா, உனக்குச் சம்பந்தமில்லை, இது. நீ போ," என்று அவளுக்குச் சொல்லிக் கொண்டிருக்கையில் வேறு பல மாணவிகளும் மெல்ல மெல்ல உள்புறம் வந்து விட்டார்கள். எல்லோரும் அம்பிகாவின் தோழிகள் என்பது தெரிந்தது.

நூருன்னிஸா யாருக்கும் பயப்படாதவளாக, "அம்பிகாவைக் கல்லூரியிலிருந்து விலக்க நீங்கள் முடிவு செய்திருப்பது எங்களுக்குத் தெரியும். கல்லூரியில் அவள் ஒழுங்கீனமாகவோ, புத்தி மாறாட்டமாகவோ நடந்து கொண்டிருந்தால், சரி. பாடங்களை ஒழுங்காகப் படித்துக் கொண்டு, கல்லூரியின் கட்டுப்பாடுகளையும் மீறாமல் நடந்து கொள்கிற ஒரு மாணவியை எதற்காக நீக்குவது? வேண்டுமானால் ஒரு வைத்தியக்குழு நியமித்து அவளை பரீட்சை செய்யும்படி கேளுங்கள். அவள் தொடர்ந்து படிப்பதால் மற்ற மாணவிகளுக்குக் கெடுதல் என்று அவர்கள் சொல்லட்டும். பிறகு நீக்குங்கள்," என்றாள்.

ஜஸ்டிஸ் ஆனந்தம் பொறுமை இழந்தவராக, "கல்லூரியின் பெயர் பத்திரிகைகளில் சிரிக்கிறதே! அது போதாதா?" என்று இரைந்தார்.

"அதைப் பத்திரிகைக்காரர்களிடம் கேளுங்கள்," என்று நூருன்னிஸா திருப்பிக் கொடுத்தாள். "அம்பிகாவை நீக்கிவிட்டால் மட்டுமென்ன? 'மீனாம்பா கல்லூரியின் மாஜி மாணவியான அம்பிகா' என்று செய்தி வெளியிடு வார்கள்.'

"இருங்கள், இருங்கள்," என்று இரண்டு பக்கமும் கையமர்த்தினாள் தர்மு சிவராஜ், "அம்பிகா எங்கே?"

"இன்று காலேஜுக்கு வரவில்லை," என்றாள் நீலா.

"வந்திருந்தாள். இந்த மாதிரி அவளைப் பற்றி ஏதோ விசாரணை நடக்கப்போகிறது என்று காதில்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

விழுந்ததும் வீட்டுக்குத் திரும்பிவிட்டாள்," என்றாள் இன்னொருத்தி.

"சரி. சாயந்திரம் நானே நேரில் அவள் வீட்டுக்குப் போய் விசாரிக்கிறேன்," என்று தர்மு சமாதானமாகச் சொல்ல முயன்றதை மாணவிகள் ஏற்றுக் கொள்வார்கள் போலிருந்தது. ஆனால் ஜஸ்டின் ஆனந்தம், "மறுபடியும் மறுபடியும் எதற்குப் பிரச்சினையை நீடிக்க வேண்டும்? நீக்கிவிட்டுப் போகவேண்டியதுதானே?" என்றார்.

தர்முவுக்கு முதன் முறையாகக் கோபம் வந்தது. மாணவிகளின் முன்னால் தன் கௌரவம் குலைக்கப் படுவதையும் கண்டாள். அழுத்தமாகத் தன் அதிகாரத்தை ஒருமுறை பிரயோகிக்க வேண்டுமென்று தீர்மானித்தவ ளாக, "ஒரு மாணவியைக் கல்லூரியிலிருந்து விலக்கி அனுப்பி விடுவதை அவ்வளவு எளிதாக நீங்களெல்லாம் நினைத்தால் எப்படி? அவளுடைய எதிர் காலத்தையே நாம் பாழடிக்கிறோம் என்பதை மனத்தில் வைத்துக் கொண்டு காரியம் செய்ய வேண்டும். சிவப்பு மசியினால் அவள் பெயர்மீது நாம் போடுகிற ஒரு கோடு, அவள் வாழ்க்கையின் மீதே அடிக்கிற இரும்புச் சட்டம் என்பதை மறந்து விடாதீர்கள்," என்று நிர்வாகக் குழுவினரைப் பார்த்துச் சொன்னதோடு நூருன்னிஸாவிடமும், "நீங்கள் அமைதியாக வகுப்புக்குப் போங்கள். தீர விசாரியாமல் உங்கள் தோழிக்கு எவ்வித அநீதியும் இழைக்க மாட்டோம். அப்படி இழைக்கிற மாதிரி நேர்ந்தால், அதற்கு முன்னால் இந்தப் பிரின்ஸிபாலின் ராஜினாமா இவர்கள் கைக்குப் போய்ச் சேர்ந்துவிடும். போதுமா?" என்றாள்.

"வாழ்க பிரின்ஸிபால்!" என்று கோஷமிட்டபடி மாணவிகள் கலைந்தார்கள்.

"காலேஜையே கெடுத்து விட்டார்களென்று தோன்றுகிறது," என்று முணுமுணுத்துக் கொண்டிருக்கும் ஜஸ்டின் ஆனந்தத்தைத் திரும்பிப் பார்க்கும் துணிவு

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

இல்லாமல், மேஜையிலுள்ள காகிதங்களை அடுக்கி வைப்பது போல் பாவனை செய்யலாளான் தர்மு.

"நம்முடைய தீர்மானத்துக்கு ஒரு மதிப்புக் கிடையாது என்கிறார்கள்," என்று ஓர் உறுப்பினர் அடித் தொண்டையில் கூற, மற்றவர்கள் "அது தானே?" என்று சிடுசிடுக்க, புயல் மீண்டும் கிளம்பும் போன்ற நிலைமை உருவானபோது —

பியூன் உள்ளே வந்து ஒரு கடிதத்தைக் கொடுத்தான் பிரின்ஸிபாலிடம்.

முக்கியமான விஷயம் இருந்தாலொழிய, நிர்வாகக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் யாரும் உள்ளே நுழையக்கூடாதாகையால், அந்தக் கடிதத்தில் ஏதோ விசேஷம் இருக்க வேண்டுமென்று அனைவரும் ஊகித்துக் கொண்டார்கள். குறிப்பாக ஜஸ்டிஸ் ஆனந்தம் கழுத்தை வளைத்து எட்டிப் பார்த்தார் ஆவலோடு.

அவர் ஆவல் வீண் போகவில்லை. கடிதத்தை அசிரத்தையாகப் படிக்கத் தொடங்கிய தர்முவின் முகத்தில் சில வினாடிகளுக்கெல்லாம் இருளடைந்தது. "ஹூம்! விழலுக்கா நீர் இறைத்தேன்!" என்று தன்னையே நொந்த படி அந்தக் கடிதத்தை எல்லோருக்கும் முன்னிலையில் மேஜைமீது வைத்தாள்.

"பிரின்ஸிபால் அவர்களுக்கு,

என் மகளான குமாரி அம்பிகாவைத் தங்கள் கல்லூரிக்கு இனி அனுப்புவதில்லையென நான் முடிவு செய்து விட்டேன். அவளுடைய மன நிலையும் எதிர்காலமும் பாதிக்கப்பட்டது தங்கள் கல்லூரியினால்தான். ஆகவே இந்த முடிவுக்கு வர வேண்டிய கட்டாயம் நேரிட்டு விட்டது.

இங்ஙனம்,
மரகதம்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

குழுமியிருந்த அனைவரின் பரிகாசப் பார்வையும் தன்னைக் குத்துவதை உணர்ந்தாள் தர்மு. அவள் தேகம் கூசியது. 'இப்போது என்ன சொல்கிறாய்?' என்று மற்றவர்கள் கேட்காமல் கேட்கும் கேள்வி அவளை ஆயிரம் ஊசிகளாய்த் தைத்தெடுத்தது.

"இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது. நான் சாயந்திரம் நேரில் போய்ப் பார்க்கிறேன்," என்று அவள் கூறியபோது ஏளனச் சிரிப்புக்கள் அலையென எழுந்து அவளைத் தாக்கின. நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவராக வெளியேறிய பின்னரும் அந்தச் சிரிப்பு அலைகள் அவளைச் சுற்றிச் சுற்றி வந்தன.

மாலை வரை அவளுக்கு எந்த வேலையும் ஓட வில்லை. வழக்கமாக ஐந்து மணிக்குப் புறப்படுகிறவள் அன்று நாலு மணிக்கே கிளம்பிட்டாள்.

ஆனால் அம்பிகாவின் வீட்டுக்குப் போகும்போது சக்கரையும் இருந்தால்தான் பலம் என்று தோன்றியது. மனச்சுமையுடன் தன் இல்லத்துக்குத் திரும்பினாள். நுழையும் போதே எதிர்ப்பட்ட கணவரின் மூலம் இன்னும் சக்கரை வரவில்லை என்று அறிந்து கொண்டாள். காலையிலிருந்து நேரிட்ட பல சோதனைகளையும் பிரசினைகளையும் கூறி ஆறுதல் பெற மருமான் இல்லாத தோடு, சேர்ந்தாற்போல் இரண்டு நாட்களாக அவனைக் காணோமே என்ற திகிலும் அவளைப் பிடித்துக் கொண்டது.

மாடியில் தன் புத்தகங்களையும் பைல்களையும் வைத்து விட்டுக் கீழே இறங்குகையில் அன்று சக்கரையுடன் டேப் ரெகார்டரை வாங்கிச் சென்ற ஆள் மேலேறி வந்து கொண்டிருந்தான்.

"என் பேரு பக்கிரிசாமிங்க. டேப் ரெகார்டரை எடுத்திட்டு வரச்சொல்லியிருந்தாங்க? எங்கே அவரு?" என்று கேட்டான் அவன்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"சக்கரையா? இரண்டு நாளாய் எங்கே போனான் என்று தெரியவில்லையே?" என்று தர்மு தன் கலங்கிய கண்ணைத் துடைத்துக்கொண்டு பார்த்தபோது கீழ்ப்படியில் நின்று கொண்டிருந்தான் சக்கரை.

"நன்றாய் என்னை கதி கலங்க வைத்தாய், போ! எங்கே போயிருந்தாய் மூன்று நாளாய்?" என்று தொண்டை அடைக்கக் கோபித்துக்கொண்ட அத்தையிடம் விளக்கம் கூறிக் கொண்டு உட்கார்ந்திருக்கவில்லை சக்கரை.

"நீ போய்ப் பலகாரம் சாப்பிடு, அத்தை. காஞ்சிபுரம் இட்டிலியும் மலையாள அவியலும் படு பிரமாதம். போ, போ," என்று அவளை அனுப்பிவிட்டு, மாடிக்கு விரைந்தான் பக்கிரிசாமியுடன்.

அறைக் கதவைச் சாத்திக்கொண்டு அவசர அவசரமாக டேப் ரெகார்டரை இயக்கினான்.

"ஊசோ பேசப் போகிறான்... இரு, இரு... சப்தம் போடாதே..." என்று பக்கிரிசாமிக்கு எச்சரிக்கையும் செய்தான்.

ஆனால் டேப் சக்கரங்கள் ஒரு சத்தமும் செய்யாமல் மௌனமாகவே சுழன்று கொண்டிருந்தன.

சக்கரையும் பக்கிரிசாமியும் ஒருவரையொருவர் திகைப்புடன் பார்த்துக் கொண்டனர். திடீரென்று...

"என்னை வெளியே அனிப்பி விடுங்கள்... நான் போகிறேன்... நான் உங்களுக்கு ஒரு தீங்கும் செய்யவில்லை. இனி மேலும் செய்யமாட்டேன் — என்னை அனுப்பி விடுங்கள்..." என்றது ஒரு குரல்.

அதற்குப் பதிலளித்தது இன்னொரு குரல்: "ஏன் வேதசிகாமணி, என்ன கஷ்டம் உங்களுக்கு இங்கே?"

பக்கிரிசாமி ஆச்சரியத்துடன் சக்கரையைப் பார்த்தான்.

"இது ஊசோ இல்லை... வேறே யாரோ..." என்றான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"ஆமாம். ஏதோ ஒரு தப்பான அறையில் மைக்கைப் பொருத்தி விட்டோம். யார் இந்த வேதசிகாமணி? வந்து... வேதசிகாமணி! ஆமாம்! அட!" என்று மகிழ்ச்சியுடன் எழுந்துகொண்டான் சக்கரை.

21

"வா நூருன்னிஸா! வாடி மங்களம்! ஐயய்யோ வைதேகியும் வந்து விட்டாளா? போச்சு, போச்சு!" என்று தன் தலையை இரண்டு கைகளாலும் பொத்திக்கொண்டு பயந்தவள் போல — ஆனால் மனம் நிறைந்த மகிழ்ச்சியுடன் — தன் சிநேகிதிகளை வரவேற்றாள் அம்பிகா.

அடையாறு பங்களாவுக்குப் பிக்னிக் சென்றார்களே, அந்தத் துரதிர்ஷ்டமான தினத்துக்குப் பிறகு அவர்கள் ஒன்று கூடி அரட்டை அடிப்பதற்கான சந்தர்ப்பமே ஏற்படவில்லை. கல்லூரியில் தினம் தினம் சந்திக்கிறவர்கள்தான் என்றாலும், அவர்கள் உண்டு, அவர்களது படிப்பு உண்டு என்று இருப்பதற்கே நேரம் சரியாயிருந்தது. ஆனால், அம்பிகாவின் சோதனைகள் அதிகரிக்க அதிகரிக்க அந்தத் தோழிகள் அவள்பால் கொண்டிருந்த பிரியமும் பரிவும் அதிகரித்தன. பிரின்ஸிபால் தர்மு சிவராஜின் அறைக்குள் நுழைந்து, கிட்டத்தட்ட மறியலே செய்யுமளவுக்கு அவர்களைத் தூண்டியது அந்தத் தோழமைதான்.

தனக்காகத் தன் சிநேகிதிகள் கல்லூரியில் நடத்திய போராட்டம் எப்படி அம்பிகாவுக்குத் தெரியாதோ, அதேபோல் அவர்களுடைய திடீர் வருகைக்குக் காரணமும் அறியாதவளாக இருந்தாள்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

சமையற்கட்டில் கஷாயம் காய்ச்சிக் கொண்டிருந்த சித்தி, பாதியில் வர முடியாதவளாக, பேச்சுக் குரல்களை மட்டும் கேட்டுக் குழப்பமடைந்தாள். "யார் அம்பிகா வந்திருப்பது? உன் சினேகிதிகளா?" என்று குரல் கொடுத்தாள் அங்கிருந்தவாறே.

"அதை ஏன் கேட்கிறாய், சித்தி, போ! பெரிய பட்டாளமே வந்திருக்கிறது! எப்படித்தான் இத்தனை பேருக்கும் ஹார்லிக்ஸ், காப்பி, ஓவல் என்று வினியோகம் பண்ணிச் சமாளிக்கப் போகிறாயோ!" என்று சிரித்துக் கொண்டே சித்திக்குப் பதிலளித்துவிட்டு, தோழிகளின் முகத்தைப் பார்த்தாள் அம்பிகா.

ஏன் அதிலே மகிழ்ச்சி இல்லை? ஏன் எல்லோரும் என்னவோ போலிருக்கிறார்கள்?

அவள் குழப்பத்தை விரைவிலேயே தீர்த்தாள் வைதேகி. "அம்பிகா, மூன்று நாள் முன்பு பிரின்ஸிபாலின் ரூமிலே சண்டை போட்டோம். இன்று இங்கே சண்டை போடுவதற்காக வந்திருக்கிறோம்," என்றாள் பிடிவாதம் நிறைந்த குரலில்.

திடுக்கிட்டாள் அம்பிகா. "ஏன்? ஏன்?"

"என்னைக் கேட்காதே, உன்னையே கேட்டுக் கொள்."

"நூருன்னிஸா, நீ சொல்லேன்... மங்களம், நீ சொல்லக் கூடாதா?" என்று மற்றவர்களைப் பரிதாபமாக மாறி மாறிப் பார்த்தாள் அம்பிகா.

நூருன்னிஸா மெல்ல, "அன்று காலேஜுக்கு வந்தவள் ஏன் திரும்பிப் போய்விட்டாய்?" என்று வினவினாள்.

அம்பிகா தலையைத் தாழ்த்திக் கொண்டாள். அவள் கண்களில் ஈரம் பளபளத்தது. "எனக்கு... என்னவோ போலிருந்தது மனசு... உங்களுக்குத் தெரியாதா? ஏதோ

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ஒன்று பிடித்துக் கொள்கிற மாதிரி இருந்தது... காலேஜ் வேண்டாம் படிப்பு வேண்டாம் என்று எனக்குள் யாரோ சொல்கிற மாதிரி இருந்தது..."

"அதற்காக? கல்லூரிப் படிப்பை நிறுத்தி விடுகிறேனென்று பிரின்ஸிபாலுக்குக் கடிதம் போட்டு விட்டாய்? அப்படித்தானே?'' என்றாள் வைதேகி கோபமாக.

"கடிதமா? என்ன கடிதம்?" என்று அம்பிகா தடுமாறினாள்.

"அது வேறு புதுக் கதையா? அன்றைக்கு ஒரு நாள் தானே அப்படி இருந்தது என்கிறாய்? அடுத்த இரண்டு நாள்?"

"என் சித்திக்குப் பாவம், உடம்பே சரியில்லை... இப்போதுகூடக் கஷாயம் போட்டுக் கொண்டிருக்கிறாள்..."

"அதனாலே, 'என் பெண் எனக்கு ஒத்தாசை செய்வதற்காக என் பக்கத்திலேயே இருக்க வேண்டும்' என்று பிரின்ஸிபாலுக்கு உன் சித்தி கடிதம் எழுதி விட்டாராக்கும்?"

"மறுபடியும் மறுபடியும் என்னவோ கடிதம் என்கிறீர்களே, என்ன அது?"

''முதலிலிருந்தே விளக்கேண்டி?'' என்று நூருன்னிஸா தூண்ட, வைதேகி விவரித்தாள்: "உன்னைக் கல்லூரியிலிருந்து நீக்க வேண்டுமென்று கல்லூரியை நடத்துகிற டிரஸ்டின் தலைவரும் உறுப்பினர்களும் தீர்மானம் பண்ணியிருந்தது உனக்குத் தெரியாது. நாங்கள் மோப்பம் பிடித்து விட்டோம். பிரின்ஸிபாலின் ரூமுக்கே படையெடுத்து, 'அம்பிகாவை நீக்கினால் தெரியும் சேதி!' என்று சும்மா அரள வைத்துவிட்டோம். அப்படியே பிரின்ஸிபால் கூட ஓரளவு நம்ம பக்கம் இருந்தார். அப்போது பார்த்து, திடீரென்று உன் சித்தி அந்த மாதிரி

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கடிதம் எழுதி அனுப்பினால் எப்படி இருக்கும்? நீயே யோசனை செய்து பார்!"

"என்ன மாதிரி கடிதம்?"

"என்னடி இவள் திரும்பத் திரும்ப ஒன்றுமே தெரியாத மாதிரி நடிக்கிறாள்?" என்று நூருன்னிஸா மங்களத்தை நோக்கிக் கேட்க, அவள், "அதுதானே!" என்றவாறு, "ஏன் அம்பிகா, உன் சித்தி உன்னைக் காலேஜிலிருந்து நிறுத்திக் கொள்வதாகக் கடிதம் எழுதியது உனக்குத் தெரியாது நிஜமாகவே?" என்றாள்.

அம்பிகாவின் அழகிய வதனத்தைக் கலவரமும் குழப்பமும் கப்பிக் கொண்டன. "என்னை... காலேஜிலிருந்து நிறுத்திவிட்டாளா? சித்தியா?" என்றவள் விருட்டென எழுந்து, சமையற் கூட்டுக்கு விரைந்து சென்று, "சித்தி! நீ செய்வது உனக்கே நன்றாயிருக்கிறதா? எதற்காக நான் காலேஜிலிருந்து நிற்க வேண்டும்? என்னைக் கேட்காமல் ஏன் கடுதாசி எழுதிப் போட்டாய்?" என்று படபடத்தாள்.

பொங்கும் கஷாயத்தின் மீது ஒரு கை நீரைத் தெளித்து விட்டு அவசரமாக அதைக் கீழே இறக்கினாள் மரகதம். அம்பிகாவின் பதற்றத்தையும், அறைக்கு வெளியே நிற்கிற சினேகிதிகளின் கூட்டத்தையும் அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை. "ஏண்டி பெண்ணே, உனக்கு என்னடி வந்து விட்டது மறுபடியும்? காலேஜிலிருந்து உன்னை நிறுத்துவதாக நான் எப்போது கடிதம் எழுதினேன்?" என்றாள் வியப்புடன்.

"நீங்கள் எழுதவில்லையென்றால், பின்னே வேறே யார் மாமி எழுதியிருப்பாங்க?" என்று பயந்த சுபாவக்காரி யான மங்களம் மெதுவாய்க் கேட்டாள். "பிரின்ஸிபால் கூட இவங்களண்டை — என்னண்டை இல்லை. நான்தான் இவங்களோடு சேரவேயில்லையே! — கடுதாசியைக் காட்டி, 'பெரிசாய் உன் சினேகிதிக்காகச் சண்டை போட்டீர்களே என்னிடம்? அவளாகவே நின்று விட்டாள்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

இப்போது என்ன சொல்றீங்க' என்று கேட்டாரே? நான்கூடத் தூர நின்ற வாக்கில் பார்த்தேனே?" என்றாள்.

"என் கைப்படவா எழுதியிருந்தது?" என்று மீண்டும் திகைப்புடன் கேட்டாள் மரகதம்.

"யார் கைப்பட இருந்தாலென்ன? அந்த மாதிரி நீங்கள் எதுவும் எழுதவில்லை என்றா சொல்கிறீர்கள்?"

"கடவுளறிய எழுதவில்லை. போதுமா?"

அந்தச் சமயம் —

"பிரின்ஸிபால் தர்மு சிவராஜுக்கு யார் அந்தக் கடிதத்தை எழுதியது என்பதைப் பற்றிய விவாதம்? நான் தான் எழுதினேனென்று வைத்துக் கொள்ளுங்களேன்."

வீட்டின் முன் புறத்திலிருந்து குரல் வரவே, அம்பிகாவின் தோழிகள் 'யாரது?' என்று அதிசயித்த வண்ணம் அங்கே திரும்பினார்கள்.

ஆனால் மரகதமும் அம்பிகாவும், "சூரியா!" என்று ஒருவரையொருவர் பார்த்து ஆச்சரியப்பட்டுக் கொண்டனர்.

'சூரி எதற்காக அப்படி எழுதினான்?' என்று மரகதம் வியப்புற்றாள். அம்பிகாவோ, 'நம்மைக் கேட்காமல் எப்படி எழுதலாயிற்று?' என்று கோபமுற்றாள்.

இருவருமாக வெளியே வந்தபோது, கால்மீது கால் போட்டு அமர்ந்தவனாக, பரிபூரணமான தன்னம்பிக்கையும் புன்னகையும் ஒளிவிட சூரி காட்சி தருவதைக் கண்டார்கள். அம்பிகாவின் மூன்று சினேகிதிகளுக்கும் நாடகப் பள்ளியின் ஆசிரியர் என்ற முறையில் சூரியைப் பற்றித் தெரியும். ஆனால் அவனுடன் பேச்சுப் பழக்கமில்லாததாலும், இப்போதைக்கு அவர்களுக்குப் பிடித்தமில்லாத காரியமொன்றை அவன் செய்திருப்பதாகச் சொல்வதாலும், ஒருவரையொருவர் தோளைத் தொட்டாற் போல் நெருங்கி நின்று திகைத்தார்களே தவிர வேறெதுவும்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

செய்ய முடியவில்லை. ஆனால், "என்னப்பா சூரி, என்ன சொல்கிறே நீ? அம்பிகாவைக் காலேஜிலிருந்து நிறுத்து கிறதாய் நீ ஏன் எழுதிப் போடணும்?" என்று மரகதம் அவனைக் கேட்கத் தொடங்கியவுடன், இது ஏதோ அவர்கள் குடும்ப சமாசாரம் என்று அவர்களுக்குத் தோன்றலாயிற்று. மங்களம் நூருன்னிஸாவின் தோளை மெல்ல அழுத்தி, 'நாம் போகலாம்' என்று கண் சாடை காட்டினாள். வைதேகியும் அந்தக் குறிப்பைக் கண்டு கொண்டு, "நாங்கள் அப்புறம் வருகிறோம், அம்பிகா. எங்களுக்கென்னவோ நீ காலேஜுக்கு வந்தால்தான் மனசுக்கு ஆறுதலாயிருக்கும்," என்று கூற, மூன்று பெண்களும் ஒருவர்பின் ஒருவராக நழுவி விட்டார்கள்.

அவர்கள் தலை மறைகையில், "அம்பிகா அந்தப் பாழும் காலேஜுக்கு வரப் போவதுமில்லை. உங்கள் மனசுக்கு ஆறுதல் ஏற்படப் போவதுமில்லை! ஹூம்!" என்றான் சூரி ஏளனமாக.

"ஏனப்படிச் சொல்கிறீர்கள்? என்ன வந்தாலும் என் படிப்பைத் தொடரத்தான் போகிறேன்," என்று ரோஷத்துடன் பேசினாள் அம்பிகா.

"அதைத்தான் நிறுத்தி விட்டேனே?"

"காலேஜில் படிக்கிறவர் நீங்களல்ல. நான்."

"அம்பிகா, கொஞ்சம் பேசாமல்தான் இரேன். நமக்கு வேண்டிய ஆண்பிள்ளை என்று சூரியை விட்டால் வேறே யார் இருக்கிறார்கள்?" என்று பரிந்து வந்த மரகதத்தை, "பரவாயில்லை, சித்தி. நம்ம அம்பிகாதானே பேசுகிறாள்? பேசட்டும், பேசட்டும்," என்று சிரித்தவாறு தடுத்தான் சூரி.

"சிரித்து மழுப்பி என்னை ஏமாற்ற முடியாது!" என்று சிடுசிடுத்தாள் அம்பிகா, "காலேஜுக்கு ஏன் நீங்கள் எழுதினீர்கள்?"

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"வாயாய் வார்த்தையாய்க் கேளேண்டி," என்றாள் அவளுடைய சித்தி.

சூரி தன் புன்னகையை இழக்காமல், "அந்த மீனாம்பா கல்லூரியை நடத்துகிற அத்தனை பேரும் சுத்தப் பத்தாம் பசலிகள். விஞ்ஞான முறைப்படி ஆராயவும் துணிவில்லை. கண்ணை மூடிக்கொண்டு நம்பும் மனத் தூய்மையும் கிடையாது. கடைசியில், உன்னால் காலேஜுக்குக் கெட்ட பெயர் என்று சாக்குக் காட்டி நீக்கப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். எனக்கு அவர்கள் சதி காதில் விழுந்தது. அதற்கப்புறம் சித்தியைப் பார்த்துக் கடிதம் வாங்கிக்கொண்டு போக நேரமில்லை என்று நானே எழுதியனுப்பி விட்டேன்."

"அதுதான் ஏன் என்கிறேன்?"

"ஏனா? அவர்கள் உன்னை அவமானப்படுத்து வதற்கு இடம் கொடுக்காமல், நீயாகவே விலகிக்கொள்வது நல்லதில்லையா?"

சித்தி கவலையுடன், "இனிமேல் எந்தக் காலேஜிலுமே சேர்த்துக்கொள்ள மாட்டார்களே, சூரி? இவள் படித்து முன்னுக்கு வந்து என்னைக் காப்பாற்றுவாள் என்று நான் நம்பியிருந்ததெல்லாம் தரைமட்டமாகி விட்டதே?" என்று புலம்பினாள்.

"ஐயய்ய! அதைப்பற்றி ஏன் சித்தி கவலைப் படுகிறாய்? காலேஜில் படித்தால்தான் அம்பிகா முன்னுக்கு வர முடியுமா என்ன? நான் படித்திருக்கிறேனா? எப்படி இருக்கிறேன் பார்! நாடகமே அவளையும் கை தூக்கிவிடும். கவலைப்படாதே!" என்றான் சூரி.

அம்பிகாவின் கண்கள் தீ கக்கின. "நாடகத்தைப் பொழுதுபோக்காக வைத்துக்கொண்டது போக, தொழிலாகவே கொண்டுவிடலாம் என்கிறீர்களா?"

"உன்னை முதல்தரமான நட்சத்திரமாக்குவது என் பொறுப்பு, அம்பிகா!" என்றான் சூரி வீறாப்பாக.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

சிறினாள் அம்பிகா. "ரொம்ப நன்றி! ஆனால் அந்த உத்தேசம் எனக்கு லவலேசமும் இல்லை. தயவு செய்து இடத்தைக் காலி பண்ணுங்கள்!"

"அம்பிகா! வர வர நாக்குத் துடுக்கு ரொம்ப ஜாஸ்தியாகிவிட்டது உனக்கு!" என்று கண்டித்தாள் மரகதம். சூரி செய்த காரியம் நல்லதா கெடுதலா என்று தெரியாததால், அம்பிகாவின் எதிர்வாதம் கோபமூட்டியதே தவிர, அவள் குழப்பத்தைக் குறைக்கவில்லை.

"சித்தி! இதோ பார்! நீ என்னவோ இவர் ஒருத்தர் தான் நம்மைக் காப்பாற்றுகிறவர் என்று நினைத்திருக் கிறாய்," என்று அம்பிகா தொடங்குமுன் மரகதம் இடை மறித்தாள். "பின்னே வேறு யார் இருக்கிறார்கள் என்கிறாய்? தட்புட்டென்று இங்கிலீஷ் பேசுகிறானே சக்கரையோ, வெல்லமோ, அவனா வந்து நம்மைத் தாங்கப் போகிறான்? பிச்சைக்காரங்க மாதிரி இன்னும் நாலுதரம் அந்த அடையாறு கடன்காரன்கிட்டே அழைத்துக்கொண்டு போவான்! வேறென்ன செய்வான்?"

சூரி நல்லதனமாக, "நீ பேசுவது நியாயமில்லை, சித்தி. அந்தச் சக்கரையும் நல்ல மனிதர்தான். உங்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்றுதானே பார்க்கிறார்?" என்றான். வேண்டுமென்றே நாக்கில் ஈரம் படாமல் அவ்வாறு அவன் பேசியதைக் கேட்டதும் சுட்டெரித்து விடுகிற மாதிரி அம்பிகா பார்க்கவே அத்துடன் நிறுத்திக் கொண்டு, "வேறே எத்தனையோ திட்டமெல்லாம் வைத்திருக்கிறேன், சித்தி. நீ எதற்கும் அஞ்சாதே. நாளைக்கு வந்து பார்க்கிறேன். வரட்டுமா அம்பிகா?" என்று விடை பெற்றுக் கொண்டான்.

பல நிமிடங்கள் வரை அந்த வீட்டில் நிசப்தம் குடி கொண்டது. கடைசியில் அம்பிகா, "முன்னமேயே உனக்கு நான் எச்சரிக்கை பண்ணிவிட்டேன், சித்தி. இந்தச் சூரியைக் காணுகிறபோதே எனக்கு அடி வயிற்றில்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

என்னவோ செய்கிறது. இவன் நம் குலத்தை அழிக்க வந்திருக்கிறவன், காப்பாற்ற அல்ல!" என்றாள்.

"சமர்த்து வழிகிறது, பேசாமல் இரு" என்று அடக்கி விட்டு, சமையல் வேலையைக் கவனிக்கப் போய் விட்டாள் மரகதம்.

பிரமை பிடித்தவள் போல ஆடாமல் அசையாமல் சிந்தனை வசப்பட்டிருந்தாள் அம்பிகா. அவளுக்குள் எதுவோ ஒன்று விசுவரூபமெடுத்து வளர்ந்து, விவரிக்க இயலாத திகிலைக் கொடுக்கலாயிற்று. கண்ணுக்குப் புலப்படாத நூறாயிரம் விலங்குகள் அவள் மேனியெங்கும் பூட்டப்பட்டு, அவளைச் சிறைப்படுத்துவதுபோல் உணர்ந்தாள். உடனே அந்தக் கணமே, பெருமுயற்சி செய்து தன்னை விடுவித்துக் கொள்ளாவிட்டால் படுபயங்கரமான விபரீதத்திலே சிக்க நேரிடும் என்று அவள் மனப்பூர்வமாக நம்பினாள்.

எழுந்து கொண்டாள் அம்பிகா. உட்புறம் எட்டிப் பார்த்தாள். சித்தியின் முதுகு தெரிந்தது. வாசல்புறம் கதவு திறந்திருந்தது. ஸ்டாண்டில் கிடந்த ஒரு புடவையையும் ஜாக்கெட்டையும் கையில் சுருட்டி எடுத்துக் கொண்டாள்.

"என்னைத் தேடாதே - அம்பிகா," என்று பென்ஸிலால் கொட்டை எழுத்தில் ஒரு காகிதத்தில் எழுதி மேஜை மீது வைத்துவிட்டு, ஓசைப்படாமல் அந்த வீட்டினின்று வெளியேறினாள்.

சற்றேறக்குறைய அதே நேரத்தில், டேப் ரிகார்டரில் வரும் அதிசயமான செய்தியைச் செவிமடுத்துக் கொண்டிருந்தார்கள் சக்கரையும் பக்கிரிசாமியும்.

'டேப்பு'கள் வெகு நேரத்துக்கு மௌனமாக இருக்கும். பிறகு சிற்சில விம்மல்கள் கேட்கும். "என்னை விட்டுவிடு... என்னை விட்டுவிடு..." என்ற மன்றாடல்கள் வெளிப்படும். சூரியின் இரக்கமற்ற குரல், "இங்கே என்ன குறைச்சல் வேதசிகாமணி? சாப்பாட்டில் ஏதாவது குறை

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

வைக்கிறேனா, பாருங்கள். மூன்று வேளையும் அருமையான சாப்பாடு. பக்கத்திலேயே குளியலறை, ஷவர்பாத், நல்ல உடைகள்... படிக்கப் புத்தகங்கள். பிச்சைக்காரனாய் வெளியில் திரிந்து கொண்டிருந்தீரே, அதற்கு இது உயர்ந்த தில்லையா? வெளியிலே போகிற எண்ணத்தை விட்டு விடும்... ஆண்டவனே பார்த்து உம்மை 'வெளியில்' அழைத்துக் கொண்டால்தான் உண்டு..." என்று கூறும். கட கடவென்று அரக்கத்தனமாக அவன் சிரித்துவிட்டு அகலுவான்.

"யார் சார் இந்த வேதசிகாமணி?" என்று பக்கிரிசாமி கேட்டான் சக்கரையை.

"மிஸஸ் ரத்னம் என்று ஓர் வாத்தியாரம்மாள் அநியாயமாய்க் கொலை செய்யப்பட்டார்கள், கொஞ்ச நாள் முன்பு. அந்த அம்மாளின் புருஷன் இந்த வேதசிகாமணி. சூரி இவனை அடைத்து வைத்திருப்பது தெரிந்தபிறகு பல மர்மங்கள் எனக்குப் புரிகிறது..."

"என்னென்ன?" என்று பக்கிரிசாமி ஆவலுடன் கேட்டதற்குச் சக்கரை நேரடியாகப் பதில் தரவில்லை. "எவனுக்குப் பொறுமையில்லையோ அவன்தான் உண்மை யான ஏழை என்று ஷேக்ஸ்பியர் சொல்லியிருக்கிறார். இந்த விஷயத்தில் நீ பணக்காரனாக இரு பக்கிரிசாமி," என்று உபதேசம் செய்தான்.

"இருக்கிறேன், சார்! இப்ப, இந்த டேப் ரெகார்டரைச் சரியான அறையில் பொருத்திவிட்டு வரவேண்டாமா? அது தானே நம் அடுத்த வேலை?"

"இல்லை."

"பின்னே?"

"இந்த வேதசிகாமணியை சூரியின் வீட்டிலிருந்து விடுவித்து, இங்கே கொண்டுவர வேண்டும்," என்றான் சக்கரை உறுதியுடன்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

22

டேப் ரெகார்டரின் நாடாக்கள் நின்றன. பெட்டியைப் படக்கென்று மூடிவிட்டு, பக்கிரிசாமியின் முகத்தைப் பார்த்தான் சக்கரை. அந்தப் பர்மா இளைஞனின் முகத்தில் திகைப்பு மட்டுமே தேங்கியிருந்ததால், அதிலிருந்து உற்சாகம் பெறும்படியாகவோ கற்பனை சுரக்கும்படியாகவோ சக்கரைக்கு எவ்விதப் பலனும் பிறக்கவில்லை. ஆனால், அந்த உதவியாளனின கண்களில் பளபளத்த கேள்விக்குறி, சக்கரையைச் சவாலுக்கழைத்தது. 'சூரியின் வீட்டினுள் சட்ட விரோதமாக அடைப்பட்டிருக்கும் வேதசிகாமணியை விடுவிக்க நீ என்ன செய்யப் போகிறாய்?' என்று அவனைக் கேட்பது போலிருந்தது பக்கிரிசாமியின் சலனமற்ற பார்வை.

"எந்த வேலையையும் சுத்தி வளைச்சே செய்றீங்க நீங்க," என்று பக்கிரிசாமி குற்றம் சாட்டினான். "இந்த வேதசிகாமணியை மீட்டு வருவதா ஒரு பெரிய வேலை?"

"எப்படிச் சொல்கிறாய்?" என்று சக்கரை அதிசயித்தான்.

"போலீஸ்லே ஒரு கம்ப்ளெயிண்ட் கொடுத்தோமானால் மறு நிமிட் அவரை இழுத்துக்கிட்டு வந்திட மாட்டாங்களா?"

சக்கரைக்கு ஆத்திரமான ஆத்திரம் வந்த போதிலும், அமைதியாக, "உன் மூளைக்கு உவமையாக ஆனானப்பட்ட ஷேக்ஸ்பியர்கூட எதுவும் எழுதி வைக்கவில்லை, போ!" என்றான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

பக்கிரிசாமி அசடு வழியத் தலையைச் சொறிந்து கொண்டு, "ஏதோ எனக்குத் தோணியதைச் சொன்னேன், சார். போலீசுக்குப் போனால் பல விதத்திலே வம்பு என்கிறீங்க? அப்படித்தானே?" என்றான்.

"ஆமாம்," என்று யோசனையுடன் தலையசைத்த சக்கரை, மறு நிமிடம் ஒரு திடீர் உற்சாகத்துடன், "ஆ!" என்று தொடையில் கைகளால் தட்டிக்கொண்டு எழுந்தான். "அசல் போலீஸிடம் போக வேண்டாம். போலிப் போலீஸிடம் போனாலென்ன?"

"போலிப் போலீசுங்களா?" என்று பக்கிரிசாமி விழித்தான். அந்த நெரடான சொல் அவன் நாவில் நுழைய மறுத்ததால்.

"இரு, இரு. போலீஸ் வேடம் வேண்டாம்," என்று தன் யோசனையைத் தானே மாற்றிக் கொண்டான் சக்கரை. "போலீஸ்காரன் மாதிரி வேடம் போட்டுக்கொண்டு சூரியின் வீட்டுக்குள் நுழைந்து, வேதசிகாமணியை விடுவிப்பதற்கு வழி பார்க்கலாம் என்று முதலில் நினைத்தேன். அது ஆபத்து. போலீஸ்காரன் வேஷத்தை என்னதான் நன்றாய் மாட்டிக் கொண்டாலும் என் அடையாளம் தெரியாமல் மறைக்கப் போதாது..."

"அத்தோடு போலீஸ்காரங்களோட மனஸ் தாபமும் வரும்," என்று பக்கிரிசாமி முதன் முறையாகப் புத்திசாலித்தனமாய்ப் பேசினான். "நல்ல காரியத்துக்காகத் தான் அப்படிச் செய்தோம்னு சொன்னால்கூட அவங்க ஒப்புக்க மாட்டாங்க."

"அதனாலே..." மோவாயைத் தடவிக் கொண்டு யோசித்தான் சக்கரை. "சரி, புறப்படு. உன் பர்மா பஜார் எனக்காகவே ஏற்படுத்திய மாதிரி இருக்கிறது! பொய் மீசை, தாடி எல்லாம் கிடைக்குமில்லையா அங்கே?"

"பொய் ஆளே வேணுமின்னாலும் வாங்கித் தரேன் வாங்க," என்று அழைத்துப் போனான பக்கிரிசாமி.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

நாடகத்துக்காகப் பள்ளிக்கூடமே நடத்துகிற சூரி போன்ற ஒரு கெட்டிக்காரனை ஏமாற்றுவது முடிகிற காரியமா என்று சக்கரைக்குத் துளியும் சந்தேகம் இருந்திருக்குமானால், பக்கிரிசாமியின் நண்பனான ஓர் ஒப்பனைக்காரனிடம் தன்னை ஒப்படைத்துக்கொண்ட அரைமணி நேரத்துக்கெல்லாம் கண்ணாடியில் பார்த்துக் கொண்டபோது, இருந்த இடம் தெரியாமல் அந்தச் சந்தேகமே மறைந்துவிட்டது என்றே சொல்ல வேண்டும்.

"பிறக்கிறப்போவே தாடி மீசையுடன் பிறந்தவர் மாதிரி இருக்கீங்க சார்!" என்று பக்கிரிசாமி பாராட்டியதைக் கேட்டுச் சக்கரை குபுக்கென்று சிரித்து விட்டான். "நீ சொல்கிறபடி நான் பிறந்திருந்தால், நாலு வருஷம் கழித்து இறந்து போன என் அம்மா, பிரசவித்த உடனேயே, பிரசவ அறையிலேயே இறந்திருப்பாள்," என்று பதிலளித்துவிட்டு, ஓர் 'இஞ்ச் டேப்' பெட்டி, பழைய நோட்டு, பாதிப் பென்ஸில் முதலியனவும் வாங்கிக் கொண்டான்.

அப்போது காலை ஒன்பது மணி ஆகியிருந்தது. ஒரு டாக்ஸி பிடித்து மந்தவெளியை அடைந்தார்கள் இருவரும். சூரியின் பழைய பங்களாவுக்கு ஒரு பர்லாங்கு முன்னதாகவே இறங்கிக் கொண்டான் சக்கரை. டாக்ஸியை அனுப்பிய பிறகு, "நீ என்னுடன் வர வேண்டாம். இங்கேயே இரு," என்றான் பக்கிரிசாமியிடம்.

முகத்தில் கவலை படிந்தது அந்த பர்மா பஜார் வாலிபனுக்கு. சக்கரை சொன்னதைக் கேட்டு அல்ல. அவன் குரலைக் கேட்டு. "சார்! உங்க தொண்டை என்ன சார் இப்படிக் கட்டிக்கிட்டுது?" என்றான்.

"முதல் வெற்றி," என்று பெருமையுடன் பதிலளித்தான் சக்கரை.

"என்ன வெற்றி?" என்ற பக்கிரிசாமியின் கேள்விக்குப் பதில் கூறாமல், "காலையிலிருந்து எதுவும்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

சாப்பிடவில்லை நான். வா, அந்த ஓட்டலில் நாஸ்தா பண்ணிவிட்டு வரலாம்," என்று பக்கிரிசாமியை அழைத்துக் கொண்டு, மந்தைவெளி போஸ்டாபீசுக்குப் பக்கத்திலிருந்த ஒரு சிறு ஓட்டலில் நுழைந்தான்.

தலைக்கு நாலு இட்லியும் ஒரு வடையும் காப்பியும் அருந்திய பிறகு, தானே பணத்தைக் கொடுத்தான் சக்கரை. இரண்டு ரூபாய் நோட்டுக்கு முதலாளி சில்லறை கொடுத்துக் கொண்டிருக்கையில், "மன்னிக்கணும்... பம்பாயில் புரொபஸராக இருக்கும் சக்கரை என்று ஒருவர் இங்கே அடிக்கடி வருவதுண்டு இல்லையா?" என்று விசாரித்தான்.

"ஆமாம் சார். நம்ம ஓட்டல் சட்டினி என்றால் அவருக்குத் தனி ஆசை. என்ன அவசரமாய் மெட்ராஸ் வந்தாலும் கட்டாயம் ஒரு விசிட் இங்கே கொடுக்காமல் பம்பாய் திரும்ப மாட்டார்," என்றார் ஓட்டல் முதலாளி. "நீங்கள் அவருக்கு...?"

"சினேகிதன். சமீபத்தில் இங்கே வந்தாரோ என்று தெரிந்து கொள்ளத்தான் கேட்டேன்."

"இல்லையே. மூன்று மாசம் ஆகப் போகிறது அவர் வந்து," என்று கூறியதும், கண்ணாடிப் பலகையின் மீது இருந்த பாக்கிச் சில்லறையை வழித்துக்கொண்டு வாசலுக்கு வந்தான் சக்கரை. ஓட்டல் முதலாளியுடன் அவன் நடத்திய சம்பாஷணையைக் கேட்டுத் திகைத்துப் போயிருந்த பக்கிரி சாமியிடம், "அது என் இரண்டாவது வெற்றி," என்றான். "தொண்டையை நன்றாக மாற்றிக்கொண்டு விட்டேன் என்று நீ சொல்லிவிட்டாய். உருவத்தைத் தலைகீழாய் மாற்றிக்கொண்டு விட்டேன் என்று ஓட்டல்காரர் சொல்லி விட்டார். இனி என்ன? சூரி கரணம் போட்டாலும் என்னைக் கண்டுபிடிக்க முடியாது."

"முடியவே முடியாது," என்று ஆமோதித்தான் பக்கிரிசாமியும். "ஆமாம், என்னை வரவேணாமென்று ஏதோ சொன்னீங்களே?"

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"ஆமாம், எத்தனை நேரமானாலும் சரி, என்ன நேர்ந்தாலும் சரி, இந்த இடத்தை விட்டுப் போகாதே," என்று சக்கரை கட்டளையிட்டான். "சாயங்காலம் ஆறு மணிக்கோ நடு ராத்திரி பன்னிரண்டு மணிக்கோ, விடிகாலை நாலு மணிக்கோ எப்போது வேண்டுமானாலும் நான் திரும்பி வருவேன். எப்போது, எந்த மாதிரி ஒத்தாசை எனக்குத் தேவைப்படுமோ, சொல்ல முடியாது. அதனாலே டீக்கடையிலோ ஓட்டலிலோ உன் வயிற்றுப்பாட்டைச் சுருக்கமாகக் கவனித்துக்கொண்டு இங்கேயே பழி கிட," என்று ஒரு மரத்தடியில் தன் தோழனை விட்டு விட்டு, செலவுக்காக ஐந்து ரூபாய் பணமும் கொடுத்துவிட்டுப் புறப்பட்டான் சக்கரை. அவர்களுக்குள் பழக்கம் சொற்பம்தான் என்றாலும், பழகத் தொடங்கிச் சில நாட்களே ஆகியிருக்கின்றன என்றாலும், அபாயமான வேலையில் அந்தப் பம்பாய்க்காரர் இறங்குகிறாரே என்று நினைத்தபோது பக்கிரிசாமியின் கண்கள் கலங்கின. ஒரு மரத்தடியில் உட்கார்ந்து பீடியொன்றைப் பற்ற வைத்துக் கொண்டு, புகையுடன் தன் மனக் கவலையையும் வெளியேற்ற முயன்றான் அவன்.

அதே சமயத்தில் சூரியின் இல்லத்தினுள் வெற்றிகரமாகப் பிரவேசம் செய்துவிட்டான் சக்கரை.

ஹாலில் அவனை முதலில் வரவேற்றான் சூரிதான்.

தடதடவென்று உள்ளே நுழைந்துவிட்ட அந்தத் தாடிக்காரக் கிழவனிடம் அவனுக்குக் கோபம்தான் வந்தது. "யாரப்பா நீ? திறந்த வீட்டிலே எதுவோ நுழைகிற மாதிரி வருகிறாய்?" என்றான்.

"மன்னிக்கணும், எஜமான்," என்று கிழவன் கும்பிட்டுக் கொண்டே, 'இஞ்ச் டேப்' சுருளைப் பிரித்தான். "பாரப் பள்ளி ராஜாவோட செகரட்டரி அனுப்பிச்சாருங்க. ராஜாவோட வீடுங்களாமே இது?"

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"ஆமாம். அதனாலே?"

"ஒண்ணுமில்லீங்க. இந்த ஹாலுக்கும் மாடி ஹாலுக்கும் மொசெய்க் தளம் போடலாமின்னு ராஜா சொன்னாராம். நமக்கு மொசைக் ஓர்க்கெல்லாம் தண்ணி பட்ட பாடுங்க. பெஜாவாடாவிலே ராஜாவோட பாலஸ் இருக்குதுங்களே, போய்ப் பார்த்தீங்கன்னா..."

"சரி, சரி. அதை இன்னொரு நாள் வந்து பார்த்துக் கொள்கிறேன்... இப்போது இந்தப் பாலஸை என்ன பண்ணப் போகிறாயாம்!" என்று சூரி எரிந்து விழுந்தான்.

"அளவு எடுத்துக்கிட்டு இதோ போயிடறேன் எஜமான்," என்ற தாடிக்காரன் குறுக்கும் நெடுக்கும் அளந்து கொண்டான். அழுக்குச் சட்டைப் பையிலிருந்து நோட்டையும், காதிலிருந்து பென்சிலையும் எடுத்து, பென்ஸில் நாக்கு நுனியினால் தொட்டுக்கொண்டு குறிப்புகளைப் பதிவு செய்து கொள்ளலானான். "என்ன, முடிந்ததா?" என்று சூரி விரட்டிக் கொண்டேயிருந்தான்.

"மாடி..." என்று படிக்கட்டை நோக்கிச் சென்றான் கிழவன். "பூட்டியிருக்குதுங்களே? கொஞ்சம் திறந்து விடறீங்களா?"

"சாவியைக் கெட்டுப் போக்கி விட்டுத்தான் ஐயா காலையிலிருந்து தடுமாறிக் கொண்டிருக்கிறேன். நீ வேறே வந்து உயிரை எடுக்கிறாய்," என்று சூரி சீறவும், "பரவாயில்லீங்க, பரவாயில்லீங்க, இன்னொருவாட்டி வந்து அதைப் பார்த்துக்கிறேனுங்க," என்றான் தாடிக்காரன் —

"வேலை முடிந்து போச்சா? இடத்தைக் காலி பண்ணு."

"ஐயா ரொம்பப் பிஸியா இருந்தப்போ வந்து கெடுத்திட்டேன் போலிருக்குது," என்று தன் பொய்த் தாடி வழியே சிரித்தான் கிழவன். "ஒரு தகவல் கொடுக்கலா மின்னு நினைச்சேன்..."

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"ஒரு மண்ணும் வேண்டாம்."

"உங்க நன்மைக்குத்தான்," என்று கிழவன் விடாது கூறவே சூரியின் புருவங்கள் விரிந்து, கண்கள் இடுங்கின. "என்ன?"

"இந்தப் பங்களாவை மொசைக் பூசி, கொஞ்சம் வெள்ளை அடிச்சு, பெயிண்ட்டும் தீட்டி, புதிசு மாதிரி பண்ணின பிறகு நல்ல விலைக்கு வித்திடலாம்னு இருக்காரு மாரப்பள்ளி ராஜா. யாரண்டையும் சொல்ல வேண்டாமின்னு செக்ரடரி சொன்னாருங்க. என்னவோ உங்களைப்போல நல்லவரண்டை மறைக்க முடியாததாலே சொல்லிட்டேன். ரிப்பேர்கள் முடிஞ்சதும் உங்களை வீட்டைக் காலி பண்ணச் சொல்வாங்க. சாக்கிரதையா யிருந்துக்குங்க. ஒண்ணு, ரிப்பேரே நடக்க இடம் கொடுக்கா தீங்க, இல்லே, இப்பவே பிடிச்சு வேறு இடம் பார்க்க ஆரம்பியுங்கள்."

"உன் யோசனைக்கு ரொம்ப நன்றி," என்று சூரி கிண்டலாகக் கூறியபோதிலும், கிழவன் கூறிய தகவலினால் அவன் உள்ளத்தில் பல எண்ணங்கள் உதித்திருப்பதை அவன் முகம் காட்டியது.

அவனுடன் இன்னும் கொஞ்ச நேரம் பேச்சுக் கொடுத்தபடி அந்த இடத்தை ஆராய வேண்டுமென்று விரும்பினான் கிழவன். "இந்தப் பங்களா மட்டுமில்லீங்க. கொடைக்கானலிலே இரண்டு, ஊட்டியிலே மூணு, திருக்குத்தாலத்திலே ஒண்ணு... இப்படிப் பல மாளிகை களை விற்கிறாருங்க மாரப்பள்ளி ராஜா. எல்லாம் ஏன்னு நினைக்கிறீங்க? ஏமாந்து போனதுதான் காரணம். ராஜாவுக்குக் கூஜா தூக்குகிற பசங்க ஏராளம். ஒவ்வொருத்தனும் இவர் கிட்டே அஞ்சு லட்சம், பத்து லட்சம்னு கடன் வாங்கிட்டு, நாமத்தைப் போட்டுட்டுப் போயிட்டாங்க. சும்மாவா சொன்னாரு, சினேகிதனுக்குக் கடன் கொடுத்தால் கடனுக்கு கடனும் போயிடும், சினேகிதனுக்குச் சினேகிதனும் போய் விடுவான்னு..."

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கிழவன் டக்கென்று பேச்சை நிறுத்திக் கொண்டது போலவே, வேறு கவனமாயிருந்த சூரியும் டக்கென்று திரும்பி, கிழவனின் அருகில் வந்து, அவனைப் பார்த்து முறைத்தான்.

"கடன் கொடுக்கிறதைப் பற்றி அப்படி யார் சொன்னது?" என்று கேட்டான் அழுத்தமாக.

கிழவனும் தடுமாற்றத்துடன், "வந்து... ஒரு பேச்சுக்குச் சொன்னேன்... யாரோ சொன்னாங்க..." என்றான்.

சூரி இன்னும் நெருங்கி வந்து, "ஒரு வேளை ஷேக்ஸ்பியர் சொல்லியிருப்பாரோ...?" என்று கேட்டுவிட்டு, கிழவனின் தாடியையும் வெடுக்கென்று இழுத்தான். அது கையோடு வந்துவிட்டது.

சக்கரை அதிர்ச்சி அடைந்தானென்றால், மின்னல் நேரத்தில் அது மறைந்து விட்டதென்றே சொல்ல வேண்டும். அடுத்த வினாடியே அவன் வாய்விட்டுப் பெரிதாக, "ஹாஹ்ஹா!" என்று நகைத்துவிட்டு, "எப்படி வேடம்!" என்றான்.

"பிரமாதமாய்த்தான் இருந்தது. ஆனால் எதற்கு இந்த வேடம் என்றுதான் புரியவில்லை," என்று சூரி கடுமையுடன் பதிலளித்தான்.

"தமிழ் நாட்டின் தலைசிறந்த நடிப்பு மேதையான தங்களிடம் நற்சாட்சி வாங்குவதற்குத்தான்," என்றான் சக்கரை. "அடுத்த மாதம் எங்கள் யூனிவர்ஸிடியில் ஒரு விழா இருக்கிறது. அதிலே 'பேராசிரியர்கள் மாறு வேடப் போட்டி' ஒரு முக்கியமான நிகழ்ச்சி. நான் இப்படி வேடம் போட்டுக் கொள்ளப் போகிறேன். அது எவ்வளவு தூரம் பலிக்கும் என்று பரீட்சை பார்க்க நினைத்தேன். பரீட்சை செய்ய உங்களைக் காட்டிலும் தகுதியான ஆள் கிடைக்காதே!"

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"மாறுவேடப் போட்டியிலும் இங்கே செய்தமாதிரி ஒரு ஷேக்ஸ்பியர் பொன்மொழியை உதிர்த்து வைக்காதீர்கள்," என்றான் சூரி ஒரு குரூரமான புன்னகை யுடன். ஏதோ சமாளிப்பதற்காகச் சக்கரை பொய் சொல்லி யிருக்கிறான் என்பதை அவன் கண்டுகொண்டு விட்டதும் அந்தக் குரலில் புலப்பட்டது.

"ரொம்பத் தாங்ஸ். அந்த விஷயத்தில் ஜாக்கிரதை யாக இருக்கிறேன். வரட்டுமா?" என்று விடைபெற முயன்றான் சக்கரை.

"அடடே? அதற்குள்ளா புறப்பட்டு விட்டீர்கள்? தாகத்துக்கு ஏதாவது அருந்திவிட்டுப் போகலாம், இருங்கள்," என்று கூறிய சூரி, அடுத்த அறைக்குள் சென்றான். சில நிமிடங்களில் டபரா டம்ளரில் சூடான காப்பியுடன் திரும்பினான்.

"காப்பியையும் ஷேக்ஸ்பியரையும் எந்த நேரத்திலும் அனுபவிக்கலாம்," என்று கூறியவண்ணம் வாங்கிக்கொண்ட சக்கரை, "வாசலில் யார் கூப்பிடுகிறார் கள்?" என்று காதைத் தீட்டிக்கொண்டு கேட்டான்.

"யார்... யாருமில்லையே?" என்று வாசல் பக்கம் எட்டிப் பார்த்துவிட்டுத் திரும்பினான் சூரி. "உங்களைப் போல எவரும் அவ்வளவு சட்டென்று நுழைந்துவிட முடியாது. பல பேர் தொல்லைகள்..."

"ஆமாம், ஆமாம்... நான் ஒரு சாதாரண ஆள். என்னிடமே எத்தனை பேர் சிபாரிசு, நன்கொடை, சிபா...ரிசு... நன்...கொடை...சி..." சக்கரையின் கண்கள் செருகின. உட்கார்ந்த இடத்திலேயே மெதுவாய்ச் சரியலானான். இரண்டொரு கணத்தில் அவன் பூரண மயக்கத்தில் விழுந்து விட்டது தெரிந்தது.

பைஜாமாவில் கைகளைச் செருகிக்கொண்டு அவனையே கவனித்துக்கொண்டு அசையாமல் நின்றான் சூரி. அவன் உதட்டில் ஒரு கொடிய புன்னகை படர்ந்து

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

விளையாடியது. 'புரொபசரே, என்னிடமா வேலை காட்டுகிறீர்!' என்று மெல்ல முணுமுணுத்தவன், சக்கரையின் தோளைப் பிடித்து உலுக்கிப் பார்த்தான். சக்கரை எழுந்திருக்கிற வழியாய்த் தோன்றவில்லை.

சூரி, சுறுசுறுப்படைந்தான். வாசல் பக்கத்துக் கதவை உட்புறம் தாழிட்டுக் கொண்டான். மாடிக்குச் செல்லும் கதவின் பூட்டை நீக்கி, கதவுகளை அகலத் திறந்து வைத்துக்கொண்டான். பின்னர், சக்கரையின் இடுப்பில் இரண்டு கைகளையும் கொடுத்து, மெல்ல இழுத்தபடியே மாடிப்படிகளில் ஒவ்வொன்றாக ஏறி மாடியிலுள்ள ஓர் அறையை அடைந்தான். அதையும் திறந்து, உள்ளே சகக்ரையை இழுத்துச் சென்று தரையில் கிடத்திய பிறகு, கதவை வெளிப்புறம் பூட்டிக்கொண்டு, மாடி வெராந்தாவின் வழியே ஓடி, மறுகோடியிலுள்ள இன்னோர் அறையை அடைந்தான். அவசரமாக உள்ளே புகுந்து, "ஊசோ தாத்தா! அந்த ஷேக்ஸ்பியர்வாலா என்னிடம் வாலாட்டலாமென்று வந்தான். நல்லவேளை, மயக்கம் கொடுத்து அடைத்து வைத்திருக்கிறேன். ஆனால் இப்படி இன்னும் எத்தனை பேரை அடைத்து வைக்க முடியும்? நாளுக்கு நாள் என் நெருக்கடி முற்றுகிறதே!" என்று புலம்பத் தொடங்கினான்.

அந்தக் கும்மிருட்டில் ஊசோ தாத்தாவின் குரல் கடகடவென்று நகைத்து அவனுக்குத் தைரியம் சொல்லத் தொடங்கியது.

அதே சமயத்தில், அறையில் அடைபட்டுக் கிடந்த சக்கரை டக்கென்று எழுந்து உட்கார்ந்து கொண்டான், ஒரு வெற்றிப் புன்னகையுடன்.

'சூரி! நீ என்ன திறமைசாலியாயிருந்தென்ன! அசலாய் மயக்கம் போட்டவனுக்கும், மயக்கமடைந்த மாதிரி நடிக்கிறவனுக்கும் வித்தியாசத்தைக் கண்டு பிடிக்கத் தெரியாத வரையில், உன்னைக் காட்டிலும் நான்தான்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

பெரிய நடிகன்!' என்று தன்னைத் தானே பாராட்டிக் கொண்டான்.

இரட்டை வெற்றி அவனுக்கு. ஷேக்ஸ்பியர் பொன்மொழியை வேண்டுமென்றுதான் சொன்னான், தன் வேஷம் வெளிப்படட்டும் என்று. பிறகுதான் சூரி சந்தேகமடைந்து, ஏதாவதொரு விதத்தில் தன்னைச் சிறைப் படுத்தவோ தாக்கவோ முயலுவான் என்று எதிர் பார்த்தான். அதேபோல் நடந்தது.

இன்னொன்று: சூரி ஒரு திடீர்ப் பிரியத்துடன் தாகத்துக்கு அருந்துமாறு சொல்லி, உள்ளே போனவுடனேயே எச்சரிக்கை அடைந்து, சமையற் கட்டில் காப்பியுடன் வேறொன்றும் கலக்கப்படுவதை எட்டிப் பார்த்துத் தெரிந்து வைத்திருந்தான். வேண்டுமென்றே சூரியை வாசற்பக்கம் பராக்குக் காட்டிவிட்டு ஒரே வினாடியில் ஜன்னல் வழியே அந்தக் காப்பியைத் தோட்டத்தில் வீசிவிட்டான்.

ஆனால், இந்த அற்பமான வெற்றிகளின் போதையில் அவன் சிறுகிறுத்துப்போய் உட்கார்ந்திருக்க வில்லை. பக்கிரிசாமிக்குக்கூடத் தெரியாமல் தன் காக்கிப் பையில் கொண்டு வந்திருந்த சிறு அரம், உளி போன்ற கருவிகளை வெளியிலெடுத்தான். அவைகளை அந்த அறையில் எங்கே பத்திரமாக ஒளிக்கலாம் என்று இருட்டைத் துழாவலானான்.

23

தர்மு சிவராஜின் முகத்தில் கவலை வரி வரியாகக் கோடிட்டிருந்தது. நிலைக் கண்ணாடியின் முன்பு நின்றிருந்தவள், இங்கொன்றும் அங்கொன்றுமாகத் தெரிந்த

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

நரைக்கேசத்தைக் கிள்ளி எறியவும், அது முடியாத பட்சத்தில், மற்றக் கருங் கேசங்களுக்கிடையே அதை மறைக்கவும் முயற்சி செய்தவாறிருந்தாள். எண்ணி நாற்பத் திரண்டு வயது ஆகவில்லை. அதற்குள்ளேயே நரைக்கத் தொடங்கி விட்டதே என்பதுதான் அவள் வருத்தம்.

சிவராஜ் வெளியில் போயிருந்தார், அந்தக் காலை வேளையில். கலர் பிலிமைக் கண்ட்ரோல் விலைக்கே வாங்கித் தருவதாக யாரோ சொல்லியிருந்தார்கள் என்று போய்விட்டார். அவர் இருந்திருந்தால், "இந்த அநியாயத்தைப் பார்த்தீர்களா?" என்று ஒரு பாட்டம் புலம்பியிருப்பாள் — இந்த 'அகால' நரை குறித்து.

சேப்பங்கிழங்கைக் கூட்டு செய்யட்டுமா, வதக்கட்டுமா என்று கேட்டுவிட்டு அப்போதுதான் சமையற்கார அம்மணி உள்ளே போயிருந்தாள். வாசல் புறத்திலிருந்து யாரோ வேகமாக உள்ளே வரும் காலடியோசை கேட்டது.

அவளுடைய கார் டிரைவர்தான். "கொஞ்சம் ஷெட்டுக்கு வந்து பாருங்கம்மா," என்று அழைத்தான்.

"ஏன், முனியம்மா இன்றைக்கும் அங்கே கூட்டாமல் போய்விட்டாளாக்கும்? அதை வந்து இன்ஸ்பெக்ஷன் செய்வதுதான் எனக்கு வேலை இல்லையா?" என்று கடுகடுத்தாள் தர்மு சிவராஜ்.

"அதில்லேம்மா. வேறே ஒண்ணு," என்று டிரைவர் வற்புறுத்தினான். "வந்துதான் பாருங்களேன். பட்டணத் திலே என்னவெல்லாம் அதிசயம் நடக்குதுண்ணு நீங்க தெரிஞ்சிக்க வேண்டாமா?"

புதிதாக வேலைக்கு வந்திருந்த இந்த டிரைவர் அதிகம் பேசுகிற வழக்கமுள்ளவனல்ல. ஆகவே அவனே இவ்வளவு தூரம் கூப்பிடுகிறபோது, என்னவோ விசேஷம் இருக்கத்தான் வேண்டும் என்று அவனைப் பின் தொடர்ந்து கார் ஷெட்டுக்குச் சென்றாள்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ஷெட்டின் கதவுகள் திறந்திருந்ததால், காரை அடையுமுன்னே அந்த 'அதிசயம்' என்னவென்று தெரிந்து விட்டது. ஓர் இளம் பெண்ணின் இரண்டு கால்களும் காரின் ஜன்னலுக்கு வெளியே தொங்கிக் கொண்டிருந்தன.

ஒரு வினாடி திக்கென்று ஆகிவிட்டது அந்தப் பிரின்ஸிபாலுக்கு. காருக்கு உள்ளே பெண் என்ன நிலையில் இருக்கிறாளோ?

காரைச் சுற்றிலும் ரத்தக் கறை எதுவும் காணப்பட வில்லை என்பதை அறிந்ததால் சிறிதளவு நிம்மதியுடன் — ஆனால் ஆவலும் பதைப்பும் குறையாமல்... இன்னும் வேகமாக அருகில் சென்றாள்.

காருக்குள் பார்த்ததும்...

அசம்பாவிதமாக எதுவும் நடை பெற்றுவிட வில்லை என்ற ஆறுதல் ஏற்பட்டது. ஆனால் அந்தப் பின் ஸீட்டில் படுத்துக்கொண்டு காலை வெளியே தொங்க விட்டபடி அயர்ந்த நித்திரையில் மூழ்கியிருப்பவள் யாரென்று அறிந்ததும் அதிர்ச்சியுடன்...

"அம்பிகா!" என்று கூவினாள்.

ஆனால் காரில் படுத்திருந்த அம்பிகா ஏதோ வீட்டுக்குள் படுத்திருப்பது போன்ற எண்ணத்துடன் 'ஹூம்' என்று முனகிவிட்டு, மெல்லப் புரண்டாளே தவிர எழுந்திருக்கவில்லை.

"ஷெட் கதவைப் பூட்டவில்லையா நேற்று ராத்திரி?" என்று டிரைவரைக் கேட்டாள் தர்மு.

"இல்லீங்கம்மா... பூட்டையும் சாவியையும் எங்கேயோ வைச்சிட்டேன். அதனாலே கதவைச் சும்மா சாத்தி விட்டுப் போய்விட்டேன் வீட்டுக்கு. காலையிலே வந்து பார்க்கிறேன், இந்தப் பெண் தூங்கிக்கிட்டிருக்குது..."

அம்பிகாவையே பார்த்தபடி மௌனமாக நின்றாள் தர்மு. இந்தப் பெண்ணினால் சமீபகாலமாக

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

எத்தனை வகையான சோதனைகளும் போராட்டங்களும் ஏற்பட்டன என்று நினைத்தபோது அவளுக்கு எரிச்சல் உண்டாயிற்று. அதே சமயம், விதியின் விளையாட்டினால், நம்ப முடியாத சோதனைகளுக்கெல்லாம் உட்பட்டுள்ள இந்த நிரபராதியான மாணவியிடம் தானும் ஆத்திரம் கொள்வது சரியல்ல என்ற உணர்வும் பிறந்தது.

"அம்பிகா, அம்பிகா! எழுந்திரம்மா," என்று மேலும் இரண்டு மூன்று தரம் தட்டிய பிறகு அம்பிகா கண் விழித்தாள். எதிரே நிற்பவர் தன் பிரின்ஸிபால் என்ற பிரக்ஞை பார்வை வழியே மூளையில் உறைத்ததும் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள். காரின் முன் ஸீட்டில் வைத்திருந்த தனது சிறு மூட்டையைக் கையில் சட்டென எடுத்துக் கொண்டு, "நான் வரேன், மேடம்... உங்க வீடுன்னு தெரியாமல்..." என்று ஏதேதோ கூறிய வண்ணம் பின்வாங்கத் தொடங்கினாள்.

கப்பென்று அவள் கையைப் பிடித்துக்கொண்ட தர்மு சிவராஜ், "உன் செயல்களுக்குத் தகுந்த சமாதானம் சொல்லாமல் போக விடமாட்டேன், வா என்னுடன்," என்று வீட்டுக்குள் அழைத்துச் சென்றாள்.

அவள் குரலில் கண்டிப்பும் பரிவும் ஒருங்கே வெளிப்பட்டதால், அவளுடன் போகும்போதே அம்பிகா மெல்ல மெல்லத் தன் அல்லல்களை வெளிப்படுத்தினாள். பிறகு, "எங்கே போகிறோம் என்பதே தெரியாமல் நடந்து கொண்டிருந்தேன். திடீரென்று தெரு விளக்குகள் நின்று விட்டன. எனக்கு ஒரே பயமாகி விட்டது. ராத்திரி எங்கே யாவது படுத்துக்கொண்டுவிட்டு, பொழுது விடியும் முன்பு புறப்பட்டுப் போய் விடலாமென்று நினைத்தேன். இந்த ஷெட் பூட்டாமலிருப்பது தெரிந்தது. முதலில் கீழே படுத்திருந்தேன். ரொம்ப உறுத்தியது. பிறகு காருக்குள் படுத்துவிட்டேன். என்னை மறந்து அதிக நேரம் தூங்கி விட்டேன். என்னை மன்னியுங்கள் மேடம்," என்றாள்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

தர்முவுக்கு, அம்பிகா எப்படி அங்கே வந்து சேர்ந்தாள் என்ற விவரங்களில் கவனம் செல்லவில்லை. கல்லூரியிலிருந்து நீக்கக்கூடாது என்று நிர்வாகிகளுடன் போராடியபோது, தன்னைக் காலை வாரி விட்டவள் இவளுடைய சித்தியல்ல என்ற உண்மையே பெரும் ஆறுதலாயிருந்தது அவளுக்கு. இந்த மாணவிக்கு எதிராக நடைபெறும் சூழ்ச்சிகளை முறியடிக்க வேண்டுமென்ற ஆவலும் எழுந்தது.

"அம்பிகா, உன் கல்லூரிப் படிப்பை நிறுத்த ஒரு நாளும் நான் இடம் கொடுக்கப் போவதில்லை. இன்று முதல் நீ என்னுடனேயே தங்கியிருந்து, என்னுடனேயே காலேஜுக்கு வா," என்றாள்.

"நன்றி மேடம்," என்றாள் அம்பிகா பணிவாக. "ஆனால் நீங்கள் அவ்வளவு தூரம் எனக்காகச் சிரமப்பட வேண்டாம். ஏதாவதொரு வேலை வாங்கிக் கொடுங்கள். அதுகூட இந்த ஊரில் வேண்டாம். வெளியூரில் கிடைத்தால் ரொம்ப நல்லது. போய்விடுகிறேன்," என்று கூறியபோது அவள் பேச்சில் எல்லையற்ற அச்சம் மறைந்திருப்பதைக் கண்டு கொண்டாள் தர்மு. தன்னைத் தாயென வளர்த்து ஆளாக்கிய சித்தியையும், பழகிய இடத்தையும் மனிதர்களையும் பிரிந்து வெளியூர் போய் இருக்கத் துணிந்தாளென்றால் எப்படிப்பட்ட இன்னல் களுக்கு இவள் ஆளாகியிருக்க வேண்டும்! நாடகப் பள்ளிக்கூடம் நடத்துவதாகச் சொல்லிக் கொள்ளும் அந்தச் சூரி எப்படிப்பட்ட மோசக்காரனாக இருக்க வேண்டும்! அம்பிகாவைப் போல மற்றக் கல்லூரிப் பெண்களும் அவனிடம் பலியாவதைத் தடுத்தாக வேண்டுமே...

இறுதியில் தர்மு, "சரி, நீ காலேஜுக்கு இப்போது வர வேண்டாம். உன் விருப்பப்படியே வேலை பார்த்துத் தருகிறேன். அதுவரை இந்த வீட்டிலேயே யாருக்கும் தெரியாமல் இருந்து வரலாம். முதலில் போய், பல் விளக்கி

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

முகம் கழுவிக்கொண்டு வா. பலகாரம் சாப்பிடலாம்," என்றாள்.

எதிர்பாராத உதவி கிடைத்ததனால் மகிழ்ச்சியும், அந்த உதவியைத் தன் மதிப்பிற்குரிய பிரின்ஸிபால் செய்கிறாரே என்பதால் தர்மசங்கடமும் கொண்டவளாக அம்பிகா பாத்ரூமுக்குச் சென்று முகம் கழுவிக்கொண்டு திரும்பினாள்.

அவள் விழிகள் நாலு புறமும் சுழல்வதைக் கவனித்த தர்மு சிவராஜ், "யாரைத் தேடுகிறாய்?" என்று கேட்டாள்.

"உங்கள்... மருமான்... ஷேக்ஸ்பியர் பக்தர்..."

"சக்கரையா?" என்று சிரித்தாள் தர்மு. "அவன் எப்போது வருகிறான், எப்போது போகிறான் என்பதே தெரிவதில்லை. ஆனால் உன் விஷயமாகத்தான் அலைகிறான் என்று மட்டும் தெரியும். உன்னிடம் அவனுக்கு அலாதி அக்கறை."

அம்பிகா புன்னகையுடன் தலை குனிந்தவாறு பலகாரம் அருந்த அமர்ந்தாள்.

தர்மு சிவராஜ், அவளையும் அவளுக்குப் பக்கத்தில் தன் அன்புக்குரிய மருமானையும் சேர்த்துக் கற்பனை செய்து பார்த்தாள். அந்தப் பொருத்தத்தை நினைத்தபோது அவளுக்கு இனித்தது.

உலகத்தில் எந்தத் திருடனாவது ஷேக்ஸ்பியரின் ரசிகனாக இருந்திருக்க முடியுமா என்று யோசித்துப் பார்த்த பின் சக்கரை, தான் ஒருத்தன்தான் அந்த நிகரற்ற தகுதி படைத்தவன் என்று தீர்மானித்தான்.

உண்மையில் அவன் இறங்கியிருந்தது திருட்டுத் தனமான காரியம் தானே? மயக்கம் போட்ட மாதிரி நடித்து, அன்னியரின் வீட்டின் முக்கியமான பகுதியில் இடம் பார்த்துக் கொண்டது ஒரு வகையில் திருட்டுத்தனம்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

என்றால், இப்போது அசல் கள்வர்கள் உபயோகிக்கும் கருவிகள் வேறு வெளியிலெடுத்ததை என்னவென்று வர்ணிப்பது?

அந்தக் கருவிகளிலொன்று மின்சாரத்தினால் இயங்குவது. சுருக்காகவும், ஓசையில்லாமலும் வேலை செய்ய அதைப் போன்ற கருவி கிடையாது.

இருட்டில் துழாவியபடி மின்சார ஸ்விட்ச் எங்கே இருக்கிறது என்று சுவரில் தேடினான் சக்கரை. மரப்பலகை தட்டுப்பட்டது கைக்கு. விளக்கு ஸ்விட்ச் இருந்த போதிலும், பல்பு அகற்றப்பட்டு விட்டதால் எந்தவித வெளிச்சமும் வர வழியிருக்கவில்லை. விளக்கு ஸ்விட்சுக்குப் பக்கத்திலேயே ஒரு பிளக் பாயிண்ட் இருந்ததைக் கண்டதும், பழம் நழுவிப் பாலில் விழுந்த மாதிரி இருந்தது சக்கரைக்கு. கையிலிருந்த ஒயரின் நுனிகளை அங்கே செருகியதும், மறு நுனியில் சிறு கத்தி போன்றிருந்த அரம் செக்கச் செவேலென்று மினு மினுத்தது, அறுவை வேலைக்குத் தான் தயாராயிருப்பதை அறிவித்தது. அது மட்டுமல்ல, அறையின் சூழ்நிலையையும் மங்கலாக எடுத்துக் காட்டியது.

ஓட்டடையும் புழுதியும் மிகுந்த அந்த அறை, ஓடு வேய்ந்ததல்ல. அப்படியிருந்தால் எப்படியேனும் கூரைக்கு ஏறி, ஓடுகளைப் பிரித்து வெளியேற முடியுமா என்று பார்க்கலாம். ஆனால் ஒட்டுப்போட்ட அறையாக இருந்தது அது. கதவுக்கு நேர் எதிர்ப்புறத்தில் ஒரு ஜன்னல் இருந்த போதிலும், அதன் கதவுகளைச் சட்டென்று திறந்துவிட முடியாதபடி குறுக்கே மரச் சட்டங்கள் அடித்து அடைக்கப் பட்டிருந்தன.

எனவே, தனது மின்சாரக் கருவியைப் பயன் படுத்துவதைத் தவிர வேறு வழியில்லை என்று உணர்ந்தான் சக்கரை. இந்த அறையில் அடைக்கு முன் சூரி மட்டும் தன்னைச் சோதனை போட்டிருந்தால்...! பைஜாமா பையிலிருந்த மற்றக் கருவிகள் பறிமுதலாகியிருக்கலாம்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ஆனால் மிக உபயோகமானதும் விலை மதிப்புள்ளதுமான இந்தக் கருவியைச் சூரியினால் கண்டுபிடித்திருக்க முடியாது. ஒருவேளை சக்கரை அத்தனை கனமான பூட்ஸ் ஏன் அணிந்திருக்கிறான் என்று ஆராய்ந்திருந்தால் அந்தப் பூட்ஸின் உள் அறைகளில் ஒளித்துத் தைக்கப்பட்டிருந்த இந்தக் கருவியைக் கண்டிருப்பானோ என்னவோ!

பளபளவென்று மின்னிய மின்சார ஒளிக் கற்றையைக் கொண்டு, ஜன்னலின் குறுக்குச் சட்டங்களை யும், பிறகு இரும்புக் கம்பிகளையும் தீய்த்து அகற்றலானான் சக்கரை. மரம் பொசுங்கும் நாற்றம் அதிகப்படும் போதெல்லாம் சிறிது நேரம் நிறுத்திவிட்டு மறுபடி தொடருவான். சுமார் இரண்டு மணி நேரம் இப்படி விட்டு விட்டுப் பாடுபட்ட பின்னர், சாளரம் பதிந்திருந்த இடத்தில் ஒரு பகுதி பெயர்ந்து விட்டது.

வெளியிலிருந்து கேட்ட எல்லா ஓசைகளும் அடங்கி விட்டன.

ஜன்னலில் அவன் செய்திருந்த துவாரம் அவ்வளவாகப் பெரிதானது அல்ல. சற்றுப் பெரிய சரீரமான சக்கரை சிரமப்பட்டே வெளியேற நேரிட்டது. தன்னைத் தானே திருப்பிக்கொண்டு, கால் பக்கத்தை முதலில் வெளியேற்றினான். சுவரின் வெளிப்புறத்தில் ஊன்றக் கூடியதாக விளிம்பு ஏதேனும் இருக்கிறதா என்று கால்களாலேயே துழாவிப் பார்த்தான். ஜன்னலின் உட்புறத்தைக் கைகளால் கெட்டியாய்ப் பற்றிக் கொண்டு, கால்களை மேலும் மேலும் இறக்கினான். இனிமேல் கால்கள் இறங்குவதும் சரி, கைகள் பிடித்துக் கொள்வதும் சரி, இயலாத காரியம் என்ற நிலைமை ஏற்பட்டது. இத்தனை பிரயத்தனமும் வீண்தானா என்று பெருமூச் செறிந்த சமயத்தில் —

கால்கள் ஓரிடத்தில் ஊன்றின. நன்கு துழாவிப் பார்த்ததில், ஏறத்தாழ முக்காலடிப் பரப்பு இருக்கும்போல் தோன்றியது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ஜன்னலுக்குள் பிடித்திருந்த பிடிப்பை விட்டு விட்டு சுவரின் வெளிப்புறத்துக்கு முழுக்க முழுக்க வந்தான் சக்கரை. சாய்ந்து கொள்ளத் தட்டையான சுவரும், ஊன்றி நிற்க முக்காலடிப் பரப்பும் தவிர வேறு ஆதாரம் எதுவும் அவனுக்குக் கிடைக்கவில்லை. கீழே கும்மிருட்டும் மேலே வானமும்தான் தெரிந்தன. எத்தனை ஆபத்தான உயரத்தில் ஆதாரமில்லாமல் நிற்கிறோமென்று உணர்ந்தான். கால் சிறிது வழுக்கினாலும், எலும்பு முறிவுடன் மரணம் நிச்சயமெனப் புலப்பட்டது.

பங்களாவுக்குள் நுழையும்போதே, முன்பு டேப்ரிகார்டரைப் பொருத்திய வேதசிகாமணியின் அறை எந்தப் பக்கத்தில் இருக்கிறது என்று பார்த்து வைத்திருந்தான். இப்போது தான் நிற்குமிடத்துக்கு வலது திசையில் அது இருக்கிறதென்று ஊகித்தான். அந்த அறையின் ஜன்னலை இருட்டினூடே அவனால் கண்டு கொள்ள முடிந்தது. அங்குலமாக அதை நோக்கி நகரத் தொடங்கினான்.

தோட்டத்தில் பெரிதாய் வளர்ந்திருந்த புளிய மரத்தின் கிளைகள் இந்தச் சுவரை எட்டுகிற அளவுக்கு நீண்டிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்! துரதிருஷ்ட வசமாக, சக்கரை நின்றிருந்த இடத்துக்கு இரண்டு முழ தூரம் தள்ளியே அதன் கிளைகள் இருந்தன. கையை மெதுவாக நீட்டி, எந்தக் கிளையின் நுனியையாவது பற்றிக் கொள்ள முடியுமா என்று முயன்று பார்த்தான். கிளை எட்டாததோடு, அந்த முயற்சியில் தானே நிலை நழுவி விழுந்துவிடக்கூடிய அளவுக்குத் தடுமாறி விட்டானாகை யால், மேற்கொண்டு முயலுவது ஆபத்தை விலை கொடுத்து வாங்குகிற முட்டாள் தனம்தான் என்று நிறுத்திக் கொண்டு, முன்போல் சுவரை ஒட்டியே கைகளை அகல விரித்து நடக்கலானான். முதல் காலை எடுத்து வைக்கும் ஒவ்வொரு முறையும், அந்த இடம் தன் முழுப் பளுவையும் தாங்கக் கூடிய அளவுக்கு வலுவாயிருக்கிறதா என்று பல தரம்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அழுத்தி உதைத்துப் பார்த்து, பின்னரே இரண்டாவது காலை எடுத்து வைத்தான்.

பல யுகங்கள் தாண்டிவிட்ட மாதிரி நேரம் ஊர்ந்தது. இறுதியில்தான் வேதசிகாமணியின் அறைச் சாளரம் கையில் பட்டது. முதல் அறையின் ஜன்னலைப் போலவே இதுவும் கெட்டியாய் அடைக்கப்பட்டிருந்தது.

விரல் முட்டியினால் ஜன்னலில் டொக் டொக் கென்று இரண்டு தரம் தட்டினான். உள்ளேயிருந்து எவ்வித சலனமும் கேட்கவில்லை. என்னதான் நட்ட நடு நிசி என்றாலும், வேதசிகாமணியைச் சூழ்ந்திருக்கும் அபாயமும் நெருக்கடியும் அவரைத் தூங்க விடாது என்பது நிச்சயம். ஆகையால், மறுபடியும் இரண்டு தரம் தட்டினான். இப்போது, பதிலுக்கு இரண்டு தட்டு உள்புறத்திலிருந்து கேட்டது. வேதசிகாமணி விழித்துக் கொண்டிருப்பதோடு, தன் கேள்விக்குப் பதிலும் தருகிறார் என்று தெரிந்த பிறகு சக்கரைக்கு இத்தனை நேரமும் அனுபவித்த மன உளைச்சல் மறைந்து உற்சாகம் பெருக்கெடுத்தது.

ஜன்னலின் மரக் கதவுகளைத் தடவிப் பார்த்து, ஒரு சிறு ஓட்டை இருப்பதைக் கண்டு பிடித்தான். எச்சரிக்கையுடன் மெதுவாய்க் குனிந்து அந்த ஓட்டையினருகே வாய் வைத்து, "உள்ளே பிளக் பாயிண்ட் இருக்கிறதா பாருங்கள்," என்றான்.

வேதசிகாமணி, அவருடைய வயதுக்கு விறுவிறு வென்று செயலாற்றினார் என்றே சொல்ல வேண்டும். இருட்டில் எப்படியோ தடவிப் பார்த்து, பிளக் பாயிண்ட இருக்கிறது என்று தகவல் தெரிவிதது, ஓட்டை வழியே சக்கரை கொடுத்த பிளக்கைச் செருகினார் சில நிமிடங்களில்.

தனது அறையில் உள்ளிருந்து செய்த அதே அறுவை வேலையை இப்போது வெளியிலிருந்து நடத்தினான் சக்கரை. நல்ல வேளையாக, இப்போது

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

பிடித்துக் கொள்வதற்கு ஜன்னல் கம்பி, கதவு முதலியன இருந்தன. சில நிமிட நேரத்தில், சக்கரையின் மின்சாரக் கருவி தன் வேலையை அப்பழுக்கின்றி நிறைவேற்றி விட்டது. சக்கரை சொல்லிக் கொடுத்ததை வார்த்தை பிசகாமல் ஏற்றுக்கொண்டு நடந்து, பத்திரமாக வெளிப் பட்டார் வேதசிகாமணி. பட்டினியாலும் பயத்தினாலும் இப்போது அவர் தொண்டுக் கிழவராக மாறியிருந்தார். கன்னங்கள் ஒட்டித் தட்டி, கண்கள் எங்கோ பாதாளத்துக்குள் அழுந்திக் கிடந்தன.

அருகிலேதான் இருந்தது, முன்பு பக்கிரிசாமி ஏறிச் சென்ற தண்ணீர்க் குழாய். இருந்தாலும், அவ்வளவு நோஞ்சானாயிருப்பவர் இடறி விழாமல் அதன் வழியே இறங்கிக் கொள்வாரா என்று சந்தேகப்பட்டான் சக்கரை.

அதை ஊகித்து அறிந்தவர்போல வேதசிகாமணி, "பயப்படாதீர்கள், நான் இறங்குவேன்," என்று சொல்லி, விர்ரென்று வழுக்கிக்கொண்டு கீழே இறங்கிவிட்டார். சக்கரையினால்கூட அவ்வளவு வேகமாக இறங்க முடிய வில்லை.

ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு நேரத்தை வீணடிக்கவில்லை. வெகு வேகமாக அந்தப் பயங்கர மாளிகையை விட்டு வெளிப்பட்டு, சாலைக்கு வந்தார்கள். முள் வேலியின் மின் பொறிகளிலிருந்து அவரைப் பத்திரமாக வெளிக்கொணரும் பொறுப்பையும் சக்கரை தான் ஏற்றுக் கொண்டான்.

தெருக் கோடியில், மதகடிச் சுவரில் பீடியை இழுத்தவாறு உட்கார்ந்திருந்தான் கடமை மறவாத பக்கிரிசாமி. தூரத்தில் சக்கரை வருவதைக் கண்டதுமே எழுந்தோடி வந்து, சக்கரைக்கு ஆபத்து ஏதுமில்லையே என்று பார்த்துக் கொண்டான்.

"டாக்ஸி, சைக்கிள் ரிக்ஷா எது வேண்டு மானாலும் கபாலி டாக்கீஸ் பக்கம்தான் போகணும். வாங்க," என்று இருவரையும் அழைத்துச் சென்றான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"உங்கள் கதையைச் சொல்லுங்கள்," என்று வேதசிகாமணியை ஊக்கினான் சக்கரை.

இன்னும் பயம் நீங்காததால் திரும்பித் திரும்பிப் பார்த்தவாறே நடைபோட்ட வேதசிகாமணி, "என் கதை அப்படியொன்றும் பிரமிப்பானதல்ல. நானும் சூரியும் பங்காளிகள். என்னைப் பைத்தியமென்று சொல்லி அடைத்துப் போட்டுவிட்டு, பிதுரார்ஜித சொத்துக்களை யெல்லாம் தானே அடையப் பார்க்கிறான். அவ்வளவு தான்," என்றார்.

இதைக் கேட்டு சக்கரை ஒன்றும் சொல்லா விட்டாலும், பக்கிரிசாமி ஆத்திரத்துடன், "பெரியவரே! உயிரைக் கொடுத்து உன்னைக் காப்பாற்றியிருக்கிறார் எங்க ஐயா! இவரண்டையே டூப் விடறியே, நல்லாயிருக்குதா?" என்று ஏதோ கூறத் தொடங்கினான்.

அதற்குள் சக்கரை அவனைத் தடுத்து, "நீ சும்மா இரு. உனக்கு ஒன்றும் தெரியாது," என்று கூறிவிட்டு, "நீங்கள் சொல்வதில் எனக்கு முழு நம்பிக்கை உண்டு. என்னை வேறொரு சொந்தக் காரணத்துக்காக அடைத்து வைத்திருந்தான் சூரி. பக்கத்து அறையில் நீங்கள் அடைபட்டிருப்பது எனக்குத் தெரிய வந்தது. அதனாலே நான் தப்புகிறபோது உங்களையும் தப்ப வைத்தேன்," என்றான்.

"ரொம்ப நன்றி ஐயா," என்று கையெடுத்துக் கும்பிட்டார் வேதசிகாமணி. "என்னை எழும்பூர் ரயில்வே ஸ்டேஷனில் இறக்கி விட்டுவிட்டால் போதும், நான் ஊருக்குப் போய்விடுகிறேன்."

"ஓ, கட்டாயம்," என்று வாக்களித்த சக்கரை, அதேபோல் ஒரு டாக்ஸி கிடைத்ததும் முதலில் அவரை எழும்பூர் ரயில் நிலையத்தில் இறக்கி விட்டான். விடை பெற்றுக் கொண்டான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

எழும்பூர் மேம்பாலத்தை டாக்ஸி அடைந்த போது, அதுவரை வாய் திறக்காதிருந்த பக்கிரிசாமி, "என்னங்க அநியாயம்! இவ்வளவு பாடுபட்டு அவரை விடுவிச்சிங்க, அப்பாலே அவர் பாட்டுக்குப் போகட்டுமின்னு விட்டிட்டீங்களே!" என்று புலம்பினான்.

"வண்டியை நிறுத்தப்பா," என்றான் சக்கரை.

டாக்ஸி நின்றது.

"இறங்கு," என்று பக்கிரிசாமிக்குக் கட்டளை யிட்டான் சக்கரை.

"ஏன் சார்? சொன்னேன்னு கோபமா?"

"கோபம் இல்லை. இனிமேல்தான் காரியம் ஆகணும். திரும்பி எழும்பூர் ரயில்வே ஸ்டேஷனுக்கே போ. அந்த வேதசிகாமணி எங்கே போகிறார், என்ன செய்கிறார் என்பதைக் கண்காணித்துக் கொண்டு திரும்பி வா. ஆனால் உன் நிழல்கூட அவருக்குத் தெரியக்கூடாது," என்றான் சக்கரை.

24

மந்தைவெளியில் அந்தப் பழைய மாளிகையின் தோட்டத்தில் சூரிய வெளிச்சம் பரவியது. மர்மமும் பயங்கரமும் அந்த மாளிகைக்குள் நிறைந்திருக்கின்றன என்று எவரேனும் சொன்னால், சொன்னவர்தான் பைத்தியக்காரராகத் தோன்றுவார்கள். சூரிய கிரணங்கள் அப்படித் தூயதாகவும் மென்மையானதாகவும் செய்திருந்தன அந்தச் சூழ்நிலையை.

காலை ஏழு மணிக்கு ஒரு வகுப்பும் பகல் இரண்டு மணிக்கு ஒரு வகுப்பும், இரவு ஏழு மணிக்கு ஒரு

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

வகுப்புமாக மொத்தம் மூன்று வகுப்புகள் சூரி அங்கே நடத்துவது வழக்கம். ஒவ்வொன்றிலும் ஆறு மாணவிகள் வருவது உண்டு. பகல் வகுப்பில் மட்டும் சில ஆண்கள் சேர்ந்திருந்தார்கள். அவர்கள் கல்லூரி மாணவர்களல்ல. தனிப்பட்ட முறையில் நடிப்புக் கலையைக் கற்பதற்கென வந்திருந்தார்கள்.

காலை வேளையில், முதல் வகுப்பு நடைபெற்று முடியும் வரையில் மாடிப் பக்கம் சூரி செல்வது கிடையாது. ஒன்பது அல்லது பத்து மணிக்கு ரசம் சாதம் பிசைந்து எடுத்துக் கொண்டு ஊசோ தாத்தாவிடம் செல்வான். அவனுடைய நெருங்கிய உதவியாளர்களுக்கும் வேலைக் காரர்களுக்கும் மாடியில் யாரோ ஒரு வயதான கிழவர் இருக்கிறாரென்று மட்டுமே தெரியும். சாகும் வயதிலுள்ள உறவினரை இத்தனை பரிவுடன் காப்பாற்றி வருகிறானே என்று சூரியிடம் அவர்களுக்கு மதிப்புத்தான் உயர்ந்ததே தவிர, அந்த உறவில் தப்பானது எதையும் அவர்கள் ஊகிக்கவில்லை.

இன்று காலை சூரி எழுந்து கொண்டபோது காலை வகுப்பு மாணவிகள் வந்து விட்டார்கள். அவர்களுடைய கலகலப்பான பேச்சும் உரத்த சிரிப்பும் சூரியை எழுப்பிவிட்டன. தன் படுக்கையறையின் பக்கத்தி லேயே இருந்த பாத்ரூமில் முகம் கழுவிப் பல் விளக்கி உடை மாற்றிக்கொண்டுதான் வெளிப்பட்டான்.

"நமஸ்காரம் சார்," என்று மாணவிகள் வணக்கம் தெரிவித்தபோது பதிலுக்குக் கை குவித்தானே தவிர, சூரியின் மனம் வேறெங்கோ சஞ்சரித்துக் கொண்டிருந்தன. மாடிக்குச் செல்லும் படிக்கட்டின் கதவினிடமே அவன் கண்கள் திரும்பித் திரும்பிச் சென்றன. வேதசிகாமணியைக் கொண்டு வந்து மாடியில் சிறைப்படுத்தியபோதே அவனுடைய பிரச்சினைகள் பெரிதாகி விட்டன. யாருக்கும் தெரியாமல் மாடியில் அவரைப் பராமரிப்பது பெருங் காரியமாயிருந்தது. இப்போது, கூர்த்த மதி படைத்தவனும்,

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

தடுக்கில் பாய்ந்தால் கோலத்தில் பாயக்கூடிய கெட்டிக் காரனுமான சக்கரையை வேறே கொண்டுவந்து சிறைப் படுத்தியிருக்கிறோமே என்ற கவலை நேற்றிரவு முதல் அவனைப் பிடித்துக் கொண்டது.

இந்த மன நிலையிலிருந்த அவனை, "என்ன சார், என்னவோ போலிருக்கிறீர்கள்?" என்று மாணவியொருத்தி கேட்டதில் ஆச்சரியமொன்றுமில்லை.

"ஒரு வேளை இதைக் கெட்டுப் போக்கிவிட்ட கவலையோ என்னவோ?" என்று சிரித்துக் கொண்டே இன்னொருத்தி அவன் முன்னே தன் உள்ளங்கையைப் பிரித்துக் காட்டினாள். "வரும்போது தோட்டத்தில் கிடந்தது சார்."

சூரி திடுக்கிட்டான், அந்தத் தங்கப் பொத்தான் களைக் கண்டு. ஒரு பட்டு நூலில் கட்டியிருந்த அந்த இரண்டு பொத்தான்களும் அவனுடையவை அல்ல. ஆனால் அவைகளைத் திருப்பிப் பார்த்து, பொத்தானின் கீழ்ப் புறத்தில் இருந்த 'ஸி' என்ற ஆங்கில எழுத்தைக் கண்டதும் அவனுக்கு விளங்கிவிட்டது — அது சக்கரை யினுடையது என்று.

"ஒரு தாங்ஸ் கூடச் சொல்லவில்லையே நீங்கள்! ஹுாக்கும்!" என்று முகம் சுளித்தாள், பொத்தான்களைக் கொடுத்த பெண். "சரி சார், முதலில் தூக்கமா, இல்லை, பாடமா?"

முதல் பெண் அவளை விலாவில் மெல்ல இடித்து, "அந்த ஜெர்மன் முறையெல்லாம்தான், அம்பிகா நின்றதி லிருந்தே நிறுத்திவிட்டாரே?" என்றாள்.

சூரி மீண்டும் திகைப்புக்குள்ளானான். தூங்கச் செய்து பாடங்களை மூளையிலேற்றும் தனது நூதன முறைக்கும் அம்பிகாவுக்கும் ஏதோ தொடர்பு இருப்பதை இவர்கள் ஊகித்து வைத்திருக்கிறார்களே என்று நினைக்க அவனுக்குச் சங்கடமாகவும் வியப்பாயும் இருந்தது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"என்னை மன்னியுங்கள்," என்றான் ஒரு போலியான புன்னகையுடன். "நேற்று ராத்திரி பூரா தலைவலியும் காய்ச்சலுமாயிருந்தது. அதனால்தான் எழுந்திருக்கக்கூட லேட். இன்றைக்குக் கிளாஸ் வேண்டாம். நாளைய தினம் சேர்த்து நடத்தி விடுகிறேன். என்ன?"

"ஓ!" என்றார்கள் அனைவரும் ஒரே குரலில்.

"ரொம்ப உற்சாகம் காட்டாதீர்கள்! ஒரு நாள் என் வகுப்பு இல்லாதது உங்களுக்கு இவ்வளவு சந்தோஷம் தரக்கூடாது!" என்று வேடிக்கையாகக் கூறி அவர்களை வெளியே அனுப்பிவிட்டு, கதவை உட்புறம் தாளிட்டுக் கொண்டு மாடிக்கு விரைந்தான் சூரி.

சக்கரையின் பொத்தான் தோட்டத்தில் விழுந் திருந்தன என்றால், நேற்றிரவு அவன் தப்பிச் சென்ற போதுதான் அப்படி நேரிட்டிருக்க வேண்டும். மயக்க நிலையில் அவனை மாடிக்கு இழுத்துச் சென்றபோது, அவன் சட்டையில் பொத்தான்களைக் கண்டது சூரிக்கு நன்கு நினைவிருந்தது.

நினைத்து முடிக்கு முன்பு அவன் மாடியறையை அடைந்தான். அவன் அச்சம் உறுதிப்பட்டது. சக்கரையின் அறையைத் திறந்ததுமே வெறிச்சென்று பிளந்து கிடந்த ஜன்னல்தான் அவன் கண்ணில் பட்டது. தப்பிச் சென்றவன் வேதசிகாமணியையாவது அழைத்துச் செல்லாமலிருக்கிறானா என்று நைப்பாசையுடன் பார்த்தான் அடுத்த அறையில். முதல் அறையின் கதையையே அதுவும் சொல்லவே சூரியின் மனம் இடிந்து நொறுங்கியது. தப்பிச் சென்றவர்கள் அடுத்தாற்போல் என்ன செய்வார்கள் என்பதை ஊகிக்க முயன்றான்.

உடனேயே ஊசோ தாத்தாவிடம் சென்று யோசனை கேட்க வேண்டும் போலிருந்தது. ஆனால் முந்தின தினம் சக்கரையைக் கொண்டு வந்து அடைத்த போதே அவர் உற்சாகமாக ஆதரிக்கவில்லை.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"பொறுத்திரு," என்ற ஒரே வார்த்தையுடன் மௌனமாகி விட்டார். இப்போது அவரிடம் எப்படிச் சொல்வது தன் தோல்விகளை?

ஆனால் வேறு வழியில்லாமல் ஊசோ தாத்தா விடம்தான் சென்றான் சூரி. வழக்கமாக உற்சாகமாயும் வேகமாயும் அங்கே நுழையும் அவன், இப்போது குனிந்த தலையுடனும் ஓசையின்றியும் வந்ததுமே ஊசோ தாத்தா புரிந்து கொண்டு விட்டார் போலும்.

"ஷேக்ஸ்பியர்வாலா தப்பிவிட்டானா சூரி? அதுதானே சொல்ல வந்தாய்?" என்று இருட்டுக் குரல் கேட்டது.

"வேதசிகாமணியையும் தப்பவைத்து அழைத்துச் சென்றுவிட்டான்," என்றான் சூரி.

இருட்டுக் குரல் பதில் தரவில்லை. அந்த அந்தகாரமான இருளில் நிசப்தமே நிலவியது வெகு நேரத்துக்கு.

"உன் அதிகப்பிரசங்கித்தனம்," என்று கடைசியில் குரல் கண்டித்தது.

சூரி மறுக்கவில்லை.

குரல் தொடர்ந்தது: "எனக்கு இத்தனை மன வலிமை வந்ததென்றால் எப்படியென்று நினைக்கிறாய்? பொறுமை. என் மதம் பொறுமையைப் போதிக்கிறது. குறிக்கோள் ஒன்றிலேயே கண்ணாக, மற்றத் தோல்விகளை யும் கஷ்டங்களையும் பொறுத்துக்கொள்ள நான் என்ன பாடுபட்டிருப்பேன் தெரியுமா? அந்தப் பொறுமை இல்லாததால், நான் சொல்லாத காரியங்களைச் செய்து, எதிர்பாராத சிக்கல்களில் மாட்டிக் கொள்கிறாய்."

"இல்லை..." என்று ஏதோ சொல்ல முயன்றான் சூரி.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"மறுக்காதே. எனக்குத் தெரியும்," என்று அந்தக் குரல் அச்சுறுத்தும் விதத்தில் ஒலித்தது. "அந்த வாத்தியா ரம்மா ரத்தினத்தின் விஷயத்தில் நீ தலையிட்டுச் சிக்கிக் கொண்டாய். அது முதல் தவறு. பிறகு, இந்தப் பம்பாய்க் காரனை அழைத்து வந்தாய்."

"நான் அழைத்து வரவில்லை, ஊசோ தாத்தா. அவன்தான் உளவு பார்க்க, மாறு வேஷம் போட்டுக் கொண்டு வந்தான். பிறகு அவனை விட்டுவிடுவதா? அடைத்தேன் உடனே."

"அதைத்தான் அவன் எதிர்பார்த்தான். அதற்காகத்தான் வேஷம் போடுகிற மாதிரி, உளவு பார்க்கிற மாதிரி வந்து, உன்னிடம் தற்செயலாய்ச் சிக்குகிறாற்போல் நடித்தான். அவன் நோக்கம் நிறைவேறப் பண்ணிவிட்டாய். இப்போது ஏன் புலம்புகிறாய்?"

"ஊசோ தாத்தா, அந்த இரண்டு பேரும் சேர்ந்து நம்மை ஒழிக்கப் பார்ப்பார்களே?" என்றான் சூரி.

கெக்கெக்கே என்ற கோரமான சிரிப்பு அந்த இருட்டறையெங்கும் அலை அலையாகப் பரவியது. "சூரி, 'நம்மை' என்று என்னைச் சேர்த்துச் சொல்லாதே. 'என்னை' என்று உன்னை மட்டும் தனியாகச் சொல்லிக்கொள். நீ மனிதன். கஷ்ட நஷ்டங்கள், வெற்றி தோல்விகள் உனக்கு உண்டு. இந்த ஊசோ, மனிதனுக்கு மேலே. இது யந்திரம். உணர்ச்சிகள் அற்றது. ஆகவே கஷ்டங்களும் தோல்விகளும் இல்லாதது. இந்த ஊசோவை ஒழிக்க ஒருவன் இனிமேல் தான் பிறந்து வர வேண்டும்."

மீண்டும் அந்த அமானுஷ்யமான சிரிப்பு அலைகள் பரவவே, சூரியின் மனத்தில் எல்லையற்ற துன்பம் உண்டாயிற்று. "ஊசோ தாத்தா, எனக்கு அழிவு ஏற்பட்டால் உங்களுக்கு அதில் பங்கில்லையா?"

"உண்டு — என் சொற்படி நீ நடக்கிற வரையில் தான். என்னை மீறி நீ தன்னிச்சையாக நடந்தால், உன்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அழிவு உன்னோடு. நானல்ல, உன்னைப் படைத்த கடவுளால்கூட உன்னைக் காப்பாற்ற முடியாது," என்று சாபமிடுகிற மாதிரி கடுமையாக மொழிந்தது இருட்டுக் குரல்.

"இனி உங்கள் சொல்படியே நடக்கிறேன் ஊசோ தாத்தா," என்று புலம்பினான் சூரி. "பர்மாவிலிருந்து உங்களை எதற்காக அழைத்து வந்தேன்? என் எதிரி துடித்துத் துடித்துச் சாக வேண்டும், ஒருத்தருக்கும் தெரியாது என்று நினைத்து அவன் செய்த அக்கிரமம் ஊரறிய, உலகறிய பகிரங்கமாகி, அவமானத்துக்கு அவன் உள்ளாகிச் செத்து மடிய வேணடும் என்றுதானே?"

"பொறு, பொறு, பொறு," என்றது இருட்டுக் குரல்.

"இன்னும் எத்தனை நாளைக்குப் பொறுப்பேன், ஊசோ தாத்தா?" என்றான் சூரி. "அம்பிகாவின் முன் ஜன்ம நினைவு என்ற விஷயமெல்லாம் ஆறிய கஞ்சியாகிக் கொண்டு வருகிறது. சூட்டோடு சூடாக, நாம் எதிர் பார்த்ததை அவள் சொல்லியிருந்தாளானால் எத்தனை நன்றாயிருந்திருக்கும்! அந்தச் சந்தர்ப்பங்களையெல்லாம் நழுவ விட்டு விட்டு, சம்பந்தமில்லாத விஷயங்களி லெல்லாம் போய்க் கொண்டிருக்கிறோம்..."

"என்னைக் குறை சொல்கிறாயா?" என்றது சினத்துடன் இருட்டுக் குரல்.

இல்லையென்று சூரி மறுக்கவில்லை. மெல்ல எழுந்து கொண்டான். கதவைச் சாத்திக்கொண்டு கீழே இறங்கி வந்தான்.

சமையற்காரனோ வேலையாளோ வந்திருக்க வில்லை. சூரி, தானாகவே அடுப்பை மூட்டி, சாதம் வடித்து, ரசம் வைத்தான். ஒரு கிண்ணத்தில் அதைப் பிசைந்து எடுத்துக் கொண்டான். மாடிக்குத் திரும்பவிருந்த போது —

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"சூரி! அம்பிகா இங்கே வந்தாளா? நீ பார்த்தாயா?" என்று அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக மரகதம் உள்ளே வந்தாள்.

"அம்பிகாவா?" என்று அதிர்ச்சியுற்றான் சூரி. "காணோமா அவளை?" என்று கேட்கும்போதே, தானடைந்த சோதனைகளுக்குள் இதுவே மிகப் பெரியது, மிக மோசமானது என்பதையும் அவன் உணர்ந்தான்.

"இரண்டு நாளாக அவள் எங்கே போனாளென்றே தெரியவில்லையே, சூரி? நான் என்னப்பா செய்வேன்? காலேஜ் படிப்பை நிறுத்தியதற்காக அன்றைக்கு உன்னோடும் என்னோடும் சண்டை போட்டாளே, அப்போது போனவள்தான்!" என்று மரகதம் அழுதாள்.

"மூன்று நாளாய் ஏன் வாயை மூடிக் கொண்டிருந்தாய்?" என்று சூரி சீறினான்.

"எனக்கு ஒரே பயமாயிருந்தது..."

"சரி, சரி. இங்கேயே உட்கார்ந்திரு," என்று ஹாலில் அவளை உட்கார்த்தி வைத்துவிட்டு மாடிக்கு ஏறினான் சூரி, நாலு படிக்கு ஒரு காலாகத் தாண்டிக் கொண்டு.

"ஊசோ தாத்தா! அம்பிகாவையே இப்போது காணோமாம்! சித்தி வந்து சொல்கிறாள். என் திட்டமெல்லாம் அவ்வளவுதானா? சொல்லுங்கள் ஊசோ தாத்தா?" என்று மன்றாடினான்.

ஊசோ தாத்தா மௌனமாகவே இருந்தார்.

"அம்பிகா எங்கே போயிருக்கிறாள் என்று உங்களுக்குத் தெரியவில்லையா?"

அதற்குப் பதிலில்லை.

சூரி கடுங்கோபத்துடனும் வெறுப்புடனும் எழுந்து கொண்டான். "உங்களிடம் ஒரு சக்தியும் கிடையாது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

உங்களை நம்பியிருந்த நான் ஓர் அடி முட்டாள். நீங்கள் வெறும் ஏமாற்று! போலி!"

"சூரி, கீழே போய் ஓர் ஊசியும் ஒரு பச்சை மிளகாயும் கொண்டு வா," என்றது இருட்டுக் குரல்.

சூரி குழப்பத்துடன் நின்றான்.

"கொண்டு வா, சொல்கிறேன்," என்று குரல் சட்டளையிட்டது.

சூரி அதன்படியே மிளகாயையும் ஊசியையும் கொணர்ந்து தந்தான்.

குரல் பேசியது: "எனக்கு ஒரு சக்தியும் கிடையாதென்று சுலபமாய்ச் சொல்லி விட்டாய். அன்றொரு நாள், பிரின்ஸிபாலின் வீட்டில் அம்பிகாவைப் படங்களின் மூலமாகத் தன் எண்ணங்களை வெளிப்பட வைத்தேனே, அதைக்கூட மறந்து விட்டாய்! தேவகியை இறக்க வைத்த தீ விபத்தை அம்பிகா படம் போட்டுக் காட்டினாள். நீயும் ஒருபுறம் மறைந்திருந்து கவனித்தாய். அவளை நான் சொன்னபடி செய்ய வைக்கிறேன் என்று கூறி, உனக்கு நிரூபித்தேன்... உண்டா இல்லையா?"

"உண்டு, உண்டு... ஆனால், அம்பிகா தீ விபத்தோடு மட்டும் நிற்கவில்லை. இன்னும் என்னென்னவோ கூடப் போட்டுக் காட்டினாள்... சம்பந்தமில்லாமல், ஒரு மூக்குக் கண்ணாடிக்காரனின் படம்கூட வரைந்தாள்," என்றான் சூரி.

"ஆமாம்," என்று ஒப்புக்கொண்டது இருட்டுக் குரல். "என்னையும் மீறி இன்னொரு சக்தி அவளுக்குள் இயங்குகிறது அது என்னவென்று ஆராய்வதிலேதான் நான் புத்தியைச் செலுத்தி வருகிறேன். நீ எனக்குச் சக்தியே கிடையாதென்று சொல்கிறாய்! நல்லது, அம்பிகாவின் சித்தி ஹாலில் உட்கார்ந்திருக்கிறாளல்லவா?"

"ஆமாம்."

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"மாடியில் இருந்தபடியே அவளுக்குத் தெரியாமல் அவளை நீ பார்க்க முடியுமா?"

"முடியும்."

"சரி, இதோ ஊசி இருக்கிறது. முதலில் என் முழங்கையில் சுருக்கென்று குத்திக் கொள்கிறேன். பிறகு கழுத்தில், பிறகு கணுக்காலில், பிறகு உள்ளங்கையில் சுருக் சுருக்கென்று குத்திக் கொள்கிறேன், நீ வெளியே போய் நின்று கொண்டு அவளைக் கவனி."

சூரி மாடி வெராந்தாவை அடைந்து ஓரமாக நின்று கொண்டு, கீழே பார்த்தான. நாற்காலியில் மௌனமாக உட்கார்ந்திருந்தாள் மரகதம்.

திடீரென்று —

"ஸ்! அம்மா!" என்று முழங்கையைத் தடவிக் கொண்டு, எது தன்னைக் குத்தியது என்பது போலச் சுற்று முற்றும் பார்த்தாள். உடனேயே "ஆ!" என்று இன்னொரு கூச்சலிட்டுக் கழுத்தைத் தேய்த்துக் கொண்டாள். அடுத்து, "ஸ்... ஸ்!" என்று கூவியவாறே கணுக்காலையும் உள்ளங் கையையும் தடவிக்கொண்டு திருதிருவென்று விழித்தாள். ஆனால் அவளுக்கருகே யாரும் இருக்கவுமில்லை, குத்தவு மில்லை.

கட்டுக்கடங்காத வியப்புடனும், மகிழ்ச்சியுடனும் ஊசோ தாத்தாவின் அறைக்குத் திரும்பி வந்தான் சூரி. "ஊசோ தாத்தா, நீங்கள்..."

"இரு, இன்னும் பாக்கியிருக்கிறது. இதோ நீ கொண்டு வந்த பச்சை மிளகாய். இதைக் கடித்துத் தின்கிறேன். அந்த அம்மாளைக் கவனி."

சூரி வெளியே சென்று கவனித்தான்.

ஊசிக் குத்தலின் வேதனை குறைந்து நாற்காலியில் பெருமூச்சுடன் உட்கார்ந்திருந்த மரகதம் மீண்டும் துள்ளி

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

எழுந்து கொண்டாள். தன் வாயையும் கன்னத்தையும் பொத்திக் கொண்டாள் இரு கையாலும்.

"அம்மா! ஐயையோ! நாக்கெல்லாம் எரிகிறதே! தண்ணீர்! தண்ணீர்! சூரி, கொஞ்சம் தண்ணீர் கொடேன்!" என்று அலறலானாள்.

25

"கீழே போய் அந்த அம்மாளுக்குத் தண்ணீரைக் கொடுத்துக் குடிக்கச் சொல்லிவிட்டு வா," என்று இருட்டுக் குரல் கட்டளையிட்டது.

சூரி கற்சிலை போல் நின்றிருந்தான். இங்கே ஊசோ தாத்தா பச்சை மிளகாயைக் கடித்து விழுங்குவதும், அங்கே மரகதம் "ஐயோ! எரிகிறதே! தாங்கவில்லையே!" என்று கன்னங்களைப் பொத்திக்கொண்டு அலறுவதும் எப்படி நடைபெறுகிறது? ஒருவருடைய எண்ணத்தை இன்னொருவருடைய மனத்திலே பாய வைப்பது — மிகக் கஷ்டப்பட்டாவது ஒப்புக் கொள்ளலாம், சாத்தியமென்று. இந்த அதிசயம் — தன் புலன்களிலே ஏற்படும் உணர்ச்சி களை இன்னொருவருடைய புலன்களுக்கு ஏற்றுவது — கற்பனையில்கூட ஒப்புக்கொள்ள முடியாததாக அல்லவா இருக்கிறது!

சூரி பிரமித்துத் திகைத்து நின்றதோடு இல்லை. மந்திர சக்திக்குக் கட்டுபட்டவன் போல் அசையாதும் நின்றான் அச்சத்தினால்.

ஊசோ தாத்தாவின் சக்திகளையும் திறமை களையும் பல முறை கண்ணால் கண்டவன்தான் அவன். ஆனால் அப்போதெல்லாம் அவன் உள்ளத்தில் வியப்பு

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

மட்டுமே ஏற்பட்டு வந்திருந்தது. இப்போதுதான் பயமும் சூழ்ந்து கொண்டது. "இந்த ஊசோ தாத்தா மனிதனல்ல; யந்திரம்," என்று அவரே சொல்லிக் கொண்ட வார்த்தைகள் அவன் செவியில் மோதின. 'சாதாரண யந்திரம்கூட அல்ல. ராட்சஸத்தனமான யந்திரம். இது ஓர் அமானுஷ்யமான அசுரப் பிறவி' என்ற கிலி அவனைப் பிடித்துக் கொண்டது. தன்னையும் அறியாமல் ஒரு பயங்கர விஷச் சுழலில் மாட்டிக்கொண்டு விட்டோமோ என்ற பயம் அவன் புத்தியை மயக்கியது; கண்களைச் செருக வைத்தது; உடலைத் தள்ளாட வைத்தது.

"போ கீழே," என்ற இருட்டுக் குரலின் இரண்டாவது அதட்டலும், "சூரி! எங்கேயப்பா போய்விட்டாய் நீ? திடீரென்று எனக்கு உடம்பே எரிகிறதே?" என்று கீழ் ஹாலில் மரகதம் போட்ட கூச்சலும் அவனைச் சுயப் பிரக்ஞைக்குக் கொண்டு வந்தன.

"இதோ போகிறேன்," என்று கூறித் தடதடவெனக் கீழிறங்கிச் சென்றான். ஒரு செம்பில் தண்ணீரை மொண்டு எடுத்துச் சென்று, "இந்தா சித்தி, குடி! குடி!" என்று பதற்றமாக மரகதத்திடம் கொடுத்தான்.

மடமடவென்று ஒரு செம்புத் தண்ணீரையும் குடித்து முடித்த பிறகுதான் தலை நிமிர்ந்தாள் மரகதம்.

"சூரி! எனக்குத் திடீரென்று..." என்றவாறு அவனைப் பார்த்தவள் திடுக்கிட்டாள். "சூரி! ஏன் இப்படி இருக்கிறாய்? ஏன் உன் உடம்பு நடுங்குகிறது? உடம்பெல்லாம் வியர்த்து, உன் சட்டையெல்லாம் தெப்பமாய் நனைந்திருக்கிறதே? என்ன செய்து கொண்டிருந்தாய்?" என்று அடுக்கடுக்காகக் கேள்விகளை வீசினாள்.

"ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை" என்று சமாளித்துக் கொண்டான் சூரி. "பின் கட்டில் ஒரு பழைய அறையை ஒழித்துக் கொண்டிருந்தேன். ஜன்னலில்லாத இருட்டறையாகையால் வியர்த்திருக்கிறது."

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அவன் பேச்சை நம்புவதா கூடாதா என்று தெரியாமல் மிரள மிரள விழித்த மரகதம், "நான் போய்விட்டு அப்புறமாய் வருகிறேன். எனக்கென்னவோ இங்கே இருக்கவே பயமாயிருக்கிறது, என்ன காரணமென்றே தெரியவில்லை. யாரோ என் மனசுக்குள் புகுந்து கொண்டு, என்னென்னவோ சொல்கிற மாதிரி இருக்கிறது... என் கண்ணம்மா... அம்பிகா சொல்வாளே, தனக்கு என்னமோ பண்ணுகிறது என்று. அது இப்படித்தான் இருக்குமோ... சூரி... அம்பிகாவை எப்படியாவது கண்டு பிடித்து..." என்று தடுமாறினாள்.

சூரி அவளைக் கையைப் பிடித்து அழைத்துச் சென்று வாசல் வரையில் கொண்டுபோய் விட்டான். "கவலைப்படாதே, சித்தி. அம்பிகா எங்கேயும் போயிருக்க மாட்டாள். இதைப்பற்றி நீ எல்லார்கிட்டேயும் சொல்லி, பெரிசாய்ப் பரவுகிற மாதிரி செய்யாமலிரு. என் பொறுப்பு அவளைக் கண்டு பிடிப்பது," என்றான்.

"நான் வரேன்... வரேன்..." என்று சொல்லிக் கொண்டே பஸ் ஸ்டாப்பை நோக்கித் தள்ளாடியவாறே சென்றாள் மரகதம்.

அந்த ஒரு துணையும் அகன்றதும், சூரியின் அச்சம் பன்மடங்கு அதிகரித்தது. தன்னுடைய சொந்த வீட்டின் உட்புறத்தைத் திரும்பிப் பார்க்கவே அவனுக்குத் திகிலாயிருந்தது, இருந்தாலும், 'சீ! இதென்ன பைத்தியக்காரத்தனம்! ஊரோ தாத்தா எனக்கு நன்மை செய்வதற்காகவே வந்தவர். அவரையே நான் ஒதுக்கினால் என் லட்சியம் என்ன ஆவது?' என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டு மீண்டும் மாடியறையை அடைந்தான்.

"ரொம்பப் பயந்து போயிருக்கிறாய்! இல்லையா சூரி!" என்று ஆந்தைத் தனமான சிரிப்பு அவனை வரவேற்றது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"இல்லை, ஊசோ தாத்தா!" என்றான் சூரி. "குழம்பிப் போயிருக்கிறேன் அவ்வளவுதான். அந்தச் சக்கரை இங்கிருந்து தப்பிப் போயிருப்பதால் மறுபடி போலீஸ் துணையுடன் வந்து சோதனை கீதனை போடுவானோ என்று!"

கெக்கெக்கே என்ற சிரிப்பு அவன் பேச்சைத் தடைப்படுத்தியது. "அவன் வரமாட்டான். பயப்படாதே. சும்மா துப்பறியும் வேலையும் செய்து பார்க்கிறானே தவிர, அவன் நோக்கமெல்லாம் மனத் தத்துவ ஆராய்ச்சிதான். போலீஸை வரவழைத்து, தன் நோக்கத்தைத் தானே கெடுத்துக் கொள்கிற முட்டாளல்ல அவன். என்னுடைய சக்தி என்ன, திறமை என்ன எப்படி அது பிரயோஜன மாகிறது என்பதை அறிந்துகொள்ள அவனுக்கு ஆவல். அவனைப் படைத்தவனே வந்தாலும் அந்த விஷயத்தில் தோல்விதான். விடு அவனை, துள்ளுகிற வரையில் துள்ளி விட்டு, தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு திரும்ப ஓடுவான் பம்பாய்க்கு."

சூரிக்குச் சிறிது உற்சாகம் பிறந்தது. "அவன் போய் விட்டால் பாதித் தலைவலி தீர்ந்தது. ஆனால் அம்பிகா..."

"மற அவளையும்."

தூக்கி வாரிப்போட்டது சூரிக்கு. "அம்பிகாவை மறந்துவிட்டு?" என்று திடுக்கிட்டான்.

"அவள் எங்கே போனாலென்ன, என்ன ஆனாலென்ன? அவள் நமக்கு ஒரு கருவிதான். நீ நினைத் திருக்கும் காரியத்தை, கொண்டிருக்கும் நோக்கத்தைப் பொருத்தமாயும், பகிரங்கமாயும் ஆர்ப்பாட்டமாயும் செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்டாய். வேண்டாம். அம்பிகாவைத் தற்காலிகமாக விட்டுவிடுவோம் — இன்று மாலை ஆறு மணியோடு. உன் நோக்கம் நிறைவேற வேண்டியதுதானே முக்கியம்? அம்பிகா இல்லாமலே அது நடக்கும்!"

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"ஊசோ தாத்தா..." என்று சூரி நாக்குழறினான்.

"கீழே உன் வேலைக்காரனும் வேறு யாரோ மாணவனும் வருகிறார்கள். நீ போ," என்று இருட்டுக் குரல் உத்தரவிட்டது. "போ, சோர்வு இல்லாமல். உன் எதிரியை அம்பிகா மூலம் தண்டிக்க நினைத்தாய். தேவையில்லை. நானே அவனைத் தண்டிக்கிறேன். அவன் தன் கையால் தானே சாவைத் தேடிக் கொள்ளும்படி செய்கிறேனா இல்லையா, பார்!"

சூரியின் மெய் நடுங்கியது, இந்தச் சூளுரையைக் கேட்டு.

வேதசிகாமணியைத் தொடர்வதற்காகப் பக்கிரி சாமியை இறக்கி விட்டதும், "எங்கே சார் இனி மேலே?" என்று டாக்ஸியோட்டி கேட்டான்.

"இவ்வளவு பெரிய ஓட்டல் பக்கத்தில் இருக்கிற போது இந்தக் கேள்வியைக் கேட்கிறாயே! என்ன டாக்ஸி யோட்டி [illegible]" என்று சக்கரை பரிகாசம் செய்த பிறகே நினைவு வந்தது போலும் அந்த டாக்ஸிக்காரனுக்கு. சிரித்துக்கொண்டே அந்த வட்டாரத்தில் பிரபலமாயிருந்த ஓர் ஓட்டலுக்குள் நுழைந்தான்.

அந்த நட்ட நடுநிசி வேளையிலும் ஓட்டல் சேவகனொருவன் சக்கரையை அடையாளம் கண்டு கொண்டான். தர்மு அத்தையின் வீட்டில் மட்டுமல்லாமல் இங்கேயும் சக்கரைக்கு ஒரு நிரந்தரமான அறை உண்டு. எந்த வேளை கெட்ட வேளையிலும் வந்து போகிறவர் இந்தப் பம்பாய்ப் பேர் வழி என்பதை ஓட்டல் சிப்பந்திகள் அனைவரும் அறிந்து வைத்திருந்தார்கள்.

சக்கரையை இன்று அழைத்துச் சென்றவன், பக்கிரிசாமியைப் போலவே இன்னொரு பரமானந்த சிஷ்யன் என்று சொல்லலாம். பத்தொன்பது வயதான அவன் பெயர் ராம்ஜி. சுபாவத்தில் இன்னுமொரு பத்து வயது குறைத்துக் கொள்ளலாம். பம்பாயிலிருந்து வரும்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

போதெல்லாம் சக்கரை இவனுக்காக ஒரு ஸ்பெஷல் ரேஸரோ, சாக்லேட் பெட்டியோ, டெரிலின் துணியோ கொண்டு வராதிருப்பதில்லை.

அந்த நன்றி மறவாமல், எந்த நடுராத்திரி வேளையிலும் தயாராய் வைத்திருப்பதுபோல, இன்றைக்குப் பிளாஸ்கைத் திறந்து கொதிக்கக் கொதிக்க டீயை ஊற்றிக் கொடுத்தான் டம்ளரில்.

கட்டிலில் சாய்ந்தபடி அதை உறிஞ்சியவாறு அப்பாடா' என்று களைப்புடன் கண்ணை மூடிக் கொண்டான் சக்கரை.

'உன்னுடைய தத்துவ சாத்திரம் கண்டிராத விஷயமெல்லாம் உலகத்தில் நிலவுகின்றன!' என்று ஹாம்லெட்டில் வரும் வசனம் அவனுக்கு நினைவு வந்தது.

"சார்... அந்த ஸ்டாம்பு..." என்று தலையைச் சொறிந்தான் ராம்ஜி.

"எந்த ஸ்டாம்பு?" என்று ஆச்சரியத்துடன் சுற்று முற்றும் பார்த்தான் சக்கரை.

''நான் ஸ்டாம்புகள் சேர்க்கிறவன் என்று உங்களுக்குத் தெரியாதா சார்?" என்று இளித்தான் ராம்ஜி. 'அந்த பர்மா ஸ்டாம்பையெல்லாம் தூக்கி எறிந்து விடாமல் என் கிட்டேயே கொடுத்து விடுங்கள், சார்."

"எந்தப் பர்மா..." என்று பார்த்த சக்கரை, மேஜை மீது ஒரு காகிதக் கட்டு இருப்பதைக் கவனித்தான். "அட பர்மாவில் ஒரு சினேகிதருக்கு எழுதியிருந்தேன். இவ்வளவு சீக்கிரம் அனுப்பிவிட்டாரே!" என்று ஆர்வத்துடனும் அவசரத்துடனும் காகிதக் கட்டைப் பிரித்து, மேலுறைகளைக் கிழித்தெறிந்தான். எறியப்பட்ட பர்மா தபால் தலைகளைப் பொறுக்கி எடுத்துக்கொண்டு கொள்ளைச் சந்தோஷத்துடன் ஓடி விட்டான் ராம்ஜி.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

தபாலில் வந்திருந்தவை மொத்தமும் ரங்கூனி லிருந்து வெளியான ஆங்கில, தமிழ்த் தினசரிகள், பல வருடங்களுக்கு முந்திய தேதியிட்டவை.

அவற்றை ஒவ்வொரு பக்கமாகப் புரட்டிப் பார்த்து, தன் டயரியில் குறிப்புகள் எடுத்துக் கொள்ளலானான் சக்கரை.

அடுத்த இரண்டு நாளைக்கு இந்த வேலையே அவனுக்குச் சரியாயிருந்தது. ஆகவே, வேதசிகாமணியைப் பின் தொடர்ந்து சென்ற பக்கிரிசாமி ஏன் இன்னும் திரும்பக் காணோம் என்று அவன் ஆச்சரியப்படவுமில்லை. மருமான், என்ன ஆனானோ என்று பிரின்ஸிபால் தர்மு சிவராஜ் கவலைப்பட்டுக் கொண்டிருப்பார்களே என்பதையும் நினைத்துப் பார்க்கவில்லை.

மூன்று நாள் கழித்து அவன் அத்தையின் வீட்டுக்குச் சென்றபோது, சூழ்நிலையில் ஏதோ ஒரு புதிய மாற்றம் ஏற்பட்டிருப்பதைக் கண்டு கொண்டான்.

சிலபேர் எந்தெந்த விஷயங்களிலோ அகட விகட சாமர்த்தியம் கொண்டிருப்பார்கள். ஆனால் ஒரு சின்னஞ் சிறு ரகசியத்தைக் கச்சிதமாக மறைப்பதற்குத் தெரியாது. மகா படிப்பாளியும் கெட்டிக்காரியுமான தர்மு சிவராஜ் இந்த ரகத்தில் சேர்ந்தவள்.

சக்கரை வந்த கொஞ்ச நேரத்துக்கெல்லாமே அவள் கட்டுப்பாடு போடத் தொடங்கினாள். "உன் சாப்பாடு, தூக்கம், நடவடிக்கை எல்லாவற்றையும் இந்த முன்னறையிலேயே வைத்துக்கொள். பின்கட்டுக்குப் போகக் கூடாது," என்று அசட்டுத்தனமாகத் தடை போட்டதும். "ஏன்? பின் கட்டில் யார் குடிவந்திருக்கிறார் கள்?" என்று சக்கரை கேட்டு விட்டான்.

"குடி வந்திருக்கிறார்களா? யார்? யாரு மில்லையே?" என்று அனாவசிய அவசரத்துடன் தர்மு மறுத்ததோடு, போட்டோ ஆல்பத்தில் கோந்து தடவிக்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கொண்டிருந்த சிவராஜையும் பார்த்து விழிகளை உருட்டினாள் — "வாயைத் திறந்தீர்களானால் ஜாக்கிரதை!" என்ற அர்த்தத்தில்.

அம்பிகா இந்த வீட்டில் இருப்பதைப் பற்றி எவருக்கும் தெரிவிக்கக்கூடாது என்று முன்பே டிரைவருக்கும் சமையற்காரி அம்மணியம்மாளுக்கும் வேலைக்காரிக்கும் உத்தரவிட்டிருந்தாள் அவள். வெளியாருக்கு வேண்டுமானால் தெரியாமல் வைத்துக் கொள்ளலாம். வீட்டிலேயே இருப்பவர்களிடம் எப்படி மறைக்க முடியும என்று அவள் யோசித்துப் பார்க்கவில்லை.

சக்கரை, அத்தையின் பேச்சைத் துருவிப் பார்க்க முனைந்தால் அவள் தொட்டாற் சுருங்கியாகி விடுவாள் என்பதை உணர்ந்துகொண்டு, அத்தோடு விட்டு விட்டான். வேறு பேச்சுக்களில் அவள் கவனத்தை ஈடுபடுத்தியவாறே சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்தான்.

செய்தித்தாளில், பம்பாய்ப் பல்கலைக்கழகத் துணை வேந்தரின் பட்டமளிப்பு விழாப் பிரசங்கம் வெளியாகியிருந்தது. "எத்தனை நாளுக்கு அத்தை, நீ வெறும் பிரின்ஸிபாலாக இருக்கப் போகிறாய்? இது போல வைஸ் சான்ஸலர், அது இது என்று வர வேண்டாமா? அதற்கொரு ஐந்தாண்டுத்திட்டம் தயார் பண்ணு," என்றான்.

தர்மு சிரித்தாள். "போதும், போதும். இந்தப் பிரின்ஸிபால் வேலையை ஒழுங்காகச் செய்வதற்குள்ளே பிராணன்..."

சக்கரையின் திடீர்க்குரல் அவள் பேச்சை நிறுத்தியது. "அத்தை, அத்தை! இந்த அநியாயத்தைப் பார்த்தாயா? உன் அருமையான ஸ்லோ பாட்டில் — போன வாரம் வாங்கியது — காலியாகிவிட்டதே அதற்குள்?" என்று கூவினான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"ஆ! அவ்வளவையுமா தீர்த்துவிட்டாள்!" என்று அலறிப் பாய்ந்தோடி வந்து அவன் கையிலிருந்த ஸ்னோ புட்டியைப் பார்த்த தர்மு சிவராஜ், மறுவினாடியே மருமான் தன்னை மடக்கி விட்டானென்பதை உணர்ந்தாள்.

சக்கரை பெரிதாக நகைத்து, முழுக்க முழுக்க ஸ்னோவுடன் இருந்த புட்டியைத் திரும்ப மூடி வைத்தான். "தீர்த்துவிட்டாளா என்று கேட்டாயே, அது யாரை அத்தை? எவள் வந்திருக்கிறாள் இங்கே?" என்றான்.

"நீ ரொம்பப் பொல்லாதவன்," என்று போலிக் கோபத்துடன் குற்றம் சாட்டினாள் தர்மு.

''ஷேக்ஸ்பியர் படைத்த சீஸர் சொல்ல வில்லையா, 'அவன் அளவுக்கு மீறிச் சிந்தனை செய்கிறான். ஆகவே ஆபத்தான பேர்வழி' என்று? அந்த ரகத்தைச் சேர்ந்தவன் நான். என்னிடம் நீ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்," என்று நகைத்தான் சக்கரை.

"இல்லாததால்?"

"வீட்டுக்குள் நுழையும்போதே கண்டு பிடித்து விட்டேன். உனக்கு முல்லைப் பூ பிடிக்கவே பிடிக்காது. மல்லிகைதான் பிடிக்கும். டிரஸ்ஸிங் டேபிள்மீது முல்லைப் பூ இருப்பதைக் கண்டதுமே, இன்னொரு பெண் ஜன்மம் இந்த வீட்டில் புகுந்திருக்கிறது என்று தெரிந்துகொண்டு விட்டேன். சரி, உனக்கு உயிருக்குயிரான இந்த ஸ்னோ மீது பழி போட்டால் அலறுவாய் என்று கணக்கிட்டேன். அதிலும் ஜெயம்! போகட்டும், யார் வந்திருப்பது?"

"அம்பிகா," என்று வேறு வழியில்லாமல் தர்மு ஒப்புக்கொண்டாள.

"அம்பிகாவா?"

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"இரண்டு நாளாக இங்கேதான் இருக்கிறாள், யாருக்கும் தெரியாமல்," என்றாள் தர்மு சிவராஜ். "இதோ கூப்பிடுகிறேன். அம்பிகா! அம்பிகா! ஏ அம்பிகா!"

அம்பிகா வரவுமில்லை. பதில் குரல் கொடுக்கவு மில்லை.

"பின்கட்டு அறையில் இருந்தாளே?" என்று சொல்லிக் கொண்டே உள்ளே விரைந்த தர்முவைப் பின் தொடர்ந்தான் சக்கரை.

அம்பிகா இருக்க வேண்டிய அறை காலியாக இருந்தது.

"அம்பிகா! அம்பிகா!" என்று கூப்பிட்டவண்ணம் தேடினாள்.

வீட்டில் ஒரு பூகம்பமே நிகழ்ந்து கொண்டிருந் தாலும் தன் பாட்டுக்குத் தனது புகைப்பட உலகத்தில் ஆழ்ந்திருப்பது சிவராஜின் வழக்கம். அதேபோல, இத்தனை பேரும் பதறித் துடித்துக்கொண்டு அம்பிகாவைத் தேடுகிறார்களே என்பதைப் பற்றிக் கவலைப்படாமல் தன் 'டார்க் ரூமு'க்குள் நுழைந்தார் — பிலிம் ரோல் ஒன்றைக் கழுவுவதற்காக.

நுழைந்தவர், அடுத்த கணம், 'தர்மு! இங்கே வா! வந்து பார்!' என்று கூவினார்.

சக்கரையும் தர்முவும் விரைந்து வந்து பார்த்த போது, நாற்காலியில், மயங்கித் துவண்டு கிடந்தாள் அம்பிகா

புகைப்பட அறையின் சிவப்புப் பல்பு அவள்மீது கோரமான ரத்த ஒளியைப் பாய்ச்சிக் கொண்டிருந்தது. கண்கள் செருகியிருந்தன.

"ஐயையோ! முன்போல மறுபடியும்..." என்றபடி அவளைத் தொடச் சென்ற தர்முவைச் சட்டெனத் தடுத்து நிறுத்தினான் சக்கரை.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"முன்பு வருகிற மயக்கம்போல் இது தோன்ற வில்லை, அத்தை," என்றான் அவன். அம்பிகாவின் முகத்தைக் கூர்ந்து கவனித்தபடி, "இப்போது அவள் முகத்தில் இருள் அடையவில்லை. பிரகாசம் ஏற்படுகிறது. கண்ணில்கூட ஒருவிதத் தெளிவு தெரிகிறது, பார்..."

எங்கேயோ மணி ஆறு அடித்துக் கொண்டிருந்தது.

26

கண் கொட்டாமல் அம்பிகாவைப் பார்த்துக் கொண்டு நின்றாள் தர்மு சிவராஜ். அவளுக்குப் பின்னாலேயே ஒளிந்தாற்போல் நின்றிருந்த சிவராஜுக்கு, அச்சத்தினால் பேச்சே வரவில்லை. இவ்வளவு பெரிய வீட்டில் இந்தப் பெண்ணுக்கு மயக்கம் போட்டு விழத் தனது 'டார்க் ரூம்' தானா அகப்பட்டது என்று மட்டும் அவருக்குச் சற்றுக் கோபமாயிருந்தது. அதைப் போய் இந்தச் சந்தர்ப்பத்தில் வாய்விட்டுச் சொன்னால், இருட்டறையில் உள்ள கருவிகளையும், புட்டிகளையும், திரவங்களையும், தட்டுக்களையும் கணவனையும் சேர்த்து வெளியே தூக்கி எறிந்து விடுவாள் தர்மு என்று தெரிந்திருந்ததால் வாயை மூடிக் கொண்டிருப்பதைத் தவிர வேறு வழியில்லாதிருந்தது.

கிட்டப் போகாதீர்கள், தொடாதீர்கள் என்றெல்லாம் சக்கரை எச்சரித்ததால் விலகியே நின்றிருந்தாள் தர்மு. இருப்பினும், அம்பிகாவிடம் ஏற்பட்டு வரும் மாறுதல்களை அவளால் காண முடிந்தது. மருமான் சொன்னதுபோல், செருகிய கண்களில்கூட ஒரு தெளிவையும், துடிக்கிற உதடுகளில்கூட ஓர் அமைதியையும் கண்டாள் அவள்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

சக்கரை அம்பிகாவின் உதட்டினருகே குனிந்து, அவள் என்ன பேசுகிறாள் என்பதைப் புரிந்து கொள்ள முயன்றான். ஆனால் முடியவில்லை. சற்று நேரத்தில் ஒரு நீண்ட பெருமூச்சு வெளிப்பட்டது அம்பிகாவின் கண்டத்தி லிருந்து. மறுகணம் அவளுடைய முணு முணுப்பும் முனகலும் ஓய்ந்து விட்டன. ஆழ்ந்த உறக்க வசப்பட்டவள் போல் நாற்காலியின் பின்னே அவள் சிரம் துவண்டு சாய்ந்தது.

"மெதுவாய்ப் பிடி அத்தை," என்ற சக்கரை, தர்முவின் உதவியுடன் நாற்காலியோடேயே அம்பிகாவைத் தூக்கிச் சென்றான் மாடிக்கு. அத்தையின் அறையிலிருந்த வசதியான கட்டிலில் மெல்ல அம்பிகாவைக் கிடத்தி, மின்சார விசிறியைச் சுழலவிட்டான்.

காற்றின் வேகத்தில் சிலுசிலுக்கும் கேசங்கள் அம்பிகாவின் சிவந்த கன்னங்களில் தவழ்ந்து விளையாடு வதை ஒரு விநாடி கவனித்தபோது அவன் உள்ளத்தில் அளவற்ற பரிதாபமும் அன்பும் சுரப்பெடுத்தன.

"நீ சொல்வது உண்மைதான் சக்கரை," என்றாள் தர்மு. "அந்த அடையாறு தோட்டத்திலிருந்து இவள் திரும்பிய பிறகு இன்றைக்குத்தான் பழைய அம்பிகாவைப் பார்க்கிற மாதிரி இருக்கிறது. அவளுடைய கஷ்டங்க ளெல்லாம் விடிந்து விட்டது என்று நினைக்கிறேன்."

"ஹூம்! 'நம் ஆசைதான் நம் எண்ணத்துக்குப் பிதா' என்று ஷேக்ஸ்பியர் சொன்ன மாதிரி, நம் ஆறுதலுக்காக நாமே நல்லதைக் கற்பனை செய்து கொள்கிறோமோ என்னவோ," என்றான் சக்கரை, அம்பிகாவையே பார்த்த வண்ணம். "ஆனால் இவளுக்கு இனி சரியாகிவிடும் என்ற நம்பிக்கையும் எனக்கு ஏற்படுகிறது..."

"அம்பிகாவின் கோளாறு குணமாகிவிட்ட தென்றால் அவள் சித்திக்குத் தெரிவிக்க வேண்டாமா?" என்று பரபரத்தாள் தர்மு.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

சக்கரை வழக்கம்போல் வேண்டாம் என்று அதையும் தடுத்துவிட்டான். "அம்பிகா இங்கே இருப்பதையும் சரி, அவள் நல்லபடி ஆகிவிட்டதாகத் தோன்றுவதையும் சரி, யாரிடமும் சொல்ல வேண்டாம். முக்கியமாக அவள் சித்திக்கு."

"அம்பிகா எழுந்து கொண்டதும்?"

"சூடாக ஏதாவது குடிக்கக்கொடு. வேறு ஒரு வார்த்தையும் பேச வேண்டாம் என்ன நேர்ந்தது என்று அவள் கேட்டால், 'களைப்பாய்ப் படுத்து விட்டாய். அவ்வளவுதான்' என்று சொல்லு. மற்றப்படி பேச்சுக் கொடுக்காதே. நீங்கள் யாரும் பேசுமுன் நான் அவளிடம் பேச வேண்டும்."

சக்கரை உடை மாற்றிக் கொள்வதைக் கவனித்த தர்மு சிவராஜ், "எங்கேயோ வெளியில் புறப்படுகிறாய் போலிருக்கிறதே?" என்றாள்.

"ஆமாம். அம்பிகாவை விட்டுவிட்ட சைத்தான் இன்னொருவரைப் பிடித்துக் கொள்ளும் என்று எனக்கொரு சந்தேகம். அதை ஆராய்ந்து விட்டுத் திரும்புகிறேன். அதனால்தான் அம்பிகாவிடம் பேச்சுக் கொடுப்பதைப் பற்றி அத்தனை தூரம் எச்சரிக்கை செய்தேன். நான் வந்து அவளுடன் பேசிக் கொள்கிறேன்," என்று புறப்பட்டான் சக்கரை.

அவன் தெருவுக்கு வரவும், தபால்காரர் கேட்டுக்குள் நுழையவும் சரியாயிருந்தது. "ஐயாவுக்கு ஒரு கார்டு," என்று கூறிய தபால்காரர் அவன் கையில் ஓர் அஞ்சலட்டையைத் தந்துவிட்டு, மற்றக் கடிதங்களைச் சேர்ப்பிப்பதற்காகப் பங்களாவுக்குள் போனார்.

சக்கரை ஸாருக்கு,

வணக்கம் பல. வேதசிகாமணியின் பின்னால் போகச் சொன்னாலும் சொன்னீங்க. கால்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ஓடிஞ்சு போச்சுது. யாரோ ஃபாலோ பண்ணுகிறாங்க என்று தெரிந்து கொண்டாரோ என்னவோ, கண்டபடியெல்லாம் சுத்தி அலைஞ்சு என்னை அழ வச்சிட்டார். ஆனால் பட்ட பாட்டுக்குக் கடவுள் கூலி கொடுத்து விட்டார். பல ஆச்சர்யமான சங்கதிகள் தெரிந்து கொண்டேன். நேரிலே சொல்றேன்.

பக்கிரிசாமி

கார்டைப் படித்துவிட்டு, ஸ்லாக் பாக்கெட்டில் மடித்து வைத்துக்கொண்டு புன்னகையுடன் நடை போட்டான் சக்கரை. பிறகு ஏதோ நினைவு வந்தது. கார்டை எடுத்துப் பார்த்தான். தபால் முத்திரையை மிகுந்த சிரமத்துடன் ஆராய்ந்தான். இறுதியில் 'சிங்கப்பெருமாள் கோவில்' என்ற ஊர் முத்திரை புலப்பட்டது. உணர்ச்சி களை அடக்கிக் கொள்ளப் பழக்கப்பட்டவனான அவனால்கூட, 'அட!' என்று வாய்விட்டு வியக்காதிருக்க முடியவில்லை.

ஒரு கையில் மதுக் கோப்பை. மறு கையில் திறந்த பேனா.

கலிவரதன், சிவந்த அரைக் கண்ணால் தன் முன்னே ஒவ்வொரு தாளாகப் புரட்டப்படும் செக் புத்தகத்தைப் பார்த்தான். "இன்னும் எத்தனையப்பா கையெழுத்துப் போடுவது?" என்று எரிச்சலுடன் பொன்னடியை நோக்கிக் கையை வீசியபோது, அவன் கண்ணைப் போலவே சிவந்திருந்த மது, செக் புத்தகத்தின் மீது கொட்டி விட்டது.

"போச்சு," என்று பல்லைக் கடித்தபடியே பொன்னடி தன் கைக்குட்டையினால் அந்த ஈரத்தை ஒற்றி யெடுக்க முயன்றான். ஆனால் கையெழுத்துக்கள் பிசிர் பிசிறாக அழிந்ததுதான் மிச்சம்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"அடடா!" வீணாகிவிட்டதே," என்று கலிவாதன் கவலை தெரிவித்தது செக்குக்காக அல்ல. செக் புத்தகங்களின் மீது தேங்கினாற்போல் நின்ற சில மதுத் துளிகளுக்காகத் தான். புத்தகத்தைத் தூக்கி அவைகளைச் சொட்டவிட்டுக் கொண்டான் நாவில். உடனே உற்சாகமும் பிறந்தது போலும். "எதற்காக இத்தனை செக்கிலே கையெழுத்து வாங்கினாய், பொன்னடி? நம்மகிட்டே அவ்வளவு பணம் இருக்கிறதா? எனக்குத் தெரியவே தெரியாதே!" என்றான்.

எரித்து விடுகிற மாதிரி எஜமானனை முறைத்துப் பார்த்த பொன்னடி, "எந்தப் பாங்கிலும் நமக்குப் பணம் கிடையாது, எல்லாம் ஓ.டி.தான்... ஓவர் டிராஃப்ட். இனி மேல் பைசா தர முடியாதென்று சொல்லி விட்டார்கள். இருந்தாலும், எவனாவது ஞாபக மறதியாய்த் தரமாட்டானா என்பதற்காக ஒரே தொகையை ஒவ்வொரு பாங்க் செக்கிலும் போட்டு வைத்திருக்கிறேன்," என்று தெரிவித்தான்.

"ஐந்து பத்து வேண்டுமானால் சொல்லு. எங்கிட்டே இருக்கிறது," எனறு கிறுக்குப் பிடித்தவன் மாதிரி தன் பர்ஸைக் கொட்டிக் கவிழ்த்து, மூன்று பைசா, ஐந்து பைசா நாணயங்களையெல்லாம் எண்ணத் தொடங்கினான் கலிவரதன்.

"அரை லகாரமா, முக்கால் லகாரமா என்ற கணக்கிலே இருக்கிறது நம் கதை," என்று வெறுப்புடன் சிரித்து விட்டு, வேறு செக் புத்தகம் எடுப்பதற்காக மேஜையையும் இரும்பு அலமாரியையும் குடையலானான் பொன்னடி.

துடைப்பமும் கையுமாய் வெளியே நின்று கொண்டிருந்த தாயி, 'ஊம்... எசமானைக் கொலை செஞ்சிட்டுத் தான் நீ போகப் போறே, போ!' என்று தனக்குள் முணு முணுத்துக் கொண்டே தன் குடிசைக்குத் திரும்பினாள்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"என்ன கிழவி, ஒட்டுக் கேட்க வேண்டியதை யெல்லாம் கேட்டாயிற்றா?"

எதிர்பாராமல் எதிர்கொண்டழைத்த குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு நிமிர்ந்தாள் தாயி.

சக்கரைதான் நின்றான் அவள் எதிரில். "அதோ பார், குடிசையில், உன் 'டைகரை' எப்படியோ ஆள் வைத்துக் கிளப்பி மீட்டு வந்து விட்டேன். ஆனால் குற்றுயிரும் குலையுயிருமாய்க் கிடக்கிறது, — பட்டினி யினால்," என்றான்.

"ஆ! எங்கேங்க!" என்று கூவிய வண்ணம் குடிசைக்கு ஓடியவள், வெறும் எலும்புக்கூடாகக் காட்சி தந்த நாயைக் கண்டதும் ஓவென்று அழுது விட்டாள். "என் ராசாவை யாருங்க இப்படிப் பண்ணினது? அவன் கையிலே கொள்ளி வைக்க! என் ராசா! என் செல்லம்!" என்று கட்டிக்கொண்டு புலம்பினாள்.

டைகரின் உயிர், பஞ்சடைந்த கண்களில் துளியத்தனை ஒட்டிக் கொண்டிருந்தது. நிமிர்ந்து பார்க்கவும் திராணியற்று, வாலை இரண்டோர் அங்குலம் அசைத்ததைத் தவிர, வேறு எவ்விதத்திலும் தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்திக் கொள்ள அதற்கு இயலவில்லை.

"பாட்டி, இரண்டு நாள் நல்ல சோறு போடு. பிழைத்துக் கொள்ளும்," என்று தைரியமூட்டினான் சக்கரை. "அது இருக்கட்டும். உளவு வேலை செய்து கொண்டிருந்தாயே, அது எத்தனை நாளாய் நடக்கிறது? அதைச் சொல்."

"ஐயையோ! நான் ஏன் சாமி அந்த வழிக் கெல்லாம் போகிறேன்," என்று மறுத்துப் பார்த்தாள் தாயி.

ஆனால், "நீ சொல்லாவிட்டால் எனக்கு? பொன்னடியைக் கேட்டுத் தெரிந்து கொள்கிறேன். வரட்டுமா? நாயை ஜாக்கிரதையாய்க் கவனித்துக் கொள்,"

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

என்று சக்கரை திரும்பியதும், 'பொன்னடி' என்ற சொல்லைக் கேட்ட மாத்திரத்தில் பதறிப்போன கிழவி, "அவனண்டை சொல்லாதீங்க, சாமி. என்னை உயிரோடு வைக்க மாட்டான்!" என்று கெஞ்சினாள்.

சக்கரை புன்னகையுடன், "சரி, சொல்லு. யாருக்காக இந்த ஒட்டுக் கேட்கிற உத்தியோகம் பார்க்கிறாய்?" என்றான்.

"நாடகம் நடத்தறாருங்களே — சூரி ஐயா — அவருக்காக," என்று கிழவி ஒப்புக் கொண்டாள். "என் எசமானி தேவகியம்மாதான் அம்பிகாவாய்ப் பிறந்திருக்காங்க, அவங்களுடைய நல்லதுக்காக, இங்கே எது நடந்திச்சுன்னாலும் தன்னண்டை வந்து சொல்லும்படி சூரி கேட்டாருங்க..."

சக்கரையின் புருவங்கள் முதலில் நெளிந்தன எனினும், சில நாட்களாக அரித்துக் கொண்டிருந்த கேள்வியொன்றுக்கு விடை கிடைத்த மலர்ச்சியை அவன் முகம் காட்டியது.

"இதற்கு முன்னாலேயே சூரியை உனக்குத் தெரியுமா?" என்று விசாரித்தான்.

"முன்னே ஒரு வாட்டி இங்கே குடக்கூலிக்கு இடம் இருக்குதான்னு கேட்டுக்கிட்டு வந்தாருங்க. அவுட் ஹவுசெல்லாம் பார்த்திட்டுப் போனாரு," என்று தாயி தெரிவித்தாள்.

ஒரு பரிதாப பெருமூச்சுடன் சக்கரை மௌனமாய் நின்றான். நல்லவர்கள் எல்லோரும் நல்ல காரியம்தான் செய்வார்கள் என்பதில்லை. தப்பான விசுவாசத்தினால் தீயவர்களுக்கு உதவி செய்கிறவர்களாயும் இருப்பதுண்டு...

"இனிமேல் அந்தச் சூரிக்கு உதவி செய்யாதே. அவனால்தான் அம்பிகாவுக்கு — உன் எஜமானி தேவகியம்மாளுக்கு என்று வேண்டுமானாலும் வைத்துக்கொள் — ஆபத்து. சும்மா சொல்லவில்லை. இது உனக்குக்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கடுமையான எச்சரிக்கை," என்று சொல்லிவிட்டு, மாடியை நோக்கி நடந்தான்.

ஆனால் நாலு படி ஏறுமுன், தடதடவென்று இறங்கி வந்த பொன்னடியின் மீது மோதிக் கொள்ளும்படி ஆயிற்று.

"ஓ! நீங்களா! நல்ல சமயத்துக்கு வந்தீர்கள், வாருங்கள் மேலே," என்று சக்கரையின் கையைப் பிடித்துக் கொண்டான் அவன்.

சக்கரையின் மனத்தைப் பலவகைக் குழப்பங்கள் பிடித்துக் கொண்டன. கலிவரதன் மயக்கமாகச் சுருண்டு விழுந்து கிடப்பான் என்று அச்சத்துடன் மாடிக்குச் சென்றவனுக்கு ஆச்சரியமும் ஆறுதலும் காத்திருந்தன.

ஏனெனில், கலிவரதன் நல்ல நிலையிலேயே இருந்தான். மதுவின் போதைகூடச் சிறிது மட்டுப் பட்டிருந்தது.

"யார்?" என்று அவன் திரும்பிய பிறகே சக்கரை கவனித்தான் — அந்தக் கண்கள் உயிரற்றுத் துலங்குவதை.

பொன்னடியின் குழப்பம் அதிகரித்தது. "தேவலையா உங்களுக்கு?" என்றான் கலிவரதனை நெருங்கி.

"ஏன், எனக்கென்ன கேடு?" என்று கலிவரதன் சீறி விழுந்தான்.

"சற்று முன் தலையைக் கையால் பிடித்துக் கொண்டு நாற்காலியில் மயக்கமாய் விழுந்து விட்டீர்கள். யாரையாவது உதவிக்கு அழைத்து வரக் கீழே ஓடினேன். சக்கரை தற்செயலாய் வந்தார்..."

"சக்கரை... ஆமாம். சக்கரை," என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான் கலிவரதன்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"இந்த அறைக்குள் அடைபட்டிராமல் காற்றாட வெளியே வந்து உலவுங்கள்," என்று யாரும் கேளாமலே தன் யோசனையை வெளியிட்டான் சக்கரை.

பதிலொன்றும் பேசாமல் மதுப்புட்டியை எடுத்தான் கலிவரதன். சக்கரையினால் என்ன செய்ய முடியும்? 'இறைவனே! இந்த மனிதர்கள் தங்கள் அறிவைத் திருடிக் கொண்டு போவதற்காகத் தாங்களே ஓர் எதிரியை வாய்க்குள் அனுப்பிக் கொள்கிறார்களே!' என்று குடிகாரர்களைப் பற்றி ஷேக்ஸ்பியர் கூறியது அவன் நினைவுக்கு வந்தது.

"வெளியே போகலாம் என்றேன்." என்று மீண்டும் நினைவு படுத்தினான்.

வெறும் பனியன் மட்டுமே அணிந்திருந்த கலிவரதன், ஸ்டாண்டில் கிடந்த ஸ்லாக்கை மாட்டிக் கொண்டான். ஒரு கணம் சக்கரையை வெறித்து நோக்கி விட்டு, "வாருங்கள், எலியட்ஸ் பீச்சுக்குப் போகலாம்," என்றான்.

பொன்னடி திடுக்கிட்டான்," எலியட்ஸ் பீச்சுக்கா?"

"எதிர்த்துப் பேசாதே. காரை எடு," என்று கலிவரதன் கட்டளையிட்டதும், தனக்குத் தானே முணு முணுத்துக் கொண்டவனாய் ஷெட்டுக்குச் சென்றான் பொன்னடி.

சக்கரையின் தோளை அழுத்திக் கொண்டு கீழே இறங்கி வந்த கலிவரதன், "அவனுக்கு இஷ்டமேயில்லை... அயோக்கியன், காரை ஏதாவது கெடுத்து வைப்பான். நீங்கள் போய்ப் பாருங்கள்," என்று சக்கரையை அனுப்பி வைத்தான்.

அவன் சொன்னாற்போலவே, ஸ்டீரிங்கில் ஒரு கையும் சாவியில் ஒரு கையுமாக, பிரமை பிடித்த மாதிரி தான் காரில் உட்கார்ந்திருந்தான் பொன்னடி.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"உங்கள் எஜமான் காத்துக் கொண்டிருக்கிறார்," என்று சக்கரை நினைவூட்டியதும் திடுக்கிட்டவன் காரை ஸ்டார்ட் செய்தான். "ஒன்றுமில்லை... தேவகி இறந்ததற்குப் பிறகு எலியட்ஸ் பீச்சுக்கு இவர் போனதே கிடையாது. மெரினாவுக்குப் போவார், சாந்தோமுக்குப் போவார். எலியட்ஸ் பீச்சைப்பற்றிச் சொன்னால் மட்டும் எரிந்து விழுவார். இன்றைக்கு அவர் மனசுக்குள் யாரோ புகுந்து கொண்டு சொல்கிற மாதிரி இருக்கிறது..."

அந்தக் கடைசி வாக்கியத்தைக் கேட்டதும் சக்கரையின் தேக மொத்தமும் ஒரு மின்சாரச் சிலிர்ப்புப் பரவி அடங்கியது, இனம் தெரியாத பீதியினால். சில வினாடிகளில் சுதாரித்துக் கொண்டு காரின் பின்னே சென்றான்.

"நீங்களும் வாருங்கள்," என்று கலிவரதன் அழைத்தது அவனுடைய தயக்கத்தை — எப்படிக் கலிவரதனுடன் கூடவே இருப்பது என்ற பிரசினையை — தெளிய வைத்தது.

அப்போது இருட்டி விட்டது. ஆனால் ஏழாம் பிறைச் சந்திரனின் நிலவு, கடற்கரையின் மணலில் பால் போல் பாய் விரித்திருந்தது. குளிர்காலமானதால் கூட்டத்தைக் காணோம்.

மூவரும் ஒருவரோடொருவர் பேசிக் கொள்ள வில்லை. காரிலிருந்து வெகு தூரம் போய்விடாமல் சக்கரையும் பொன்னடியும் உட்கார்ந்து கொண்டார்கள். கலிவரதன் தண்ணீர்க் கரை ஓரமாக உலாத்திக் கொண்டிருந்தான்.

"கடைசியில், உங்கள் அம்பிகாவின் பூர்வ ஜன்ம ரகசியத்தை உங்களால் உடைக்க முடியாமலே போய் விட்டது," என்று பொன்னடி இகழ்ச்சியுடன் சிரித்தான்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"காலம் வரும்," என்று மட்டுமே பதிலிறுத்தான் சக்கரை. அவன் பார்வை, தொலைவில் சென்று கொண்டிருந்த கலிவரதனின் மீதே பதிந்திருந்தது.

"காலமா! அது எப்போது வரும்? உங்கள் யூனிவர்ஸிடியில் உங்களுக்கு ஆயுள் முழுதும் லீவு கொடுத்தால் கூட —"

பாதியில் நின்றது பொன்னடியின் பேச்சு. காரணம் —

"நில்லுங்கள்! கலிவரதன்! நில்லுங்கள்!" என்று அலைகளை நோக்கித் தலை தெறிக்கும் வேகத்தில் பாய்ந்தோடினான் சக்கரை.

அந்த நிலவொளியில் பொன்னடியும் கண்டான் — கடலில் கிடுகிடுவென்று இறங்கிக் கொண்டிருக்கும் கலிவரதனை.

"நில்லுங்கள்! போகாதீர்கள்!" என்று அவனும் புயலெனத் தாவினான் அங்கே.

அதற்குள் கலிவரதனின் உடம்பு கழுத்து வரையில் இறங்கிவிட்டது தண்ணீரில். யாரோ தன்னை அழைப்பது போல, அவன் சிரம் வானத்தை நோக்கி உயர்ந்திருக்க, கைகள் அகல விரிந்திருந்தன எவரையோ ஆர்வத்துடன் அணைக்க விரும்பினாற்போல.

"கலிவரதன்! இருங்கள்!" என்று சக்கரை அலைகளில் பாய்ந்து அவன் பின்னாலேயே ஓடினான்.

கலிவரதனின் தலை நீருக்கடியில் மறையவும், சக்கரை அவனைப் பிடிக்கவும் சரியாயிருந்தது. சில நிமிடங்களில் வலுக்கட்டாயமாகக் கலிவரதனைக் கட்டிப் பிடித்து இழுத்தவாறு கரைக்குத் திரும்பினான்.

சற்றுநேரம் வரையிலும் கலிவரதனின் உடல் திமிறிக் கொண்டிருந்தது. இன்னதென்று விளங்காத சொற்களை அவன் உதடுகள் உச்சரித்துக் கொண்டிருந்தன.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அந்த வேளையிலும்கூட இரண்டொருவர் தங்களை நோக்கி வருவதைக் கவனித்தான் சக்கரை. ஆகவே, சொட்டச் சொட்டத் தாங்களிருவரும் நனைந்திருப்பதைக் கூடப் பொருட்படுத்தாமல், காருக்குள் ஏறிக்கொண்டு கலிவரதனையும் தன்னருகில் இருத்திக் கொண்டான்.

அடையாறு பங்களாவுக்குத் திரும்பி, சுடச் சுடக் காப்பி குடித்த பின்னர், கலிவரதன் மெல்ல விழித்துக் கொண்டான் — ஆழ்ந்த உறக்கத்திலிருந்து மீண்டவன் போல.

கண்ணிலிருந்து கண்ணீர் பொழிய. சக்கரையின் இரு கைகளையும் பிடித்துக் கொண்டு, "எனக்குப் பயமாக இருக்கிறது... இங்கேயே இருங்கள்," என்று பரிதாபமாக வேண்டிக் கொண்டான்.

'என்ன ஆதரமற்ற பீதிகள் இந்தப் பலவீனமான மனிதர்களுக்கு!' என்று தன்னுள் சிரித்துக் கொண்டு அங்கே அன்றிரவு தங்க இணங்கினான் சக்கரை.

அவன் அகந்தைக்கு அடி விழுந்தது நள்ளிரவில்.

ஆம். சக்கரை 'அவளை'க் கண்டான் கலிவரதனின் தோட்டத்தில். அவளை அல்ல; அவளுடைய ஆவியை.

யார் அவள்?

27

நள்ளிரவில் அந்த நம்ப முடியாத நிகழ்ச்சியைக் கண்டான் சக்கரை. அதற்கு முன்பே சில விசித்திர அனுபவங்கள் அவனுக்கு ஏற்பட்டிருந்தன.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

எலியட்ஸ் கடற்கரையிலிருந்து கலிவரதனுடனும் பொன்னடியுடனும் சக்கரை அடையாறு பங்களாவுக்குத் திரும்பியபோது மணி ஏழரை இருக்கும்.

கலிவரதன் இரவு சாப்பாடு சாப்பிடுவதில்லை யென்றும் பால் மட்டுமே அருந்துவானென்றும் பொன்னடி கூறினான். அந்தப் பாலும், அவன் கையில் மதுப்புட்டி இல்லாதிருந்தால்தானாம்.

வீட்டுக்குத் திரும்பிய பிறகு சில நிமிடங்களுக்குக் கலிவரதன் களைப்புடன் ஈஸிசேரில் கண்ணை மூடிக் கொண்டு படுத்திருந்தான். சாதாரணமாய் அந்த வேளையில் அவன் போதையாகத்தான் கிடப்பது வழக்கம். இன்று அப்படி இல்லாமல் நல்ல நினைவோடு இருந்ததுடன், களைப்புத் தீர்ந்ததும் மாலையில் வந்திருந்த தினசரிப் பத்திரிகையையும் புரட்டியவாறிருந்தான்.

பொன்னடியும் சக்கரையும் மட்டும் சமைய லறைக்குச் சென்று சாப்பாட்டை முடித்துக் கொண்டனர். சமையல்காரனிடம், "எஜமானருக்கும் பாலைக் கொடு," என்று சக்கரை வாங்கிக் கொண்டான்.

பொன்னடி இகழ்ச்சியாகச் சிரித்துக் கொண்டே, "பால் சிவப்பு நிறமாய், சீமையிலிருந்து புட்டியில் அடைத்து வந்திருந்தால் குடிப்பார்!" என்று கேலி செய்தான்.

"முயற்சி செய்து பார்க்கிறேன்," என்று சக்கரை பதிலளித்ததும், "தாராளமாய்!" என்று கூறிவிட்டுப் பொன்னடி போய்விட்டான். பங்களாவின் பின் கோடியில் ஓர் அறை அவனுக்கு இருந்தது.

'தீர்ப்பளிக்காதே! நாம் எல்லோருமே பாவிகள் தான்' என்ற ஷேக்ஸ்பியரின் அறிவுரையை முணுமுணுத்த படி சக்கரை பாலை எடுத்துக்கொண்டு கலிவரதனிடம் சென்றான்.

"அடடே! நீங்கள் ஏன் சிரமப்படுகிறீர்கள்! சமையல்காரன் இல்லையா?" என்று ஒரு நாளுமில்லாத

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

பண்பாட்டுடன் கலிவரதன் பாலை வாங்கி அருந்தியது சக்கரையை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

அப்போதுதான் இரவு அங்கேயே தங்குமாறு சக்கரையைக் கலிவரதன் கேட்டுக் கொண்டான்.

அவனுடைய கண்களில் அப்போது இருந்த தெளிவையும் உச்சரிப்பில் இருந்த சுத்தத்தையும் கண்ட எவரும் அவன் ஒரு தீராக் குடிகாரன் என்று மறந்துகூடச் சொல்ல மாட்டார்கள். 'என்ன இவனுக்கு ஏற்பட்டது?' என்று சக்கரை குழப்பத்துடன் தானும் படுக்கைக்குச் செல்ல நினைத்த சமயம் —

"சக்கரை! எனக்கு ஓர் ஒத்தாசை செய்வீர்களா?" என்ற கலிவரதனின் குரல் அவனை நிறுத்தியது.

"என்ன செய்ய வேண்டும்?"

கலிவரதன் மெல்ல எழுந்தான் சாய்வு நாற்காலி யிலிருந்து. வகை வகையான மதுப் புட்டிகள் வரிசை வரிசையாக அடுக்கப்பட்டிருந்த அலமாரியை நோக்கி அவன் நடந்ததும், 'சரிதான்! பழைய குருடி கதைதானா!' என்று எண்ணி மனம் நொந்தான் சக்கரை.

ஆனால் கலிவரதன் எந்தப் புட்டியையும் எடுக்க வில்லை. வெளியே ஒரு டீப்பாயின் மீது வைக்கப் பட்டிருந்த அரைப் புட்டியையும் கிளாஸையும் கூட அலமாரிக்குள் எடுத்து வைத்தான். கதவைச் சாத்தினான். பெரிய பூட்டாக ஒன்றை எடுத்துப் பூட்டினான்.

இந்தச் செய்கைகளைக் கண்கொட்டாமல் பார்த்த வாறிருந்த சக்கரையிடம் சாவியைக் கொடுத்து அவனை மேலும் திகைப்படைய வைத்தான்.

"என்ன இது?" என்றான் சக்கரை.

"இன்று ஓர் இரவு மட்டும் போதையில்லாமல் இருக்க வேண்டுமென்று பார்க்கிறேன்," என்றான்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கலிவரதன். "இருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது."

"அதனால்?"

"இந்தச் சாவியை உங்கள் தலையணைக்கடியிலேயே வைத்துக் கொள்ளுங்கள். நான் வந்து கேட்டாலும், கெஞ்சினாலும், மிரட்டினாலும் கொடுக்காதீர்கள்," என்றான் கலிவரதன்.

சக்கரையினால் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. இருந்தாலும் கலிவரதனின் பேச்சில் ஒருவித உறுதியும் ஆவேசமும் தென்பட்டதால், "இந்த ஒரே இரவோடு போவானேன்? நிரந்தரமாக ஒழித்து விடுங்களேன் அந்தப் பழக்கத்தை," என்றான்.

"இந்த இரவை ஜெயித்த பிறகு பார்க்கலாம்," என்றான் கலிவரதன்.

அவனை அவனது படுக்கையறையில் விட்டு விட்டு, பக்கத்திலிருந்த அறையில் நித்திரைக்குச் சென்றான் சக்கரை.

அந்த நீண்ட மாடி வெராந்தாவை எட்டுகிற மாதிரி புளியமரமும் மாமரமும் வளர்ந்திருந்தனவாகையால் ஜன்னல் வழியே அவற்றின் சலசலப்புக் கேட்டுக் கொண்டேயிருந்தது. பாதித் தூக்கமும் பாதி விழிப்புமாகச் சக்கரை தடுமாறுகிற வேளையில், அந்தச் சலசலப்பு, யாரோ அன்னியர்கள் தலைமாட்டில் கிசுகிசுவென்று ரகசியம் பேசுகிற மாதிரி ஒலித்தது.

நேரம் ஓட, ஓட, வானத்தில் நிலாவின் ஒளி இறங்க இறங்க, சக்கரையின் சங்கடம் அதிகரிக்கத் தொடங்கியது. உலகில் எதுவும் காரணமின்றி நடப்பதில்லை. ஆதரவின்றி நிகழ்வதில்லை என்று கல்வியின் மூலம் அறிந்தவனாகையால், தன் மனக் குழப்பத்துக்குக் காரணம் என்னவென்று ஆராய முனைந்தான் அவன். மூடனாயிருப்பதன் சௌகரியம் அதுதான். குருட்டுத்தனமாக நம்பிவிட்டுப்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

போய்விடுவான். தேவையற்ற மன உளைச்சல்கள் கிடையாது. அறிவுக்கும் மூளைக்கும் அசதி கிடையாது. படித்தவனாயிருந்தும், படிப்பினால் அறியமுடியாத சில விஷயங்கள் இப்போது சக்கரையை ஆட்டிப் படைத்தன. தர்க்கத்தினாலும் கணக்கினாலும் தீர்க்கமுடியாத பிரசினைகளில் அவன் உள்ளம் சிக்கிக்கொண்டு, உளையில் அகப்பட்டுக்கொண்ட மாடுபோலத் திணறியது.

தான் படுத்துத் தூங்க முயலும் இந்தக் கட்டிடத்தின் சூழ்நிலைதான் தன்னைப் பாதிக்கிறது என்று சக்கரைக்குத் தெரிந்தது. பயங்கரங்கள் நிறைந்த சூரியின் பங்களாவில், உயிருக்கே ஆபத்தான சூட்டத்தில் அடைபட்டிருந்தபோது கூட இந்தத் திகில் அவனுக்கு ஏற்பட்டதில்லை. இந்தக் கட்டிடம், கொலைகள் நிறைந்தது. சூதினாலும் சூழ்ச்சியினாலும் குடிபோதையினாலும் சவக்களை ஏறிய வீடு இது. இல்லறத்தின் மாண்பையும், நல்ல குடும்பத்தின் அருளையும் இழந்தது இது. கலகலப்பையும் சந்துஷ்டியையும் சிரிப்பையும் வேடிக்கையையும் கண்டு வெகு வருடங்களாகிவிட்ட இந்த இடத்தில் தன் மனம் கலக்கமுறுவது இயல்புதான் என்று சக்கரை தன்னைத் தானே தேற்றிக்கொள்ள முயன்றபோது —

கிழவி தாயியின் குடிசைப் பக்கத்திலிருந்து அந்த மெல்லிய ஒலி கேட்டது.

முதலில் ஏதோவொரு குழந்தை அழுவது போலவும், பிறகு ஷெனாய் வாத்தியத்தின் கீழ்ச் சுருதியைப் போலவும் கேட்ட அந்த நாதம், இறுதியில் டைகரின் ஊளைதான் என்று புலப்பட்டது. ஆத்திரமான குரைப்பாகவோ, வீரிட்ட ஊளையாகவோ அது ஒலிக்கவில்லை. பறிபோன பொருளொன்று அந்த நாயின் பார்வையில் பட்டு, ஆனால் அடைய முடியாத இடத்தில் அது இருந்து, அடையக்கூடிய சக்தியையும் அந்த நாய் இழந்திருந்தால் எப்படிப் பரிதாபமாகக் கெஞ்சுமோ, அந்த மாதிரி இருந்தது டைகரின் தீனமான நீளமான குரல்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

இன்னும் சற்று நேரத்தில் அதன் உயிர் ஒடுங்கப் போகிறதோ என்று சக்கரை நினைத்துக் கொண்டான்.

அதே நிமிடத்தில், அடுத்த அறையின் கதவு மெல்லத் திறந்து கொள்கிற ஓசையும் கேட்டது. கலிவரதன் எழுந்து செல்கிறான் என்று ஊகித்துக்கொண்ட சக்கரை, இருட்டிலும் முட்கள் தெரியும் தன் கைக் கடியாரத்தைப் பார்த்துக் கொண்டான். மணி பதினொன்று ஐம்பதாகி யிருந்தது. இந்த வேளையில் கலிவரதன் எங்கே போகிறான் என்று வியப்படைந்த சக்கரை, அவன் போகவில்லை, தன் அறையை நோக்கி வருகிறான் என்பதையும் காலடி யோசையிலிருந்து கண்டுகொண்டதும் ஆச்சரியம் அதிகப்பட்டவனாக மௌனமடைந்தான்.

ஆழ்ந்த உறக்கத்திலிருப்பதுபோல் பாசாங்கு செய்து கொண்டு அசையாது படுத்திருந்தான் சக்கரை. அறைக்கு வெளியே சற்றுத் தயங்கிநின்ற கலிவரதன், பிறகு ஓசைப்படாமல் உள்ளே வந்தான். கத்தரித்த உருவம் போல அவனுடைய வாட்டசாட்டமான ஆகிருதி, திறந்த கதவின் வழியே வரும் வெளிச்சத்தை அடைத்துக் கொண்டு நின்றது.

"சக்கரை! மிஸ்டர் சக்கரை!" என்று தாழ்ந்த குரலில் அழைத்தான் அவன்.

சக்கரை பதில் தரவில்லை. எழுந்திருக்கவுமில்லை.

அடிமேலடி வைத்து நெருங்கிய கலிவரதன், சக்கரையின் தலையணையின் கீழே கையை நுழைத்ததும் கப்பென்று பிடித்துக்கொண்டான் சக்கரை... "வேண்டாம் நண்பரே, வேண்டாம்," என்றான் கண்டிப்பான குரலில்.

"இல்லை, இல்லை, என்னால் முடியாது. செத்து விடுவேன். இந்த ஒரு தரம் மட்டும், ஒரே ஒரு கிளாஸ்தான். சாவியைக் கொடுங்கள். இதோ திரும்பி விடுகிறேன்," என்றான் கலிவரதன். திடீர் பிடித்த காளை மாடு புஸ்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

புஸ்ஸென்று மூச்சு விடுவதுபோல் அவனுக்கு இரைப்பு எடுத்தது.

"சொல்வதைக் கேளுங்கள்," என்று கலிவரதனின் தோளைப் பிடித்து அவனுடைய அறைக்கு இட்டுச் சென்றான் சக்கரை. "நீங்கள்தானே சொன்னீர்கள்? ஏதோ ஒரு முக்கியமான நோக்கத்துடன் இன்று போதை இல்லாம லிருக்கப்போவதாகச் சொல்லவில்லை? நினைவுபடுத்திப் பாருங்கள்," என்றான்.

குற்றம் செய்த குழந்தையைப் போலத் திருதிரு வென்று விழித்தான் கலிவரதன். "ஆமாம்... இன்று முக்கியம் தான்... வேண்டாம்..." என்றான்.

சக்கரையின் முகம் மலர்ந்தது. "அப்படி வாருங்கள். பகுத்தறிவுக்குக் கட்டுப்பட ஆரம்பித்து விட்டதால் இனி உங்களுக்கு நல்ல காலம்தான்," என்று அவனைப் பாராட்டி விட்டு, தூங்கி விட்டானென்று தோன்றியதும் தன் அறைக்குத் திரும்பிப் போய்ப் படுத்துக் கொண்டான்.

நாயின் ஊளை முன்போல் கேட்கிற மாதிரி இருந்தது. ஊன்றிச் செவிமடுத்தபோது நின்றுவிட்ட மாதிரியும் இருந்தது. மானிடக் கண்ணுக்குப் புலப்படாத ஒன்று டைகரின் கண்ணுக்குத் தெரிந்திருக்குமோ? அல்லது விசுவாசமுள்ள நாயின் வழக்கப்படி, தனக்குப் பிரியமான எவரையோ எண்ணி அது ஏங்கி அழுகிறதோ? 'துயரத்தை வெல்ல எவனாலும் முடியும் — எவனுக்குத் துயரம் இருக்கிறதோ அவனைத் தவிர' என்று ஷேக்ஸ்பியர் கூறியது சரிதான்...

டைகரைப் பற்றிய சிந்தனைகளை ஒதுக்கிவிட்டு, கலிவரதனைப் பற்றி எண்ணலானான் சக்கரை.

ஏன் இந்த இரவை மட்டும் அவன் முக்கியமாய்க் கருதுகிறான்? ஏன் இந்த ஓர் இரவு மட்டும் போதை

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

யில்லாமல் இருக்க வேண்டுமென்று விரும்புகிறான்? எதை அவன் எதிர் பார்க்கிறான்? என்ன நடக்கப் போகிறது?

யோசனை பண்ணியவாறே திரும்பிப் படுத்தவன் தலையணையின் கீழே எதுவும் உறுத்தாததைக் கண்டு அதிர்ச்சியுற்றான். தலையணையை எடுத்துவிட்டுக் கையால் துழாவினான். மெத்தையின் உறையையும் தலையணையின் உறையையும் உதறினான். பிறகு விளக்கைப் போட்டுக் கொண்டு கட்டிலின் கீழும் தேடினான்.

எங்கேயும் காணோம், கலிவரதன் ஒப்படைத்த சாவியை!

திகிலுடன் பக்கத்து அறைக்கு ஓடிச் சென்று கதவைத் திறந்தான். திறக்கும்போதே மதுவின் மணம் காற்றில் தவழ்ந்து வந்தது.

விளக்கைப் போட்டான்.

தன்னைத்தானே ஓங்கி நாலுதரம் தலையில் அடித்துக் கொள்ள வேண்டும் போல் இருந்தது.

கலிவரதன் படுக்கையிலே அலங்கோலமாகக் கிடந்ததே காரணம். உதட்டின் ஓரத்தில் வழிந்திருந்த சிவப்புத் திரவமும், திறந்த அலமாரியும், கவிழ்ந்து கிடந்த மதுக் கிண்ணமும் சக்கரைக்குச் சுட்டிக் காட்டி விட்டன— அவன் மறுபடியும் தோற்றுவிட்டான் என்பதை.

எவ்வளவு முட்டாள்தனமாக ஏமாந்து விட்டோம்! சாவியை எடுக்கக் கலிவரதன் வந்தபோது தடுத்துவிட்டதாக நினைத்திருக்க, அவன் அப்போதே சாவியை எடுத்துக் கொண்டு போயிருக்கிறான்! அதனால் தான் ரொம்ப நல்ல பிள்ளை போலத் தூங்குகிற மாதிரி நடித்தான் போலிருக்கிறது...!

ஒரு பெருமூச்சுடன் தன்னறைக்குத் திரும்பி, பொத்தென்று படுக்கையில் விழுந்தான் சக்கரை.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கலிவரதன் மீண்டும் குடிகாரனாகி விட்டானே என்று அவன் வருந்தவில்லை. அவனைப் போன்றவர்களைக் கடவுளே வந்தால் கூடத் திருத்துவது கடினம் என்று அவனுக்குத் தெரியும். சக்கரையின் வருத்தமெல்லாம், கலிவரதன் ஏதோ ஒரு காரியத்துக்காகப் போதை யில்லாமல் இருக்க வேண்டுமென்று சொன்னானே, அது என்ன காரியமென்று அறிய முடியாமலே போய்விட்டதே என்பதுதான்.

இப்போது மணி பன்னிரண்டரை ஆகி விட்டது. புளிய மரமும் மாமரமும் கூட, எதற்காகவோ மூச்சு விடாமல் காத்திருப்பதுபோல் தோன்றியது. அடுத்த அறையில் நல்ல நிலைமையில் கலிவரதன் படுத்திருக்கிறான் என்று நினைத்தபோது, மனத்துக்கு ஓரளவேனும் தைரியமா யிருந்தது. இப்போது அந்தத் தைரியத்துக்கும் இடமில்லாத தால், தனியாக இருக்கிறோம் என்ற திகிலுணர்ச்சி நிமிடத்துக்கு நிமிடம் மனத்தினுள் வளர்ந்தது.

ஓய்ந்து போய்விட்டது என்று அவன் நினைத்திருந்த டைகர், கடைசி முறை இதுதான் என்பது போல மெல்லத் தன் தீனக் குரலைக் கிளப்பியது.

மனப் பிராந்தியில் சக்கரை மயங்கியிருந்தபோது, திடீரென்று தோட்டத்தில் ஓர் உருவம் தென்படுகிற மாதிரி இருந்தது. எங்கே வந்தார்கள், யார் வந்தார்கள் என்று அந்த வினாடியில் சக்கரையைக் கேட்டிருந்தால் அவனால் சொல்லியிருக்க முடியாது. ஏனெனில், அவனுடைய அறிவுக்கும் இருதயத்துக்கும்தான் அப்படியொன்று தெரிந்ததே தவிர, புறப் புலன்களால் அவன் முதலில் காணவில்லை. ஆனால் சற்றைக்கெல்லாம் —

அந்தப் பின் நிலை வெளிச்சத்தில், வெள்ளை வெளேரென்ற ஒரு பெண்ணின் உருவத்தை அவன் பார்த்தான். அந்த வெளுப்பு அதன் தேகத்திலிருந்து வருவதா, உடையிலிருந்து வருவதா என்று அவனால் அறிய முடியவில்லை. ஆனால் அந்த வேளைக்கும் அந்த

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

வெளுப்புக்கும் ஒரு மாயமான பந்தம் இருப்பதுபோல் தோன்றியது. அது அசையவுமில்லை; பேசவுமில்லை. அது நின்றிருந்த இடத்துக்குச் சில அடி தூரத்தில் அவுட்ஹவுஸ் இருந்தது. அதற்குள் நுழைந்துவிட்டு வெளியே வருகிறதா, அல்லது நுழைவதற்காகத் தருணம் பார்க்கிறதா என்பது தெரியவில்லை.

இவ்வளவையும் தன் கட்டிலில் உட்கார்ந்தவாறே, திறந்திருந்த கதவு வழியாகக் கண்டான் சக்கரை. ஓரிரு நிமிடங்களுக்கு உடம்புக்குள் ரத்தம் உறைந்து கட்டி தட்டி விட்டாற் போலாயிற்று. வலுக்கட்டாயமாக உடம்பை முறுக்கிக்கொண்டு சக்கரை எழுந்தான். வெளி வராந்தாவின் கைப்பிடிச் சுவரை நோக்கிப் பாய்ந்தான்.

அதே சமயம் இரண்டு நிகழ்ச்சிகள் நேர்ந்தன.

ஒன்று: தடதடவென்று கீழ் வீட்டில் யாரோ ஓடுகிற ஓசை கேட்டது. அந்த ஓசையைக் கேட்டோ கேட்காமலோ தாயியின் குடிசையிலிருந்து டைகரின் ஓலம் பெரிதுபட்டது.

இரண்டு: தோட்டத்தில் அசையாது தென்பட்ட அந்த வெள்ளை உருவம், சக்கரை தன் கட்டிலிலிருந்து வெராந்தாவை அடைந்த நேரத்துக்குள் மாயமாய் மறைந்து விட்டது.

மாடியில் இனி ஒரு கணம் நிற்பதுகூட அபாயமான துணிச்சலென்று சக்கரைக்குப் பட்டதால், அவனும் கீழே இறங்கி ஓடினான். அப்படி ஓடும்போதே, கலிவரதன் முன் போலவே தன் கட்டிலில் கிடப்பதைக் கண்ணில் வாங்கிக் கொண்டான்.

மாடிப்படியில் அவன் இறங்கிக் கொண்டிருந்த போதே, அவன் அடி வயிற்றைக் கலக்கும்படியான ஓர் அலறலும் கேட்டது. அது டைகரின் அலறல்தான் — வெகு நேரமாகப் பயமுறுத்திக் கொண்டிருந்த கடைசி ஊளை.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

சக்கரை மாடிப்படியிலே உட்கார்ந்து விட்டான். தன்னை நிதானப்படுத்திக் கொள்ளாமல் தோட்டத்துக்குச் சென்றால், காணக்கூடாத ஒன்றைக் காண நேரிடும் என்ற அச்சம் அவனை ஆட்கொண்டிருந்தது. மூளை சிதறி, ரத்தம் நாலு புறமும் தெறித்தோடுகிற மாதிரி ஒரு கொடிய கற்பனை அவன் கால்களைக் கட்டி விட்டது.

சற்றுப் பொறுத்து, மூச்சு இரைப்பது அடங்கியதும், அறிவு நிதானத்துக்கு வந்ததும் அவன் வெளியே சென்று பார்த்தான்.

அவனுடைய கற்பனை கற்பனையல்ல. டைகர் மண்டை சிதறி, ரத்தம் பெருக்கெடுத்தோட இறந்து கிடந்தது. "ஐயோ சாமி! வாயில்லாச் சீவன்! இதைப் போய் அடிச்சுக் கொல்லுவாங்களா?" என்று அதனருகே விழுந்து பிரலாபித்துக் கொண்டிருந்தாள் கிழவி தாயி.

"உன்னை அடித்துக் கொல்லாமல் விட்டேனே, அதற்குச் சந்தோஷப்படு," என்று சினத்துடன் உறுமியபடி தன் கையிலிருந்த குண்டாந்தடியைத் தூர எறிந்துவிட்டு, ரத்தக் களரியான கையைத் தொடையில் துடைத்துக் கொண்டான் பொன்னடி.

அந்தக் காட்சியைக் கண்டு சக்கரைக்கு வயிற்றைக் குமட்டியது. குடல் மொத்தமும் சுருண்டு தொண்டையில், வந்து அடைத்துக் கொண்டாற் போன்ற அருவருப்பு ஏற்பட்டது.

வாஷ்பேசனில் வாயைக் கொப்பளித்தால்தான் அந்த வாந்தியுணர்வு நிற்குமென எண்ணிய சக்கரை, தள்ளாடித் தள்ளாடி மாடிப்படி ஏறினான்.

கலிவரதனின் அறை திறந்தே கிடந்தது. தோட்டம் வெறிச்சோடியபடி இருந்தது.

ஐந்து நிமிடங்களுக்கு முன்பு நிகழ்ந்தனவெல்லாம் கற்பனைப் பிரேமைதானோ என்று எண்ணும்படி மிக அமைதியாக இருந்தது அந்தச் சூழ்நிலை.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கலிவரதனின் அறையைத் தாண்டும்போதுதான் சக்கரை கவனித்தான் அந்தத் தபால் உறையை. கலிவரதனுடைய சட்டைப் பையிலிருந்து நழுவி விழுந்த மாதிரி அவனுடைய படுக்கையில் மார்புக்கருகே அது கிடந்தது. உறையில் வாய் உடைக்கப்பட்டிருந்ததால், கடிதத்தைப் படித்து விட்டுத்தான் அதைக் கலிவரதன் வைத்துக் கொண்டிருக்க வேண்டும்.

உறையிலிருந்து கடிதத்தை வெளியிலெடுத்துப் பார்த்தான் சக்கரை.

"கலிவரதனுக்கு,

உமது பணக் கஷ்டங்கள் தீர வேண்டுமானால், 28-ம் தேதி நள்ளிரவு, அவுட்ஹவுஸின் அருகே வந்து நிற்கவும்."

சுவரில் மாட்டியிருந்த காலண்டரைப் பார்த்தான் சக்கரை. அன்றுதான் தேதி 28.

கடிதத்தின் கீழே கையொப்பம் காணப்பட வில்லை. அந்த எழுத்துக்கள் எந்த மனிதக்கையாலும் எழுதப்பட்டது போல் தோன்றவில்லை.

28

நள்ளிரவில் தோட்டத்திற்கு வரும்படி கலிவரத னுக்கு எழுதியவர் யார்? அப்படி எழுதியது நல்ல நோக்கத் துடனா, கெட்ட எண்ணத்துடனா?

சக்கரையினால் ஊகிக்க முடியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயமாய்த் தெரிந்தது. இந்தக் கடிதம் எழுதியவரைச் சந்திப்பதற்காகத்தான் கலிவரதன் போதை யில்லாமல் இருக்க விரும்பினான். அப்படியானால்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ஓரளவுக்கு இந்தக் கடிதம் உண்மையென்று அவன் நம்பியிருக்க வேண்டும். இதை எழுதியவர் யாராயிருக்கக்கூடும் என்பதையும் ஊகித்திருக்க வேண்டும்.

கடிதத்தைத் திரும்பத் திரும்பப் பார்த்தான் சக்கரை. அந்த எழுத்துக்கள், படிப்பறிவு இல்லாத குழந்தையொன்று கிறுக்கிய மாதிரி குண்டு குண்டாகவும், வரிகள் கோணலாயும் இருந்தன. வரிகளுக்கிடையே ஏதோ ஓர் அமானுஷ்யமான தன்மை சக்கரைக்குப் புலப்பட்டது. இன்னதென்று சொல்ல முடியாத ஒரு பரிதாபமும் ஏக்கமும் அதில் இருப்பது போல் தோன்றின. கலிவரதனுக்காகக் கண்ணீர் சிந்துகின்ற ஆன்மாவும் இருக்க முடியுமா என்று ஆச்சரியப்பட்டான் சக்கரை.

யாரையோ திட்டிக்கொண்டு மாடிப்படிகளில் பொன்னடி ஏறி வரும் ஓசை கேட்டது.

திடீரென்று சக்கரைக்கு ஒரு சந்தேகம் எழுந்தது. கலிவரதனுக்குக் கடிதம் எழுதியது பொன்னடியாகவே இருக்குமோ? இருவருக்குமிடையே நட்பு நிலவவில்லை என்பது உண்மையே. கலிவரதனுக்கு உதவி செய்யும் எண்ணம் பொன்னடிக்கு இருக்குமென்று எவரும் சொல்ல மாட்டார்கள். ஆனால் குத்துப்பழி வெட்டுப் பழியான பகைமை எங்கே நிலவுகிறதோ, அங்கே மனத்தின் ஆழத்தில் பரஸ்பர அன்புதான் இருக்கிறதென்று மனத் தத்துவ சாத்திரம் சொல்வது சக்கரைக்குத் தெரியாதா? வெறுப்புக்கு அடிப்படையும் அன்புதான் என்ற தத்துவப்படி பார்த்தால், பொன்னடியே கூட எழுதியிருக்க முடியும்...

கடிதத்தைத் தன் ஈட்டைப் பையில் மறைத்துக் கொண்டான் சக்கரை.

"சரியான சிவராத்திரி இன்றைக்கு!" என்று முணுமுணுத்துக்கொண்டே வந்த பொன்னடி, சக்கரையைக் கண்டதும், "இந்த நரகத்தில் நீங்கள் ஏன் தங்கினீர்கள்?

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

பேய்களும பிசாசுகளும் குடியிருக்கின்ற வீடு இது!" என்று வெறுப்புடன் சொன்னான்.

"பேய் பிசாசுகள் இல்லாத இடம்தான் எனக்கு நரகம்" என்று சிரித்தான் சக்கரை. "இன்றைக்கு நான் இங்கே இருந்திராவிட்டால் இதோ இந்த மனிதர் வெளியே போயிருந்திருப்பார். பேயிடமோ பிசாசிடமோ சிக்கிக் கொண்டிருப்பார்," என்று கலிவரதனைச் சுட்டிக் காட்டினான்.

"அந்த மொட்டைக் கடிதத்தைக் கொண்டு சொல்கிறீர்களா?" என்று பொன்னடி உடனே கேட்டான்.

சக்கரை திகைத்தான். "உனக்குத் தெரியுமா அது?"

"கடிதத்தை முதலில் வாங்கியவன் நான்தான். பார்த்தவனும் நான்தான். கலிவரதனிடம் கொடுத்தவனும் நான்தான்."

திகைப்பு அதிகரித்த சக்கரை, "யார் கொண்டு வந்தது அந்தக் கடிதத்தை?" என்று கேட்டான்.

"கொடுத்தவர் கொஞ்ச நேரம் முன்புதான் கபால மோட்சம் அடைந்தார்!" என்று குரூரமாக இளித்தான் பொன்னடி.

"டைகர்! டைகரா?"

"அந்த நாயேதான். வாயிலே கவ்வி எடுத்து வந்தது நேற்றுப் பகல்," என்று பொன்னடி தெரிவித்தான். "அதனிடம் எனக்கு ரொம்பக் காலமாகவே அவநம்பிக்கை. இந்த வீட்டில் நடக்கிற விபத்துக்கெல்லாம் அதுதான் காரணம். அது நாயில்லை. குட்டிச்சாத்தான்."

சக்கரை கேலியாக, "நீ சொல்வதைப் பார்த்தால், டைகரே அந்தக் கடிதத்தை எழுதிக் கொண்டு வந்திருக்கும் என்று சொல்வாய் போலிருக்கிறதே!" என்றான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"அப்படியும் இருந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை. இப்போதுதான் என்னென்ன நம்ப முடியாத விஷயங்களெல்லாமோ நடைபெறுகிறதே!" என்றான் பொன்னடி. "கடிதத்தைக் கலிவரதனிடம் கொடுத்தேன். ஆனால் இன்று நீங்கள் விழித்துக் கொண்டிராவிட்டாலும் நான் விழித்திருப்பது என்று தீர்மானித்திருந்தேன். எப்படியும் அவரை வெளியே போக விடாமல் தடுக்க வேண்டுமென்று காத்திருந்தேன். அந்த நாய் இடை விடாமல் ஊளையிட்டு, அவரை வெளியே இழுக்கப் பார்த்ததுதான் உங்களுக்குத் தெரியுமே? அது பொறுக்க மாட்டாமல்தான் அதை ஒழித்துத் தொலைத்தேன்."

தோட்டத்தில் தான் கண்ட உருவத்தைப் பொன்னடி பார்த்திருப்பானா என்று யோசித்தான் சக்கரை. அவன் பேச்சிலிருந்து பார்த்திருப்பானென்று தோன்றவில்லை. நாமே அதைச் சொல்ல வேண்டாம் என்று பேசாதிருந்தான்.

சுரணையில்லாமல் அலங்கோலமாகக் கிடக்கும் கலிவரதனைப் படுக்கையில் சரியாகக் கிடத்திவிட்டு, வெளி வராந்தாவுக்கு வந்து நின்றான் சக்கரை.

மயான பூமி போல இனம் புரியாத, திகில் நிறைந்த சூழ்நிலை தோட்டத்தில் நிறைந்திருந்தது. வெளிச்சம் முன்னைக் காட்டிலும் குறைந்திருந்தது. விடி காலையில் வரக்கூடிய குளிரும் இருளும் ஒவ்வொரு மரம் செடி கொடியையும் பற்றிக் கொண்டிருந்தன.

இறந்துவிட்ட நாயைக் கிழவி தாயி இழுத்துச் சென்று ஒரு மூலையில் புதைப்பதையும், அது செத்து விழுந்த இடத்தைச் சுத்தம் செய்வதையும் சக்கரையின் கூரிய கண்கள் கவனித்தன.

பின்னாலேயே வந்து நின்ற பொன்னடியிடம், "ஆகக்கூடி நீயும் இந்த மாதிரி பகுத்தறிவுக்கு மீறிய

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

விஷயங்களில் நம்பிக்கை வைக்கத் தொடங்கி விட்டாய்?" என்றான்.

"வேறு வழி?"

"கலிவரதன் யாரைச் சந்தித்திருப்பான்? கடிதம் எழுதியது யார்? அதை அறிந்து கொள்ளும் ஆவல் ஏற்பட வில்லையா உனக்கு?"

"ஏன் ஏற்படாமல்? ஏற்பட்டது. ஆனால் ஆவலைக் காட்டிலும் பயம் அதிகமாயிருந்தது. அந்தப் பிசாசு நாய் என்னை எந்தப் பயங்கரத்தில் கொண்டு போய் விடுமோ என்று பேசாமலிருந்து விட்டேன்."

எந்தப் படுகொலைக்கும் அஞ்சாத பொன்னடி யிடமிருந்து இப்படிப்பட்ட பேச்சைக் கேட்பது வேடிக்கையாயிருந்தது சக்கரைக்கு. 'பாவம், பொன்னடி, பரிமாணமும் நிறமும் திண்மையுமுள்ள எதிரியாயிருந்தால் மீசையை முறுக்குவான். உருவமில்லாத வெறும் நிழல் போன்ற பகைவனிடம் அரண்டு போவதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்?' என்று எண்ணிக் கொண்டான். "சரி, உனக்குப் பயமாயிருந்தால் நுழைய வேண்டாம். ஆனால், நான் சும்மா இருப்பதற்கில்லை. இந்தக் கதையின் உள்ளும் புறமும் அலசிவிட வேண்டு மென்று நான் வந்திருக்கிறேன். கடைசி வரையில் பார்க்கத் தான் போகிறேன்," என்றான்.

"என்ன செய்யப் போகிறீர்கள்?"

"கலிவரதனிடம் கடிதத்தைக் கொடுத்தபோது என்ன சொன்னார்?" என்று சக்கரை திருப்பிக் கேட்டான்.

"ஒன்றும் சொல்லவில்லை. நானும் பிரித்தது தெரியாமல் கொடுத்தேனே தவிர, கடிதத்தைப் படித்த மாதிரி காட்டிக் கொள்ளவில்லை."

"ஒருமுறை கோட்டை விட்டுவிட்டேன். இரண்டாம் தரமும் விட்டேனானால் என்னைக்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

காட்டிலும் மடையன் கிடையாது" என்று சூளுரைத்தவாறு கலிவரதனின் அறையை நோக்கி நடந்த சக்கரை இன்னும் போதையிலே கிடக்கும் அந்தப் பரிதாபகரமான குடிகாரனைப் பார்த்தபடி நின்றான். பின்னர், அலமாரியின் கீழே கிடந்த பூட்டையும் சாவியையும் எடுத்தான். வெளியிலிருந்து மதுப் புட்டிகள் அனைத்தையும் ஒன்று விடாமல் அலமாரிக்குள் வைத்துப் பூட்டினான். சாவியை தன் பாண்ட் பைக்குள்ளேயே வைத்துக் கொண்டான்.

"நீ போய்க் கொஞ்ச நேரமாவது தூங்கு. எனக்கு இங்கேதான் காவல்," என்று பொன்னடியிடம் கூறிவிட்டு, கட்டிலின் பின்புறமிருந்த ஸ்டீல் சாய்வு நாற்காலியைப் பிரித்துப் போட்டுக்கொண்டு சாய்ந்தான்.

பொன்னடி போய்விடவில்லை. "இங்கே இருப்பதனால் என்ன சாதிக்கப் போகிறீர்கள்?"

"என் அறைக்குப் போனதனால் சற்று முன் எதைக் கோட்டை விட்டேனோ அதைப் பிடிக்கப் போகிறேன்," என்று சக்கரை பதிலளித்தான். "அந்தோ! நேற்றைய தினத்தைத் திரும்ப அழை! காலத்தைக் கூப்பிடு!' என்ற ஷேக்ஸ்பியரின் வாசகம் நினைவுக்கு வர, "இந்த உறக்கத்திலிருந்து எழுந்து கொண்டதும் கலிவரதன், அடுத்த பாட்டிலுக்குத் துழாவுவானல்லவா? அது அவன் கைக்கு அகப்படாமலே பண்ண வேண்டுமென்று தீர்மானம்."

"அதாவது?"

"அதாவது, யாரை அவன் சந்திப்பதாக இருந்தான் என்கிற விவரத்தை அவன் வாய் வழியாகவே தெரிந்து கொள்ள வேண்டுமென்றால், இன்னொரு தரம் அவன் குடி போதையில் இறங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். கொஞ்சம் கொஞ்சமாகப் பேசிப் பேசி அவன் மனசிலிருப்பதை வெளிப்படுத்த வேண்டும்."

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"உங்களை அடித்துக் கொன்று போட்டாவது புட்டியைப் பறித்து விடுவார்," என்றான் பொன்னடி.

"அதையும் பார்த்துவிடலாமே!" என்று சிரித்தான் சக்கரை.

திரும்ப எட்டு மணி சுமாருக்குப் பொன்னடி சக்கரையிடம் வந்தபோது, விழித்தவாறே இருந்தான் அந்த மனத் தத்துவ நிபுணன். மூளையில் வலுவாயிருப்பவர்கள் உடம்பளவில் நோஞ்சானாயிருப்பதைத்தான் பொன்னடி கண்டிருக்கிறான். ஆகவே விடிய விடிய விழித்திருந்தும் சற்றும் களைப்பில்லாதவனாகச் சக்கரை காட்சி தந்தது அவனுக்கு ஆச்சரியமூட்டிற்று.

அப்போதுதான் கலிவரதனும் கண் விழித்து, சோம்பல் முறித்துக் கொண்டிருந்தான். வழக்கம்போல அவன் கரங்கள், கட்டிலுக்கருகிலிருந்த அழகு முக்காலியைத் தடவின, மதுக் கிண்ணத்துக்காக. சக்கரை மெல்ல எழுந்து சென்று, "வாருங்கள், நண்பரே, பலகாரம் சாப்பிடத்தான் உங்களுக்காகக் காத்திருக்கிறேன்," என்று கூறிக் கலிவரதனின் கையைப் பற்றிக் குளியலறைக்கு அழைத்துச் சென்றான். இன்னும் கனவில் நடப்பவனைப் போலவே தடுமாறிய கலிவரதனுக்கு, பற்பசை, பிரஷ் முதலியன எடுத்துத் தந்து, முகம் கழுவிக்கொள்ளச் செய்தான். இதற்கிடையில் பொன்னடிக்கும் ஜாடை காட்டி, மாடிக்கே காலைச் சிற்றுண்டிகள் வரும்படி செய்தான்.

மணக்க மணக்க மிளகாய்ப் பொடி நெய்யுடன் வெள்ளித் தட்டுகளில் இட்டிலி வந்து சேர்ந்தபோது ஓரளவு கலிவரதனுக்குச் சுய நினைவு ஏற்பட்டிருந்தது.

செய்தித் தாளைப் புரட்டியபடி, சிற்றுண்டியை யும் அருந்திக்கொண்டே இருவருடனும் உரையாட லானான் கலிவாதன். அரசியலிலும் பொருளாதாரத்திலும் அவனுக்கென்று சில தனிக் கருத்துக்கள் இருந்ததை அறிந்து

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

சக்கரை வியப்புற்றான். ஒரு படிப்பாளி, அறிவுள்ளவன், சகவாச தோஷத்தினாலும் மதுப் பழக்கத்தினாலும் குட்டிச் சுவராகிறானே என்று எண்ணுகையில், வேறெதற்காக இல்லாவிட்டாலும் இவனைக் கடைத்தேற்றுவதற்காக வேனும் கடைசி மூச்சுவரை போராடிவிட வேண்டும் என்ற உறுதி பிறந்தது.

சிற்றுண்டி முடிந்ததும் பேசிக்கொண்டே எழுந்த கலிவரதன், மது அலமாரியண்டை சென்றான். கனத்த பூட்டுகளை அங்கே கண்டதும் அவன் முகம் இருண்டது. படுக்கையிலும் மேஜையிலும் சாவியைத் தேடினான். பிறகு சக்கரையிடம், "விளையாடாதீர்கள்" என்றான் கடுமையாக.

"நான் விளையாடவில்லை. நீங்கள்தான் விளையாடுகிறீர்கள் — உங்கள் உயிருடனும் அறிவுடனும்!" என்று பதில் தந்தான் சக்கரை.

என்ன செய்தாலும் அவனிடம் தன் ஜம்பம் சாயாது என்று உணர்ந்து கொண்டதும் கலிவரதனின் ஆத்திரம் கட்டு மீறியது. கையாலேயே பூட்டை உடைத்து விட வேண்டுமென்ற வெறியுடன் அதைப் பலமாக ஆட்டிப் பார்த்தான். மண் கூஜாவுக்கருகே தண்ணீருக்காக வைக்கப் பட்டிருந்த கண்ணாடி டம்ளரைச் சுவரில் மோதியடித்துச் சுக்கு நூறாக்கினான். அதன் பின்னரே அவன் ஆவேசம் சிறிது சிறிதாகத் தளர்ந்தது. அவனுடைய முகத்தில் இளக்கமும் மனிதத் தன்மையும் கொஞ்சம் கொஞ்சமாகத் திரும்பின. சிறு குழந்தைபோல முகத்தைக் கைவிரலால் பொத்திக் கொண்டு விக்கி விக்கி அழுதான்.

சக்கரை இவ்வளவையும் பார்த்துக் கொண்டிருந் தானே தவிர, கலிவரதனைத் தடுக்கவோ தேற்றவோ இல்லை. பொன்னடியையும் பேசாமலிருக்கும்படி சொல்லி விட்டான்.

அவன் எதிர்பார்த்தபடியே சற்றைக்கெல்லாம் கலிவரதன் சரியாகி விட்டான். சப்பணம் கட்டின மாதிரி

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கட்டிலில் உட்கார்ந்து கொண்டு, சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான். அவன் எண்ணங்களை வேறு வழிகளில் திருப்ப வேண்டுமென்பதற்காக, "இவ்வளவு காலி மனையை வைத்துக்கொண்டு நீங்கள் ஏன் சும்மா இருக்கிறீர்கள்? இந்தப் பக்கத்தில் கிரவுண்ட் இருபதாயிரம் ரூபாய் விற்கிறதாமே? கச்சிதமாய் சர்வே பண்ணி தேவை யில்லாததை விற்று விடலாம். இருபது கிரவுண்டுக்கு மேலேயே இருக்கும் போலிருக்கிறதே!" என்றான்.

விரக்தியாகச் சிரித்தான் கலிவரதன். "முப்பது கிரவுண்ட் இருக்கிறது. ஆனால் அத்தனையும் அடமானம். நிலத்தை விற்றுக் கடனையும் வட்டியையும் அடைத்தால் கையில் ஐயாயிரம் தேறுவது பெரிது."

"பேசாமல் இன்னும் கொஞ்சம் பணம் புரட்டி, இருபது முப்பது சின்ன வீடுகளாகக் கட்டி விடுங்கள். லாபத்துக்குப் போகும்," என்றான் சக்கரை.

"அது வேண்டுமானால் செய்யலாம்," என்ற கலிவரதன், தன் லெட்டர் ஹெட் காகிதத்தையும் பென்ஸிலையும் எடுத்து வைத்துக்கொண்டான் மடிமீது. "ஒன்றரை ஒன்றரை கிரவுண்டாக மொத்தம் இருபது வீடுகளுக்குப் பிளான் போடலாம்... செலவு என்ன ஆகிறது?"

சக்கரை, அவனுடைய சிந்தனையைத் திருப்பிக் கொண்டிருக்கிறோம் என்ற திருப்தியுடன், தனக்குத் தெரிந்த வரையில் 'எஸ்டிமேட்'டுகளைச் சொல்லலானான். பொன்னடியும் அவ்வப்போது சில தகவல்களைக் கொடுத்தான். கலிவரதன் அவர்கள் பேச்சைக் கேட்டவாறே தன் காகிதத்தில் எழுதிக் கொண்டிருந்தான். தானாக எதுவும் சொல்லவில்லை. பின்னர் காகிதத்தையும் பென்ஸிலையும் கட்டில் மீது வைத்து விட்டு அறையில் குறுக்கும் நெடுக்குமாக உலாவினான். வெளிவராந்தாவிலும் சிறிது நடந்தவன், மொட்டை மாடிக்குச் செல்லும் மரப் படிகளில் ஏறிச் சென்றான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"தனியாய் எங்கேயோ போகிறாரே!" என்று பொன்னடிதான் பதறினானேயொழிய, சக்கரை புன்னகை பூத்தான். "மது உள்ளே போகாததால் மதி வெளியே போகவில்லை. ஒன்றும் ஆகாது. பயப்படாதே," என்றவன், தற்செயலாகக் கலிவரதன் எழுதிய காகிதத்தைக் கவனித்தான். ஏதோ அதிர்ச்சியுற்றவன் போல் பாய்ந்து சென்று, காகிதத்தைக் கையில் எடுத்தவன், "ஐயோ" என்று கூவியபடி மொட்டை மாடிக்கு ஓடினான்.

கீழே விழுந்த காகிதத்தைப் பொன்னடியும் எடுத்துப் பார்த்தான்.

பென்ஸிலினால் அந்தக் காகிதம் பூராவும் ஒன்றின் மேலொன்றாக, இம்மியும் இடமின்றிக் கிறுக்கப்பட்டிருந்தது இதுதான்:

குதி, குதி, குதி, குதித்துவிடு, குதி, குதித்துவிடு, குதி...

பொன்னடியும் ஒரே தாவலில் மேல்மாடிக்குச் சென்றான் சக்கரையின் பின்னே.

மின்வெட்டும் நேரம்தான்.

கைப்பிடிச் சுவரின் மீது ஏறி நின்று கொண்டிருந்த கலிவரதனை — கையை ஆகாயத்துக்கு உயர்த்தியவாறு கீழே குதிக்கத் தயாரான நிலையில் இருந்த கலிவரதனை — புலிப் பாய்ச்சலாகப் பாய்ந்து தடுத்து இழுத்து விட்டார்கள் இருவருமாய்.

"என்னை விடு... விடு..." என்று சில நிமிடங்கள் திமிறினான் கலிவரதன். ஆனால் இரண்டு பேரின் முரட்டுத் தனத்தின் முன்னே அவனால் எதுவும் செய்ய முடியவில்லை. ஆட்டுக் குட்டிபோல அவர்களுடைய பாதுகாப்பில் திரும்பினான்.

பழையபடி கட்டிலில் அவனை உட்கார்த்தி வைத்து, "பொன்னடி! இவரைப் பிடித்துக்கொள்!"

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

என்றான் சக்கரை. அவன் பிடித்துக் கொண்டதும், கிடு கிடுவென்று அலமாரியைத் திறந்தான். புட்டியிலிருந்து கிண்ணத்தில் மதுவை ஊற்றி, கலிவரதனின் முன்னே வைத்து, "குடியுங்கள்! குடியுங்கள்!" என்றான்.

கலிவரதனின் கண்ணிலே ஒரு பிரகாசம். உதட்டிலே ஒரு பூரிப்பு.

ஆசை தீர எடுத்து உறிஞ்சலானான்!

பொன்னடி, எதுவும் புரியாதவனாக, "என்ன இது... நீங்கள்..." என்று குழம்பினான்.

சக்கரை, காலியான கிண்ணத்தில் மேலும் மதுவை ஊற்றிக் கொடுத்தபின் சொன்னான்:

"ஷேக்ஸ்பியர் சொன்னாரே, 'கப்பல்கள், வெறும் பலகைகள்தான். மாலுமிகள், வெறும் மனிதர்கள்தான்' என்று! அதேபோல் நானும் ஒரு சாதா ஆள்தான். ஆகவே தப்புக் கணக்குப் போட்டு விட்டேன். கலிவரதன் போதை இல்லாமல் இருக்க வேண்டாம் அதுதான் அபாயம். போதையுடன் இருக்கிற வரையில் உயிருடனாவது இருப்பான்."

"ஏன்?" என்று திகைத்தான் பொன்னடி.

'இவன் உயிரை இவனே பறிக்குமாறு [illegible] செய்து கொள்ளும்படி — ஒரு சக்தி இவன மனத்தைத் தூண்டிக் கொண்டிருக்கிறது. கலிவரதன் குடி போதையிலே இருக்கும்போது, அந்தச் சக்தியினால் எதுவும் செய்ய முடியாது. ஏனெனில் ஏற்கனவே இன்னொன்றின் வசமாகி விட்ட மனத்தைத் தன் பக்கம் திருப்புவது கடினம். ஆகவே போதை தெளிந்ததும் அந்தச் சக்தி இயங்குகிறது. இனிமேல் நம் வேலை, கலிவரதனின் போதை தெளியாத படி பார்த்துக் கொள்வதுதான்."

"எத்தனை காலம் வரையில்?"

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

பல்லைக் கடித்தான் சக்கரை ஆத்திரத்துடன். "அந்தச் சக்தியை நான் கண்டுபிடித்து, அதன் கழுத்தை நெரித்துக் கொலை செய்கிறவரையில்," என்றான்.

அந்த யோசனையுடனேயே அத்தையின் வீட்டுக்குத் திரும்பிய அவனுக்கு, அதிர்ச்சியொன்று காத்திருந்தது.

அம்பிகா காட்டிய தினசரித் தாளில் இருந்தது அந்த அதிர்ச்சி.

29

உடம்பு பட்டாம் பூச்சிபோல் இருந்தது அம்பிகா வுக்கு. அழகாகச் சோம்பல் முறித்தபடி கட்டிலில் எழுந்து உட்கார்ந்தாள் ஜன்னல் வழியே வந்த இதமான காலைக் காற்று, அவள் கேசத்தைச் சிலுசிலுக்கச் செய்தது. வெகு நாட்களுக்குப் பின்னர் தன் மனப்பாரம் மொத்தமும் இறங்கிவிட்ட மாதிரி உணர்ந்தாள். காலை நிமிர்த்திக் கொண்டு கட்டிலை விட்டு இறங்கும்போது, அவளுடைய சிவந்த பாதங்கள் அவளையே கவர்ந்தன. சின்ன வயதில், நாட்டியம் கற்றுக்கொள்ள வேண்டும் என்று அவள் ஆசைப்பட்டதுண்டு, சித்தி அனுமதிக்கவில்லை. அந்தச் சிறு பருவத்து ஆசை அணையாமல், அவ்வப்போது அவள் உல்லாசமாயிருக்கிற சமயங்களில் அவள் தேகத்தின் அசைவுகளில் அது வெளிப்படும்.

தோளை லாகவமாகக் குலுக்கிக்கொண்டு, ஜன்னல் வழியாகக் காலைச் சூரியனின் ரம்மியத்தை மனங்குளிர ரசித்தாள் அம்பிகா. இங்கு வந்த சில மணி நேரங்களுக்குள்ளேயே தன் மனத்திலிருந்த அச்சங்கள் அகன்று விட்டதை உணர்ந்தாள் அவள். பிரின்ஸிபாலின்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

வீட்டிலிருப்பதைப்போல் தோன்றாமல், அவளுடைய சொந்த வீட்டிலேயே இருப்பதுபோல் அவளுக்குத் தோன்றியது. இருக்கிற இடத்தை யாருக்கும் தெரிவிக்க வேண்டாமென்று மட்டும் தர்மு சிவராஜ் அவளுக்கு எச்சரிக்கை செய்திருந்தாள். மற்றப்படி முழுச் சுதந்திரமும் கிடைத்திருந்தது.

ரேடியோவைத் திருகி விட்டுவிட்டு, அருகிலிருந்த குளியலறைக்குள் நுழைந்தாள். 'சங்கம்' படத்தில் வருகின்ற 'போல் ராதா, போல் சங்கம்' என்ற பாட்டு மெல்ல குழந்தைபோல் தவழ்ந்து வந்து அவள் செவியுடன் விளையாடிற்று. சிறிய குரலில் அம்பிகாவும் அந்தப் பாட்டுடன் சேர்ந்து பாடலானாள். பாடப் பாட அவள் குரல் கம்மலாயிற்று — உணர்ச்சி வசப்பட்டதால். அந்த இந்திப் பாட்டின் பொருள் என்னவென்று அவளுக்குத் தெரியாது. ஆனால் அந்தப் படத்தைப் பார்த்த சந்தர்ப்பம் அவளுக்கு நினைவு வந்துவிட்டது.

ஐந்து தோழிகளுடன் கும்மாளமாகப் போயிருந்தாள். "இடை வேளையின்போது சாப்பிடப் போகிறோமாக்கும். டிபன் கட்டிக்கொடு எங்களுக்கெல்லாம்," என்று சித்தியிடம் விளையாட்டாகச் சொல்லப் போய், நிஜமாகவே ஆறு பொட்டலங்கள் கட்டித் தந்து விட்டாள், பாவம்.

இடை வேளையின்போது பிரித்துப் பார்த்தால் அவ்வளவும் புளியோதரை!

சிரிப்பும் வேடிக்கையுமாக இரண்டு இடை வேளையின் போதும் அவர்கள் தீர்த்துக் கட்டினார்கள் மொத்தப் புளியோதரையையும். தண்ணீருக்கு வசதி இல்லாமல் ஒவ்வொருத்தியின் கண்ணிலும் நீர் முட்டிக் கொண்டு நின்றது. விக்கலெடுத்தது வெகு நேரம் வரை.

அன்றைப்போலவே, இன்று அதை நினைக்கையிலும் அம்பிகாவுக்குக் கண்ணில் சூடாகவும் அரிப்பாகவும் பொங்கிக் கொண்டு வந்தது கண்ணீர்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

சித்திக்குத் தன்னிடம் எத்தனை பிரியம்! நூறு வருடம் தவம் செய்தாலும் இப்படியொரு சித்தி கிடைப்பாளா? எத்தனை குரூரமாக, இரக்கமில்லாமல், கால் கடுதாசி எழுதி வைத்துவிட்டுப் புறப்பட்டு விட்டோம்! அதைப் பார்த்து விட்டுச் சித்தி என்ன துடி துடிக்கிறாளோ! யாரிடம் சொல்லிப் புலம்புகிறாளோ! அல்லது எவரிடமும் சொல்ல முடியாமல் தவிக்கிறாளோ?

எழுந்து கொண்டபோது இருந்த உற்சாகம் பறந்து விட்டது அம்பிகாவுக்கு. முகத்தைக் கழுவிக் கொண்டவள் திரும்பத் தன் அறைக்கே வந்து குறுக்கும் நெடுக்குமாக உலாவினாள். மேஜை டிராயரை இழுத்துப் பார்த்த போது ஒரு தபால் கார்டு கிடைத்தது.

"திருமதி மரகதத்துக்கு, உன் மகள் அம்பிகா சௌக்கியமாக இருக்கிறாள். நிலைமை சரியானதும் மறுபடி வந்து சேருவாள். உன் மீதுள்ள பிரியம் குறைய வில்லை அவளுக்கு," என்று குண்டு குண்டான எழுத்தில் எழுதி, கையெழுத்து எதுவும் போடாமல் கையில் எடுத்துக் கொண்டாள். கீழே வந்தாள்.

ஷெட்டில் கார் காணப்படவில்லை.

தர்மு ஏதோ காரியமாக வெளியே சென்றிருக் கிறாள் போலும். சிவராஜ் நிச்சயம் பின்புறம் டார்க் ரூமில்தான் இருப்பார் இந்தக் காலை வேளையில். மற்றப்படி வீட்டில் எவரையும் காணோம்.

தெருவில், அவர்கள் வீட்டுக்கு எதிரே ஒரு தபால் பெட்டி இருப்பதை அம்பிகா பார்த்திருக்கிறாள். இரண்டே நிமிடத்தில் கார்டைப் போட்டுவிட்டுத் திரும்பி விடலாம். இருப்பினும், சக்கரையும் பிரின்ஸிபாலும் தடுத்திருக்கிற காரியத்தைச் செய்யலாமா? சில நிமிடங்கள் குழம்பினாள். சித்தியின் பரிதாபமான முகம் கண்ணெதிரே வந்து நின்றது. தைரியம் பெற்றாள். தெருவின் குறுக்கே பாய்ந்து சென்றாள்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

தபால் பெட்டியில் கார்டைப் போட்டுவிட்டு, அதே வேகத்தில் திரும்பினாள்.

மொத்தம் இரண்டு நிமிடம்தான் ஆகியிருக்கும். அந்த இரண்டு நிமிடத்துக்குள்ளேயே இன்னொரு நிகழ்ச்சியும் நடந்துவிட்டது. தபால் பெட்டியில் கார்டைப் போட்ட அதே சமயத்தில் ஒரு டாக்ஸி அவளைத் தாண்டிச் சென்றது. வெகு வேகமாகச் சென்ற அது சரக்கென்று பிரேக் போட்ட சத்தம் அம்பிகாவின் காதில் விழுந்தது. மின் வெட்டுகிற நேரம். டாக்ஸிக்குள்ளிருந்து ஒரு முகம் எட்டிப் பார்த்தது. கறுப்புக் கண்ணாடியும் முகத்தில் பெரும் பகுதியை மூடிக்கொண்டிருந்த மப்ளரும்தான் அம்பிகாவின் கண்ணிலும் நினைவிலும் பதிந்தன. தலை தெறிக்கப் பங்களாவுக்குள் புகுந்து, வாசற்புறமிருந்த முதல் அறையில் நுழைந்து, நாற்காலியில் பொத்தென்று உட்கார்ந்து கொண்டாள்.

மணிக்கணக்காக ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொண்ட மாதிரி மூச்சு இரைத்தது. கண்கள் இருண்டன.

அந்த டாக்ஸி பங்களா கேட்டுக்குள்ளேயே நுழையப் போகிறதோ என்ற அச்சம் ஏற்பட்டது. திக்திக்கென்று அடித்துக் கொள்ளும் இதயத்துடன் வாசலையே பார்த்திருந்தாள். டாக்ஸி வரவில்லை. தெருக்கோடியில் அதன் ஊது குழல் ஒலித்துத் தேய்ந்தது.

கண்ணாடிக்கும் மப்ளருக்கும் பின்னே மறைந் திருந்த முகம் யாருடையது? சூரியா? இல்லை. இது நீள முகமாகவும், ஒட்டிய கன்னமாகவும் இருந்தது. போரிஸ் கார்லாஃபின் பிராங்கன் ஸ்டீன் முகம்தான் உடனே உவமையாகத் தோன்றியது அவளுக்கு. அதைக் கற்பனை செய்ததும் அவள் மேனி விதிர்த்து அடங்கியது.

அச்சுறுத்தும் கற்பனைகளை அப்பால் தள்ளி, மனத்தைக் குளிர்விக்கும் திசையில் நாட்டம் காட்ட முயன்றாள் அம்பிகா. உறுதியுடன் தலை நிமிர்ந்தபோது,

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

சக்கரையின் புகைப்படம் அவள் பார்வையில் பட்டு, அவளுக்குத் தேவையான தெம்பையும் உற்சாகத்தையும் தந்தது. அவசரமாக நுழைந்த அறை சக்கரையினுடையது என்பது தெரிந்ததும், அனுமதியில்லாமல் இங்கே தங்கக் கூடாது என்று எண்ணினாள். ஆனால் இந்த இடத்தில் சற்று நேரம் இருக்க வேண்டும் போலவும் தோன்றியது. ஷெல்பில் இருக்கும் புத்தகங்களை எடுத்துப் பார்த்தாள். அவளுக்குப் புரியாத மனத் தத்துவப் புத்தகங்களாக இருந்தன. அவற்றின் நடுவே ஒரு ஷேக்ஸ்பியர் தொகுப்பும் இருப்பதைக் கண்டு அம்பிகாவின் முகம் மலர்ந்தது.

'என் ரோமியோ இறக்கும்போது, அவனைச் சிறு நட்சத்திரங்களாகச் செதுக்குங்கள்; வானத்தின் முகத்துக்கே அவன் அழகு தருவான். அதன் பின்னர் உலகம் மொத்தமும் இரவு வேளையிடம்தான காதல் கொள்ளும்; கோரமான சூரியனை எவரும் தொழார்' என்ற ஜூலியட்டின் வாக்கியங்களைப் படிக்கும்போது உதட்டில் ஒரு புன்னகை பிறந்தது. அவளையறியாமலே ஒரு நீலப் பென்ஸிலால் அந்த வரிகளை அடிக்கோடிட்டாள்.

"ஹூம்! ஒன்பதரை ரூபாய் செலவு வைத்து விட்டாய்," என்ற குரல் கேட்டது அவள் பின்னாலிருந்து.

திகைத்துத் திரும்பியவள் எதிர்பாராத அண்மை யில் சக்கரையைக் கண்டதும் நாணமுற்றவளாக, "ஏன்?" என்று வினவினாள்.

"அது லைப்ரரி புத்தகம். உன் கையால் அடிக் கோடிட்ட புத்தகத்தைத் திருப்பிக் கொடுக்க இனி எப்படி எனக்கு மனம் வரும்? புத்தகத்தை வைத்துக்கொண்டு விலையைக் கொடுத்து விட வேண்டியதுதான்," என்ற சக்கரை, வெட்கத்தினால் அம்பிகாவின் கன்னம் சிவக்கின்ற அழகைக் கண்டபோது ஆயிரம் ஷேக்ஸ்பியரின் கவிதைகளும் இதற்கு இணையாகுமா என்று வியந்து நின்றான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அம்பிகாவுடன் பேசவும், பழகவும், அந்தரங்கமாக நெருங்கவும் இதுவரை பல சந்தர்ப்பங்கள் ஏற்பட்டும், அவளை ஒரு பெண் என்று இதுவரை நினைக்கத் தோன்றிய தில்லை பரிசோதனைக் குழாயில் காய்ச்சப்படும் திரவத்தைப் பார்ப்பது போல, அறிவினால் அவளை ரசிக்க மூடிந்ததே தவிர, இருதயத்தினால் நெருங்கவில்லை. இப்போது திடீரென்று அவளிடம் ஒரு பரிவும் பிரியமும் அவன் உள்ளத்தில் எழுந்தன. உயிரைத் தந்தாகிலும் இவளுடைய கஷ்டங்களைத் தீர்க்க வேண்டும் என்ற உறுதி ஏற்பட்டது.

"நீயும் ஒரு ஷேக்ஸ்பியர் ரசிகையாக இருப்பதைப் பற்றி சந்தோஷம்," என்றான் சக்கரை. "ஆனால் அவசர அவசரமாகத் தெருவுக்குப் போய்விட்டுத் திரும்பியது ஏன் என்பதையும் சொன்னாயானால் இன்னும் சந்தோஷப் படுவேன்."

அம்பிகா திடுக்கிட்டாள், எப்படி இவனுக்குத் தெரிந்தது என்று. அதை ஊகித்தவன் போல, சக்கரை, "பதற்றமில்லாமல் இருந்தால் இப்படி ஒரு காலில் மட்டும் செருப்பும், இன்னொன்றில் வெறும் காலாகவும் இருப்பாயா?" என்று கேட்டான்.

அவசரமாக ஓடிவந்தபோது ஒரு செருப்பை நழுவ விட்டோம் என்பதை அப்போதுதான் கவனித்தாள் அம்பிகா. வாசற்புறம் சென்று அதை எடுத்து வந்தவள், உண்மையைச் சக்கரையிடம் ஒப்புக் கொள்ளலாமா வேண்டாமா என்று தயங்கினாள். இவனிடம் எதையும் மறைக்க முடியாது, மறைத்தால் தனக்கேதான் ஆபத்து என்ற முடிவுக்கு வந்தாள். சித்திக்குக் கார்டு எழுதிப் போட்டதையும், தபால் பெட்டியில் சேர்த்தபோது டாக்ஸியிலிருந்து ஒரு முகம் எட்டிப் பார்த்ததையும் கூறி முடித்தாள்.

பின்கையைக் கட்டிக்கொண்டு சிறிது நேரம் உலவிய சக்கரை, "அவனை எனக்குத் தெரியும்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

உனக்குத்தான் தெரியாது. இன்னும் கொஞ்ச நாள்தான் அவன் ஆட்டம். சிங்கப்பெருமாள் கோவிலிலிருந்து என் சீடன் இன்று வந்து விட்டால்..." என்றான்.

"சிங்கப்பெருமாள் கோவிலா?" என்று திகைப்புடன் குறுக்கிட்டாள் அம்பிகா.

"ஏன்?"

"நீங்கள் பேப்பர் பார்க்கவில்லையா, நேற்று சாயந்திரம்?" என்ற அம்பிகா ஹாலுக்குச் சென்று முந்தைய மாலைத் தினசரியைக் கொண்டு வந்து காண்பித்தாள்.

கொட்டை எழுத்தில், "கோர ரயில் விபத்து — சிங்கப் பெருமாள் கோவிலுக்கு அடுத்த ஸ்டேஷனில் — பதினைந்து பேர் மரணம்," — என்ற செய்திகளை உரக்கவே படித்தான் சக்கரை. அவன் முகம் வெளிறியது. பக்கிரிசாமி எப்போது, எந்த மார்க்கமாக வரப்போகிறான் என்று அவனுக்குத் தெரியாதிருந்தாலும், ஒருவேளை இந்த ரயிலில் புறப்பட்டிருப்பானானால் அவனுக்கு என்ன நேர்ந் திருக்குமோ என்ற கவலை அவன் மனத்தைக் கப்பிக் கொண்டது.

"நான் போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன். நீ மறுபடியும் அசட்டுத்தனமாக வெளியே தலை காட்டாமல் வீட்டுக்குள்ளேயே இரு," என்று கூறிவிட்டு அவசர அவசரமாக வெளியேறினான்.

இரவு வெகு நேரம் வரையில் சக்கரை திரும்ப வில்லை. தர்மு சிவராஜ், கல்லூரியில் சில முக்கிய பொறுப்புக்கள் இருந்ததால் அம்பிகாவின் உடல் நலத்தைப் பற்றி இரண்டு வார்த்தை விசாரித்துவிட்டுத் திரும்பிச் சென்று விட்டாள். சிவராஜோ, அன்று அவருடைய 'டார்க் ரூமில்' அம்பிகா மயங்கிக் கிடந்ததிலிருந்து, அவளிடம் நெருங்கிப் பேசவே பிடிக்காதவராக இருந்தார். அன்று அவள் விழுந்த வேகத்தில், உலர்த்தி வைத்திருந்த நெகடிவ் ஒன்று, ஏதோவொரு விழக்கூடாத திரவத்தில் விழுந்து

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

முற்றிலும் கெட்டுவிட்டதாம். அதனால் அவள்மீது அவருக்கு மகா கோபம். அந்தக் கோபத்தில் ஆழமான வெறுப்புக் கிடை.யாது என்பதும், குழந்தைத்தனமானது தான் என்றும் அறிந்திருந்தாளாகையால், அம்பிகா வேண்டு மென்றே அவரைச் சந்திக்கும் போதெல்லாம் ஏதாவது சொல்லிச் சீண்டிக்கொண்டிருந்தாள்.

இன்று அவர், "இதோ பார், நீ ஒன்றும் என்னோடு பேச வேண்டாம்," என்று சிடுசிடுத்ததால், சிரித்துக் கொண்டே அம்பிகா திரும்பி விட்டாள்.

ஆகக்கூடி, அன்றையப்பொழுது முழுவதும் அம்பிகாவுக்கு வெறிச்சென்றே கழிந்து கொண்டிருந்தது. அவள் சிந்தனையை இனிக்கச் செய்த ஒரே நினைப்பு, இன்று சக்கரையிடம் ஏற்பட்ட நெருக்கம்தான். திரும்பத் திரும்ப அதை நினைத்தவாறே சாப்பாடு முதலியவற்றைத் தனியாக முடித்துக்கொண்ட பின்னர், இரவு ஒன்பது மணி சுமாருக்குப் படுத்துக் கொண்டு விட்டாள். பத்து மணிக்கு அரைத் தூக்கத்தில் ஆழ்ந்தாள். சக்கரை இன்னும் திரும்பாதது குறித்து கொஞ்ச கொஞ்சமாக அவள் கவலை வளர்ந்து கொண்டிருந்த சமயம் —

அவன் குரல் கேட்டது.

"அம்பிகா! ஓசைப்படாமல் எழுந்து வா. ஒரு முக்கியமான விஷயம்," என்று கிசுகிசுத்த குரலில் அழைத்தான் அவன்.

நிலைப்படியை அடைந்தாற்போல் அவனது நெடிய உருவம் நின்றிருந்தது. நீல விடி விளக்கில் அவன் முகத்தைக் கண்டு திகைத்தாள்.

"என்ன இது? இந்த நேரத்தில் நீங்கள் வந்து கூப்பிடுவது விசித்திரமாயிருக்கிறதே..." என்றாள்.

"விசித்திரம்தான் வா, புரியும். 'கோமாளிகள் பெரும்பாலும் தீர்க்கதரிசிகளாக இருப்பார்கள்' என்று

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ஷேக்ஸ்பியர் சொல்லியிருப்பது உனக்குத் தெரியாதா?" என்றவாறு முன்னால் நடந்தான் அவன்.

அவன் பேச்சு மேலும் ரகசியமாக இருளில் புதைந்தது. ரொம்பப் பெரிய விஷயமாயிருந்தால் தவிர, இப்படி அவசரமாக, இந்த வேளையில் அழைக்க மாட்டான் என்று முடிவு செய்த அம்பிகா, மௌனமாக அவன் பின்னாலேயே சென்றாள். கதவுகள் திறந்திருந்தன. தெருவில் ஒரு கார் நின்றிருந்தது.

அவன் முன்னே ஏறிக்கொண்டு "வா, வா," என்றான்.

மேன்மேலும் குழப்பமடைந்தாளாயினும் அவன் அழைப்பைத் தட்டாமல் அம்பிகா காரினுள் ஏறிக் கொண்டாள்.

"எங்கே போகிறோம்?" என்று அவள் கேட்டதும் அவன் சிரித்தான். காரை ஓட்டிக் கொண்டிருந்தவனும் சிரித்தான்.

திடுக்கிட்டு அந்த முகத்தைப் பார்த்தாள். மங்கலான தெரு வெளிச்சம் காருக்குள் பாய்ந்து மறைந்தது.

அம்பிகாவின் மெய் நடுங்கியது. அவன் சக்கரை அல்ல.

"நீ... நீ... காலையில் டாக்ஸியில் போனவன்... சக்கரை இல்லை..." என்று குழறினாள்.

"ஆமாம்... உன் ஊகம் கரெக்ட்," என்றான் அவன்.

வீலென்று கத்த வேண்டும் போலிருந்தபோதிலும், தொண்டையில் எதுவோ அடைத்துக் கொண்டது அம்பிகாவுக்கு சொல்லுக்கு மிஞ்சிய அச்சம் அவளை ஆட்கொண்டதாகையால், அவள் சிலையாகிவிட்டாள். அந்த உணர்ச்சி மரப்பின் மத்தியிலும் அவளுடைய அறிவும் மூளையும் விழித்துக் கொண்டிருந்தன.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

என்ன பைத்தியக்காரத்தனமாக அகப்பட்டுக் கொண்டோம் இவனிடம்! சக்கரையைப் பற்றி நினைத்துக் கொண்டே அரைத் தூக்கத்தில் ஆழ்ந்திருந்த நிலை... நீல விடி விளக்கின் மோசடியான வெளிச்சம் அவன் தன் முகத்தை நேரடியாகக் காட்டாமல், கிசுகிசுப்பான குரலில் பேசிய சூழ்ச்சி... ஷேக்ஸ்பியரின் வாக்கியமொன்றைப் பேச்சின் நடுவே போட்டு வைத்த கெட்டிக்காரத்தனம்...

சஞ்சாரமற்ற பாண்தகள் வழியே பறந்து கொண்டிருந்தது கார். மெல்ல மெல்ல அவளுடைய புலன்கள் மங்கின. அந்தக் காருக்குள் அவளுக்காகவே ஏதோவொரு மயக்க மருந்து தயாராக வைக்கப்பட்டிருந் திருக்குமா?

மீண்டும் நினைவு வந்தபோது அவள் படுத்திருந்தது காரினுள் அல்ல. கரடு முரடான கட்டாந்தரையில். மைபோல அடைத்துக் கொண்டிருந்தது காரிருள் நாற்புறமும். அவள் கால்கள் நூலில் செய்யப்பட்டாற்போலத் தொய்ந்தன.

தட்டுத் தடுமாறிக் கொண்டு சுவரைப் பிடித்தாள் அதுவும் கைக்கு வழுவழுப்பாக இல்லாமல் காரை பெயர்த்து காணப்பட்டது. அதைத் தடவிக் கொண்டே கதவை அடைந்தாள்.

அது ஒரு மாடியறை. வெராந்தாவுக்கு வெளியே மரங்களடர்ந்த ஒரு தோப்பு தெரிந்தது. தூரத்தில் ஒரு சிவப்பு வெளிச்சமும் கசப்பான ஒரு மணமும் அவள் புலன்களை உடனே தாக்கின. அது மயானத்தின் மணம்.. முன்பொரு முறை கிராமத்தில் அதை நுகர்ந்ததுண்டு...

அதே வினாடியில், ஓர் உருவத்தையும் அவள் கண்கள் கண்டன. அன்று சக்கரை எந்த உருவத்தைக் கண்டு குலை நடுங்கினானோ அதுவேதான் இதுவும். ஆனால் உடனே அவனுக்கு ஏற்பட்ட மன உறுதியும் தைரியமும் அம்பிகாவுக்கு ஏற்படவில்லை. நாக்கு மேலண்ணத்தில்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ஓட்ட, தொண்டை ஈரமற்று உலர்ந்து காய, இரும்புச் சங்கிலியினால் கட்டப்பட்ட மாதிரி கால்கள் கனக்க, பழையபடி உள்ளே ஓடிவிடலாமென்று பார்த்தாள். அவளுக்குப் பின்பக்கமிருந்த கதவு சாத்திக்கொண்டிருந்தது. வேறிடத்துக்கு நழுவ நினைத்தாள். அவளையறியாமலே கால்கள் அவளைத் தோட்டத்துக்குக் கொண்டு சென்று விட்டன.

இது என்ன இடம்? அந்த உருவம் ஏன் தன்னை நோக்கி வர வேண்டும்?

அதைப் பார்த்தவாறே பின் பக்கமாக நகர்ந்து நகர்ந்து பிறகு புயல் வேகமாக ஓடலானாள் அம்பிகா. சுற்றியிருந்த இருளிலும் காற்றிலும் அந்த உருவம் கலந்து, எல்லா திசைகளிலிருந்தும் சூழ்ந்து கொள்கிற மாதிரி இருந்தது. ஓட ஓட, கூடவே அது ஓடி வருகிற மாதிரி தோன்றியது.

திடீரென தோப்புத் துரவுகளும் மறைந்தன. திறந்த வெளி தெரிந்தது. காலின் கீழிருந்த மணல் மெத்தென் ிருந்தது. தூரத்தில் ஹோவென்று பேரிரைச்சல் கேட்டது.

விக்கித்து நின்றாள் அம்பிகா. கடலை நோக்கித் தான் துரத்தப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்ற பிரக்ஞை வருவதற்குச் சில வினாடிகள் பிடித்தன. அவளுக்கு மூச்சுத் திணறியது. மார்பை அடைத்தது.

30

பக்கிரிசாமிக்கு என்ன நேர்ந்திருக்குமோ என்ற பதைப்புடன் டெலிபோன் கூண்டை நோக்கி ஓடிக் கொண்டிருந்தான் சக்கரை. சமயம் பார்த்து, அத்தையின்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

டெலிபோன் வேலை செய்யவில்லை. அவன் பதைப்புக்குக் காரணம் இருந்தது.

கலிவரதனின் வீட்டுத் தோட்டத்தில் ஒரே ஓர் இரவு தங்கியதே போதும் போதுமென்றாகியிருந்தது அவனுக்கு. கலிவரதனின் திடீர் மாறுதல், அவனுடைய காரியதரிசியான பொன்னடி அந்தக் கிழட்டு நாயை அடித்துக் கொன்ற கோரம் — எல்லாவற்றுக்கும் மேலாக நள்ளிரவில் அந்தத் தோட்டத்தில் கண்ட மாய உருவம் ஆகிய அனைத்தும் அவனை வாட்டி வதைத்துக் கொண்டிருந்தன.

'கலிவரதனுக்கு மதுவைக் கொடுத்துக் கொண்டே யிரு, அவன் சுய நினைவுக்கு வராதபடி பார்த்துக்கொள்,' என்று பொன்னடிக்கு எச்சரிக்கை தந்த பிறகு, மாடிக்குப் போய் 'சொஸ்தமாக' அவன் தூங்கவில்லை.

தோட்டத்தில் அவுட்ஹவுஸ் அருகினில் கண்ட உருவம் அவன் சிந்தனையைக் குடைந்து கொண்டே யிருந்தது. வந்த வேகத்திலேயே அது மறைந்து விட்ட தென்றாலும், அதை மட்டும் இன்னொரு தரம் பார்க்க முடிந்தால், மனிதனா, ஆவியா என்பதைக் கண்டு பிடித்து விட முடியும் என்று உறுதியாக நம்பினான் அவன். அந்த உருவத்தை மீண்டுமொரு முறை சந்திக்கவோ நேருக்கு நேர் பார்க்கவோ அவன் உள்ளத்தில் துணிச்சல் நூற்றுக்கு நூறு பிறந்துவிடவில்லை. ஆனால் தைரியம் வரட்டும் என்று காத்திருந்தால், ஆயுள் காலத்துக்கும் காத்திருக்க வேண்டியதுதான் என்று தெரிந்தவனாகையால், 'ஆறிலும் சாவு நூறிலும் அதுதான்' என்று அந்த வேளையிலேயே தோட்டத்துக்கு மீண்டும் கிளம்பினான்.

அவுட்ஹவுஸின் அருகேயிருந்த நிலத்தில் மண் கரடு முரடாக இருந்ததாகையால் காலடிச் சுவடு எதுவும் தெரியவில்லை. செடிகளும் கொடிகளும் காடாய் மண்டிக் கிடந்தன. பூச்சிபொட்டு எதையாவது மிதித்துவிடுவோமோ என்ற அச்சமும் சேர்ந்து ஏற்பட்டது சக்கரைக்கு. மனத்தைத்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

திடப்படுத்திக்கொண்டு நடந்தபோது, அவுட்ஹவுசுக்குப் பக்கத்திலிருந்த குடிசையில் சத்தம் கேட்டது. எட்டிப் பார்த்தான்.

பாவம், தாயிதான் தனது செத்த நாயைக் குறித்துப் பிலாக்கணம் பாடிக் கொண்டிருந்தாள். யாரோ எதிரில் உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருக்கிற மாதிரி அவள் சொல்லிச் சொல்லிப் புலம்பிக் கொண்டிருந்த விதம் சக்கரைக்கு வேடிக்கையையும் வேதனையையும் ஒருங்கே தந்தது. 'வயோதிகன் என்பவன் இரட்டிப்புக் குழந்தை' என்ற ஆங்கிலக் கவியின் வாசகம் நினைவுக்கு வந்தது.

அந்த இடத்தை விட்டு நீங்கியவன் சுற்று முற்றும் பார்த்தான். இணைபிரியாத் தோழனாக எப்போதும் பாக்கெட்டிலேயே இருக்கும் 'பென்ஸில் டார்ச்'சை எடுத்து, தரையெங்கும் தேடினான். ஏதோ அகப்படப் போகிறது, எதையோ கண்டு பிடிக்கப் போகிறோம் என்று அவன் உள்ளுணர்வு கூறிக் கொண்டேயிருந்ததே தவிர, அந்தப் பொருள் அல்லது தடயம் எப்படி இருக்கப் போகிறது என்று அவனுக்கு லவலேசமும் தெரியாது.

திடீரென்று அவன் கண்கள் எதையோ கண்டன. ஜாக்கிரதையாகப் பொறுக்கியெடுத்துப் பிரித்துப் பார்த்தான். ஒரு சின்னக் காகிதத் துண்டு போலத் தெரிந்த அது, ஒரு பஸ் டிக்கெட். பல நாள் வெய்யிலில் காய்ந்ததற்கு அடையாளமான மொரமொரப்பும் பழுப்பு நிறமும் அதில் ஏறியிருக்காததால் சமீபத்தில்தான் அது விழுந்திருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொண்டான்.

வெளியூரிலிருந்து வரும் பஸ்ஸொன்றில் வழங்கப் பட்ட அந்த டிக்கெட், தமிழில் அச்சடிக்கப்பட்டிருந்தது. 'சிங்கப்' என்னும் வரியிருந்த இடத்தில் கிழிக்கப் பட்டிருந்தது.

ஒரே கணத்தில் சக்கரையின் மனத்தில் எழுந்தவை: சிங்கப் பெருமாள் கோவில், வேதசிகாமணி, பக்கிரிசாமி.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

பக்கிரிசாமி சிங்கப்பெருமாள் கோவிலிலிருந்து இங்கு வந்திருக்க முடியாது. சென்னைக்கு வந்ததும் நேரே தன்னைத்தான் வந்து பார்த்திருப்பானே தவிர, கலிவரதனின் வீட்டில் எவ்வித வேலையும் அவனுக்கு இருப்பதற்கு நியாயமில்லை. ஆகவே சிங்கப் பெருமாள் கோவிலுக்குச் சம்பந்தமுள்ளவர் இங்கே யாரேனும் வந்திருந்தால், அவர் வேதசிகாமணியாகத்தான் இருக்க முடியும்.

சக்கரையின் புருவங்கள் நெற்றிக்கு ஏறின. பஸ் டிக்கெட்டைக் கையில் வருடிய வண்ணம் கலிவரதனின் வீட்டுக்குள் திரும்பினான்.

வேதசிகாமணி ஒரு மர்மமான மனிதர்தான்!

இல்லாவிட்டால், அன்றைக்கு அவ்வளவு மெனக் கெட்டு, உயிருக்கு அபாயத்தையும் பொருட்படுத்தாமல் சூரியின் சிறையிலிருந்து அவரைத் தப்புவித்தபோது நன்றியுடன் ஒரு வார்த்தையேனும் சொல்லாமலிருப்பாரா? உண்மையாகத் தன்னைச் சூரி அடைத்து வைத்த காரணத்தைச் சொல்லாமல் மழுப்புவாரா?

படுக்கையில் படுத்துக் கொண்டிருந்த சக்கரை, தனக்கு இருளில் வெளிச்சம் தரக்கூடிய ஒரே நபர் பக்கிரி சாமிதான் என்று தீர்மானித்தான். ஆச்சரியமான பல சம்பவங்களை நேரில் வந்து விளக்குவதாக அவன் எழுதியிருந்த கார்டு ஞாபகம் வந்தது.

அவன் வந்ததும் எல்லாக் குட்டுகளும் உடைந்து விடப்போகின்றன -என்ற நம்பிக்கையுடனும் ஆர்வத் துடனும் அத்தையின் வீட்டுக்கு வந்த சக்கரை —

அம்பிகா காட்டிய செய்தியைக் கண்டு ஏன் திடுக்கிடாதிருப்பான்? இந்த அம்பிகா — தேவகி விஷயத்தை எந்த மானிடனும் அறியக்கூடாதென்று தெய்வமே தீர்மானமாகத் தடுத்துக் கொண்டிருக்கிறதோ என்று கூடத் தோன்றியது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அம்பிகாவிடம் அவசரமாக விடை பெற்றுக் கொண்டு கிளம்பியவன், போலீஸ் கமிஷனர் காரியாலயத்துடனும் பத்திரிகை அலுவலகத்துடனும் தொடர்பு கொண்டான்.

தாம்பரம் ஆஸ்பத்திரியில்தான் பெரும்பாலும் விபத்துக்காளானவர்கள் இருப்பதாக அங்கே தெரிவித்தார்கள்.

சாயந்திரம் ஐந்து மணிக்கு மேலாகிவிட்டது. ஒரு வழியாய் மின்சார ரயிலிலும் டாக்ஸியிலுமாகச் சக்கரை ஆஸ்பத்திரியை அடைந்தபோது,

மரணதேவதைகளின் தாண்டவம் என்பதை அவன் கதைகளில்தான் படித்திருக்கிறான். இப்போது அது எப்படி இருக்கும் என்பதை நேரிலும் கண்டுவிட்டான். என்ன ஓலம்! என்ன கூச்சல்! என்ன நெஞ்சையுருக்கும் பரிதாபக் குரல்கள்! அம்மம்மா!

கட்டில்களிலும் வெராந்தாக்களிலும் வரிசை வரிசையாகக் கிடத்தப்பட்டிருந்தவர்களின் முகத்தைக் கூர்ந்து கவனித்தவாறே நடந்தான் சக்கரை. மிக அபாயமான நிலைமையில் இருப்பவர்களைத் தனியே வைத்திருந்தார்கள். ஊசி விழும் சத்தம்கூடக் கேட்கக் கூடாதென்று மிகக் கண்டிப்புக் கடைப்பிடிக்கப்பட்ட அந்த வார்டில், மார்பைக் கையால் அழுத்திக்கொண்டு அடி மேலடி வைத்துப் பார்த்துக் கொண்டே போனான் சக்கரை. பக்கிரிசாமியின் முகம் அங்கே தென்படாதது, அவனுடைய பாதிச் சுமையைக் குறைத்து விட்டது.

படுகாயமுற்ற நோயாளிகளைக் கிடத்தியிருந்த இடத்திலும் அவனுக்கு ஆறுதலே கிடைத்தது. அங்கேயும் பக்கிரிசாமி காணப்படவில்லை. பிறகு, லேசான காயத்துக்குச் சிகிச்சை செய்யப்பட்டு உடனேயே 'டிஸ்சார்ஜ்' ஆனவர்களின் பட்டியலையும் பார்த்தான். அதிலும் இருக்கவில்லை பக்கிரிசாமி என்ற பெயர்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

நல்ல வேளை என்று பெருமூச்சுடன் சக்கரை வெளியே வந்த சமயம், ஓரிடத்தில் கூட்டம் கூடியிருந்தது. "என்ன அது?" என்று ஒரு நர்ஸை விசாரித்தான்.

"உங்களுக்குத் தெரியாதா? அது இறந்து போனவர்களின் பட்டியல்," என்று தெரிவித்த நர்ஸ், அவனைப் பரிதாபமாகப் பார்த்துவிட்டு அகன்றாள்.

'ஐயையோ! அப்படியொன்று இருக்கிறதா?' பதற்றத்துடன் ஓடினான் அங்கே.

கூட்டத்தை விலக்கிக் கொண்டு முன்னே சென்று அந்தப் பட்டியலை ஒன்றுக்கு இரண்டு முறையாகப் படித்து முடித்தான். அப்பாடா! பக்கிரிசாமியின் பெயர் அதில் காணப்படவில்லை.

ஆஸ்பத்திரி வாசலுக்கு வந்தான் மன நிம்மதியுடன். விளக்குகள் பளீரென்று எரிந்து கொண்டிருந்தன. ஆஸ்பத்திரிக் கட்டிடத்தின் உள்ளுக்குள் கண்டதெல்லாம் வெறும் கெட்ட கனவோ என்று தோன்றியது.

அந்தச் சமயம், ஒரு போலீஸ் வண்டி வந்து நின்றது. அதிகாரியொருவர் இறங்கி வந்து, "விபத்து ஸ்தலத்துக்குப் போகிறோம். யார் யார் வரவேண்டுமோ வரலாம்," என்று அழைத்தார்.

"விபத்து ஸ்தலத்துக்கா? அங்கே என்ன இனிமேல்?" என்று சக்கரை ஆச்சரியப்பட்டான்.

அருகிலிருந்த ஒருவர், "விழுப்புரத்திலிருந்து கிரேன் வந்து கவிழ்ந்த பெட்டிகளை நிமிர்த்தி நகர்த்த இத்தனை நேரமாகிவிட்டது. அந்தப் பெட்டிகளின் அடியிலிருந்து மீட்ட உடல்களை அங்கே வைத்திருக்கிறார்களாம்," என்று விளக்கினார்.

"அப்படியா!"

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ஒரே தாவலில், முதலாவதாக ஏறிக்கொண்டான் சக்கரை. அவனைத் தொடர்ந்து இருபது முப்பது பேர் ஏறிக் கொண்டார்கள்.

பக்பக்கென்று அடித்துக்கொள்ளும் இதயத்துடன் சிங்கப்பெருமாள் கோவிலுக்குப் பக்கத்தில் இருந்த ரயில்வே லயனை அடைந்தான் சக்கரை. ஆஸ்பத்திரியி லாவது ஓர் ஒழுங்கும் அமைதியும் நிலவியிருந்தன. இது நரகம், நரகம்தான்! டார்ச் லைட்டை ஒவ்வொரு பிரேதத்தின் முகத்திலும் அடித்து அடித்துப் பார்த்துக் கொண்டே நகரும் உருவங்களும், உறவினர்கள் திடீர் திடீரென இறந்தோரை அடையாளம் கண்டு எழுப்பும் கூச்சல்களும், ஏதோ ஆவியுலகத்தில் நடமாடுவது போன்ற உணர்ச்சியையே சக்கரைக்கு ஏற்படுத்தின.

பக்கிரிசாமியைப் பற்றிப் பதறத் தொடங்கியது முதல் இப்படியே திரும்பத் திரும்ப விதி விளையாடுவது ஏன்? சக்கரையின் திகில் கணத்துக்குக் கணம் அதிகப்பட்டது.

அவன் திகில் அடுத்த ஐந்தாவது நிமிடம் உண்மை யாயிற்று.

காணச் சகியாத கோரமாய், பக்கிரிசாமியின் உடலைக் கண்டான் சக்கரை.

அவன் நெஞ்சை எதுவோ குப்பென்று அடைத்துக் கொண்டது. கண்ணில் நீர் முட்டித் தளும்பி நின்றது. பக்கிரி சாமியுடன் பழகியது மிகச் சொற்பமான நாட்கள்தான். ஆனால், அவனைக் காட்டிலும் அந்தரங்கமான சீடனும் நண்பனும் சக்கரைக்குக் கிடைத்திருக்க மாட்டானே!

'பூமியிலேயே மிக மிக இனிமையான பூவின்மீது காலமில்லாத காலத்தில் மூடுபனி வந்து மூடிக்கொண்டாற் போல, சாவு போர்த்துக் கொண்டதே!' என்று ஜூலியட்டைக் குறித்து ரோமியோ புலம்பிய வரிகளை அவன் உதடுகள் முணுமுணுத்தன.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கண்ணைத் துடைத்துக் கொண்டான் சக்கரை. பர்மாவிலிருந்து உள்ளத்தில் தெம்புடனும் உடலில் சோர்வுடனும் கையில் திறமையுடனும் தாய்நாடு திரும்பிய அந்த இளைஞன், சக்கரைக்காக எத்தகைய வேலையையும் அபாயத்தையும் ஏற்கத் தயங்காத அந்தத் துணிச்சல்காரன், இப்படி ரயில் விபத்தில் உயிரைக் கொடுக்க நேரிட்டது என்ன பரிதாபம்! ஊசோ தாத்தாவைப் பழிவாங்க வேண்டுமென்று வீராவேசம் கொண்டிருந்தவனுக்கு இந்த முடிவுதானா?

சக்கரையின் மனத்தில் குரோதமும் கசப்பும் முளைத்தன. சவமாகிக் கிடந்த இளைஞனின் தலையை மடியில் எடுத்து வைத்துக் கொண்டு, "பக்கிரி! நீ யாரை வஞ்சம் தீர்க்க வேண்டுமென்று நினைத்திருந்தாயோ, அந்தக் காரியத்தை நான் செய்து முடிக்கிறேன். நம் நட்பின் மீது ஆணை," என்று கூறிக் கண்ணீருகுத்தான்.

அதே சமயம் ஒரு பேச்சுக் குரல் அவன் பக்கத்தில் கேட்டது.

ஒரு டாக்டரும், ஒரு பெரிய போலீஸ் அதிகாரியும் தான் பேசிக்கொண்டே வந்தார்கள். போலீஸ் அதிகாரி, "இதெல்லாம்தானே யாரும் 'க்ளெயிம்' பண்ணாத சடலங்கள்? அப்படியானால் அனாதைப் பிணங்களை எப்படி மரியாதையுடன் அடக்கம் செய்ய வேண்டுமோ அப்படிச் செய்துவிடுகிறோம். புகைப்படக்காரர் வந்து படம் எடுத்துக் கொண்டதும் ஏற்பாடு செய்துவிடலாம்," என்றார்.

"மன்னிக்க வேண்டும்," என்று சக்கரை எழுந்து அவர்களிடம் சென்றான். "இந்த இளைஞன் எனக்கு நெருங்கிய சினேகிதன். என் தம்பி மாதிரி. ஆகவே என் பொறுப்பில் விட்டுவிடுங்கள்," என்று பக்கிரிசாமியைக் காட்டினான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"உங்களுக்கு வேண்டியவரா? அடடா," என்று டாக்டரும் அதிகாரியும் வருத்தம் தெரிவித்தார்கள்.

"இந்தப் பொருள்களில் எதுவாவது இவருடையதா, பாருங்கள்," என்று சக்கரையைத் தனியே அழைத்துச் சென்ற போலீஸ் அதிகாரி, சேகரித்து வைத்திருந்த பிரயாணிகளின் உடமைகளைக் காட்டினார். பக்கிரிசாமியின் லுங்கி கைக்குட்டை யொன்றையும் பால் பாயிண்ட் பேனாவையும் தவிர வேறெதுவும் சக்கரைக்கு அடையாளம் தெரியவில்லை. கைக்குட்டையின் முனையில் சிறு சாவியொன்று முடிந்து வைக்கப்பட்டிருந்தது. அது யாருடையது, ஏன், எந்தப் பெட்டிக்குப் போட வேண்டிய சாவி என்பதெல்லாம் சக்கரைக்குப் புரியவில்லை. இருப்பினும் அந்த மூன்று பொருள்களையும் இறந்த நண்பனின் ஞாபகார்த்தமாகப் பத்திரப் படுத்திக் கொண்டான்.

போலீசாரின் உதவியுடன் பக்கிரிசாமியின் தகனக் கிரியைகளைத் தானே செய்து முடித்த பிறகு, வெகு நேரம் வரையில் சக்கரையின் உள்ளம் மரத்துப் போயிருந்தது. அந்தத் துயரம் மறைந்த பிறகுதான், பக்கிரிசாமியினால் கிடைக்கவிருந்த உதவி கை தவறி விட்டதே என்ற அதிர்ச்சி அவனை ஆட்கொண்டது.

சிங்கப்பெருமாள் கோவிலில் பக்கிரிசாமி என்னென்ன அறிந்தானோ! எவ்வளவு விஷயங்கள் கண்டு பிடித்தானோ!

மறுநாள் பொழுது விடிந்ததும் சிங்கப்பெருமாள் கோவிலை அடைந்தான் சக்கரை.

என்னதான் சின்ன ஊரென்றாலும், "வேத சிகாமணி என்று ஒருவர் இங்கே வந்தாரா!" என்று கேட்டால் யாரால்தான் பதில் தர முடியும்?

மாலை வரையில் பல தெருக்களைச் சுற்றினான். வேதசிகாமணியைப் போன்ற உருவம் தூரத்தில் தென்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

படுகிறபோதெல்லாம் விரைந்து சென்று பார்த்தான். எதுவும் பயனில்லை.

துயரமும் ஏமாற்றமும் மனத்தைக் கப்பிக்கொள்ள, புறப்பட்ட இரண்டாம் நாள் இரவு அத்தையின் வீட்டுக்குத் திரும்பினான் சக்கரை.

வீடு அமளி துமளிப்பட்டுக் கொண்டிருந்தது.

"அம்பிகாவைக் காணோம் சக்கரை! நேற்று ராத்திரி எங்கேயோ போயிருக்கிறாள். திரும்பவேயில்லை. அவளுடைய சித்தியின் வீட்டுக்கும் போகவில்லை. போலீஸ் ஸ்டேஷனுக்கெல்லாம் தகவல் தெரிவித்திருக் கிறேன்," என்று படபடத்தாள் பிரின்ஸிபால் தர்மு சிவராஜ்.

சக்கரை உடனேயே, "கலிவரதனின் வீட்டில் பார்த்தாயிற்றா?" என்றான்.

"வீடு பூரா புகுந்து பார்த்தாயிற்று."

சற்று நேரம் பேசாமல் இருந்தால்தான் குழப்பம் தெளியும் என்று சக்கரைக்குத் தோன்றியது. மாடிக்கு விரைந்து கதவைச் சாத்திக் கொண்டான்.

அடுத்தநாள் காலை அவனுக்குத் தெளிவு பிறந்தது. ஆனால், அவனது மூளைக்குள்ளிருந்து அல்ல. எங்கிருந்தோ வந்த ஒரு கிராமவாசியின் மூலம்.

திருவான்மியூருக்கடுத்த ஒரு கிராமத்தில் இருப்பவனாம் அவன். இரண்டு நாள் முன்பு அங்கு ஒரு குடிசை தீ விபத்துக்காளாயிற்றாம். அதில் அகப்பட்டுக் கொண்டிருந்த ஒரு பெண்ணை எடுத்துக் காப்பாற்றி யிருக்கிறார்களாம். "போலீசுக்குத் தெரிஞ்சால் எங்களைத் தொல்லைப் படுத்துவாங்கன்னு, நாங்களே நாட்டு வைத்தியர் வைச்சு, வைத்தியம் செய்து ஏதோ கொஞ்சம் குணப்படுத்தியிருக்கிறோம்," என்றான் அவன்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"இதை ஏன் எங்களிடம் வந்து சொல்லுகிறாய்?" என்று சக்கரை அதட்டினான்.

"அந்தப் பெண் மயக்கமா கிடக்குதுங்க. தன் பேரு அம்பிகான்னு ஒரு சமயம் சொல்லுது. தேவகின்னு இன்னொரு சமயம் சொல்லுது. நடுநடுவே இந்த விலாசத்தையும் உங்க பெயரையும் சொல்லுது," என்றான் அவன்.

31

கிராமத்து ஆள் சொன்ன சமாசாரத்தைக் கேட்டு ஒரு நிமிடம் பேச்சிழந்து போனார்கள் சக்கரையும் தர்மு சிவராஜும்.

அம்பிகாவைக் காணோமென்ற கவலை தீர்ந்ததே என்று மகிழ்ச்சி கொள்வதா? அல்லது தீ விபத்திலே மீண்டும் சிக்கிக் கொண்டாளே என்று கலங்குவதா?

"திருவான்மியூர் பக்கத்திலா உன் குடிசை? அங்கே ஏன் வந்தாள் அவள்?" என்று தர்மு அந்தக் கிராமத் தானைக் கேட்டாள்.

"அதெப்படிங்க எனக்குத் தெரியும்?" என்று கையைப் பிசைந்தான் வந்தவன்.

"உன் குடிசை எங்கே இருக்கிறது?"

"கடற்கரை ஓரமாய்."

"அக்கம் பக்கத்திலே நிறையக் குடிசை இருக்கிறதா?" என்று சக்கரை விசாரித்தான்.

"இல்லீங்க, ஒரே ஒரு குடிசைதானுங்க பக்கத்திலே. என் அண்ணார் இருக்கிறார் அங்கே. ஒரு கண்ணாலத்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

துக்காக மதுரை போயிருந்தாங்க அவரும் அவர் சம்சாரம் குழந்தைகளும். அப்பத்தானுங்க நெருப்புப் பிடிச்சு, இரண்டு குடிசையும் எரிஞ்சு போச்சுது. அதை அணைக்கிறப்போ இந்தப் பொண்ணு ஒரு மூலையிலே கிடந்ததைப் பார்த்து உடனே தூக்கி வேறே இடத்திலே கொண்டு வந்து வைச்சு, வைத்தியம் பண்ணினேனுங்க," என்று விளக்கினான் கிராமத்தான்.

சக்கரை கோபத்துடன் "என்ன பிரமாதமாய் வைத்தியம் செய்துவிட்டாய்? டாக்டரையா அழைத்து வந்தாய்? யாரோ நாட்டு வைத்தியரிடம் அல்லவா காட்டினேன் என்கிறாய்?" என்றான்.

"அதான் சொன்னேனுங்களே, போலீஸிலே தொந்தரவு பண்ணுவாங்கன்னு பயந்திட்டோமின்னு."

"சக்கரை, இப்போது ஆக வேண்டியதைப் பார். நடந்ததைப் பற்றி விசாரித்து என்ன பயன்?" என்றாள் தர்மு. "டிரைவரைக் கூப்பிட்டுக் காரை எடுக்கச் சொல்லு, இவனுடன் புறப்படலாம்."

சக்கரை வெளியை வந்து தேடினான். கூப்பிட்டுப் பார்த்தான். சிவராஜ்தான் எங்கிருந்தோ வந்தார். "டிரைவரையா தேடுகிறாய்? இப்பத்தான் மவுண்ட்ரோடு வரை அனுப்பினேன், ஒரு பிலிம்ரோல் வாங்கி வரும்படி," என்றார்.

"சரி, இப்போதைக்கு அவன் திரும்பமாட்டான்," என்று தீர்மானம் பண்ணிக்கொண்ட சக்கரை அதற்காகத் தயங்கவில்லை. அம்பிகா ஆபத்தில் கிடக்கிறாள் என்று கேள்விப்பட்டது முதலே அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. முன்போல வெறும் ஆராய்ச்சி ஆவல் மட்டுமல்லாமல், மெய்யான காதலே அவள்பால் ஏற்பட்டிருப்பதை இப்போதுதான் உணர்ந்தான் சக்கரை.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

'உண்மைக் காதலின் பாதை வழுவழுப்பாக இருந்ததென்று கதையோ வரலாறோ கூறியதில்லை!' என்று ஷேக்ஸ்பியரைப் போலவே அவனும் மறுகினான்.

வெகு நாட்களாயிற்று. அவன் ஸ்டியரிங்கைப் பிடித்து. பம்பாயில் அவன் நண்பர்கள் பலர் கார் வைத்திருக்கிறார்கள். அவனேகூட ஒரு பழைய மாடல் வைத்திருந்தான் சில காலம். இருந்தாலும் கார் ஓட்டுவதில் அவன் அதிகம் ஆர்வம் காட்டுவது கிடையாது. 'ஆனால் இப்போது அதையெல்லாம் நினைத்துக் கொண்டிராமல் விடுவிடுவென்று ஷெட்டுக்குப் போய்க் கதவைத் திறந்தான். நல்லவேளை, போன டிரைவர் காரை எடுத்துக் கொண்டு போகாமல் சைக்கிளில் போயிருந்தான்.

காரைத் தானே செலுத்தினான் சக்கரை.

அத்தையைப் பின் ஸீட்டிலும் கிராமத்தானைத் தன் பக்கத்திலும் அமர்த்திக் கொண்டவன் நிதானமாகவும் விரைவாகவும் வண்டியை ஓட்டினான். பார்வை சாலைமீது இருந்தாலும் கவனம் வேறெங்கோ மேய்ந்து கொண்டிருந்தது.

தர்மு சிவராஜுவும் தன் யோசனையில் ஆழ்ந்திருந்தாலும், மருமானின் மனச்சுமையைப் புரிந்து கொண்டாள். "ஏன் சக்கரை, நீ கூட வரும்போது ஏதோ பதற்றமும் கவலையுமாக வந்தாயே, என்ன விஷயம்? அம்பிகா காணாமற் போய்விட்டாள் என்று நான் சொல்லித்தானே உனக்குத் தெரியும்? இல்லை, அதற்கு முன்பே தெரிந்து தான் வந்தாயோ?" என்று கேட்டாள்.

"இல்லை, அத்தை," என்று சக்கரை, பின்னால் வந்த லாரிக்கு 'ஓவர்டேக்' செய்துகொள்ள அனுமதி தந்துவிட்டு, தன் காரை மெல்லச் செலுத்தினான்.

''வேறே என்ன கவலை? என்னதான் சொல்லேன்?''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"ஒன்றுமில்லை. அன்றொருநாள் டேப்ரெகார்ட ருக்காக வந்தானே — அதை உனக்கு முதலில் விற்றானே — அந்தப் பக்கிரிசாமி இறந்து போய்விட்டான், ரயில் விபத்தில்."

"அடப் பாவமே!" என்று வருத்தம் தெரிவித்தாள் தர்மு, "சின்ன வயசு... சுறுசுறுப்பாய், உனக்கு ரொம்ப ஒத்தாசையாக இருந்தானே..."

"ஆமாம்," என்று கூறிச் சூள் கொட்டினான் சக்கரை. "அந்த அதிர்ச்சியைச் சமாளித்துக்கொண்டு திரும்பினால் இன்னொன்று காத்திருக்கிறது! அத்தை, நான் பெரிய பகுத்தறிவுவாதி என்று நம்பிக்கொண்டிருந்தேன். எதற்கும் காரண காரியம் கண்டுபிடித்துவிட முடியுமென்று இறுமாப்புக் கொண்டிருந்தேன். இந்த அம்பிகாவின் பூர்வ ஜன்மம் பற்றிய ஆராய்ச்சிகளில் இறங்கியபிறகு, என் நம்பிக்கையெல்லாம் ஆட்டம் கண்டு வருகின்றன. சைத்தானின் குறும்பு மாதிரி எதுவோ ஒன்று நான் திரும்புகிற திசையெல்லாம் ஒரு ரகளை பண்ணி வைக்கிறது, பார்!"

அந்த மனத்தத்துவ மேதையின் மனம் மிகவும் நொந்திருக்கிறது என்பதைக் கண்டு கொண்டாள் தர்மு. ஆகவே ஆறுதலாக, "சே, சே! என்ன ஆகிவிட்டது இப்போது? உலகத்தில் எப்போதும் எல்லோருக்கும் நிகழ்கிற மாதிரிதான் இப்போதும் நடந்திருக்கிறது. உனக்குக் கூர்மையான புத்தி இருப்பதால் விசேஷமாகக் கற்பனை செய்துகொள்கிறாய். வலது கை மாதிரி இருந்த அந்தப் பையன் இப்படி அகால மரணம் அடைந்தால் மனம் கலங்குவது இயற்கைதானே? கொஞ்ச நேரத்தில் சரியாகிவிடும்," என்றாள்.

சக்கரை அவளுடைய நம்பிக்கையை ஆமோதிக்கவுமில்லை, எதிர்க்கவுமில்லை. "திருவான்மியூர் வந்து விட்டோமப்பா. எங்கே உன் குடிசை?'' என்று கிராமத்தானைக் கேட்டான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"அம்பிகா அம்மாளைப் பார்க்கணுமானால், இப்படி, சோத்துக்கைப் பக்கமாய்த் திரும்புங்க," என்று கூறிய கிராமத்தான், "அதோ அந்தப் பக்கம் தெரியுது பாருங்க, இரண்டு குடிசைங்க. அதுதாங்க எரிஞ்சு போச்சுது," என்று சுட்டிக் காட்டினான்.

அவன் சொன்றதற்கேற்ற மாதிரியே தூரத்தில் இரண்டு குடிசைகள் விழுந்து கிடந்தன. அவை தனியானதோர் இடத்தில் இருந்ததால் உடனே உதவி வந்திருக்க முடியாதுதான்.

வலது கைப் பக்கம் கார் திரும்பியது. ஒற்றைச் சாரியான குறுகலான சந்தில், ஏழெட்டுக் குடிசைகள் தென்பட்டன! "கார்! கார்! கார்!" என்று ஏழைச் சிறுவர்கள் பலர் அவர்கள் காரைச் சூழ்ந்து கொண்டு ஆரவாரம் செய்தார்கள்.

"போங்கடா அப்பாலே!" என்று அவர்களை விரட்டி விலக்கிவிட்டு, சக்கரையையும் தர்முவையும் சந்தின் கடைசியிலிருந்து குடிசைக்கு அழைத்துச் சென்றான் கிராமத்தான். இரண்டொரு வயோதிகர்களும் அவனைப் பின் தொடர்ந்து வந்தார்கள். ஒரு பெண்மணி எதிர் கொண்டு ஓடிவந்து, "வந்துட்டியா மச்சான்?" என்று ஆவலுடன் வரவேற்றாள்.

"என் சம்சாரம் பூவாயிங்க," என்று அவர்களுக்கு அறிமுகப்படுத்திவிட்டு, "எப்படி இருக்காங்க அந்தப் பொண்ணு?" என்று கேட்டான் அவன்.

"தேவகியம்மாளா? என்னவோ அப்படியேதான் இருக்குது," என்று கவலையுடன் கூறியவாறு அவர்களை அழைத்துச் சென்றாள்.

சக்கரையும் தர்முவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

அவன் அம்பிகா அம்மாள் என்றும், அவள் தேவகியம்மாள் என்றும் குறிப்பிட்டதிலிருந்தே, அம்பிகா

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

எப்படிப்பட்ட நிலையில் இருக்கிறாள் என்பதைக் காட்டி விட்டதே!

பதைப்புடன் குடிசைக்குள் முன்னே நுழைந்த சக்கரை, அதிர்ச்சியடைந்தவனாக வாசலிலேயே நின்றான். அவனைத் தள்ளிக்கொண்டு உள்ளே எட்டிப் பார்த்த பிறகுதான் தர்முவுக்குப் புரிந்தது அவனுடைய அதிர்ச்சிக்குக் காரணம்.

முகமெல்லாம் ஏதோ களிம்பு பூசப்பட்டவளாக அம்பிகா ஒரு கிழிந்த பாயில் கிடந்தாள். கையிலும் காலிலும் கூடப் பழுப்பான, மெழுகு போன்ற பொருள் பூசப் பட்டிருந்தது.

"பாவி! அயோக்கியா! தீக்காயம் பட்டவளை இப்படியா வைத்திருப்பது? உன்னை என்ன செய்தால் தகும்!" என்று கிராமத்தான் மீது ஆத்திரத்துடன் பாய்ந்தான் சக்கரை.

"ஐயையோ, இல்லை சாமி! இல்லை சாமி! எனக்கு என்னங்க தெரியும்? முடிஞ்ச வரையில் வைத்தியம் செய்தேனுங்க!" என்று அவன் அலற, அவன் மனைவியும் மற்றவர்களும் குறுக்கே விழுந்து பிரிக்க, "சக்கரை! உன் கௌரவத்தை மறந்து என்ன இது?" என்று தர்மு அதட்ட, அதற்குள் தபதபவென்று நாலைந்து அடிகள் விழுந்து விட்டன கிராமத்தானுக்கு.

"நீயே பார், அத்தை, இந்தப் பாவிகளெல்லாம் அம்பிகாவை என்ன நிலையில் வைத்திருக்கிறார்களென்று! இதைவிட அவளைக் கொலையே பண்ணியிருக்கலாமே!" என்று புலம்பிக்கொண்டே சக்கரை குனிந்து அம்பிகாவினருகில் மண்டியிட்டுக் கவனித்தான்.

இவ்வளவு சத்தத்துக்கும் பேச்சுக்கும் அம்பிகா எழுந்திருக்கக் காணோம். ஆனால் அவள் உதடுகள் மெல்ல என்னவோ முணுமுணுத்துக் கொண்டிருந்தன. தீ

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

விபத்தினால் அவளுடைய முகம், உடற்கட்டு, குரல் எல்லாமே மாறுதலுக்குள்ளானாற் போலிருந்தன.

உள்ளே எரிந்துகொண்டிருந்த முட்டை விளக்கின் வெளிச்சம் போதாதென்று யாரோ ஒரு ஹரிக்கன் லைட்டும் ஏற்றிக்கொண்டு வந்தார்கள். கிராமத்தான், பாவம், தான் வாங்கிய அடியைக்கூட மறந்து, அதைத் தூக்கிப் பிடித்தான் அம்பிகாவின் முகத்தினருகில். சக்கரை அவளுடைய இரு தோள்களைப் பிடித்து, "அம்பிகா! எழுந்திரு! இதோ பார்! யாரெல்லாம் வந்திருக்கிறோம் பார்! விழித்துக்கொள் அம்பிகா!" என்று உலுக்கினான். அந்தப் பேதைப் பெண்ணுக்கு ஏற்பட்டுவரும் எண்ணற்ற இன்னல்களை நினைத்து அவன் உள்ளம் அழுதது போலும். கண்ணீர் பொங்கிக்கொண்டு வந்தது. பெண் பிள்ளை போல உணர்ச்சியை வெளிப்படுத்திக் கொள்கிறோமென்ற நாணமற்று, அதைத் துடைக்காமலே அவன் இருக்கவே, சூடான இரண்டு கண்ணீர் சொட்டுக்கள் அம்பிகாவின் மீது விழுந்தன.

அந்தச் சூடு உறைத்த மாதிரி திடுக்கிட்டு மலங்க மலங்க விழித்தாள் அம்பிகா. சுற்றியுள்ளோரை மாறி மாறிப் பார்த்தாள். பிறகு விக்கி விக்கி அழுதுகொண்டே குப்புறப் படுத்துக் கொண்டாள் பாயில்.

இப்போது தர்மு சிவராஜ் வந்து, "சீ! சீ! அசடு! என்ன நேர்ந்துவிட்டது இப்போது? நாங்களெல்லாம்தான் வந்திருக்கிறோமே, தெரியவில்லையா? எங்கே நிமிர்ந்து பார். யார் யார் வந்திருக்கிறோம், சொல் பார்க்கலாம்," என்று அவளுடைய முதுகை ஆதுரத்துடன் தடவியவாறு பேசினாள்.

அம்பிகா எழுந்திருக்கவில்லை. ஆனால் கலங்கிய குரலில், "தெரிகிறது மேடம். நீங்கள் பிரின்ஸிபால்... உங்கள் மருமான் சக்கரை..." என்று பதிலளித்தாள்.

சக்கரை ஓரளவு நிம்மதி அடைந்தவனாக, "பின்னே என்ன? எல்லாம் தெளிவாய் இருக்கிறதல்லவா?

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

இந்த முட்டாள் உனக்கு என்னென்னவோ நேர்ந்து விட்டதாகச் சொன்னானே!" என்றான்.

"அவர் சொன்னதில் தப்பில்லை," என்றாள் அம்பிகா. "முன்னைக் காட்டிலும் அதிகமாகத் தேவகியின் நினைவுகள் எனக்கு வருகின்றன. நான் அம்பிகா என்கிற எண்ணம் கொஞ்சம் கொஞ்சமாய் மறைந்துகொண்டே போகிறது. உங்கள் இருவரையும் ரொம்பக் கஷ்டப்பட்டுத் தான் ஞாபகப்படுத்திக் கொண்டேன்..." என்றாள்.

"இது வெறும் அதிர்ச்சிதான் அம்பிகா..."

"அம்பிகா... அம்பிகா..." என்று அவள் உதடுகள் முனகின. "இல்லை, இல்லை. நான் தேவகிதான். என்னை அம்பிகா என்று நீங்கள் பெயர் சொல்லிக் கூப்பிடும்போது வேறு யாரையோ கூப்பிடுகிற மாதிரி தோன்றுகிறது. தேவகி என்று அழைத்தால் உடனே ஏனென்று கேட்க வேண்டும் போல் இருக்கிறது..." என்று அவள் விம்மினாள்.

அவளுடைய குழந்தைத் தனமான பேச்சைக் கேட்டுச் சிரித்தாள் தர்மு சிவராஜ். "நீ யாராயிருந்தாலும் எங்களுக்கு ஒன்றுதான் அம்பிகா. உன் மனசுக்கு ஆறுதல் தருவதாயிருக்கும் பட்சத்தில், உன்னைத் தேவகி என்றே கூப்பிட்டுவிட்டுப் போகிறோம். என்ன நஷ்டம்?" என்றாள்.

சக்கரையோ, "என்னதான் நேர்ந்தது உனக்கு? அதைச் சொல்லேன்," என்று வற்புறுத்தினான்.

சக்கரையைப் போலவே ஒருவன் வந்து தன்னை ஏமாற்றி அழைத்துச் சென்றதையும், அவுட்ஹவுஸ் போன்ற ஓரிடத்தில் தான் அடைக்கப்பட்டதையும், கடற்கரை ஓரத்தில் எவரோ துரத்தியதையும் விவரித்தாள் அம்பிகா. "பிறகு என்ன நேர்ந்ததென்றே எனக்குத் தெரியவில்லை. ஒரு குடிசை நெருப்புப் பிடித்து எரிவது தெரிந்தது. அங்கே யிருந்து யாரோ என்னை வா வா என்று அழைக்கிற மாதிரி தோன்றியது. என்னையும் மறந்து, ஆபத்தைக் கண்டு அஞ்சாமல் அந்த நெருப்புக்குள் புகுந்துவிட்டேன்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அதுவரைதான் ஞாபகம் இருக்கிறது. பிறகு இந்த நால்வர் களின் எதிரில் கண் விழித்தேன்," என்றாள்.

"நல்ல நல்லவர்கள் போ!" என்று இகழ்ந்துரைத்த சக்கரை, "இரு, வருகிறேன்," என்று கூறி வெளியே சென்றான். காரை எடுத்துக்கொண்டு சுற்று வட்டாரம் இரண்டு மைல் தூரம் வரையில் சுற்றிவிட்டுத் திரும்பினான். அவன் பார்த்தவரையில் எங்கேயும் பெரிய பங்களாவோ அவுட்ஹவுஸோ இருக்கிற மாதிரி தெரிய வில்லை. அம்பிகா எதைக் கண்டு குறிப்பிட்டிருப்பாள் பின்னே?

அவன் திரும்பவும் குடிசையை அடைந்தபோது, காருக்காக வெளியே காத்திருந்தாள் தர்மு. கார் நின்றதும் அம்பிகாவுடன் ஏறிக்கொண்டாள் வண்டிக்குள். அவள் மடியில் தலை வைத்து படுத்தாற்போல் களைப்புடன் சாய்ந்து கொண்டாள் அம்பிகா.

"நாம் போகலாம் சக்கரை," என்றாள் தர்மு.

"ஆமாம். முதலில் ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போக வேண்டும் அம்பிகாவை," என்று சொன்னவாறு காரை ஸ்டார்ட் பண்ணினான் சக்கரை.

அவ்வளவுதான். அந்தக் கிராமத்தானும் அவன் மனைவி பூவாயியும் நெடுஞ்சாண்கிடையாகக் காரின் முன்னால் விழுந்து எழுந்தார்கள். "சாமி! என்னை மன்னிச்சிடுங்க. ஆஸ்பத்திரிக்குப் போகாதீங்க. உண்மையைச் சொல்லிடறோம். எங்களைக் காட்டிக் கொடுக்காதீங்க," என்று ஒருவர் மாற்றியொருவர் கதறினார் கள். "ஆமாங்க, போனால் போறாங்க. விட்டிடுங்க," என்று வேறு சில குடிசை வாசிகளும் அவர்களுக்காகச் சிபாரிசு செய்தார்கள்.

இந்த எதிர்பாராத நிகழ்ச்சியைக் கண்டதும் காரை விட்டே இறங்கி விட்டான் சக்கரை, "என்ன, என்ன? என்ன

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

உண்மையை ஒப்புக்கொள்ளப் போகிறாய்?" என்று கேட்ட வண்ணம்.

பூவாயியும் அவள் கணவனும் தலை குனிந்து நிற்க, ஒரு கிழவர் முன் வந்து சொன்னார்: "இவனுக்கு அண்ணாரும் கிடையாது, கிண்ணாரும் கிடையாதுங்க. பக்கத்துக் குடிசையிலே இருந்தவங்க பங்காளிங்க. எப்பப் பார்த்தாலும் இரண்டு வீட்டுக்குச் சண்டை. ஒரு நாள் ராவு அந்த ஆள் இவன் குடிசைக்குத் தீ வைச்சிட்டு ஓடிட்டான். இவன் பார்த்திட்டு அவன் குடிசைக்குக் கொள்ளி வைச்சான். அந்தச் சமயத்திலே இந்த அம்மாள் ஓடி வந்திருக்காங்க. இந்தப் பாவி, அப்போ இருந்த வெறியிலே, இவங்களைப் பக்கத்துக் குடிசைப் பொம்பளைன்னு நினைச்சு, நெருப்பிலே தள்ளிட்டான். அதுக்குள்ளாற மத்தவங்க ஓடி வந்து, நெருப்பிலேயிருந்து மீட்டுக் காப்பாத்திட்டாங்க..."

"அட கொலைகாரப் பாவி!" என்று சக்கரை உறுமியதும் மீண்டும் புருஷனும் பெண்சாதியுமாக அவன் காலில் விழுந்தெழுந்தார்கள். "தப்புத்தானுங்க நாங்க செய்ஞ்சது. மன்னிச்சிடுங்க. அதனாலேதான் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகாதீங்கன்னு கெஞ்சுறோம். ஏது தீ, எப்ப நடந்திச்சுன்னெல்லாம் விசாரிப்பாங்க. நாங்க டாணாவுக்குப் போற மாதிரி நேரும்," என்றாள் பூவாயி.

"நடந்தது நடந்துவிட்டது. தொலைகிறார்கள் வா," என்று தர்மு சிவராஜும் சிபாரிசு செய்யவே சக்கரை, காரை ஆஸ்பத்திரிக்குச் செலுத்தாமல் நேரே வீட்டுக்கே ஓட்டினான்.

பிரின்ஸிபாலின் இல்லத்தை அடைந்ததும், ஜாக்கிரதையாக ஒரு அறையில் அம்பிகாவைப் படுக்க வைத்தார்கள். எந்த சமயத்தில் யார் வந்து அவளை எப்படிக் கடத்திப் போய்விடுவார்களோ என்ற அச்சம்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ஏற்பட்டதால், அறை வாசலில் சிவராஜைக் காவல் போட்டு விட்டார்கள்.

அவர்கள் குடும்பத்துக்கு நெருங்கிய நண்பரான ஒரு டாக்டரை அழைத்து வந்தார்கள். முகத்தில் அவர் கை பட்டதுமே "ஐயோ! ஐயோ!" என்று அலறினாள் அம்பிகா. "என்னைத் தொடாதீர்கள்! தொட்டால் உயிர் போகிறது!"

"முகத்தின் ரணங்கள் ரொம்பப் பச்சையா யிருக்கிறது போலிருக்கிறது. ஆறின பிறகுதான் தொடுவதற்கு அனுமதிப்பாள். ஆகவே, ஆறுவதற்கு மருந்து தருகிறேன்." என்று கூறி ஊசி போட்டார். விழுங்குவதற்குச் சில மாத்திரைகளையும் தந்தார்.

அடுத்த நாலைந்து நாட்களுக்கு அம்பிகா அந்த அரை மயக்கமான நிலையிலேயே கிடந்தாள். ஒரு நர்ஸ் அவள் பக்கத்திலேயே இருந்து கவனித்துக்கொள்ள வேண்டியிருந்தது.

அன்று குடிசையில் சொன்னது போலவே, அம்பிகா என்ற நினைவு வரவரக் குறைந்து, தேவகி என்ற நினைவு அவளை அதிகமாக ஆக்கிரமித்துக் கொள்வது தெரிந்தது. தன் சித்தியைப்பற்றி இரண்டு வார்த்தைகூடச் சொல்லவில்லை. "காலேஜுக்கு வரவில்லையா, அம்பிகா?" என்று ஒருமுறை பிரின்ஸிபால் அழைத்துப் பார்த்தாள்.

"காலேஜா? எனக்கு எதற்குக் காலேஜ்? கல்யாணம் எல்லாம் நடந்து முடிந்து, குடித்தனம் பண்ணுகிறேன். இப்போது காலேஜுக்குப் போனால் நாலுபேர் சிரிக்க மாட்டார்களா?" என்று அம்பிகா பதில் தந்தாள்.

ஒரு வாரம் கழித்து, அவளுடைய முகத்தின் புண்களெல்லாம் ஆறிவிட்டன.

ஒரு பஞ்சுத் துண்டைத் தண்ணீரில் நனைத்து அவள் முகத்தை மெல்லத் துடைத்தார் டாக்டர்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

முகம் நன்றாய்த் தெரிந்தது.

அந்த வதனத்தில்தான் எத்தனை தழும்புகள்! எவ்வளவு வடுக்கள்! எப்படிப்பட்ட கோரம்!

சக்கரை மௌனமாக ரத்தக் கண்ணீர் வடித்தான். எப்படிப்பட்ட அழகு முகம் எப்படி விகாரமாகிவிட்டது! பார்க்கவே சகிக்கவில்லை அவனுக்கு.

அந்த ஓர் அதிர்ச்சி மட்டுமல்ல. இன்னொன்றும் கொடுக்கத் தொடங்கினாள் அம்பிகா.

"நான் முன்ஜன்மத்தில் கலிவரதனின் மனைவி, தேவகி. என்னை என் கணவரின் வீட்டில் கொண்டுபோய் விட்டு விடுங்கள்." என்று கெஞ்ச ஆரம்பித்தாள் அவனிடம்.

32

தர்முவும் சக்கரையும் நிஜமாகவே திடுக்கிட்டுப் போனார்கள்.

கலிவரதனின் வீட்டுக்கு அவளைக் கொண்டு போய் விடுவதாவது! அம்பிகாவின் பேச்சை விளையாட்டென்று தள்ளவும் முடியவில்லை. நிஜமாகப் பேசுகிறாள் என்று எடுத்துக்கொள்ளவும் இயலவில்லை.

"அவளே சொன்ன மாதிரி தேவகியின் நினைவு தான் அவளை அதிகமாகப் பிடித்தாட்டுகிறது." என்று தர்மு கவலையுடன் சொன்னாள்.

"விசித்திரமான, சுவாரசியமான மாறுதல்தான்," என்று யோசனையுடன் பதிலளித்தான் சக்கரை. "இது எவ்வளவு தூரம் போகிறது என்பதை அருகிலேயே இருந்து

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

பார்க்கப் போகிறேன். இந்த அறையை விட்டு அசையப் போவதில்லை."

"நல்ல முடிவுதான்," என்று பாராட்டிய தர்மு, வேண்டாவெறுப்பாக உட்கார்ந்திருந்த கணவரின் முகத்தில் மலர்ச்சி தெரிவதை உடனே கண்டுவிட்டாள். "சக்கரை இருப்பான் என்பதற்காக நீங்கள் எங்கேயும் போய்விட நினைக்காதீர்கள். உங்களுக்கு டூட்டி போட்டது போட்டது தான். அறை வாசலைவிட்டு நகர்ந்தீர்களோ, தெரியும் சேதி!" என்று எச்சரிக்கை செய்தாள்.

சிவராஜ் பாவம், கத்தரிக்கோலும் கையுமாகத் திருதிருவென்று விழித்தார். மனைவியின் கட்டளையை மீற முடியாமல், ஒரு மூட்டை பழைய புகைப்படங்களைக் கொண்டுவந்து வைத்துக் கொண்டிருந்தார். ஆல்பங்களில் அவற்றைக் கத்தரித்து ஒட்டிக் கொண்டிருப்பதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை அவருக்கு.

"அத்தை, ஒரு காரியம் செய் இன்று சாயந்தரம்," என்றான் சக்கரை, தர்மு சிவராஜ் கல்லூரிக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த சமயம்.

"என்ன வேண்டும்?"

"அம்பிகாவின் சினேகிதிகள் இரண்டு மூன்று பேரை அழைத்து வா. அம்பிகா அவர்களிடம் எப்படி நடந்து கொள்கிறாள் என்று பார்க்க வேண்டும்."

"அழைத்து வருகிறேன்," என்று ஒப்புக்கொண்ட பிரின்ஸிபால், "இன்னொரு விஷயம் சக்கரை," என்றாள்.

"ஏதோ அம்பிகாவுக்குக் கெடுதலாக ஒன்றும் நேராத வரையில் நாம் பார்த்துக் கொண்டிருந்தது சரிதான். ஆனால், இவ்வளவு விபரீதங்களெல்லாம் நேர்ந்த பிறகு, அவள் சித்திக்குத் தெரிவிக்காமலிருக்கலாமா? நாளை நமக்குப் பொல்லாப்பு வரக்கூடாது, பார்."

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"உண்மைதான். ஆனால் இன்னும் இரண்டொரு நாள் பொறு. அம்பிகாவின் சித்தியிடம் சொல்வதில் சில அபாயம் இருக்கிறது."

"என்ன அபாயம்?"

"இவ்வளவு கேடுகளுக்கும் காரணம், சூரி என்ற அயோக்கியன்தான்," என்று சக்கரை சொன்னதுமே இடைமறித்த தர்மு, "யார்? அந்த நாடகப் பயிற்சி ஸ்கூல் நடத்துகிறானே, அவனா?" என்றாள் ஆச்சரியத்துடன்.

"அவனேதான். அது பெரிய கதை. இன்னொரு நாள் சாவகாசமாய்ச் சொல்கிறேன். அந்தச் சூரியிடம் அம்பிகாவின் சித்திக்கு அபார நம்பிக்கை. நாம் என்ன சொன்னாலும் அவனிடம் போய்ச் சொல்லி வைப்பாள். அது வேண்டாமென்று பார்க்கிறேன்."

"என்னவோ அப்பா. உனக்குச் சரியென்று தோன்றினால் சரி," என்று தர்மு சிவராஜ் காரிலேறிக் கொண்டு, "விடு," என்றாள் டிரைவரிடம்.

கார் ஸ்டார்ட் ஆன சமயம் ஒரு தந்திச் சேவகன் உள்ளே வந்து சக்கரையிடம் ஒரு தந்தியைக் கொடுத்து கையெழுத்துப் பெற்றுக்கொண்டு திரும்பினான்.

சக்கரை தந்தியைப் பிரித்துப் படிக்கிற வரையில் தர்முவும் காத்திருந்தாள். "என்ன சக்கரை?"

"த்ஸு," என்று சூள் கொட்டினான். "நேற்று பேப்பரில் படித்தபோதே நினைத்தேன்."

"என்ன சமாசாரம்?"

"எங்கள் பல்கலைக்கழகத்தில் ஒரே மாணவர்கள் கலாட்டாவாக இருக்கிறது. உங்கள் யூனிவர்ஸிடி பிள்ளைகள் மாதிரி சாதுப் பிள்ளைகளா எங்கள் பையன்கள்!" என்று பெருமூச்செறிந்தான் சக்கரை. "அதனால் எல்லாப் பல்கலைக் கழக ஆசிரியர்களும், ஊழியர்களும் ஸ்தலத்துக்கு வந்து சேர்ந்துவிட வேண்டு

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

மென்று வைஸ் சான்ஸலர் தந்தி கொடுத்திருக்கிறார். எப்படிப் போவது என்றுதான் தெரியவில்லை..."

"அதெல்லாமில்லை. உன் யூனிவர்ஸிடிக்குத்தான் உன் முதல் கடமை," என்று கண்டிப்புடன் சொன்னாள் தர்மு. "தந்தி வந்த பிறகு பேசாமலிருக்கக்கூடாது. போய் வைஸ் சான்ஸலரை நேரில் பார்த்து நிலைமையைச் சொல்லி விட்டுத் திரும்பி விடு. அதுவரையில் நான் அம்பிகாவைக் கண்ணுக்குள் வைத்துக் காப்பாற்றுகிறேன்."

"சரி, இன்று பிற்பகல் பிளேனில் புறப்படுகிறேன்," என்று கூறி, தந்தி உறையை மடித்துப் பைக்குள் வைத்துக் கொண்டு வீட்டுக்குள் திரும்பினான் சக்கரை.

துணிமணிகளையும், புத்தகங்களையும் ஸூட்கேஸில் அடுக்கி வைத்துக் கொண்டிருந்தபோது, ஒரு புறம் தன் பல்கலைக் கழக மாணவர்களைப் பற்றியும் மறுபுறம் அம்பிகாவின் நிலைமை பற்றியும் சக்கரையின் மனத்தில் கவலைகள் அலை மோதின. வேறெப்போதையும் காட்டிலும் இப்போதுதான் அம்பிகாவை அதிகமாகக் கண்காணிக்க வேண்டும் என்று நினைத்திருந்தான். அது இயலாமல் போகிறதே என்ற கசப்பு அவனை வாட்டிற்று. பக்கிரிசாமி போன்ற அத்தியந்த நண்பன் — எதற்கும் துணிச்சலுள்ள ஒரு துணைவன் — இல்லாத குறையை இப்போதுதான் அதிகமாக உணர்ந்தான்.

குளியல், சாப்பாடு முதலியவற்றை அவன் முடித்துக் கொள்வதற்கும், விமான தளத்துக்கு அவனை அழைத்துச் செல்ல தர்முவின் கார் வந்து சேருவதற்கும் சரியாயிருந்தது. அதுவரையில் அவன் மாடிக்குப் போய்ப் பார்க்கவில்லை. புறப்படும் முன் அம்பிகாவிடம் விடை பெற்றுக்கொண்டு, ஆறுதலும் தைரியமும் சொல்லிவிட்டுப் போக வேண்டுமென நினைத்தான்.

அறையின் வெளிப்புறம் சிவராஜ் மிகுந்த அக்கறையோடு ஆல்பம் தயாரித்துக் கொண்டிருந்தார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"அம்பிகா," என்று கூப்பிட்டபடியே உள்ளே நுழைந்தான் சக்கரை.

அவள் கட்டிலில் ஒருகணித்துப் படுத்திருந்தாள். "அம்பிகா," என்று ஒரு முறை கூப்பிட்டதும் எழுந்திருக்கும் பழக்கம் அவளிடம் போய்விட்டது. அருகில் சென்று அவள் முதுகில் சக்கரை மெல்லத் தட்டியதும், சரேலென் எழுந்தவள் ஆடையைச் சரி செய்து கொண்டு, பீதியுற்ற வளாகக் கட்டிலின் ஒரு மூலையில் ஒதுங்கிக் கொண்டாள். பயந்துபோன அணில் குஞ்சு, மரக் கிளையின் கோடியில் ஒதுங்கிக் கொள்வதைப் போன்றிருந்தது அவள் நிலை.

"அம்பிகா, நான்தான். வேறு யாரும் இல்லை," என்று சக்கரை சொல்லச் சொல்ல அவள் பதற்றம் அதிகரித்தது. உடல் மேலும் நடுங்கியது. அவள் வாயினின்றும் ஒரு சொல் கூட வர மறுத்தது.

"நான் பம்பாய் போக வேண்டியிருக்கிறது, அம்பிகா. ரொம்ப அவசரமான அழைப்பு வந்திருக்கிறது," என்ற சக்கரை தந்தியை எடுத்து அவளிடம் காட்டினாள்.

அவள் பார்த்தாள். அவள் முகத்தையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த சக்கரைக்கு, பிரிவை உணர்ந்து அவள் கலங்குவதாகத் தோன்றவில்லை. அதற்கு நேர் எதிரிடையாக, ஒருவித ஆறுதலும் மகிழ்ச்சியும்கூட அவளது தழும்பேறிய வதனத்தில் பரவுவதைப் போலிருந்தது.

கலவரம் கொண்டவனாக, "அம்பிகா, நான் உன்னைப் பிரிந்து போவதில் உனக்கு வருத்தமில்லையா?" என்றான் ஏமாற்றம் நிறைந்த குரலில்.

"ஏனில்லாமல்?" என்று அவசர அவசரமாக மறுத்தாள் அவள். "நீங்கள் போகக்கூடாது. போனால் எனக்கு யார் துணை?"

அவள் பேசிய விதத்தைக் கேட்டபோது சக்கரைக்கு அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை. இரண்டு நாள் முன்பு அவள் பேச்சிலும் பார்வையிலும்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ததும்பிய காதல் எங்கே ஒளிந்து கொண்டது! ஏன் இப்படி இவள் போலியாக நடிக்கிறாள்? இவள் முகத்தில் ஏற்பட்ட வடுக்கள் உள்ளத்திலுமா பதிந்துவிட்டன?

"அம்பிகா, பம்பாய்க்கு நான் பிரியமாக எடுத்துக் கொண்டு போகிறபொருள் எது தெரியுமா?" என்று கேட்டான்.

"எது?"

"நீ அடிக்கோடிட்டுத் தந்த ஷேக்ஸ்பியர் புத்தகம் தான்."

எவ்விதமான நெகிழ்ச்சியும் அவள் முகத்தில் பரவக் காணோம். சக்கரை மேலும் ஏமாற்ற மடைந்தவனாக,

"அம்பிகா... அன்று நீ பேசியபோது... என்னிடம் உனக்கு..." என்று தடுமாறினான். எவ்வளவோ லெக்சர்களை மடை திறந்த வெள்ளமாகச் செய்து தேர்ச்சி பெற்றிருந்த அந்த விரிவுரையாளனுக்குக்கூட, 'காதல்' என்ற சொல்லை உச்சரிக்கக் கூச்சமாயிருந்தது. "உனக்கு என்மீது... என்னிடம்... நான் நினைத்தது தவறா, அம்பிகா..." என்று தலைகுனிந்தான்.

ஒரு விம்மல்தான் குபீரென்று வெளிப்பட்டது அவளிடமிருந்து. முழந்தாளைக் கட்டிக்கொண்டு கட்டிலின் ஓரத்தில் உட்கார்ந்திருந்தவள, முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள்.

சிவராஜ் கூடத் திகில் கொண்டவராக உள்ளே ஓடி வந்தார். "ஒன்றுமில்லை... நீங்கள் போங்கள்," என்று அவரை அனுப்பிய சக்கரை, "அம்பிகா... என்னை மன்னித்து விடு... நான் தப்பாகப் பேசுகிறேன் என்று எனக்கே தெரியவில்லை," என்றான்.

"என்னிடம் அப்படியெல்லாம் பேசாதீர்கள்... எனக்கு எதுவுமே நினைவில்லை... உங்களிடம் எனக்கு...

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

எனக்கு மதிப்புத்தான் உண்டு... வேறொன்றும் தெரியவில்லை..." என்று விம்மல்களுக்கிடையே திக்கித் திணறிப் பதிலளித்தாள் அவள். "நான் மணமானவள், கலிவரதன்தான் என் கணவர். அதுதான் எனக்குத் திரும்பத் திரும்பத் தோன்றுகிறது..."

"அது ஒரு தற்காலிகமான மயக்கம்தான்... சீக்கிரம் போய்விடும்," என்று உறுதி கூறினான் சக்கரை.

"இல்லை. எனக்கு அப்படித் தோன்றவில்லை... நான் இன்னொருவரின் மனைவி என்ற எண்ணம்தான் வினாடிக்கு வினாடி அதிகரிக்கிறது... என்னைத் தயவு பண்ணி அவருடைய வீட்டில் கொண்டு போய் விட்டு விடுங்கள்..."

"பேசாமலிரு அம்பிகா," என்று அதட்டினான் சக்கரை. அவள் பேச்சைக் காது கொடுத்துக் கேட்கவே சகிக்கவில்லை அவனுக்கு. "கலிவரதனைப் பற்றி உனக்குத் தெரியாது. அவன் படா குடிகாரனாக இருக்கிறான் இப்போது."

"இருக்கட்டும். எப்படிப்பட்டவரானாலும் அவர் என் புருஷன்."

"குடிகாரன் என்றேன்?"

"நான் இறந்துபோன துக்கத்தினால் அப்படி மாறி யிருப்பார். நான் அவரிடம் திரும்பிப் போனால் சரிசெய்து, அவரை நல்லவராகப் பண்ணிவிடுவேன்."

சக்கரை அவளையே வெறிக்க வெறிக்கப் பார்த்தான். இறந்து விட்டேனென்று சொன்ன வாயினாலேயே கணவரிடம் திரும்பச் சென்று விடுகிறேன் என்றும் அவள் பேசுவது எத்தனை வேடிக்கையாயும் முன்னுக்குப்பின் முரணாயும் இருக்கிறது! அம்பிகாவின் முற்பிறப்பைப் பற்றி இத்தனை நாள் செய்து வரும் ஆராய்ச்சியில் இதுதான் முக்கியமான கட்டம் என்று

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அவனுக்குத் தோன்றியது. இப்போது பார்த்து வெளியூர் போக வேண்டியிருக்கிறதே என்றும் அவன் வருந்தினான்.

"சரி, அம்பிகா. நான் இரண்டொரு நாளில் பம்பாயிலிருந்து திரும்பிவிடுவேன். வந்ததும் நீ கலிவரதனின் வீட்டுக்குப் போவதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறேன். அதுவரை பொறுமையாக இரு," என்று சொல்லிவிட்டு ஒரு வினாடி நின்றான். அவள் கையில் மெல்லத் தட்டி ஆறுதல் கூறிவிட்டுப் புறப்பட வேண்டும் போல் இருந்தது. ஆனால் அவளை நெருங்க நெருங்க அவளுக்குப் பீதி அதிகரிப்பது வெளிப்படையாய்த் தெரிந்ததால் மேலும் அவளை அதிர்ச்சிக்கு உள்ளாக்கக் கூடாதென்று தீர்மானித்தவனாக உடனே புறப்பட்டான். வெளியே இருந்த சிவராஜியிடம், "இப்படி வாருங்கள்," என்று மாடிப்படியினருகே அழைத்துச் சென்றான்.

"கண்ணைக் கொட்டக் கொட்டத் திறந்து கொண்டிருக்க வேண்டும். உங்களிடம் ஒரு பெரிய பொறுப்பை ஒப்படைத்துவிட்டுப் போகிறேன்," என்று எச்சரித்தான்.

"அதுதான் தெரிகிறதே?" என்று சிவராஜ் அலுத்துக் கொண்டார். "நான் உனக்குப் பயப்படா விட்டாலும் உன் அத்தைக்குப் பதில் சொல்லியாக வேண்டும். கவலைப்படாமல் போய் வா," என்று வழியனுப்பிவிட்டுத் தம் இருக்கைக்குத் திரும்பி வந்து உட்கார்ந்து கொண்டார்.

தன் வேலையில் முழுகு முன்னர் ஒருமுறை உள்புறம் எட்டிப் பார்த்தார். இத்தனை நேரமாக உட்கார்ந் திருந்தவள் இப்போது படுத்துக் கொண்டு விட்டது தெரிந்தது. 'பாவம்,' என்று தனக்குள் நினைத்துக் கொண்டார். எதற்காகத் தன் மனைவியும் சக்கரையும் இவளுக்காக உயிரை விடுகிறார்கள் என்று அவருக்குப் புரியவில்லையெனினும், அவளைப் பற்றிப் பரிதாபமும் ஏற்படாமற் போகவில்லை.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"எனக்காக ஓர் ஒத்தாசை செய்கிறீர்களா? சார்?" என்று அவள் உள்ளிருந்து கூப்பிட்டாள்.

"ஓ! எதுவும் செய்கிறேன், என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

"கொஞ்சம் சுடு தண்ணீர் வேண்டும். தொண்டை யெல்லாம் கரகரவென்று இருக்கிறது."

"இதோ கொண்டு வருகிறேன்," என்று சொல்லி விடு விடுவென்று இறங்கிச் சென்றார் சிவராஜ். பாதிப் படிகளில் இறங்கிக் கொண்டிருந்தபோதுதான், தர்முவும் சக்கரையும் சொல்லியிருந்த எச்சரிக்கைகள் நினைவு வந்தன. 'ஆகா?' என்று கையை உதறிக்கொண்டு அதே வேகத்தில் திரும்பி வந்தார். அறைக்குள் எட்டிப் பார்த்தார். அவள் பேசாமல்தான் படுத்திருந்தாள். "அதற்குள்ளாகவா கொண்டு வந்துவிட்டீர்கள்?" என்று ஆச்சரியமும் காட்டினாள்.

அசடு வழிய, "இல்லை, இல்லை. இதோ வரவழைக்கிறேன்," என்றவர் படிக்கட்டின் மேல்புறத்தி லேயே நின்று கொண்டு "அம்மணியம்மா!" என்று உரக்கக் குரல் கொடுத்தார். "அம்பிகாவுக்குச் சுடு தண்ணீர் வேண்டுமாம். டம்ளரில் கொண்டு வாருங்கள்," என்றார்.

"பிளாஸ்கில் தயாராய் வைத்திருக்கிறேன். இதோ கொண்டு வருகிறேன்," என்று சமையற்கார அம்மாள் பதிலளித்தாள்.

முகமெல்லாம் பெருமைபொங்கத் திரும்பினார் சிவராஜ். எல்லாரும் தன்னை ஏதோ மந்த புத்திக்காரன் என்று நினைப்பது ஏனென அவருக்கு ஆச்சரியமாய் இருந்தது.

அம்மணி அம்மாள் பிளாஸ்குடன் வந்து, டம்ளரில் வெண்ணீரை ஊற்றி, ஆற்றிக் கொடுத்துவிட்டு இறங்கிச் சென்றாள்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ஓர் ஆல்பம் நிரம்பி இரண்டாம் ஆல்பத்தில் சில பக்கங்களை ஒட்டியிருப்பார் —

"இதெல்லாம் கன்னியாகுமரிதானே சார்?" என்று அவர் பின்னாலிருந்து குரல் கேட்டது.

எதிர்பாராத விதமாய்க் கேட்டதால் திடுக்கிட்டுத் துள்ளினாரெனினும் உடனே சமாளித்துக்கொண்டு, "ஆமாம்... இது எல்லாம் கன்னியாகுமரிதான்... நீ போய்ப் படுத்துக்கொள். உடம்புக்கு ஆகாது," என்றார்.

"ரொம்ப நன்றாய் எடுத்திருக்கிறீர்களே?" என்று பாராட்டியபடி சுற்றிலும் இரைந்து கிடந்த புகைப்படங்களை அவள் ஒவ்வொன்றாய் கையில் எடுத்துப் பார்க்கலானாள்.

சிவராஜ் பெருமையுடன் சிரித்துக் கொண்டார். "இதெல்லாம் சாதாரணப் படங்கள். ஆல்பத்தில் ஒட்டவே யோக்கியதையில்லையென்று ஒதுக்கி விட்டேன். இதோ, இதில் ஒட்டியிருப்பவைகளைப் பார்," என்று ஆல்பத்தை எடுத்து அவளிடம் கொடுத்தார்.

அவரருகிலேயே ஒரு நாற்காலியைப் போட்டுக் கொண்டு ஒவ்வொரு பக்கமாய்ப் புரட்டலானாள்.

"அடடா! தஞ்சை கோபுரமா சார், இது! என்ன பிரமாதமாய் எடுத்திருக்கிறீர்கள். இது மைசூர் பிருந்தாவனமா? நான்கூடப் போயிருக்கிறேன். ஆனால் உங்களுக்கு ஒரு விசித்திரமான 'ஆங்கிள்' கிடைத்திருக்கிறது பாருங்கள், படம் எடுக்க! இது மாதிரி நாங்கள் வெறும் கண்ணால் பார்க்க முடியாது... ஆ! இது முதுமலைக்காடு. படத்தில் 'காம்போஸிஷன்' ரொம்ப நன்றாய் அமைந்திருக்கிறது, ஸார்..."

சிவராஜ் அவள் வாயையே பார்த்துக் கொண்டிருந்தார். எப்படி இருந்த முகம் எப்படி ஆகிவிட்டது என்று சற்று முன்வரையில் நினைத்திருந்தவர்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

புகைப் படக் கலையைப் பற்றியும் தெரிந்தவள் மாதிரி அவள் பேசுவதைக் கேட்டு ஆச்சரியப்பட்டார்.

"போட்டோ சமாசாரம் தெரிந்தவள்தானா நீ!" என்றார் வியப்புடன்.

"எனக்குத் தெரியாது. என் சினேகிதி யொருத்திக்குத் தெரியும்," என்றாள் அவள். "அவளுடன் பழகிப் பழகி நானும் கொஞ்சம் கொஞ்சம் தெரிந்து கொண்டேன். ஆனால், பாவம்..."

"என்ன பாவம்?"

"இது உங்களைப் போலப் பணக்காரர்களுக்குத் தானே கட்டுபடியாகும்? அவளுக்கு செக்ரடேரியட்டில் உத்தியோகம். அந்தச் சின்னச் சம்பளத்தில் இதற்கெல்லாம் செலவழிக்க முடியுமா? சிங்கப்பூரிலிருந்து ஒரு சமயம் அவள் அத்தான் அனுப்பியதால் அவ்வளவு உயர்ந்த காமிரா கிடைத்தது. இல்லாவிட்டால் கூட எங்கே..."

"என்ன காமிரா அது?" என்று சிவராஜ் கேட்டார் ஆர்வத்துடன்.

"எனக்கென்ன தெரியும்? ரோலி ரோலி என்று அடிக்கடி சொல்வாள்."

சிவராஜின் நாக்கில் ஊறியது. அவர் வைத்திருந்ததும் ஒரு நல்ல காமிராதான் என்றாலும், ஒரு ரோலி வாங்கிவிட வேண்டுமென்பது அவருடைய நெடு நாளைய ஆசை.

அவர் மனத்தில் நினைத்ததைத் தெரிந்து கொண்டவள் போல், "அதைக்கூட விற்றுவிட வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தாள்..." என்றாள் அவள்.

"விற்றுவிடப் போகிறாளா? என்ன விலைக்கு?" என்று எழுந்து கொண்டார் சிவராஜ். அவருக்குக் கையும் காலும் பதறின.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"இரண்டாயிரம் வரையில் பெறுமாமே அது? ஆனால் ரொம்ப முடையாயிருக்கிறது, ஐந்நூறு அறுநூறுக்குக் கொடுத்துவிடப் போகிறேன் என்று சொல்லிக் கொண்டிருந்தாள்..."

தடாலென்று அவள் முன்னே மண்டியிட்டு அமர்ந்தார் அவர். "அம்பிகா! அம்பிகா! எப்படியாவது அதை எனக்கு வாங்கிக் கொடு. தர்முவைக் கெஞ்சிக் கூத்தாடிப் பணத்துக்கு ஏற்பாடு பண்ணி விடுகிறேன். அவ்வளவு மலிவாகக் கிடைக்கவே கிடைக்காது... இப்பவே நான் போகட்டுமா? அட்ரஸ் கொடு..."

"அடாடா! நான் சொன்னது தப்பாய்ப் போய் விட்டாற் போலிருக்கிறதே!" என்று சிரித்தாள் அவள். "நீங்கள் பாட்டுக்குப் போகிறேன் என்கிறீர்களே! எனக்குக் காவல் போட்டிருக்கிறார்கள் உங்களை! மறந்து விட்டதா?"

"ஆமாம், ஆமாம்... ஆனால்..."

"அவசரப்படாதீர்கள். இப்படி மேலே விழுந்து கேட்டோமானால் கிராக்கி பண்ணிக் கொள்வாள். ஒரு பேனாவும் தபால் கவரும் கொடுங்கள். என் சினேகிதிக்குக் கடிதம் எழுதுகிறேன், காமிராவுடன் வரும்படி. நீங்கள் பார்த்துத் திருப்திப்பட்ட பிறகு விலை பேசலாம்," என்றாள்.

சிவராஜ் பரபரவென்று ஓடித் தேடிக்கொண்டு வந்தார்.

எழுதத் தொடங்கினாள்.

முடித்ததும் உறையை எடுத்து அதற்குள் கடிதத்தை வைத்து ஒட்டி, விலாசம் எழுதி, சிவராஜிடம் தந்தாள். "தெருவில் தபால் பெட்டி இருக்கிறது, போட்டு விட்டு வாருங்கள்."

அவர் தயங்கினார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"பயப்பட வேண்டாம். என்னை யாரும் தூக்கிக் கொண்டு போய்விட மாட்டார்கள். இதோ வெராந்தாவில், தெருவைப் பார்த்த மாதிரி வந்து நின்று கொள்கிறேன். உங்கள் பார்வையிலிருந்து மறைய மாட்டேன்," என்று அவள் மீண்டும் மீண்டும் உறுதி கூறிய பிறகே கடிதத்துடன் புறப்பட்டார்.

எதிர்ச் சாரியிலிருந்து தபால் பெட்டிக்குப் போகும் போதும் வரும்போதும் அவளை மறுபடி மறுபடி பார்த்துக் கொண்டேயிருந்தார் சிவராஜ். அவள் புன் சிரிப்புடன் அவரைப் பார்த்தவாறு அசையாமல் நின்றிருந்தாள்.

தபால் பெட்டியில் கடிதத்தைப் போட்டபோது, உறையிலிருந்த விலாசம் அவர் கண்ணில் பட்டது. 'ஓகோ, இவள் சினேகிதியின் பெயர் மரகதம் என்பதா!' என்று நினைத்துக் கொண்டாரே தவிர, வேறு எதுவும் எண்ணவில்லை.

'மரகதம்' என்பது அம்பிகாவினுடைய சித்தியின் பெயர் என்று அவர் கேள்விப்பட்டதில்லை. கேள்விப் பட்டிருந்தாலும் அவர் ஞாபகத்தில் இருக்கவில்லை. அதேபோல் அந்த உறையினுள் —

"சித்தி! நான் பிரின்ஸிபால் தர்மு சிவராஜியின் வீட்டில் சிறைப்பட்டிருக்கிறேன். உடனே வந்து என்னை மீட்டுக் கொண்டு போ," என்று எழுதப்பட்டிருந்ததும் அந்தப் புகைப்பட மேதைக்குத் தெரியாது.

33

மரகதத்துக்கு கிட்டத்தட்ட பைத்தியமே பிடித்திருந்தது. அம்பிகா காணாமற்போன மறுநாள் அவள்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அலையாத அலைச்சலோ புலம்பாத புலம்பலோ கிடையாது. அக்கம் பக்கத்தாரையெல்லாம் கூட்டி வைத்துக்கொண்டு, "ஐயோ என் குழந்தையின் இஷ்டத்துக்கே விட்டு விட்டிருந்தால் அவள் மனம் நொந்திருப்பாளா? வீட்டை விட்டுப் போயிருப்பாளா!" என்றெல்லாம் அவள் சொன்னதைக் கேட்டு எவருக்கும் எதுவும் புரியவில்லை.

"எந்த விஷயத்தில் அவளை நீங்கள் கட்டாயப் படுத்தினீர்கள்?" என்று சிலபேர் கேட்டார்கள். பதில் சொல்லத் தெரியவில்லை அம்பிகாவின் சித்திக்கு. உடனே போலீசில் எழுதி வைக்கும்படி சில்பேர் யோசனை சொன்னார்கள். மிஸஸ் ரத்தினம் கொலையுண்டபோது போலீசில் பட்டபாடு எதுவும் மரகதத்துக்கு மறக்கவில்லை யாகையால், அந்த யோசனையை உதறிவிட்டாள். "யாராவது சிநேகிதியின் வீட்டுக்குப் போயிருப்பாள். தானே வந்து சேருவாள்," என்று வேறு சிலர் கூறினார்கள். அது தான் மரகதத்துக்குப் பொருத்தமாகப் பட்டது. எவ்வளவு தான் சண்டை போட்டாலும், கோபம் கொண்டாலும் உள்ளூர அம்பிகாவுக்குத் தன்மீது பிரியம் உண்டு என்பதை மரகதம் அறிவாள். அம்பிகாவுக்குப் பொறுப்புணர்ச்சி அதிகம். படித்து முன்னுக்கு வந்து சித்தியை ஜம்மென்று வைத்துக்கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகிறவள். அத்தகையவள் திடுதிப்பென்று இரண்டு வரி எழுதி வைத்து விட்டு மறைந்துவிட மாட்டாள் என்று நம்பினாள்.

அந்த நம்பிக்கை இரண்டு நாளானதும் சவலைக் குழந்தை மாதிரி தேய்ந்து இளைக்கலாயிற்று. அம்பிகா திரும்பக் காணோம். அம்பிகாவின் சிநேகிதிகளில் இரண்டொருவரின் வீடுகள்தான் மரகதத்துக்குத் தெரியும். அங்கே விசாரித்துப் பார்த்தாள். கல்லூரிக்குக்கூட அவள் வரவில்லை என்றுதான் அவர்கள் சொன்னார்கள்.

கடைசித் தரமாக சூரியின் வீட்டுக்கும் போய், அவனிடம் தெரிவித்துப் பார்த்து விட்டாள். அந்த ஒரு

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

தரமே போதும் போதுமென்றாகி விட்டது. அம்பிகாவைக் கண்டு பிடிப்பதற்குச் சூரி உதவாததோடு இல்லை. அந்த வீட்டில் தங்கியிருந்த சொற்ப நேரத்துக்குள் தனக்கேற்பட்ட சோதனைகளை அவளால் மறக்க முடியவில்லை. உடம்பில் சுருக்கென்று குத்தியது; வாயெல்லாம், தொண்டை யெல்லாம், நாக்கெல்லாம் எரிந்தது; சூரியின் உடம் பெல்லாம் வியர்த்து, முகமெல்லாம் வெளிறியிருந்தது — இந்த அனுபவம் அவள் மனத்தில் பயங்கர நினைவுகளாகத் தங்கி விட்டன.

அன்று அவள் செத்தோம் பிழைத்தோம் என்று வீடு திரும்பியபோதே ஒரு விஷயத்தை உணர்ந்து கொண்டாள்; இந்தச் சூரியின் அருகில் இருக்கும் போதெல்லாம் என்னமோபோல் ஒரு பயம் ஏற்படுவதாக அம்பிகா சொன்னாளே, அது உண்மையாகத்தான் இருக்க வேண்டும்; இந்தப் பிள்ளையாண்டானிடம் ஏதோ ஒரு கெட்ட சக்தி இருக்கிறது.

இப்படித் தோன்றியபிறகு அவள் ஏன் சூரியை நெருங்குகிறாள்? தலை போனாலும் போவதில்லை என்று தீர்மானித்து விட்டாள். ஆனால் சூரிதான் விடவில்லை. இரண்டு நாளைக்கொருமுறை, "அம்பிகாவைப் பற்றித் தகவல் வந்ததா? எங்கே இருக்கிறாளாம்?" என்று அவனாகவே மரகதத்தின் வீட்டுக்கு வந்து விசாரித்துக் கொண்டிருந்தான்.

தர்மு சிவராஜின் பங்களாவிலிருந்து அம்பிகா எழுதிய முதல் கடிதம் கிடைத்தபோது மரகதம் அடைந்த ஆனந்தத்துக்கு எல்லையே இல்லை. குடுகுடுவென்று ஓடிப் போய், வீட்டுக்கெதிரிலிருந்த பிள்ளையார் கோவிலின் உண்டியில் பத்து பைசா போட்டுவிட்டு, பத்து தரம் தலையிலும் குட்டிக்கொண்ட பின் வீட்டுக்குத் திரும்பி வந்து மறுபடியும் அந்தக் கார்டை வாசித்துப் பார்த்தாள். இரண்டு தடவைக்கு படிக்க முடியாதபடி அவளுடைய கண்ணீரே விழுந்து மசியைக் கலைத்து விட்டது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அந்தக் கடிதத்தில் அம்பிகா தானிருக்கும் இடமோ விலாசமோ தெரிவிக்கவில்லையெனினும், சௌக்கியமாக இருப்பதாக எழுதியிருப்பது ஒன்றே மரகதத்தின் வேதனையைப் பாதி குறைத்து விட்டது. சித்தியை மறக்காதவள், சித்தி மனம் வருந்துமே என்பதற்காக மெனக்கெட்டு கடிதம் எழுதியிருப்பவள், சித்தியை அதிக நாள் பிரிந்திருக்க மாட்டாள் என்று சந்தோஷம் கொண்டாள்.

அந்தக் கடிதம் கிடைத்த கொஞ்ச நேரத்துக்கெல்லாம் சூரி வந்து விசாரித்தான், வழக்கம் போல. மரகதத்திற்கு ஆத்திரமாய் வந்தது — இவனாலல்லவோ அம்பிகாவைப் பிரிய நேரிட்டதென்று. "அவள் எங்கேயோ சௌக்கியமாயிருப்பாள். நீ ஒன்றும் விசாரிக்க வேண்டாம்," என்று முகத்திலடித்தாற்போல் சொல்லி விட்டாள்.

"ஹூம்!" என்று தனது தொள தொள பைஜாமாவுக்குள் கை விட்டுக்கொண்டு குறுக்கும் நெடுக்குமாய் உலவினான் சூரி. "சித்தி! ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் அவளை கையும் மெய்யுமாய்ப் பிடிக்கிறேனா இல்லையா பார்!" என்று சூளுரைத்தான்.

மரகதத்துக்குப் பயமாய்ப் போய்விட்டது. "நீ மிரட்டுவதைப் பார்த்தால் அவளுக்கு ஏதோ கெடுதல் ஏற்படுத்துவாய் போலல்லவா இருக்கிறது?" என்றாள்.

சூரி மறுக்கவில்லை. மேற்கொண்டு எதுவும் கேட்கவுமில்லை. பேசாமல் திரும்பிவிட்டான்.

இரண்டு மூன்று நாட்களுக்கு மரகதத்தின் மனம் அமைதியுற்றிருந்தது. பிறகு பழையபடி கவலையும் சோகமும் அவளைப் பிடித்துக் கொண்டன. வெறுமே ஆறுதலாகக் கடிதம் வந்ததே தவிர, எங்கே இருக்கிறாள், எப்படி இருக்கிறாள் என்று தெரிவிக்கவில்லையே! அடுத்தடுத்து கடிதங்கள் வந்து கொண்டிருக்கும் என்று எண்ணியிருந்தவளுக்கு, திடீரென்று வந்த அந்த இரண்டாவது

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கடிதம் திகைப்பையும் அதிர்ச்சியையும் கொடுத்ததில் வியப்பில்லை.

கடிதம் வந்தபோது மரகதம் சமையல் வேலையாக இருந்தாள். ஆனால் உடனே அடுப்பை அணைத்தாள். வெந்து கொண்டிருந்த உணவு வகைகளை யும் கொதித்துக் கொண்டிருந்தவைகளையும் அப்படி அப்படியே இறக்கி மூடினாள். கதவை இழுத்துச் சாத்திப் பூட்டிக்கொண்டு உடனே கிளம்பிவிட்டாள், பிரின்ஸி பாலின் வீட்டுக்கு. அந்தப் 'பாப்' கார அம்மாளைப் பற்றி என்றைக்குமே அவளுக்கு மதிப்போ நல்லெண்ணமோ கிடையாது. அவளென்ன தன் பெண்ணை சிறைப்படுத்தி வைக்கிறது என்ற ஆத்திரமும் ஏற்பட்டது இப்போது. அம்பிகாவைத் தன்னோடு அனுப்பி வைக்க ஏதாவது தகராறு செய்தாளானால் போலீஸ் உதவியை வேண்டு மானாலும் நாடுவது என்ற உறுதியோடு மரகதம் கிளம்பினாள்.

பகல் இரண்டு மணி இருக்கும், மரகதம், பிரின்ஸி பாலின் வீட்டை அடைந்தபோது. அன்று ஞாயிற்றுக் கிழமையெனினும், தர்மு சிவராஜ் சில வேலைகளைக் கவனிப்பதற்காகக் கல்லூரி சென்றிருந்தாள். சமையற்கார அம்மணியம்மாள்தான் அவளை எதிர்கொண்டு வரவேற்றாள்.

"அம்பிகாவின் சித்தி நான். அவள் எங்கே இருக்கிறாள்?" என்று மரகதம் அதட்டலாகக் கேட்டதும், பயந்து போன அவள் மாடிப் பக்கம் கையைக் காட்டி விட்டுப் போய் விட்டாள். அம்பிகா இருப்பதைப் பற்றி யாரிடமும் சொல்லக்கூடாது என்று எஜமானி கடுமையாக எச்சரித்திருந்தும்கூட மறந்துவிட்டது அவளுக்கு. அதேபோல், மாடியறையின் வாசலில் காவலாக உட்கார்ந் திருந்த சிவராஜும், மரகதம் நாலுப் படிக்கொரு காலாக தாண்டி வந்த ஆவேசத்தைக் கண்டதும் மரியாதையுடன் வழி விட்டு விட்டார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"அம்பிகா!" என்று கூவிய வண்ணம், கட்டிலில் ஒருகணித்து படுத்திருந்தவளை மரகதம் பாசத்துடன் அணைத்துக்கொண்டாள்.

"சித்தி!" என்று அவள் திரும்பியதும் தான், பழுக்கக் காய்ந்த இரும்பினால் சூடு பட்டவள் போல மரகதம் துள்ளலுடன் பின்னடைந்தாள். என்ன நேரிட்டது இவள் முகத்துக்கு? சந்திர பிம்பம் மாதிரி இருந்த குழந்தை எதனால் இப்படி ஆயிற்று? "அம்... அம்பிகா... நீ... நீ..." என்று திணறினாள்.

முகத்தைப் பொத்திக்கொண்டு கேவிக் கேவி அழுத அவள், "சித்தி நான் உன்னைவிட்டு சொல்லாமல் கொள்ளாமல் புறப்பட்டதற்கு, உன் மனசை நோகப் பண்ணியதற்கு, கடவுள் சரியான கூலி தந்துவிட்டார் சித்தி..." என்று கூறி தனக்கு நேர்ந்த ஆபத்துகளையெல்லாம் ஒவ்வொன்றாக விவரித்து முடித்தாள்.

அறை வாசற்படியில் திகைப்புடன் நின்றிருந்த சிவராஜுக்கு இந்த இருவரும் பண்ணுகிற ஆர்ப்பாட்டத்தில் எப்படிக் குறுக்கிடுவது என்று புரியவில்லை. சமயம் பார்த்து இந்த தர்மு தொலைந்து விட்டாளே என்று அவர் கையைப் பிசைந்து கொண்டிருப்பதற்குள் நிலைமை மிஞ்சி விட்டது.

"நான் எங்கள் சித்தியுடன் புறப்பட்டுப் போகிறேன் சார். பிரின்ஸிபால் வந்ததும் சொல்லி விடுங்கள்," என்று விடை பெற்றுக் கொண்டிருந்தாள், அவர் காவல் காக்க வேண்டிய பெண்!

"போவதா?... எ... எங்கே போவது? ஊஹூம், ஊஹூம்," என்று கோமாளித்தனமாக அவர் தடுத்துக் கொண்டிருந்த வேளையில் —

தர்மு சிவராஜே படியேறி வந்து விட்டாள். அவள் பின்னால் நாலைந்து மாணவிகளும் வந்து கொண்டிருந்தார்கள். சக்கரை சொல்லியிருந்தபடி, அம்பிகாவின்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

தோழிகள் சிலரை வரும்படி கூறியிருந்தாள் பிரின்ஸிபால். இன்று விடுமுறையாக இருக்கவே அவர்களும் வந்து விட்டார்கள்.

"அம்பிகா... அம்பிகா..." என்று திகிலும் வருத்தமும் திகைப்பும் நிறைந்த குரலில் ஒவ்வொரு தோழியும் சூழ்ந்து கொண்டார்கள். அவளுக்கு நேர்ந்த தீ விபத்தை அவர்கள் கேள்விப்பட்டிருந்த போதிலும், முகம் இத்தனை கோரமாக மாறியிருக்கும் என்று நினைக்கவேயில்லை.

அவளுடைய பார்வையிலோ மகிழ்ச்சியும் தென்படவில்லை; அடையாளம் கண்டுகொண்ட அறிகுறியும் இருக்கவில்லை. சூனியத்தில் லயித்த ஒரு வெறித்த பார்வையையே அவர்கள் கண்டனர்.

என்னடி, நான் நூருன்னிஸா, தெரியவில்லையா?... நான் வைதேகிடி, அப்படிப் பார்க்காதே, பயமாய் இருக்கிறது. நான்தான் வேதவல்லி — இப்படி ஒவ்வொருவரும் மன்றாடினார்கள்.

"நான்... என்னை மன்னியுங்கள்... யாரையும் தெரியவில்லை... இன்னும் கொஞ்ச நாள் போனால் என் சித்தியையே மறந்து விடுவேனோ என்னவோ!" நடுக்கத்துடன் மரகதத்தைக் கட்டிக் கொண்டாள் அவள்.

தர்மு சிவராஜ் மரகதத்தைச் சிறிதும் எதிர்பார்க்க வில்லையாதலால், "நீங்கள் எங்கே வந்தீர்கள்?" என்று தடுமாறினாள்.

மரகதத்துக்குச் சமர்த்தாய்ப் பேசத் தெரியும் என்று சொல்ல முடியாது. ஆனால் அவள்கூட இப்போது உணர்ச்சி வசப்பட்டவளாக, "எங்கே வந்தேனா? என் பெண்ணை நீங்கள் கொலை செய்துவிடாமல் காப்பாற்று வதற்காக வந்தேன்!" என்று கூறியவள், "வாடி போகலாம்," என்று அவளை இழுத்துக்கொண்டு கிளம்பினாள்.

"நில்லுங்கள், நில்லுங்கள்!" என்று குறுக்கே நின்று மறித்தாள் தர்மு சிவராஜ். "இந்த வீட்டை விட்டு வெளியே

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

போனால் அம்பிகாவுக்கு இன்ன ஆபத்துதான் வருமென்று சொல்ல முடியாது. வேண்டாம். அவளை இங்கேயே விட்டு விடுங்கள், உங்கள் மகள் மீது உங்களுக்கு நிஜமாகவே பிரியம் உண்டானால், என் வார்த்தையைத் தட்டாதீர்கள். இங்கே நான் காப்பாற்றுகிற மாதிரி..."

"ஆகாகா! காப்பாற்றிய லட்சணம்தான் தெரிகிறதே!" என்று மரகதம் வெடித்தாள். "தங்க விக்கிரகம் மாதிரி இருந்த என் குழந்தையைப் பாருங்கள்! பார்த்தாலே வயிற்றைக் குமட்டிக்கொண்டு வருகிற இந்தக் கோரத்தைப் பாருங்கள்! நீங்களா இவளைக் காப்பாற்றுவீர்கள்?" பேசிக் கொண்டிருக்கும்போதே அழுகையும் உடைத்துக்கொண்டு விட்டது மரகதத்துக்கு. "உங்கள் காலில் விழுந்து கும்பிடுகிறேன். என் பெண்ணை என்னோடு அனுப்பி விடுங்கள்," என்று கண்ணைத் துடைத்துக் கொண்டாள்.

வந்திருந்த கல்லூரி மாணவிகளுக்கு, தங்கள் தோழியின் தோறறத்தைப் பார்த்து ஒரு புறத்தில் அதிர்ச்சி; மறுபுறம், அம்பிகாவின் சித்தி இப்படி ஏன் அழ வேண்டும், பிரின்ஸிபால் ஏன் மறுக்க வேண்டும் என்பது புரியாததால் திகைப்பு.

மரகதத்தினிடம் பரிதாபம் கொண்டவர்களாக, "வருத்தப்படாதீர்கள் அம்மா. பிரின்ஸிபால் ரொம்ப நல்லவர்கள். உங்களுக்கோ அம்பிகாவுக்கோ கெடுதல் நினைக்க மாட்டார்கள். அம்பிகாவை உங்களுடன் அனுப்பி விடுவார்கள்," என்று ஆளுக்கொருவிதமாய்ச் சமாதானம் செய்தார்கள்.

தர்மு சிவராஜின் பாடு தர்மசங்கடமாகிவிட்டது. மாணவிகளின் அனுதாபம் மரகதத்தின் பக்கம்தான் இருக்கிறதென்பதை எளிதாக ஊகித்துக்கொண்டாள். அவர்களெதிரில் தன் பெயரைக் கெடுத்துக்கொள்ள அவள் இஷ்டப்படவில்லை. கல்லூரி நிர்வாகிகள் அவள் பெயருக்கு எதிரில் போட்டுக்கொண்டு வரும் கரும்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

புள்ளிகளின் எண்ணிக்கை இன்னுமொன்று அதிகரிக்குமே தவிர, குறையாது.

'சக்கரை, உனக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியவில்லை. மன்னித்துவிடப்பா,' என்று மனத்துக்குள் சொல்லிக்கொண்டாள். "சரி, அழைத்துப் போங்கள். போய் வாம்மா, அம்பிகா. நீ வயது வந்த பெண். உன்னைக் காப்பாற்றிக்கொள்ள உனக்குத்தான் தெரியும்," என்று விடை கொடுத்து விட்டாள்.

ஒரு கணமும் மரகதம் தாமதிக்க வில்லை. மற்றவளின் கையைப் பிடித்துக்கொண்டு கிடுகிடுவென இறங்கி வந்தவள், தெருவில் சட்டென்று கிடைத்த ரிக்ஷாவையே அமர்த்திக்கொண்டு வீடு வந்து சேர்ந்து விட்டாள்.

"இதை நீ பார்த்தாயா அம்பிகா? நீ அன்றைக்குப் படித்துக் கொண்டிருந்த புத்தகம் அப்படியேயிருக்கிறது, பிரித்தபடி. நீ டால்கம் பவுடர் பூசிக்கொண்டு மறுபடி மூடி வைக்கவில்லை. அதைக்கூட அப்படியே வைத்திருக்கிறேன். இதோ பார்த்தாயா, ஜாடியை? எலுமிச்சம்பழ ஊறுகாய். நான் ஒரு நாள்கூடத் தொட்டுக் கொள்ளாமல், பத்திரமாய்க் காப்பாற்றிக் கொண்டிருக்கிறேன் உனக்காக" என்று மரகதம் பலவாறு பேச்சுக் கொடுத்தாள்.

"அப்படியா... ஓகோ... சந்தோஷம்..." என்ற ரீதியில் அவள் பதிலளித்தாளேயொழிய, எதிலும் ஒட்டிக் கொள்ளவில்லை. தரையில் எடுத்துப் போட்ட மீன் மாதிரி அவள் இருக்கை கொள்ளாமல் தவிப்பது வெளிப்படை யாகத் தெரிந்தது.

"அம்பிகா, ஏன் என்னவோ போலிருக்கிறாய்? அன்னியர் வீட்டில் இருந்தபோது எப்படியோதான் இருந் திருக்கும். உன் வீட்டுக்கு நீ வந்த பிறகும் ஏன் மனசில் எதையோ வைத்துக்கொண்டு மறுகுகிறாய்?" என்றாள் மரகதம்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"சித்தி, இது... இது என் வீடுமாதிரியே இல்லை."

மரகதத்துக்குத் தூக்கி வாரிப் போட்டது. "பின்னே?"

''சித்தி.'' மரகதத்தின் கையைப் பிடித்துக் கொண்டாள் அவள்.

"என்மீது உனக்குப் பிரியம்தானே?"

"சொல்லணுமா, அம்பிகா?"

''என் மனச் சந்தோஷத்துக்காக 'எதையும் செய்வாய் இல்லையா?"

"கட்டாயம் செய்வேன்."

"சத்தியமாய்?"

"சத்தியமாய்."

"...என்னை என்... கணவரின் வீட்டில் கொண்டு போய் விட்டுவிடு..."

"ஐயையோ! என்னடி உளறுகிறாய்?" என்று பதறிப் போனாள் மரகதம்.

''ஆமாம், சித்தி. தீ விபத்துக்கும் என் வாழ்க்கைக்கும் என்னவோ நெருங்கின சம்பந்தம் இருக்கிறது... முதல் விபத்தின்போது லேசாகத்தான் சிற்சில பழைய ஞாபகங்கள் வந்தன. இரண்டாவது விபத்தில் என் முகம் மட்டும் தலை கீழாய் மாறவில்லை. மனசே அப்படி மாறிவிட்ட மாதிரி இருக்கிறது. நான் அவர்... கலிவரதனின் வீட்டில்தான் இருக்க வேண்டியவள் போல் தோன்றுகிறது..."

"ரொம்பச் சரி," என்றாள் மரகதம் கிண்டலாக. பெண்மீது வந்த கோபத்தை எப்படி அடக்குவதென்றே தெரியவில்லை. "உனக்கு அப்படி இருக்கிறது. அந்த மனிதனுக்கு இருக்க வேண்டாமா? வெட்கமில்லாமல், கௌரவமில்லாமல், 'நீங்கள்தான் என் கணவன்,' என்று

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அவனிடம் நீ வேண்டுமானால் போய்ச் சொல்லலாம். அவன் நீதான் என் மனைவி என்று ஒப்புக்கொள்ள வேண்டாமா? அப்படியென்ன, முன் மாதிரி கண்ணுக் காவது ரதியாட்டம் இருக்கிறாயா? கோரம் வழிகிறதே?"

"சித்தி! என்னைக் கொல்லாதே சித்தி!" கோவென்று அழத் தொடங்கி விட்டாள் அவள்.

"அம்பிகா! உன்னை வருத்தப் படுத்துவதற்காகச் சொல்லவில்லை," என்று மரகதம் அவளைச் சமாதானப் படுத்த வேண்டியதாயிற்று. "எந்தக் குடும்பத்திலும், யாரும் கேள்விப்பட்டிராத கண்ணராவிகளெல்லாம் நம் குடும்பத்தில் ஏற்படுகிறதே என்ற வருத்தத்தினால் சொன்னேன். இதற்கு மேலேயும் நம் மானம் கப்பலேற வேண்டும் என்கிறாயா? எவனோ முன்பின் தெரியாத அன்னியன் வீட்டிலே உன்னைக் கொண்டுபோய் விடுவதாவது; நாலுபேர் சிரிக்க மாட்டார்களா?" என்று வெகுநேரம் வரையில் அவள் புலம்பிக் கொண்டே யிருந்தாள்.

ஆனால் அவள் எதற்கும் இணங்குகிறவளாகவோ இறங்குகிறவளாகவோ தெரியவில்லை. அந்த வீட்டில் எந்தப் பொருளுடனும் அவள் பழகியதாகவோ, எந்த இடத்திலும் இருந்ததாகவோ தோன்றவில்லை. திடீர் திடீரென்று நினைத்துக்கொண்டு, 'அவருடன் நான் சினிமாவுக்குப் போயிருந்த போது... அவருடன் மழையில் ஒருநாள் நனைந்தபோது ...' என்று ஏதேதோ சம்பவங்களை விவரிக்கத் தொடங்கினாள்.

இனிமேல் அவளைத் திருத்தவோ தடுக்கவோ முடியாது என்று உணர்ந்து கொண்டாள் மரகதம். தனியாகவே அவள் புறப்பட்டுப் போனாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை என்று நிலைமை முற்றி விட்டது.

கடைசியில், "என்னை என்னதான் செய்யச் சொல்கிறாய்?" என்று மனம் முறிந்து கேட்டாள்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"அதுதான் சொன்னேனே, என்னை அவர் வீட்டுக்கு அழைத்துப் போ. நீயும் இரு. நாலுநாள் தங்கிப் பார்ப்போம். நான் உன்னுடனேயே ஒரே அறையில் தங்கிக் கொள்கிறேன். அதற்குப் பிறகும் அவர்தான் என் கணவர் என்கிற எண்ணம் என் மனசில் மேலும் மேலும் வலுப்படுமானால், என்னை நீயும் உன்னை நானும் மறந்துவிட வேண்டியதுதான். அவர் என்னை ஏற்றுக் கொண்டாலும் கொள்ளாவிட்டாலும் என் கணவர் அவரே என்று அங்கேயே பழி கிடக்கிறேன். அல்லது, நான் தேவகி அல்ல, அம்பிகா தான் என்ற எண்ணம் மறுபடி ஏற்பட்டால் திரும்பி வந்து விடுகிறேன் இந்த வீட்டுக்கே."

"எனக்குச் சகிக்கவில்லை, சகிக்கவேயில்லை," என்று தலையில் அடித்துக் கொண்டாள் மரகதம்.

ஒரே ஒரு நம்பிக்கை இருந்தது அவளுக்கு. எப்படியும் கலிவரதன் அவனுடைய வீட்டில் இந்த இரண்டு அன்னியப் பெண்மணிகள் வந்து தங்குவதற்கு இடம் தரமாட்டான் என்று நிச்சயமாகத் தோன்றியது. மானம் போகிற மாதிரி அவன் இரண்டு வார்த்தை திட்டினாலும் திட்டட்டும், மகளுடைய பித்தம் தெளிந்தால் சரி என்று எண்ணியவளாக "புறப்படு," என்று கிளம்பினாள்.

இரண்டு வீடு தள்ளி வாசலிலேயே டாக்ஸியொன்று நின்றிருந்தது.

முன் ஸீட்டில் டிரைவருடன் யாரோ இருந்ததால், "வேறு டாக்ஸி பார்ப்போம்," என்றாள் மரகதம்.

"இவன் என் தம்பிதான், அம்மா. வழியிலே இறங்கி விடுவான். நீங்க ஏறிக்குங்க," என்று டிரைவர் கதவைத் திறந்து விட்டான்.

ஆனால், கலிவரதனின் பங்களா இருக்கும் அடையாறை நோக்கி அந்த டாக்ஸி ஓடவில்லை.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

34

டாக்ஸி கலிவரதனின் பங்களாவை நோக்கி ஓடவில்லை என்பதை முதலில் கவனித்தவள் மரகதம்தான்.

"அம்பிகா, டாக்ஸியை வேறெங்கேயோ ஓட்டுகிறான் போலிருக்கிறதே?" என்றாள் திகிலுடன்.

அவளும் அப்போதுதான் கவனித்தவளாக, "இந்தாப்பா, அடையாறுக்கு அந்தப் பக்கம் திரும்பாமல் இப்படிப் போகிறாயே?" என்றாள்.

டாக்ஸி தன் வழியிலேயே போயிற்று.

மீட்டர் சார்ஜ் அதிகமாவதற்காக டாக்ஸியோட்டி தந்திரம் செய்கிறான் என்று தான் மரகதம் எண்ணினாள். "சுற்றி வளைத்துக்கொண்டு போனால் எங்களுக்குத் தெரியாது என்று நினைத்தாயா? நாங்கள் ஏமாற மாட்டோம்," என்றாள் கண்டிப்புடன்.

"இல்லை, சித்தி, இவன் ஏதோ வேண்டுமென்று..."

"ஆமாம், அம்பிகா! உன்னையும் சித்தியையும் வேண்டுமென்றுதான் ஓர் இடத்துக்கு அழைத்துக்கொண்டு போகிறேன்" என்ற பேச்சுடன், டாக்ஸியோட்டியின் பக்கத்திலிருந்தவன் திரும்பினான். பயங்கரமாகப் புன்னகை செய்தான்.

"சூரி!" என்று கோபத்துடன் கூச்சலிட்டாள் மரகதம்.

"என்ன அம்பிகா, நீ மட்டும் அப்படிப் பார்க்கிறாய்? சூரியை மறந்து போய்விட்டது என்று வேஷம் போடப் பார்க்கிறாயா? உன் சித்தியையும் பிரின்ஸி

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

பாலையும் அந்த அடி முட்டாள் சக்கரையையும் போல நான் மூளையில்லாதவனில்லை...!"

"சூரி... சூரி... உங்களை... நான்..." அவள் திணறினாள்.

"ஆமாமாம்! நினைவிருக்காது! தீ விபத்தில் உன் முகம் மட்டுமா இப்படி விகாரமாக மாறியது? உன் மனசே தலைகீழாய்க் கெட்டுப்போய் விட்டதே. நீதான் இப்போது அம்பிகா என்கிற நினைவெல்லாம் இழந்து கொண்டிருக்கிறாயே...! பூர்வ ஜன்மத்தில் தேவகியாக இருந்தது ஒன்று தானே உனக்கு அதிகமாய் நினைவு வருகிறது இப்போதெல்லாம்!" எகத்தாளமாகச் சிரித்தான்.

"ஆமாம், ஆமாம். நான்... நான் தேவகிதான்..."

சூரி தன் நடிப்புத் திறமையைச் சிறப்பாய் வெளிப்படுத்தி, "அடாடாடா! இல்லையோ பின்னே! நீ தேவகிதான்! எந்தப் பயல் நம்பமாட்டேனென்றான்!" என்று விழிகளை உருட்டிப் பேசினான். திடீரென்று அவன் முகத்தில் கடுமை பரவியது. கண்கள் கோபத்தைக் கக்கின. "அம்பிகா! நீ தேவகியாக இருப்பது எப்போது அம்பிகாவாக இருப்பது எப்போது என்பது எனக்குத் தெரியும். ஒரு குறிப்பிட்ட நோக்கத்துடன் உன்னைத் தேவகியாக இருக்கும்படி ஆட்டி வைத்தவனே நான்தான். உன்னால் உபயோகமில்லை என்று விட்டு விட்டேன். இப்போது நீ என் வித்தையை என்னிடமே காட்டுகிறாயா?"

மரகதம் பதற்றத்துடன், "'சூரி... என்மேல் கோபம் இருந்தால் என்னிடமே காட்டுடாப்பா. பதினாயிரம் கஷ்டங்கள் பட்டுக் கொண்டிருக்கிற இந்தக் குழந்தையை ஒன்றும் செய்யாதே," என்று கெஞ்சினாள்.

சூரி பல்லைக் கடித்தான். "சித்தி, நீயும் உன் மகளும் எதற்காக நாடகம் போடுகிறீர்களென்று எனக்குத் தெரியும். அந்தக் கலிவரதன் இன்னும் ஏதோ கால் அரைப் பணம் மிச்சம் வைத்துக் கொண்டிருக்கிறானல்லவா?

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அதைப் பறிப்பதற்காக இப்போது வேடம்! சூரியை மாப்பிள்ளையாக்கிக் கொள்வதாக ஒரு காலத்தில் சொன்னதுகூட மறந்து விட்டது..."

சித்தி உடனே, "இல்லை, சூரி... இப்போதுகூட நான் அப்படித்தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன்," என்றாள்.

"சீ சீ! இந்தக் கோரம் யாருக்கு வேண்டும்?" என்று இரக்கமில்லாமல் சொன்னான் சூரி. "இனிமேல் உங்கள் இரண்டு பேரினாலும் எனக்கு எவ்வித உபயோகமுமில்லை. சொல்லப்போனால் இடையூறுதான். அந்த இடைஞ்சலை ஒழிக்க வேண்டியதுதானே தவிர, விட்டு வைத்திருக்கக் கூடாது. அதற்காகத்தான், உன் வீட்டின் மீது கண் வைத்துக் கவனித்துக் கொண்டிருந்தேன். அம்பிகா எப்படியும் உன்னிடம் வந்து சேருவாள் என்றும் தெரியும் எனக்கு. பணத்தாசை பிடித்துக் கலிவரதன் வீட்டுக்குப் புறப்படுவீர்கள் என்றுதான் ஒரு டாக்ஸியையும், டிரைவரையும் தயாராக வைத்திருந்தேன்." சூரியின் பேச்சு டக்கென்று நின்றது, "இந்தாப்பா டிரைவர், எங்கே ஓட்டுகிறாய்?" என்று திகைத்தான்.

டாக்ஸி தன் பாட்டுக்குப் போய்க் கொண்டிருந்தது. டாக்ஸி டிரைவர் நிதானத்துடன், "அடையாறுக்கு, சார். கலிவரதனின் பங்களாவுக்கு," என்றான்.

அவன் முகத்தைக் கூர்ந்து பார்த்தான் சூரி. சீற்றமும் வியப்பும் அவனைப் பிடித்துக் கொண்டன. "நீ... நீ... நான் அமர்த்தி வைத்த டிரைவர் இல்லையா?" என்றான்.

"இல்லை. அவன் கை காலெல்லாம் கட்டி, ஒரு பாழடைந்த ஷெட்டில் கிடக்கிறான். மயக்கம் தெளிந்து எழுந்து கொள்ள வெகுநேரம் பிடிக்கும்," என்று தெரிவித்தான் அந்த டாக்ஸியோட்டி மிக அமைதியாக.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"நீ... நீ யார்...?"

"பக்கிரிசாமி என்று ஒரு பர்மா அகதி இருந்தானே, அவனுடைய தோஸ்து நான்," என்றான் அவன். "அநியாயமாய் ரயில் விபத்தில் போய்விட்டான் அந்தப் பாவி. ஆனால், சமயம் கிடைக்கிறபோதெல்லாம் உன்மீது ஒரு கண் வைத்திருக்கும்படி சொல்லி வைத்திருந்தான். நீ இந்த அம்மாளைக் கவனித்துக் கொண்டிருந்த நேரமெல்லாம் நான் உன்னைக் கண்காணித்துக் கொண்டிருந்தது, பாவம், உனக்கு எங்கே தெரியும்?"

டாக்ஸியிலிருந்த மற்ற இரண்டு பேருக்கும் பக்கிரிசாமியைப் பற்றித் தெரியுமோ, தெரியாதோ, ஆனால் திடீரென நிலைமை தலைகீழாக மாறியதையும், தோன்றாத் துணையொன்று முளைத்ததையும் கண்டு அவர்கள் அடைந்த மகிழ்ச்சி வெளிப்படையாகத் தெரிந்தது. மரகதம் வாய் விட்டு, "நீ நன்றாயிருப்பாயப்பா," என்று வாழ்த்தினாள்.

"உன்னை என்ன செய்கிறேன், பார்," என்று சூரி டாக்ஸியோட்டியை மிரட்ட ஆரம்பித்தான். வாக்கியத்தை முடிக்கு முன்பே அவன் விலாவில் டாக்ஸியோட்டியின் பிச்சுவாவொன்று உறுத்தியது. "வாத்தியாரே, இது பல தண்ணீர் பார்த்த சிங்கம். உன் வித்தையையெல்லாம் உன் கிட்டேயே வைத்துக்கொள்" என்றவன், ஒரு கையால் சூரியைக் கட்டுப்படுத்திக்கொண்டு மறு கையால் வண்டியையும் செலுத்தினான்.

கலிவரதனின் பங்களா சில நிமிடங்களில் வந்து விட்டது.

"நீங்கள் இறங்கிக் கொள்ளுங்கள், அம்மா" என்று வண்டியை நிறுத்தினான் டாக்ஸி டிரைவர். "இந்த ஆளை எங்கேயாவது பொட்டைக் காட்டில் இறக்கி விட்டு விட்டு நான் போகிறேன்."

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

மரகதம் நன்றியுடன், "நீ எங்கள் உயிரையே காப்பாற்றினாய் தம்பி," என்றாள்.

"அப்படியெல்லாம் பேசாதீர்கள், அம்மா, என் சிநேகிதன் பக்கிரிசாமிக்காக நான் எதையும் செய்வேன், ஆனால் அடிக்கடி என்னாலே இங்கே வர முடியாது. இவனைப் போன்ற ஆளுங்க கிட்டே நீங்கள் எச்சரிக்கை யாகவே இருந்துக்குங்க" என்று சொல்விட்டு அந்த டாக்ஸிக்காரன் போய்விட்டான்.

"வா, அம்பிகா," என்று மரகதம் அவளை அழைத்துக் கொண்டு பங்களாவினுள் சென்றாள். கலிவரதனிடம் என்ன பேசப் போகிறோம், எப்படி நடந்து கொள்ளப் போகிறோம் என்று அவளுக்குத் தெரியவில்லை. ஏதோவொரு சொப்பன உலகத்தில் அறிவுக்குப் பொருத்த மில்லாத, சிலுக்குத்தனமான காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகத்தான் அவளுக்குத் தோன்றியதே தவிர, மெய்யாக நடக்கின்றன என்ற உணர்வு ஏற்படவில்லை.

ஹாலில் கலிவரதன் ஒரு சாய்வு நாற்காலியில் கிடந்தான். ரத்தச் சிவப்புடன் கண்கள் வழக்கம்போல் செருகிக் கிடந்தன. போதை தலைக்கேறாவிட்டாலும், சட்டென்று புரிந்துகொள்கிற நிலையில் மனம் இருக்க வில்லை. இரண்டு பெண்கள் தன்னைச் சமீபித்து வருவது மசமசவென்று அவன் பார்வைக்குப் புலப்பட்டது, கொஞ்சம் கொஞ்சமாக மரகதத்தை அடையாளம் கண்டு கொண்டான். ஆனால் மற்றவள்...

"யார்? யார் நீ?" என்று அதிர்ச்சியுடன், தேவைக்கு மீறிய வியப்புடன், கலிவரதன் கேட்டான்.

"இவள் அம்பிகாதான். அவள்தான் இப்படி ஆகிவிட்டாள் — நெருப்புக்காயம் பட்டு," என்று அவள் கையைப் பிடித்து உள்ளே அழைத்து வந்தாள் மரகதம்.

வந்தவளுக்கோ கலிவரதனின் கேள்வியிலும் மரகதத்தின் பதிலிலும் புத்தி செல்லவில்லை. வேறொரு

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

சக்தியின் ஆளுகைக்கு உட்பட்டவள்போல, கண்களை மூடி மூடித் திறந்தாள். தரையையும் தூணையும் கதவுகளையும் பார்வையிழந்தவள் போலத் தடவினாள். "நான் அம்பிகா இல்லை... தேவகி... இதுதான் என் வீடு! இங்கே தான் நான் இருந்தேன்!" என்று வெறி பிடித்தவள் போல் பேசலானாள்.

"ஓகோகோ! நீங்களா!" என்று குத்தலாகச் சொன்னபடியே தள்ளாடி எழுந்து வந்தான் கலிவரதன். அவன் போதையில் பாதி தெளிந்த மாதிரி இருந்தது. "போச்சு! போச்சு! மறுபடியும் வந்து விட்டீர்களல்லவா? அவ்வளவுதான் நான்! அந்த ஷேக்ஸ்பியர்வாலாவோடு வந்து ஒரு தரம் எனக்குப் பைத்தியம் பிடிக்க வைத்தீர்களே, திருப்தி ஏற்படவில்லையா?" என்று கத்தினான்.

மரகதம் கையைப் பிசைந்துகொண்டாள். "அப்படியெல்லாம் இல்லை... இந்தப் பெண் அம்பிகாவுக்கு இங்கே வந்தால்தான் மனசுக்குச் சாந்தி ஏற்படும் என்று..."

"என் மனதுக்குச் சாந்தியே வேண்டாமென்கிறீர்களாக்கும்?" என்று கடுகடுத்த கலிவரதன், "இந்தாம்மா அம்பிகா, இதெல்லாம் உனக்கு ஏற்ற வீடு இல்லை. தயவு பண்ணிப் போய்விடு..." என்றான்.

ஆனால் அவள் காதில் இந்த வார்த்தை விழுந்ததாகவே தெரியவில்லை. தன்னை மறந்த நிலையில், கைகளை அகல விரித்துக்கொண்டு, துழாவுகிற மாதிரியே கலிவரதனைத் தாண்டிக்கொண்டு உள்ளே சென்றாள்.

"அம்பிகா சொல்லிக்கொண்டேயிருக்கிறேன். நீ போய்க்கொண்டேயிருக்கிறாயே? நில்லு நில்லு!" என்று இரைந்தவாறு அவளைப் பின் தொடர்ந்தான் கலிவரதன்.

"இந்த இடம்தான்... பொங்கல் பண்டிகையன்று சாயந்தரம்..." என்று அவள் அங்கிருந்த சோபா நாற்காலிகளை நகர்த்தினாள். எதையோ தேடினாள். பூங்கொத்துக்களை ஜாடியிலிருந்து கவிழ்த்தாள். அழகுக்காக வைக்கப்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

பட்டிருந்த பொம்மைகளைக் கழுத்தைத் திருகியும், திறந்தும் ஆட்டியும் பரிசோதித்தாள்.

"அம்பிகா... என்ன தேடுகிறாய்?" என்று கலிவரதன் இரைந்தான். "பொங்கல் பண்டிகையின் போது என்ன நேர்ந்தது? எல்லாம் புதுக் கலாட்டாவாக அல்லவா இருக்கிறது?"

"பொன்னடியைக் கூப்பிட்டுக் கேளுங்கள், தெரியும்," என்று பதிலளித்தாள் அவள். "எந்த வருஷமென்று நினைவில்லை. ஆனால் பொங்கல் கொண்டாடினோம் என்பது நிச்சயம். அன்றைக்குச் சாயந்தரம் உங்கள் சினேகிதர்கள் பல பேரைக் கூப்பிட்டிருந்தீர்கள். தோட்டத்தில் கொஞ்ச நேரம் டென்னிஸ் விளையாடினோம்... பிறகு சீட்டு ஆடினோம். பிறகு யாரோ சொன்னார்கள் ஒளித்து வைக்கிற விளையாட்டு விளையாடலாமென்று..."

கலிவரதன் தலையை இரு கைகளாலும் பிடித்துக் கொண்டு பொதேரென்று ஒரு கூடை நாற்காலியில் விழுந்தான். "ஆமாம்... ஆமாம்..." என்று அவன் உதடுகள் முணுமுணுத்தன.

"உங்கள் வெள்ளி சிகரெட் கேஸை ஒளித்து வைப்பது என்று முடிவு செய்தார்கள். இந்த ஹாலில்தான் ஒவ்வொருவர் ஒவ்வோரிடத்தில் ஒளித்து வைத்தோம்... கண்டு பிடித்தோம். கடைசியாக நான் ஒளித்து வைத்தேன். யாராலும் கண்டு பிடிக்க முடியவில்லை. ஏன், எனக்கே எங்கே ஒளித்து வைத்தோம் என்பது மறந்து போய்விட்டது. ரொம்ப நேரம் தேடினோம்... 'சரி, தொலையட்டும் விடு' என்று நீங்கள் சொன்னீர்கள்..."

அவளையே வெறித்து நோக்கிக் கொண்டிருந்த கலிவரதன், "நினைவிருக்கிறது... அந்த வெள்ளி சிகரெட்கேஸ் நான் திருவனந்தபுரத்தில் வாங்கினது...

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

போனது போனதுதான்... அகப்படவில்லை,'' என்று வார்த்தைகளை விழுங்கி விழுங்கிச் சொன்னான்.

"இப்போது எனக்கு எல்லாம் ஞாபகம் வருகிறது— பத்து நிமிடத்துக்கு முன்னால்தான் நடைபெற்ற மாதிரி..." என்றாள் அவள். "இதோ... இதோ... இங்கேதான்" ஒரு நாற்காலியைத் தரதரவென்று இழுத்துப் போட்டாள். ஏறி நின்று சுவரில் மாட்டியிருந்த ஒரு மான் தலையைக் கழற்றினாள். ஆணி அடித்திருந்த இடத்தின் கீழே ஒரு பிறைபோல் இருந்தது. அங்கே கையை விட்டு—

தூசு நிறைந்து அழுக்கேறிய வெள்ளி சிகரெட் கேஸை வெளியே எடுத்தாள்!

பரக்கென்று அதைப் பறித்துப் பரிசோதித்தான் கலிவரதன். அளவுகடந்த பிரமிப்பினால் அவன் முகம் வெளிறிப் போயிற்று. "இது என்னுடையதுதான். அப்படியானால் நீ அம்பிகா இல்லை தேவகி! மறுபடியும் வந்து விட்டாய் தேவகி!"

மரகதம், சட்டென்று இருவருக்கும் குறுக்கே புகுந்து, "அம்பிகா, இப்படி வா," என்று தன் பக்கம் இழுத்து அணைத்துக் கொண்டாள்.

"உன்னை நான் தேவகி என்றுதான் கூப்பிடப் போகிறேன்" என்றான் கலிவரதன் உறுதியாக. "இனிமேல் நீ எங்கேயும் போகக்கூடாது... இங்கேயே என்னுடன்தான் தங்க வேண்டும்..."

"வெகு லட்சணம்தான்!" — மாடிப் படியிலிருந்து ஒரு குரல் கேட்டது. மாடிக்குச் சென்றிருந்த பொன்னடிதான் இறங்கி வந்து கொண்டிருந்தான். அவன் கையில் மதுப் புட்டியும் கோப்பையும் இருந்தன. கடுங் கோபத்துடன் அவர்களை நெருங்கி வந்தவன், "நீங்கள் எதற்காகத் திரும்பத் திரும்ப இங்கே வந்து கூத்தடிக்கிறீர்கள்? போங்கள் பேசாமல்!'' என்று மரகதத்திடம் கத்தினான். பிறகு, கோப்பையில் மதுவை ஊற்றி,

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"இந்தாருங்கள். எஜமான்" என்று கலிவரதனிடம் கொடுத்தான்.

"தேவகி — தேவகி — இதோ பார்த்தாயா — நீ செத்துப் போன நாளிலிருந்து எனக்கு இந்தக் கதிதான்" என்று குழறியபடி மதுவை உறிஞ்சிக்கொண்டே மாடியை நோக்கி கலிவரதன் நகர்ந்தான்.

"வேண்டாம்! அதைக் குடிக்காதீர்கள்! கொடிய பழக்கம்! நான்தான் வந்துவிட்டேனே!" என்று அவள் ஓடிச் சென்று தடுக்க முயன்றாள்.

பொன்னடி கடுமையாக, "அப்புறம் மரியாதை கெட்டுவிடும். சொல்லிவிட்டேன். போங்கள் இந்த வீட்டை விட்டு!" என்று கத்தினான்.

"பொன்னடி! தேவகி இங்கேயே இருக்கட்டும், பொன்னடி!" என்று தன் காரியதரிசியைக் கெஞ்சினான் கலிவரதன்.

பொன்னடி! மெல்லக் கலிவரதனை ஓரமாக அழைத்துச் சென்றான். "என்ன நீங்கள், நிலைமை தெரியாமல்?" என்று ரகசியமாகப் பேசினான். "தேவகியின் வாழ்க்கையெல்லாம் நினைவு வருகிறது என்று இவள் சொன்னால் நீங்கள் ஒப்புக் கொண்டு விடுவதா? நாளைக்கு, தேவகியை நெருப்பு வைத்துக் கொளுத்தியது நீங்கள்தான் என்று இவள் சொன்னால் அதையும் ஒப்புக் கொள்வீர்கள்?"

கலிவரதனின் முகம் சவம்போல் வெளுத்து விட்டது. "ஐயையோ! அது நினைவில்லாமல் போய் விட்டது எனக்கு" என்று பதறியவன், உடனேயே, "நீயும் ஒன்று மறந்து விட்டாயே, பொன்னடி?" என்று கேட்டான்.

"எதை?"

"புதையல்; தேவகி புதைத்து வைத்தது — இவள் இங்கேயே தங்கினால்தானே அதற்குச் சௌகரியம்?

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

இப்போதாவது கண்டுபிடித்துத் தருகிறாளா பார்ப் போமே?" என்றான் கலிவரதன்.

பொன்னடியின் கண்களிலும் பேராசை பளபளத்தது. ஆனால், அவர்களைப் பங்களாவிலேயே அமர்த்திக்கொள்ளவும் மனம் ஒப்பவில்லை.

அவனுடைய சங்கடத்தை நீக்குவதற்காக வந்த மாதிரி திடுதிப்பென்று வேலைக்காரக் கிழவியான தாயி எங்கிருந்தோ ஓடி வந்தாள். "சாமி! எங்க தேவகியம்மாவை விரட்டாதீங்க! இப்பத்தான் யாரோ சொன்னாங்க, ஓடியாந்தேன். அம்மா என்னோடு என் குடிசையிலே வேணுமின்னாலும் இருந்து கொள்ளட்டும். வெளியே அனுப்பாதீங்க, சாமி!" என்று கலிவரதனிடமும் பொன்னடியிடமும் கெஞ்சிவிட்டுத் திரும்பியவள், அந்த முகத்தைக் கண்டு துடித்துப் போனாள்.

"ஐயையோ! என்னம்மா நேர்ந்திச்சு உங்களுக்கு? எந்தப்பாவி என்ன செய்தான் அம்மா?" என்று கதறியவளை மரகதம் தடுத்து ஆறுதல் சொன்னாள்; "அம்பிகாவுக்கு இன்னொரு நெருப்பு விபத்து ஏற்பட்டு விட்டது, தாயி..."

"அம்பிகா அம்பிகான்னு சொல்லாதீங்க, அம்மா! இவங்க எங்க எஜமானி, தேவகியம்மாதான்:" என்று குறுக்கிட்டாள் கிழவி. "ஏனம்மா, தேவகியம்மா, நீங்களே சொல்லுங்க. என்னைத் தெரியலையா உங்களுக்கு?" என்றாள்.

அவள் உடனே, "ஏன் தெரியாமல், தாயி? செத்துப் போவதற்கு முன்னால், கடைசியாக உன் குடிசையிலே தானே இருந்தேன்? நீ பண்ணின உதவிகளையெல்லாம் மறந்துவிடுவேனா?... ஆமாம், டைகர் எங்கே?" என்றாள்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"அது செத்துவிட்டது," என்று அவசரமாகப் பதிலளித்த பொன்னடி, "சரி, சரி. வாருங்கள். குடிசைக்குப் பக்கத்தில் இருக்கிற அந்தப் பழைய அவுட்ஹவுசிலேயே நீங்கள் தங்க முடியுமா என்று பார்க்கலாம். கொஞ்சம் கொஞ்சம் ரிப்பேர் பண்ணினால் சரியாகிவிடும்," என்று அவர்களை அழைத்துச் சென்றான்.

குடிசையை அடைந்தபோது, மரகதம், "என்ன அம்பிகா, என்ன தயங்குகிறாய்?" என்று கேட்டாள்.

"ஒன்றுமில்லை. பொன்னடியிடம் ஒரு விஷயம் பேச வேண்டும்," என்று கூறி, சுற்றுமுற்றும் பார்த்தாள் அவள். வெளியேயிருந்த சாலையிலும் சுற்றுப்புறத்திலும் அவள் பார்வை மேய்ந்தது.

"என்ன வேண்டும்?" என்று பொன்னடி கேட்டான்.

"புதையலை எடுத்துத் தருவேன் என்கிற நம்பிக்கையில் எனக்கு இங்கே இடம் தந்திருக்கிறீர்கள். அது எனக்குத் தெரியும். அந்தக் காரியம் நடைபெறு முன்னால் ஒரு நிபந்தனை."

"என்ன?"

"என்ன செய்வீர்களோ, எப்படிச் செய்வீர்களோ எனக்குத் தெரியாது. இந்தப் பங்களாவைச் சுற்றி எப்போதும் காவல் இருக்க வேண்டும். சுற்று வட்டாரம் ஐம்பது கெஜ தூரத்துக்கு எந்த அன்னியரும் இந்த வீட்டின் அருகிலோ, என் அருகிலோ, உங்கள் எஜமானரின் அருகிலோ வரக்கூடாது. செய்வீர்களா?"

"கட்டாயம்." என்று வாக்களித்தான் பொன்னடி.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

35

பக்கிரிசாமியின் 'தோஸ்து' என்று சொல்லிக் கொண்ட அந்த டாக்ஸி டிரைவர், தன் வாக்கைக் காப்பாற்றத் தவறவில்லை. மரகதத்திடம் கூறியபடியே, நேரே கிண்டி செல்லும் பாதையில் டாக்ஸியைச் செலுத்தினான். பரங்கிமலையைத் தாண்டித் திருநீர்மலை செல்லும் ரஸ்தாவில் சென்று, சுற்று முற்றும் யாருமில்லாத இடத்தில் சூரியை இறக்கிவிட்டான்.

"இன்னொரு தரம் அந்தப் பொம்பளைங்ககிட்டே நீ வாலாட்டினதாய்த் தெரிஞ்சுது, எலும்பை எண்ணிக் கையிலே கொடுத்திடுவேன்; உஷாராய் இருந்துக்க," என்று சொல்லிவிட்டு, டாக்ஸியைத் திருப்பிக்கொண்டு புயல் வேகத்தில் பறந்துவிட்டான்.

புன்சிரிப்புடன் சூரி நடையைக் கட்டினான். இதற்கெல்லாம் அயருகிறவன் அல்ல அவன். அப்படி இருந்திருந்தால் என்றைக்கோ கடையைக் கட்டியிருக்க வேண்டுமே.

டிரங்க் ரஸ்தாவுக்கு வந்த பிற்பாடு அவனுக்குச் சிரமம் இருக்கவில்லை. தாம்பரத்திலிருந்து வந்து கொண்டிருந்த பஸ்ஸைப் பிடித்துத் தன் ஜாகைக்குத் திரும்பிவிட்டான்.

அவன் மனத்தில் அச்சமேதும் இல்லையே தவிர, கசப்பு நிறைந்திருந்தது. அம்பிகாவையும் மரகதத்தையும் கலிவரதனிடம் செல்லாமல் தடுத்துவைக்க வேண்டும் என்று, தான் பலமாகச் செய்துவைத்திருந்த ஏற்பாடு, கேவலம் ஒரு டாக்ஸியோட்டியினால் தகர்ந்து

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

சிதறுண்டதை எண்ணி அவனுக்குக் கோபமும் ஆத்திரமும் மிதமிஞ்சிப் பொங்கின.

அந்த நிலையில் தன் வீட்டுக்குள் நுழைந்தவனுக்கு, பல கல்லூரி மாணவிகளும், சிற்சில பேராசிரியைகளும் நின்றிருப்பதைக் கண்டு ஆச்சரியமேற்பட்டது. மாணவிகள் அனைவரும் அவனுடைய நாடகப்பயிற்சிப்பள்ளியில் படிப்பவர்கள் வெவ்வேறு கல்லூரியைச் சேர்ந்தவர்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கிழமையில்தான் வகுப்பு உண்டு. இப்படி ஒரே தினத்தில் ஒன்று சேர வாய்ப்புக் கிடையாது. பின்னே?

திகைப்பை அடக்கிக்கொண்ட சூரி, வலுக் கட்டாயமாக ஒரு புன்சிரிப்பை வரவழைத்துக் கொண்டான். "வாருங்கள், வாருங்கள்..." என்று செயற்கை யான மகிழ்ச்சியுடன் வரவேற்றான்.

"வரவில்லை. போகத்தான் வந்திருக்கிறோம்," என்றாள் ஓர் ஆசிரியை.

"என்ன விஷயம்..." என்ற சூரி அவர்கள் முகத்தை ஆராய்ந்தான். அவற்றிலே ஒரு கடுமையும் கோபமும் பிரதி பலித்தன. ஆனால் திடீரென்று இவர்கள் கோபம் கொள்ளும்படி என்ன செய்தோமென்று அவனுக்குப் புரியவில்லை.

ஒரு மாணவி முன்வந்து கடிதத்தை அவனிடம் தந்து "நாடகப் பயிற்சி எனக்கு வேண்டாம் சார். விலகிக் கொள்கிறேன், எங்கள் பிரின்ஸிபாலின் கடிதம் இது," என்றாள்.

அவன் திகைப்பு அடங்கு முன்னரே மற்றவர் களும் தங்கள் தங்கள் பிரின்ஸிபால்களின் கடிதத்தைக் கொடுத்தார்கள்.

சூரிக்குக் கோபம்தான் வந்தது. அதை அடக்கிக் கொண்டு, "என்ன திடீரென்று இந்த முடிவு? சரியாகத் தானே வகுப்புகளை நடத்திவந்தேன்! என்றைக்காவது

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

தலைவலி காய்ச்சல் என்று படுத்துக்கொண்டால்கூட விடாமல் பயிற்சி நடத்தியிருக்கிறேனே?" என்றான்.

"உண்மை, உண்மை," என்றாள் நெட்டையான ஒரு பேராசிரியை, தன் மூக்குக் கண்ணாடியைத் தூக்கிவிட்டுக்கொண்டு. "நீங்கள் இடைவிடாமல் நடத்துகிற பயிற்சிகளைப் பார்த்துப் பயந்து போய்த்தான் எல்லோரும் இப்போது விலகிக்கொள்கிறேன் என்கிறார்கள்."

"அதிலே என்ன பயப்படுவதற்கு?" என்று சூரி கேட்டான்.

"இங்கே வாடி மல்லிகா," என்று ஒரு மாணவியை அழைத்தாள் மூக்குக் கண்ணாடி ஆசிரியை. "ஏன் உங்களுக்குப் பயமாயிருக்கிறதென்று இவருக்குப் புரிய வில்லையாம். முந்தாநாள் என்ன நடந்தது என்று சொல்லு," என்றாள்.

மல்லிகா என்ற மாணவி தயங்கித் தயங்கி ஆரம்பித்தாள். "வழக்கம்போல் எங்களைப் படுத்துத் தூங்கச் சொன்னார் சிறிது நேரம். எல்லோரும் தூங்கி விட்டார்கள். நான் மட்டும் சும்மாக் கண்ணை மூடிக் கொண்டு படுத்திருந்தேன்..."

சூரி ஒரு புன்னகையுடன். "அப்புறம்? சொல்லு தயங்காமல்..." என்றான்.

"நீங்கள் வந்து... ஒவ்வொருவர் தலைமாட்டிலும் நின்று கொண்டு என்னென்னவோ முணுமுணுத்தீர்கள்..."

"கரெக்ட்," என்று ஆமோதித்தான் சூரி உற்சாகமாக, "அதுதானே என் நாடகப் பள்ளிக்கூடத்தின் வெற்றி ரகசியம்? புதிய ஜெர்மன் முறைப்படி...."

"அந்த ஜெர்மன் மனோவசிய முறைகள்தான் வேண்டாம் என்று நாங்கள் எல்லோரும் ஆட்சேபிக் கிறோம்!" என்று அழுத்தந்திருத்தமாகக் குறுக்கிட்டாள் குண்டாயிருந்த இன்னோர் ஆசிரியர்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"அதிலென்ன தவறு?" என்று சூரி கேட்டதும் ஓர் அம்மாளுக்குப் படுகோபம் வந்துவிட்டது.

"இங்கே வருகிறவர்கள், நாடகத்தில் நடிப்பதற்குக் கற்றுக்கொள்ள வேண்டுமென்றுதான் வருகிறார்கள். பைத்தியம் பிடித்துத் திரிவதற்காக வரவில்லை." என்றாள்.

"பைத்தியமா?"

"அம்பிகாவுக்கு வேறென்ன நேர்ந்தது பின்னே?" என்று கடுகடுத்தாள் அந்த ஆசிரியை. "அவளையும் இப்படித் தூங்க வைத்து ஏதோ சொல்லிச் சொல்லித்தான் மனசைக் கெடுத்துவிட்டீர்கள். அந்தக் கதி இந்தப் பெண்களுக்கு வரக்கூடாதென்று பெற்றோர்களும் பிரின்ஸிபால்களும் பயப்படுகிறார்கள்...."

யாரோ இவர்களைத் தூண்டி விட்டிருக்க வேண்டும் என்று சூரிக்குப் பட்டது. "இதோ பாருங்கள் தர்மு சிவராஜ் சுத்தத் தொடை நடுங்கி. ஊரில் இருக்கிறவர்களையெல்லாம் காபரா படுத்துவதுதான் அந்த அம்மாளின் வேலை. நீங்கள் அவர் பேச்சைக் கேட்டுக் கொண்டு இப்படியெல்லாம்..."

"நாங்களென்ன பச்சைக் குழந்தைகளா, இன்னொருத்தர் பேச்சைக் கேட்டுக்கொண்டு நடப்பதற்கு?" என்று சீறினாள் ஓர் அம்மாள்.

"சரி, சரி. ஏன் வீண் பேச்சு இவருடன்? நாம் போகலாம்," என்று நெட்டையாசிரியை கூற, எல்லோரும் அவளைப் பின் தொடர்ந்து வெளியேறினார்கள்.

தான் ஸ்தாபித்த நிறுவனமும் திட்டமும் தன் கண்ணெதிரிலேயே நொறுங்கித் தரைமட்டமாவதைக் கண்டான் சூரி. அவன் ஆத்திரம் முழுவதும் அம்பிகாவின் மீதுதான் திரும்பியது. கடுஞ்சினத்துடன் வீட்டுக்குள் நுழைந்தான். முன் வெராந்தாவின் சுவரில், 'சூரிய நாராயணன், நாடகப் பள்ளி ஆசிரியர்,' என்ற எழுத்துக்களுடன் மாட்டப்பட்டிருந்த பித்தளைப் பலகை அவன்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கண்ணில் பட்டது. அதைப் பறித்துக் கீழே போட்டுத் தன் காலினாலேயே மிதித்துவிட்டு உள்ளே நுழைந்தான். சோபாவில் பொத்தென்று விழுந்தான். தலையைக் குனிந்துக் கைகளால் பொத்திக்கொண்டு வெறுப்புடன் அமர்ந்திருந்தான்.

"சூரி! இங்கே வா," மாடியிலிருந்து ஒரு குரல் கேட்டது.

ஊசோ தாத்தாவின் குரல் அது. சூரி சற்று நேரம் பேசாமலிருந்தான். ஊசோ தாத்தாவைப் பார்க்கக்கூடப் பிடிக்கவில்லை அவனுக்கு. ஆனால் மீண்டும் மீண்டும் அதட்டலாக ஊசோ தாத்தாவின் குரல் கேட்கவே, வேண்டா வெறுப்பாக மாடிக்குச் சென்றான்.

பயத்துடனும் மரியாதையுடனும் ஊசோவின் அறைக்குள் நுழையும் சூரி, அன்று கோபமாகவும் வேகமாகவும் பிரவேசித்தான். "எதற்குக் கூப்பிட்டீர்கள்?" என்று அவன் கேட்டபோது அந்தத் தொனியில் பணிவும் இருக்கவில்லை.

"வாசலில் என்ன ரகளை?" என்று ஊசோ தாத்தா வினவினார்.

"நாடகப் பள்ளிக்கு முற்றுப்புள்ளி வைத்தாகி விட்டது," என்று கசப்புடன் பதில் கொடுத்தான் சூரி.

"இனிமேல் பிழைப்புக்கு என்ன செய்வது என்று உனக்குக் கவலை. அப்படித்தானே?" என்று ஊசோ தாத்தா சிரித்தார். கெக்கெக்கே என்ன அந்த ஆந்தைச் சிரிப்பு எப்போதும் சூரியின் ரத்தத்தை உறைய வைப்பது வழக்கம். இன்று அந்தச் சக்தி அந்தச் சிரிப்புக்கு இருப்பதாகக் காணோம். மாறாக, சூரியின் ஆத்திரத்தைக் கிண்டி விடுவ தாகவே அமைந்தது.

"ஊசோ தாத்தா! என்றைக்குமே இந்தச் சூரி வயிற்றுப்பாட்டைப் பற்றிக் கவலைப்பட்டவன் அல்ல," என்றான் வீறாப்புடன். "விறகு வெட்டிப் போட்டாவது,

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ரயில்வே ஸ்டேஷனில் மூட்டை தூக்கியாவது இந்த ஒன்றிக் கட்டையின் வயிற்றைக் கழுவிக்கொள்ள முடியும். ஆனால், எடுத்துக் கொண்டிருந்த திட்டம் இப்படித் தகர்ந்துவிட்டது ஒன்றுதான் எனக்குப் பொறுக்கவில்லை."

"கலிவரதன் விஷயமா?"

"அவன் பெயரை என் காது கேட்க உச்சரிக்காதீர்கள்!" என்று வெடித்தான் சூரி. அவன் தொண்டையில் எதுவோ அடைத்துக் கொண்டாற்போல் ஆயிற்று. கண்ணில் நீர் துளும்பிற்று. "என் அக்காவைக் கொடுமைப்படுத்திக் கொலை செய்த அந்தப் படுபாவியைச் சித்திரவதை செய்து சிறுகச் சிறுகச் சாகடிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டதெல்லாம் கடைசியில் இப்படித் தரைமட்டமாகிவிட்டதே?"

"தேவகி உன் அக்காவா?" என்று ஆச்சரியப் பட்டார் ஊசோ தாத்தா. "என்னிடம் நீ சொல்ல வில்லையே? தேவகி என்று ஒரு பெண்ணை அவன் கொன்றான் என்று மட்டும்தானே சொல்லியிருக்கிறாய்?"

"எவளோ ஒரு பெண்ணாக இருந்தால் எனக்கென்ன தலை போகிற அக்கறை?" என்றான் சூரி. "அவள் என் சொந்த அக்கா, ஊசோ தாத்தா. கூடப்பிறந்த அக்கா. ஏழு வயதுவரை அவளிடம்தான் உயிராக ஒட்டி வளர்ந்தேன் நான். அம்மா இல்லாத எனக்கு அந்த அக்காதான் அம்மாவாக இருந்தாள். என் அப்பா ஒழுக்கங் கெட்ட மனிதர். ஏராளமான சொத்து இருந்தும் அழித்து நாசம் பண்ணினார். குடியும் கூத்தியுமாக வீட்டுக்கு வந்து அட்டகாசம் பண்ணுவார். நாங்கள் இரண்டு பேரும் சேர்ந்து அடிகளும், உதைகளும் அவரிடம் வாங்கிக் கொள்ளுவோம். ஏழெட்டு வயது என்னைவிடப் பெரியவள் தேவகி. என்னை அணைத்து, கண்ணீரைத் துடைத்துத் தேறுதல் சொல்வாள். அந்த அன்பு முகத்தை துறந்து ஓடினதுதான் நான் செய்த பெருந்தவறு..."

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ஊசோ தாத்தா குறுக்கிடவில்லை. சூரியின் கதை தானாக வெளிப்படட்டும் என்று காத்திருந்தார் போலும்.

சூரி தொடர்ந்தான்: "அக்காவிடமும் சொல்லிக் கொள்ளாமல், அப்பாவுக்கும் தெரியாமல் ஊரை விட்டு ஓட்டம் பிடித்தேன் என் ஏழாவது வயதில். ஒரு பாய்ஸ் கம்பெனியில் நடிகனாகச் சேர்ந்து ஊர் ஊராக அலைந்தேன். வடக்கே பல வருஷங்கள் இருந்தேன். சொந்த நாடகக் கம்பெனி நடத்தினேன். பணமும் புகழும் குவித்துக் கொண்டேன். ஆனால் என் மனசைத் திறந்து. வாயை விட்டு யாரிடமும் என் பால்ய வாழ்க்கையைக் கூறவில்லை. என் சொந்த ஊரை எட்டியும் பார்க்கவில்லை. அன்புடன் வளர்த்த அக்காவின் நினைவு அடிக்கடி என்னை வாட்டியது. ஆனால் அவளையும் நேரில் சென்று பார்க்கவில்லை. சுமார் இருபது வருடங்கள் கழித்துப் போய்ப் பார்த்தபோது, எங்கள் குடும்பமே சின்னாபின்னமாகியிருந்தது. அப்பா எப்போதோ இறந்துவிட்டார். தேவகி அக்கா, யாரோ ஒரு கலிவரதனைக் கல்யாணம் செய்துகொண்டு சென்னைக்குப் போய்விட்டாள் என்று தெரிந்தது. சென்னையில் மிகக் கஷ்டப்பட்டுக் கலிவரதனின் இருப்பிடத்தைத் தெரிந்து கொண்டேன். அடுத்த இடி காத்திருந்தது. என் அருமை அக்காவின் வாழ்க்கையை அந்த அயோக்கியன் நரக வேதனையாகப் பண்ணிவிட்டு, கடைசியில் அவளை உயிரோடு நெருப்பு வைத்துக் கொளுத்தி விட்டானென்றும் தெரிந்தது. எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை குமுறினேன். கண்ணீர் விட்டேன். தற்கொலை செய்து கொள்ளலாமா என்றுகூட நினைத்தேன்..."

ஊசோ தாத்தா குறுக்கிட்டு, "அந்த மனநிலையில் இருந்தபோது, நாடகக் கம்பெனியுடன் பர்மாவுக்கு வரும் வாய்ப்புக் கிடைத்தது. என்னை அங்கே சந்தித்தாய். அந்தக் கதையெல்லாம் இனி நமக்கு வேண்டாம்,. இப்போது என்ன புதிதாய் நேர்ந்தது? அதைச் சொல்," என்றார். என்றைக்குமே இரண்டொரு வார்த்தைகளுக்கு மேல்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

பேசியிராதவர் அவர். சூரியின் எதிர்பாராத கோபமும் மன மாறுதலுமே அவரை இவ்வளவு தூரம் பேச வைத்தது.

"அம்பிகாவைத் தேவகியாக்கினீர்கள் நீங்கள். அவளைக் கொண்டு கலிவரதனின் கொலைக் குற்றத்தை வெளிக்கொணரவேண்டுமென்று திட்டமிட்டோம். அது நடைபெறவில்லை. கலிவரதனை நாமே நேருக்கு நேராய்த் தீர்த்து விடலாமென்று திட்டம் போட்டோம். அது பலிப்பதற்குள்ளேயே இன்னொரு விபரீதம் நிகழ்ந்தி ருக்கிறது."

"சொல்லு."

"நீங்கள் அம்பிகாவை விடுவித்து விட்டாலும், அவள் விடுபட்டதாகத் தெரியவில்லை."

"அதாவது?"

"அம்பிகாவுக்கு இன்னொரு தீவிபத்து ஏற்பட்டு இருக்கிறது. அவள் இப்பொழுது உங்களுடைய சக்தி இல்லாமலே தேவகியாகத் தன்னை நினைத்துக்கொள்ள ஆரம்பித்திருக்கிறாள்."

"அபத்தம்." ஊசோ தாத்தா சீறினார்.

"உண்மை," என்று தனக்குத் தெரிந்தவரையில் விவரித்தான் சூரி. "ஒன்று, நிஜமாகவே அம்பிகா தேவகியின் மறு பிறவியாக இருக்க வேண்டும். அல்லது கலிவரதனிடம் இன்னுமிருக்கிற இரண்டு காசைப் பறிப்பதற்காகச் சூழ்ச்சி செய்கிறார்களோ என்னவோ. எதுவானாலும், இப்போது கலிவரதனுக்குத் துணையாக அவன் வீட்டிலேயே இருக்கிறார்கள். அம்பிகாவும் அவள் சித்தியும். உங்களுடைய மந்திர தந்திர சூன்ய சக்திகள் இனிமேல் பலிக்காது, ஊசோ தாத்தா! அந்தக் கலிவரதன் — என் ஜன்ம வைரி, என் அக்காவின் உயிரைக் குடித்த கொலை பாதகன் — ஓர் ஆபத்தும் இல்லாமல் ஆனந்தமாயிருக்கப் போகிறான்!"

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"சூரி! ஒரு நாளும் கலிவரதன் தப்பமுடியாது! தப்ப விட மாட்டேன் நான்!"

"கிழித்தீர்கள்!" என்றான் சூரி அலட்சியமாக.

ஊசோ தாத்தாவின் முகம் எப்படி ஜொலித்ததோ இந்த ஏசலினால், இருட்டில் தெரியவில்லை. ஆனால் நெடுநேரத்துக்கு அவர் வாயே திறக்கவில்லை.

கடைசியில். "இப்போது மணி என்ன ஆகிறது?" என்று கேட்டார்.

"எட்டு."

"இரவா பகலா?"

"இரவு."

'நல்லது, பதினொரு மணிக்கு ஒரு டாக்ஸி பிடி. என்னை அழைத்துச் செல்."

சூரி உற்சாகத்துடன் எழுந்துகொண்டான். "இந்த முறை நிச்சயமாய் வெற்றி கிடைக்குமா ஊசோ தாத்தா?"

"பார்க்கலாம்."

"அப்படி உறுதியில்லாமல் சொல்லாதீர்கள். நிச்சயமாய் இந்தத் தடவை அந்தக் கலிவரதனின் கதையை முடித்துவிட வேண்டும்."

"காம்பவுண்டுக்குள் என்னைக் கூட்டிக் கொண்டு போவதில் இருக்கிறது அது."

"அதற்கு நானாயிற்று."

"நம்பகமான டாக்ஸிக்காரனை அமர்த்து," என்றார் ஊசோ தாத்தா. அந்தக் குத்தல் சுரீர் என்று சூரிக்குத் தைத்தது. வேறு பேச்சுக் கொடுக்காமல் கதவை மெல்லத் திறந்துகொண்டு வெளியேறினான்.

கொஞ்சம் கொஞ்சமாய் இருள் அதிகரித்துக் கொண்டு சென்றது. மணியும் பத்தேமுக்கால் ஆயிற்று. சூரி, தனக்கு மிக நம்பிக்கை வாய்ந்த ஒரு டாக்ஸியோட்டியை

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அழைத்து வந்தான். அவன் தன் பார்வையை விட்டு விலகாதவாறும் பார்த்துக்கொண்டான்.

பதினொரு மணிக்கு ரசம் சாதம தயாரித்து, கிண்ணத்தில் எடுத்துக்கொண்டு மாடியறைக்குச் சென்றான்.

"எல்லாம் ரெடியா?" என்றார் ஊசோ தாத்தா, சாப்பாடு முடிந்ததும்.

"ஆமாம்," என்றான் சூரி. சில மணி நேரத்துக்கு முன்பிருந்த அலட்சிய பாவம் அவனிடம் மறைந்திருந்தது. ஊசோ தாத்தாவின் குரலில் தென்பட்ட செருக்கும் ஆழமும் அவன் மனத்தில் புகுந்து மாறுதலை ஏற்படுத்தி யிருந்தன. பழையபடி அவரிடம் ஒரு வகை அச்சமும் உதித்தது.

"டிரஸ்ஸை எடு."

சூரி பயபக்தியுடன் ஒரு பீரோவைத் திறந்து, நீண்ட கறுப்புக் கோட்டும், கறுப்புச் சால்வையும், கறுப்புத் தொப்பியும் எடுத்தான். அந்தக் கும்மிருட்டான இருளில் அந்தக் கறுப்பு உடைகளின் சளசளப்புக்கூடப் பயங்கரமாய்க் கேட்டது.

ஊசோ தாத்தா அவைகளைப் பெற்றுக் கொண்டார். தானே அணிந்து கொண்டார்.

"தூக்கிக்கொள்," என்றார்.

சூரி தன் பலத்தையெல்லாம் உபயோகப்படுத்த வேண்டியிருந்தது. ஊசோ தாத்தாவைத் தூக்கித் தோளில் சாத்திக்கொள்ள, மெலிந்து நலிந்த அந்த உருவம், உண்மை யில், மிக லேசானதாக இருக்க வேண்டும். அப்படி இருப்பது கிடையாது. ஊசோ தாத்தாவின் மாந்தரீக சக்தி அவருக்கு ஒரு விசேட எடையைக் கொடுக்கிறது என்பது சூரியின் நம்பிக்கை.

மாடிப்படிகளில் மெல்ல இறங்கி வரும்போது எச்சரிக்கையாக எல்லா இடங்களையும் பார்த்துக்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கொண்டான் சூரி. டாக்ஸி, தெருவைப் பார்த்தாற் போலிருந்த வாசலில் நிற்காமல், பின்புறக் கதவருகே நிறுத்தப்பட்டிருந்தது. காலோடு தலை போர்த்தப்பட்ட அந்தக் கறுப்பு மூட்டை, வேறொரு டாக்ஸிக்காரனா யிருந்தால் அவனை மிரண்டு அலறச் செய்திருக்கும். ஆனால் இந்த டிரைவர் சூரிக்குப் பழக்கப்பட்டவன். ஊசோ தாத்தாவை இம்மாதிரி அடிக்கடி ஏற்றிச் சென்றிருப்பவன். ஆகவே திகைப்புக் காட்டாமல் கதவைத் திறந்துவிட்டான்.

ஊசோ தாத்தாவைச் சூரி தன் பக்கத்தில் இருத்திக் கொள்ளவில்லை. ஊசோ தாத்தாவும் எல்லா பிரயாணிகளையும் போல ஸீட்டில் அமரவில்லை. கால் வைக்குமிடத்தில் இரண்டு ஸீட்டுகளுக்கும் நடுவேயிருந்த இடைவெளியில், பொம்மை படுக்க வைக்கப்படுவது போலக் கிடத்தப்பட்டார்.

அடையாறை நோக்கிப் பறந்தது டாக்ஸி.

கிட்டத்தட்ட நள்ளிரவு நேரம். கலிவரதனின் பங்களாவுக்கருகில் பகல் வேளையில்கூட நடமாட்டம் இருப்பதில்லை என்று நம்பியிருந்த சூரிக்கு, பங்களாவை நெருங்கியதும் அதிர்ச்சி காத்திருந்தது.

காம்பவுண்டு சுவரருகில் டாக்ஸி நின்றதுமே. ஒரு கூர்க்கா ஓடிவந்தான். "இங்கே நிறுத்தக்கூடாது. கிளப்பு வண்டியை," என்று அதட்டினான்.

"டாக்ஸி ரிப்பேர் ஐயா," என்றான் டிரைவர்.

"ரிப்பேராயிருந்தால் விட்டுவிட்டுப் போ. இல்லை, தள்ளிக்கொண்டு போ. இங்கே ஜனங்கள் யாரும் நிற்கக் கூடாது."

"நின்றால் என்ன செய்வாயாம்?" என்று சூரி கோபத்துடன் கேட்டான்.

"இதனால் ஒரே குத்து," என்று இடுப்பிலிருந்து சட்டியை எடுத்துக் காட்டினான் கூர்க்கா.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

வேறு வழியின்றி டாக்ஸியைத் திருப்பினான் டிரைவர்.

36

கூர்க்காவின் அதட்டலைக் கேட்டதும் டாக்ஸி நேரே போய்விட்டது.

"வண்டியை எங்கே நிறுத்தட்டும்?" என்று டாக்ஸி டிரைவர் கேட்டான்.

சூரியினால் பதில் தர இயலவில்லை. இரண்டு சீட்டுகளுக்கும் நடுவே கிடக்கும் அந்தக் கறுப்புக் குவியலைப் பார்த்து "வீட்டுக்குள்ளே நுழைய முடியா திருக்கிறது. என்ன செய்யலாம்?" என்று வினவினான்.

சிறிது நேரத்திற்கு மௌனம் நிலவியது. பிறகு ஊசோ தாத்தாவின் கனமான ஆழமான குரல் கேட்டது. "எப்படியும் அந்தப் பங்களாவுக்குள் நுழைந்தாக வேண்டும். அல்லது அதன் அருகிலாவது எங்கேயாவது இருக்க வேண்டும்."

"இல்லாவிட்டால்?"

"பேசாமல் திரும்பிவிடு. கலிவரதனை எதுவும் செய்ய முடியாது."

சூரியினால் கோபத்தை வெளிப்படுத்தவும் முடிய வில்லை. அடக்கவும் முடியவில்லை. "ஊசோ தாத்தாதான் பேசுவதா?" என்று சீறினான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"ஆமாம். தன் சக்தி என்ன, எத்தனை என்பதை உணர்ந்து அறிந்திருக்கும் ஊசோ தாத்தாதான் பேசுகிறேன். யாரை என் சக்திக்கு ஆடபடுத்துகிறேனோ, அவர்களுக்கு அருகில் இருக்க வேண்டும் நான். ஓரளவுக்கு அவர்களுடைய மனத்தைத் திருப்பிவிட்டுப் பிறகு வேண்டுமானால் அந்த இடத்தை விட்டுப் போய்விடலாம். ஆனால், முழுக்க முழுக்க அருகிலேயே போகாமல் ஒரு காரியத்தைச் செய்ய என்னாலாகாது. இது நன்றாய்த் தெரிந்திருந்தும் என்னை ஏன் துன்புறுத்துகிறாய் நீ?"

"வண்டியை நிறுத்து," என்று கட்டளையிட்டான் சூரி.

டாக்ஸி நின்றது. சூரி மட்டும் இறங்கி சுற்றுப் புறத்தை ஆராய்ந்தான். கலிவரதனின் பங்களா தொலை தூரத்தில் இருட்டில் அமுங்கிக் கிடந்தது. அதையொட்டிச் செல்லும் அடையாற்றின் நீல நிறக் கலங்கிய நீர் சளசளவென்று சப்தித்தது. கலிவரதனின் வீட்டுத் தோட்டம் ஆற்றங்கரையை தொட்டுக் கொண்டிருந்தது.

சூரி மீண்டுமொருமுறை எச்சரிக்கையுடன் சுற்றிலும் பார்த்துவிட்டு, கல்லும் குப்பையும் கண்ணாடித் துண்டுகளும் கிடந்த பாதை வழியே நடந்தான். கூர்க்காவின் உறுதியானக் குரலைக் கேட்ட பிறகு, பங்களாவை எந்தப் புறத்திலும் நெருங்கமுடியும் என்ற நம்பிக்கை அவனுக்குப் போய்விட்டது. சற்றுத் தொலைவிலாவது வேறு இடம் கிடைக்குமா என்றுதான் அவன் கண்கள் ஆராய்ந்தன.

அதோ!

ஒரு சிறு கீற்றுக் குடிசை. முன்னொப்போதோ ஒரு சேரி இருந்ததற்கான கடைசி மிச்ச சொச்சம் போலும். உள்ளே அடைசலாகச் சில கூளங்கள் கிடந்தன. காலால் அவற்றைக் கெந்தி எறிந்தான் சூரி. மீண்டும் காருக்குத் திரும்பியவன், "இடம் பிடித்துவிட்டேன் வாருங்கள்," என்று ஊசோ தாத்தாவிடம் கூறி, குனிந்து தூக்கி அவரைத் தோளில் சுமந்து கொண்டான். "நீ போகலாம்," என்று

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

டாக்ஸிக்காரனுக்கு விடை கொடுத்தனுப்பிய பின் அடி மேலடி வைத்து அந்தக் குடிசையை அடைந்தான்.

கரடு முரடுமான தரையில் விடப்பட்டதும், "கதவைச் சாத்து," என்றார் ஊசோ தாத்தா.

"கதவே கிடையாது. வெளிச்சம் வரும் இடுக்குகளை அடைத்து விடுகிறேன்," என்று கூறிய சூரி, அந்தக் குடிசையின் வாசல்புறம் கிடந்த சில தட்டிகளை எடுத்துச் சாத்தினான். ஏற்கெனவே இருள் கப்பிக் கிடந்த அந்த இடத்தில் மேலும் மையிருட்டு சூழ்ந்துகொண்டது.

"கலிவரதனின் வீட்டிலிருந்து இந்த இடம் எத்தனை தூரம் இருக்கிறது?" மூலையிலிருந்து கேட்டது ஊசோ தாத்தாவின் குரல்.

"அரை பர்லாங்குக்குக் கொஞ்சம் கம்மியா யிருக்கும்," என்றான் சூரி.

"போதாது."

"வேறு வழியில்லை."

"வழியில்லாவிட்டால் திரும்பி விடு."

"உங்களால் முடியும், ஊசோ தாத்தா. சும்மா மறுக்காதீர்கள். முயன்று பாருங்கள்."

"இன்னும் கொஞ்சம் அருகிலே போகவேண்டும்," என்று ஊசோ தாத்தா பிடிவாதமாகச் சொன்னதும் சூரி பொறுமையிழந்தான்.

"வேண்டுமென்றே எதிர்த்துப் பேசுகிறீர்களா?" என்றான் ஆத்திரத்துடன்.

"உண்மையைச் சொன்னேன், சூரி. சரி, நீ பேசாமல் இரு."

அதன் பின்னர் சூரி பேசாமலிருந்திருக்கலாம். இருக்கவில்லை. "அந்தக் கலிவரதனுக்கு ஏதாவதொரு வகையில் துர்மரணம் ஏற்படுத்தித் தரவேண்டும். அது உமது பொறுப்பு. அதற்காகவே மெனக்கெட்டு பர்மாவிலிருந்து உம்மை அழைத்து வந்தேன். இதுதான் அனேகமாய் நம்முடைய கடைசி முயற்சியாக இருக்கும். இதில் தோற்றீர்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

களானால், உன்னுடைய பேச்செல்லாம் வெறும் டம்பம் தான் என்று தீர்மானிப்பேன். நீர் வெறும் ஏமாற்று என்று முடிவு கட்டுவேன்."

ஊசோ தாத்தாவிடமிருந்து மூச்சுக்கூடக் கேட்க வில்லை. குடுகுடுவென்று ஓடிய எலியொன்று, சூரியின் மடிமீது, பாய்ந்து குருக்கே தாவி மறைந்தது. ஆற்றங் கரையின் நாற்றமும், நள்ளிரவில் குப்பைக் கூளங்கள் வெளிப்படுத்தும் நெடியும் சூரியை மெல்லமெல்லத் தாக்கிக் கொண்டிருந்தன. ஆனாலும் அவன் ஆத்திரம் குறையாதவனாக, வேறு ஏதோ ஒரு வெறிக்கு ஆட்பட்டவன்போலப் பேசிக் கொண்டே போனான்.

"நினைத்துப் பாரும் ஊசோ தாத்தா. ரங்கூனில் உங்களை நான் சந்தித்தபோது நீர் எந்த நிலையில் இருந்தீர்? நாயினும் கேடாக, சாக்கடையோரத்தில் கிடந்தீர். ஒரு வாய் சோறு போட உமக்குத் தெரிந்த ஆள் கிடையாது. அப்படியே தெரிந்த ஆள் அங்கே வந்திருந்தாலும் சோற்றுக்குப் பதில் கல்லடிதான் கிடைத்திருக்கும். பில்லி, சூனியக்காரன், மந்திரவாதி, குடியைக் கெடுக்கிறவன் என்று உம்மை ஊரைவிட்டே துரத்திவிட்டார்கள் ஜனங்கள். வெளியூர்களிலும் அடையாளம் கண்டு கொண்டவர்கள் உம்மீது கல்லெறிந்து அடித்து விரட்டினார்கள். அந்த மாதிரியான நிலைமையில் உம்மைக் காப்பாற்றி அழைத்து வந்தேனாக்கும்! மறந்து விடாதீர். எல்லாம் எதற்கு? இந்த நிமிஷத்தில் எனக்குக் கை கொடுக்கத்தான். என் லட்சியத்தை நிறைவேற்றி வைக்கத்தான். இப்போது என்னைக் கை விட்டீர்களோ, ஒரு நாளும் உம்மை மன்னிக்கமாட்டேன். என்னுடன் இருக்க இடம் கொடுக்கவும் மாட்டேன்."

சூரிக்கு மேல் மூச்சுக் கீழ் மூச்சு வாங்கியது இவ்வளவு நேரம் பேசியதில். ஆனால் ஊசோ தாத்தா வாய் திறந்து ஒரு வார்த்தையும் பேசாததால் அவனுடைய ஆத்திரம் சுவரில் அடிப்பட்ட பந்தைப்போல் அவனுக்குள்ளேயே முடங்கியது. கொஞ்சம் கொஞ்சமாக அவனும் சமாதானமடைந்தவனாகி, ஊசோ தாத்தாவின்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அமைதியான சக்தியைக் குலைக்காதிருக்குமாறு தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தான்.

இந்த மாதிரி வேளைகளில், தன் அருகில் எவ்வித சத்தமும் கேட்கக் கூடாது என்று ஊசோ தாத்தா வற்புறுத்துவது வழக்கம். அவர் எப்படி இவ்வளவு தூரம் தான் கத்துவதற்கு அனுமதி கொடுத்தார் என்பதே சூரிக்கு ஆச்சரியமாயிருந்தது. தனக்காக அவர் சக்தியைப் பிரயோகித்துக் கொண்டிருக்கும் வேளையில், தானே அதைக் கெடுக்கக்கூடாதென்று தீர்மானித்துக் கொண்டான்.

கையால் அள்ளி மேலே அப்பிக் கொள்ளலாம், அவ்வளவு கனமான இருட்டு அவனைச் சூழ்ந்து கொண்டிருந்தது. நிசப்தமோ பயங்கரமான பூகம்பம் வாய் பிளந்து நிற்பதுபோல ஆவென்று அவனை விழுங்கிக் கொண்டிருந்தது.

மெல்லிய மூச்சு சத்தம்கூட ஊசோ தாத்தாவிட மிருந்து வரவில்லை. சமாதி போன்ற மூச்சுப் பேச்சற்ற நிலையில் அவர் இருப்பதுதான் வழக்கமென்றாலும், இத்தனை பரிபூரணமான நிசப்தத்தை சூரி பார்த்ததில்லை. உள்ளத்தை ஒருமுகப்படுத்தி, கெட்ட நோக்கத்துடன் தன் சக்தியை செலவிடுகையில் ஊசோ தாத்தாவின் உடம்பி லிருந்து மெல்லிய வெளிச்சம் புறப்பட்டு, சூழ்நிலையில் மிதப்பது போன்ற பிரமையைத் தருவது வழக்கம். காலரா கொள்ளை நோயில் மரிப்போரின் பிரேதத்தை அடக்கம் செய்யாமல் வைத்திருந்தால் அவற்றிலிருந்து நீல நிறமான ஒரு பாஸ்பரஸ் ஒளி கிளம்புவது உண்டு என்று சூரி படித்திருந்தான். அதே போன்ற ஒளி, ஊசோ தாத்தா 'சமாதி'யில் ஆழும்போது ஏற்படுவதைப் பார்த்து அவன் நடுங்கிக் கண்களை மூடிக்கொண்டது உண்டு.

ஆனால், இன்று கண்களைக் கொட்டக் கொட்ட விழித்திருந்தும் கூட வெறும் கருமையான இருள்தான் தெரிந்ததே தவிர, வெளிச்சம் எதுவும் புலப்படவில்லை. முனகுவது போலவும் அசைவது போலவும் மிக மிக

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

லேசான ஒலிகளை அவன் செவிகள் கேட்டன. அல்லது அதுகூடப் பிரமையா என்று தெரியவில்லை.

நேரம் ஓடிக் கொண்டிருந்தது. ஒரு பெரும் முனகலுடன் ஊசோ தாத்தா தன் நிஷ்டை முடிந்து விட்டதை அறிவிப்பது வழக்கம். அந்த முனகல் கேட்கும், கேட்கும் என்று காத்திருந்தான் சூரி. கேட்கவில்லை.

அருகில் காவலுக்கு இருக்கலாமே தவிர, ஊசோ தாத்தாவைத் தொடக் கூடாது. இது அவருடைய கண்டிப்பான கட்டளை. அதையும் மீற முடியவில்லை. பல்லைக் கடித்துக் கொண்டு கைகளைக் கட்டிக் கொண்டிருந்தான்.

கொஞ்சம் கொஞ்சமாய் அவனைத் திகில் பற்றிக் கொண்டது. மெல்ல அருகிலிருந்த துணிக் குவியலைத் தொட்டுப் பார்த்தான் கறுப்புக் கோட்டுக் கையில் பட்டது. மெல்ல மேலும் தடவிப் பார்த்தான். உடலோ, கையோ, காலோ தட்டுப்பட்டதாகத் தெரியவில்லை. திகைப்புடன் இன்னும் தடவினான். இல்லை. மொத்து மொத்தென்று துணி மட்டுமே அகப்பட்டது. கையில் எடுத்தான். வெறும் உடைகள் மட்டுமே வந்தன. அவற்றுக்குள் ஆள் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை.

"ஊசோ தாத்தா! ஊசோ தாத்தா!" என்று மெல்லக் கூப்பிட்டான். பிறகு உரக்க அழைத்தான். கடைசியில் கத்திக்கொண்டே, கண்ணிழந்தவன் தடவுகிற மாதிரி குடிசையின் மூலைகளைத் தடவினான். ஓரங்களி லிருந்த கிற்றுத் தட்டிகளையும் மண் சுவரின் பொந்துகளை யும் நகர்த்தியும் தோண்டியும் பெயர்த்துத் தள்ளினான்.

குடிசைக்குள் இருட்டு அகன்று, வானத்தின் வெளிச்சம் நுழையத் தொடங்கியது. சாண் போனா லென்ன, முழம் போனாலென்ன என்று எண்ணியவனாக, வெளிச்சத்தை அடைப்பதற்காக வைத்திருந்த தட்டிகளை யும் பலகைகளையும் நகர்த்தினான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ஊஹூம். குடிசைக்குள் அந்தக் கறுப்புப் போர்வையையும் கோட்டையும் தவிர வேறு எவரையுமே காணவில்லை.

சூரியினால் தன் கண்களையே நம்ப முடியவில்லை.

ஊசோ தாத்தா எப்படி மாயமாய் மறைந்து போனார்? உருவமில்லாத வெளியில் அருவமாய்க் கலந்து விட்டாரா? இல்லை, வெறும் நிழல் போலத் தன்னை மாற்றிக்கொண்டு, பக்கத்திலேயே நின்றவாறு சூரியின் தவிப்பையும் அதிர்ச்சியையும் கண்டு ரசித்துச் சிரித்துக் கொண்டிருக்கிறாரா?

சூரிக்கு வியர்த்துக் கொட்டியது குடம் குடமாய். நரம்புகளை வெளியே உருவுகிறாற் போன்ற மரண வேதனை அவன் உடலில் சம்பவித்தது. கால்கள் தொய்ந்தன. கண்கள் செருகத் தொடங்கின.

ஊசோ தாத்தா எந்த வழியாகத் தப்பிச் சென்றார் என்று அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஏனெனில் அவனே பல இடுக்குகளையும் பொந்துகளையும் அந்தப் பொத்தல் குடிசையில் ஏற்படுத்தியிருந்தான். தள்ளாடியவாறு வெளியேவந்த சூரி ஆற்றங்கரையின் பக்கங்களில் சுற்றினான். நடு நடுவே தண்ணீரிலும் இறங்கி, காலால் துழாவினான். எதுவும் தட்டுப்படவில்லை.

ஊசோ தாத்தாவின் அமானுஷ்யமான சக்திகளை நேருக்கு நேராகக் கண்டவனாகையால் அச்சம் அவனைக் காலோடு தலை ஆட்கொண்டது. ஆத்திர மிகுதியினால் அளவுக்குமீறி அவரை இடித்துக் காட்டிவிட்டோம் என்பதை இப்போதுதான் அவன் உணர்ந்தான். ஊசோ தாத்தா அவனுக்கே எதிராகத் திரும்ப முனைந்தால் என்ன கதியாகும்? கற்பனை செய்யும்போதே கடுமையான காய்ச்சலில் விழுந்தவன்போல் சூரியின் மேனி வெடவெடத்தது.

தன்னினைவே இல்லாதவனாக, சாவி கொடுத்த பொம்மை போலத் தன் வீட்டை நோக்கி சூரி நடந்தான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"ஊசோ தாத்தா! 'நேற்றுவரை சீஸரின் ஆணை உலகத்தையே ஆட்டி வைத்திருக்கலாம். ஆனால் இப்போதோ? சீஸர் வீழ்ந்து கிடக்கிறான்! அவனுக்கு மரியாதை செலுத்தும் அளவுக்குத் தாழ்ந்தவர் எவனும் இல்லை' என்று ஷேக்ஸ்பியர் புலம்பினார்ர, அதே நிலையில் நீங்களும் இருக்கிறீர்கள். பாவம்! என்றான் சக்கரை.

காரை ஓட்டிக் கொண்டிருந்த சக்[illegible]பின் பேச்சு, ஸீட்டுக்கு அடியில் கிடந்த ஊசோ தாத்தா[illegible]ன் செவியில் ஏறவில்லை. "அயோக்கியன்! திமிர் பிடி[illegible]வன்! என்ன பேச்சுப் பேசிவிட்டான்! அவனையே ஓர் [illegible]ட்டு ஆட்டி வைக்காவிட்டால் என் பெயர் ஊசோ இ[illegible]லை, பார்!"

"செய்யலாம், ஊசோ தாத[illegible]. அப்படி நீங்களாகவே செய்ய முன்வர வேண்டு[illegible] என்றுதானே இத்தனை நாளும் அடியேன் காத்திருக்கிறேன்!" என்றான் சக்கரை. "நான் ஒரு பரிசோதகன். நீங்கள் ஒரு பரிசோதகர். இரண்டு விஞ்ஞானிகள் போல் நாம் ம[illegible]ழ்ச்சியுடன் கைகுலுக்கி, உன்னதமான அறிவு உலகங்களைப் பற்றிய பேச்சுக்களை அல்லவா பேசவேண்டும்? கேவலம் சூரியைப் பற்றிய பேச்சு எதற்கு?"

"இல்லை. அவன் திமி[illegible]ர [illegible]டுக்கத்தான் வேண்டும். என்னை எத்தனை மட்ட[illegible] திட்டினான்! கல்லால் அடித்துத் துரத்தினார்களா[illegible]ங்கள். இவன் காப்பாற்றினானாம். உண்மையா[illegible]வே இருக்கட்டும். அதற்காக இவன் இஷ்டத்துக்[illegible]லாம் நான் ஆடவேண்டுமா?"

"சே, சே! அவன் கிடக்கிறா[illegible] அறியாப் பையன்! என்னைச் சொல்லுங்கள். இந்த முன[illegible]ங்களை எப்படியும் சந்திக்க வேண்டுமென்று ஆசைப் பட்டேன். அவசர சமயங்களுக்கு இருக்கட்டுமென்று ஒரு பம்பாய் சினேகிதரிடம் இந்தக் காரை இரவல் [illegible]ாங்கி வந்தேன். சூரி உங்களைத் தூக்கிக்கொண்டு புறப்பட்டதைத் தூரத்தில் இருந்தபடியே கவனித்துப் பின் தொடர்ந்து வந்தேன்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

உங்களுக்கு வெளிச்சம் ஆகாது என்று முன்பே எனக்குத் தெரியும். சூரி எப்படி உங்களைக் கொண்டு செல்கிறானென்றும் கவனித்து வைத்துக் கொண்டதால், உங்களுக்கேற்ற கறுப்பு உடையைத் தயாராய் நானும் எடுத்து வந்தேன். அதனால்தான் நீங்கள் அந்தக் குடிசையிலிருந்து, அந்த முரட்டு சூரியிடமிருந்து, மெதுவாய்த் தப்பி வருவதைப் பார்த்ததும் சட்டென்று ஓடிவந்து உங்களைக் காப்பாற்றி இந்தக் காரில் கொண்டுவந்து ஏற்றிக் கொண்டேன்."

கறுப்புக் குவியலுக்குள்ளிருந்து பாராட்டு வந்தது. "என் வசதிக்காகவும், சௌகரியத்துக்காகவும் ரொம்பத் தான் மெனக்கெட்டிருக்கிறாய்."

"பின்னே? நீங்கள் ஓர் அரிய விஞ்ஞானப் பொக்கிஷமாயிற்றே, ஊசோ தாத்தா? உங்களுடைய மந்திர தந்திர வித்தைகள் எந்த விஞ்ஞானியின் ஆராய்ச்சிக்கும் கட்டுப்படாதவை அல்லவா? பர்மாவிலிருந்து எவ்வளவு பழைய பத்திரிகைகள் வரவழைத்து, தங்களுடைய திருவிளையாடல்களைப் பற்றித் தெரிந்துகொண்டேன் தெரியுமா? பக்கிரிசாமி என்று ஓர் இளைஞன், அவன் வேறே எத்தனை சொல்லியிருக்கிறான் தங்கள் பெருமையைப் பற்றி?"

"கிண்டல் பண்ணுகிறாயா?"

"சே, சே! உண்மையைச் சொன்னேன். மனத்துக்கு எவ்வளவு சக்தி உண்டு, அதன் வலிமையைக் கொண்டு என்னென்ன சாதனைகள் ஏற்படுத்த முடியும் என்பதை ஆராய்வதுதான் என் வேலை. அணுசக்தியை நல்லதற்கும் உபயோகிக்கலாம். தீயதற்கும் உபயோகிக்கலாம். அதற்காக அணு சக்தியை ஆராயாமலா விட்டுவிடுகிறோம்? அதுபோல, நீங்கள் தவறான காரியங்களுக்கு மனச் சக்தியைக் கையாண்டீர்கள் என்பதற்காக உங்களை ஆராயாமல் நான் விட்டுவிடமாட்டேன். அப்புறம் விஞ்ஞானிக்கும் போலீஸ்காரனுக்கும் என்ன வித்தியாசம்? ஊசோ தாத்தா, இனிமேல் என்னுடைய ஆராய்ச்சிக் கூடம்தான் உங்களுக்கு இருப்பிடம்!"

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ஊசோ தாத்தா மறுத்தார். "பிற்பாடு வேண்டு மானால் அப்படி. இப்போது நான் சூரியின் வீட்டுக்கே போயாக வேண்டும். அங்கே என் பழைய இருப்பிடத்தி லேயே விட்டுவிடு."

"ஊசோ தாத்தா...."

"சொன்னதைச் செய்."

"சூரி வந்திருந்தால்?"

"இன்னும் வந்திருக்க மாட்டான். அதற்குமுன் என் அறையில் கொண்டுபோய் விட்டுவிடு. பிறகு ஒருநாள் சாவகாசமாக உன் விஞ்ஞானக் கேள்விகளுக்கு நான் பதில் தருகிறேன்."

சக்கரை அவசரமாக, "அவனை நீங்கள் எதுவும் செய்து விடாதீர்கள், ஊசோ தாத்தா. போலீசாரின் கையில் ஒப்படைக்கப்பட வேண்டியவன் அவன்," என்றான்.

"சீக்கிரமே அது நடைபெறும்." — இதற்குப் பின் அந்தக் கறுப்பு மூட்டையிலிருந்து எவ்விதமான பேச்சும் வரவில்லை. அந்தக் கொடிய சூனியக்காரனின் கோபம் உச்சத்தை அடைந்திருந்ததால் வார்த்தைகள் வெளிப்பட வில்லை போலும்.

சூரி இன்னும் ஒருவித மயக்கத்துடனேயே தன் வீட்டுக்குள் நுழைந்தான். விடிகாலைப்பொழுது தோட்டத் திலிருந்து அத்தனை மரங்களிலும் குருவிகள் கீச்சுக் கீச்சென்று பேசிக்கொண்டிருந்தன. சில்லென்று குளிர்ந்த காற்று உடலை வெட்டுகிற மாதிரி வீசியது.

ஆனால் சூரிக்கு இதுவொன்றும் உறைக்கவில்லை. தோல்வியின் சோகமும் ஆங்காரத்தின் ஆவேசமும் அவன் உள்ளத்தைக் கப்பிக் கொண்டிருந்தன. அவன் புறப்பட்டபோது இருந்ததைப் போலவே, திரும்பிய போதும் வீடு நிசப்தமாகத் தோன்றியது. அப்படியே ஏதேனும் வித்தியாசமாகப் புலப்பட்டிருந்தாலும் கவனிக்கக் கூடிய மன நிலையில் அவன் இல்லை.

விளக்கு எதையும் ஏற்றாமல் தொப்பென்று ஒரு சோபாவில் விழுந்தான் சூரி. இரவு முழுவதும் பயனற்ற

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அலைச்சலினால் ஏற்பட்டிருந்த களைப்பும் சோர்வும் அவன் உடம்பைப் போர்த்துக் கொண்டன. ஆனால் உறக்கம் வரவுமில்லை.

திடீரென அவனுடைய உள்ளம் அவனைவிட்டு நழுவுகிற மாதிரி இருந்தது. கையோ காலோ சுழன்று, நம் கண்ணெதிரே தனியே புறப்பட்டுச் செல்லுமானால் எப்படி இருக்கும்? அதேபோன்ற அதிர்ச்சியும் ஆச்சரியமும் சூரிக்கு ஏற்பட்டன. அந்த ஆச்சரியத்திலிருந்து அவன் விடுபடு முன்பே, திரும்பத் தன்னுடைய மனம் தன்னிடமே வந்து ஒட்டிக் கொண்டாற்போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. ஆனால் நம்முடைய சொந்தக் கைகளாக இல்லாமல் அன்னியரின் கைகளை ஒட்ட வைத்தால் எப்படிப் பொருந்தாதுபோல் தோன்றுமோ அதேபோல் அவனுக்கும் இருந்தது. பாம்பு ஊர்ந்து வருவதுபோல் அவன் மனத்துக்குள் அவனுக்குச் சொந்தமில்லாத எண்ண மொன்று புகுந்து கொள்ளத் தொடங்கியது.

சோபாவில் விழுந்து கிடந்த சூரி எழுந்து கொண்டான். தலையை இரு கைகளாலும் தாங்கிக் கொண்டு, சூடிகாரனைப் போல் தடுமாறினான். அவனுடைய விழிகளில் ஒரு சிவப்பும் சினமும் ஏறின. உதடுகள் இறுகின. பற்கள் நற நறவென்று ஓசையிட்டன.

இரும்பு அலமாரியைத் திறந்தவன், கைத்துப்பாக்கி யொன்றை எடுத்து ஜிப்பா பையினுள் போட்டுக் கொண்டான். வாசலை நோக்கி நடந்தான். திறந்து கிடக்கும் கதவுகளைச் சாத்திக் கொள்ளவேண்டுமென்ற எண்ணம் கூட இல்லாமல் தெருவில் நடந்தான்.

மாடி வெராந்தாவில் ஒரு மறைவிலிருந்து இவ்வளவையும் கவனித்துக் கொண்டிருந்த சக்கரை, இருட்டறையில் அடைந்து கிடக்கும் ஊசோ தாத்தாவிடம் ஓடினான்.

நீண்ட நேரம் மூச்சை அடக்கியிருந்தவர் திரும்பச் சுவாசிக்கத் தொடங்குவது போல, ஆழ்ந்த பெருமூச்சு ஊசோ தாத்தாவிடமிருந்து வந்துகொண்டிருந்தது. அந்த

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

இருட்டறை முழுவதிலும் ஒரு வெப்பம் பரவியிருப்பதை சக்கரை உணர்ந்தான்.

"சூரி எங்கே போகிறான், ஊசோ தாத்தா? ரிவால்வர் எடுத்துச் செல்கிறானே?" என்று பதறினான்.

ஊசோ தாத்தாவின் பதில் குரல் அத்தனைக் கத்தனை நிதானமாக இருந்தது. "ஆமாம். கொலை செய்வதற்காகப் போகிறான்."

"கொலையா? யாரை?"

"கலிவரதனைத்தான். வேறு யாரை? கலிவரதன் சாகவேண்டும் என்பது ஒன்றுதானே அவனுடைய தீராத ஆசை? வேறொருத்தர் மூலமாக அதை நிறைவேற்றப் பார்த்தான் இத்தனை நாள்வரை. நான் சூரியின்மீது இரக்கப்பட்டு, அவன் கையாலேயே அந்தக் காரியம் நடைபெறட்டும் என்று முடிவு செய்தேன்."

"அதாவது?"

"தானே கலிவரதனை கொலை செய்துவிடலாம் என்கிற எண்ணத்தைச் சூரியின் மனத்தில் விதைத்து விட்டேன். இனி என் முயற்சிகூடத் தேவையில்லை. அவனுக்கே அந்த எண்ணம் விட்டுவிட்டுத் தோன்றும், இன்றைக்கே இல்லாவிட்டாலும், நாளைக்கோ மறுநாளோ, அவன் கலிவரதனைக் கொலை செய்யப்போவது நிச்சயம்—"

அவருடைய பிரதாபத்தைச் சக்கரை மேற்கொண்டு கேட்டுக்கொண்டு நிற்கவில்லை. தடதட வென்று வெளியேறி ஓடினான் தெருவுக்கு.

37

மரகதம் மூக்கைச் சிந்திக்கொண்டிருந்தாள். துக்கம் மடை திறந்த வெள்ளம் போல பொங்கிக்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கொண்டிருந்தது அவள் உள்ளத்தில். எப்போது என்ன கஷ்டம் நேரிட்டாலும் அவள் கோபம் மொத்தமும் அம்பிகாவின் தந்தை மீதுதான் பாய்வது வழக்கம். அதேபோல் இப்போதும் அந்தப் பாவி மனுஷனை வாயார, மனமார அர்ச்சனை செய்து கொண்டிருந்தாள்.

கலிவரதன் வீட்டு அவுட்ஹவுஸில் அவளுக்கு எப்படி ஒட்டுதல் ஏற்பட முடியும்? பொன்னடி வீசியெறிந்த இரண்டொரு பாத்திரங்களைக் கொண்டு சமையலை ஒப்பேற்ற முனைந்தாள் அவள். அதில் மனம் செல்லவே யில்லை. அம்பிகாவாவது கூடமாட வேலை செய்து ஆறுதலாகப் பேசுகிறாளா? இல்லை. பிரமை பிடித்தவள் போல முழங்காலைக் கட்டிக் கொண்டு வாசலில் உட்கார்ந்திருக்கிறாள். ராத்திரி கொஞ்ச நேரம் தூங்கினாளோ அதுவும் இல்லையோ!

"அம்பிகா! வாசலில் என்ன பண்ணுகிறாய்? உள்ளேதான் வாயேன்!" என்று கூப்பிட்டாள் மரகதம்.

"இதோ வருகிறேன் சித்தி," என்று எழுந்து கொண்டாள் அவள்.

சித்தி நினைத்த மாதிரி பிரமை பிடித்து உட்கார்ந் திருக்கவில்லை அவள். நேற்று வந்தபோது இருந்ததைக் காட்டிலும் இப்போது கண்ணில் பிரகாசமும் முகத்தில் மலர்ச்சியும் கூடியிருந்தன. வாழ்வில் நம்பிக்கை இழந்த மாதிரித் தோற்றத்தில் தளர்ச்சியும் பேச்சில் சோர்வும் கொண்டிருந்த அவள், கலிவரதனின் பங்களாவில் குடியேறிய பிறகு, உற்சாகமும் சுறுசுறுப்பும் பெற்றிருந்தாள் என்றே தோன்றியது.

இப்போது காலை ஏழு மணி இருக்கும். படர்ந்த தோட்டமெங்கிலும், புல்லுக்கும் சருகுக்கும் வைடமின் ஊசி ஏற்றினாற் போல ஆதவனின் கிரணங்கள் புத்துயிர் தந்து கொண்டிருந்தன. இளங்காற்றில் அசைந்தாடிய செடி கொடிகள் தங்களுக்கும் ஏதோ மறுபிறவி கிடைத்து விட்டாற்போல மகிழ்ந்துகொண்டிருந்தன.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"என்னடி செய்கிறாய் அம்பிகா?" என்று கேட்ட வண்ணம் வாசல்புறம் வந்து பார்த்த மரகதம், தான் காணும் காட்சியை நம்புவதா வேண்டாமா என்று நினைப்பது போல நின்றாள் பிரமித்து. பிறகு, நன்றாய்த் தான் இருக்கிறது நீ விளையாடுகிற லட்சணம்!" என்று கண்டித்தாளாயினும், இந்த மட்டில் அவள் போக்கில் ஒரு மாறுதல் ஏற்பட்டிருக்கிறதே என்று ஆறுதலும் திருப்தியும் சித்தியின் குரலில் நிறைந்திருந்தன.

"அம்பிகாம்மா, நீங்க ரொம்ப நல்லா காத்தாடி விடறீங்க. நான் விட்டிருந்தேனானால், இம்மாம் உயரம் பறக்கவே பறக்காது" என்று கை தட்டிக் குதூகலித்துக் கொண்டிருந்தான், ஒரு சிறுவன். ஒரு வேலைக்காரனின் மகனான அவன் மேனியில் கந்தல் உடை காணப்பட்டா லும், முகத்தில் டஃபேடா புன்னகை பரந்திருக்கிறது.

அவள், காற்றாடி நூலை ஒரு சுண்டு சுண்டி இன்னும் உயர எழுப்பிய பின்னர், நூலின் முனையை அவுட்ஹவுசின் ஜன்னலில் கட்டிவிட்டாள். "இதோ பார், இப்படியே இருக்கணும் இது. தெரிகிறதா? நிறைய மாஞ்சா தடவியிருக்கிற நூல். நீ இழுக்கப் பார்க்காதே. விரலை அறுத்துவிடும். என்ன?" என்றாள்.

"இல்லீங்கம்மா. உங்களைக் கேட்காமல் தொட மாட்டேன்" என்று வாக்களித்த சிறுவன் தன் தோழர்களை அழைத்து வந்து காட்டுவதற்காக வெளியே ஓடி விட்டான்.

"யாராவது பார்த்தால் சிரிக்கப் போகிறார்கள் உள்ளே வா, அம்பிகா," என்று மரகதம் அழைத்தாள்.

"என்ன வேணும் சித்தி?" என்று கேட்டபடி மரகதத்தைப் பின் தொடர்ந்து உள்ளே வந்தாள் அவள்.

"இந்தச் சட்டியையும் பானையையும் வைத்துக் கொண்டு எப்படிச் சமையல் பண்ணுவது? ஒவ்வொரு வேளைக்கும் அரிசி உப்புப் புளிக்கு எங்கே போய்ப் பிச்சையெடுக்கச் சொல்கிறாய்?" என்று அடுக்கடுக்கான கேள்விகளை அலுப்புடன் வீசினாள் மரகதம்.

"ஏன் அவரைக் கேட்டால் தருகிறார்."

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"எவரை?"

"என்ன சித்தி, அவர் பெயரைச் சொல்லச் சொல்கிறாயா?"

அவளை முறைத்துப் பார்த்தாள் மரகதம் எரித்து விடுகிற மாதிரி. "பற்றிக் கொண்டு வருகிறது எனக்கு!" என்று ஒரே வார்த்தையில் தன் ஆத்திரத்தைக் கொட்டினாள்.

"ஏன் சித்தி?"

"பின்னே என்ன? நீதான் புத்தி பிசகிப் போய், விவஸ்தை இல்லாமல் 'அவர் ' என்று சொந்தம் கொண் டாடுகிறாய் என்றால், என்னையும் அப்படி நினைக்கச் சொல்கிறாயா? அந்தக் குடிகாரன் இருக்கிற திசையிலே போகக்கூட எனக்குக் குலை நடுக்கமாயிருக்கிறது. கொஞ்சம் முன்னால் இரண்டு வாழையிலை அறுத்து எடுத்து வரலாம் என்று பின் பக்கம் போனேன். அந்தப் பாழாய்ப்போன மனுஷன் — கலிவரதனைத்தான் சொல் கிறேன். — கையிலே சாராயப் புட்டியோடு பைத்தியக்காரன் மாதிரிப் போய்க் கொண்டிருந்தான். என்னைப் பார்த்ததும், 'என்ன பாட்டியம்மா என் சம்சாரம் எப்படி இருக்கிறாள்?' என்று என்னவோ உளறிக் கொண்டே கிட்டே வந்தான். தலை பிழைத்தது தம்பிரான் புண்ணியம் என்று வந்துவிட்டேன். அம்பிகா, உனக்குப் புண்ணியம் உண்டு. நீ அந்தப் பக்கம் போகவே போகாதே" என்று வெகுநேரம் மரகதம் புலம்பிய பின்னரும், மற்றவளுக்கு அவள் பேச்சில் புத்தி செல்லவில்லை. "எப்படியிருக்கிறாள் என்று என்னைப் பற்றியா விசாரித்தார், சித்தி?" என்றுதான் கேட்டாள்.

மரகதம் எரிச்சலுடன், "நீ நாசமாய்த்தான் போகப் போகிறாய் போ!" என்று திட்டிவிட்டு, "உள்ளே வா, அம்பிகா" என்று கூறிவிட்டு வீட்டுக்குள் சென்றுவிட்டாள்.

அவளுக்கு அதுவும் காதில் விழுந்ததாகத் தெரியவில்லை. அவுட்ஹவுசிலிருந்து புறப்பட்டு, கலிவரத னின் பங்களாவை நோக்கி மெல்ல நடந்தாள். தயங்கி

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

தயங்கிச் சென்றவள், ஒரு வழியாகப் பங்களாவின் வரவேற் பறையை அடைந்தாள். அளவற்ற பரிதாபத்துடனும், வேதனையுடனும் அந்தக் காட்சியைப் பார்த்தபடி நின்றாள்.

சோபாவில் சாய்ந்து கிடந்தான் கலிவரதன் அலங்கோலமாக. முக்கால் வாசி காலியாகிவிட்ட கிண்ணம், மிச்சத்தை அவன் உடைகளின்மீது கொட்டிக் கொண்டிருந்தது கூட அவனுக்குச் சுரணையில்லை. அவன் கண்கள் கொள்ளிக் கட்டையாகச் சிவந்து கொண்டிருக்க, கோணிப் போயிருந்த வாய் அர்த்தமற்ற வார்த்தைகளைப் பிதற்றிக் கொண்டிருந்தது. நிலைப்படியில் நிழலாடிய உருவத்தைக் கண்டதும் விகாரமான புன்சிரிப்பொன்று அவன் உதட்டில் முளைத்தது. "அம்பிகாவா... இல்லை, இல்லை... என் தேவகியல்லவா? வா, வா... இத்தனை வருஷமாய் என்னை விட்டுவிட்டு எங்கேயோ ஒளிந்து கொண்டு விட்டாயே?" என்றவாறு தட்டித் தட்டித் தடுமாறி, கைகளை முன்னுக்கு நீட்டி அவளை நோக்கி வரமுயற்சி செய்தான். ஆனால் புலன்கள் நிதானத்தில் இருக்கவில்லையாதலால் ஒரு முறை சுழன்று தரையில் விழுந்தான்.

அருகில் நின்றுகொண்டிருந்த பொன்னடி, "அம்பிகா! உன்னை இங்கே வரவேண்டாமென்று எத்தனை தரம் சொல்லியிருக்கிறேன்!" என்று கோபத்துடன் இரைந்தான்.

அவள் அவன் பேச்சை லட்சியம் பண்ணாமலே ஹாலுக்குள் பிரவேசித்து, அலங்கோலமாக விழுந்து கிடந்த கலிவரதனை மெல்லத் தூக்கினாள். சோபாவில் உட்கார்த்தி வைத்தாள். அப்படியும்கூட அவன் தலையைக் கவிழ்ந்தாற்போல் சோபாவில் குப்புறத்தான் விழுந்து கிடந்தானே தவிர சுய நினைவுடன் இரண்டு வார்த்தையும் பேசவில்லை.

பொன்னடி, கீழே உருண்டு கிடந்த கோப்பையை எடுத்துக் கலிவரதனின் கையில் தந்து, புதிதாக இன்னொரு விஸ்கி புட்டியின் கார்க்கைத் திறந்தான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அவளுக்குப் பொறுக்கவில்லை போலும். "வேண்டாம் அவரைக் கொலை செய்யாதீர்கள்," என்று பொன்னடியின் கையிலிருந்து புட்டியைப் பறித்தாள்.

"அம்பிகா! நீ அதிகமாகத் தலையிடுகிறாய். போனால் போகிறதென்று இடம் கொடுத்தது தப்பாகி விட்டது!" என்று பொன்னடி உறுமினான்.

அவன் கண்களில் சினம் கொப்பளித்தது. "எனக்கு இடம் கொடுத்தது நீங்கள் அல்ல. உங்களுக்கு இந்த வீட்டில் இடம் கொடுத்ததுதான் இத்தனை அனர்த்தத்துக்கும் காரணம். எஜமான விசுவாசம் துளியேனும் இருந்தால், நன்றியுணர்ச்சி மருந்துக்காவது உங்களிடம் துளியேனும் மிஞ்சியிருந்தால் இப்படி அவரைப் பிராந்தியில் மூழ் கடித்துச் சாகச் செய்வீர்களா?"

கலிவரதன் அரை மயக்கத்துடன், "பொன்னடி! அவளுடன் என்னடா வீண் பேச்சு? ஊற்று ஊற்று!" என்று காலிக் கிண்ணத்தை நீட்டினான்.

ஆவேசத்துடன் அதைத் தட்டியெறிந்தாள் அவள். எஃகு பீரோவின்மீது மோதி, சில்லென்று விழுந்து தெறித்தது அந்தக் கண்ணாடிக் கோப்பை. "பொன்னடி! இனி மேல் இவரை நானே கவனித்துக் கொள்வேன், நீங்கள் தேவையில்லை. மூட்டைக் கட்டிக் கொண்டுபோய்ச் சேருங்கள்," என்று சீறினாள் அவள்.

கலிவரதன் கெஞ்சும் குரலில், "தேவகி... அவனைப் போகச் சொல்லாதே... பொன்னடியைப் போகச் சொல்லாதே..." என்று குழறிக்கொண்டே, கொஞ்ச நஞ்ச நினைவையும் இழந்தவன் போலக் கண்ணை மூடிக் கொண்டு விட்டான்.

பொன்னடியின் உடம்பு மொத்தமும் ஆவேசத்தி னால் குமுறிக்கொண்டிருந்தது. சொல்லற்கரிய ஆத்திரத்தி னால் அவன் ரத்தம் கொதித்து எரிமலைக் குழம்பாகி யிருந்தது. "அம்பிகா! என்னையா இந்த வீட்டை விட்டுப் போகச் சொல்கிறாய்? அதற்கு உனக்கு எந்த விதமான உரிமையும் கிடையாது. அதுமட்டுமில்லை. எனக்கு

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

இங்கேயே, இந்த பங்களாவிலேயே தங்கியிருப்பதற்குச் சகல உரிமையும் உண்டு. நான் இஷ்டப்பட்டால் உன்னை எந்த நிமிடமும் விரட்டியடிக்க முடியும். சந்தேகப்படுகிறாயா? இரு, காட்டுகிறேன்," என்று இரைந்தவன், அடுத்தாற் போலிருந்த தனது ஆபீஸ் அறைக்குச் சென்று, மேஜையைத் திறந்து, ஒரு பத்திரத்தை எடுத்துவந்து அவள் முன்னால் போட்டான். "படித்துப் பார் அம்பிகா!" என்றான்.

திகிலும் அச்சமும் பிடரியை உந்த அவள் படித்துப் பார்த்தாள்.

> "...நான் கடனாகப் பெற்றுக்கொண்டிருந்த தொகைகளுக்கு ஈடாகப் பொன்னடிக்கு என் வீட்டையும் தோட்டத்தையும் தருகிறேன்...'

வாசகங்களைப் படித்து முடித்தபோது ஆத்திரம் அவள் தொண்டையை அடைத்தது. "பொய்! பொய்! அவருக்கு போதை ஏற்படுத்தி, குடி மயக்கத்தில் கையெழுத்து வாங்கியிருக்கிறீர்கள்! போலி தஸ்தாவேஜு இது!" என்று கத்தினாள்.

"அதைக் கோர்ட்டில் வந்து சொல்லிக்கொள். இப்போது இந்த இடத்தை காலி செய்ய வேண்டியவர்கள் நீயும் உன் சித்தியும்தான்!" என்று பொன்னடி கூறிக் கொண்டுருக்கையில் டெலிபோன் மணி அடித்தது. எடுத்துக் கேட்டான்.

"ஹலோ! நான்தான் சக்கரை பேசுகிறேன்." என்ற குரல் கேட்டதும் பொன்னடி முகம் களித்தானாயினும், "யார் பொன்னடியா? ரொம்ப அவசரமான தகவல்," என்று சக்கரை மேலும் கூறியவுடனே கவலை கொண்டவனாக "என்ன விஷயம்?" என்று அக்கறையுடன் கேட்டான்

"சூரியைத் தெரியுமல்லவா—நாடகப் பள்ளிக் கூடம் நடத்துகிற சூரி? அவன் அங்கே வந்து கொண்டிருக் கிறான், கலிவரதனைக் கொலை செய்வதற்கு!"

திடுக்கிட்டான் பொன்னடி. "என்னது?"

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"கலிவரதனைக் கொலை செய்வதற்கு ஒருவன் வருகிறான் என்றேன். அவனை உள்ளை விடாதே, வாசலிலேயே தடுத்து நிறுத்திவிடு. கொஞ்ச நேரத்தில் நானும் வந்து விடுகிறேன். பிறகு எல்லாம் விளக்குகிறேன்," என்றான் சக்கரை.

"ஆகட்டும்," என்றான் பொன்னடி வேறெங்கோ நினைவுடன். "

"மசமசவென்று இருக்காதே. வாசலில் கூர்க்கா இருக்கிறானில்லையா? அவனிடம் சொல்லி வை உடனேயே. ஜாக்கிரதை. எக்காரணம் கொண்டும் உள்ளே விடாதே என்று அவனிடம் கண்டிப்பாகச் சொல்லிவிடு."

"இதோ போகிறேன்," என்று டெலிபோனை வைத்த பொன்னடி, நினைவற்றுக் கிடக்கும் கலிவரதனை யும், அவனுக்குப் பரிவுடன் உபசாரங்கள் செய்து கொண்டிருப்பவளையும் பல்லைக் கடித்தவாறு ஆராய்ந் தான். பிறகு, ஒரு முடிவுக்கு வந்தவனாக வாசலை நோக்கி நடந்தான்.

கூர்க்காவிடம் சென்றவன் அவனுடைய சல்யூட்டைப் பெற்றுக்கொண்டு கூறினான்: "கொஞ்ச நேரத்தில் ஓர் ஆள் இங்கே வருவான். தொள தொள வென்று ஒரு பைஜாமாவும் ஜிப்பாவும் அணிந்த ஆள். அவன் வந்தால்..."

"உள்ளே விடக் கூடாது?" என்று ஆர்வத்துடன் குறுக்கிட்டான் கூர்க்கா.

"சீ, மடையா! அதுதான் இல்லை. அவனை எந்தக் கேள்வியும் கேட்காமல் உள்ளே விடு," என்று உத்தரவிட்டுத் திரும்பினான் பொன்னடி.

தனக்குத் தானே ஒரு சபாஷ் போட்டுக்கொள்ள வேண்டும் போல் இருந்தது அவனுக்கு. எத்தனை சாமர்த்தியமாக நிலைமையைத் திருப்பிவிட்டோம்! அந்த ஆள் வரட்டும். கலிவரதனைப் பச்சைக் கொலையாகவே செய்யட்டும். பிறகு அவனை மடக்கிப் போலிசில் ஒப்படைக்கலாம். இந்த அம்பிகா இன்னொரு தலைவலி.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அவளையும் ஒழிக்க இதுதான் சந்தர்ப்பம். சூரியின் உறவுகாரி. அவன் மாணவி. ஆகவே இருவரும் கூட்டாளிகள்தான். கலிவரதனைக் கொலை செய்ததில் அவளுக்கும் பங்கு உண்டு என்று குற்றம் சாட்டலாம். இந்த இருவரும் தூக்குமேடைக்குப் போய்விட்டால் எல்லா எதிரிகளும் ஒழிந்தார்கள். பங்களாவும் தோட்டமும் இருக்கவே இருக்கின்றன. சாவகாசமாகத் தோண்டித் தோண்டி என்றைக்காவது ஒரு நாள் அந்தப் புதையலையும் வெளியே எடுத்துவிட முடியும்....

சந்தர்ப்பம் எத்தனை சாதகமாக உருவாகி வருகிறது என்று எண்ணிய பொன்னடி, அந்த மகிழ்ச்சியுடன் திரும்பியபோது எதிர்ப்பட்டவளைப் பார்த்துக் கடுகடுத்தான்.

"என்ன மிஸ் அம்பிகா, என்னையே பின் தொடர்ந்து கன்காணிக்கிறீர்களா? அந்தத் தொல்லை அதிக நாள் தரப் போவதில்லை. தயவு செய்து இன்னும் ஒரு மணி நேரத்துக்குள் இடத்தைக் காலி பண்ணி விடுங்கள்!" என்றான்.

அவள் பதிலேதும் சொல்லவில்லை. அவுட் ஹவுசின் ஜன்னலில் கட்டப்பட்டிருந்த காற்றாடி நூலில் முடிச்சுப் போட்டவாறு ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தாள்.

"பாட்டியம்மா! உன் மூட்டை முடிச்சுக்களைக் கட்டு இப்போதே," என்று உள்ளே நுழைந்து பொன்னடி கூவினான்.

மரகதம் நிலைமையை உணராமல், "அதற்குத் தானப்பா நானும் காத்திருக்கிறேன். ஏதோ உனக்காவது நல்ல புத்தி இருக்கிறதே. இந்த அம்பிகாவைப் போல் கிறுக்குத்தனமாக உளறாமல்!" என்று உள்ளே வந்தவளைச் சுட்டிக் காட்டினாள்.

"சித்தி! நீ சும்மா இருக்க மாட்டாய்? நாம் எங்கேயும் போகப் போவதில்லை! எந்தப் பிரம்மா வந்து ஆணையிட்டாலும் சரி!"

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"பார், பார்! இவள் என் மேலேயே பாய்கிறாள்!" என்று மரகதம் புகார் செய்து கொண்டிருக்கையில் வாசலில் ஓர் உருவம் மெல்ல வந்து நின்றது.

"சூரி!" என்று இரண்டு பெண்களும் வெவ்வேறு உணர்ச்சியுடனும் கூவினார்களெனினும் பொன்னடியின் பார்வையில்தான் ஆச்சரியம் அதிகமிருந்தது.

சக்கரை சும்மா சொன்னானா, அல்லது நிஜமா? இந்தச் சூரியைப் பார்த்தால் கொலைகாரனாகத் துளியும் தோன்றவில்லையே? அவன் கையில் கத்தியோ துப்பாக்கியோ காணப்படவில்லை. சூட்கேஸ் போன்ற சிறு பெட்டியொன்று மட்டுமே இருந்தது. அவன் கண்களில் கொலைவெறி மின்னாமல் சோகமே கப்பியிருந்தது. நடையில் ஆவேசத்துக்குப் பதில் தள்ளாட்டமே மிகுந்திருந்தது.

பொன்னடி ஒரு வினாடி திகைத்துப் போனாலும், உடனே சக்கரை கூறியதை நினைவு கொண்டான். சமாளித்துக் கொண்டு, "நீ தேடி வந்த ஆள் இங்கே இல்லை. பங்களாவில் இருக்கிறார். போ அங்கே," என்று கையைக் காட்டினான்.

சூரியின் குரல் பாதாளத்திலிருந்து கேட்டது. "யார், கலிவரதனையா? அவரைப் பார்த்து எனக்கு என்ன ஆக வேண்டும்?"

"தெரியும் உன் நோக்கம். அவரைக் கொலை செய்யத் தானே நீ வந்தாய்?"

"ஹூம்," வெறுப்புடன் சிரித்தான். சூரி. "அந்த வெறி முன்னொரு நாளில் இருந்தது வாஸ்தவந்தான். இப்போது கிடையாது. இன்று இந்தச் சூரியின் இன்னொரு பெயர் அணைந்த கொள்ளிக்கட்டை. நானே வெகு விரைவில் இந்த உலகத்தை விட்டுப் போய் விடுவேன் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்ட பிறகு, இன்னொருவரைக் கொலை செய்து என்ன ஆகவேண்டும்? இது பழைய சூரியல்ல... ஆமாம், அம்பிகா! ஏன் என்னை அப்படிப் பார்க்கிறாய்?"

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அவள் முன்னே வந்து, "சூரி... சூரி... நீ... நீங்கள்..." என்று தடுமாறினாள்.

"ஓகோ. நீ இன்னும் தேவகியாக வேஷம் போட்டுக் கொண்டிருக்கிறாயா? அதை மறந்தே போனேன். என்னைப் பொறுத்த வரையில் அந்த வேடம் தேவையில்லை, அம்பிகா. நான் இங்கே வந்தது உன்னைப் பார்க்கவோ, கலிவரதனைக் கொல்லவோ அல்ல. என் அக்கா தேவகி இறந்துபோன இடத்தைக் கடைசி முறையாகத் தரிசிக்கத்தான்...."

"ஆமாம்...சூரி, என் தம்பி... அருமைத் தம்பி... எனக்கு நன்றாக ஞாபகம் வருகிறது எல்லாம்..."

''உன்னிடமே வைத்துக் கொள். எனக்கு வேண்டாம் அம்பிகா, அந்தப் பேய்க்கதையெல்லாம்! "என்று முரட்டுத்தனமாத அவளை ஒதுக்கி விட்டு, அந்தப் பாழடைந்த அவுட்ஹவுசின் நடுக்கூடத்துக்குச் சென்றான். தூசியாயிருந்த தரையைத் தட்டாமலே சப்பணமிட்டாற் போல் அமர்ந்து கொண்டான். கண்களை நாற்புறமும் சுழல விட்டான். "இந்த இடம்... நான் மிகப் பிரியமாய் நேசித்த என் அக்காவின் வாசஸ்தலம்... அவள் மரித்த இடம்... யாரது, தாயியா? வா உள்ளே வந்து உட்கார்..."

வேலைக்காரக் கிழவி மெல்ல மெல்ல அவனை நெருங்கி வரவே, மரகதம், "அம்பிகா! என்னென்னவோ பேசுகிறானே இவன்... இன்னும் என்ன புரட்டெல்லாம் பேசி நம்மைக் கஷ்டத்துக்கு ஆளாக்கப் போகிறானோ தெரியவில்லையே... " என்று புலம்பினாள்.

அவள் உடனே, ''இல்லை, சித்தி... அவர் சொல்வதெல்லாம் உண்மைதான். என் மனதுக்குத் தெரிகிறது.... இவர் என் தம்பி... என்னிடம் ரொம்பப் பிரியம். நானும் உயிரையே வைத்திருந்தேன்...." என்றாள்.

"என்ன இதெல்லாம் கூட்டம்? பொன்னடி, நீ பாட்டுக்கு எங்கே பாட்டிலைத் தூக்கிக்கொண்டு புறப்பட்டு விட்டாய்?" என்ற அதட்டல் கேட்டது வாசற் புறம்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"வாருங்கள் கலிவரதன். நீங்களும் என் கதையைக் கேட்க வேண்டியது அவசியம்தான். இப்படி வந்து உட்காருங்கள். இங்கேயே உங்கள் தாக சாந்தியை வைத்துக் கொள்ளலாம்," என்று அவனையும் உள்ளே கூப்பிட்டான் சூரி.

கலிவரதன் எதுவும் புரியாமல் உள்ளே வந்து, மற்றவர்களுடன் நின்று கொண்டான்.

சூரி தலை குனிந்தவாறு உட்கார்ந்திருந்தான். அவனைச் சுற்றி வட்டமாக மற்றவர்கள் நின்றிருந்தார்கள்

சூரி அந்த சூட்கேஸைத் தன் மடியில் வைத்துக் கொண்டான். ஒரு சிகரெட்டைப் பொருத்திக் கொண்டான் .உதட்டில் சிகரெட் லைட்டரை ஜிப்பாவிலிருந்து எடுத்துக் கையில் வைத்துக்கொண்டவன். "இன்னும் ஒருவர் பாக்கி, அவரும் வந்துவிடட்டும், என் கதையை ஆரம்பிக்கிறேன்.," என்றான்.

38

'இன்னும் ஒருவர் வரட்டும்,' என்று சூரி சொன்னது பொன்னடியின் எரிச்சலை அதிகப்படுத்தியது.

"அதுதான் கல்யாண வீடு மாதிரி எல்லாரும் கூடியாகி விட்டதே? இன்னும் யார் பாக்கி?" என்றான்.

வாசலில் குரல் கேட்டது: " 'அழையாத விருந்தாளியிடம் அன்பு ஏற்படுவது எப்போது? அவன் திரும்பிப்போன பிற்பாடுதான்' என்றார் ஷேக்ஸ்பியர்."

"வாருங்கள் மிஸ்டர் சக்கரை. நீங்கள் இல்லாமல் என் கதையைச் சொல்லுவதா என்று நினைத்தேன். வந்து விட்டீர்கள். உட்காருங்கள். கலிவரதன், அம்பிகா, பொன்னடி, சித்தி, தாயி எல்லோரும் அப்படியப்படியே உட்காருங்கள்," என்றான் சூரி.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

பொன்னடியின் கையிலிருந்து மதுக் கோப்பையை வாங்கிக்கொண்ட கலிவரதன், "கதாகாலட்சேபம் பண்ணப் போகிறாயா? பலே பலே! நடத்து," என்றவாறு சூரிக்குச் சமீபமாக உட்கார, சக்கரையும் ஜன்னல் பக்கமிருந்த மேடையில் அமர்ந்தான். பெண்கள், திகிலும் ஆவலும் உள்ளத்தில் நிறைந்திருக்க, ஒருவரையொருவர் பார்த்தவாறே உட்கார்ந்து கொண்டார்கள். பொன்னடி ஒருவன் மட்டும் சற்று வீறாப்பாக மார்பு மீது கையைக் கட்டிக் கொண்டு நின்றான்.

சூரி, மடியிலிருந்த சூட்கேஸைத் தடவியபடி மெதுவாகப் பேசினான். உணர்ச்சி வசப்படாதவன்போல் படபடப்பின்றி அவன் குரல் அமைந்திருந்தாலும், அந்த ஆழமும் மெதுவுமே பயங்கரமானதாக இருந்தன.

"சக்கரைதான் பாவம், ஒரு விஞ்ஞானியின் அக்கறையுடன் என் நடவடிக்கைகளையும் அம்பிகாவின் மாறுதல்களையும் கவனித்துக்கொண்டு வருகிறார். ஒரு விளக்கமும் சொல்லாமலே என் வாழ்க்கை முடிந்து விட்டால் அவருக்கு இந்த ஜன்மத்தில் மட்டுமில்லை; அடுத்த ஜன்மத்திலும் நிம்மதி இருக்காது. பாருங்கள், பாருங்கள்! அடுத்த ஜன்மம் என்றவுடனேயே அவருக்கு உடம்பு சிலிர்க்கிறது," என்று விகாரமாகச் சிரித்தான் சூரி.

சக்கரை நறுக்கென்று ஏதோ சொல்ல நினைத்து, வேண்டாமென்று அடக்கிக் கொண்டவனைப்போல உதட்டைக் கடித்துக் கொண்டான். ஒரு புன்முறுவல் மட்டுமே அவன் முகத்தில் தென்பட்டது.

சூரி தொடர்ந்தான்:

"கலிவரதன் என் அக்காவின் கணவன் என்பதைச் சக்கரை சொல்லியிருப்பார் என்று நினைக்கிறேன்.... ஓகோ! அவர் இன்னும் சொல்லவில்லை என்பதை உங்கள் பார்வையே காட்டுகிறது. அப்படியானால் என் அருமை அக்காவை அக்கிரமமாகக் கொலை செய்துவிட்டாரென்று அவர் மீது வஞ்சம் தீர்த்துக்கொள்ளவே நான் இத்தனை நாளும் முயன்றேன் என்பதும் உங்களுக்குத் தெரிந்திருக்காது..."

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கலிவரதன் குறுக்கிட்டு, "யாரடா நீ மைத்துனன் உறவு கொண்டாடிக்கொண்டு உளறுகிறாய்? தேவகியை நான் கொலை செய்தேனா? இல்லை, இல்லை. எல்லாம் இந்தப் பொன்னடிதான் செய்தான்!" என்று கத்தினான்.

பொன்னடி உடனே ஆத்திரத்துடன், "சும்மா இருங்கள். தேவகி இறந்தது தற்செயலாகத்தான். ஏன் அனாவசியமாய் நம்மீது பழியைப் போட்டுக் கொள்கிறீர்கள்? தேவகியம்மா அப்படியெல்லாம் இறந்திருந்தால், இந்த அம்பிகா, எவ்வளவோ, முன்ஜன்ம விஷயங்களைச் சொன்னார்களே, அதைச் சொல்லியிருக்க மாட்டார்களா?" என்றான்.

"அதைத்தான் நான் வெளிப்படுத்த முயன்றேன். கடைசி வரையில் முடியவில்லை," என்றான் சூரி ஏமாற்றம் குரலை அடைக்க. "ஏன் என் அக்காமீது அத்தனை பிரியம் எனக்கு? எதற்காக அவள் பொருட்டு வஞ்சம் தீர்க்க வேண்டும்? எப்போதோ சின்ன வயதில் பிரிந்து விட்டேன் அவளை. முகம்கூட நினைவில் இல்லை. ஆனால் அவளை நினைக்கிற போதெல்லாம் என் உள்ளத்தில் நன்றி சுரக்கிறது. ஆறு வயதில் நடந்த ஒரு சம்பவம்தான் காரணம்..."

மரகதம் ரகசியமான குரலில், "அம்பிகா, இவன் என்னென்னவோ பிதற்றுவதையெல்லாம் நாம் எதற்காகக் கேட்டுக்கொண்டிருக்க வேண்டும்? வா, போய் விடலாம். உன் ஆசைக்காக இரண்டு நாள் இங்கே இருந்தும் ஆகி விட்டது. போதாதா?" என்றாள்.

ஆனால் அவளோ "ஸ்.. சும்மா இரு," என்று கூறி விட்டு, சூரி சொல்லும் ஒவ்வொரு வார்த்தையையும் பதைப்புடன் கேட்கலானாள்.

"ரொம்பச் சின்ன வயதில் நடந்த மறக்க முடியாத நிகழ்ச்சி அது. அப்போது ஐந்து வயதோ ஆறு வயதோ இருக்கும். எங்கள் வீட்டுத் தோட்டத்தில் பந்து விளையாடிக் கொண்டிருந்தேன், அக்காவோடு. எம்பிக் குதித்த பந்து கிணற்றுக்குள் விழுந்து விட்டது. அதைப்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

பார்ப்பதற்காகக் குனிந்தவன், கால் வழுக்கி, கிணற்றுக் குள்ளேயே விழுந்து விட்டேன். வினாடிகூடத் தாமதிக்க வில்லை தேவகி அக்கா. சிறுமியான அவள் அழவுமில்லை. யாரையும் கூப்பிடவுமில்லை. கண்ணிமைக்கிற நேரத்துக்குள் தானும் குதித்து விட்டாள் கிணற்றுக்குள். மூச்சுத் திணற மூழ்கி மூழ்கி எழுந்து கொண்டிருந்த என்னைத் தலைமயிரைப் பிடித்துக் கிணற்றுச் சுவரோடு சுவராக அழுத்திக் கொண்டாள். தானும் ஒரு கல்லைப் பிடித்துத் தொற்றிக் கொண்டாள். அதற்குப் பிறகுதான், 'அப்பா? அப்பா! ஏய்த் தோட்டக்காரா!' என்று தொண்டை கிழிந்து விடும்போல் கத்தத் தொடங்கினாள். ஒவ்வொரு நிமிடமும் அவளுக்குக் கை வழுக்கிக்கொண்டே இருந்திருக்கும். உடம்பில் என்ன மரண வேதனை ஏற்பட்டிருக்குமோ! ஆனால் அவள் தன் பிடியையும் சரி, கத்துவதையும் சரி, விடவில்லை. சுமார் அரை மணி நேரம் கழித்துத்தான் யாரோ அவள் கூச்சலைக் கேட்டு, எங்கள் இருவரையும் காப்பாற்றினார்கள்.

அப்படி எனக்காகத் தன் உயிரைத் துரும்பாக மதித்த சகோதரியை என்னால் எப்படி மறக்க முடியும்? வீட்டுக்கு அடங்காதவனாக நாடகக் குழுக்களில் சேர்ந்து எத்தனை ஊர் சுற்றினாலும், எந்தத் தேசத்தில் திரிந்தாலும், அவளை மறக்காமலே இருந்தேன். பல பல வருடங்கள் கழித்து ஊர் திரும்பியபோது என் குடும்பம் இருந்த இடம் தெரியாமல் பூண்டோடு அழிந்திருந்தது. தேவகி அக்காவை இந்தக் கலிவரதன் கல்யாணம் செய்து கொண்டுவிட்டா னென்றும், கொடுமைப்படுத்தி அவுட்ஹவுசில் தள்ளி வைத்திருந்தானென்றும், அவளை உயிரோடு கொளுத்தி விட்டானென்றும் கேள்விப் பட்டபோது என் மனம் எப்படித் துடித்திருக்கும் என்பதை யாராலும் ஊகிக்க முடியாது..."

கலிவரதனின் சிவந்த விழிகளினால் சூரியைப் பார்த்தபடி, "உன் அக்காவை நான் ஒன்றும் செய்யவில்லை. அவள் இருந்த வீட்டுக்குத் தீ விபத்து ஏற்பட்டால் நானா பொறுப்பாளி?" என்று கேட்டான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"யார் பொறுப்பாளி, யார் பொறுப்பாளியல்ல என்ற வீண் விவாதமெல்லாம் இன்னும் சில நிமிடங்களில் அர்த்தமில்லாததாக முடிந்துவிடப் போகிறது," என்றான் சூரி. அவன் உதட்டில் ஒரு குரூரமான புன்னகை உருவாகி யிருந்தது. "அதற்கு முன்னால் நான் சொல்ல வேண்டியதை யெல்லாம் சொல்லிவிட வேண்டும். நீங்கள் கேட்க வேண்டியதையெல்லாம் கேட்டுவிட வேண்டும். அதுதான் முக்கியம்," என்று கூறிவிட்டு மேலே விவரிக்கலானான்.

"வெறுப்பும் ஆத்திரமும் குமுறும் உள்ளத்துடன் பர்மாவுக்குச் சென்றேன். பல நாடகங்கள் நடத்தினேன். ஒரு நாள் தற்செயலாக ரங்கூன் கடைவீதியில் ஊசோ தாத்தாவைச் சந்தித்தேன். பில்லி சூன்யக்காரன் என்று கல்லெடுத்து அடித்துக் கொண்டிருந்தார்கள் அந்தக் கிழவரை. ஒரு கறுப்புக் கம்பளியைக் காலோடு தலைவரை சுற்றிக்கொண்டு கிடந்த அவரை ஜனங்களிடமிருந்து மீட்டு என் ஜாகைக்கு அழைத்து வந்தேன்.

"மனத் தத்துவ நிபுணர் சக்கரைக்கு மிக விருப்பமான தகவல்களை இதோ சொல்கிறேன். ஊசோ தாத்தா வெறும் ஏமாற்றுக்காரரல்ல. நிஜமான சக்தி படைத்தவர். தவம் செய்து வரம் பெற்ற முனிவர்களையும் ரிஷிகளையும் பற்றிப் புராணங்களில் படிக்கிறபோது பகுத்தறிவுவாதிகளான நாம் சிரிக்கிறோம். ஆனால் மன வலிமை என்பதும் தவ வலிமை என்பதும் மெய்யானவை தான் என்று எனக்கு நிரூபித்துக் காட்டினார் ஊசோ தாத்தா. ஒரே ஒரு வித்தியாசம். ரிஷிகளைப்போல ஊசோ தாத்தாவின் வலிமை மேலான விஷயங்களுக்குப் பயன்பட வில்லை. அரக்கர்களுக்குத் தவப் பலன் கிடைக்கிறபோது எப்படி மாறுகிறார்களோ அப்படி மாறினவர் அவர்.

"ஊசோ தாத்தாவுக்கு என்ன வயது என்பது எனக்குத் தெரியாது நூற்றைம்பதுக்கு மேலாயிற்று என்று அவரே அடிக்கடி சொல்லிக்கொள்வது வழக்கம். எழுந்து நடமாடும் சக்தி அவருக்குப் போய்விட்டது. குழந்தைக்குச் சோறு ஊட்டுகிற மாதிரி ரசம் சாதம் பிசைந்து வைத்தால் மெதுவாக உண்ணுவார். வெளிச்சம் துளியும் அவருக்குக்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கூடாது. வெளிச்சம் மேலே பட்டால் ஊசியால் குத்துகிற மாதிரி இருப்பதாக அலறுவார். அது ஒன்றுதான் அவருக்கு எதிரி. நான் அவருடைய முகமோ உடம்போ எப்படி இருக்குமென்று இதுவரை பார்த்தது கிடையாது. கறுப்பு உடையிலும் இருட்டிலுமே இருக்கவேண்டுமென்று சதா கூறுவார்.

"உடல் நிலை இவ்வளவு பலவீனமாக இருந்தாலும், மனத்தளவில் ஊசோ தாத்தா ஒரு ராட்சதன். மலையுச்சிகளிலும் அடர்ந்த கானகங்களிலும், இயற்கை யோடு இயற்கையாக வசிக்கும் பூர்வீகக் குடிகளுடன் சிறு வயது முதலே பழகி, நாகரிக மனிதர்களான நமக்குப் புரியாத, தெரியாத வித்தைகளையெல்லாம் கற்றறிந்தவர். மானசத் தந்தி' என்ற முறையில் — நம் மனத்திலிருப்பதைப் பிறர் மனத்துக்கு அனுப்பவும், பிறர் மனத்திலிருப்பதை நம் மனத்துக்குக் கொண்டு வரவும் — பயிற்சி பெற்றவர். மலேயாவிலும், ஜாவாவிலும் வசிக்கும் லாடா என்ற குடியினரிடம் நிலவுகின்ற ரகசிய மந்திர தந்திரங்களைக் கற்றுக் கொண்டதுமுண்டு. தான் என்ன செய்கிறாரோ அதையே ஒரு குறிப்பிட்ட நபர் திருப்பிச் செய்யுமாறு பண்ணக் கூடியவர். இரண்டாவது உலகமகா யுத்தத்தின் போது, பர்மாவிலும், மலேயாவிலும் ஜப்பானியர்கள் நாஜி முறைகளைக் கையாண்டு 'மூளைச் சலவை' செய்ய ஆரம்பித்தபோது அவர்களுக்கு உதவி செய்திருக்கிறார் ஊசோ தாத்தா. போர்க் கைதிகளை, அவர்களுடைய தேசத்துக்கே விரோதமாகப் பேசும்படியும் காரியங்கள் செய்யும்படியும் திரும்பத் திரும்பப் பிரசாரம் செய்து அவர்கள் மனத்தை மாற்றுவதுதான் 'மூளைச் சலவை.' தீட்டத் தீட்டக் கத்தி கூர்மை பெறுவது போல, இப்படிப் பயன்படுத்தப் பயன்படுத்த ஊசோ தாத்தாவின் மனச் சக்திகள் வளர்ந்து பெரும் பலம் கொண்டன.

நண்பர் சக்கரையைப் போலவே ஊசோ தாத்தா வும் ஒரு விஞ்ஞானி. அவருக்கு அவருடைய பரிசோதனை களும், அதில் கிடைக்கிற வெற்றிகளும்தான் முக்கியம். தன் ஆராய்ச்சியில் எத்தனை கிருமிகள் சாகின்றன என்று

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கவலைப்பட்டால் விஞ்ஞானியின் வேலை நடக்காது. அதே போல், யார் வாழ்வைக் கெடுக்கிறோம் அல்லது ஆக்குகிறோம் என்று கவலைப் படாமல் ஊசோ தாத்தா தன் பரிசோதனைகளில் மூழ்கியிருந்தார். அதனால் பாதிக்கப்பட்டவர்கள் அவரை அடித்துத் துரத்தியபோது தான் நான் கண்டு பிடித்துக் காப்பாற்றி என்னுடன் வைத்துக்கொண்டேன்.

சக்கரை இவ்வளவும் தனக்கு முன்பே தெரியும் என்பது போல் முறுவலித்தவாறே சூரியைப் பார்த்த வண்ணம் பேசாதிருந்தான்.

"மிஸ்ட்ர் சக்கரை, உங்களுக்காக இன்னொரு தகவலையும் தெரிவித்து விடுகிறேன். ஊசோ தாத்தா தன் சக்தியைப் பிரயோகிக்க வேண்டுமானால், இரண்டு வசதிகள் இருக்க வேண்டும். ஒன்று, யார் மீது பிரயோகிக் கிறாரோ அவருக்கு அருகில் இருக்க விரும்புவார். இரண்டாவது, அந்த நபருக்கு மனத்தின் ஆழத்தில் ஏதாவது ஒரு குற்ற உணர்ச்சி இருக்க வேண்டும். எப்போதோ செய்து விட்ட ஏதோவொரு குற்றத்தை நினைத்து வருத்தப் படுகிறவராக அவர் இருந்தால்தான் ஊசோ தாத்தாவின் மன வலிமை அவர் மீது பாயும். மனச்சாட்சியை அடியோடு துடைத்துப் போட்டுவிட்ட மனிதர்களை அவரால் எதுவும் செய்ய முடியாது."

கலிவரதன் ஒரு நீண்ட கொட்டாவியை வெளியிட்டான். "யாருக்கு ஐயா இந்தக் காலட்சேபம் வேண்டும்? நான் போகிறேன்," என்று எழுந்திருக்க முயன்றான். ஆனால் திடீரென்று சூரி, "உட்கார் மரியாதையுடன்!" என்று உரத்தகுரலில் கர்ஜிக்கவே, அந்த வெறியைக்கண்டு மிரண்டவனாகத் திரும்ப அமர்ந்தான்.

சூரி தொடர்ந்தான்: "ஊசோ தாத்தாவுடன் சென்னைக்குத் திரும்பினேன். அவருக்குப் பத்திரமாக, ஓர் இருட்டறை ஏற்படுத்திக் கொடுத்தபின், எனது நாடகப் பள்ளியை ஆரம்பித்தேன். கலிவரதனை எப்படியாவது பழி தீர்க்க வேண்டுமென்ற எண்ணம் மட்டும் மறையாம லிருந்தது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

இதே பங்களாவுக்கு, இதே அவுட்ஹவுசுக்கு ஒரு நாள் வந்தேன். என் அக்கா இறந்துபோன இடத்தைப் பார்க்க வேண்டும்போல் இருந்தது. சும்மா ஜாகை தேட வந்தவன் போல, வேலைக்கார கிழவி தாயினை ஏமாற்றி இங்கேயெல்லாம் நுழைந்து, பித்துப் பிடித்தவன் மாதிரி நின்று கொண்டிருந்தேன்.

அப்போது, தாயிக்கே தெரியாமல் அக்கா அவள் குடிசையில் ஒளித்து வைத்திருந்த டயரிகள் இரண்டொன்று என் கைக்குக் கிடைத்தன. இந்தக் கலிவரதனுடன் தான் மகிழ்ச்சியாக வாழ்ந்த காலத்தையும், கொடுமைப் பட்டு நரக வேதனை அடைந்த நாளையும் ஒன்று விடாமல் எழுதி வைத்திருந்தாள். படிக்கப் படிக்க என் ரத்தம் கொதித்து; டயரிகளை எடுத்துக்கொண்டு திரும்பினேன்.

பல கல்லூரிகள் தங்கள் தங்கள் மாணவிகளை என்னிடம் பயிற்சி பெற அனுப்பினார்கள்.

மீனாம்பா கல்லூரியிலிருந்து அம்பிகா ஒரு நாள் வந்தாள். அவளைப் பார்த்ததும் என் மனத்தில் என்னை யறியாமலே ஒரு நெகிழ்ச்சி ஏற்பட்டது. என் அக்கா தேவகி உயிரோடிருந்தால், இவள் வயதில் இப்படித்தான் இருந்திருப்பாள் என்று எதனாலோ தோன்றியது. இருவருக்கும் முகஜாடையில் அப்படியொரு ஒற்றுமை இருந்ததோ என்னவோ. அந்த எண்ணத்திலிருந்து விடுபட்டு, அம்பிகாவின் பெயர், முகவரி முதலியவற்றைக் குறித்துக் கொண்டபோது எனக்கு இன்னோர் அதிர்ச்சி ஏற்பட்டது.

அம்பிகா பிறந்த தேதி; தேவகி அக்கா இறந்த தேதிக்கு அடுத்த நாளாக இருந்தது! அவளேதான் மறுபடி பிறந்திருக்கிறாளோ என்று எண்ணினேன். அந்த எண்ணத்தை ஏன் நிஜம் போல உருவாக்கக்கூடாது என்ற யோசனையும் உதித்தது.

கலிவரதன் அவுட்ஹவுசில் உயிரோடு தேவகியைக் கொளுத்தினான் என்பதற்குச் சாட்சியம் கிடையாது. ஆகவே போலீஸ் வழக்கர்க அதைப் பற்றி புகார் செய்வது

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

நடவாத காரியம். ஆனால், தான்தான் அவனுடைய இறந்து போன மனைவி என்று ஒருத்தி தன்னைச் சொல்லிக் கொண்டு, பல முற்பிறவி விஷயங்களைப் பிசகில்லாமல் ஒப்பிப்பாளானால், எல்லோரும் நம்பும்படி ஆகிவிடும். அந்தத் தகவல்களோடு தகவல்களாய்த் தன்னைக் கொலை செய்தவனும் கலிவரதன்தான் என்பதை அவள் சொன்னால் அதை மட்டும் நம்பாமலிருப்பார்களா? போலீஸ் நடவடிக்கை எடுக்காவிட்டால்கூட, கலிவரதனுக்கே அது ஒரு பெரிய சித்திரவதையாக இருக்கும். அவனே அதைத் தாளமாட்டாமல் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டு போலீசில் சரணடைவான். இதைத்தான் நான் எதிர்பார்த்தேன், திட்டமிட்டேன். அந்தச் சமயத்தில்தான், ராஜஸ்தான் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த சிலர் மறுபிறவி பற்றி எழுதியிருந்த சில ஆராய்ச்சி களை நான் படிக்க நேரிட்டது.

சக்கரையினால் வாய்விட்டுப் பாராட்டாதிருக்க முடிய வில்லை. "பிரமாதமான ஆராய்ச்சிதான் செய்திருக்கிறாய், சூரி."

"நன்றி," என்று சொல்லிவிட்டு மேலே பேசினான் சூரி:

"அவர்கள் என்ன எழுதியிருந்தார்கள்? 'மறுபிறவி என்பதும், பூர்வ ஜன்ம நினைவுகள் என்பதும் நடைபெற முடியாத அதிசயங்களல்ல. நடக்கக் கூடியதே. ஆனால் முன் ஜன்ம நினைவுகள் 'என்று அவர்கள் கூறுகிற தகவல்கள் அவர்களுடைய மெய்யான அனுபவங்களாகத் தான் இருக்கவேண்டுமென்ற கட்டாயமில்லை. அந்த நினைவுகளை 'மானசத் தந்தி' முறையின் மூலம் வேறொருவர் அவர்கள் மனத்தில் புகுத்தியிருந்தாலும் புகுத்தியிருக்கலாம்," என்று கூறியிருந்தார்கள்.

அம்பிகாவின் பிறந்த தேதியும், ராஜஸ்தான் ஆராய்ச்சியாளர்களின் கட்டுரையையும் சேர்த்துப் பார்த்த வுடனேயே தீர்மானம் செய்துவிட்டேன் — அம்பிகாவைக் கொண்டே கலிவரதனை வஞ்சம் தீர்த்துக் கொள்வதென்று.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ஊசோ தாத்தாவுக்கு ஏகப்பட்ட சந்தோஷம் — தன் பரிசோதனைகளை நடத்த ஒரு வாய்ப்புக் கிடைத்ததே என்று.

நாடகப் பயிற்சிக்காக நான் கையாண்ட ஜெர்மன் முறையும் எனக்கு உதவி செய்தது. ஒருவரைத் தூங்க வைத்து, நாடக வசனங்களை அவர் காதில் விழுகிற மாதிரிப் பேசினால், அவருடைய உள் மனத்தில் அந்த வசனம் நன்கு பதியும் என்று நான் படித்திருந்தேன். கைவசம் பழைய டயரி இருக்கவே இருந்தது. அவ்வளவு அந்தரங்கமான சம்பவங்களையெல்லாம் சொன்னால் யார்தான் அதைப் புரட்டு என்று எண்ணுவார்கள்? கலிவரதனிடம் கொடுமைப் பட்டதைப்பற்றி முதலிலேயே பேசினால் அவன் மறுத்து விடுவானென்று, அவனுடன் மகிழ்ச்சியாக இருந்த சம்பவங்களைப் பற்றி மட்டுமே அம்பிகாவின் மனத்தில் உருவேற்றினேன். அவள் தூங்கும் போது பல பழைய நிகழ்ச்சிகளை அவள் காதுபட விவரித்தேன். இன்னொரு புறம் ஊசோ தாத்தா அவள் தான் தேவகியின் மறுபிறவி என்கிற எண்ணத்தை அவள் மனத்தில் வேரூன்றுமாறு செய்து கொண்டிருந்தார். அம்பிகாவிடம் நெருங்கிப் பழகுவதற்காக, அவள் சித்தியிடம் ஏதோ ஒரு தூர உறவைக் கற்பனை செய்து சொல்லி ஒட்டிக்கொண்டேன்.

சரியான சந்தர்ப்பத்துக்காகக் காத்துக் கொண்டிருந்தோம் இருவரும். மீனாம்பாள் கல்லூரி மாணவிகள் பிக்னிக் போவதாய்ப் பேசிக்கொண்டதும் எனக்கு ஒரு யோசனை தோன்றியது. கலிவரதனின் பரந்த தோட்டத்தை — இதே தோட்டத்தைத்தான் — சிபாரிசு செய்து வைத்தேன். தகுந்தபடி அவர்கள் வருவதற்கு அனுமதியும் வாங்கித் தந்துவிட்டேன்.

அவர்களை அனுப்பிவிட்டு, நானும் ஊசோ தாத்தாவும் ரகசியமாக ஒரு டாக்ஸியில் சென்றோம். அப்போதே அம்பிகாவின் மனம், எங்களுடைய முந்தைய முயற்சிகளினால், ஓரளவு குழம்பிப் போயிருந்தது. கலிவரதன் — அடையாறு — தாயி முதலிய பெயர்களையும், பல நிகழ்ச்சிகளையும் இந்தப் பங்களா, தோட்டம்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ஆகியவை பற்றிய வர்ணனைகளையும் அவள் தூக்கத்தில் கேட்டுக் கேட்டு, இதே இடத்துக்கு வந்ததும் உள்ளுக்குள் தடுமாறிக் கொண்டிருந்தாள். ஆனால் கெட்டிக்காரியாகை யால் வெளியே காட்டிக் கொள்ளாமல் சிரித்துப் பேசிச் சமாளித்துக் கொண்டிருந்தாள்.

நான் தோட்டத்தை ஒட்டிய வேலிப் பக்கத்தி லிருந்து ரகசியமாகப் பார்த்துக் கொண்டிருந்தேன். ஊசோ தாத்தா டாக்ஸியில் கறுப்புப் போர்வைக்குள் முடங்கிக் கிடந்தபடி தன் மானசத் தந்திகளை அனுப்பிக் கொண்டிருந்தார்.

யாரும் எதிர்பாராத விதத்தில் அந்த ஸ்டவ் வெடித்துத் தீ விபத்து ஏற்பட்டது. அந்த அதிர்ச்சி, அம்பிகாவிடம் எதை நாங்கள் எதிர்பார்த்தோமோ அதை ஏற்படுத்தி விட்டது. முழு வெற்றி எங்களுக்கு! இனிக் கலிவரதனை அணு அணுவாகக் கொன்று விடலாம் என்ற தெம்போடு நாங்கள் திரும்பினோம். அடுத்தடுத்து அம்பிகா விவரித்த நிகழ்ச்சிகளும் பேச்சுக்களும் அருமையாய்ப் பொருந்தி விட்டன. ஊசோ தாத்தா தன் சக்தி எத்தனை பிரமாதமாய் வெற்றி கண்டு விட்டது என்ற ஆனந்தத்தில் மூழ்கினார். நண்பர் சக்கரை வந்துதான் எல்லாவற்றையும் கெடுக்கத் தொடங்கினார்.

"உன்னுடைய ஞாபக மறதியைக் குறித்து வருந்துகிறேன் சூரி," என்றான் சக்கரை இடைமறித்து. "நடுவில் ஒரு விஷயத்தை விட்டு விட்டாய். மிஸஸ் ரத்தினத்தின் கொலை."

சூரியின் முகம் ஒரு வினாடி வெளிறிற்றெனினும் உடனே சமாளித்துக் கொண்டான். "மிக்க நன்றி, மிஸ்டர் சக்கரை. தலைக்கு மேல் எவ்வளவு போனால்தான் என்ன? அதையும் ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். இந்தப் பங்களாவில் அம்பிகாவிடம் மாறுதல் ஏறபடுத்துவதற்காக ஒளிந்து கொண்டிருந்தபோது, அந்த மிஸஸ் ரத்தினம் என்னைப் புகைப்படம் எடுத்து விட்டாள் — நான் இருப்பதைப் பார்க்காமலே. பிற்பாடு பிலிமைக் கழுவிப் பார்க்கும்போது, என் உருவம் வெளிப்படும். அனாவசிய

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

சந்தேகங்கள் முளைக்கும். அதற்கு இடம் தரக்கூடாது என்று தீர்மானித்துத்தான், அந்த அம்மா வீட்டிலில்லாத போது காமிராவைக் கடத்திக்கொண்டு வந்து விட வேண்டு மென்று போனேன். திடீரென்று மிஸஸ் ரத்தினம் வீட்டுக்குள் வந்துவிடவே, ஏதோ ஒரு வழியாய் அவள் வாயை அடைக்க வேண்டியதாயிற்று..."

ஒரு பச்சைக் கொலையை அத்தனை கேலி யாகவும், எளிதாகவும் அவன் பேசிய விதம், சுற்றியிருந் தோருக்கு அருவருப்பு மூட்டியது. அத்துடன், இவ்வளவு பகிரங்கமாக அவன் பேசுகின்ற நோக்கம் என்ன என்பதும் அவர்களுக்குப் புரியாததால் திகைப்புடன் மௌனமா யிருந்தார்கள். சக்கரை ஒருவன்தான், "நீ அந்தக் காமிராவைக் கைப்பற்றுவதற்கு முன்பே அது தர்மு சிவராஜின் வீட்டுக்கு வந்து விட்டது. பிலிம் சுழுவப்பட்டு, உன் திருவுருவம் கொண்ட பிரதி, இந்த நிமிஷம் போலீஸ் தலைமை அலுவலகத்தில் பத்திரமாயிருக்கிறது," என்றான்.

சூரியின் முகம் கறுத்தது மீண்டுமொருமுறை. "அதனாலென்ன? அந்த வேதசிகாமணி எங்கிருந்தோ வந்து சேர்ந்திருக்கிறான். அவன் தலைமறைவாக இருக்க இருக்க, அவன் மீது பாதி சந்தேகம் திரும்பிவிடுமே! நானும் எவ்வளவோ கேட்டுப் பார்த்துவிட்டேன், 'மிஸஸ் ரத்தினம் கொலையுண்ட சமயத்தில் நீ எங்கே தான் இருந்தாய் ஐயா? சொல்லேன்,' என்று. பிடிவாதமாகச் சொல்ல மாட்டேன் என்கிறானே! தன் கழுத்துக்குத் தானே சுருக்கை மாட்டிக் கொள்கிறானே! நான் என்ன பண்ண முடியும்?"

"ஆமாம், ஆமாம். நீ என்ன பண்ண முடியும்!" என்று சக்கரை கிண்டலாகப் பேசியதைப் பொருட்படுத் தாமல் மேலே தொடர்ந்தான் சூரி.

"இப்போது மிச்சக் கதையைச் சொல்லி விடுகிறேன். ஊசோ தாத்தா யாரை ஆட்டி வைத்தாரோ அவர்களுக்கெல்லாம் ஒரு குற்ற உணர்ச்சி இருந்து வந்தது மனத்துக்குள். அம்பிகா ஒரு நாயின்மீது சைக்கிள் ஏற்றிக் கொன்று விட்டோம் என்று வருந்திக் கொண்டிருந்தாள்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கலிவரதனுக்கு மனைவியைக் கொலை செய்துவிட்டோம் என்று குறு குறுப்பு..."

"கிடையவே கிடையாது" என்று மறுத்தான் கலிவரதன்.

அதைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்தான் சூரி. "சித்தி மரகதத்துக்கு, தன் கணவர்மீது பிரியம் இல்லாமல் வெகு சீக்கிரமாகச் சாகடித்து விட்டோமே என்று உறுத்தல்..."

"இதோ பார், என்னைப் பற்றிப் பேச் செடுத்தாயோ ரொம்பப் பொல்லாதவளாயிருப்பேன்," என்றாள் மரகதம் சுற்றிலும் பல பேர் துணையிருக்கும் தைரியத்தில்.

சூரி மேலே கூறினான்: "ஊசோ தாத்தாவின் சக்தி வெற்றிகரமாகத்தான் நிறைவேறியது. அவளுடைய பூர்வ ஜன்ம நினைவுகளை எல்லோரும் நம்ப வேண்டுமென்பதற் காகப் பலவிதமான வித்தைகளைச் செய்து காட்டினார். கலிவரதனை ஒரு தரம் நேருக்கு நேர் பார்த்ததால், அவனைப் போல் படம் வரைந்து காட்டி, அவன்தான் தன்னைக் கொலை செய்தவன் என்று அம்பிகா சொல்லும்படிகூடச் செய்ய முயன்றார். ஆனால் அவர் படம் சரியில்லாததால், அம்பிகா வரைந்ததும் சரியாக வரவில்லை. அம்பிகாவும் தான் நினைத்ததைச் சொல்லத் தெரியாமல் திணறினாள்..."

சக்கரை மறுபடி குறுக்கிட்டு, "இது மறுபிறவி நினைப்பல்ல என்பதை நிரூபித்துக் காட்டுவதற்காக நான் ஒரு கற்பனையான பையனை உருவாக்கினேனே? அதை எப்படிச் சமாளித்தாய்?" என்று கேட்டான்.

"ஒப்புக் கொள்கிறேன். அது தற்செயலாக, அதிர்ஷ்டவசமாகத்தான் முடிந்தது. வேலைக்காரக் கிழவி தாயியை இங்கே என் உளவாளியாக அல்லவா வைத்திருந்தேன்! இறந்துபோன எஜமானிக்குச் செய்யும் உதவி என்று நினைத்து, கலிவரதனும் பொன்னடியும் நீயும் என்ன பேசினாலும் திட்டமிட்டாலும் அவள் என்னிடம்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

உடனுக்குடன் வந்து தெரிவித்துக் கொண்டிருந்தாள். அதே பிரகாரம் தாஸ் என்ற ஒரு பையனை நீங்கள் அமர்த்தியிருப்பதும் எனக்குத் தெரிய வந்தது. உடனே அந்தப் பையனைச் சந்தித்து பணம் கொடுத்துச் சரிக்கட்டினேன். ஒரு பொய்க் கையெழுத்திட்ட பொய்க் கடிதம் தயாரித்துத் தந்தேன். அதற்கு ஏற்றாற்போல் அம்பிகா பேச வேண்டிய விஷயங்களையும் ராத்திரியோடு ராத்திரியாக நானும் ஊசோ தாத்தாவும் அவள் மனத்தில் ஏற்றினோம். அந்த நடவடிக்கை மட்டும் நான் செய்திரா விட்டால் நீதான் ஜெயித்திருப்பாய், சக்கரை!"

"போகலாமா?" என்றவாறு பொன்னடி நழுவ முயன்றான். கொஞ்ச நேரமாக இந்தச் சூழ்நிலை திகிலுக்கு மேல் திகிலாகத் தந்து கொண்டிருந்தது அவனுக்கு.

"ரொம்ப முக்கியமான கட்டம் சார். தயவு செய்து போகாதீர்கள்!" என்றான் சூரி, இகழ்ச்சியான புன்னகை யுடன்.

"மேலே சொல்லு," என்று ஊக்கினான் சக்கரை.

"அவ்வளவுதான். என்ன செய்தும், அம்பிகாவிட மிருந்து நான் எதிர்பார்த்த சொல் மட்டும் வரக் காணோம். ஏனோ தெரியவில்லை. 'கலிவரதன்தான் என்னை நெருப்பில் தள்ளிக் கொலை செய்தான்,' என்பதை மட்டும் சொல்ல முடியாமல் அவள் தவித்தாள். இன்னும் கொஞ்ச நாள் நாங்கள் முயற்சி செய்வதற்கு அவகாசம் தராமல் சக்கரை தடுக்கவே, அம்பிகா கை நழுவிப் போய்விட்டாள். பிறகு கலிவரதன் தன் சாவைத் தானே தேடிக் கொள்ளும் படி செய்கிறேன் என்று ஊசோ தாத்தா சவால் விட்டார். அதற்கு வழியில்லாமல், எப்போதும் குடியிலேயே கலிவரதனை ஆழ்த்தி வைக்கும்படி சக்கரை செய்து விட்டார்..."

"கடைசியில் நீயே கலிவரதனைத் தீர்த்துவிடுவது என்று புறப்பட்டாயாக்கும்?" என்று சக்கரை வினவினான்.

"ஓகோ! அது உன் ஏற்பாடா!" என்றான் சூரி. "ஆமாம். என் மனசுக்குள் திடீரென்று அந்த எண்ணம்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ஏற்பட்டது. 'கலிவரதனைக் கொல்லு, கலிவரதனைக் கொல்லு,' என்று யாரோ எனக்குள் சொல்லுவதுபோல் இருந்தது. மிஸஸ் ரத்தினத்தைக் கொலை செய்த குறு குறுப்பு எனக்கு இருந்ததால், என்னிடமும் அவர் சக்தி பயன்பட்டுவிட்டது. 'கொலை! கொலை!' என்று வாய் விட்டுச் சொன்னபடியே வீட்டை விட்டுக் கிளம்பினேன்: கொஞ்ச நேரம் கழித்து ஓரளவுக்குப் பகுத்தறிவு ஏற்பட்டது. ஆனால் இனி எப்படியும் கலிவரதனைக் கொல்லாமல் விடமாட்டோம் — ஊசோ தாத்தா என்னை விட மாட்டார் — என்பதை உணர்ந்தேன். சரி, சாகிறதுதான் சாகிறோம், எல்லோருமாகச் சாகலாம் என்றுதான் இந்தப் பெட்டியுடன் வந்தேன்," என்றான் சூரி.

"என்ன இருக்கிறது அந்தப் பெட்டிக்குள்?" என்று வீரிட்டாள் மரகதம்.

சூரி, தன் சிகரெட் லைட்டரை வைத்துவிட்டு, கால் சராயிலிருந்து ஒரு கைத் துப்பாக்கியை எடுத்தான். "பெட்டிக்குள்ளா? வெடி குண்டுகள்! நாட்டு வெடி குண்டுகள்! ஒரே நிமிஷத்தில் நம் எல்லோரையும் ஒரே புஷ்பக விமானத்தில் வைத்து ஒரே பரலோகத்துக்கு அனுப்பி வைக்கப் போகிற அற்புதக் குண்டுகள்!" என்றான்.

39

அவுட்ஹவுசிலிருந்த அத்தனை பேரையும் மரண பயம் ஒரே நிமிஷத்தில் கவ்விக் கொண்டது.

சூரி எதையோ மனத்தில் கொண்டுதான் இத்தனை அழுத்தலாகவும் மிரட்டலாகவும் பேசிக் கொண்டிருக்கிறான் என்று அவர்கள் ஊகித்திருந்தார்கள். ஆனால் அவன் பெட்டியில் கொண்டு வந்திருப்பது வெடி குண்டுகள் என்றோ, அவற்றை வெடித்து எல்லோரையும்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கூண்டோடு கைலாசம் அனுப்பத் திட்டமிட்டிருக்கிறான் என்றோ யாரும் எதிர் பார்க்கவில்லை.

அச்சத்தை வாய்விட்டுக் காட்டிய முதல் நபர் மரகதம்தான். "வேண்டாம் வேண்டாம் என்று முட்டிக் கொண்டேனே, கேட்டாயாடி அம்பிகா? இப்போது இந்தப் பாவி நம் எல்லோரையும் ஒழித்துவிடுகிறேன் என்கிறானே! என்னடி அம்பிகா வாயை மூடிக்கொண்டிருக்கிறாய்?" என்று புலம்பினாள்.

ஆனால் அவள் வாயே திறக்கவில்லை. மடை திறந்த வெள்ளம்போல் கண்ணீர் பெருகி அவள் கன்னங்களில் வழிந்தோடியது. "சூரி... சூரி..." என்று தழுதழுத்த குரலில் அழைத்தபடி எழுந்து அ'வனை நெருங்க முயன்றாள்.

"நகராதே!" என்று அரக்கன்போல் உறுமினான் சூரி. "இடத்தைவிட்டு அங்குலம்கூட யாரும் அசையக் கூடாது. அசைந்தால், சில நிமிடங்கள் முன்னதாகவே உயிர் போய்விடும். மிஸ்டர் சக்கரை, உங்களுக்குத்தான் முக்கியமாய் இந்த எச்சரிக்கை!"

சக்கரை எதுவும் பேசவில்லை. முகத்தில் ஒரு புன்முறுவலுடன் உட்கார்ந்திருந்தான் அந்த ஜன்னல் ஓரமாகவே. அவன்தான் ஏதாவது செய்து தங்களைக் காப்பாற்றுவானென்று எதிர்பார்த்த பொன்னடியும் கலிவரதனும், அவன் அமைதியாக இருந்ததைக் கண்டு ஏமாற்றம் கொண்டார்கள்.

அவள் எழுந்திருக்கவில்லையே தவிர, உணர்ச்சி வசப்பட்டவள்போல் பேசினாள்: "சூரி.. நீ என் தம்பிதான்... நான் உன் அக்காதான்... நீ எப்படி இத்தனை காலமாய் என்னையே நினைத்துக் கொண்டிருந்தாயோ அதேபோல் நானும் உன்னை நினைக்காத நாளில்லை. நீ எங்கே இருப்பாய், எப்படி இருப்பாய் என்றெல்லாம் நான் கற்பனை செய்து செய்து பார்த்ததெல்லாம் எவருக்கும் தெரியாது..."

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

எகத்தாளமாக, அட்டகாசமாக நகைத்தான் சூரி. "அந்த அத்தைப் பாட்டிக் கதைகளைக் கேட்கிற பால பருவத்தை நான் எப்போதோ தாண்டி விட்டேன், அம்பிகா! இனி நம் எல்லோருக்குமே மோட்சம்தான்?" அவன் கையிலிருந்த துப்பாக்கி, மடியிலிருந்த சூட்கேஸைத் தொட்டுக் கொண்டிருந்தது. "என்ன பொன்னடி, திகைக்கிறாய்? வரும்போது முகத்தில் கொலைவெறி எதையும் காணோமே என்றா? நான் முதல்தர நடிகன், பொன்னடி! மனசில் இருப்பதை முகத்தில் காட்டிக் கொண்டால் அப்புறம் நாடகப் பள்ளி நடத்த எனக்கென்ன யோக்கியதை! சாது மாதிரி வேடத்துடன் உள்ளே வந்து, சதிகார சொரூபத்தை இப்போது காட்டி விட்டேன்; ஹஹ்ஹா!"

"சூரி! 'எவனை விசாரணை செய்கிறார்களோ அவனை விடப் பெரிய குற்றவாளியான இரண்டொரு திருடர்கள், ஜமீரர்கள் பன்னிருவரின் மத்தியிலேயே கூட இருக்கக் கூடும்' என்று ஷேக்ஸ்பியர் புலம்பியது சரியாகி விட்டது. ஆனால் உனக்கும் மேலே, உன்னை இந்த நிமிடம் வரையில் ஆட்டி வைக்கும் சக்தியை மறந்துவிடாதே!" என்றான் சக்கரை.

"யார், ஆண்டவன்தானே! கொஞ்ச நேரத்தில் அவனை நேரில் பார்க்கப் போகிறோமே! அப்போது கேட்டுக் கொள்ளலாம்!"

"ஆண்டவனைச் சொல்லவில்லை. ஊசோ தாத்தாவைச் சொன்னேன். வெகு அருகில்தான் அவரும் இருக்கிறார். உன் மனசை மாற்றக்கூடிய சக்தி அவருக்கு இருப்பதை மறவாதே" என்றான் சக்கரை.

"ஏற்கெனவேதான் மாற்றி விட்டாரே. இனி என்ன மாற்றுவதற்கு இருக்கிறது? கலிவரதனைச் சீக்கிரமாய்க் கொல்லும்படி தூண்டப் போகிறார். அதைத்தான் நான் செய்து கொண்டிருக்கிறேனே! கலிவரதன் தனியாகத் தன் கடைசிப் பயணத்தைத் தொடங்குவானேன் என்று இரக்கப்பட்டு நாம் எல்லோரும் துணைக்குச் செல்லும்படி அல்லவா நான் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறேன்—"

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"அதல்ல — நீ இங்கே கொலை நோக்கத்துடன் வந்திருக்கிறாய் என்று ஊசோ தாத்தாவுக்குத் தெரியும். அந்த எண்ணத்தை மாற்றுங்கள் என்று அவரிடம் கேட்டுக் கொண்டிருக்கிறேன். ஆகவே எந்த நிமிடத்திலும் நீ கொலைத் திட்டத்தைக் கைவிட்டு, நல்லவனாவதற்குச் சந்தர்ப்பம் இருக்கிறது" என்றான் சக்கரை.

சூரி வெறுப்புடன் சிரித்தான். "தேவையில்லை. நான் நல்லவனாக விரும்பவில்லை. சாகும்போது வஞ்சம் தீர்த்துக் கொண்டோம் என்ற திருப்தியாவது இப்போது இருக்கிறது. அதுவும் இல்லாமல், நூறாயிரம் நல்லவர்களிலே ஒருவனாக நானும் இருந்து மசமசவென்று மெல்ல நசித்து தொண்டுக் கிழவனாக இறப்பதில் என்ன மேன்மை இருக்கிறது? இந்த வேகமும் குமுறலும் ஆத்திரமும் என் மனத்தில் இருக்கிறபோதே என் திட்டத்தை நிறைவேற்றி விடுகிறேன்..."

பொன்னடி தடாலென அவன் காலடியில் விழுந்து கெஞ்சினான்: "சூரி, உன் அக்கா தேவகியைக் கலிவரதன் கொல்லவில்லை — நான்தான் செய்தேன்... நான்தான் வீட்டுக்குத் தீ வைத்தேன் குடிவெறியில் செய்தாரென்று கலிவரதன் மீதே பழியைப் போட்டேன், அவரையும் நம்ப வைத்தேன். எனக்குத் தண்டனைக் கொடு. கடைசிக் காலத்தில் துஷ்டனாகவே இறக்க நீ விரும்புகிறாயா — அதேபோல், கடைசிக் காலத்தில் நான் நல்லவனாக உயிரை விட விரும்புகிறேன். இவர்களெல்லாம் அப்பாவிகள். விட்டு விடு, என்னைக் கொன்று விடு —" என்று விம்மினான்.

இதைக் கேட்டுக் கலிவரதன் தடுமாறிப் போனவனாக, "அடப் பாவி — உன் யோக்கியதை இப்படியா?" என்று பல்லைக் கடித்தான்.

சூரியின் கண்ணிலும் ஒரு மாறுதல் தென்பட்டதெனினும், வெறி குறையவில்லை. "நீ ரொம்பத் தாமதித்து விட்டாய், பொன்னடி! இத்தனை வருடங்கள் கலிவரதன் மீது பகைமையை மனத்தில் வளர்த்துக்கொண்டு விட்டேன். திடீரென்று அதை உன்மீது மாற்றி

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கொள்வதென்றால் நடக்குமா? உள்ளம் என்பது அஞ்சறைப் பெட்டியல்ல, கடுகு இருக்கிற இடத்திலே உளுத்தம் பருப்பைப் போட்டு வைக்க! ஏன் வீணாய்ப் பேசுகிறாய்? அந்த ஊசோ தாத்தா என்ன ஜபம் செய்து கொண்டிருக்கிறாரோ! அதற்கு முன் நான் காரியத்தை முடித்துவிட வேண்டும் —" என்றவன், கைத் துப்பாக்கியை பெட்டியின் மீது வைத்தான்.

அப்போதுதான் சக்கரைக்குப் பதற்றம் முதன் முறை ஏற்பட்டது. ஏன் ஊசோ தாத்தாவின் சக்தி எதுவும் பலிக்கவில்லை இப்போது. வெளியே காரிலே கிடத்திவிட்டு வரும்போது அவ்வளவு தூரம் சொன்னோமே. மறந்து விட்டாரா? என்னதான் செய்கிறார்? — ஜன்னல் கம்பிகளைப் பிடித்தவாறே சக்கரை சிந்தனையில் மூழ்கித் திணறினான்.

சூரியின் விரல்கள் ரிவால்வரின் விசையைத் தொட்டன.

"வேண்டாம் சூரி! வேண்டாம்!" என்று கத்தினாள் அவள். "நான் தேவகிதான்! சத்தியமாக! பிரமாணமாக! நான் உன் அக்காதான்! அம்பிகா அல்ல? அம்பிகா வேறிடத்திலே பத்திரமாய் இருக்கிறாள் — அவள் வேறு, நான் வேறு —"

இந்த அதிர்ச்சியான சொற்கள் அந்த அறையை ஆக்கிரமிக்கு முன்பே இன்னொரு சம்பவமும் நிகழ்ந்து விட்டது.

ஹோவென்ற கூச்சலுடன் பலர் தோட்டத்துக்குள் ஓடி வந்தார்கள். எல்லோரும் சிறுவர்கள். "டேய், காத்தாடி! அதோ விழுது! அதோ, அதோ! விடாதே! பிடி!" என்ற கூச்சல் காதைத் துளைத்தது.

அந்த அமளியின் நடுவிலேயே இரண்டு வேட்டுச் சத்தம் கேட்டது.

வாசல் கூச்சலில் சூரியின் கவனம் கலைந்ததால், உடனே சூரியைத் தடுக்க ஒரே சமயத்தில் முயன்றிருக் கிறார்கள், பொன்னடியும் அவளும்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

யாருக்கு என்ன அடி என்பதைக்கூடப் பிறகு கவனிக்கலாமென்று தீர்மானித்த சக்கரை முதல் வேலையாகக் குபீரென்று பாய்ந்து அந்த வெடிகுண்டுகள் அடங்கிய ஸூட்கேஸைப் பறித்துக் கொண்டான். பிறகே கவனித்தான்.

கைத்துப்பாக்கி சரேலெனத் திரும்பியதால் பொன்னடிக்கும் சூரிக்கும் தான் அடிபட்டிருந்தது. பொன்னடிக்குத் தோள்புறம். ஆனால் சூரிக்கு மரண காயம் — சரியான இருதயத்தில் பாய்ந்திருந்தது.

"அக்கா... நீ நிஜமாகவே... தேவகிதானா... அக்கா..." என்று அவன் வாய் குழறிற்று. அதே வினாடியில், அந்த அவுட் ஹவுசின் வாசலில் வந்து நிற்கும் இரண்டு உருவங்களையும் அவன் கண்கள் கண்டன. ஒன்று, வேதசிகாமணி, மற்றது அம்பிகா. முகத்தில் எவ்வித வடுவும் கோரமும் இல்லாத அசல் அம்பிகா.

அப்படியானால் —

இவள் சொன்னது சரிதான். நிஜமான தேவகி, அசல் தேவகி அக்கா, இவள்தான்... கண்ணீரும் கம்பலையுமாகத் தன் முகத்தெதிரே குனிந்திருப்பவள் தேவகி...

"அக்கா..."

சூரியின் கண்கள் நிலை குத்தி நின்றுவிட்டன. சுழுத்து, ஒரு வெட்டு வெட்டிக்கொண்டு சாய்ந்து விட்டது.

"தேவகி... தேவகி... நீ மறுபடி..." கலிவரதன் திக்கித் திணறினான்.

"ஆமாம்... நான் தேவகிதான் — உங்கள் மனைவி தேவகி நான் இறக்கவேயில்லை" என்று கணவனையும் தம்பியையும் மாறி மாறிப் பார்த்து விம்மினாள் தேவகி.

ரத்த வெள்ளத்தில் விழுந்து கிடந்த பொன்னடிக்கு, சேலைத் தலைப்பைக் கிழித்துக் கட்டுப் போட்டுக் கொண்டிருந்தாலும், கிழவி, தாயி ஆத்திரம் தீர அவனைத் திட்டிக் கொண்டுமிருந்தாள். "பாழாய் போகிறவனே, உன்னால் எத்தனை பேருக்கு எத்தனை

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கஷ்டம், செத்து ஒழி" என்று அவள் வாய் சொன்னாலும், கை ஆறுதலாக அவனைத் தடவிக் கொடுத்தது.

மரகதம் வாசலில் நின்ற அம்பிகாவிடம் ஓடி அவளை அணைத்துக் கொண்டாள்.

"அம்பிகா! அம்பிகா! என்னடி இதெல்லாம்! தங்கமாட்டம் நீ அப்படியே நன்றாயிருக்கிறாயே, என் கண்ணே. நான் போய் யாரையோ நீ என்று நினைத்துக் கொண்டிருந்தேனே" என்று மரகதம் கண்ணைக் கசக்க, "ஊஹூம், அழக்கூடாது. நான்தான் வந்துவிட்டேனே, சித்தி" என்று அம்பிகா அவள் கண்ணைத் துடைத்துக் கொண்டிருந்தாள்.

சக்கரை ஒருவன்தான் இந்த உணர்ச்சிப் பைத்தியங்களுக்கு ஆட்படாதிருந்தவன். "வேதசிகாமணி! பொன்னடியை உடனே ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லுங்கள்! நான் போலீசுக்குப் போன் செய்கிறேன்," என்று கட்டளையிட்டுவிட்டு, பங்களாவுக்கு ஓடினான்.

எண்களைச் சுழற்றியபோதும் சரி, போலீசுக்குத் தகவல் கொடுத்தபோதும் சரி, அவன் மனத்தின் பின்னணியில் வேறோர் எண்ணம் உறுத்திக் கொண்டே யிருந்தது. ஊசோ தாத்தாவின் சக்தி ஏன் பலிக்கவில்லை? ஏன் அவர் கடைசி வரை சூரியின் மனத்தைத் திருப்பவே யில்லை?

அவுட்ஹவுசில் உள்ள பெண்களும், கலிவரதனும் தன்னைக் கூப்பிடுவதைக்கூடக் கவனியாமல் பங்களாவுக்கு வெளியே சென்றான் சக்கரை. சில கெஜ தூரம் தள்ளி காம்பவுண்டு சுவரை ஒட்டினாற்போல நிறுத்தியிருந்த காரை அடைந்தான். பரபரப்புடன் எட்டிப் பார்த்தான், சீட்டுக்குக் கீழே.

வீலென்று கத்தவேண்டும்போல் வந்ததை எப்படித்தான் அடக்கிக் கொண்டானோ! வயிற்றை ஒரு குமட்டல் குமட்டி, குடலையே நாக்குக்குக் கொண்டு வந்துவிடுகிற மாதிரி இருந்த அருவருப்பை எப்படித்தான் பொறுத்துக் கொண்டானோ! பார்க்கிற கண்களைத்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

தோண்டிப் பெயர்த்து விடும் போலிருந்த பயங்கரத்தை எப்படித்தான் சமாளித்தானோ!

அம்பிகாவும், தேவகியும், மரகதமும் ஓடி வருகிற சத்தம் கேட்டது.

"நில்லுங்கள்! இங்கே வராதீர்கள்! அப்படியே நில்லுங்கள்!" என்று தொண்டை கிழியக் கத்தினான் சக்கரை.

திக்கென்று நின்று போனார்கள் அவர்கள்.

"என்ன! என்ன ஆயிற்று!" என்று தேவகி கேட்டாள்.

"ஊசோ தாத்தா மரித்து விட்டார்."

"எங்கே —" என்று முன்னே செல்லவிருந்த அம்பிகாவை சட்டெனத் தடுத்தான் சக்கரை. "போகாதே. பெண்களும் இளகிய மனம் படைத்தவர்களும் பார்க்கக் கூடிய காட்சியல்ல... இயற்கை தந்திருக்கும் எல்லையை மீறி உயிர் வாழ்ந்த உடம்பு அது. ஆகவே அதிலிருந்து உயிர் வெளியேறிய பிறகு, சாதாரண சவத்தைப் பார்ப்பதைக் காட்டிலும் கோரமாக இருக்கிறது..."

"அவர்... அவர்... எப்படி இறந்து போனார்?"

"என் தவறினால்," சக்கரை தலை குனிந்து கொண்டான். "காரின் ஜன்னல்களை ஏற்றாமல் போய் விட்டேன். எவனோ வழிப் போக்கன் — அற்ப ஆசை பிடித்தவன் — நல்ல கறுப்புப் போர்வைகள் கிடக்கிறதே என்று உருவிக்கொண்டு போய்விட்டான். வெளிச்சம் ஊசோ தாத்தாவை மிகக் குரூரமாகக் கொன்று விட்டது. அந்த காய்ந்த உடல் மேலும் சுருங்கி, வதங்கி — சே! அது ஏன் உங்களுக்கு. கண்ணராவி! நீங்கள் போங்கள். ஆஸ்பத்திரிக்கு பிரேதக் கிடங்கில் சேர்ப்பித்துவிட்டு வருகிறேன்..."

"நாங்கள்... எங்களுக்கு இங்கே வேலை யில்லையே..." என்று அம்பிகா தயங்கினாள்.

"ஆமாம். போலிஸ் விசாரணை முடிந்ததும் நேரே என் அத்தை வீட்டுக்கு வந்து விடுங்கள். நீங்களும்தான்,

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

தேவகி உங்கள் கணவருடன் வந்து விடுங்கள். பல சந்தேகங்களைப் பேசவேண்டியிருக்கிறது," என்றான் சக்கரை.

பக்கத்தில் பக்கத்தில் நிற்கும் தேவகியையும் அம்பிகாவையும் ஒரு வினாடி கண் கொட்டாது நோக்கினான் அவன். இருவருக்குமிடையே எவ்வளவு ஒற்றுமை! பிள்ளைப் பேறும் இல்லாமல், ஆரோக்கிய மாகவும் வாழ்ந்து வந்திருக்கிறாள் தேவகி. ஆகவே உடற்கட்டு குலையாமல், யௌவனப் பெண்ணாகவே இருக்க முடிந்திருக்கிறது. அம்பிகா என்று அவளை நினைக்க வைத்திருக்கிறது. முகத்தில்தான் இருவருக்கும் வித்தியாசம். தேவகிக்கு ஒரே தழும்புகள். அம்பிகாவுக்குக் கண்ணாடி மாதிரி இருக்கிறது.

ஆனால் எப்போது, எப்படி, ஏன் இந்த இருவரும்...?

பலவகைச் சந்தேகங்களுடன் காரில் ஏறிக் கொண்டான் சக்கரை. பின்னால் கிடக்கும் ஊசோ தாத்தாவைப் பற்றி நினைவு வந்ததும் உடம்பு மீண்டுமொரு முறை குலுக்கிப் போட்டு மற்ற எண்ணங்களை விரட்டி யடித்தது.

சக்கரை அத்தையின் வீட்டுக்குத் திரும்பி தர்மு சிவராஜிடம் எல்லா விஷயங்களையும் விவரித்து முடித்த பிறகுதான் மற்றவர்கள் வந்தார்கள். அதுவும்கூட, முதலில் தேவகியும் பிறகு கலிவரதனும் தனித்தனியே வந்து சேர்ந்தார்கள்.

"பொன்னடிக்குக் கை போய்விடும் என்று சொல்லி விட்டார்கள். மற்றபடி பிழைத்துக் கொண்டு விட்டான்" என்றான் கலிவரதன். அவன் பேச்சிலும் தோற்றத்திலும் நடையிலும் தென்பட்ட மாறுதல்கள் சக்கரையை பிரமிக்க வைத்தன. இழந்த மனைவியைத் திரும்பப் பெற்ற தெம்பினால் வந்ததா அது? அல்லது பழைய தவறுகளுக்கான தண்டனைகளை அனுபவித்து விட்டதால், இனியாவது வாழ்க்கையைச் செப்பனிட்டுக்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கொள்ள வாய்ப்புக் கிடைத்ததே என்ற ஆறுதலில் பிறந்த தெளிவா? அழகை இழந்த மனைவி என்பதைக்கூடப் பொருட்படுத்தாமல் உற்சாகமாயிருக்கிறானே.

தேவகியிடமிருந்து விலகி உட்காரவிருந்த கலிவரதனை, "பரவாயில்லை. இப்படி நெருங்கியே உட்காரலாம். பழைய சண்டைகளையெல்லாம் மறந்து விடுங்கள் — எங்களுக்காக," என்று கூறிய சக்கரை, தேவகியின் அருகிலேயே கலிவரதனுக்கு நாற்காலி போட்டான்.

"அதென்ன — உங்களுக்காக நாங்கள் ராஜியாவது?" என்று கலிவரதன் சிரித்தான்.

"எங்கள் சுயநலம்தான். நீங்கள் இரண்டு பேரும் சண்டை பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தால் நாங்கள் எப்போது எல்லாக் கதையையும் தெரிந்து கொள்வது? எப்போது எங்கள் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்வது?" என்றான் சக்கரை.

வேதசிகாமணி பரிகசித்தார்:

"தேவகி! நான் புத்தி சொன்ன போதெல்லாம் கேட்கமாட்டேனென்று பிடிவாதம் பிடித்தாயே! பேசாமல் கணவனிடம் திரும்பிப் போய்க் குடித்தனம் நடத்து என்று சொன்னதை ஒப்புக்கொள்ள மாட்டேன் என்றாயே! இப்போது? சக்கரை சேர்த்து வைத்ததும் ஜம்மென்று ஒப்புக்கொண்டு விட்டாயே!"

நகைச்சுவைக்கும் மரகதத்துக்கும் வெகு தூரம் என்றாலும் அவளுக்கும்கூட இப்போது ஹாஸ்யமாகப் பேச வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது: "அப்படியே உட்கார்ந்திருங்கள். நான் போய் ஆரத்தி கரைத்து எடுத்து வருகிறேன்," என்றாள்.

தர்மு அதைக் கேட்டுச் சிரித்துக்கொண்டே, "ஆரத்தி அப்புறம் எடுத்து வரலாம். விவரங்களை முழுக்கக் கேட்டு விட்டுப் போங்கள்" என்றாள். சிவராஜ் கூட கையிலிருந்த பிலிம் சுருளைப் பிற்பாடு டெவலப் செய்து

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கொண்டால் போயிற்று என்று தீர்மானித்தவர்போல, அவளுடன் உட்கார்ந்து கொண்டார்.

தேவகி ஒரு பெருமூச்சு விடுத்துவிட்டு, தாழ்ந்த குரலில் பேசினாள்.

"பழைய துயரங்களையெல்லாம் மறக்க வேண்டுமென்றுதான் இத்தனை வருடமாகப் பாடுபட்டு வந்தேன். அதை நினைப்பதால் வேதனைதான் அதிகமாகும். ஆனால் இப்போது அதைச் சொல்லாமல் பின் கதைகளைச் சொல்ல முடியாது."

கலிவரதன் பெருந்தன்மையாக, "என்னைப் பற்றிச் சொல்லப் போகிறாய்? அப்படித்தானே? பரவாயில்லை. சொல்லு," என்றான்.

தேவகி கூறினாள்:

"என் பிறந்த வீட்டுச் சீதனமாக வந்த நகைகளைத் தாமாட்டேன் என்று இவருடன் நான் சண்டை பிடித்ததும், பிறகு அவுட்ஹவுசில் தனியே போய் இருந்து கொண்டதும் எல்லோருக்கும் தெரியும்.

திடீரென்று ஒருநாள் இரவு நான் இருந்த இடத்தில் நெருப்பிடித்தது. இவர்தான் வைத்து விட்டாரென்று நினைத்தேன். திமுதிமுவென்று எரியத் தொடங்கியதும் நான் பின்புறத்தின் வழியாகத் தப்பி வெளியே ஓடினேன். அது நடுராத்திரி நேரம். யாரும் நடமாட மாட்டார்கள் என்று நான் நினைத்திருந்தது போக, இந்த வேதசிகாமணி அண்ணா வந்து கொண்டிருந்தார் எதிரே. அதுவும் எப்படி? மலையிலே ஒரு பெண்ணின் பிரேதத்துடன்? தாளமுடியாத துக்கங்களுடன் தள்ளாடிய என்னிடம் அவசர அவசரமாகச் சேதிகள் தெரிந்து கொண்டார். என்ன சேதி என்றிற்றோ, தெரியவில்லை. 'இரு,' என்று மறைவாக ஒரு மரத்தடியில் என்னை இருத்திவிட்டு, கையிலிருந்த பவுத்துடன் எரிகிற இடத்துக்கு ஓடினார். அந்தப் பெண்ணின் உடலை அங்கே போட்டுவிட்டு, எங்கேயோ ஒரு வண்டியும் பிடித்துக்கொண்டு என்னை ஏற்றிச் சென்றார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

இரண்டு மூன்று நாள் கழித்துத்தான் நான் பிரக்ஞை பெற்றேன். ஒரு பிரைவேட் டாக்டரைக் கொண்டு எனக்குச் சிகிச்சை செய்தாரென்றும், செங்கல்பட்டில் ஒரு பாட்டியம்மாள் துணையுடன் எனக்கு ஜாகை வசதி செய்திருக்கிறாரென்றும் தெரிந்து கொண்டேன்.

கொஞ்சம் கொஞ்சமாகத்தான் அவர் என் கேள்விகளுக்குப் பதில் கூறினார். அவருக்கு ஆவி உலகத்தில் நம்பிக்கை ஜாஸ்தி. இறந்தவர்களைக் கொளுத்தாமல், புதைத்து வைத்திருந்தால், பிற்பாடு அவர்களுடன் பேசலாம் என்று சொல்லிக் கொண்டிருப்பார். இதனால்தான் மனைவி ரத்தினத்துடன் அடிக்கடி தகராறுகள் வரும்.

வேதசிகாமணி அண்ணாவுக்கு ஒரு தங்கை இருந்தாள். அவள்மீது அவருக்கு ஏகப்பட்ட பிரியம்.

அண்ணா வெளியூர் சென்றிருந்த சமயம் திடீரென்று அந்தத் தங்கை இறந்து விட்டாள். மிஸஸ் ரத்தினம் கணவர் ஏதாவது கிறுக்குத்தனமாகச் செய்து வைப்பார் என்று பயந்து, உடனே தகனத்துக்கு ஏற்பாடு செய்துவிட்டாள். மயானத்திலிருந்து ரத்தினம் திரும்பி வரவும், ஊரிலிருந்து வேதசிகாமணி திரும்பவும் சரியாகி விட்டது. விஷயத்தைக் கேள்விப்பட்டு, குதிகுதியென்று குதித்தவர், உடனே இடுகாட்டுக்கும் கிளம்பி விட்டார். சிதையிலிருந்த தங்கையின் உடலை எவருக்கும் தெரியாமல் கைப்பற்றித் தூக்கி வந்து கொண்டிருந்தபோதுதான் என்னைப் பார்த்தார். எங்கள் பங்களாவிலிருந்து கொஞ்ச தூரம்தான் இவர்கள் வீடும், மயானமும் ...''

மரகதம் குறுக்கிட்டு, "அம்மாடி! குலை நடுங்கும் படியான சமாசாரங்களையெல்லாம் ரொம்பச் சாதாரண மாகச் சொல்கிறாயே?" என்றாள்.

அம்பிகா, "சித்தி! பட வேண்டிய கஷ்டங்களை யெல்லாம் அவர் பட்டாகிவிட்டது. இப்போது நினைத்துப் பார்த்தால் அப்படித்தான் இருக்கும்," என்றாள்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

மேலே தொடர்ந்தாள் தேவகி: "மறுபிறவி என்பது எனக்கு அப்போதே ஏற்பட்டுவிட்ட மாதிரிதான். வேதசிகாமணி, தன் தங்கை இறந்துபோன சிலமணி நேரத்திலேயே நான் கிடைத்ததைக் கொண்டு, தன் தங்கையே மறுபிறவி எடுத்து வந்துவிட்டாள் என்று நம்ப ஆரம்பித்துவிட்டார். செங்கல்பட்டில் ஒரு ரெடிமேட் துணிக்கடை வைத்திருந்தார். அங்கேயே சாப்பாடு. ஜாகை எல்லாம் அவருக்கு. என்னை ஒரு கிழவியுடன் சிங்கப் பெருமாள் கோவிலில் குடித்தனம் வைத்தார். தையல் மெஷீன் வாங்கித் தந்தார். நானும், எப்போதோ ஒரு தம்பியை இழந்ததற்கு இப்போது அண்ணனாவது கிடைத்தாரே என்று மனத்தைத் தேற்றிக் கொண்டேன்.

கணவருடன் நடத்திய குடித்தனம், பட்ட துன்பம் எல்லாவற்றையும் மறந்து புது வாழ்க்கை தொடங்குவது என்று நான் தீர்மானித்தேன். நான் இருப்பது தெரிந்தால் மறுபடியும் என்னைக் கொலை செய்ய வந்துவிடுவார்கள் என்று நடுங்கினேன். ஆகவே என் இருப்பிடத்தை யாருக்கும் எந்தச் சந்தர்ப்பத்திலும் சொல்லக் கூடாதென்று கூறி, வாக்குப் பெற்றுக் கொண்டேன். இன்னொரு வாக்குறுதியும் கேட்டேன். ஆவியுடன் பேசுவது, பிரேதத்தைப் பாதுகாப்பது முதலிய சிறுக்குத்தனங்களை விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். ஒப்புக் கொண்டார்.

என் குடும்பக் கதை அண்ணாவுக்கும், அவருடைய குடும்பக் கதை எனக்கும் தெரியும். கணவனிடம் திரும்பும்படி இவர் எனக்குப் புத்தி சொல்கிற போதெல்லாம் மனைவியிடம் திரும்பும்படி நான் புத்தி சொல்வேன். இப்படியே பல வருடங்கள் ஓடிவிட்டன.

மிஸஸ் ரத்தினம் கொலை செய்யப்பட்ட செய்தியும், இவரைப் போலீசார் தேடுவதும் பல நாள் கழித்துத்தான் எனக்குத் தெரிந்தது. அந்தக் கொலையில் இவருக்கு ஒரு சம்பந்தமும் கிடையாது. ஆனால், அந்த அம்மாள் கொலை செய்யப்பட்ட அதே சமயம் இவர் என்னைப் பார்த்து, சௌக்கியம் விசாரிப்பதற்காகச்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

சிங்கப்பெருமாள் கோவிலுக்கு வந்திருந்தார். அதை வெளியில் சொல்வதில்லை என்று வாக்குக் கொடுத்து இருப்பதை எப்படி மீறுவது? அதற்காகத் தலைமறைவாக இருக்கிறார் என்று தெரிந்து கொண்டேன். நான் உயிருடன் இருப்பது வெளியே தெரிந்தால் பரவாயில்லை என்று நான் வாதாடுவதும், தெரிந்தால் என் கணவர் எனக்கு ஆபத்து ஏற்படுத்துவார் என்று இவர் மறுப்பதுமாக, தினம் சண்டையிட்டுக் கொண்டிருந்தோம்.

இதற்கு நடுவே சூரியிடமும் அகப்பட்டுக்கொண்டு சக்கரையின் உதவியினால் தப்பி வந்தார். ஆனால் யாரோ தன்னைப் பின் தொடர்கிறார்கள் என்று தெரிந்ததும், அவர்களுக்கும் பாய்ச்சுக் காட்டிவிட்டு நழுவிவிட்டதாகச் சொன்னார். சூரி என்பது என் தம்பியாக இருக்கக் கூடும் என்று நான் நினைக்கவேயில்லை.

கணவரிடம் திரும்பிவிடு என்று இவர் சொன்னதை வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளத் தயங்கினேனே தவிர, உள்ளூர, கணவரைப் பற்றிய எண்ணம் இருந்துதான் வந்தது. எந்தப் பெண்ணுக்குத்தான் இருக்காது? ஆரம்ப காலத்தில் இவர் பிரியமாயிருந்ததை அடிக்கடி நினைத்தேன். பொன்னடியுடன் சேர்ந்து இவர் கெட்டதையெல்லாம் மறக்கவும் மன்னிக்கவும் முற்பட்டேன். இவருக்குக் கடன் தொல்லைகள் ஏராளமாயிருக்கிறது என்று தெரியவந்தபோது எனக்கு வேதனை நெஞ்சைப் பிழிந்தது. அவருக்கு உபயோகப்படாத நகையும் நட்டும் நமக்கு எதற்கு என்று எண்ணினேன்,. தோட்டத்தில் புதைத்து வைத்திருப்பதை எவருக்கும் தெரியாமல் எடுத்துத் தரலாம் என்றுதான் அவுட்ஹவுசினருகே வரச் சொல்லிக் கடிதம் எழுதினேன். தபாலில் போட்டால் பொன்னடி பார்ப்பானென்று டைகரிடம் கொடுத்தனுப்பினார் அண்ணா. நானும் வேதசிகாமணி அண்ணாவும் குறிப்பிட்ட இரவு அடையாறு பங்களாவுக்கு வந்து காத்திருந்தோம். நான் தலையைக் காட்டாமல் அண்ணாவையே எடுத்துத்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

தரும்படி சொல்லத்தான் எண்ணியிருந்தேன். இவர் வரவேயில்லை..."

சக்கரை குறுக்கிட்டு, "அன்று இவர் போக வேண்டுமென்றுதான் ரொம்ப ஆர்வத்துடன் இருந்தார். பாழும் மது அவரை வழிமறித்துவிட்டது," என்றான் கலிவரதனை அனுதாபத்துடன் பார்த்தவாறே.

"நாமாவது புதையலை எடுத்துக் கொண்டு திரும்பிவிடலாம் என்று உள்ளே வந்தேன். ஆனால் யாரோ என்னைக் கவனிக்கிற மாதிரி தெரியவே உடனே நழுவிவிட்டோம்."

சக்கரை மறுபடி இடைமறித்து, "அன்று உங்களை அந்த வெள்ளை நிற ஆடையில், அந்த வேளையில் அவுட்ஹவுசினருகே பார்த்துவிட்டு நான் நடுங்கிய நடுக்கம்—ஐயோ!" என்றான்.

"வெளியேறியபோதுகூட எனக்குப் புதிய கவலை ஒன்று ஏற்பட்டது. பதினெட்டு வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டதால், எங்கே புதைத்தோம் என்பதைச் சட்டென நினைவுபடுத்திக்கொள்ள முடியவில்லை. குழப்பத்தோடு திரும்பினேன். என் கணவர் ஏன் தோட்டத்துக்கு வரவே யில்லை என்ற குடைச்சல் வேறே ... அப்போதுதான் நானும் வேதசிகாமணி அண்ணாவும் ஒரு தவறான முடிவு செய்துவிட்டோம். அதை இப்போது சொல்லக்கூட வெட்கமாயிருக்கிறது..."

"பரவாயில்லை, அக்கா. சொல்லுங்கள். யாரும் தப்பாய் நினைக்க மாட்டார்கள்," என்று அம்பிகா தைரியம் கொடுத்தாள்.

"என் புதையலை அடைவதற்காக இவர் அம்பிகாவுடன் அடிக்கடி பழகினார் இல்லையா?... அதெல்லாம் எனக்குச் சந்தேகம் ஏற்படுத்திவிட்டது... அம்பிகாமீது பொறாமை ஏற்பட்டுவிட்டது. கணவரைப் பிரிந்து வந்த எனக்கு ஏன் கோபம் ஏற்பட வேண்டும்? அவர்மீது என் உள்ளுக்குள் அக்கறை இருப்பதை உணர்ந்தேன். அம்பிகாவை இவரிடம் இருந்து பிரித்து

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ஒழித்துவிட வேண்டுமென்றுகூட எண்ணினேன்..... வேதசிகாமணி அண்ணாவும், என்மீது இருந்த மட்டற்ற அன்பினால் நான் நினைப்பதே சரியென்று சொல்லிவிட்டார். அப்போது அம்பிகா, சித்தியின் வீட்டிலிருந்து காணாமற்போயிருந்தாள். இந்த வீட்டில் இருப்பதைக் கண்டுபிடித்ததும், பிறகு சக்கரை மாதிரி நடித்து அம்பிகாவைக் கடத்திச் சென்றதும் வேதசிகாமணி அண்ணாதான். ஆனால் கடத்தி வந்த பிறகு என்ன செய்வதென்று தீர்மானமாகவில்லை. திருவான்மியூர் பக்கமிருந்த ஒரு வீட்டில் அவளைக் கொஞ்ச நாட்களுக்கு அடைத்து வைக்க எண்ணினோம். ஆனால் முதல் நாள் இரவே அம்பிகா அங்கிருந்து தப்பியோடிவிட்டாள். காவலுக்கிருந்த நான் அவளைத் துரத்திப் பிடிக்க வேண்டியதாயிற்று...."

"ஐயோ! அன்று இரவில் சக்கரை பயப்பட்டதாகச் சொன்ன மாதிரிதான் நானும் பயந்து போனேன்— கடற்கரையில் உங்கள் உருவத்தைப் பார்த்தவுடனே!" என்றாள் அம்பிகா.

"அந்தப் பயத்தில் மயக்கமடைந்து விழுந்து விட்டாய். உன்னைத் திரும்ப எடுத்துக்கொண்டு வந்தேன். அப்போதுதான் எனக்கும் உன்மீது பிரியம் விழுந்தது. கள்ளங் கபடமற்ற அம்பிகா, தப்பான நடவடிக்கைகளில் ஈடுபட மாட்டாள் என்று உடனேயே நிச்சயித்தேன். அதன் பிறகுதான் நான், நீ, வேதசிகாமணி அண்ணா மூன்று பேருமாய் அந்தத் திட்டம் போட்டோம்."

"திட்டமல்ல! சதி ! அதைச் சொல்லி விடுங்கள்! கதை முடிந்தது!" என்றான் சக்கரை.

"நாலைந்து நாளாவது அடையாறு பங்களாவில் தங்கினால் புதையல் இடத்தைக் கண்டுபிடித்து விடலாம் என்று நான் நம்பினேன். அதற்காக, அம்பிகாவாக நான் சில நாட்கள் நடிப்பதென்று முடிவு செய்தேன். நடித்து, புதையலை எடுத்து தன் கணவரிடம் கொடுத்து விடுவதென்றும், பிறகு திரும்பிவிடுவதென்றும் என் திட்டம். என் முகத்திலிருந்த தழும்புகள்தான் இடையூறு. ஆகவே,

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அம்பிகாவுக்கே தீ விபத்து ஏற்பட்டதாக ஒரு நாடகம் ஜோடித்தோம். அந்தத் திருவான்மியூர் குடிசை ஆட்கள் அனைவரும் எங்களுக்கு ரொம்ப வேண்டியவர்கள். எப்படியெல்லாம் மாற்றி மாற்றிச் சொல்லி, நாடகம் நடித்து, உண்மை போலப் பண்ண வேண்டுமோ அந்த மாதிரியெல்லாம் பண்ணி விட்டார்கள்."

"சரி, புதையலைக் கண்டுபிடித்துக் கலிவரதனிடம் கொடுத்த பிறகு எப்படித் திரும்புவதாயிருந்தீர்கள்?" என்று சக்கரை வினவினான்.

"சுலபம்! நாங்கள் இரண்டு பேரும் இன்னொரு தரம் இடம் மாறிவிட வேண்டியதுதானே!" என்று தேவகி சிரித்தாள். "வேதசிகாமணி அண்ணா ஒரு நாட்டு வைத்தியர் போல் வேடமணிந்து, தழும்புகளைப் போக்குகிற ஒரு மாயக் களிம்பு இருப்பதாகச் சொல்ல வேண்டியது. எல்லோர் முன்னிலையிலும் அதை நான் முகத்தில் தடவிக்கொண்டு ஒரு தனியறைக்குப் படுக்கப் போக வேண்டியது. அங்கு அம்பிகா வந்து விடுவாள். நான் வெளியேறி விடுவேன். காலையில் நீங்கள் பார்க்கும்போது அம்பிகாவின் முகத்தில் ஒரு தழும்பும் இருக்காது. இப்படித் திட்டமிட்டு எல்லாம் செய்தோம். சூரி என்ற என் தம்பி என்னென்னவோ செய்துகொண்டிருப்பதும், இவர் பரிதாபகரமான குடிகாரனாக இருப்பதும் எனக்குப் பிற்பாடுதான் தெரிந்தது. கொஞ்சம் கொஞ்சமாக என் மனம் மாறி, இவரிடம் அதிகமாய் அனுதாபம் கொள்ள ஆரம்பித்தேன்..."

"அது வீண் போகவில்லை. இனி ஜாம் ஜாமென்று குடும்பம் நடத்த அந்த அனுதாபம் மேலும் மேலும் தேவைதானே?" என்ற சக்கரை எழுந்து கொண்டான். "அம்பிகாவையும் அவள் சித்தியையும் அவர்கள் வீட்டில் கொண்டு போய் விட்டுவிட்டு வருகிறேன், அத்தை."

மரகதம் உள்ளே உப்புமா கிண்டிக் கொண்டிருந்தாள்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

புத்தக அலமாரியைக் குடைந்து கொண்டிருந்தான் சக்கரை.

"ஷேக்ஸ்பியர் புத்தகம் இரண்டொன்று அங்கே இருந்தது. அது கண்ணில் பட்டுவிட்டால் என்னுடன் ஐந்து நிமிடம்கூடப் பேச மாட்டீர்கள் என்பதால் ஒளித்து வைத்து விட்டேன்," என்றாள் அம்பிகா.

"அம்பிகா! நீயே ஒரு கவிதை. ஷேக்ஸ்பியரின் கவிதைகள் இங்கே எடுபடுமா?" என்று பதிலளித்தான் சக்கரை. "ஆனால் ஷேக்ஸ்பியரைப் பற்றி அலட்சியமாக மட்டும் பேசாதே. எனக்காகச் சொல்லவில்லை. சூரியின் வெடி குண்டுகளிலிருந்து அத்தனை பேரையும் காப்பாற்றியவர் அந்த ஆங்கில மகா கவிதானாக்கும்!"

"இதென்ன புது வெடிகுண்டு?" என்று அம்பிகா திகைத்தாள்.

"உண்மை. சூரி வெடிகுண்டுகளை வெடிக்கவிருந்த போது அவன் கவனத்தைக் கலைக்கிற மாதிரி திமுதிமு வென்று ஓடி வந்தார்களே, யார்?"

"சின்னப் பையன்கள்."

"ஏன் வந்தார்கள்?"

"காற்றாடி எடுப்பதற்காக."

"அதற்கு காரணம் ஷேக்ஸ்பியர்!" என்றான் சக்கரை. "சூரி ரொம்பச் சவடாலாகப் பேசிக்கொண்டே போனானே. அதைக் கேட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்த போது எனக்கு, ஷேக்ஸ்பியரின் வாசகம்தான் நினைவு வந்தது. 'வார்த்தைகள் உயரப் பறக்கின்றன. எண்ணங்கள் தாழக் கிடக்கின்றன. சிந்தனையற்ற சொற்கள் ஒருபோதும் சொர்க்கத்தை எட்டுவதில்லை,' என்று அவர் சொல்லி யிருந்தார். 'உயரப் பறக்கின்றன' என்று நான் சொல்லிக் கொண்டதும், அந்த ஜன்னலில் கட்டப்பட்டிருந்த காற்றாடியை என் விரல் வருடியது. பறந்து கொண்டிருக்கும் ஒரு காற்றாடி அறுந்து விழுந்தால், அதைக் காணுகின்ற

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

சிறுவர்கள் எங்கே, என்ன வேலையில் இருந்தாலும் உடனே அந்த இடத்துக்கு ஓடி வருவார்கள் என்று நினைவு வந்தது. காற்றாடி நூலை மெள்ளக் கம்பியில் தேய்த்துத் தேய்த்து அறுத்துவிட்டேன். நான் எதிர்பார்த்தபடியே நடந்தது."

அம்பிகா தலையை ஒய்யாரமாகச் சாய்த்து, "நீங்கள் கெட்டிக்காரர்தான்," என்றாள்.

"உம்?" என்றான் அவன்.

"ஆனால் உங்கள் மறுபிறவி பற்றிய ஆராய்ச்சி என்ன ஆயிற்று? அதை அப்படியே விட்டுவிட்டீர்களே?"

"இல்லை, அம்பிகா. அந்த ஆராய்ச்சி இன்னும் பல நூற்றாண்டுகளுக்கு நடக்கும். என்னைக் காட்டிலும் அறிவாளிகள் தோன்றி, ஒரு நாள் அதற்கு முடிவு காண்பார்கள். ஆனால், என்னைப் பொறுத்தமட்டில் ஒரு விஷயம் நிச்சயம்."

"என்ன?"

"அடுத்த ஜன்மம் என்று ஒன்று இருக்குமானால் உனக்கு நானும் எனக்கு நீயுமாகத்தான் பிறப்போம்."

இரண்டு கண்கள் நெருங்கிக் கொண்டிருந்தன ஒன்றையொன்று.

"அம்பிகா! உப்புமா ரெடி!" என்று உள்ளேயிருந்து சித்தி குரல் கொடுத்தாள்.

உப்புமாவைத் தூக்கி உடைப்பில் போடுங்கள்! யாருக்கு வேண்டும் இங்கே!

முற்றும்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in